
யாளி வீரனும் இந்திர ரகசியமும்
பாகம் 2
கிருத்திகா சுப்பிரமணியன்

# சமர்ப்பணம்!

எப்போதும் எனக்குத் துணை நிற்கும் என் குடும்பத்தாருக்கும், தமிழ் இலக்கியங்களை உளமார நேசிக்கும் அனைத்து தமிழன்பர்களுக்கும்!!!

# பொறுப்புத்துறப்பு

"யாளி வீரனும் இந்திர ரகசியமும்" என்னும் இக்கதை யார் மனதையும் புண்படுத்தும் நோக்கில் புனையப் பட்டது இல்லை. இக்கதையில் வரும் பெயர்கள் மற்றும் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. ஒருவேளை உயிருடனோ அல்லது இறந்தவர்கள் யாருடனாவது இந்தக் கதை தொடர்புடையது போலிருந்தால் அது தற்செயலான நிகழ்வே! இந்த புத்தகம் முழுக்க முழுக்க கற்பனையே!

கதாபாத்திரங்கள் ஆங்காங்கே பிற மொழிகளில் பேசுவது போல சில இடங்களில் எழுதப் பட்டிருந்தாலும், அவற்றின் மொழிபெயர்ப்பும் பக்கத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது. மேலும் வாசகர்களின் புரிதலுக்காக பிறமொழி பேசும் கதாபாத்திரங்கள்

பெரும்பாலும் தமிழிலேயே சிந்திப்பதாக, உரையாடுவதாக எழுதப்பட்டிருக்கிறது.

பிற்கால இலக்கியச் செய்யுள்களை நான் முதற்சங்க இலக்கியத்தைப் போல சில இடங்களில் உபயோகப்படுத்தி இருக்கிறேன். இது குறிப்பிட்ட அந்த இடத்திற்கு அணி சேர்க்கும் என்பதற்காகவும் இலக்கியச் செல்வங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவுமே எழுதப்பட்டது. வேறு நோக்கம் எதுவும் இல்லை!

சுயவிளம்பரம்: இது என்னுடைய இரண்டாவது கதை. என்னுடைய முதல் கதையான "இதுவரை எங்கிருந்தாய்"- யை படிக்காதவர்கள் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். :)

# என்னுரை

வாசகர்களுக்கு வணக்கம்!

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் "ஆசீவகம்" என்ற தமிழரின் பண்டைய மதத்தைப் பற்றி அறிய நேர்ந்தது. அம்மதத்தைப் பற்றி மேலும் விவரம் அறிந்து கொள்வதற்கு நூல் பிடித்து பல இடங்களில் தேடினேன். அப்போது தான் தமிழரின் நாகரிகம் நான் நினைத்ததை விட மிக மிகத் தொன்மை வாய்ந்தது என்ற உண்மை என்னை சுட்டது. ஆதிச்சநல்லூர், கீழடி, கொடுமணல் முதலிய இடங்களின் உண்மைத்தன்மையும் அவை தாங்கி நிற்கும் தமிழரின் கலாச்சாரமும் என்னை பெருவியப்பில் ஆழ்த்தின.

ஆசீவகத்தின் வேரை அறிவதற்கான பயணத்தை துவங்கிய நான் குமரிக்கண்டம், லெமுரியா, நாவலந்தீவு என்றெல்லாம் அழைக்கப்படும் தமிழரின் அழிந்து போன நிலத்தில் தரைத் தட்டி நின்றேன். குமரிக்கண்டம் உண்மை தானோ என்ற எனது ஐயத்தை பாவாணர் முதல் பேராசிரியர். பாண்டியன் ஐயா வரை பலர் உண்மைதானென்று தீர்த்து வைத்தனர்.

“பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”

என்ற சிலப்பதிகாரப் பாடலில் குமரிக்கண்டம் இருந்ததற்கும், அதில் நடைபெற்ற முதல் இரு தமிழ்ச்சங்கங்கள் கடற்கோளினால் அழிந்தது பற்றியும் குறிப்பிருக்கிறது. அதே போல உலகின் பல கலாச்சாரத்திலும் தங்கள் முன்னோர்கள் இருந்த இடம் கடற்கோளினால் அழிந்ததென்றும், அதில் தப்பிப் பிழைத்தவர்கள் தான் தாமென்றும் பல கதைகள் இருந்தாலும், அந்த இடத்தின் பெயரோ அன்றி அந்த நிலப்பரப்பைக் குறித்த தெளிவான செய்தியோ அவர்களிடத்தில் இல்லை. ஆனால் தமிழ் இலக்கியங்களில் மட்டும் அத்தகைய நீரூழி எங்கு எப்படி நடைபெற்றது என்பதை தெளிவாகக் குறித்திருக்கின்றனர். இது எப்படி சாத்தியம்? என்ற கேள்வியே என்னை மேலும் குமரிக்கண்டத்தை பற்றித் தேடச் சொன்னது.

என் சிறுமூளையை குடைந்து கொண்டிருந்த இன்னொரு கேள்வி யாதெனின், "யாளி என்கிற மிருகத்தின் உண்மைத் தன்மை என்ன?" என்பது தான். கண்ணால் பார்க்காத ஒரு மிருகத்தை எப்படி அச்சில் வார்த்ததைப் போல பெரும்பாலான எல்லா தென்னிந்தியக் கோவில்களிலும் சிற்பமாகவும் ஓவியமாகவும் வடித்திருக்க முடியும்? அதிலும் யானையாளி, சிம்மயாளி, மகரயாளி என்று பல்வேறு விதமாக எப்படி பகுத்திருக்க முடியும்? யாளி ஒரு கற்பனை மிருகம் தானென்றால் ஒரு காலத்தில் டைனோசர்ஸ் என்ற மிருகமும் கட்டுக்கதை என்றே பல மக்கள் நம்பிக்கொண்டிருந்தனர். ஆனால் இப்போது? இருப்பினும் இது யாளியைப் பற்றிய கதையல்ல, யாளி வீரனைப் பற்றிய கதை!

காதலும் வீரமும் தமிழரின் இரு கண்களென சங்க இலக்கியப் பாடல்கள் அழகாக எடுத்துக் கூறுகின்றன. அப்பேற்பட்ட காதலையும் வீரத்தையும் கொண்ட மக்கள் நம் தொன்தமிழகமாம் நாவலந்தீவில் வாழ்ந்த காலத்தை நினைக்கும் போதே என் மெய் சிலிர்த்தது. ஆரியர்கள், சமணர்கள் துவங்கி ஆங்கிலேயர்கள் வரை பலவிதமான படையெடுப்புகளின் வாயிலாக தமிழரின் ஆதி கலாச்சாரமும் மேன்மையும் சற்றே மங்கியிருந்த நிலையில், உண்மையில் ஆதி தமிழர் எப்படித்தான் வாழ்ந்திருப்பார்கள்? என்கிற என்னுடைய கற்பனையே இந்தக் கதை.

இந்தக்கதை ஒரு **high fantasy fiction!**

பகை முடிக்க நெஞ்சில் வஞ்சம் வைத்து காத்திருக்கும்

ஒருவன்!

ஜென்ம ஜென்மமாக தன் தேடலை வெற்றியாக்க துடிக்கும் வேங்கை பெண்ணொருத்தி!

நன்மை தீமை மறந்த நிலையில் இருக்கும் உற்ற நண்பன் ஒருத்தன்!

தன்னவனை காப்பதற்காகப் போராடும் இறை பெண்ணொருத்தி!

அனைத்தும் தெரிந்தும் விதி வழியே மதியை செல்ல விடும் நாயகன்!

இப்போரில் இறுதியாக எவர் எண்ணம் ஈடேறும்?

எனக்குள் இருந்த பல கேள்விகளே இந்தக் கதையை என்னை எழுதத் தூண்டியது. நான் மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து நபர்களைக் கொண்டு தான் கதை பின்னத் துவங்கினேன். கதையின் போக்கிற்கு தேவையான இன்னும் சில முக்கிய கதாபாத்திரங்களையும் சேர்த்து உங்களுக்குப் பிடித்தவகையில் அருமையான ஒரு வரலாற்றுப் புனைவைத் தர முயன்றிருக்கிறேன். வாசகர்கள் படித்து விட்டு உங்கள் விமர்சனங்களை தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இப்புதினத்தை எழுதுவதற்கு எனக்கு உற்ற துணையாக இருந்த என் குடும்பத்தாருக்கு, குறிப்பாக என் திறமைக்கு உணவிட்டு, நான் சோர்ந்து போகும் போது சாய்ந்து கொள்ள தோள் கொடுத்து, என் இதழோரம் வழியும் புன்னகையை என்றுமே வற்ற விடாமல் பார்த்துக்கொள்ளும் என் கணவர் செல்வகுமாருக்கு, எத்தனை முறை நன்றி தெரிவித்தாலும் போதாது. நான் இக்கதையை தொடராக எழுதிய போது என்னை உற்சாகப் படுத்தி மேலும் மேலும் எழுதத் தூண்டிய என் பிரதிலிபி வாசக நண்பர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

என்றும் அன்புடன்,

கிருத்திகா சுப்பிரமணியன்.

# யாளி வீரனும் இந்திர ரகசியமும் – பாகம் இரண்டு

## அத்தியாயம் 1

காமரி போரென்று சொன்னதும் நாவகனின் முகம் வெளிப்படுத்திய அதிர்ச்சியை காமரி துளியும் மதிக்கவில்லை.

"நாவகா! நான் சொல்வதைக் கேள். உன்னை சந்திக்கும் முன்பிலிருந்தே நானும் என் தந்தையும் போருக்கான ஆயத்தங்களை செய்துகொண்டுதான் இருந்தோம். நீ எனக்கு வாக்கு கொடுத்ததைப் போல, ஒரு வேளை நம் திருமணம் நிகழ்ந்திருந்தால், 'வாழ்க்கைப்பட்ட குடும்பத்திற்கு எதிராக எதற்காக போர் தொடுக்க வேண்டும்?' என்ற எண்ணத்தில் நான் போரை கைவிட்டிருக்கக் கூடும். ஆனால் உன் பெற்றோர் என்ன செய்தனர்? பட்டத்து இளவரசன், வருங்கால பேரரசன் என்ற மரியாதையோ தலைச்சன் பிள்ளை என்கிற பாசமோ சிறிதும் இன்றி உன்னைத் தூக்கி எறிந்தனர். நீ உன் அரண்மனையை விட்டு வெளியேறி எத்தனைத் திங்கள் கடந்துவிட்டது? ஆனாலும் உன்னை இதுவரையில் தேடக்கூட மனமில்லையே உன் தந்தைக்கு! எதுவுமே நிகழாதது போலல்லவா அரசு நடந்துகொண்டிருக்கிறது! அதனால் அவர்களை நீ மன்னித்தாலும் நான் மன்னிக்க மாட்டேன். என் நாவகனை துச்சமாக நினைத்த அனைவருக்கும் தக்க பாடம் புகட்டுவேன்!" என்று உறுமிய காமரியை அணைத்துக் கொண்டு அப்படியே கதறி அழுதான் நாவகன்.

"பிறந்ததிலிருந்து என் மீது உன்னளவிற்கு யாருமே அன்பு செலுத்தியதில்லை கண்ணே! அதிலும் அரண்யா பிறந்த அன்றிலிருந்தே என்னை முற்றாக ஒதுக்கிவிட்டார்கள். அரண்மனையிலிருந்த பஞ்சணை, நாற்காலிகளைப் போல நானும் ஒரு பொருளாகிப் போனேன். உன்னை சந்தித்த அன்றுதான் நான் உண்மையில் பிறந்தேன். என் உயிர், உடல், உடமை என அனைத்தும் உன்னுடையது கண்ணே! உன்னைக் கொல்ல முயன்ற கயவனின் மகன் என்று தெரிந்த பின்னரும் என் மீது நீ காட்டும் அன்பிற்கும் கொண்ட காதலுக்கும் பிரதி உபகாரமாக... நான் எது வேண்டுமானாலும் செய்வேன்!" என்று விசும்பிக் கொண்டே நாவகன் சொல்ல, அவன் தலையை மிருதுவாக கோதியபடியே, கனலியிடம் கண்களாலேயே, "எப்படி?" என்று சமிக்கை செய்தாள் காமரி. கனலியும், "பிரமாதம்!" என்று பதில் சமிக்கை செய்தாள். இது எதையுமே உணராத நாவகனோ காமரியின் காதலில் திளைத்திருப்பதாகத் தன்னையே ஏமாற்றிக்கொண்டான்.

"நாவகா! போதும் அழுதது. எங்களின் பட்டத்து அரசன் அழலாமா? இந்த நாவலந்தீவையே ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து ஆட்சி செய்யப் பிறந்தவன் கண்ணீர் சிந்தலாமா? கண்களைத் துடைத்துக் கொள். இனி மேல் நாம் செய்ய வேண்டிய காரியம் ஏராளம் இருக்கிறது." என்று நாவகனைத் தேற்றினாள் காமரி. அவள் சொற்களில் அசுரபலம் பெற்றவனாக கண்ணீரை நிறுத்திக் கொண்டான் நாவகன்.

"நான் என்ன செய்ய வேண்டும் கண்மணி?" என்று நிமிர்ந்து அவளைப் பார்த்துக் கேட்டான்.

"நான் சொல்வதை மட்டும் செய்!" என்று சொல்லி ஒரு மோகனப் புன்னகையை அவன் மீது வீசினாள் காமரி. அவள் புன்னகையைக் கண்ட மறுநொடி போரிலே வென்று விட்டதைப்போலவே உணர்ந்தான் நாவகன்.

'கடைக்கண் பார்வை தனை கன்னியர் தாம் காட்டிவிட்டால்

மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்!'

என்று பாவேந்தர் பாரதிதாசன் சரியாகத் தான் கூறினார் போலும்.

தன் திட்டத்தை நாவகனுக்கும் கனலிக்கும் முதலில் விளக்கினாள் காமரி. "இது சரியாக வருமா?" என்று முதலில் இழுத்த நாவகன் கூட, காமரி திட்டத்தை விளக்கி முடித்ததும், "வெற்றி நமதே!" என்று கர்ஜனை செய்தான். இருக்கும் வலிமைகள் எல்லாவற்றையும் சரியாகப் பயன்படுத்தியிருந்தாள் காமரி. அத்தோடு பேரரசர் வீய பாண்டியனைப் போல எதிரிகளை அவள் குறைத்து மதிப்பிடவில்லை. அதனாலேயே வெற்றி பெறுவதற்குரிய அனைத்து சாதகமான பலன்களும் அவள் பக்கமிருந்தது.

நாவகனுக்கும் கனலிக்கும் அனைத்தையும் விளக்கிய பின் அவளுக்கு எப்போதும் பக்கபலமாக இருக்கும் பாலை நாடுகளின் அரசர்களுக்கு ரகசியத் தூதனுப்பினாள் காமரி. முன்பாலை பின்பாலை என்ற இரண்டு பாலை நாடுகளின் மன்னர்கள், அவர்களுடைய நம்பிக்கைக்குரிய சேனாதிபதிகள் இருவர் என மொத்தம் நால்வர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். அம்மன்னர்களும் சேனாதிபதிகளும் அவளது எண்ணப்படியே விரைந்து புறப்பட்டு அவள் குறிப்பிட்டிருந்த நாளில் சதியாலோசனையில் கலந்து கொண்டனர். வெளியுலகிற்கு தன்னைப் பற்றித் தெரிவது உசிதமல்ல என்று கருதிய காமரி எப்போதும் இவர்கள் மூலமாகவே தன் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுவாள். இத்தனை பெரிய போருக்குப் பின் ஒரு சிறு பெண் இருக்கின்றாள் என்ற

உண்மை வேறெவருக்கும் தெரியாமல் பாதுகாப்பதில் அவள் மிக கவனமாக இருந்தாள்.

நாவகனை அவர்களுக்கு அறிமுகப் படுத்தியவள், சபை துவங்கட்டும் என்று சொல்ல, முன்பாலை நாடுகளின் அரசன் ஆசுவன் பேச ஆரம்பித்தார். "அம்மா காமரி, நம் படைகளை அனுப்புவதற்குள் வீயனுக்குத் தெரிந்து விடுமே! அதுமட்டுமின்றி அவனுக்குத் துணையாக மற்ற மன்னர்களின் சேனைகள் இருக்க, நம்மால் வெற்றி பெற இயலுமா? எந்த அடிப்படையில் நாம் போர் செய்வது?" என்று கவலையோடு கேட்டார்.

அவர் சொல்வதை ஆமோதிப்பதைப் போல, "வீயனுக்குத் தெரிவது இருக்கட்டும். முதலில் அவன் ஒற்றர்படைத் தலைவன் தாரகனுக்குத் தெரியாமல் எப்படி ரகசியமாக செயல்படுவது என்று சிந்தியுங்கள். அவன் எத்தனுக்கெல்லாம் எத்தன். காற்று நுழைய முடியாத இடத்தில் கூட தாரகனின் காதுகளும் கண்களும் இருக்கும்!" என்று பின்பாலை நாடுகளின் அரசன் சித்ரூபன் கூறினான்.

"அப்பப்பா! விட்டால் என்னை பயமுறுத்தியே கொன்று விடுவீர்கள் போல!" என்று நக்கலாக காமரி கேட்க, "உன் தாத்தன் காலத்தில் நடந்தது உனக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன் காமரி. உன்னைப் போல எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எங்களால் யோசிக்க முடியாது. எங்களுக்கென்று குடும்பங்கள் உள்ளன!" என்று பின்பாலை நாடுகளின் சேனாதிபதி சமீரணன் காட்டமாக காமரிக்கு பதிலளித்தான். அழைக்கப்பட்டிருந்தவர்களில் வயதில் குறைந்தவன் சமீரணன் மட்டுமே. அதிவீர பராக்கிரமங்களுக்கு சொந்தக்காரனாதலால் அவனைச் சேனாதிபதியாக்கி அழகு பார்த்தார் சித்ரூபன்.

"பொறுங்கள் பொறுங்கள்! காமரி சிறு பெண்ணென்றாலும் நம் அரசன் மகிந்தனின் மகளல்லவா? அதுமட்டுமின்றி வீயனின் புதல்வனான நாவகனே நம் பக்கம் இருக்கும் போது, மற்ற அரசர்கள் கூட நம்மை எதிர்க்கத் தயங்குவார்கள். நாவகன் மட்டும் அவன் படைகளின் பலவீனங்களை நம்மிடம் தெரிவித்து விட்டானானால் சுலபத்தில் நம்மால் வெற்றி கொள்ள முடியும்." என்று அதுவரை அமைதியோடிருந்த முன்பாலை நாடுகளின் சேனாதிபதியான கருவலன் கூறினார். அறுபது பிராயத்தைக் கடந்திருந்தாலும் அவருக்கு மகிந்தனுக்கு நிகழ்ந்தவைகள் நன்றாகவே நினைவிருந்தது. 'தன் நாடு தனக்கே!' என்கிற மகிந்தனது முழக்கம் அவரைப் பொறுத்தமட்டில் தவறாகவே தெரியவில்லை. அதனால் மகிந்தனுக்கு அவர் தங்கையை

மணம் செய்து கொடுக்கும் எண்ணமும் ஒருகாலத்தில் அவருக்கு இருந்தது. அவர் எண்ணம் நிறைவேறவில்லை என்றாலும் காமரியை ஒரு புதல்வி போலவே அவர் எண்ணினார். வயதிற்கு மீறிய அறிவும் போர் பயிற்சியும் அவளுக்கு இருந்ததால் காமரியின் மீது அவருக்கு மரியாதையும் இருந்தது.

அங்கிருந்தோரில் வயதில் மூத்தோரும் அறிவில் சிறந்தவருமாகிய கருவலனே காமரிக்கு பரிந்து பேசவும் மற்றவர்கள் அமைதியானார்கள்.

"குழந்தாய்! நீ எந்த விதத் திட்டமுமின்றி எங்களை நிச்சயமாக அழைத்திருக்க மாட்டாய் என்பதை நான் அறிவேன். எனக்கு புரிந்ததை மற்றவருக்கும் புரியும் விதமாக எடுத்துச் சொல்லம்மா!" என்று கருவலன் கூற, அமைதியாகப் புன்னகைத்தாள் காமரி. கருவலன் மட்டும் அவளுக்கும் அவள் தந்தைக்கும் ஆதரவாக இல்லையென்றால் அங்கிருக்கும் மற்ற மூவரையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பது எத்தனை கடினமான காரியம் என்பதை காமரி அறிவாள். அதனால் அவர் மீது மட்டும் அவளுக்கு உளப்பூர்வமான மரியாதை இருந்தது.

"சரியாகச் சொன்னீர்கள் மாமா! வழக்கமாக அரசர்கள் தங்களுக்குள்ளே போர் செய்யும் முறையை சபையோருக்கு விளக்குகின்றீர்களா?" என்று பணிவுடன் கேட்டாள் காமரி.

"புறத்திணைகள் ஏழு என்று குறிப்பிட்டாலும், பொதுவாக போரை எட்டு நிலைகளாகப் பகுக்கலாம்.

"வெட்சி நிரை கவர்தல் ; மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேல் செல்வது வஞ்சி ; உட்காது
எதிர்ஊன்றல் காஞ்சி ; எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தல் ஆகும் உழிஞை - அதிரப்
பொருவது தும்பையாம் ; போர்க்களத்து மிக்கோர்
செரு வென்றது வாகையாம்"

என்னும் திவாகர நிகண்டு பாடலுக்கு ஏற்ப, எதிரிநாட்டு அரசனின் ஆநிரைகளான பசுக்களைக் கவர்வது வெட்சித் திணையாகும். வெட்சி வீரர்கள் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டுவர
நிகழ்த்தப்படும் போர், கரந்தைத் திணையாகும். எதிரிகளின் மீது படையெடுத்து போருக்கு செல்வது வஞ்சித் திணையாகும். நாட்டின் மேல் படையெடுத்து வரும் வஞ்சிமலர் சூடிய வீரர்களை எதிரிநாட்டு வீரர்கள் நாட்டு எல்லையில் தடுத்து நிறுத்துவது காஞ்சித் திணையாகும்.

எதிரிநாட்டு அரசனின் மதிலை வளைத்து அவனுடன் போர் செய்வது உழிஞைத்திணையாகும். உழிஞை வீரர்களால் வளைத்துக்கொள்ளப்பட்ட மதிலை, அம்மதிலுக்குரிய அரசன் காத்துக் கொள்வது நொச்சித் திணையாகும். இருபெரும் வேந்தர்களும் நாள் குறித்து, பொதுவிடத்தில் போர் செய்தல் தும்பைத் திணையாகும். போர்க்களத்தில் எதிரியை வென்று வெற்றி வாகை சூடும் திணை வாகைத் திணையாகும்!" என்று விளக்கினார் கருவலன்.

"அபாரம் மாமா! நீங்கள் குறிப்பிட்ட முறைப்படி போர் செய்தால் கால விரையத்தோடு எதிரி சுதாரிப்பதற்கு தேவையான அவகாசத்தையும் நாமே அவர்களுக்குத் தந்தது போலாகும். அது மட்டுமின்றி சமீரணன் ஐயா குறிப்பிட்டதைப் போல நம் படைகள் நகரத்துவங்கும் போதே வீயனுக்கு செய்தி சென்றுவிடும். அவனின் அடிவருடிகளான பிற நாட்டு மன்னர்களும் தத்தமது படையுடன் நம்மை எதிர்க்கக் கிளம்பி விடுவார்கள். அதனால் நமக்கு பெரும் இழப்புகள் நேரிடலாம். ஆகையால், நேரடிப் போரால் வெற்றி பெறுவது என்பது நம்மால் இயலாத காரியம். அதன் பொருட்டே வேறு வகையான சூட்சமங்களை நான் வகுத்துள்ளேன். நம் படைகளை எப்படி நகர்த்த வேண்டும் என்று நான் விளக்கும் வரை பொறுமையோடு இருங்கள். அதன் பின்னர் நீங்கள் சொல்லும் குறை நிறைகளுக்கு ஏற்ப திட்டத்தை மாற்றிக் கொள்ளலாம். போர் வீரர்களை எப்படியாவது பாண்டியனுக்குத் தெரியாமல் திரட்டி விட்டால், பின் போர் வியூகங்களையும் திட்டங்களையும் போரில் வல்லவரான கருவலன் மாமா பார்த்துக் கொள்ளுவார்." என்று சொன்னாள் காமரி.

"சரி! உன் திட்டத்தை சொல்லு... பார்க்கலாம்!" என்று வேண்டாவெறுப்பாக சமீரணன் சொன்னாலும் மற்ற மூவருமே ஆர்வமாக கேட்கத் தயாராயினர்.

"நம் போர் வீரர்களை நேர்ப்படையாக அணி திரளச் சொல்வதற்குப் பதிலாக சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பெருவளநாட்டிலும் அதன் சுற்று வட்டார சிற்றூர்களிலும் மக்களோடு மக்களாக கலக்கச் சொல்லுங்கள். வணிகர்கள் போன்று வேடமிட்டு நம் குதிரைகளையும் யானைகளையும், யாளிகளையும் பிறர் கவனத்தைக் கவராதவாறு விற்பனைக்காகவென ஆங்காங்கே நிறுத்தச் சொல்லுங்கள். நம் ஒற்றர்களைத் துறவிகள் போன்று வேடம் தரித்து பெருவளநாட்டில் நடப்பவைகளை நோட்டமிட்டு மற்றவர்களுக்குத் தகவல் அளிக்க வேண்டுமென்று ஆணையிடுங்கள். நம் வீரர்கள் நம்நாட்டிலிருந்து பெருவளநாட்டிற்கு நேராகச் சென்றால் சந்தேகம்

வரும். அதனால் முதலில் சுற்றியிருக்கும் பிற நாடுகளுக்குச் சென்றுவிட்டு மெதுமெதுவாக நாலாபுரத்திலிருந்தும் பெருவளநாட்டை ஆக்கிரமிக்க வேண்டும். இந்திரரகசியத்தை பெருவளநாட்டை சேர்ந்த ஒருவன் வென்றுவிட்டான். அவன் ரகசியத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ளும் முன்பே நாம் போரிடத் துவங்க வேண்டும். இல்லையென்றால் நம்மால் எந்தக் காலத்திலும் போரில் வெல்ல முடியாது போகும். அதனால் இன்றிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நம் போர் வீரர்கள் பெருவளநாட்டை சூழ்ந்திருக்க வேண்டும்." என்று காமரி சொன்னவுடன், "அப்படியானால் நாங்கள் எப்போது போரில் பங்கேற்பது காமரி?" என்று ஆசுவன் கேட்டார்.

ஒரு புன்னகையுடன் காமரி பேசத் துவங்கும் முன்னமே, "நம்மை மாறுவேடத்தில் படைவீரர்களுடன் பயணிக்கச் சொல்கிறாள் அரசே!" என்று சமீரணன் தெரிவித்தார்.

"சரியாகச் சொன்னீர்கள் சேனாதிபதி!" என்று பாராட்டினாள் காமரி.

"உன் திட்டம் என்னவோ நன்றாகத் தான் இருக்கின்றதம்மா. ஆனால், உனக்கும் உன் தகப்பனைப் போல மந்திர வலிமை அதிகம் என்பதை நானறிவேன். உனக்கு கட்டுப்பட்ட சூட்சம சக்திகளைக் கொண்டு..." என்று இழுத்தார் சித்ரூபன்.

"கொண்டு...? என்ன சித்ரூபரே, போரில் என் பங்கு என்ன என்று மறைமுகமாக கேட்கின்றீரோ? என்ன கேட்க வேண்டுமென்றாலும் நேரிடையாகவே கேட்கலாம்." என்று காமரி சொன்னதும், "அரசர் கேட்பதில் பிழை என்ன காமரி? உனக்கு உறுதுணையாக போரிடும் படைகள் அத்தனையும் எங்களுடையவை. உன் பங்கிற்கு நீ என்ன கொண்டுவருகிறாய் என்று சொன்னால் தானே முடிவெடுப்பதற்குச் சுலபமாக இருக்கும்!" என்று சமீரணன் கூறினார்.

"ஒரு காலத்தில் இந்தப் படை முழுதுமே எங்கள் பரம்பரை சொத்து என்பதை மறந்து விட்டீர்களா?" என்று உறுமினாள் காமரி.

"'ஒரு காலத்தில்' என்பதை நாங்களும் மறுக்கவில்லை. நீயும் மறக்காதே!" என்று சமீரணன் சொல்ல, அவரை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள் காமரி.

வார்த்தைகள் தடிப்பதை உணர்ந்த கருவலன் அவசரமாக காமரியின் கைப்பற்றி அவளை அமைதியோடு இருக்கும்படி சொன்னார். அவர் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு காமரி அமைதி காக்க, சமீரணனோ என்னால் தான் காமரி அமைதியோடிருக்கிறாள் என்று இறுமாந்து அமர்ந்திருந்தான்.

"காமரி, போர் என்றால் சாதாரணமான நிகழ்வு அல்ல அம்மா. பலவுயிர்களைக் கொண்டு ஆடும் சதுரங்கம். நாம் வெற்றி பெறுவதற்கு நாம் தரும் விலைகள் நியாயமானதா என்பதை ஆலோசிக்க வேண்டுமல்லவா? அதைத்தான் சமீரணன் சொல்ல எண்ணி வேறு எதையோ உளறி விட்டான். என்ன இருந்தாலும் அவனும் உன்னைப் போலச் சிறுவன் தானே. வீரமிருந்தாலும் அவனுக்கு விவேகம் வருவதற்கு பல ஆண்டுகள் ஆகும்." என்று சமீரணனின் வயதை காரணம் காட்டி ஆசுவன் குத்திக் காண்பிக்க, வேற்று நாட்டு அரசனை எதுவும் சொல்ல முடியாமல் சமீரணனின் உள்ளம் உலைக்களமாயிற்று.

"எனக்கு இருபத்தாறு பிராயமாயிற்று!" என்று முணுமுணுக்க சமீரணன் தவறவில்லை. அது காதுகளில் விழுந்தாலும் அங்கிருந்த சபையோரிடம் எடுபடவில்லை.

"எதற்கு இந்த வீண் பேச்சு? உங்களுடன் போர் செய்வதற்கு நானும் நாவகனும் தயாராகவே இருக்கின்றோம். எனக்கு சில சூட்சம சக்திகள் கட்டுப்பட்டிருப்பது உண்மை தான். அவைகளை நிச்சயம் இந்தப் போரில் நான் உபயோகப் படுத்தத் தான் போகின்றேன். எதிரி நாட்டின் படைத்தலைவர்களில் சிலருக்கு இப்போது நேரம் சரியில்லை. அதனால் அவர்கள் மீது என் யட்சிணிகளை ஏவி அவர்களை என் கட்டுக்குள் கொண்டு வருவேன். அதன் மூலம் போரில் அவர்கள் படையினரால் நம் படைக்கு சேதாரம் அதிகமில்லாமல் பார்த்துக்கொள்வேன். அதுமட்டுமின்றி போர் நிகழ ஆரம்பித்ததன் பின்னர், நானும் நாவகனும் நேரடியாக போர்க்களத்தில் புகுந்து எதிரிகளை அழித்தொழிப்போம். அவர்கள் நாட்டு இளவரசனே அவர்களுக்கு எதிராக போர் புரிவது, பாண்டிய வீரர்களுக்கு இரட்டை மனநிலையைத் தரும். அதன் பயனாக விளையும் குழப்பத்தில் நிச்சயம் நம் வீரர்களே வெற்றி பெறுவர்." என்று சமாதானமாகப் பேசினாள் காமரி.

"சரி, அங்கே கமலநாதர் பாண்டியனின் துணைக்கு வந்துவிட்டால்? அல்லது அவரது குருகுல மாணவர்களை அனுப்பிவிட்டால்? அப்போது என்ன செய்வது?" என்று ஆசுவன் கேட்டார்.

"இரண்டு அரசர்களுக்கு இடையேயான போரில் தலையிடாது எப்போதும் நடுநிலையோடு இருக்கவேண்டும் என்பது நம் ஆசீவக குருமார்கள் அனைவரும் எடுத்துக் கொண்ட சத்தியப்பிரமாணம். அதை மீறி கமலநாதனோ, ஐம்பூதனோ, இல்லை இன்னும் வேறு ஏதேனும் பித்தனோ... எவனும் செயல்பட மாட்டான். அதனால் அவர்களைப்

பற்றிக் கவலை கொள்ளாதீர்கள். அதுமட்டுமின்றி கமலநாதனுக்கு நான் வேறு வேலைகள் வைத்துள்ளேன். அவன் அவற்றை முடிக்கும் முன்னரே மதுரையில் நம் கொடி பறக்கும்! இது உறுதி!" என்று கண்கள் மின்னச் சொன்ன காமரி மற்றவர்களுக்குப் பெரும் பலத்தைத் தந்தாள்.

"சரி, அப்படியென்றால் நம் திட்டத்தை செயல்படுத்தத் துவங்க வேண்டியது தான்!" என்று கருவலன் கூறியதும், "பொறுங்கள் மாமா! இன்னும் ஒன்றையும் தெரிவித்து விடுகின்றேன். அங்கே பெருவளநாட்டுப் படையில் என் தாத்தாவின் காலத்திலிருந்தே நம் வீரர்கள் பலர் ஊடுருவி இருக்கின்றனர். தற்போது அவர்களது புதல்வர்கள், பேரன்கள் எனப் பலரும் பாண்டியனின் படையில் பெரும் பதவிகளை வகிக்கின்றனர். அவர்களை என் சார்பாக நாவகனும் கனலியும் சந்தித்து நம் திட்டத்தைத் தெரிவிப்பார்கள். அவர்கள் உள்ளிருந்து பாண்டியனுக்கு குழிபறிக்க ஆரம்பிப்பார்கள். சமயம் வரும் போது நம் பக்கத்து வீரர்களுடன் சேர்ந்து கொண்டு பாண்டிய வீரர்களுக்கு எதிராக போராடுவார்கள்." என்று முடித்தாள் காமரி.

"பலே காமரி! சிறு பெண்ணென்றாலும் சதித்திட்டம் தீட்டுவதற்கு உன்போல் இன்னொருவன் இனிப் பிறந்து தான் வரவேண்டும்!" என்று மெச்சினார் சித்ரூபன்.

"ஒரு ஆடவனால் வேண்டுமானால் முடியாதிருக்கலாம் அரசே! ஆனால் ஒரு பெண் நினைத்தால் நிச்சயம் முடியும்." என்று புன்னகைத்தாள் காமரி.

"சரி! நம் வீரர்களை மாறுவேடத்தில் சென்று பெருவளநாட்டை முற்றுகையிடுமாறு பணிக்கிறேன். போருக்கான மற்ற ஆயத்தங்களை செய்துவிட்டுப் போரிடும் விதத்தையும் முடிவு செய்த பின் மீண்டும் நாம் சந்திப்போம். எந்நேரமும் தயாராக இரு மகளே!" என்று கருவலன் தெரிவித்தார்.

"அப்படியே மாமா! நான் வணங்கும் காளியின் மீது ஆணையாக வெற்றி நமதே!" என்று உணர்ச்சி பொங்கக் கூறி கருவலனின் பாதம் பணிந்தாள் காமரி.

"எல்லா வெற்றிகளும் எப்போதும் உனதாகட்டுமம்மா!" என்று மனதார அவளை வாழ்த்திவிட்டு மற்றவர்களுடன் வெளியேறினார் கருவலன்.

கருவலனை வணங்கியவள் மற்ற இரு அரசர்களையும் வணங்கவில்லையே என்று கேள்வியோடு பார்த்த நாவகனிடம், "என் குதிரை தொழுவத்திலும், மெய்க்காவல் படையிலும் வேலை செய்தவர்களின் வம்சத்தினரை நான் எதற்கு வணங்க வேண்டும்

நாவகா?" என்று கேட்டாள் காமரி.

"அப்படியானால் இவர்கள் அரசவம்சமில்லையா?" என்று பதில் கேள்வி கேட்டான் நாவகன்.

"இந்த முகங்களைப் பார்த்தால் அரச வம்சம் போலா உனக்குத் தோற்றமளிக்கின்றது? எங்கள் குடும்பத்தை நாடு கடத்தப் போகிறார்கள் என்பதை அரசல்புரசலாக அறிந்ததுமே எங்கள் குதிரை லாயத்தின் தலைவனான ஆசுவனின் தந்தையை எங்கள் முன்பாலை நாடுகளின் பொம்மை மன்னராக நியமிக்கும் படி எல்லா ஏற்பாடுகளையும் என் தாத்தா முன்னமே செய்திருந்தார். பிறகு எங்கள் மெய்க்காவல் படை வீரனான சித்ரூபனின் தாத்தாவை பின்பாலை நாடுகளின் அரசனாக்க பல்வேறு சதிகளை செய்ததும் என் தாத்தா பாளையன் தான். என் தாத்தாவின் கருணையினால் அரசனானவர்கள் தான் இவர்கள் இருவரின் முன்னோரும். எப்போதும் எங்கள் வம்சத்தினருக்கு கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்று காளியின் மீது சத்தியம் செய்த பிறகே இவர்களைத் தேர்ந்தெடுத்தார் என் தாத்தா. சத்தியம் தவறினால் என்ன நடக்கும் என்பதையும் அவர்களுக்கு ஐயம் திரிபர உணர்த்தினார். கருவலன் ஒருவர் தான் எங்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டிருப்பவர். நமக்கு எதிராக இவர்கள் இருவரில் எவரேனும் ஒருவர் செயல்பட்டாலும் அவர்களின் முழு குடும்பத்தையும் கருவலன் நிர்மூலமாக்கிவிடுவார் என்பதும் அவர்கள் அறிந்ததே! இல்லையென்றால் முதுகெலும்பே இல்லாத இந்த இரு கோழைகளும் நமக்காக ஒரு துரும்பைக் கூட அசைக்க மாட்டார்கள்." என்றாள் காமரி.

"அடேயப்பா! உன் தாத்தா பல வழிகளிலும் யோசித்து செயல்பட்டிருக்கிறார் என்பது பிரம்மிப்பளிக்கின்றது காமரி!" என்று பெரிதும் வியந்தான் நாவகன்.

"எப்படி யோசித்திருந்தால் என்ன? அதான் உன் குடும்பம் மொத்தமாக என் குடும்பத்தை அழித்துவிட்டதே!" என்று வேண்டுமென்றே குத்திக் காட்டினாள் காமரி.

"போனதை பேசி என்ன பயன் கண்ணே! எப்படி வீரர்களை நகர்த்துவது என்பதற்குச் சரியான உத்தியைத் தெரிவித்துவிட்டாய். இப்போது எப்படிப் போர் செய்வது என்பது பற்றியும் அவர்களுக்கு சொன்னாயானால்..." என்று நாவகன் ஆரம்பிக்கும் போதே, "போர் செய்வது எப்படி என்று சொல்லியிருந்தால் அக்கணமே கருவலன் காமரியை கண்டம்துண்டமாக வெட்டியிருப்பார்." என்று கூறியபடியே சமீரணன் அவர்கள் அறைக்குள்ளே பிரவேசித்தான்.

"ஏன் இவ்வளவு தாமதம் சமீரணா?" என்று கொஞ்சினாள்

காமரி. நாவாகனோ, 'இவன் இங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றான்?' என்று குழம்பினான்.

"உன் மாமா... அதான் அந்தக் கிழவரை ஏய்த்துக் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது காமரி. சரி, என் நடிப்பு எப்படியிருந்தது?" என்று கேட்டுக்கொண்டே அங்கிருந்த நாற்காலியில் வசதியாக சாய்ந்து அமர்ந்து கொண்டான் சமீரணன்.

"அசத்திவிட்டீர்கள் போங்கள். நான் கூட எங்கே உங்களுக்கு எங்கள் மீதிருந்த அன்பு காணாமல் போய்விட்டதோ என்று கவலை கொண்டேன்!" என்று சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்த கோப்பையில் சோமபானத்தை ஊற்றி சமீரணனுக்குத் தந்தாள் கனலி.

"உங்கள் மீதிருக்கும் அன்பாவது குறைவதாவது... நல்ல வேடிக்கை! நல்ல வேடிக்கை!" என்று கூறி வெடிச் சிரிப்பு சிரித்தான் சமீரணன். அவன் சிரிப்பில் காமரியும் கனலியும் இணைந்துகொண்டனர்.

"என்ன நாவகரே, சற்று முன்பு வரை காமரிக்கு எதிராக பேசிக்கொண்டிருந்த பின்பாலை நாடுகளின் சேனாதிபதி இப்போது எங்களுடன் இணைந்து நகைக்கின்றாரே என்று குழப்பமாக இருக்கின்றதா?" என்று கண்களைப் பெரிதாக்கி கேலியாக கனலி வினவினாள்.

"நடப்பதைப் பார்த்தால் குழப்பம் வராமல் என்ன செய்யும்?" என்று எரிந்து விழுந்தான் நாவகன். சமீரணன் காமரியை பார்க்கும் பார்வை சரியில்லை என்பதை நாவகன் உணர்ந்து கொண்டான். 'போரில் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் ஆண்கள் விஷயத்தில் பேதை போலக் கள்ளமில்லாமல் நடந்து கொள்கிறாளே!' என்று காமரியின் மீது நாவகனுக்கு கோபமும் எரிச்சலும் ஒரு சேர மூண்டது. அவனுக்கு மட்டும் காமரியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கி நிற்கும் கூட்டம் பற்றித் தெரிந்தால் அவ்வளவுதான்! அதுவும் காமரியின் விருப்பப்படியே தான் அனைத்தும் நடக்கின்றது என்று தெரியும் போது நாவகனின் காதல் கொண்ட மனம் எத்தனைத் துண்டுகளாக உடையுமோ? எவர் அறிவார்?!

"இப்போது எதற்காக இந்தக் கோபம் நாவகா? சமீரணன் நம் கையாள் தான். அவன் அப்போது என்னை எதிர்க்கவில்லை என்றால் மற்றவர்கள் அதைவிட பலமாக எதிர்த்திருப்பார்கள். எந்தத் திசையில் பேச்சை நகர்த்துவது என்று நாங்கள் முடிவு செய்திருந்த போக்கில் பேச்சை நகர்த்திக்கொண்டு போக சமீரணன் உதவி செய்தான். அதற்காகவே என் திட்டத்தில் பல கேள்விகளை கேட்டு மற்றவரின்

மூளைகள் தன்னிச்சையாக செயல்படுவதைத் தடுத்து நிறுத்தி வெற்றியும் கண்டான்." என்று கூறியபடியே சமீரணனைப் பார்த்துப் புன்னகைத்தாள் காமரி.

அவள் புன்னகையில் சமீரணன் மயங்கினான். எல்லோருக்கும் ஒரு திட்டம் வைத்திருக்கும் காமரி, தனக்கு என்ன திட்டம் வைத்திருக்கின்றாளோ என்று யோசிக்க அவன் மறந்து போனான்.

காமரியின் யோசனைப்படி படைகளை நகர்த்தத் துவங்கினார்கள் பாலை மன்னர்கள். மறந்தும் வெளியாட்களிடம் பேசாமல் கவனமாக காரியத்தில் மட்டும் கண்ணாக இருக்கும்படி ஒவ்வொரு குழுவின் தலைவனுக்கும் ஆயிரம் முறைக்கும் மேல் அறிவுறுத்தப் பட்டது. போர் முடியும் வரை கட்டாயமாக மதுவை தவிர்க்க வேண்டுமென்ற உத்தரவும் கூடவே அவர்களுக்கு இடப்பட்டது. 'சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டுமானால் உயிர் துறப்பது சரியே!' என்று போர் வீரர்கள் அனைவரையும் நன்றாக மூளைச்சலவை செய்திருந்தவர்கள் கவனமாக காமரியின் முன்னோர்களின் ஆட்சிக் காலத்தில் மக்கள் பட்ட துயரத்தை மறைத்து விட்டார்கள்.

காமரியின் முன்னோர்களின் ஆட்சியில் எங்கு பார்த்தாலும் தீமையும் வன்மமும் பெருகியிருந்தது. ஒரு வேளை சோற்றுக்குக் கூட அல்லாடும் அவல நிலையில்தான் அவர்கள் மக்களை வைத்திருந்தார்கள். மக்களிடம் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடினாலும் அரச குடும்பத்தினரின் ஆடம்பரங்கள் சற்றும் குறையவில்லை. அதன் காரணமாகவே முன்பாலை வம்சத்தின் அஸ்தமனமும் ஆரம்பமானது. வகைவகையான உணவு உண்ணுவதற்கு விருப்பமிருந்த அரசன் ஒருவனின் பொழுதுபோக்கே மக்களை, குறிப்பாக குழந்தைகளைத் துன்புறுத்துவதுதான்.

காலையில் ஐந்து வயது முதல் பத்து வயது வரையிலான பச்சிளம் குழந்தைகள் இருபது பேரையாவது அழைத்து வரச் செய்து, அவர்களின் கண்களுக்கு முன்னால் பல சுவை மிகுந்த உணவினை ரசித்து ருசிப்பான் அவன். அந்தக் குழந்தைகளும் இதுவரையில் கண்டிராத வண்ணம் இருக்கும் எச்சில் ஊறும் பண்டங்களை பார்த்துப் பார்த்து ஏக்கத்துடன் நிற்பார்கள். அளவுக்கு அதிகமாக சாப்பிட்டதும் மீதமிருக்கும் உணவினை ஒரு கையால் அள்ளி அக்குழந்தைகளை நோக்கி வீசுவான் அவன்.

வீசியவுடன் தனக்கு ஒரு பருக்கையாவது கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் ஒருவருடன் ஒருவர் போராடி வீழ்வார்கள் பல

குழந்தைகள். வலுவில்லாத பல குழந்தைகள் இந்த கேவலமான காரியத்தினால் இறந்தும் போயிருக்கின்றார்கள்.

குழந்தைகள் மட்டுமல்ல, பெண்களுக்கும் முன்பாலை நாடுகளில் அன்றைக்கு பாதுகாப்பு இருந்ததில்லை. கண் பட்ட இடத்திலெல்லாம் அரசன் மட்டுமின்றி அவன் அடிவருடிகளும் கை வைத்தார்கள். எதிர்த்து வந்த ஆடவர்களை எல்லாம் பகிரங்கமாக ஊர் சபையின் முன்னே வேட்டை நாய்களை விட்டு துடிக்கத்துடிக்கக் கொன்றார்கள். மக்கள் எத்துணை துன்பத்திலும் அரசனுக்கு வரி செலுத்தவேண்டும் என்று ஆணையிட்டு மக்களின் உழைப்பையெல்லாம் சுரண்டினார்கள்.

தாங்கள் வியர்வை சிந்தி உழைத்த அனைத்தையும் வரியாக கட்டியே மக்கள் சோர்ந்து போனார்கள். உடலையும் உதிரத்தையும் உருக்கி உருக்கி அரசனின் குடும்பத்தாருக்கு வேண்டியதை செய்தார்கள். ஒரு கட்டத்திற்கு மேல் கொடுமைகளைப் பொறுக்க முடியாது, அப்போது அறத்தின் வழி நின்ற பாண்டிய அரசனிடம் சிலர் ஓடிச் சென்று தங்கள் நிலையை எடுத்துரைத்துத் தங்களுக்காகப் போர் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

முன்பாலை நாடுகளின் நிலையை ஒற்றர் படையின் மூலம் அறிந்துகொண்ட பாண்டியனும், பெரும் படை கொண்டு மக்களை விடுவிக்க போருக்குச் சென்றார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, பெரும்பாலான முன்பாலை வீரர்கள் பாண்டியனைக் கண்டதும் தங்களின் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர். அதனால் முன்பாலை நாடுகளின் அரசனும் வேறு வழியின்றி மண்டியிட்டான். அரசனை கொல்லச் சொல்லி மக்களின் குரல் வலுத்தது.

அடைக்கலம் புகுந்தவனை கொல்வது தவறு என்று மக்களுக்கு எடுத்துரைத்த பாண்டியன், அவர்களின் முன்னாள் அரசனையே சிற்றரசனாக்கினார். அவன் நடவடிக்கைகளை கழுகு போலக் கண்காணித்து மக்களைப் பாதுகாக்க வீரத்திலும் அறத்திலும் சிறந்த ஒரு குழுவை நியமித்தார். அவன் கப்பமாகக் கட்டுவதை முன் பாலை நாட்டு மக்களுக்கே பகிர்ந்தளித்தார். விவசாயம், மீன் பிடித்தல், ஆவினங்களை மேய்த்தல் என்று மக்களுக்குப் பயிற்சியும் பொருளும் தந்து அவர்களை தன்னிறைவடையச் செய்தார்.

பிறந்த குழந்தைக்குக் கூட உணவின்மையால் தாய்ப் பாலின்றித் தவித்த மக்கள், மூன்று வேளை வயிறார உண்டு எதிர்காலத்திற்கும் சேமிக்கத் துவங்கினார்கள். காலப்போக்கில் அவர்கள் அனுபவித்த கொடுமைகளை மறந்தும் போனார்கள்.

ஏனென்றால் மறதி தான் மக்களின் தேசிய வியாதியாயிற்றே! யார் தங்களைப் பேணிக் காத்தார்களோ அவர்களின் வம்சத்தினரையே கூண்டோடு ஒழிக்கக் கிளம்பிவிட்டது பெரும்படை சிறு மதி கொண்டு!

அவர்களின் முன்னோர்கள் அனுபவித்த கொடுமைகளோடு சேர்த்து ஒரு உண்மையையும் மறந்தார்கள்...

"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்!" என்பது தான் அது!

## அத்தியாயம் 2

மேருமலை!

தேனருவியையே வெறித்துக் கொண்டிருந்தாள் அரண்யா. அருகில் வைனி வந்ததைக் கூட அறியாமல் தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

"அரண்யா! அரண்யா!" என்று வைனி பலமுறை உலுக்கியதன் பின்னரே அவளுக்கு சுற்றுப்புறம் உறைத்தது.

"எ... என்னடி?" என்று இமைகளைக் கொட்டியபடியே நிகழ்காலத்திற்கு வந்து வைனியை விசாரித்தாள்.

"வீரனும் துகிரனும் பத்திரமாக வெள்ளிமலையை அடைந்து விட்டார்களாம். இப்போது தான் செய்தி வந்தது. அதைச் சொல்லத்தான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன்." என்றாள் வைனி.

"வீரனை பார்த்து ஒரு யுகமே சென்றதைப் போலிருக்கிறதடி!" என்று ஏக்கமாகத் தெரிவித்தாள் அரண்யா.

"சரி தான்! நேசமிருப்பது நல்லதுதான். இருந்தாலும் முதலில் பாடத்தில் கவனம் வையம்மா. நம் குருதேவர்கள் காதலுக்கு எதிரி இல்லை என்றாலும் உன் கவனம் சிதறுவது தெரிந்தால் அவ்வளவு தான். ஐம்பூதனார் தெரிவித்தது நினைவிருக்கிறதா இல்லையா? இனிமேலும் நீ தம்பனப் பயிற்சிகளில் இருந்து தப்ப முடியாது. சூட்சம சக்திகளைக் கட்டுப்படுத்தும் வித்தைகளை முறையாக, முழுதாக நீ கற்றாக வேண்டும் என்பது குருதேவரின் நேரடி ஆணை!" என்று அரண்யாவிற்கு நினைவூட்டினாள் வைனி.

அரண்யாவிற்கு இயல்பிலேயே சூட்சம சக்திகளின் மீது ஒரு பிடி இருந்தது. முயற்சி செய்தால் நிச்சயம் அவளால் அவற்றைக் கட்டுப்படுத்தி அவள் விருப்பத்திற்கு இணங்க வைக்க முடியும் என்பதை ஐம்பூதனார் உணர்ந்திருந்தார். ஆனால் அரண்யாவோ எப்போது பார்த்தாலும் கையில் வாளையும் வேலையும் வில்லையும்

வைத்துக்கொண்டே திரிந்தாள். இல்லாவிட்டால் அரச நீதி நூல்கள் என்று படிப்பதில் நேரம் செலவிட்டாள். ஆரம்ப நிலை சூட்சமப் போர் வித்தைகளைத் தவிர வேறெதையும் கற்பதில் அவளுக்கு ஆர்வம் இருந்ததில்லை என்பதை அறிந்தே ஐம்பூதனார் அரண்யாவிற்கு நேரடிக் கட்டளையாக சூட்சம சக்திகளை கைக்கொள்ளும் கலைகளைக் கற்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். நாளை முதல் அவளுக்கு பல்வேறு தம்பனம் எனப்படும் சூட்சம வித்தைகளைக் கற்பிக்க வேண்டும் என்று மேருவின் தலை சிறந்த பல ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தியிருந்தார். நடக்க இருக்கும் இறுதி யுத்தத்திற்காக அரண்யாவை முடிந்த அளவிற்குத் தயார் செய்ய நினைத்தார் ஐம்பூதனார். ஆனால் விஷயத்தின் தீவிரத்தை அறியாமல் இன்னும் சிறுபிள்ளையாகவே அடம் பிடித்தாள் அரண்யா.

"போடி! எனக்கென்னவோ அந்த வித்தைகளின் மீது பிடிப்போ ஆர்வமோ ஒன்றுமே ஏற்பட மறுக்கிறது. அதிலும் இரும்பன் அண்ணனை வேறு போட்டி முடிந்ததில் இருந்தே காணவில்லை. அதைப் பற்றிக் கேட்டாலும் யாருக்கும் எதுவும் தெரியவில்லை. குருகுலத்தில் மற்றவர்கள் சொல்லுவது போல போட்டியில் தோற்றதனால் அவர் கல்வியை விடுத்து ஓடிவிட்டார் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. இதில் ஏதோ மர்மமிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது." என்று தன் மனதின் ஐயத்தை வெளியிட்டாள் அரண்யா.

"அப்படி எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லையடி. அவர் எவ்வளவு சிரமப்பட்டு இந்திரரகசியத்துக்காக உழைத்தார் என்பதை நாம் அனைவருமே அறிவோம் இல்லையா? அதனால் போட்டியில் தோற்றதும் அவர் மனம் வெறுத்து போயிருக்கக் கூடும். தவிரவும் நான்காம் நிலைப் போட்டியில் என்ன நடந்ததென்று நமக்கு சரியாக தெரியாது. அதில் கலந்துகொண்ட நவிரனும் குவேணியும் கூட காணாமல் போய்விட்டதாகப் பலர் கூறுகின்றனர். துகிரனிடம் போட்டி பற்றிக் கேட்ட போது, 'நாம் மனதில் மறைத்து வைத்திருந்த அத்தனையையும் ஆசிரியர்கள் வெளிக்கொணர்ந்து விட்டனர்!' என்று தெரிவித்தார். ஒரு வேளை அதனால் கூட இரும்பன் அண்ணன் மேருவை விட்டுச் சென்றிருக்கலாம்." என்று விளக்கினாள் வைனி.

"நீ எப்போது துகிரனிடம் பேசினாய்?" என்று அரண்யா வியக்க, வைனியின் கன்னங்களில் வெப்பம் பரவியது.

"பின்னே! நீ வீரனோடு பேசும் வரையிலும் என்னை என்ன வானத்தையா வெறிக்கச் சொல்கிறாய்? அதான் நானும் துகிரனும்

நீங்கள் வரும் வரையில் பேசிக் கொண்டிருந்தோம். விளக்கம் போதுமா?" என்று வைனி படபடக்க, "இப்போது எதற்கு இந்த பதட்டம் கண்ணே? யாருடைய பெயரோ அன்றி நினைவோ உன்னை வாட்டுகிறதா?" என்று ராகம் பாடினாள் அரண்யா.

"உன்னைப் போன்று என்னையும் நினைத்தாயா? என் மனம் பாறையாக்கும்!" என்று திரும்பிக்கொண்டாள் வைனி.

மெல்ல அவள் தோளைப் பற்றி தன் புறம் திருப்பிய அரண்யா, "பாறையின் மீது தானே பவளம் படரும்?" என்று கண் சிமிட்டிக் கேட்க, வைனியின் கன்னங்கள் செம்பவளங்களாக மாறின. துகிர் என்றால் பவளங்கள் அல்லவா, அதனால் அரண்யாவின் பேச்சின் பொருள் அறிந்தபின் வைனி நாணாமல் இருந்தால் தானே அதிசயம்.

"நீ விஷமக்காரி! இல்லாததை என் வாயாலேயே சொல்ல வைப்பாய். நான் வருகிறேன்!" என்று கவனமாக அரண்யாவின் கையை விலக்கி ஓடி விட்டாள் வைனி. அவள் சென்ற வேகத்தைப் பார்த்த அரண்யா கிண்கிணி நாதமென சிரித்தாள்.

வைனி கூறியதையும் அவள் கேள்விப்பட்டதையும் வைத்துப் பார்க்கும் போது ஏதோ சரியில்லை என்று அவளின் உள்ளுணர்வு எடுத்துரைத்தது. இரும்பனின் தலைமறைவிற்கும் குவேணி, நவிரன் என இருவர் காணாமல் போனதற்கும் ஏதோ ஒரு சம்மந்தம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. இத்தனை காலம் இல்லாமல் இப்போது சூட்சம வித்தைகளை பயிலச் சொல்லி ஐம்பூதனார் கட்டாயப்படுத்துவதன் பின்னணியும் அவளுக்கு மர்மமாகவே இருந்தது.

சற்று நேரம் சென்றதும் காட்டாறு போல ஓடிய எண்ணங்களுக்கு அணை கட்டியவள், குருகுலத்தை நோக்கி நடந்து சென்றாள். நாளை முதல் அவளுக்குப் பிடிக்காத ஆனால் அவளால் எளிதில் கற்க முடிந்த சூட்சமக் கலைகளைக் கற்க வேண்டும் என்று மனதில் நூறு முறைக்கு மேல் சொல்லிப் பார்த்துக்கொண்டாள்.

*****************************************************************

அன்று விடிந்ததில் இருந்தே வீரனின் மனம் சமனடைய மறுத்தது. இந்திர ரகசியத்துக்கான போட்டி முடிந்து வெள்ளிமலைக்கு திரும்பும் வழியில் கமலநாதர் பாதியில் காணாமல் போனதும் பின் காயங்களோடு அவர் திரும்பி வந்ததுமே அவன் மனதினை அரித்துக் கொண்டிருந்தது. போதாக்குறைக்கு அன்று விடியலுக்கு முன்னர் அரண்யா போர்க்களத்தில் காயம் பட்டு மடிவது போன்ற கனவு வந்து கொஞ்சநஞ்சமிருந்த அவன் நிம்மதியையும் முற்றாக அழித்தது.

மனம் அமைதியுறாமல் இந்திர ரகசியத்துக்கான மந்திரப் பிரயோகம் செய்தால் நிச்சயம் அது நன்மையில் முடியாது என்பதை அவன் இந்த ஒரு மாத காலத்தில் நன்கு அறிந்திருந்தான். எவ்வளவு முயன்றும் அவனால் சரியான மனநிலையில் பயிற்சியை மேற்கொள்ள முடியவில்லை. பிறர் கண்களுக்குள் அகப்படாமல் தனிமையில் மட்டும் தான் மந்திரத்தை உருவேற்ற வேண்டும் என்று ஐம்பூதனார் போதித்திருந்தார். அதன் படியே ஒவ்வொரு நாளும் பிறர் விழிப்பதற்குள் எழுந்து தன்னை சுற்றி வட்டமிடுபவன், பலவித மந்திர தந்திர கட்டுக்களைப் போட்ட பின்பு இரு உள்ளங்கைகளையும் இதயத்திற்கு அருகில் வான் நோக்கி வைத்துக்கொண்டு, உள்ளங்கையில் இந்திர ரகசியத்தை ஏந்தி விழி மூடி ஆயிரத்தியெட்டு முறை ஐம்பூதனார் போதித்த மந்திரத்தை உச்சரிப்பான். நிர்மலமான மனதோடு என்றைக்கெல்லாம் அவன் உருவேற்றுகின்றானோ அன்றைக்கு மட்டும் இந்திரரகசியம் ஒளிரும். அவன் மனம் அவன் கட்டுப்பாட்டில் இல்லையென்றால் அவன் உள்ளங்கையை சுட்டுப் பொசுக்கி காயப்படுத்தி விடும்.

கமலநாதர் காயத்தோடு வந்து அவர்களோடு பயணத்தில் இணைந்த மறுநாள் கவனக்குறைவாக வீரன் உருவேற்றத் துவங்க, இந்திரரகசியம் அவன் வலது உள்ளங்கையை நன்றாக சுட்டுவிட்டது. வலியில் துடித்த வீரன் ஏன், என்ன எதற்கு என்ற கேள்விகளுடன் கமலநாதரைக் காண விரைந்தான். அப்போது, "தேவையற்றதை நினைத்துக்கொண்டு செய்யவேண்டியதை ஒழுங்காகச் செய்வதில்லையா?" என்று கமலநாதர் அவனைக் கடிந்து கொண்டது இன்றளவும் அவனுக்கு நன்றாக நினைவில் இருந்தது.

"நிர்மலமான மனம் என்றால் என்னவென்று உனக்கு விளங்கியதா இல்லையா? ஒரு வருடம்... ஒரு நாள் விடாமல் இந்திர ரகசியம் ஒளிர வேண்டும். அப்போது தான் அது உனக்கு முழுதாக வசப்படும். இல்லாவிட்டால் நீ மறுபடியும் முதலிலிருந்து துவங்க வேண்டும். புரிந்ததா?" என்று அடக்கிய கோபத்தோடு கமலநாதர் பேசினார். வீரன் விளையாட்டுத் தனமாக தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் ஆபத்து அதிகமாவதை அவர் வலியுடன் உணர்ந்திருந்தார்.

"நீங்கள் இப்படிக் காயம்பட்டுக் கிடக்கும் போது என்னால் எப்படி முழுமூச்சாக மந்திரப் பிரயோகத்தை செய்ய முடியும் குருதேவா?" என்று அப்பாவித்தனமாக வீரன் கூற, கமலநாதர் லேசாகப் புன்னகைத்தார்.

"இதோ பார் வீரா! என்னைப் பற்றிய கவலை உனக்கு

வேண்டாம். எங்கள் எல்லோரையும் விட உன் பங்கு பெரிது. வரவிருக்கும் தீமையிலிருந்து இந்த நாவலந்தீவை காப்பதற்கு நிச்சயம் இந்திரரகசியத்தின் உதவி நமக்குத் தேவை. அதனால் உன் கவனம் முழுதும் அதிலே தான் இருக்க வேண்டும். உன் கல்வி முடியும் போது யாளிவீரனாக மட்டுமில்லாமல் இந்திரனாகவும் நீ மாறியிருக்க வேண்டுமப்பா." என்று அவன் தலை தொட்டு ஆசீர்வாதத்தித்தார் கமலநாதர்.

"வரவிருக்கும் தீமை என்றால் என்ன குருதேவா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்றான் வீரன்.

ஒரு நெடிய மூச்சை விட்ட பின்னர் கமலநாதர் பேச ஆரம்பித்தார். "பல விண்கற்கள் பூமியை நோக்கி வருவது போலிருக்கின்றது என்று வானசாத்திர மேதைகள் பலர் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்கள். அவை நாவலந்தீவைத் தாக்கி முற்றாக அழிக்கும் அபாயம் இருக்கிறது மகனே. அவற்றிலிருந்து நம்மை காத்துக்கொள்ளத்தான் இந்திர ரகசியத்தின் உதவி நமக்கு மிக அவசியமாகிறது. சொந்த விஷயமாக நான் சென்றிருந்த போது குதிரையின் கால் இடறியதால் வந்த காயங்கள் தான் இவை. நீ கவலைகொள்ளும் அளவிற்கு வேறெதுவுமில்லை. அதனால் வீணாக மனதை போட்டுக் குழப்பிக்கொள்ளாமல் இந்திர ரகசியத்தை முழுதாக கைக்கொள்ளப் பார்!" என்று அத்தோடு பேச்சு முடிந்தது என்பதைப் போல அவனை எழுந்து செல்லச் சொல்லி விட்டார் கமலநாதர்.

குதிரை ஏற்றத்தில் மிக வல்லவரான கமலநாதர் குதிரையின் கால் இடறியதால் காயப்பட்டார் என்று நம்பும் அளவிற்கு வீரன் முட்டாளில்லை. அதுமட்டுமின்றி இப்போதெல்லாம் துகிரனும் கமலநாதரும் அடிக்கடி சந்தித்துத் தனிமையில் நீண்ட நேரம் உரையாடுவதை அவன் அறிவான். துகிரனுக்கு மட்டும் பல்வேறு மேம்பட்ட சூட்சமக் கலைகளை அவர் கற்பிப்பதும் அவன் அறிந்ததே. ஆனால் என்ன விடயம் என்று கேட்டால் துகிரன் பதிலளிக்காமல் நழுவுவது வீரனின் மனதை வெகுவாக பாதித்திருந்தது. தன்னிடமிருந்து ஏதோ முக்கிய விஷயத்தை மறைக்கின்றனர் என்பது வீரனுக்கு உவப்பாக இல்லை. இந்தக் காரணத்தாலேயே நாளடைவில் வீரனுக்கும் துகிரனுக்கும் இடையில் ஒரு விரிசல் கூட உருவானது.

நடந்ததையெல்லாம் நினைத்துப் பார்த்த வீரனுக்கு எரிச்சலாக வந்தது, "இந்தச் சனியன் பிடித்த போட்டியில் ஏன் தான் வென்றேனோ?" என்று சொல்லி அவன் தலையில் அடித்துக் கொண்ட மறு நொடி, இந்திரரகசியம் மீண்டும் அவன் கையை சுட்டது. கொட்டிய

வார்த்தையின் பொருள் புரிய உடனே பதறியவன், இந்திர ரகசியத்திடம் மனதார மன்னிப்பு கேட்டான். அதிகப்படியான மனஅழுத்தமே தன்னை இப்படி தரம் தாழ்ந்து பேசவும் யோசிக்கவும் வைக்கின்றது என்பதை உணர்ந்த வீரன், மறுநாளில் இருந்து நிச்சயமாக இந்திரரகசியத்தைத் தவிர வேறு சிந்தையில் மனதை செலுத்துவதில்லை என்று உறுதி பூண்டான். ஒரு வருடத்தில் ஒரு மாதம் தாமதமானால் பெரிதாக என்ன நிகழ்ந்து விடும் என்று எண்ணித்தான் வீரன் முதலில் அலட்சியமாக இருந்தான். ஆனால் அந்த ஒரு மாத கால இடைவேளைதான் அனைத்தும் முடிவதற்குக் காரணமாக இருந்தது.

*****************************************************************

தென்பாலி நாட்டின் அடர் வனம்!

மேருவிற்கு தெற்கு திசையில் இருக்கும் தென்பாலி நாட்டின் அடர்வனத்திற்குள் இரண்டு குதிரைகளைப் பூட்டிய ஒரு சாதாரண வண்டி சென்று கொண்டிருந்தது. வண்டியை ஓட்டும் பெண் விரைந்து செல்லாமல் மெல்லமாகவே குதிரையை நகர்த்தினாள். ஒவ்வொரு மரத்திற்கும் இடையே குறுகிய இடைவெளியே இருந்தது. வேகமாக சென்றால் எங்கே மரத்தில் மோதிவிடுவோமோ என்ற அச்சத்திலும் வண்டியில் இருந்த இரு ஆடவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த காரணத்தாலும் குதிரைகளை மெதுவாகவே செலுத்தினாள்.

கானகத்தின் நடுவே, ஒரு ஓடையின் சலசலப்பு கேட்டதும் குடில் அமைப்பதற்கு ஏதுவான இடம் கிடைத்தது என்று நினைத்து வண்டியை நிறுத்தினாள்.

"ஓ! ஓ!" என்று மெல்ல குதிரைகளை அவள் தட்டிக் கொடுக்க, அவைகள் அவளைப் பார்த்து கனைத்தன.

குதிரையின் கனைப்பொலியைக் கேட்ட முதலாமவன் உறக்கம் கலைந்து எழுந்தான். எதற்காக வண்டி நின்றிருக்கிறது என்பது புரிந்ததும், கீழே இறங்கி குடில் அமைப்பதற்கு அந்தப் பெண்ணிற்குத் தேவையான உதவிகளை அவள் கேளாமலேயே செய்ய ஆரம்பித்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் இன்னொருவனும், "இடம் வந்து விட்டதென்றால் என்னையும் எழுப்பி இருக்கலாமே!" என்று லேசாக கோபித்துக்கொண்டு அவர்களுடன் இணைந்து கொண்டான்.

"நீ ஓய்வெடுத்துக் கொள்!" என்று அந்தப் பெண் ஆரம்பிக்கும் போதே, "குவேணி! எனக்கு உடல் துருப்பிடித்து விட்டதைப் போலத் தோன்றுகிறது. தயவு செய்து என்னை அசையவாவது விடேன்!" என்று அந்த இளைஞன் சிறுபிள்ளை போல் கெஞ்சினான். கண்களின் ஒளி

மங்கி கன்னங்கள் ஒட்டி உடல் இளைத்திருந்தாலும், இயல்பான அவனது கம்பீரம் சிறிது கூடக் குறையவில்லை.

"அதில்லை நவிரா! உன் உடல் நிலை இப்போது தான் தேறி வருகிறது. இப்போது பார்த்து ஏன் சிரமப்பட்டு உன்னை வருத்திக் கொள்கிறாய் என்று தான் குவேணி சொல்கிறாள்." என்று அவளுக்குப் பரிந்து பேசியவன் மேரு மலையின் முன்னாள் குருகுல மாணவன் இரும்பன். அவனுடன் பயணம் செய்வது நமக்கு ஏற்கனவே அறிமுகமான நவிரனும் குவேணியும் தான்!

"சும்மா இருப்பவனின் மனம் எப்போதும் சும்மா இருக்காது என்பதை நீ அறிய மாட்டாய் இரும்பா. அதிலும் என் போல துரோக சிந்தனை கொண்டவனின் மனம் எப்போதும் அமைதியுறாது!" என்று புலம்ப ஆரம்பித்தான் நவிரன்.

"உன் அத்தை மகள் என்று சொல்லிக்கொண்ட ஒரு பெண்ணிடம் மனதை பறிகொடுத்ததைத் தவிர வேறெந்த தவறை நீ செய்தாய்? அவள் விரும்பிய பொருளை அவளது ஆசைக் காதலன் என்கிற முறையில் பெற்றுத் தர நீ பாடுபட்டாய். அவ்வளவுதான்! துரோக சிந்தை அது இதென்று உளறிக்கொண்டு மனதை போட்டு உழப்பாமல் பேசாமல் அமரு!" என்று குவேணி சொன்னாள்.

"என் மீது நீ கொண்டுள்ள பரிவு உன்னை அப்படி பேசத் தூண்டுகிறது குவேணி. என் சதிகார மனம் மட்டும் வீரனுக்கோ அன்றி அரண்யாவிற்கோ தெரிந்தால், என் முகத்தில் கூட விழிக்க மாட்டார்கள்! அவர்களை விடு, என் தாய் தந்தை கூட என் முகத்தில் உமிழ்ந்து விடுவார்கள். ஆறு வயதிலிருந்து என்னை வளர்த்த என் குருநாதரே என்னை விட்டுவிட்டு போய்விடவில்லை? மற்றவர் மட்டும் எப்படி என்னை மன்னிப்பர்?" என்று சொல்லி மௌனமாகக் கண்ணீர் விட்டான் நவிரன்.

"எல்லா தவறுகளுக்கும் பிராயச்சித்தம் என்று ஒன்று இருக்கிறது நவிரா. நமக்கான பணி என்னவென்று முடிவு செய்து நம் பாதையில் பயணிப்போம். நல்லதற்கு துணை நிற்போம். எனக்கென்னவோ நீ சொன்ன பெண் சாதாரணமானவளாக இருக்க வாய்ப்பில்லை என்று தான் தோன்றுகிறது. கமலநாதர் கூட எவ்வளவு எச்சரிக்கையோடிருக்க சொன்னார் தெரியுமா? அவரை அப்படியான பதட்டத்தில் நான் பார்த்ததே இல்லை." என்றான் இரும்பன்.

"நம் பாதைகள் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டுவிட்டன; விரைவில் கமலநாதர் கூறியதைப்போல நம்மைத் தேடி வருவார் நவிரா. எங்களைப் போல் உன்னுடைய குணமறிந்த எவராலும் உன்னைத்

தவறாக எண்ணவே முடியாது. கலங்காதே!" என்று சொல்லிவிட்டு அவர்களிருந்த இடத்தைச் சுற்றிலும் இருக்கும் மந்திரக் கட்டுக்களை மேலும் அதிகரித்தாள் குவேணி. எங்கே சென்றாலும் யாரோ அவர்களைத் தொடர்ந்து வருவது போலவே இந்த இரு மாத காலத்தில் அவள் உணர்ந்திருக்கின்றாள். அதனாலேயே ஒரு இடத்தில் நில்லாதிருக்கும் நாடோடி வாழ்க்கையை தேர்ந்தெடுத்திருந்தாள்.

முதலில் சுயநினைவிழந்த நிலையில் இருந்த நவிரனை சுமந்து கொண்டு செல்வது கடினமாகவே இருந்தது. அதிலும் அவனுக்குத் தேவையான உணவினையும் மருந்தினையும் பக்குவமாகக் கொடுப்பது குவேணிக்கும் இரும்பனுக்கும் எளிதாக இருக்கவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல நவிரனின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அதன் பிறகு மேரு மலைக்கு தெற்கில் அவர்கள் பயணம் மேற்கொண்டனர். ஓலைக் குடில் அமைத்துத் தங்குவதும், யாராவது தன்னை கவனிப்பதைப் போல உணர்ந்தால் உடனேயே இடத்தை காலி செய்வதும் அவர்களது வழமையாகிற்று. இப்போது நவிரனால் நல்லபடியாக எழுந்து நடமாட முடிகிறதென்றால் அது குவேணி மற்றும் இரும்பனின் அன்பு செறிந்த பராமரிப்பினால் தான்.

"அவர் வரும் வரையிலாவது என்னாலான உதவிகளை செய்கிறேனே!" என்று பிடிவாதம் பிடித்து அதில் வெற்றியும் கண்டான் நவிரன். சிறுவயது முதலே இளவரசன் என்பதால் நவிரனுக்கு உயிர்த்தோழர்கள் என்று எவரும் இருந்ததில்லை. அவன் பயின்ற குருகுலத்தில் அனைவருக்குமே நவிரனிடம் ஒரு ஒதுக்கம் இருந்தது. ஆனால் சில காலமே அறிமுகமாகியிருந்தாலும் குவேணியும் இரும்பனும் அவனுக்கு ஆப்த நண்பர்களாகிப் போனார்கள். ஒரு நிமிடம் கூட அவனை இளவரசன் என்று எட்டி நிறுத்தாமல் அவனையும் அவர்களுள் ஒருவனாகப் பார்ப்பதும், அவன் உணவையோ மருந்தையோ மறுத்து அடம் பிடிக்கும் போது கெஞ்சி கொஞ்சி மிஞ்சி என்று சாம தான பேத தண்டத்தை உபயோகிப்பதும் என்று அவனின் நலனில் அவனை விட அதிக அக்கறை செலுத்தினர் குவேணியும் இரும்பனும்.

குடிலமைத்து முடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஓடைக் கரையில் களைப்புடன் அமர்ந்து தண்ணீர் பருகிக் கொண்டிருந்தான் நவிரன். அப்போது எதேர்ச்சையாக ஓடை நீரைப் பார்த்தவன் தீயினை மிதித்தவனைப் போல எழுந்து நின்றான்.

நீரலைகளில் ஒரு ஜோடிக் கருநீலக் கண்கள் அவனை எரித்து

விடுவதைப் போலவே பார்த்தது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது.
*****************************************************************

தென்மதுரை!

"தாரகா! என்ன சொல்கிறாய்? மறுமுறை கூறு!" என்று இரைந்தார் ஒரு அமைச்சர். அந்த அவசரக் கூட்டத்தில் பல மந்திரிப் பிரதானிகளோடு பேரரசர் வீய பாண்டியனும், சேனாதிபதி ரணதீரனும், தான்யாதிகாரி திண்ணனும், ஒற்றர் படைத்தலைவன் தாரகனும் பாறை முகங்களுடன் அமர்ந்திருந்தனர்.

"பாலை அரசர்கள் இருவரும் நமக்கு பகையாளிகளாகிப் போனார்கள் என்று சொல்கிறேன். நம் மீது போர் தொடுக்க அவர்கள் படைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்கிறேன். என் கணிப்பு சரியென்றால் இந்த வார இறுதிக்குள் போர் மூளலாம் என்கிறேன். அதைவிட முக்கிய குற்றச்சாட்டு என்னவென்றால், போர் மூளும் அபாயம் இருக்கிறது என்று என் கைப்பட நானே சாந்திட்டு அனுப்பிய ஓராயிரம் ஓலைகளில் ஒரு ஓலை கூட பேரரசரின் கைகளுக்குக் கிடைக்கவில்லை என்கிறேன். நம் அரண்மனையிலேயே ஒன்றோ அல்லது பலரோ துரோகிகள் இருக்கிறார்கள் என்கிறேன்!" என்று கோபத்தில் மூக்கு விடைக்க மூச்சு வாங்கிய படி சொன்னான் தாரகன்.

"யாரைக் குற்றம் சாற்றுகிறாய்?" என்று உறுமியபடியே கோட்டைக் காவல் படைத்தலைவர் எழுந்தார்.

"யார் இந்த குற்றத்தை செய்தார்களோ, யார் இந்த குற்றத்தை செய்தவர்களை தடுத்து நிறுத்தி பிடிக்கவில்லையோ அவர்கள் அனைவரின் மீதும் தான் குற்றம் சுமத்துகின்றேன்!" என்று எதிர் பேச்சு பேசினான் தாரகன். அவனின் பலநாள் உழைப்பிற்கு பலனில்லாமல் போனதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

"அப்படியானால் முதல் குற்றவாளி நானே! என்னை நீயே உன் கைகளால் கைது செய்துவிடு தாரகா!" என்று சோர்ந்த குரலில் பேரரசர் கூறினார்.

"அரசே! என்ன வார்த்தை கூறினீர்கள்!" என்று பதறி இருக்கையில் அமைதியாக அமர்ந்தான் தாரகன். கூடவே அத்தனை மந்திரிகளும் அமைதியாயினர்.

"உண்மை தான் தாரகா! என் அரண்மனையில் எனக்கு தெரியாமல் ஒரு காரியம் நடக்கிறதென்றால், நானென்ன பேரரசன்? என் மகன் நாவகன் நம் நாட்டை விட்டு சென்றதில் இருந்து என்னால் எந்த

காரியத்திலும் முழுமனதாக ஈடுபட முடியவில்லை. அது தான் என்னால் எனக்கு கீழிருப்பவர்களின் துரோகங்களை அடையாளம் காண முடியவில்லை என்று நினைக்கிறேன். என் மதியீனத்திற்காக மக்களை பலிகடாவாக்க ஒரு போதும் நான் விடப் போவதில்லை.

உன் ஓலைகள் எனக்கு கிடைக்காவிடினும் கமலநாதர் மூலம் எனக்கு ஏற்கனவே தகவல் வந்து விட்டது தாரகா. எதிரி யாரென சரியாகத் தெரியாமல் உங்களை எதற்காகக் கலவரப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தான் போருக்கான ஆயத்தங்களை நானும் சேனாதிபதியாரும் ரகசியமாக செய்துகொண்டு இருந்தோம். இப்போது எதிரி யாரெனத் தெரிந்துவிட்டபடியால் போரில் நம்மை வெற்றி பெற வைக்கும் வியூகங்களை சேனாதிபதி ரணதீரன் பார்த்துக்கொள்வார். எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடாமல் அவர்களின் போர் படைகளின் சரியான எண்ணிக்கையை ஒற்றறிந்து நீயே நேரில் வந்து சொல். இனி யாரையும் நம்ப வேண்டாம்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம். நம் இளவரசி அரண்யா ஐந்தாம் நிலையிலேயே ஆறாம் நிலை கல்வியை சிறப்பாக முடித்து விட்டதாக கமலநாதர் தெரிவித்தார். அது மட்டுமின்றி வீரனும் அரண்யாவும் ஒருவரை ஒருவர் நேசிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அதனால் இந்திர ரகசியத்தை வென்ற யாளி வீரனை என் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள நான் முடிவு செய்து விட்டேன். இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் எனக்கு ஐயமில்லை. அதனால் இந்தப் போர் முடிந்ததும் அரண்யாவை வரவழைத்து இந்த நாவலந்தீவையும் வீரனையும் அவள் கையில் ஒப்படைத்துவிட்டு நானும் உங்கள் பேரரசியும் தேசாந்திரம் செல்லப் போகிறோம்!" என்று அறிவித்தார் பேரரசர்.

பேரரசர் பேசி முடித்ததும் அந்த அரங்கமே சலசலத்தது. "என்ன? மேரு மலைக் கல்வியை முடிக்க விடாமல் இளவரசிக்குத் திருமணமா?" என்று தைரியமாக எதிர்த்தார் ஒரு அமைச்சர். மற்றவரோ சேனாதிபதி ரணதீரனை கேள்வியாக நோக்க, அவரோ பிடிவாதமான மௌனம் சாதித்தார்.

பேரரசர் ஒரு கசந்த புன்னகையை சிந்திவிட்டு, "மக்களை விடக் கல்வி பெரிதில்லை அமைச்சரே! எனக்கும் வயதாகிக் கொண்டே செல்கிறது. என் அந்திமக் காலம் நெருங்குகிறதோ என்று என் மனம் அடிக்கடி சஞ்சலப்படுகின்றது. அதனால் என் கூற்றுப்படி அரண்யாவே அடுத்தபடி பேரரசியாக முடிசூட்டப்படுவாள்! போர் முடிந்த பிறகு இதைப் பற்றி விரிவாக பேசலாம். இப்போது போர் பற்றி மட்டும்

விவாதிப்போம்!" என்று முடித்துக் கொண்டார் பேரரசர். அதன் பின்னர் அரண்யாவின் திருமணம் குறித்து அங்கு யாரும் கேள்வி எழுப்பவில்லை என்றாலும் எல்லோர் மனங்களிலும் ஒரே கேள்வியே உதித்தது. அது, "நாவகனின் நிலைப்பாடு என்ன?" என்பது தான்.

போர் பற்றிய விரிவான திட்டத்தை விவாதித்து விட்டு மனம் கணத்துப் போய் நள்ளிரவில் நடை தளர அந்தப்புரம் சென்றார் பேரரசர். அந்த நேரத்திலும் பேரரசருக்காகக் காத்திருந்தார் பேரரசி அயினி அம்மை.

"என்னவாயிற்று?" என்று அன்போடு கேட்டபடியே பேரரசர் அருந்த சீரகத் தண்ணீர் தந்தார் பேரரசி.

"இன்னும் என்னவாக வேண்டும் அயினி? போரில் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ என்று மனம் பதைக்கிறது கண்மணி. என் தந்தையின் காலத்தில் இருந்த சிறுசிறு போர்கள் கூட என் காலத்தில் நிகழக் கூடாதென்று அவ்வளவு கவனமாக ஆட்சி புரிந்தும், இப்படி பாலை நாடுகளின் இரு அரசர்களும் நம் மீது படையெடுக்கும்படி ஆகிவிட்டதே! போரில் எத்தனை மாவீரர்கள் இறப்பார்களோ? எத்தனை உயிர்கள் காவு வாங்கப்படுமோ? நம் மக்களின் குடும்பங்களில் எத்தனை இறப்புகள் நடக்குமோ? அதனால் எத்தனை வயோதிகர்களும் பிள்ளைகளும் அனாதைகளாக ஆவார்களோ? நாம் பிரியமுடன் வளர்த்த குதிரை, யானை, யாளி முதல் நாம் பிள்ளைகளைப் போலக் கருதும் போர் வீரர்கள் வரை சகலரும் வெட்டுண்டு, நாம் உயிராக நேசிக்கும் வயல்களில் குருதி ஆறாக ஓடப் போவதை நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறதே! இதற்கெல்லாம் காரணம் நான் சரியாக ஆட்சி செய்யாததுதானோ என்கிற குற்றவுணர்ச்சியே என்னை குத்திக் கிழிக்கிறதே!" என்று பேரரசியின் மடியில் தலை சாய்த்துக் கண்ணீர் விட்டார் பேரரசர்.

"நீதிநெறி வழுவாத வீய பாண்டியனே மனம் தளர்ந்தால், அவர் படை எப்படித் துடிப்புடன் செயல்படும் அரசே? உங்கள் அளவிற்கு நல்லாட்சி யாரும் தந்ததில்லை என்பதற்குச் சான்று வேண்டுமென்றால் நம் நூலகத்தில் ஏராளம் இருக்கின்றது. காலையில் எடுத்துத் தருகிறேன்." என்று கேலி பேசி பேரரசரை புன்னகைக்க வைக்க பெருமுயற்சி செய்தார் பேரரசி. அவர் மனம் புரிந்தது என்பதைப் போல, மெல்லப் புன்னகைத்தார் பேரரசர்.

"உன் அன்பு மட்டும் இல்லையென்றால் நான் என்னாவேன் அயினி?" என்று கண்கள் மூடினார் பேரரசர்.

"அதை எப்போதும் நீங்கள் அறியப் போவதேயில்லை!" என்று

சொல்லி மெல்ல பேரரசரின் முன் நெற்றியில் மிருதுவாக முத்தமிட்டார் பேரரசி.

நாட்டின் எதிர்காலம், மகனின் பிரிவு, மகளின் நிலை என்று சகலத்தையும் மனதினுள்ளேயே வைத்து மருகிக் கொண்டிருந்த பேரரசருக்கு பேரரசியின் அன்பே அமிர்தமானது. எது வந்தாலும் என் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பேன் என்று மனதிற்குள் சூளுரைத்தவருக்கு அதன் பின்னரே இயல்பாக மூச்சு விட முடிந்தது.

அன்றைய இரவில் உறக்கம் வராமல் இருவரும் அரண்யாவைப் பற்றியும் நாவலந்தீவைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கும்போதே, திடீரென யாளி, யானை, குதிரை, மனிதர்கள் என பல்வேறு விதமான கூக்குரல்கள் கேட்டது. அபாய மணியும் சேர்ந்து ஒலிக்க திடுக்கிட்டு எழுந்த பேரரசர், உப்பரிகையில் நின்று பார்க்க, மதுரையின் நாலாபுறமும் நெருப்புக்கு இரையாகிக் கொண்டிருந்தது.

சுற்றிலும் எரியும் தீ பேரரசருக்கு ஒரு குழந்தையின் குழலை நினைவூட்டியது. 'பிறந்த சிசுவைக் கொல்ல முயன்றதற்காக இந்தத் தண்டனையா இல்லை அந்தக் குழந்தை பிழைத்ததால் இந்தத் தண்டனையா?' என்று புரியாமல் கழிவிரக்கத்திலும் குற்றவுணர்ச்சியிலும் வெந்து நொந்தார் அந்தப் பேரரசர்.

## அத்தியாயம் 3

தென்மதுரை - சில மணி நேரங்களுக்கு முன்பு!

ஊர் எல்லை வரை புழுதியைக் கிளப்பிக் கொண்டு அசுரப் பாய்ச்சலில் ஓடி வந்த குதிரைகள், எல்லையை நெருங்கியதும் அவற்றின் தலைவனின் உத்தரவிற்குக் கட்டுப்பட்டு சட்டென நின்றன.

சப்தம் செய்யாமல் தத்தமது குதிரைகளின் மேலிருந்து இறங்கியது அந்தச் சிறு படை. ஏற்கனவே ஒத்திகை பார்த்திருந்ததைப் போலவே இரண்டிரண்டு ஆட்களாக மொத்தம் ஐந்து குழுவாகப் பிரிந்தனர் அந்தப் பத்துப் பேர். கண்களைத் தவிர்த்து முழு முகத்தையும் கருப்புத் துணிகொண்டு தலைப்பாகையுடன் சேர்த்துக்கட்டி மறைத்திருந்தனர். முகம் தெரியவில்லையே தவிர அவர்கள் கண்களில் தெரிந்த கோபாவேசமும் துவேஷமும் அவர்கள் நிச்சயம் மதுரையைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதை பறைசாற்றியது.

முதல் இரண்டு குழு அரண்மனையின் மேற்கு வாசலை நோக்கி விரைய, மற்ற மூன்று குழுக்களும் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்தனர். இருளின் துணை கொண்டு நிழலோடு நிழலாகக் கலந்து இலக்கை

நோக்கி விரைந்தனர். ஐந்தாம் குழுவின் ஆட்கள் ஊருக்குள் முதலில் புகுந்து, வந்த வேலையை நிறைவேற்றுவதற்கான சமிக்கையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அதே போல நான்காம் மற்றும் மூன்றாம் குழுக்களின் ஆட்கள் நால்வரும் ஊரைச் சுற்றியிருக்கும் வயல்வெளிகளுக்குச் சென்று தங்கள் தலைவனின் உத்தரவிற்காகக் காத்திருந்தனர்.

வீய பாண்டியனின் ஆட்சியில் இதுவரையில் சிறு திருட்டு கூட நடந்ததில்லை என்ற மமதையில் இருந்த மக்கள், வெளியில் நடப்பவற்றை அறியாது, காவல் காக்க வீரர்கள் இருக்கிறார்கள் என்ற அசாத்திய நம்பிக்கையில் நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

மேற்கு கோட்டை வாசலுக்கு மேலே நின்றால் சுலபமாக ஊருக்குள் வரும் எவரையும் கண்டு கொள்ளலாம். ஆனால் அன்றைக்கு கோட்டைக் காவலில் ஈடுபட்டிருந்த பலரும் நடப்பவற்றை வேடிக்கை பார்த்தார்களே ஒழிய எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தூரம் அதிகமிருந்தாலும் கடும் பயிற்சி எடுத்திருந்த காரணத்தால் சுலபமாக குறைந்த காலத்தில் கோட்டை வாயிலை அடைந்தனர் முதல் இரு குழு வீரர்களும். அந்தக் கூட்டத்தின் தலைவனைப் போலிருந்த முதலாமவன் கையில் வைத்திருந்த பந்தத்தை கொளுத்தி வலமும் இடமுமாக மூன்று முறை அசைக்க, மேற்கு வாசல் கதவு தானாக மெல்லத் திறந்தது. பூனைகளைப் போல மெள்ள நடந்தவர்கள், எந்தவொரு ஒலியையும் எழுப்பாமல் ஆளுக்கொரு திக்கை நோக்கி விரைந்தனர்.

குதிரை லாயம், பசுக் கொட்டடி, யானை மற்றும் யாளிகளின் கொட்டகை என்று குறி வைத்து மூன்று பேர் செல்ல, நாலாமவன் அரண்மனையின் பின்புறமிருக்கும் ஒரு ஓலை குடிசைக்குள் மெல்லடி எடுத்து வைத்து நுழைந்தான். அங்கிருப்பவரின் தலையை எப்பாடு பட்டாவது துண்டிக்க வேண்டும் என்பதே அவனுக்கு இடப்பட்ட ஆணை. உள்ளே நுழைந்தவனை, "வாப்பா! சரியான நேரத்திற்குத் தான் வந்திருக்கின்றாய்." என்று வரவேற்றது ஒரு குரல். திடுக்கிட்டு அவன் திரும்ப முனைகையில் அறையின் மூலையில் இருந்த தூங்காவிளக்கின் திரி நன்றாகத் தூண்டப்பட்டது.

கிட்டத்தட்ட எண்பது பிராயத்திற்கும் மேலுள்ள ஒரு வயதான கிழவன் அங்கே நின்று கொண்டிருந்தார். நாலாமவன் பதட்டத்தில் தயங்குவது புரிந்ததும், ஒரு குறுநகையைச் சிந்திவிட்டு, "ஊராரின் கிரக நிலைகளை எல்லாம் ஆராய்ந்து பலன் சொல்லும் அரண்மனை சோதிடருக்குத் தன் கிரக நிலைகளின் பலன்களைக் கணிக்க முடியாதா

என்ன? எந்தச் சோதிடனும் தன் சாதகத்தைத் தானே கணிக்க மாட்டான் என்றாலும், தன் இறுதி நாட்களை அவன் உள்ளுணர்வே அவனுக்கு உணர்த்திவிடும். நாளை பொழுது என் விதியில் இல்லை என்பதை அறிந்தேதான் உனக்காகக் காத்திருக்கின்றேன். என் இறப்பை விட, இனி நான் உயிராக மதிக்கும் என் தாய்நாடு படப்போகும் இன்னல்களே எனக்கு அதிக அச்சத்தைக் கொடுக்கிறது. அதனால் ஒரு வகையில் நீ எனக்கு பேருதவி செய்கிறாய் மகனே! உன் கடமையைச் செய், இந்தக் கிழவன் எந்த வகையிலும் உன்னைத் தடுக்க மாட்டேன்!" என்று சொல்லிவிட்டு அவன் முன்னே உறுதியான பார்வையுடன் நின்றார்.

எதிரி பயம் கொள்ளும் போதோ அல்லது எதிர்த்து சண்டையிடும் போதோ அவர்களை அழிப்பது ஒருவனுக்குச் சுலபம். ஆனால் தள்ளாடும் வயதிலிருக்கும் ஒரு முதியவர், தன்னை கொல்லச் சொல்லி நெஞ்சுயர்த்தி நிற்கும் போது அவரைச் சாய்க்கும் துணிவு ஒரு சுத்த வீரனுக்கு எப்போதும் வருவதில்லை. அவர் கழுத்தை நோக்கி அவன் வாள் உயராது போகவும் சூறாவளியாய் அங்கு உள்ளே நுழைந்தாள் காமரி; கூடவே நாவகனும் வந்தான்.

"மதி கெட்டவனே, கொடுக்கும் வேலையைச் சரியாக செய்யத் தெரியாத கோழைகள் எனக்குத் தேவையில்லை!" என்று சினத்துடன் சொன்னவள், அந்த வீரனின் இதயத்தை அவள் கைகளாலேயே பிய்த்து எறிந்து விட்டாள். தரையெங்கும் குருதி வழிந்தோட, அங்கேயே மாண்டான் அவன்.

'உனக்காக சண்டையிட வந்தவனைக் கொன்றுவிட்டாயே!' என்று பார்வையாலேயே காமரியை குற்றம் சாட்டினார் அரண்மனை சோதிடர். நாவகன் இருந்த திசையைக் கூட அவர் கண்கள் தீண்டவில்லை. சிறுவயதில் பார்க்கும் போதெல்லாம் தினை உருண்டையும் எள்ளுருண்டையும் தந்து அவனோடு விளையாடும் சோதிடர் தாத்தா, இன்று அவனை ஏறெடுத்தும் பார்க்க விரும்பவில்லை என்பது புரிந்ததும் நாவகனின் நெஞ்சமே அவனைச் சுட்டது.

"தாத்தா..." என்று அழைத்து முன்னேறியவனை அவரின் ஒற்றைப் பார்வை அங்கேயே சிலையென சமைய வைத்தது.

"இவன் தான் நான் இருக்குமிடத்தை உன் தந்தையிடம் சொல்லி, என்னைக் கொல்ல அவரை அனுப்பியவன். இந்தக் கிழவன் இனியும் உயிருடன் இருந்தால் நம் அனைத்துத் திட்டங்களையும் தவிடுபொடியாக்கி விடுவான். தாமதிக்காது அவனை கொன்றுவிடு நாவகா!" என்று கடைசி வரியை மட்டும் நாவகனின் காதில்

கிசுகிசுத்தாள் காமரி.

'தூக்கி வளர்த்தவரைக் கொல்வதா?' என்று நாவகன் தயங்க, "என்னைச் சுற்றி மட்டும் ஏன் தான் பேடிக் கூட்டமே இருக்கிறதோ தெரியவில்லை. என் வேலைகளை நானே செய்ய வேண்டும் என்பது தான் என் விதி போலும்!" என்று சலித்துக் கொள்வது போன்று நாவகனின் ஆண்மை உணர்வை வார்த்தைகளால் குத்தினாள் காமரி.

காமரியின் சொற்கள் நாவகனை கூறு போட்டாலும் அவன் அசையாது நிற்பதைப் பார்த்த அரண்மனை சோதிடர், "அவள் உன் தங்கையின்..." என்று ஏதோ சொல்ல வாயெடுக்கும் போதே நாவகனின் இடையில் இருந்த குறுவாளை சோதிடரின் கழுத்தைக் குறி வைத்து எறிந்தாள் காமரி. குறி தப்பாமல் தன் வேலையை அந்தக் குறுவாள் முடிக்க, "காமரி! ஏன் ஒரு முதியவரை ஈவு இரக்கமின்றி கொன்றாய்?" என்று சினந்தான் நாவகன்.

நாவகனின் சினத்தை அறிந்த காமரி வழமை போல அவனை சமாதானப் படுத்த முனையவில்லை. நேராக சென்று சோதிடரின் கழுத்தில் இருந்த குறுவாளை எடுத்துச் சுத்தம் செய்து நாவகனின் கைகளில் திணித்தாள்.

"இதோ உன் குறுவாள் நாவகா! பிறந்த அன்றே என்னை எமனுலகுக்கு அனுப்ப சதித்திட்டம் தீட்டியவனே இந்தக் கிழவன். உனக்கு வேண்டுமானால் நான் செய்வது பிடிக்காதிருக்கலாம். ஆனால், நம் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் உனக்குப் பிடிக்காத பல செயல்களை நீ செய்து தான் ஆகவேண்டும். செல்லும் பாதையில் தவறிருக்கலாம், பலரை நாம் ஏறி மிதிக்கவும்... ஏன் தயவு தாட்சண்ணியம் பார்க்காமல் கொல்லவும் வேண்டியிருக்கலாம். அப்படிச் செய்தால் மட்டுமே நம் பாதையின் முடிவில் நாவலந்தீவின் சிம்மாசனத்தில் நீயும் உன் பக்கத்தில் நானும் வீற்றிருப்போம். நம்மை எதிர்க்கத் துணிந்த அனைவரும் நம் காலின் கீழே மண்டியிட்டு நம் ஏவலை நிறைவேற்றக் காத்திருப்பர். இலக்கை அடைவதற்கான நெஞ்சுறுதி உனக்கு இல்லையென்றால் இப்போதே சொல்லிவிடு! நான் வேறு மார்க்கம் பார்த்துக்கொள்கிறேன். உனக்குப் பலமுறை தவறிழைத்த உன் குடும்பம் தான் உன் நன்மையையே எண்ணிச் செயல்படும் என்னைவிட உயர்வு என்று நீ கருதினால் இப்போதே என்னை உன் கைகளாலேயே கொன்று விடு!" என்று பேசிவிட்டுக் கோபமாக விழிநீரைச் சுண்டினாள் காமரி.

"என்னை மன்னித்துவிடு கண்மணி! நீயே எனக்கு எல்லாம்! கோபத்தை விடு. இனி நீ சொல்லுவதை நிறைவேற்ற ஒருபோதும்

தயங்கேன். எனக்கு சிம்மாசனமும் நீயும் ஒருசேர வேண்டும் கண்ணே! உன்னை எதிர்கேள்வி கேட்பது கூட பாவம் கண்மணி. இனி அந்தத் தவறை எப்போதும் செய்ய மாட்டேன். நீ... நீ மட்டுமே எனக்கு முக்கியமானவள். உன்னைத் தவிர வேறொருவரும் எனக்குத் தேவையில்லை." என்று காமரியிடம் முழுதுமாகச் சரணாகதி அடைந்தான் நாவகன்.

"சரி, சரி! வா! செல்லுவோம்! இனி இங்கிருப்பது நன்மை தராது." என்று சொல்லி நாவகனின் கைப்பற்றி எப்படி வந்தாளோ அப்படியே காற்றில் மறைந்தாள் காமரி.

சோதிடரின் மறைவிலும் காமரியின் கோபத்திலும் கவனத்தைச் சிதற விட்ட நாவகன், கடைசியாக சோதிடர் எதைச் சொல்ல முனைந்தார் என்பதில் கவனத்தை செலுத்தத் தவறினான். எதனால் காமரி வேகவேகமாக அவர் கதையை முடித்தாள் என்பதை யோசிக்கும் அறிவும் அவனுக்கில்லை.

அரண்மனை சோதிடர் இந்த மண்ணை விட்டு நீங்கியதும், அரண்மனையின் உள்ளிருந்த மற்ற மூன்று பாலை வீரர்களுக்கும் ரகசிய சமிக்கை செய்தாள் காமரி. அதன் பின்னர் ஒரே நேரத்தில் படை விலங்குகள் இருக்குமிடத்திற்கு தீ வைத்தனர் அம்மூவரும்.

ஈசனின் நினைவாக அரண்மனையின் தெற்குப் பக்கத்தில் ஒரு கல்லாலமரத்தை நட்டு வளர்த்து வழிவழியாக பூசை செய்து வந்தனர் பேரரசரின் குடும்பத்தினர். அம்மரத்தைக் கண்டதும் காமரியின் இதழ்களில் ஒரு இளநகை தோன்றியது. மந்திரத்தை உச்சரித்து வானத்தை நோக்கி அவள் பார்வையை வீச, வானிலிருந்து சீறிப்பாய்ந்த ஒரு மின்னல் மரத்தைத் தாக்க, இரண்டு துண்டங்களாக உடைந்து விழுந்தது அந்த ஆலமரம். சிறுவயதில் எந்த மரத்தைச் சுற்றிச்சுற்றி நாவகன் ஓடி விளையாண்டானோ, எந்த மரத்தை மரியாதை செய்யும் படி அவன் பெற்றோர் அவனுக்குக் கற்பித்திருந்தனரோ... அதே மரத்தை காமரி சாய்க்கும் போது ஆறறிவு இருந்தும் ஓரறிவு உள்ள மரம் போலவே அசையாது நின்றான் நாவகன்.

அரண்மனையின் மேற்கு வாயிலின் மீது நிற்கும் காவல் வீரர்கள் தீப்பந்தத்தை உயர்த்தி மூன்று முறை அசைக்க, வெளியில் இந்த சமிக்கைக்காகவே காத்திருந்த மற்ற பாலை நாட்டு வீரர்களும், அவரவர்கள் நின்றிருந்த இடத்தைச் சுற்றித் தீ வைத்தனர். அரண்மனையின் கொட்டகைகளில் தீ பரவுவதற்கு முன்பே எழுந்த விலங்குகளின் கூக்குரலைக் கேட்டுப் பதறியடித்து முதலில் வந்தவர்களுடன் போரிட்டுத் தீயை அணைக்க விடாமல் செய்தனர்

பாலை வீரர்கள். படை விலங்குகள் வலியில் துடிக்கும் ஓசை மற்ற கோட்டை வாயில்களைக் காப்பவர்களின் காதுகளை எட்ட, அவசர அவசரமாகக் கொட்டகையை நோக்கிப் பலர் விரைந்தனர்.

எதிரி நாட்டு வீரர்கள் அரண்மனையின் உள்ளே நுழைந்து விட்டனர் என்பதை அறிவிக்கும் பொருட்டு அபாய மணி அடிக்கப்பட்டது. ஆனால் அதற்குள்ளாகவே நகர வீதிகளில் எழுந்த தீ மளமளவென அருகில் இருக்கும் வீடுகளுக்கெல்லாம் பரவி இருந்தது. அப்பாவி பொது மக்கள் பலர் வீடுகளில் இருந்து வெளியே வர முடியாமல் உள்ளேயே சிக்குண்டனர். எங்கு பார்த்தாலும் புகையும் தசை எரியும் நாற்றமுமே வீசியது. பல தலைமுறைப் பாண்டிய மன்னர்கள் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய அவர்கள் தலைநகரத்தின் தலையெழுத்தை நினைத்து கண்ணீர் வடிக்கக்கூடத் திராணியின்றி மக்கள் சோர்ந்தனர்.

கொளுந்துவிட்டு எரியும் வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் தத்தமது வீடுகளைப் பற்றியிருந்தத் தீயை அணைக்க முயல, வயல்வெளிகளையும் பகைவர்கள் கொளுத்தி விட்டார்கள் என்ற செய்தி அவர்களை வந்தடைந்தது. திக்ப்ரம்மை பிடித்தாற்போல நின்ற மக்களில் பலர், வீதிகளில் புரண்டு கதறி அழுதனர். பாடுபட்டு அவர்கள் விளைவித்த கதிர்கள் கருகிய சோகம் ஒரு புறம், இதுநாள் வரை சேமித்திருந்த செல்வம் அனைத்தும் தீயில் தொலைந்த துயரம் ஒரு புறமெனத் துடித்த மக்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறி அழுதனர்.

அரண்மனையின் உப்பரிகையில் இருந்து இந்தக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த பேரரசர் வீய பாண்டியனுக்கு அவரின் இதயத்தை யாரோ கூரிய வாளால் பல துண்டுகளாக அறுப்பதைப் போன்றிருந்தது. காவல் வீரர்களை அழைத்தவர், உடனே மக்களுக்கு உதவக் கட்டளையிட்டார். பேரரசியை அந்தப்புரத்திலேயே பாதுகாப்பாக இருக்கச் சொல்லிவிட்டு, தான் மட்டும் மெய்க்காவல் படையோடு கொட்டகைக்கு விரைந்தார்.

அரண்மனையிலிருந்து படை வீரர்கள் விரைந்து சென்று வீதிகளில் பற்றியிருந்தத் தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள்ளாகவே பலவிதமான சேதாரங்கள் ஏற்பட்டிருந்தன. சில உயிர்களும் பல உடமைகளும் தீயில் வெந்து அடங்கியிருந்தன. வயல்களோ… முற்றாக நாசமாகியிருந்தது. ஒரு அரிவையின் இடை வரை செழித்து வளர்ந்திருந்தப் பயிர்கள் இப்போதோ தரையோடு தரையாக சாம்பலாகி இருந்தன.

காண்போர் நெஞ்சைக் கலங்கடிக்கும் கண்ணீர் முகங்களே

எங்கு பார்த்தாலும் மதுரை வீதிகளில் நடமாடியது. மக்கள் அரை உயிர்களாக அரை நாழிகையில் உருமாறினார்கள்.

வீதிகளின் அவலம் இத்தகையது என்றால், அரண்மனைத் தொழுவத்தின் நிலை அதைவிடப் பெருந்துயரானது. வாய் விட்டுக் கதறி அழும் ஆற்றல் கூட இல்லாத மிருங்கங்கள் தங்களின் குட்டிகளையும் இணைகளையும் தீயில் பறிகொடுத்துவிட்டுத் தீன சுரத்தில் கத்திக்கொண்டிருந்தன. அதிலும் ஒரு யானையாளி, கால்களும் முகமும் கருகிப் போய் அழக்கூடத் தெம்பின்றி எமனுடன் போராடிக் கொண்டிருந்தத் தன் சின்னஞ்சிறிய கன்றை எழுந்து வரச் சொல்லி நாவால் நக்கியும் துதிக்கையால் உந்திக் கொண்டும் செய்வதறியாது தன் கன்றையே சுற்றிச் சுற்றி வந்து அரற்றியது.

பேரரசர் கொட்டகைக்குள் நுழைந்தவுடன் அவர் கண்ட இந்தக் காட்சி, யாரோ அவர் தலையில் சம்மட்டி கொண்டு அடித்ததைப் போல் அவருக்கு வலித்தது. மூன்று வாரங்களுக்கு முன் அந்த யாளிக்கன்று பிறந்த தினம் அவருக்கு இப்போதும் நினைவிருந்தது. சிக்கலான பிரசவம், தாயையும் கன்றையும் ஒருசேரக் காப்பாற்ற இயலாது என்று மருத்துவர்கள் கைவிரித்த நேரம், பேரரசி வைனி அம்மை தவித்துப் போனார். அப்போது யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், பொத்தென்ற சப்தத்துடன் உலகிற்கு அது வருகை தந்தது. சிறு மென்மையான பிளிறலோடு கண்களைத் திறந்து அந்த யாளிக்கன்று மொட்டுமொட்டென்று பார்க்க, அதனழகில் அங்கிருந்தோர் அனைவரும் உள்ளத்தைப் பறி கொடுத்தனர்.

பிள்ளைகளைப் பெற்ற பொழுதில் மகிழ்ந்த அளவிற்கு இந்த யாளிக்கன்று பிறந்த பொழுதும் மகிழ்ந்தனர் பேரரசனும் பேரரசியும். மரணத்தை ஏய்த்து விட்டுச் சிரமில்லாமல் பிறந்ததினாலோ என்னவோ ஓய்வு நேரங்களில் இந்த யாளிக்கன்றோடு விளையாடுவது பேரரசியின் பொழுதுபோக்காயிற்று. 'பிறக்கும் பொழுதே மரணம்!' என்ற விதியை ஏமாற்றிப் பிறந்த கன்று, இன்று சதியால் இந்த மண்ணுலகை விட்டுப் பிரிந்தது. இறப்பதற்கு ஒரு நொடி முன்பு பேரரசரின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்த அந்தப் பிஞ்சு, வலியிலும் சிரிக்க முயன்று தோற்றுப் போய், கண்கள் நிலைக்குத்தத் தன் கடைசி மூச்சினை விட்டது. தான் ஈன்ற கன்று இறந்துவிட்டது என்பதை உணர்ந்த யானை யாளி வெளியிட்ட வலிநிறைந்த பிளிறல் கேட்போர் உள்ளத்தை சுக்கு நூறாக உடைக்கும் திறன் படைத்திருந்தது. பேரரசர் மட்டும் விதிவிலக்கா என்ன? கண்கள் உடைப்பெடுத்துக் கொள்ள, வலியை அடக்க முடியாமல் கோழைத்தனமாக வேறு புறம் திரும்பினார்.

அங்கேயும் இதைப் போன்ற பல காட்சிகள், பல வேதனைகள் என விலங்குகளும் மனிதருக்குச் சம அளவில் துயரத்தை வெளிப்படுத்த, அடிபட்ட மனதுடன் எங்கே செல்வது யாரைத் தேற்றுவது என்பது புரியாமல் தலையை கைகளால் தாங்கிப் பிடித்துக்கொண்டு அங்கேயே அமர்ந்துவிட்டார் பேரரசர். நேர்கொண்ட பார்வையும் ஏறு போன்ற நடையையும் உடைய பேரரசர், தாயைப் பிரிந்த மழலை போலே பெருங்குரலெடுத்து அழுதார். அதுகாரும் அரசரைத் தொந்தரவு செய்யாதிருந்த மெய்க்காவல் படை, அரசரின் இந்தச் செய்கையால் துடிதுடித்துப் போனார்கள்.

கைத்தாங்கலாக அரசரை அங்கிருந்து அவர்கள் அழைத்துச் சென்ற போது கோட்டையின் திறந்த வாசல் வழியாக காயங்களுடனும் கண்ணீருடனும் மக்கள் உள்ளே நுழைந்து பேரரசரின் முன் மண்டியிட்டுக் கதறினார்கள். 'மக்களை வாட விடாதவன்!' என்ற அடைமொழியோடு ஆட்சி புரிந்த வீய பாண்டியன் முதல் முறையாக மக்களின் விழி நீருக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனார். அப்போது அவர் உதவிக்கு வந்தவர் அந்நாட்டின் சேனாதிபதியான ரணதீரன்தான்!

"கலங்காதீர்கள் மக்களே! நம் எதிரிகள் கோழைகள். இதுவரையில் நாம் கேள்வியுற்றிராத கேவலமான போர்முறையை அவர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். ஒரு நாட்டின் சேனாதிபதியாக இருந்தும், இப்படிப்பட்ட கீழ்த்தரமான தாக்குதலில் இருந்து என் உயிர் போன்ற உங்களைக் காக்கத் தவறிய என்னைக் கழுவேற்றித்தான் கொல்ல வேண்டும்! ஏற்கனவே மருத்துவர்களை பல குழுக்களாகப் பிரித்துத் தீயில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்ய அனுப்பி வைத்திருக்கின்றோம். போர் முடியும் வரை வீடிழந்தவர்கள் அரண்மனை மண்டபத்திலேயே தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவர்; மக்கள் அனைவருக்கும் மூன்று வேளை உணவளிக்கும் பொறுப்பினையும் அரசே ஏற்கின்றது. போர் முடிந்ததும் உங்களுக்கு ஏற்பட்ட அனைத்து விதமான இழப்புகளுக்கும் இழப்பீடு வழங்க நம் பேரரசர் உத்தரவிட்டிருக்கிறார். அதனால் கவலை கொள்ளாதீர்கள். அத்தோடு உங்களின் இந்நிலைக்குக் காரணமான என்னை தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன். போரில் நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம். அதன்பின்னர் கடமை தவறிய என் மீதான விசாரணை மக்களின் முன்னிலையிலேயே நடைபெறும்." என்று கல்லாகிப் போன முகத்தோடு ரணதீரன் கூறினார்.

ரணதீரன் பேசி முடிக்கும் வரை பொறுமை காத்த

பொதுமக்கள், அவர் முடித்ததும் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டனர். அப்போது ஒரு முதியவர் எழுந்து சேனாதிபதியின் அருகில் வந்தார்.

"ரணதீரா! நாட்டின் சேனாதிபதியாக இருந்தாலும் எனக்கொரு மகன் போன்றவன் நீ! நீதி தவறாமல் நம் பேரரசன் ஆட்சி புரிவதற்கு இத்தனை காலம் உறுதுணையாக இருந்த நீ இப்போது கலங்கலாமா? உன்னை நீயே பழிசொல்வதை நிறுத்திவிட்டு அடுத்த காரியத்தைப் பார். ஒரு போகம் பொய்த்தால் என்ன? இழந்த சொத்துக்களை எங்கள் உழைப்பினாலேயே மீண்டும் எங்களால் பெற்றுக் கொள்ள முடியும். அதற்குப் பேரரசரின் உதவி எங்களுக்குத் தேவையில்லை. ஆனால் நாங்கள் இழந்த சொந்தங்களுக்கு ஞாயம் வேண்டும்! அவர்களின் உயிர்களுக்குப் பதில் வேண்டும். பச்சைக் குழந்தைகளைக் கூடத் தீயிட்டு எரித்த பாவிகளை நிர்மூலமாக்க வேண்டும். அவர்களின் படைகள் சிதறி நாலாபுறமும் ஓலமிட்டுக் கொண்டே ஓட வேண்டும். அதைப் பேரரசனும் நீயும் செய்ய வேண்டும். இந்தத் தாக்குதலின் பின்னணியில் எவர் இருந்தாலும் அவர்களை எந்த வித பாரபட்சமும் இன்றிக் கழுவேற்ற வேண்டும். நாங்கள் வேண்டும் இழப்பீடு இதுவே! நிறைவேற்றுவேன் என்று எங்களுக்கு வாக்குத் தருவாயா?" என்று வேதனையிலும் உறுதியோடு கேட்டார் அந்த முதியவர்.

"மகனென்று என்னைச் சொன்ன பின், உங்களை நான் என்னைப் பெற்ற தகப்பனைப் போலவே பார்க்கிறேன். நீங்கள் கேட்ட வாக்குறுதியை உளமார அளிக்கின்றேன். நம் மீது இருளில் தாக்குதல் நடத்தியவர் யாராயினும், அதற்கு உதவியவர் எவராயினும் அவர்கள் அனைவரையும் கண்டுபிடித்துக் கழுவேற்றுவேன். இது உறுதி!" என்று இடியைப் போல முழங்கினார் ரணதீரன்.

"அப்படியானால் மேற்குக் கோட்டை மதில் காவற்படைத்தலைவனையும் இன்று மேற்கு வாயில் காவலில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்யுங்கள்!" என்று கூறியபடியே கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு ஆடவன் வந்தான். அவன் குதிரையின் மீது கைகால்கள் பிணைக்கப் பட்ட நிலையில் பாலை வீரன் ஒருவன் குதிரையின் லகானோடு சேர்த்துக் கட்டப்பட்டுக் கிடந்தான்.

இத்தனை கம்பீரமான ஆண்மகன் யாரென்று மக்கள் வியந்த நேரம், "மகனே ஆரா! எப்போது வந்தாய்?" என்று தன் முதல் மகனைத் தழுவிக்கொண்டார் ரணதீரன். வந்தவன் வீரனின் அண்ணன் ஆரன் என்பதை அறிந்ததும் மக்களிடம் சோகம் மறந்து ஒரு நொடி மகிழ்ச்சி தோன்றியது.

ரணதீரனின் பாதம் பணிந்தவன், பேரரசரின் பாதம் பணியவும் தான், அவர் இவ்வுலகிற்குத் திரும்பினார். அதுவரையில் தன்னிரக்கத்தில் தலை குனிந்து வருந்திக் கொண்டிருந்தவர் ஆரானின் கைகள் அவர் பாதத்தில் பட்ட பிறகே நிமிர்ந்து மக்களைப் பார்த்தார். குதிரையில் இருந்த எதிரி நாட்டு வீரனைப் பார்த்த பின்னர், அவர் கண்கள் கனலைக் கக்கியது. ஆரனை ஆசீர்வதித்து விலக்கியவர், பாய்ந்து சென்று பகைவனின் கழுத்தைப் பிடிக்க, "அரசே! அவசரம் வேண்டாம். எதிரியை விடத் துரோகியே கொடூரமானவன். உட்பகை மிகமிக ஆபத்தானது என்று நான் சொல்லி நீங்கள் அறியத் தேவையில்லை. நமக்குக் கீழே பணிசெய்பவர் நம்மிடம் பகைமை கொண்டு நமக்கு எதிராகச் செயல்பட்டால், பெரும் செல்வம், வீரமிக்க படை, நற்பண்புடைய குடிமக்கள், உயிரைக் கொடுக்கும் நட்பு, மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர்கள், வலுவான கோட்டை என அனைத்துச் சிறப்புகளையும் கொண்ட பேரரசனாக இருந்தாலும் கூட, அவருக்குத் தோல்வியும் இறப்பும் ஏற்படுதலைத் தவிர்க்க முடியாது என்பதை அறியாதவரா தாங்கள்? அதனால் எதிரியை முதலில் கொல்வதை விட, இந்த அநீதியை நிகழவிட்ட துரோகிகளை முதலில் அழித்தொழியுங்கள்." என்று பேரரசருக்குப் புரியும்படி மெல்ல விளக்கி எதிரியின் கழுத்திலிருந்து அவர் கையை எடுக்க வைத்தான் ஆரன்.

ஆரானின் பொறுப்பான விளக்கமும் அதை அவன் கூறிய விதமும் மன்னரிடத்திலும் மக்களிடத்திலும் அவனுக்கு நற்பெயரை நொடியில் சம்பாதித்துக் கொடுத்தது.

"சேனாதிபதியின் புதல்வன் ஆரன் வாழ்க! பகைவனைச் சிறை பிடித்த வீராதி வீரன் வாழ்க! வாழ்க!" என்று மக்கள் வாழ்த்த, அவர்களின் அன்பில் கரைந்து போனான் ஆரன். இத்தனை சோகம் மிகுந்த நேரத்திலும் மற்றவரிடத்தில் காணும் நற்குணங்களை மதித்து வாழ்த்தும் பண்புடைய குடிகளையுடைய நாவலந்தீவு உண்மையிலே ஒரு அற்புத தேசம் தான்.

"பேரரசருக்கு ஒரு விண்ணப்பம். சேனாதிபதியின் மகன் இவனை எங்கே எப்படிப் பிடித்தார் என்பதை ஊர் சபையின் முன்பு விளக்கமாக சொல்லச் சொன்னீர்கள் என்றால் நாங்களும் எதிரியைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்." என்று ஒரு குடியானவப் பெண் தயங்கியபடியே சொல்ல, பேரரசர் அவள் கோரிக்கையை ஏற்றார். அதன்படியே மக்களைப் பக்கத்திலிருந்த மண்டபத்தில் அமர வைத்து, அவர்களில் காயமடைந்தவர்களுக்கு வைத்தியம் பார்க்கப் பட்டது. ஆரனும் அவன் பாலை வீரனைப் பிடித்த கதையைக் கூற

ஆரம்பித்தான்.

"சபையோருக்கு வணக்கம். சேனாதிபதி ரணதீரனின் மூத்த மகனாகிய நான் நீல மலை குருகுலத்தில் குருதேவர் தீசகரிடம் கல்வி கற்றேன். ஆறுநிலைக் கல்வி கேள்விகளிலும் முதலாமவனாக வந்தேன். என் தந்தையின் உத்தரவின் படி குருகுலவாசம் முடிந்ததும் நாவலந்தீவையும் அதை ஒட்டியுள்ள பல நாடுகளையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது, நம் நாட்டின் மீது பாலை அரசர்கள் படையெடுக்கப் போகிறார்கள் என்கிற செய்தியையும் அவர்களுக்கு உதவி செய்ய, நம் அரண்மனையிலேயே பல கையாட்கள் இருக்கிறார்கள் என்பதனையும் அறிந்து கொண்டேன். உடனே மதுரையை நோக்கி விரைந்தேன். வரும் வழியிலேயே, எப்படியாவது என் தந்தையை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று நான் எடுத்த முயற்சிகள் அத்தனையும் வீணானது. மிகுந்த பிரயாசைப்பட்டு நான் மதுரையை நெருங்கும் போது ஆளில்லாத புரவிகளைக் கண்டு சந்தேகம் கொண்டேன். மெல்ல நடந்து நோட்டம் விடும் போது நமது வயல்களைத் தீயிட்டு இருவர் கொளுத்துவது நன்றாகத் தெரிந்தது. அரண்மனையில் இருந்தும் புகை வருவதை அறிந்ததும், இது எதிரியின் சதி வேலை என்பதை உணர்ந்துகொண்டேன்.

உடன் அவர்களைப் பிடிக்க ஓடினேன். முதலாமவன் என்னுடன் சண்டையிட, அவனைக் கொல்லும்படி நேர்ந்தது. எப்படியாவது இவனை உயிருடன் பிடித்துத் துரோகிகளை அடையாளம் காட்ட வைக்க வேண்டும் என்று என் புரவியோடு சேர்த்துக் கட்டி இவனைச் சிறைபிடித்து வந்தேன். வழியில் மேற்கு வாயிலின் வழியாகக் காயங்களுடன் ஒருவன் தடுமாறி வருவது தெரிந்தது. அருகில் சென்று பார்த்த போது அவனும் பாலை வீரனே என்பதைக் கண்டுகொண்டேன். ஆனால் அவனைத் துரத்திக் கொண்டு நம் வீரர்கள் ஒருவர் கூட வரவில்லை என்பதும் மதில் மேல் காவல் காத்துக் கொண்டிருந்த வீரர்கள் கவனமாக கோட்டைக்கு வெளியில் அவர்களது பார்வையைச் செலுத்தாமல் நிதானமாக இருந்ததும் எனது ஐயத்தை உறுதி செய்தது. அவனைப் பிடித்து விசாரிக்க முயல்வதற்குள் அவன் இறந்து விட்டான். அதனால் இவனை மட்டும் பிடித்துக்கொண்டு அரண்மனையினுள்ளே என் தந்தையைக் காண விரைந்தேன்." என்று முடித்தான் ஆரன்.

ஆரனின் பேச்சை கவனித்த உபசேனாதிபதி, "தம்பி கூறுவது சரி தான் அரசே! அவர் கூறியவனையும் சேர்த்து இதுவரை எட்டு பாலை வீரர்களின் பிணங்களைக் கைப்பற்றி உள்ளோம். கைதாகி

நிற்பவனையும் சேர்த்தால் மொத்தம் ஒன்பது பேர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும்." என்றார்.

"மன்னிக்க வேண்டும் ஐயா! மொத்தம் ஒன்பது பேரல்ல, என் கணக்குப் படி மொத்தம் பத்து பேர்கள்." என்று உறுதியாக தெரிவித்தான் ஆரன்.

"எப்படி? இவர்கள் ஏறி வந்த குதிரைகள் மொத்தம் ஒன்பது தானே இருந்தன. அவற்றையும் தான் நாங்கள் பிடித்து விட்டோமே!" என்று உபசேனாதிபதி சொல்ல, "நான் வந்த போது பத்துக் குதிரைகள் இருந்தன. அதுமட்டுமின்றி தாக்குதல் நடத்துபவர்கள் இரட்டைப் படையில் தான் வந்துள்ளனர் என்பதை இவர்கள் இரண்டிரண்டு பேர்களாகப் பிரிந்ததில் இருந்து கண்டுகொண்டேன். இப்போது ஒன்பது குதிரைகளை நீங்கள் பிடித்திருப்பதைப் பார்த்தால், இவர்களின் தலைவன் நிச்சயம் தப்பியிருக்க வேண்டும். அதுவும் மேற்கு வாயிலின் வழியாகவே அவன் சென்றிருக்க வேண்டும்!" என்று விளக்கினான் ஆரன். ஆரனின் மதிநுட்பத்தையும் போர் நுட்பத்தையும் அங்கிருந்த அனைவரும் வியந்து பாராட்டினர்.

"ஆரன் கூறுவது முற்றிலும் உண்மை. சதிகாரர்கள் மொத்தம் பத்துப் பேர்! அதில் தலைவன் தப்பி விட்டான். அவனது முகத்தை மறைத்திருந்ததால் அவன் யாரெனத் தெரியவில்லை. ஆனால் அவனது வலது முழங்காலை ஆழமாகக் காயப்படுத்தி இருக்கிறேன். மறுமுறை அவனைக் காண நேர்ந்தால் அவன் உயிரைக் குடிப்பேன்!" என்று கூறிக்கொண்டே தாரகன் முன்னே வந்து பேரரசரையும் சபையோரையும் வணங்கினான். எதிரிகளுடன் அவன் போரிட்டிருக்கிறான் என்பதை அவன் உடலில் இருந்த காயங்களே பறை சாற்றியது. அவனுக்குப் பின்னால் கையில் சங்கிலியுடன் மேற்கு கோட்டை வாயில் காவல் படைத்தலைவனும் அவனுக்கு உடந்தையானவர்களும் அழைத்து வரப்பட்டார்கள்.

"இப்போது தெரிகிறது, என் எச்சரிக்கைகள் எதனால் என் தந்தைக்கு எட்டவில்லை என்று!" என்றான் ஆரன். அவன் முகத்தில் மேற்கு கோட்டை வாயில் காவல் படைத்தலைவனின் மீதிருந்த அப்பட்டமான வெறுப்பு தெரிந்தது.

"துரோகிகளைக் கொல்லுங்கள்! துரோகிகளைக் கொல்லுங்கள்!" என்று முதலில் சிறிதாக ஆரம்பித்த மக்களின் குரல் நிமிடத்திற்குள் வலுப்பெற்றது. பேரரசரின் முன்னிலையில் தங்களை அதுவரையில் கட்டுப்படுத்திக் கொண்ட மக்களால் தங்களைக் காக்க வேண்டிய வீரர்களே தங்களுக்கு அநீதி இழைத்ததைப்

பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவர்களின் துயரம் இப்போது துவேஷமாக உருமாறி இருந்தது. கீழே கிடந்த கூழாங்கல்லை ஒருவன் காவல் படைத்தலைவனின் மீது எறிய, அவனைப் பின்பற்றி அங்கிருந்த மக்கள் அனைவரும் தங்கள் கையில் கிடைத்ததை எல்லாம் மேற்கு கோட்டை வாயில் காவல்படையினரின் மீது எறிந்தனர். சில கற்கள் தவறிப் போய் அரசனின் மீதும் மற்ற அமைச்சர்களின் மீதும் விழ, மக்களை ஆசுவாசப்படுத்த மற்ற வீரர்கள் போராடினார்கள்.

நெற்றியில் வடியும் உதிரத்தோடு பேரரசர் வீயன் எழுந்து, "போதும்! அமைதி கொள்ளுங்கள்! அவர்களை உங்கள் விருப்பப்படியே தண்டிக்கிறேன்!" என்று உரக்கச் சொல்லும் வரையில் மக்களின் ஆவேசம் அடங்கவேயில்லை.

"இவர்களை விசாரிக்க வேண்டாமா அரசே?" என்று ஒரு அமைச்சர் கேட்க, "எங்கள் சுதந்திரத்தைப் பறித்து வாழும் உங்களைப் பழி வாங்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட நாங்கள் என்ன முட்டாள்களா?" என்று கத்திவிட்டுப் பெரும் சப்தத்தோடு சிரித்தான் மேற்கு கோட்டை வாயிலின் படைத்தலைவன்.

"பாலை நாடுகளை வாழ்வித்தவர் நம் பேரரசர். அவருக்கு துரோகமிழைக்க எப்படியடா மனம் வந்தது உனக்கு?" என்று கூட்டத்திலிருந்த வயதானவர் ஒருவர் பதிலுக்குக் கத்தினார்.

"என்ன… பாலை நாடுகளை வாழ்வித்தவனா? தனக்குப் பிறந்த மகனையே நல்வழிப் படுத்தி வளர்க்கத் தெரியாத மூடனான இந்த வீயன் தான் எங்கள் மக்களை நல்வழிப் படுத்தி வாழ வைத்தானோ?" என்று ஏளனமாகச் சிரித்தான். அவனின் பரிகாசம் ஏற்கனவே மனதளவில் மடிந்து கொண்டிருந்த பேரரசரை மேலும் வாட்டி வதைத்தது. கண்களும் முகமும் இருள அப்படியே அமர்ந்துவிட்டார் பேரரசர். அவரைத் தாங்குவதற்காகப் பக்கத்தில் சென்ற மெய்க்காவல் படை வீரர்களையும் தடுத்து விட்டார்.

அவரது நண்பனும் சேனாதிபதியுமான ரணதீரனை அருகில் அழைத்தவர் தண்டனையை நிறைவேற்றச் சொல்லி விட்டு, குற்றுயிராய் திரும்பி நடந்தார். எவர் முகத்தில் விழிப்பதற்கும் அவருக்கு அவமானமாக இருந்தது. பெற்ற மகனாலேயே அவரின் கௌரவம் அழிந்ததாக எண்ணி எண்ணியே மனம் வெதும்பினார். கால் போன போக்கில் போனவருக்கு அவர்கள் வழிபடும் கல்லால மரத்தைக் காண வேண்டும் போலத் தோன்றியது.

தெற்குப் பகுதிக்குச் சென்றவருக்கு மரண அடி காத்திருந்தது. தலைமுறை தலைமுறையாக அவர்கள் பேணிக் காத்த மரம் இரு

துண்டங்களாகக் கருகி இருந்தது. செத்த பாம்பாகிப் போனவர் அந்தப்புரம் நோக்கிப் பெருந்துயருடன் சென்றார்.

மதுரையில் நடந்த களேபரங்களை மாயக் கண்களின் உதவியினால் மிகுந்த சுவாரஸ்யத்தோடு பார்த்துக்கொண்டிருந்த காமரிக்கு மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது. அவள் காதுகளில் விழுந்த கதறல்களும் மரண ஓலங்களும், காமரிக்கு கல்யாணி ராகமாக சுகமளித்தது. தனியாக இருந்தவள், மென்மையாக பாடிக்கொண்டே ஆடிய நேரம், வலது முழங்காலின் காயம் காரணமாக நொண்டிக்கொண்டே அவளறைக்குள்ளே நுழைந்தான் ஒரு வீரன்.

"காமரி தேவி! காமரி தேவி! நீங்கள் கூறியபடியே அனைத்தும் முடிந்துவிட்டது." என்று பெருமை பொங்கத் தெரிவித்தான்.

"மற்றவர் எங்கே?" என்று அவன் முகத்தைக் கூடப் பாராது கேள்வி எழுப்பினாள் காமரி.

"போனவர் திரும்புவது அரிது என்று சொன்னேன் இல்லையா? அதன்படியே அவர்கள் வீர சுவர்க்கம் அடைந்துவிட்டார்கள்." என்று தொங்கிய முகத்துடன் பதில் கூறினான் அவன்.

"அப்படியென்றால் நீயும் தான் போனாய். பின் எதற்காகத் திரும்பினாய்?" என்று ஏளனமாகக் கேட்டபடியே அவன் உயிரைக் குடித்தாள் காமரி.

"நான் இட்ட வேலையைச் செய்து முடித்த பிறகு, இப்புவிக்கு நீ வந்த வேலை முடிகிறது!" என்று சொல்லி அந்த வீரனின் சடலத்தைப் பார்த்துப் புன்னகைத்தாள் காமரி.

குறளியை அழைத்துப் பிணத்தை அப்புறப்படுத்திய பின் அந்த இடத்தைச் சுத்தம் செய்ய உத்தரவிட்டவள், தன் இனிய குரலில் மோகன ராகத்தில் பாட ஆரம்பித்தாள். இடையில் ஆரனின் முகம் தோன்றி வீரனை அவளுக்கு நினைவூட்ட, வீரனின் நினைவில் அனலில் இட்ட மெழுகாகிக் காதலில் கரைந்தாள் காமரி. அவள் பாடலும் மெல்ல மெல்ல மோகனத்திலிருந்து காமவர்தினி எனப்படும் பந்துவராளி ராகத்திற்கு மாறியது.

காதலும் வீரமும் தமிழரின் இரு கண்களென்றால் காமமும் கொலையும் காமரியின் இரு கண்களாகும்!

## அத்தியாயம் 4

பேரரசர் வீய பாண்டியனின் முகத்தை வைத்தே இழப்பின்

அளவை அறிந்து கொண்டார் வைனி அம்மை. ஒரு வார்த்தை கூட உதிர்க்காமல் பேரரசரை அணைத்துக்கொண்டு அவர் முதுகினை தட்டிக் கொடுத்தார். கணவன் சிந்தும் விழியின் வெந்நீர் அவர் தலையை நனைத்த போது, அவர் பிடி இறுகிற்றே தவிர தளரவில்லை. நாவலந்தீவின் பேரரசியாக இருந்தாலும் கணவனின் மனதறிந்த இல்லாள் அல்லவா? அதனால் அவராகவே அழுது முடிக்கட்டும் என்று பொறுமையோடு மௌனித்திருந்தார் அந்த அன்பு மனைவி.

"பிறந்த குழந்தையைக் கொல்ல வேண்டும் என்று நினைத்ததைத் தவிர வேறெதையும் செய்யேன்! என் மீது குற்றமென்றால் நானல்லவோ துன்புற வேண்டும்? ஏன் மற்றவருக்குத் துன்பம் தருகிறாய் ஈசா? மக்களும் மாக்களும் வருந்துவதைப் பார்க்கச் சகிக்கவில்லை. என் பாவத்தின் சுமையை மக்களின் மீது ஏற்றி வைத்த பாவியானேனே! நான் செய்த பாவத்தை எங்கே சென்று தொலைப்பது என்று எனக்குப் புரியவே இல்லையே வைனி!" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதார் மக்களின் கண்ணீரைத் துடைப்பத்தில் வல்லவரான அந்தப் பேரரசர்.

"வருந்தாதீர்கள் அரசே! மக்களின் துயரத்திற்குக் காரணம் தாங்கள் அல்ல; மனசாட்சியை கொன்றுவிட்டுக் கள்ளப் போர் செய்த சதிகாரர்கள் தான். எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் வீரமறக்குடியில் வந்த நாம் சதிக்கு பலியானோம். சோகம் சிந்தையை செயலிழக்கச் செய்யும்! அதனால் மனதை திடப்படுத்திக்கொண்டு அடுத்து ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்கள்." என்று பேரரசரை அமைதிப் படுத்த முனைந்தார் பேரரசி.

"எப்படி என்னால் சிந்திக்க இயலும் கண்மணி? எங்கு திரும்பினாலும் இழப்பே தெரிகிறது. செம்மையாக உழவுத் தொழிலைச் செய்யும் நம் உழவர்கள் பிறரிடம் கையேந்தி நீ என்றாவது கண்டதுண்டா? கேட்பவருக்குக் கேட்டதைக் கொடுத்த பின்பும் வற்றாத செல்வமுடைய நம் குடியானவர்கள் நாளை முதல் உணவிற்கு அரசை எதிர்பார்க்கும் அவல நிலையில் இருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே! அரண்மனை சோதிடர் சொன்னதைப் போல அந்தப் பெண், அவள் தான்... அந்த மகிந்தனின் மகளை அன்றே நான் கொன்றிருந்தால் இந்த நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்காதோ?" என்று ஏதேதோ சிந்தித்து மேலும் தன்னை வருத்திக்கொண்டார்.

"முடிந்ததைப் பற்றிப் பேசுவதால் என்ன நன்மை விளையப்போகிறது அரசே? தைரியத்தைக் கைவிடாதீர்கள். இது துவளும் நேரமல்ல, எதிரிகளை துவம்சம் செய்யும் நேரம்!" என்று

சொன்ன வைனி அம்மையின் குரலில் இருந்த உறுதி பேரரசருக்குத் தேவையான ஊக்கத்தை அளித்தது.

கலங்கிய மனதைப் பேரரசர் வைரமென கடினமாக்கிய நொடியில் அவர்களின் அறைக் கதவு தட்டப்பட்டது. இப்போது என்ன நடந்திருக்குமோ என்ற அச்சத்துடன் பேரரசி கதவைத் திறக்க, ஒரு ஓலைச் சுருளை அவர் கைகளில் பணிவுடன் தந்துவிட்டு விடை பெற்றான் தாரகனின் வலது கையாகத் திகழும் ஒரு ஒற்றன். ஓலையில் எழுதப்பட்டிருந்ததைப் படித்த பேரரசியின் உள்ளத்தில் ஒரு திட்டம் உதித்து அவரது முகத்தின் ஒளியைக் கூட்டியது.

"அரசே! எல்லாவற்றிற்கும் ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் முடிவென்பதும் இருக்குமல்லவா? எதிரிகள் ஆரம்பித்து வைத்ததை நாம் முடிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. நம் மதுரையின் எல்லையில் இருந்து ஒரு யோசனை தூரத்தில் இருக்கும் அரசாணை ஆற்றங்கரையில் நம் எதிரிகளின் படை ஒன்று திரள்வதாகத் தாரகன் செய்தி அனுப்பியிருக்கிறான். அவர்கள் நம்மைத் தாக்கும் வரை பொறுத்திருக்காமல் நம் படைகளை அவர்களை நோக்கி நகர்த்துங்கள். இரவின் இருளில் மறைந்திருந்து தாக்கும் மட்டரகமான போர் யுத்தியைக் கையாளும் இவர்களை நாம் விட்டுவைக்கும் ஒவ்வொரு நொடியும் நமக்கு ஆபத்து அதிகமாகிறது. இத்தனை பெரிய தாக்குதலில் இருந்து நாம் மீள்வதற்குள் நம்மை மொத்தமாக அழித்து விடலாம் என்று தான் அவர்கள் எண்ணியிருப்பார்கள். அதனால் தான் தைரியமாக நம் எல்லைக்கு அருகிலேயே கூடாரம் அமைத்துத் தங்குகின்றனர். நாளை இரவிற்குள் அவர்களை நாம் வெற்றி கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சமருக்கான ஆயத்தங்களை விரைந்து முடித்து வேங்கையென சீறிப் பாயுங்கள். மதுரையை எரிக்கும் துணிவைப் பெற்ற துரோகிகளின் உதிரம் கொண்டே நம்மண்ணை சுத்தம் செய்யுங்கள். அந்த ஈசனே நம் பக்கம் இருக்கிறான். வெற்றி நமதே!" என்று முழங்கினார் வைனி அம்மை.

மெல்லியலாள் என்று தான் இதுவரை நினைத்திருந்த பேரரசியின் நெஞ்சுரத்தைக் கண்டு வியந்தார் பேரரசர். பேரரசி சொல்வதைப் போல, நாம் உடனேயே படையெடுத்துச் செல்வது தான் சரியென்று புரிந்ததும் மந்திராலோசனை சபையை உடனடியாகக் கூட்டினார் பேரரசர்.

பேரரசரின் உறுதியான நடையில் இருந்தே அவரது மனநிலையை அங்கிருந்த சபையோர் அனைவரும் அறிந்து கொண்டனர். பலவாறாக விவாதித்த பின்னர், திடீர்த் தாக்குதல்

நடத்தினால் எதிரியின் பலம் குறைவதற்கான வாய்ப்பிருப்பதாக போர் வியூகத்தில் சிறந்த ரணதீரன் சொல்ல அக்கணமே போருக்குக் கிளம்புவது தான் சரியென்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. முழுக்க முழுக்க பெண்களைக் கொண்டு உருவாக்கப் பட்ட பத்தினிப்படை மற்ற படைகள் போருக்குச் சென்ற பிறகு நாட்டின் காவலை ஏற்றுக்கொள்வது என்றும் முடிவானது.

படைகளைத் தயார் செய்ய சேனாதிபதி உத்தரவிட்டதும், மந்திராலோசனை சபையில் இருந்து வேகவேகமாக நடந்து சென்று இருளில் மறைந்தது ஒரு உருவம். அதை எதிர்பார்த்துக் காத்திருந்த தாரகனின் ஒற்றர் படை உபதலைவனும் அந்த உருவத்தை சந்தேகம் தோன்றாத வகையில் இடைவெளி விட்டுப் பின் தொடர்ந்தான்.

யாரோ தன்னைத் தொடர்வது போலத் தோன்ற சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே முன்னேறியது அந்த உருவம். கைதேர்ந்த ஒற்றன் ஆகையால் எவர் கண்ணிலும் சிக்காது காரியத்திலேயே கண்ணாக இருந்தான் ஒற்றன். நொடிப்பொழுதும் அந்த உருவத்தை ஒற்றனின் கண்கள் தவறவிடவில்லை.

கனலியை வழக்கமாகச் சந்திக்கும் அரசாணை ஆற்றங்கரைக்குப் பக்கத்தில் சென்றதும், மறைவான ஒரு புதரின் பின்னே ஒளிந்து கொண்டது அந்த உருவம். அதுவரை முக்காடு போட்டிருந்த உருவம், முக்காடை நீக்கியதும் நிலவொளியில் அவன் முகம் நன்றாகவே தெரிந்தது ஒற்றனுக்கு. அது வேறு யாருமல்ல ஊர்க்காவல்படையின் தலைவனான பாதுகன் தான் என்பதை அறிந்த ஒற்றனுக்குள் ஆயிரம் கேள்விகள். வந்தவனுக்கு அங்கிருந்த படைபலத்தைப் பார்த்ததும் மனம் சஞ்சலமடைந்தது. அதே போல பாதுகன் துரோகியென்றால் எதிரி நாட்டுப் படைகளுடன் சேர்ந்து கொள்ளாமல் தனியே மறைந்திருப்பது ஏன் என்ற கேள்வியும் ஒற்றனின் மனதில் எழுந்தது.

வரும் வழியில் கண்டிருந்த காட்சியையே நினைத்துப் பீதியில் இருந்தான் பாதுகன். கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் இன்றித் துரோகிகள் என்று ஐயம் திரிபர அறியப்பட்ட அத்தனை பேரையும் தூக்கில் தொங்க விட்டிருந்தார் சேனாதிபதி ரணதீரன். மேற்குக் கோட்டை வாயில் தலைவனை ஒரு படி மேலே போய் கழுவேற்றி இருந்தார்கள். அவர்களின் சடலங்களைக் கூட அகற்றாமல் அரண்மனைத் திடலிலேயே அப்படியே விட்டு வைத்திருந்தார்கள்.

நேரம் செல்லச் செல்ல பயத்தில் வியர்த்து உள்ளுக்குள்ளே உதறல் எடுத்தது பாதுகனுக்கு. தான் இங்கே வந்திருக்கும் செய்தி

சேனாதிபதியின் காதுகளுக்கோ அல்லது தாரகனின் காதுகளுக்கோ சென்றால் தன்னிலை விளக்கம் கூடக் கேட்காமல், தன் தலை நாளை நிலத்தில் உருளும் அபாயமிருக்கிறது என்பதை அவன் அறிந்திருந்தான். இருப்பினும் அவன் இங்கு வந்து காத்திருப்பது இளவரசர் நாவகனுக்காகத் தான். எப்பாடு பட்டாவது நாவகனை பாலை அரசர்களின் பிடியில் இருந்து மீட்பது என்று அவன் மனதினில் சங்கல்பம் செய்து கொண்டிருந்தான். ஒரு சாதாரண ஊர்க்காவல் படைத்தலைவனுக்கு நாவலந்தீவின் ஒரே இளவரசனை பாலை அரசர்கள் சிறை செய்திருக்கிறார்கள் என்ற செய்தியும், அவரைக் காப்பாற்றத் தன்னால் இயலும் என்ற நம்பிக்கையும் தோன்றுவதற்குக் காரணமிருந்தது.

சில நாட்களுக்கு முன்பு கனலி என்கிற அழகிய இளம்பெண் அவரை சந்திக்க வந்திருப்பதாக வீரன் ஒருவன் கூற, கனலியை அழைத்து வரச் சொன்னான் பாதுகன். தன்னை பாலை நாட்டை சேர்ந்தவள் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட கனலி, "படைத் தலைவரே! இளவரசர் நாவகனை பாலை அரசர்கள் சிறை பிடித்திருக்கிறார்கள். பெருவளநாட்டின் மீது போர் தொடுக்கவும் அவர்கள் எண்ணியிருக்கின்றனர். ஆனால் அதற்கு முன்பாக இளவரசரை கொன்று அவர் தலையை பேரரசருக்கும் பேரரசிக்கும் பரிசளிக்கப் போவதாக முடிவு செய்திருக்கின்றனர். போரென்று முடிவு செய்யும் அன்று இளவரசன் நாவகனின் சிரசு துண்டிக்கப்படும்! அவரை எப்படியாவது காப்பாற்றும் கடமையை என் தலைவியின் ஆணைக்கு உட்பட்டு நான் ஏற்றிருக்கிறேன்." என்று பாதுகனிடம் தெரிவித்தாள்.

மூச்சுவிடாமல் அவள் கூறிய செய்தியைக் கேட்டதும் விக்கித்துப் போன பாதுகன், "தகவலுக்கு நன்றியம்மா. இப்போதே சேனாதிபதியிடம் தெரிவித்து விடுகிறேன். உனக்கும் உன் தலைவிக்கும் கோடி முறை நன்றி சொன்னாலும் பத்தாது. கொஞ்சம் பொறு அம்மா. சேனாதிபதியிடம் சொல்லி உனக்கு பரிசில் வாங்கித் தருகிறேன். " என்று சொல்லிவிட்டு எழுந்தான். அவன் மனதினில் நாவகனை எப்படி மீட்கலாம் என்ற சிந்தனையே ஓடிக்கொண்டிருந்தது.

"அவசரப் படாதீர்கள். நான் இங்கு வந்த செய்தி வெளியே கசிந்தால் என் உயிருக்கும், உயிருக்கும் மேலான மானத்திற்கும் பேராபத்து. அது மட்டுமின்றி இளவரசரை சிறை வைத்திருக்கும் ரகசிய இடத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் நீங்கள் அவசரப்பட்டால், உங்கள் படை மதுரையைக் கடப்பதற்கு முன்னரே இளவரசரின் உயிர் அவர் உடலை விட்டுப் பிரிய நேரலாம்."

என்றாள் கனலி.

"உன் பெயர் வெளியில் வராமல் பார்த்துக் கொள்கிறோம். என்னை விட வலுவான உபசேனாதிபதிகளிடம் விஷயத்தைச் சொல்லி, ஒற்றர்களின் உதவியோடு காதும் காதும் வைத்தார் போல இளவரசரை மீட்டு விடுவேன். கவலை கொள்ளாதே!" என்று பாதுகன் சொல்ல, "இல்லை தலைவரே, உங்களின் சேனைக்குள்ளேயே பல பாலை வீரர்கள் புகுந்து கலந்துள்ளனர். யாரையும் நம்ப முடியாத இந்த நேரத்தில் துணிந்து உங்களை நம்பியிருக்கின்றோம். உங்களின் சாதகமும் எங்களுக்கு உற்ற துணையாக இருக்கின்றது. அதனால் நான் சொல்லும் வரை நீங்கள் பொறுமையோடு இருந்து, நம் திட்டப்படி செயல்பட்டால் இளவரசரை மீட்டவர் என்கிற பெருமையோடு உபசேனாதிபதிப் பதவியும் பரிசிலும் அதிகாரமும் உங்களுக்குக் கிடைக்கும்." என்று பாதுகனின் பேராசையை மெல்லத் தூண்டி விட்டாள் கனலி.

அவள் கூறியவற்றை எல்லாம் ஆராய்ந்த பாதுகன், "நீயே உன்னை பாலை நாட்டுப் பெண் என்கிறாய். இளவரசரைப் பற்றி நீ கூறுவதை நான் எப்படி நம்புவது?" என்று முதல் தடவையாக எதிர் கேள்வி கேட்டான்.

"உங்களின் கேள்வி ஞாயமானதே, அதனால் தான் இளவரசரின் முத்திரை மோதிரத்தைக் கொண்டு வந்துள்ளேன். இதை சிறைக் காவலர்களுக்குத் தெரியாமல் எடுத்து வர நான் பட்ட பாடு அந்த ஈசனுக்கே வெளிச்சம். என்னை நம்பினீர்கள் என்றால் பெரும் புகழ் பதவி பொருள் என அனைத்தும் கிடைக்கும். இல்லையென்றால் வாய்ப்பு கிட்டியும் இளவரசரைக் காக்க முடியாதவர் என்கிற பழிச்சொல்லிற்கும் குற்றவுணர்வுக்கும் நீங்கள் ஆளாக நேரிடும்!" என்று சொன்ன கனலி இளவரசரின் மோதிரத்தை பாதுகனின் கையில் திணித்துவிட்டு வெளியேற முயன்றாள்.

நாவகனின் மோதிரத்தைச் சோதித்த பாதுகனின் மனம் வேகமாக தனக்கான ஆதாயத்தைத் தேடியது. கனலி சொல்வது ஒரு வேளை பொய்யாக இருப்பின் அவளைப் பிடித்து சேனாதிபதியிடம் ஒப்படைத்து நற்பெயரை வாங்கி விடலாம். இல்லை, மெய்யென்றால் புகழும் பதவியும் தன்னைத் தேடி வரும். எப்படிப் பார்த்தாலும் தனக்கே ஆதாயம் அதிகம் என்பதை உறுதி செய்து கொண்டவன், "பெண்ணே நில்! நான் உன்னை நம்புகிறேன். என்ன செய்ய வேண்டுமென்று சொல்!" என்று கனலியை அழைத்தான்.

முகத்தில் புன்முறுவல் அரும்ப, செய்ய வேண்டியதை

அவனுக்குச் சொன்னாள் கனலி. அதன்படியே செயல் பட்டவன், போர் திட்டத்தை சேனாதிபதி வரையறுத்ததும் அந்த ரகசியங்களை எல்லாம் சுமந்து கொண்டு புதர் மறைவில் கனலிக்காகக் காத்திருந்தான். அவன் அறியாதது ஒன்று என்னவென்றால், அன்றைக்கு அவன் மனதை மாற்ற மதிமயக்கி கிங்கரன் ஒருவனை கனலி பயன்படுத்தியிருந்தது தான். அதனால் தான் கனலியால் பாதுகனின் மனதினை சுலபமாக மாற்ற முடிந்தது. பேராசை என்னும் நஞ்சினையும் அவன் மனதில் விதைக்க முடிந்தது.

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த பாதுகனின் சிந்தனையைக் கலைத்தாள் கனலி. "வாருங்கள் படைத்தலைவரே! அவசரச் செய்தி என்னவோ?" என்று கேட்டு முறுவலித்தாள்.

"உன் பேச்சை கேட்டு அமைதியாக இருந்ததினால் தான் மதுரையை மொத்தமாக சதிகாரர்கள் எரித்துவிட்டனர். முன்பே சேனாதிபதியை எச்சரித்திருந்தால் இப்படியொரு கேடு நிகழ்ந்திருக்குமா?" என்று கடிந்து கொண்டார் பாதுகன்.

"உங்கள் கோபம் புரிகிறது. ஆனால் பாலை அரசர்கள் இவ்வளவு கீழிறங்குவார்கள் என்று நான் நினைக்கவில்லை ஐயா! அதற்காக உளமார உங்களிடம் மன்னிப்பை வேண்டுகிறேன். இளவரசரை மீட்பது தான் உங்கள் முதல் கடமை. அதனால் தான் மீண்டும் கேட்கிறேன். முக்கிய செய்தி ஏதாவது உண்டா?" என்று நயந்தாள் கனலி. காமரியின் உற்ற தோழியாயிற்றே, நடிப்பதற்கு அவளுக்குக் கற்றுத் தரவா வேண்டும்?

"இப்போதே படையை அரசாணை ஆற்றங்கரையை நோக்கி நகர்த்த பேரரசர் உத்தரவிட்டிருக்கிறார். காரியம் கைமீறுவதற்குள், நாம் உடனே சென்று இளவரசரைக் காப்பாற்ற வேண்டும்." என்று கனலியை அவசரப்படுத்தினான் பாதுகன்.

ரணதீரன் வகுத்திருந்த போர்த் திட்டங்களை முழுமையாக பாதுகனிடமிருந்து கேட்டுக்கொண்ட கனலி, பாதுகனை மயக்கமடையச் செய்தாள். பின் ஓசைப் படாமல் சென்று காமரியின் காதுகளில் கிசுகிசுத்தாள். அனைத்தையும் கேட்டுக் கொண்ட காமரியின் மூளை பல்வேறு விதமாகச் சிந்தித்து, ஒவ்வொரு திட்டத்தின் நிறை குறைகளையும் அவற்றின் விளைவுகளையும் நொடியில் ஆராய்ந்தது. அவள் முகத்தில் ஒளி பொருந்திய புன்னகை ஒன்று வெளிப்பட, இறுதித் திட்டத்தினை கனலியின் காதுகளில் ஓதினாள் காமரி.

காமரியின் மதிநுட்பத்தை வியந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த கனலி திடீரென நினைவு வந்தவளாக, "பாதுகனை

பின்தொடர்ந்து வந்த ஒற்றனை என்ன செய்வது?" என்று கேட்டாள். திறமையான மனிதர்களை மட்டும் ஒற்றர்களாகப் பயன்படுத்தும் அரசனுக்கே தன்னைச் சுற்றி நடப்பவைகள் தெரியும் போது, பலவித பைசாசங்களையும் சூட்சம சக்திகளையும்கூட உளவறியும் வேலையில் ஈடுபடுத்தும் காமரிக்குத் தெரியாத செய்தி என்பதும் உண்டோ? பாதுகனை பின்தொடர்ந்து ஒற்றன் வரும் செய்தியை அறிந்தே தான் கனலியை அவனைச் சந்திக்க அனுப்பினாள் காமரி.

சற்று யோசித்தவள், "அவனை இப்போது கொல்ல வேண்டாம். நேரம் வரும் போது பார்த்துக்கொள்ளலாம்." என்று கூறி கனலியை அனுப்பிவிட்டாள். அதன் பின்னர் ஒரு நெடிய மூச்சை எடுத்து விட்டு, முகத்தில் பதற்றத்தைத் தேவையான அளவிற்குப் படர விட்டு முன்பாலை நாடுகளின் சேனாதிபதியான கருவலனின் கூடாரத்தை நோக்கி விரைந்தாள்.

"மாமா?" என்று உரக்க அழைத்தபடியே உள்ளே சென்றாள் காமரி. நடுசாமம் கழிந்த பின்னும் உறங்காமல் போர்த்திட்ட வரைவுகளையே பார்த்துக் கொண்டிருந்தார் கருவலன். காமரியின் குரலில் இருந்த பதட்டம் அவர் யோசனையை கலைக்க, "சொல்லம்மா... சற்று முன்பு தானே பெருவளநாட்டின் கோட்டையைச் சுற்றி வளைப்பதற்கான வியூகத்தை வகுத்து விட்டு சபை கலைந்தது. அதற்குள் என்னம்மா? ஏதேனும் கலக்கமாக இருக்கிறதா?" என்று பரிவுடன் கேட்டார் கருவலன்.

மண்ணும் மக்களும் அவர்களை ஆளும் மன்னவனும் தளர்ந்திருக்கும் நேரத்தில் நேரடியாக கோட்டையைத் தாக்கினால் பாண்டியன் சுலபத்தில் வீழ்ந்து விடுவான் என்று திட்டம் தீட்டி இருந்தார் கருவலன். திட்டப்படி எல்லாம் நடந்தால் நிச்சயம் போரில் வெற்றி தான் என்பதும் அவருக்குத் தெரியும். அதனால் காமரியின் கண்களில் இருந்த சோகத்தின் காரணம் புரியாமல் உள்ளுக்குள்ளே குழம்பினார் கருவலன்.

"குறளி இப்போது தான் செய்திகளுடன் வந்தது; அது தான் கவலையாக இருக்கிறது மாமா." என்றாள்.

"என்ன செய்திகள்?" என்று கூர்விழிகளுடன் கேட்டார் கருவலன்.

"நாம் அனுப்பிய தற்கொலைப் படை வீரர்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை செம்மையாகச் செய்து விட்டு வீர சுவர்க்கம் அடைந்து விட்டார்கள். ஆனால் நமக்கு உறுதுணையாக இருந்த மேற்குக் கோட்டைவாயில் தலைவனையும் அவனைச் சார்ந்த

வீரர்களையும் வீயனும் ரணதீரனும் கண்டுபிடித்துக் கொன்றுவிட்டார்கள். அதுமட்டுமின்றி நாம் இங்கே ஒன்று கூடுவதையும் அந்த வீயனுக்கு யாரோ தெரிவித்து விட்டனர். அதனால் அவன் எஞ்சிய படையோடு நம்மை நோக்கி அதிவிரைவாக வந்து கொண்டிருக்கின்றான். இன்னும் சில நாழிகைகளுக்குள் அவன் இங்கே வந்துவிடக் கூடும். தவவலிமை மிக்க மந்திரக் கட்டுக்களுடன் வருவதால், யட்சிணிகளாலும் நமக்குப் பெரிய பயன் இருக்காது என்று குறளி கூறியது. பாண்டியப் படையின் வேகத்தை குறைக்க முடியுமே தவிர அவர்களை அழிக்க முடியாதென்றும் குறளி கூறிவிட்டது. எப்படியும் உங்களுக்குத் தகவல் தெரிந்து நீங்கள் ஆலோசனைக் கூட்டத்தில் இருப்பீர்கள் என்று உடனே உங்களைக் காண வந்தால், இங்கே யாருமே இல்லை. அதுவே நம் ஒற்றர்களில் ஒருவருக்குக் கூட மூளையே இல்லை என்பதை நிரூபித்து விட்டது. இப்போது நாம் என்ன செய்ய மாமா?" என்று கூறி, கண்களில் கண்ணீர் நிறைய காமரி கருவலனைப் பார்த்தாள்.

காமரி கூறிய செய்தி அவருக்குமே அதிர்ச்சி தான். வீயன், இழந்தவற்றைச் செப்பனிடுவதில் நேரத்தைச் செலவிடுவான் என்று கருதியிருந்தவருக்கு, வீயன் படையுடன் சமருக்கு விரைவதை ஜீரணிக்க சற்று நேரம் தேவைப்பட்டது. அதிலும் பாண்டியனின் படை புறப்பட்டதைக் கூட இன்னும் கண்டறிந்து தகவல் சொல்லாத தன் கையாலாகாத ஒற்றர் படையை நினைத்தாலே அவருக்கு பற்றிக் கொண்டு வந்தது.

தொண்டையை செருமிக்கொண்டு, "அதனால் என்னம்மா? நாம் தான் பல படை விலங்குகளை அழித்து விட்டோமில்லையா? அவர்களின் படை வீரர்களில் பலரும் நமக்கே ஆதரவு தெரிவிப்பார்கள் என்றும் கண்டுகொண்டோம். அதனால் கவலை வேண்டாம். நாமே வெல்வோம்! நாவகனை முன் வரிசையில் நிற்கச் சொல்லு. அதன் பிறகு பார், வீயனின் முகம் போகும் போக்கை!" என்று சொல்லிக் கொண்டே போனவரின் பேச்சு காமரியின் முகம் சோகமானதைக் கண்டு சட்டென நின்றது.

என்ன என்பதைப் போன்று கருவலன் காமரியைப் பார்க்க, "ஐயோ மாமா! இப்போது தானே நாவகன் பாண்டிய நாட்டு ஒற்றனை துரத்திக் கொண்டு சென்றான்? கனலியை அவனுக்கு துணையாக அனுப்பி விட்டல்லவோ நான் உங்களைக் காண ஓடோடி வந்தேன்! பெண் புத்தி பின் புத்தி என்பது சரியாகப் போனதே!" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் காமரி.

"காமரி, என்ன இது சிறுபிள்ளைத் தனமாக? எப்படியும் நாம் தான் வெல்லுவோம். அவர்களின் படைகளை விட நம் படைகள் வலுவானவை. விரைந்து சென்று நாவகனை அழைத்து வா மகளே! போர் துவங்கும் வேளையில் அவன் நம் பக்கம் இருப்பதை அந்த வீயன் பார்த்து மனம் குமைய வேண்டும். விரைந்து செல்!" என்று கர்ஜித்தார் கருவலன்.

"அப்படியே மாமா! போரின் முடிவில் நான் உயிரோடு இல்லாது போகும் நிலை ஏற்படலாம். அதனால் எனக்கு ஒரே ஒரு பரிசு தருவீர்களா?" என்று நயமாகக் கேட்டாள் காமரி.

"துக்கிரித்தனமாக பேசாதே குழந்தாய்! இந்த நாவலந்தீவின் மணிமுடியை உன் சிரசில் ஏற்றாமல் இந்தக் கிழவன் மரணிக்கப் போவதில்லை! என்ன வேண்டுமோ சீக்கிரம் கேளம்மா." என்று அவளை ஊக்கினார்.

"நமக்கு உறுதுணையாக இருந்த மேற்குக் கோட்டைவாயில் தலைவனையும் வீரர்களையும் கொன்றொழித்த அந்த சேனாதிபதி ரணதீரனின் தலை வேண்டும் மாமா. ஆனால் வீயனை ஒன்றும் செய்யாதீர்கள். அவனிடம் தீர்க்க வேண்டிய பழைய கணக்கு ஒன்று எனக்குள்ளது." என்று கண்கள் மின்னச் சொன்னாள் காமரி.

"உன் விருப்பம் எப்படியோ அப்படியே நடக்கும் மகளே! கலங்காதே... இப்போது நாவகனை அழைத்து வா! நாங்கள் இங்கே போருக்கான ஆயத்தங்களைப் பார்க்கிறோம். வெற்றி நமதே! அந்தக் காளி என்றைக்கும் உனக்குத் துணையிருப்பாள்!" என்று முழங்கியவர் காமரிக்காகக் காத்திராமல் அரசர்களையும், சமீரணனையும், அவர்களின் உபசேனாதிபதிகளையும், வீரர்களையும் எழுப்பி நடந்தவற்றைத் தெரிவித்து போருக்குத் தயார்படுத்தினார்.

வெளியே வீரர்கள் எழுந்து ஓடுவதும், குதிரைகளும் யானைகளும் யாளிகளும் எழுப்பப்பட்டு தயார் படுத்தப்படுவதுமென இத்தனை களேபரங்கள் நடந்து கொண்டிருக்க, பொறுமையாகத் தன் கூடாரத்துக்குப் பக்கத்து கூடாரத்திற்குள் சென்ற காமரி ஓசையின்றி தூக்க கலக்கத்தில் இருந்த நாவகனை அழைத்துக்கொண்டு வெளியேறினாள். போருக்குத் தங்களைத் தயார் செய்துகொண்டிருந்த அவசரத்தில் இவர்கள் நழுவுவதை யாரும் கண்டுபிடிக்கவும் இல்லை கண்டுகொள்ளவும் இல்லை.

சற்று தூரம் சென்ற காமரி, பக்கத்தில் இருந்த தோப்பில் நாவகனோடு மறைந்து கொண்டாள். நடக்கும் போரினை எந்தத் தடையும் இன்றிப் பார்ப்பதற்காக ஒரு மரத்தின் கிளையில் தாவிக்

கொண்டு அரசாணை ஆற்றங்கரையைக் கூர்ந்து கவனித்தாள். நாவகனையும் மேலே வருமாறு பணித்தவள், தன் திட்டத்தின் அடுத்த பகுதியை சொல்லச் சொல்ல நாவகனின் முகத்தில் மெல்ல உற்சாகம் பிறந்தது. தன்னைக் குறைத்து மதிப்பிட்ட அனைவரையும் அழிக்கப் போவதை எண்ணி எண்ணி அவன் உள்ளம் பூரித்தது.

கீழ்வானத்தில் கதிரவனின் முதல் வெளிச்சம் தோன்றும் சமயத்தில் பேரரசர் வீய பாண்டியனின் முதல் நெருப்பு அம்பு சீறிப் பாய்ந்து எதிரியின் கூடாரத்தை எரித்தது. அவரைத் தொடர்ந்து மற்ற வில் வீரர்களும் தாக்குதலைத் தொடர பதிலுக்கு எதிரிகளும் தாக்குதல் நடத்தத் துவங்கினர்.

குதிரைப் படை, யானைப் படை, யாளிப் படை, தேர்ப்படை, காலாட்படை என்று ஒரு காலத்தில் பரந்து விரிந்திருந்த பாண்டியனின் பெரும்படை பாலை வீரர்களின் கள்ளப்போரினால் நன்றாகச் சுருங்கியிருந்தது. ஆனால் பாண்டிய வீரர்களின் கண்களிலிருந்து புறப்பட்ட கனல் எதிரிகளை நின்ற இடத்திலேயே பஸ்பமாக்கும் அளவில் இருந்தது. பாண்டிய வீரர்களின் கோபமும் வெறுப்பும் அவர்கள் இழப்பின் துயரமும் ஒன்று சேர அசுரப் பாய்ச்சலில் அவர்கள் போரிட்டனர். அதிலும் ரணதீரனின் முதல் மகனான ஆரன் சென்ற திக்கில் எல்லாம் பல தலைகள் உருண்டன.

பொதுவாக எல்லாப் போரிலும் அரசரைச் சுற்றிப் பல்வேறு வீரர்கள் கேடயம் போலச் செயல்படுவார்கள். ஆனால் இந்தப் போரிலோ பேரரசர் வீயன் தன்னை பின் வரிசையில் நிறுத்த ஒப்புக் கொள்ளவேயில்லை. முதல் வரிசையில் நின்று, இரட்டை சுழி கொண்ட கறுப்புப் புரவியில் சண்டமாருதத்தைப் போல சுழன்று சுழன்று தாக்கினார். மக்களின் ஒட்டுமொத்த சோகத்தையும் தனக்குள் உள்வாங்கி அத்தனையையும் வெறியாக உருமாற்றி இருந்தார் பேரரசர். அவர் சென்ற பக்கமெல்லாம் பாலைப் படைகள் சிதைந்து வீழ்ந்தன.

குதிரைப் படைகள் ஒன்றோடு ஒன்று மோதும் போது எழுந்த ஒலிகள் விண்ணைப் பிளந்தன என்றால், யானைப் படைகள் மோதும் போதோ பூமி அதிர்ந்து நிலமகள் அச்சத்தில் உறைந்தாள். யாளிப் படைகள் செல்லும் வழியெங்கும் பெரும் சேதாரத்தை விளைவிக்க, அவைகளின் கால்களில் மிதிபடாமல் தங்களைக் காத்துக்கொள்ளவே அனைவரும் சிரமப்பட்டனர். பல தசாப்தங்களுக்குப் பிறகு நடக்கும் பெரும் போர் என்பதால் இரு பக்கத்திலுமே இழப்புகள் அதிகம் ஏற்பட்டன.

பாண்டியப் படைகளைவிட எண்ணிக்கையில் அதிகமாக

இருந்தது பாலைப் படை. ஆனாலும் பாண்டிய வீரர்களின் அசாத்திய போர்த்திறமையால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் அவர்கள் நாலா பக்கமும் சிதறி ஓட, கள்ளுண்ட வெறியர்களைப் போல அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடியது பாண்டியப் படை.

போரில் கிட்டத்தட்ட வெற்றி பெற்று விட்டோம் என்று வீயன் நினைக்கும் போதுதான் ரணதீரன் ஒன்றைக் கவனித்தார். பாலை அரசர்களையோ, முக்கியமான உபசேனாதிபதிகளையோ படைத் தளபதிகளையோ களத்தில் காணவில்லை என்பது அவரது சந்தேகத்தை கிளப்ப, ஏதோ நடக்கப் போகிறது என்று அவர் உள்மனம் உணர்த்த, "பின் செல்லுங்கள்! பின் செல்லுங்கள்!" என்று உரக்கக் கத்தினார். ஆனால் அவர் சொல் மற்றவரின் செவியைச் சேரும் முன்னரே பக்கவாட்டிலிருந்து வந்த புதிய படைப் பிரிவுகள் பாண்டிய வீரர்களை மொத்தமாகச் சுற்றி வளைத்தன.

பாம்பின் உடலும் வாலும் எப்படி இரையை நகரவிடாமல் சுற்றி வளைத்து இறுக்கியிருக்குமோ அப்படியே பாண்டிய வீரர்களை இறுக்கியிருந்தார்கள் பாலை வீரர்கள். நாற்புறமிருக்கும் படைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தளபதி பொறுப்பேற்றிருக்க, முன்பாலை நாட்டின் அரசன் ஆசுவனும் பின்பாலை நாட்டின் அரசன் சித்ரூபனும் மிகக் கவனமாக படையின் கடைக்கோடியில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரையும் காப்பதற்காகவே ஒரு சிறு படையையும் அதற்குத் தலைவனாக சமீரணனையும் கருவலன் நியமித்திருந்தார். போர்த் திட்டங்கள் வகுக்கும் போது அதிகப் பிரசங்கியாக பேசியதற்காக சமீரணனுக்கு கருவலன் வழங்கிய தண்டனை என்று கூட இதைச் சொல்லலாம். போரில் பெருவீரனாக அனைவரின் மதிப்பையும் பெற வேண்டும் என்ற சமீரணனின் ஆசையை நிராசையாக்கி, போர் நடப்பதற்கு வாய்ப்பற்ற இடத்தில், வீரமற்ற இரு அரசர்களையும் பாதுகாக்கும் சாதாரண ஒரு வீரனைப்போல நிறுத்தியிருந்தார் கருவலன்.

எந்தப் பக்கம் நகர்வது என்ற திகைப்பில் இருந்த பாண்டிய வீரர்களைப் பார்த்துப் புன்னகைத்த கருவலன் தங்கள் விற்படை வீரர்களுக்கு ஏதோ சமிக்கை செய்ய, அங்கிருந்த பாண்டியர்களின் யாளிகளையும் யானைகளையும் குறி வைத்து அவர்கள் சரமாரியாக அம்பெய்யத் துவங்கினர். எய்வதற்கு முன்னால் அவர்கள் அம்புகளை எதிலோ தோய்ப்பதைப் போலத் தெரிய, முதலில் என்னவென்று புரியாமல் தவித்த பாண்டிய வீரர்களுக்கு அது என்னவென தெரிந்ததும் உயிர்ப் பயம் மேலோங்கியது.

மிளகையும் யானைக்கு மதம் பிடிக்க வைக்கும் சில பச்சிலைகளையும் நன்றாக மெழுகு போல் அரைத்து அதன் சாறில் அம்புகளைத் தோய்த்து யானைகளையும் யாளிகளையும் குறி வைத்துத் தாக்கினர் பாலை வீரர்கள். அம்புகள் அவைகளின் மேல் பட்ட நொடியிலிருந்து மிருகங்களின் குணம் முழுதுமாக மாறத் துவங்கியது. கண்களும் முகமும் இருள தலையை சிலுப்பிக் கொண்டே அங்கும் இங்கும் அல்லாடியன யானைகளும் யாளிகளும். இன்னும் சில மிருகங்களோ மிக மூர்க்கமாக பாண்டிய வீரர்களையே தாக்கத் துவங்கியிருந்தன. அவைகளின் பாகன்கள் சொல்வதைக் கூட அவைகள் கேட்கவில்லை. தலைக்கு மேல் இருந்த பாகன்களைக் கீழே தள்ளி விட்டு பக்கத்தில் இருந்தவர்களை மிதித்தும் துதிக்கையால் தூக்கி விசிறி அடித்தும் தங்கள் கோபத்தினை வெளிக்காட்டின.

சமயோசிதமாக தங்களின் யானைப் படைகளையும் யாளிப் படைகளையும் வேறு திக்கில் அனுப்பி விட்டிருந்தார் கருவலன். அதனால் அவர்களுக்குப் பெரும் சேதாரம் ஏற்படுவதை அவர் சுலபமாகத் தடுத்திருந்தார்.

நிமிடத்திற்குள் நடந்தேறிய இந்தக் காட்சியைக் கண்டதும் ஒரு கணம் துவண்டாலும் தோல்வியை ஏற்க மனமின்றி மறுபடியும் வீறு கொண்டு போராட ஆரம்பித்தார் பேரரசர் வீயன். படைவீரர்கள் பெரிதும் வணங்கும் பேரரசனே தோல்வியைப் பற்றிக் கவலை கொள்ளாது உயிரைத் துச்சமென மதித்துப் போரிட ஆரம்பித்ததும், சூழ நின்ற மற்ற வீரர்களும் சளைக்காது போராடினார்கள்.

"வெற்றி அல்லது வீரசுவர்க்கம்!!!" என்று பேரரசர் வீய பாண்டியன் புலி போல உறும, "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!!!" என்று சூழ நின்றவர்கள் கர்ஜித்தனர்.

இழப்பதற்கு இனி எதுவும் இல்லை என்ற நிலை வரும் போது ஒவ்வொருவருக்கும் மலையளவு வீரமும் தைரியமும் வரும். எப்படியும் இன்று இறப்பது உறுதி என்று தெள்ளெனத் தெரிந்த பின்னர், போராடாமல் இறப்பதற்கு வீரமிக்க போர் வீரர்கள் எவருக்குத்தான் மனம் வரும்?

'நான் இறக்கும் போது என்னோடு குறைந்தது இருபது பேரையாவது துணைக்கு அழைத்துச் செல்லுவேன்!' என்று கங்கணம் கட்டிக் கொண்டவனைப் போல இரு கைகளிலும் வாளேந்தி பைரவ மூர்த்தியாக எதிரிகளின் படையை நிர்மூலமாக்கினான் ஆரன். அவனின் வீரமே அவனைப் பார்த்த பாண்டியர்களுக்கு பெரும் ஊக்கமாக

இருந்தது.

தன் குதிரையில் இருந்து கீழே குதித்தவன் தன்னைச் சூழ்ந்திருந்த பாலை வீரர்களின் உலகவாசத்தை முற்றுப் பெற வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்த கருவலனின் கண்களில் சிறு மெச்சுதல் கூட ஏற்பட்டது. எதிரியாக இருந்தாலும் அவனிடம் வீரமிருப்பின் பாராட்டும் மறக்குடியல்லவா தமிழ்க்குடி? ஆனால் அவனைப் பார்த்து மற்ற வீரர்கள் வீரியம் கொள்வதை விரும்பாத கருவலன், தன் குதிரையை ஆரனை நோக்கிச் செலுத்தினார்.

"வீரனே! உன் வீரத்தை என்னிடம் காட்டு!" என்று சொல்லிய படியே ஆரனை கண்மூடித்தனமாகத் தாக்கினார். குதிரையின் மீதிருக்கும் ஒரு வீரன் காலாட்படை வீரனுடன் மோதும் போது குதிரை வீரனின் கையே ஓங்கும். இதை நன்கறிந்திருந்த ஆரன், சீட்டி அடிக்க, அதுவரையில் எஜமானனின் கட்டளைக்காகவே காத்திருந்ததைப் போல ஆரானின் குதிரை அவனை நோக்கி ஓடி வந்தது.

"கிழவரிடம் வீரத்தை காட்ட வேண்டுமா என்று யோசிக்கத்தான் வேண்டியிருக்கின்றது. ஆனால் இந்த ஆரன் வலிய வரும் சமர் அழைப்பை என்றுமே நிராகரித்ததில்லை. கத்தி பிடிக்க வலுவிருக்கிறது தானே தாத்தா?" என்று அவரை பரிகசித்துக் கொண்டே அவன் குதிரையில் தாவி ஏறினான். அவன் ஏறும் போது குறுக்கிட்ட இரு பாலை வீரர்களின் சிரசை துண்டித்து விட்டுத்தான்!

"நான் வாய் வீரனா இல்லை வாள் வீரனா என்பதை பார்க்கத்தானே போகிறாய்?" என்று சிரித்து விட்டு கத்தியை அவன் புறம் வீசினார் கருவலன். புன்னகையுடன் லாவகமாக அதை தடுத்து நிறுத்தியவன், ஆக்ரோஷமாக சண்டையிட ஆரம்பித்தான். கருவலனின் இத்தனை ஆண்டு கால போர்ப் பயிற்சியில் ஆரனைப் போல ஒருவனுடன் அவன் சண்டையிட்டதே இல்லை எனலாம். அவ்வளவு நேர்த்தியாக வாள் வீசினான் ஆரன். இவனை மட்டும் வேறு நிலையில் சந்தித்திருந்தால் தன் பேத்தியை இவனுக்கு மணமுடித்திருக்கலாம் என்று அந்த நேரத்திலும் அவர் மனம் கணக்குப் போட்டது. சித்திரமும் கைப்பழக்கம் என்பதைப் போல மனம் அது பாட்டுக்கு யோசித்தாலும் கருவலனின் கையில் இருந்த வாள் தனக்கெனத் தனி மதி உண்டு என்பதைப் போல நடந்து கொண்டு அசாத்தியமாகப் போரிட்டது.

மெள்ள மெள்ள பாண்டிய வீரர்கள் இழந்த தெம்பை மீண்டும் பெற்று போராட ஆரம்பித்ததை மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த காமரிக்கு எரிச்சல் மண்டியது. இனியும் காத்திருந்தால் தன் திட்டங்கள் அத்தனையும் தோல்வியில் தான் முடியும் என்று கருதியவள் கனலிக்கு

சமிக்கை செய்யச் சொல்லி ஒரு குறளியை அனுப்பினாள். பின் இரு கண்களையும் மூடிக் கொண்டு கைகளைக் கூப்பி காளி தேவியை வணங்கி விட்டு, மந்திரத்தை உக்கிரமாக உச்சரித்தாள்.

நிமிடங்கள் நான்கு கடப்பதற்குள்ளாகவே அந்த இடத்தில் ஐம்பது வீரர்களைக் கொண்ட ஒரு சிறு குதிரைப் படை நின்றிருந்தது. அப்படையின் முன்னால் கம்பீரமே வடிவாக அசாத்திய ஆகிருதியோடு இரு புரவிகள் நின்றிருந்தன, நாவகனுக்காகவும் காமரிக்காகவும்.

நரிகளை பரிகளாக மாற்றி இறைவன் நடத்திய திருவிளையாடலைப் பழிப்பதைப் போலவே குறளிகளைக் குதிரைகளாகவும் யட்சிணிகளை வீரர்களாகவும் உருமாற்றி இருந்தாள் காமரி. தாவிச் சென்று குதிரையில் எறியவள், நாவகனை விரைந்து செல்லச் சொல்லி உத்தரவிட்டாள்.

நாவகன் சென்ற இரு நொடிகளுக்குப் பிறகு, கண்கள் வைரமென கோபத்தில் ஜொலிக்க, காற்றில் செங்குழல் அசைந்தாட அந்த ருத்ர காளியே போர்க்களத்திற்குள் பிரவேசிப்பதைப் போல இரு கையிலும் நீண்ட வாளேந்தி காண்போரை உறையச் செய்யும் உக்கிரத்தோடு களத்திற்குள் பாய்ந்தாள் காமரி!

## அத்தியாயம் 5

நாவகன் ஆக்ரோஷமாக குதிரையேறி வருவதைப் பார்த்த பாண்டிய வீரர்கள், தொலைந்து போன தங்களின் மதிப்பு மிக்க இளவரசர் போரில் பங்கேற்க வருகிறார் என்றெண்ணிக் கொண்டு இன்னும் உற்சாகத்தோடு போராடினார்கள். ஆனால் பேரரசர் வீய பாண்டியனோ நாவகனின் பின்னால் எரிமலையென வரும் காமரியைப் பார்த்து விக்கித்துப் போனார். அவளுடன் நாவகன் வருகிறானென்றால் அவன் உள்ளம் எதிரியின் பால் சாய்ந்து விட்டது என்பதை அவரது அனுபவம் அவருக்கு உணர்த்தியது. இனி எதற்காகச் சண்டையிட வேண்டும் என்று மனதளவில் பேரரசர் துவண்ட சமயத்தில் சமீரணன் நயவஞ்சகமாக பின்பக்கமாக வந்து பேரரசரைத் தாக்கினான்.

வாளால் பேரரசர் முதுகில் சமீரணன் ஏற்படுத்திய காயத்திலிருந்து செங்குருதி வழிந்தோட, அதைக் கண்ட சேனாதிபதி ரணதீரன், தான் இருக்குமிடத்திலிருந்து சென்றால் விரைந்து பேரரசருக்கு உதவ முடியாது என்று புரிந்த உடனே பேரரசருக்குச் சற்று அருகில் போர் புரிந்துகொண்டிருந்த ஆரனை விளித்தார்.

"மகனே! உடனே பேரரசருக்கு உதவு, செல்!" என்று ரணதீரன்

உத்தரவிட, நொடியில் கருவலனை குதிரையில் இருந்து லாவகமாகக் கீழே தள்ளி விட்டு விட்டு பேரரசரைக் காப்பதற்காக ஆரன் விரைந்தான். சரமாரியாக அடுத்தடுத்து வந்த சமீரணனின் வாள் வீச்சைத் தடுத்து நிறுத்திச் சண்டையிட்டாலும் பேரரசரின் முதுகில் இருந்து வழியும் உதிரம் நிற்காமல் நொடிக்கு நொடி அதிகரித்தது. அதிக ரத்தப்போக்கினால் கண்கள் இருண்டாலும், 'வீரத்தோடு போராடி மாண்டான் வீயன் என்கிற சுபகீர்த்திக்காகவும் முதுகில் காயம் பட்டு பாண்டியன் இறந்தான் என்ற அபகீர்த்தியை போக்குவதற்காகவும்' தன்னை சுதாரித்துக் கொண்டு சமீரணனோடு வீரியமாகப் போரிட்டார் பேரரசர். ஐம்பது பிராயத்தைக் கடந்து காயத்தால் பலவீனமடைந்த நிலையிலும் வீறு கொண்டு போர் புரியும் பேரரசரை அதிசயமாகப் பார்த்தான் சமீரணன். அவனறிந்த அரசர்களில் இத்தனை வீரமிக்க அரசன் யாருமில்லை என்றே சொல்லலாம். அதனால் பேரரசரின் மீது அவனுக்குச் சிறு மரியாதைகூடத் தோன்றியது. இருந்தும், காமரியின் அன்பைப் பெறுவதற்காக, அவள் பேரரசரை ஒன்றும் செய்யக்கூடாது என்று சொன்னதைப் பொருட்படுத்தாமல் முன்னொரு காலத்தில் அவளைக் கொல்ல முயன்ற அவர் தலையை அவள் காலடியில் வைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு தந்திரமான பல யுத்திகளுடன் சமர் செய்தான் சமீரணன்.

பேரரசர் சற்று நிலைக்குலைய, அவர் பக்கத்தில் இருந்த வீரர்கள் அவர் உதவிக்கு வந்தனர். ஆனால் வந்தவர்களை எல்லாம் கொன்றொழித்தான் அல்லது படுகாயப் படுத்தினான் சமீரணன். சமீரணனின் போர்த் தந்திரங்களை நோட்டமிட்டபடியே விரைந்து வந்த ஆரன் சமீரணனை எதிர்த்து பாணங்களை வீசினான். சமீரணனின் கவனம் ஆரனை நோக்கி திசை திரும்பிய சமயம் பேரரசரை பத்திரமாக மீட்டு அவரைச் சுற்றி கேடயம் போல நின்று கொண்டனர் அங்கிருந்த மற்ற வீரர்கள். அவர்களில் மருத்துவம் தெரிந்த ஒரு வீரன் அரசரின் காயத்தில் அவன் இடையில் இருந்த பச்சிலைகளை வைத்துக் கட்டினான்.

ஆயுதங்களை சமீரணன் முறையற்ற வகையில் பிரயோகம் செய்ததை கவனித்த ஆரன், குதிரையை முடுக்கிக் கொண்டே, அம்பு மழை பொழிந்து, முதலில் அவன் ஆயுதங்களை அவனிடமிருந்து எளிதாக நீக்கினான். ஆரன் நினைத்திருந்தால் அவனால் சுலபமாக சமீரணனைக் கொன்றிருக்க முடியும். ஆனால் வில் இல்லாத ஒருவனை வில்கொண்டு வீழ்த்துவது மரபன்று என்று அவன் ஆயுதங்களைக் கைப்பற்றியதோடு நிறுத்திக் கொண்டான் ஆரன். சமீரணன் அவன் ஆயுதங்களை இழப்பதற்கும் ஆரன் அவனைக் குதிரையில் இருந்து

தள்ளி விடுவதற்கும் சரியாக இருந்தது. கீழே உருண்ட சமீரணனின் முடியைப் பிடித்து எழுப்பினான் ஆரன். அவன் முகத்தில் அத்தனை கடுமை. ஆரனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட சமீரணன் அவன் வயிற்றைக் குறிவைத்துக் கை ஓங்க, நடுவழியில் சமீரணனின் கையைப் பிடித்து அவனைத் தரையில் தூக்கி அடித்தான் ஆரன். தலையைச் சிலுப்பிக்கொண்டு எழுந்த சமீரணன் ஆங்காரத்துடன் ஆரனை தாக்குவதற்காக ஓடி வர, ஆரனின் இரு கைகளும் சமீரணனின் இரு கைகளும் ஒன்றோடொன்று மோதியது. திண்தோள்களை உடைய இரண்டு பருத்த காட்டெருமைகள் மோதிக் கொள்வது போலிருந்தது சமீரணனும் ஆரானும் செய்த மல்யுத்தம்.

ஆரன் இங்கே சமீரணனுடன் தனியுத்தம் செய்து கொண்டிருந்தானென்றால், ரணதீரனோ கருவலனுடன் பெரும் போர் செய்து கொண்டிருந்தார். ஒருவருக்கு மற்றவர் சளைத்தவரல்ல என்பதை அருகிருந்தோர் அறியும் வண்ணம் கடுமையாக இருவரும் போரிட்டனர். இருவரின் வாள் வீச்சும் அழகிய மங்கையர் ஆடும் தேவராட்டத்தை ஒத்திருந்தது. சமீரணனைப் போல் அல்லாமல் விதிகளின் படியே வாள் சுழற்றினார் கருவலன். வெற்றி யார் பக்கம் என்பதை யூகிக்க முடியாத வகையில் இரு சிறுத்தைகளென போரிட்டனர் ரணதீரனும் கருவலனும்.

ஆங்காங்கே சிலர் சண்டையிட்டுக் கொண்டிருந்தாலும், பல வீரர்கள் தங்களுக்குள்ளே சண்டையிடுவதை நிறுத்திவிட்டு இந்த இரண்டு யுத்தங்களையுமே வேடிக்கை பார்க்கத் துவங்கினர். இனி இதை இப்படியே விடுவது நல்லதல்ல என்று முடிவு செய்த காமரி, நாவகனைத் தாண்டிக் கொண்டு கருவலனை நோக்கி விரைந்தாள். செல்லும் போது அவள் உதடுகள் வேகமாக உடலைக் கட்டும் மந்திரத்தை உச்சரிக்க, ரணதீரனின் உடல் செயலிழக்க ஆரம்பித்தது. அதை அவர் உணரும் போது, காமரியை நாவகனோடு பார்த்ததும் தன் திட்டம் பலித்ததை எண்ணி குதூகலித்த கருவலன், எதிர்ப்பதற்கு வலுவற்ற நிலையில் இருந்த ரணதீரனின் சிரசை ஒரே வீச்சில் கொய்து விட்டார்.

சூழ இருந்த பாலை வீரர்களின் விண்ணைப் பிளக்கச் செய்யும் ஆரவாரம், ரணதீரன் இறந்த செய்தியை பேரரசனுக்கும் ஆரனுக்கும் சொல்லாமல் சொல்லியது. "அப்பா!" என்று கதறியவன் ஒரே அடியில் சமீரணனை வீழ்த்தி விட்டுத் தன் குதிரையில் தாவி ஏறினான், கருவலனின் உயிரை எடுக்க!

கருவலன் ரணதீரனின் தலையைக் காமரியிடம் அன்போடு நீட்ட, கோபம் குறையாத முகத்தோடு துளியும் தாமதிக்காது

கருவலனின் தலையை இளநீரைப் போலச் சீவினாள் காமரி.

காமரி கருவலனின் தலையைத் துண்டித்ததைப் பார்த்த பாலை அரசர்கள் இருவரும் ஸ்தம்பித்து பயத்தில் உறைந்து விட்டார்கள். கருவலனின் மரணத்தையும் சமீரணனின் வீழ்ச்சியையும் பார்த்த பாலை வீரர்கள் தாங்கள் தோற்று விட்டதாகவே முடிவு செய்து கொண்டனர்.

"வாழ்வித்தவர்களையே அழிக்க நினைக்கும் ஈன புத்தியுடைய பாலை வீரர்கள் ஒருவரையும் உயிருடன் விடாதீர்கள்!" என்று காமரி இடியென முழங்க, அவள் குரலில் இருந்த ரௌத்திரம் பாண்டிய வீரர்கள் அனைவருக்கும் புத்துணர்ச்சி அளித்தது. புதுரத்தம் பாய்ந்த பாண்டிய வீரர்களுடன், வீரர்களைப் போல வேடமிட்டிருந்த காமரியின் யட்சிணிகளும் போரில் தூள் கிளப்ப, செய்வதறியாது பாலை அரசர்கள் திக்குமுக்காடிப் போனார்கள். காமரியின் உண்மைத்தன்மையை அறிந்திருந்த அனைவரையும் யட்சிணிகள் பல துண்டங்களாக்கின. வீரர்களின் துணையின்றி தனித்திருந்த இரு பாலை அரசர்களையும் நாவகன் கைது செய்தான். பாண்டிய வீரர்கள் அரை நாழிகைகளுக்குள் பெரும்பாலான எதிரி வீரர்களை அழித்திருந்தனர். ஆனால் எங்கு தேடினாலும் சமீரணனை மட்டும் எவராலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

போரில் வெற்றி பெற்று விட்டோம் என்று பாண்டிய வீரர்கள் மகிழ்ந்த நேரம், மதம் பிடித்திருந்த யானைகள் மற்றும் யாளிகள் மறுபடியும் வீரர்களை நோக்கித் தறிகெட்டு ஓடி வர, மந்திரத்தை உச்சரித்து வானத்தை நோக்கி காமரி ஒரு அஸ்திரத்தை ஏவ, சட்டென அந்த இடத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டு, மிருகங்களின் மீது அமுத மழை பொழிந்தது. தண்ணீர் பட்டதும் யானைகளும் யாளிகளும் தன்னிலைக்குத் திரும்பின; அப்போது போரும் முடிவிற்கு வந்திருந்தது!

போர் முடிந்ததும், பெரும்பான்மைப் பாண்டியப் படைகளிடம் போர்க் கைதிகளை அழைத்துக் கொண்டு மதுரைக்குத் திரும்ப ஒரு உபசேனாதிபதி உத்தரவிட்டார். சேனாதிபதி ரணதீரன் மறைந்ததும் அதிக அனுபவம் பெற்ற அவரே அடுத்த சேனாதிபதியாக பதவி உயர்வு பெறுவார் என்பதை அறிந்திருந்த மற்ற போர் வீரர்களும் உபசேனாதிபதிகளும் அவர் சொல்லுக்கு மறுபேச்சின்றி செவி சாய்த்தனர்.

பேரரசர் போர் முடியும் தருவாயில் மூர்ச்சையாகி விழுந்ததால் அங்கேயே ஒரு கூடாரம் அமைத்து பேரரசர் ஓய்வெடுப்பதற்காக ஏற்பாடு செய்திருந்தார் மற்றொரு உபசேனாதிபதி. போரில் பெருங்காயம் அடைந்து பயணம் செய்ய முடியாத பல வீரர்களுக்கும்

அரசாணை ஆற்றங்கரையிலேயே மருத்துவம் பார்க்க ஏற்பாடாகி இருந்தது.

காயம் பட்ட சிறிது நேரத்திற்குள்ளாகவே மருந்திட்டதினால் உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை என்று பேரரசரை சோதனை செய்த மருத்துவர்கள் தெரிவித்து விட்டனர். காயத்தின் காரணமாக வந்திருந்த காய்ச்சலுக்கும் சரியான மருந்தை அவர்கள் புகட்ட, பேரரசர் பழைய உடல் வலுவை இரு நாழிகைகளுக்குள் பெற்றுவிடுவார் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

மயக்கம் தெளிந்ததும், பேரரசர் மெல்ல எழுந்து அமர்ந்து, "ரணதீரன்?" என்று கேட்க, மௌனமாக தலையசைத்தார் ஒரு உபசேனாதிபதி. அவர் கண்களில் நீர்த் திரையிட்டிருந்தது.

"ஆரன்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார் பேரரசர்.

"ஆரன் தம்பி, சேனாதிபதியின் உடலை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு விரைந்திருக்கிறார். சொந்தங்களுக்கு செய்தி அனுப்ப வேண்டும் இல்லையா?" என்று கம்மிய குரலுடன் பதிலளித்தார் அந்த உபசேனாதிபதி. சேனாதிபதி ரணதீரன் அவர் படையில் இருப்பவர் அனைவரிடத்திலும் ஒரு சகோதரனாக, தந்தையாக, தோழனாக நடந்து கொள்ளுவார். அப்பேற்பட்டவரின் மறைவு, பெற்றிருந்த வெற்றியின் களிப்பைக் கூட பலரின் உள்ளத்தில் மங்கச் செய்திருந்தது.

அடுத்ததாக, "நாவகனும் அந்தப் பெண்ணும் எங்கே?" என்று பேரரசர் கேட்டார். உடனே நாவகனையும் காமரியையும் அழைத்து வந்து அவர் முன்பு மரியாதையோடு நிறுத்தினார் ஒரு உபசேனாதிபதி.

"நாவகா..." என்று பேரரசர் அழைக்கும் முன்பே, "அப்பா! என்னை மன்னியுங்கள்..." என்று அழுதுகொண்டே பேரரசரின் பாதம் பணிந்தான் நாவகன்.

அவன் விழிநீர் அவர் பாதங்களை நனைக்க, "நீ என்ன பிழை புரிந்தாய் மகனே? உண்மையில் எங்களை எல்லாம் கடைசியில் காத்தது நீயும் அந்தப் பெண்ணும் தானே?" என்று காமரி யாரென்று தெரியாதவரைப் போலவே பேரரசர் பேசினார்.

*'என்னை யாரென்று தெரிந்ததைப் போலக் காட்டிக் கொண்டால், எப்படி என்பதையும் இந்த உலகிற்கு சொல்ல வேண்டிய கட்டாயம் வருமென எண்ணி, என்னைத் தெரியாதவனைப் போல் நடிக்கிறாயா? அடே வீயா! உன் வலக்கரமாக இருந்த ரணதீரன் வீரனுக்கு தந்தையான ஒரே காரணத்தால், அவனை சிரமப் படுத்தாமல் ஒரே வீச்சில் வலியின்றி வீரசுவர்க்கம் புக வைத்தேன். ஆனால் அது*

போன்ற சுலபமான மரணத்தை நீ என்றைக்குமே அடையப் போவது இல்லை! எப்போது எனக்கு மரணம் வரும்? என்று அழுது புலம்பி மனம் வெந்து, நீ உன் வாழ்நாள் முழுதும் துடிதுடிப்பாய்! இது நான் வணங்கும் காளி தேவியின் மீது ஆணை!' என்று மனதினுள் கறுவினாலும் முகத்தை குழந்தை போல வைத்துக்கொண்டாள் காமரி.

"உங்கள் மீது கோபித்துக் கொண்டு சென்றதன் பின் என் வாழ்வில் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன தந்தையே! அம்மாற்றங்கள் தான் நான் செய்திருந்த பிழையை என்னை உணர வைத்தன. உங்களுக்குத் தெரியாமல் நான் இதுநாள் வரை மறைத்திருந்த விடையங்களை இப்போது கூறுவதற்கு அனுமதி கிடைக்குமா?" என்று தலைதாழ்ந்து கூறினான் நாவகன்.

"நாவகா! நிமிர்ந்து என்னைப் பார்! பெற்ற தகப்பனிடம் ஏனிந்த சம்பிரதாயங்கள்? உன் மனதில் என்ன இருக்கிறதோ அனைத்தையும் கொட்டிவிட்டு, சலனமில்லா மனதுடன் நம் அரண்மனைக்குத் திரும்புவோம். சரி தானே?" என்று அவன் முகத்தை பரிவோடு பார்த்தார் பேரரசர்.

"தந்தையே! நாம் தனிமையில் பேசலாமா?" என்று நாவகன் தயங்கிய படியே இழுக்க, பேரரசரின் ஒரே பார்வையில் அங்கிருந்தோர் அனைவரும் அகன்றனர்.

தயங்கித் தயங்கி நடந்த காமரியை, "நீ இங்கேயே இரம்மா. இவன் சொல்லப் போவதற்கும் உனக்கும் பெரிய தொடர்பு இருப்பதாக என் மனம் நினைக்கின்றது." என்று பேரரசரே காமரியை நிறுத்தினார். அவருக்கு அவளை நன்றாக பரிசோதனை செய்ய வேண்டும் என்று தோன்றியது. அதனாலேயே அவளை மட்டும் அங்கேயே நிறுத்தி வைத்தார்.

"அப்படியே ஆகட்டும் பேரரசே!" என்று இருகை கூப்பி வணங்கி அழகின் சிகரமாக சந்தனச் சிலையென நாவகனின் அருகில் சென்று நின்றாள் காமரி. அவர்கள் இருவரின் நெருக்கத்தை குறித்துக்கொள்ள பேரரசரின் கண்கள் தவறவில்லை.

"அப்பா, இவள் பெயர் காமரி. முன்பொரு சமயம் முன்பாலை நாடுகளை ஆண்ட அரசர் பாளையனின் பேத்தி. உங்கள் ஜென்ம வைரி என்று நீங்கள் குறிப்பிடும் மகிந்தனின் மகள். நான் வெள்ளி மலையில் குருகுலம் பயின்ற போது காமரியைக் கண்டேன்; காதல் கொண்டேன். அவளும் என் மீது வானளவு நேசம் கொண்டாள். அவளையே மணந்து கொள்ள ஆசைப்பட்டேன். அதனால் இவள் தந்தையிடம் சென்று காமரியை மணந்து கொள்ள சம்மதம் கேட்டேன். உங்களுக்கும்

அவருக்கும் தீராப் பகை இருப்பதைக் காரணம் காட்டி அவர் முதலில் மறுத்து விட்டார். ஆனால் எங்கள் காதலின் வலிமை அவருக்குப் புரிய, இறுதியாக அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் நீங்கள் அவரிடம் வந்து பெண் கேட்க வேண்டும் என்ற நிபந்தனையும் போட்டார்.

உங்களை எப்படி சம்மதிக்க வைப்பது என்று எனக்குத் தெரியவேயில்லை. காரணம் அரண்யா மீது பாசம் வைத்த அளவிற்கு நீங்கள் என் மீது..." என்று சொல்லும் போதே குரல் உடைந்தது நாவகனுக்கு.

"நாவகா! எனக்கு நீங்கள் இருவரும் ஒன்று தான்!" என்று பேரரசர் பேசத் துவங்க, "அப்பா! நான் முடித்து விடுகிறேனே... இடையில் உங்கள் குரல் கேட்டால் என்னால் பேச முடியாது!" என்று நாவகன் விசும்ப, யோசனையோடு சரியென்று தலையசைத்தார் பேரரசர்.

"உங்கள் சம்மதத்தைப் பெற வழிதேடிக் கொண்டிருந்த போது தான் இந்திரரகசியத்துக்கான போட்டி அறிவிப்பு வந்தது. இந்திரரகசியத்தின் மீது உங்களுக்கிருக்கும் பெருமதிப்பை எனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள நான் நினைத்தேன். அதனால் மகிந்தனை மாமாவைச் சந்தித்து எனக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன். அப்போது தடை செய்யப்பட்ட வித்தையை அவர் பயன்படுத்தச் சொல்லுவார் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை. முதலில் மறுத்த நான், என் காதல் ஈடேற வேண்டும் என்ற எண்ணத்தில் இறுதியில் ஒப்புக் கொண்டேன். அதன் பிறகு நடந்தது உங்களுக்கே தெரியும். குருகுலத்தில் இருந்து என்னை நீக்கிய பின், உங்களின் பாராமுகம் என்னைச் சுட்டது. அதனால் காமரியைப் பற்றி உங்களிடம் என்னால் தெரிவிக்க முடியவில்லை.

தக்க சமயத்தை எதிர்பாத்து நான் காத்திருக்கும் போது தான், காமரியை பின்பாலை நாடுகளின் சேனாதிபதி சமீரணன் கடத்தி முன்பாலை நாடுகளுக்குக் கொண்டு சென்றதாக, எனக்குச் செய்தி கிடைத்தது. மனதாரக் காதலித்தவளைக் காப்பாற்ற வேண்டி நட்டநடு இரவில் யாருக்கு என்ன காரணம் கூறுவது என்று தெரியாமல் காமரியைத் தேடி முன்பாலை நாடுகளில் சுற்றி அலைந்தேன். ஒரு கட்டத்தில் அவர்களால் கைதும் செய்யப்பட்டேன். நம் நாட்டின் மீது போர் தொடுக்கப் போவதாக என்னிடமே அவர்கள் சொல்ல, அங்கிருந்து எப்படியாவது தப்பித்து உங்களை எச்சரிக்க நான் முனைந்த போது தான் காமரியின் தோழி கனலியைக் கண்டேன்.

அவள் மூலம் காமரியையும் நம் பாண்டிய ஒற்றர்கள் பலரையும்

சிறை செய்திருக்கும் செய்தியை அறிந்தேன். அதன் பின்னர் கனலியைக் கொண்டு நம் காவல்படைத் தலைவன் பாதுகனுக்குத் தகவல் தெரிவித்தேன். போருக்கு அவர்கள் படையை நகர்த்திய போது எங்களையும் கைதியாய் அவர்களுடனேயே அழைத்து வந்தனர். நீங்கள் எப்படியும் போருக்குத் தயாராகியிருப்பீர்கள் என்று நான் கருதியிருந்த நேரத்தில்தான் நம் மதுரையைத் தீக்கிரையாக்கிய செய்தி என்னை எட்டியது. இனிமேலும் பொறுத்திருப்பது பிழையென்று கருதிய நாங்கள், எங்களுடன் பிடிபட்டிருந்த நம் ஒற்றர்கள் பலருடன் தப்பித்து, கிடைத்த குதிரையில் ஏறி போர்க்களத்திற்குள் புகுந்தோம். நம்மை அழிக்க நினைத்த எதிரிகளுக்குப் பாடம் புகட்டினோம்!" என்று சரியான உணர்ச்சி வேகத்தில் அளவான ஏற்ற இறக்கங்களுடன் காமரி பயிற்றுவித்திருந்ததைப் போலவே பேசினான் நாவகன்.

நாவகன் கூறிய கதையைக் கேட்டதும், 'என் மகன் மீது பிழையில்லை!' என்று பெருத்த நிம்மதியடைந்தார் பேரரசர். 'இளம் வயதின் கோளாறு காரணமாகவே நாவகன் இப்படியெல்லாம் செய்திருக்கிறான், காமரியின் அழகைப் பார்த்தால் நாவகன் அவள் மீது பித்தனாக திரிந்ததற்கான காரணமும் புரிகிறது. அதற்கான தண்டனையாக எதிரிகளிடம் சிக்கிக் கைதியாகி அல்லலுற்றும் விட்டான். அதனால் இனி மேல் நாவகனின் மீது கோபம் கொள்ளுவது சரியில்லை!' என்று நினைத்து அவனை மன்னித்து விட்டார். ஆனால் அரண்யாவிற்கு எமனாக காமரி பிறந்திருப்பதாக மகிந்தன் சொன்னது உண்மையாக இருந்தால்... நினைக்கவே நெஞ்சு பதறியது பேரரசருக்கு. போதாததற்கு அரண்மனை சோதிடரும் அதே கருத்தைத்தான் வலியுறுத்தி இருந்தார் என்றும் அவருக்கு நினைவு வர, காமரியை ஏற்றுக்கொள்வதில் அவருக்கு சிக்கல் ஏற்பட்டது.

பேரரசரின் மூளை செயல்படும் விதத்தை அறிந்து கொண்ட காமரி, சட்டென அவர் காலில் விழுந்து கதறினாள், "பேரரசே! என்னைப் பெற்றவர் செய்த பாவத்திற்கு ஏற்கனவே நான் பெரிதும் கஷ்டப்பட்டு விட்டேன். பிறக்கும் போதே அன்னையை இழந்து தாயற்ற பெண்ணாக வளர்ந்த எனக்கு, தந்தையின் அன்பும் கிடைக்கவில்லை. என்னை ஒரு ஆயுதமாகவே தான் பார்த்தார் என் தந்தை. ஆனால் யாரைக் கொல்வதற்கான ஆயுதமாக என்னைத் தயார் செய்தார் என்று சொல்லாமலேயே அவர் இறந்தும் போனார். என் தாய்மாமனான ஒளிநாட்டு அரசர் என்னைச் சந்திக்கவும் மறுத்துத் துரத்தி விட்டார். பெற்றோர், சுற்றம் என சகலத்தையும் இழந்து நிற்கும் அநாதைப் பெண்ணான எனக்கு வாழ்வில் இருக்கும் ஒரே பிடிப்பு என் காதலன்... உங்கள் மகனான நாவகன் மட்டுமே! அவரையும் என்னிடமிருந்து

பிரித்து விடாதீர்கள். உங்களின் அரண்மனையில் ஒரு பணிப்பெண்ணாக எனக்கு இடமளித்தால் கூடப் போதும். ஆனால் எங்களைப் பிரித்து விடாதீர்கள்!" என்று அழுத கண்களோடும் தொழுத கைகளோடும் கதறினாள் காமரி. பெருங்குரலெடுத்து அவள் அழ ஆரம்பிக்க, அவள் முகத்திற்கு நேராக எதுவும் சொல்ல முடியாமல் மௌனமானார் பேரரசர்.

'கிழட்டு நாயே! நான் இவ்வளவு கெஞ்சியும் கதறியும் கூட எதுவும் பேசாமலா இருக்கிறாய்? நாவகனை மணந்து கொண்டு சந்தோஷமாக பேரரசியாய் ஆட்சி செய் என்று வாழ்த்தினால் குறைந்தா போய் விடுவாய்? எல்லாம் அந்தச் சனியன் அரண்யாவிற்காகத் தானே. இரு இரு உன் கையாலேயே அந்த சின்னப் புத்திக்காரி அரண்யாவிற்கான மரண சாசனத்தை எழுத வைக்கிறேன்!' என்று உள்ளுக்குள் குமைந்த காமரி தன் கடைசி ஆயுதத்தை எடுத்தாள்.

பக்கத்தில் கிடந்த குறுவாளை பேரரசரின் கைகளில் திணித்து விட்டு, "வாழும் போது எந்த சுகத்தையும் அனுபவிக்காத அபாக்கியவாதியான நான் இறக்கும் போதாவது ஒரு பேரரசரின் கையால் சாகும் பேற்றைப் பெற எண்ணுகிறேன். என்னை உங்கள் கைகளாலேயே கொன்று விடுங்கள் பேரரசே!" என்று முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

காமரி இவ்வாறு சொன்னதும், "என் காமரி இல்லாத உலகில் எனக்கென்ன வேலை? என்னையும் கொன்று விடுங்கள் பேரரசே!" என்று நாவகனும் கூற, தன் கையில் திணிக்கப்பட்டிருந்த குறுவாளைத் தூக்கித் தூர வீசினார் பேரரசர்.

"இதுவரை சிந்திய ரத்தமே போதும்! இனி ஒரு சொட்டு ரத்தம் கூடக் கீழே வீழுவதை நான் அனுமதியேன். இந்தப் பெண்ணை, உன் மனதார நீ விரும்பினால் தாராளமாக அவளையே நீ மணந்து கொள்ளலாம். நானோ உன் அன்னையோ இதில் தலையிட மாட்டோம். அரண்யாவிற்கும் வீரனுக்கும் திருமணம் முடிந்த பிறகு உங்கள் திருமணமும் சிறப்பாக நடைபெறும்! இப்போது நீங்கள் சென்று இன்னும் மூன்று நாழிகைக்குள் நாம் அரண்மனையை நோக்கிப் புறப்பட வேண்டும் என்று உபசேனாதிபதியிடம் தெரிவித்து விடுங்கள்! நான் சற்று ஓய்வெடுத்து விட்டுப் புறப்படுகிறேன்." என்று உறுதியான குரலோடு பேரரசர் கூற, என்ன அரண்யாவிற்கும் வீரனுக்கும் திருமணமா? என்று நாவகனும் காமரியும் ஒரு சேர அதிர்ந்தனர். 'காமரி தன்னிடம் கூறியது எவ்வளவு சரியாக இருக்கிறது!' என்று நினைத்து நாவகனின் உள்ளம் கொதித்தது என்றால், 'சரியான துக்கிரி வாய்!

ஏதோ நாவகனை சமாளிக்கவென்று அன்று சொன்ன பொய் இப்போது மெய்யாகி விடும் போலிருக்கிறதே!' என்று வயிறெரிந்தாள் காமரி. ஆனால் இருவரும் முகத்தில் எவ்வித எதிர்மறையான உணர்ச்சிகளையும் காட்டாமல் அமைதியாக பேரரசரை வணங்கிய பின் உபசேனாதிபதியை நோக்கி விரைந்தனர்.

வழியில், "காமரி!" என்று நாவகன் அழைத்த போது, "இங்கே வேண்டாம்! பல கண்கள் நம்மையே நோட்டமிடுகின்றன." என்று சிரித்தபடியே சொன்னாள் காமரி. உண்மையில் அவள் கூறியதைப் போல பல வீரர்கள் அவர்கள் இருவரையும் பார்ப்பதும் பின் தங்களுக்குள் பேசிக்கொள்வதுமாகவே இருந்தனர். கடைசி நேரத்தில் இளவரசர் இந்தப் பேரழகுப் பெண்ணுடன் எப்படி சரியாக வந்தார்? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இருந்தாலும் யாராலும் அதை வாய் விட்டு கேட்க முடியவில்லை.

மனதினில் பல்வேரு சிந்தனைகளின் தாக்கத்தில் இருந்த பேரரசருக்கு காமரியின் மீது நம்பிக்கை வர மறுத்தது. ஆனால் நாவகன் - காமரி திருமணம் இனிதாக நடைபெற்றால் ஒருவேளை மகிந்தனின் கூற்று பொய்யாகும் வாய்ப்பிருப்பதாகவே அவர் எண்ணினார். 'அரண்யாவிற்கு எந்த ஆபத்தும் வராமல் தடுக்க வேண்டுமானால் இப்போதைக்கு காமரியுடன் சுமூகமாகச் செல்வதுதான் சரி. பாதுகனைப் பிடித்து விசாரித்தால் நாவகன் கூறுவதில் எவ்வளவு மெய் எவ்வளவு பொய் என்பது தெரிந்துவிடும். பாலை அரசர்களை விசாரிக்கும் போது மேலும் பல விபரங்கள் வெளிவரலாம். பார்க்கலாம்! காமரி பாம்பென்றால் அவளை என் கரங்களாலேயே கொன்று விடுவேன். அன்றிப் பழுதென்றால் பெற்றோரை இழந்த அவளை ஒரு மகள் போலவே பாதுகாப்பேன். ஆனால் உயிரே போனாலும் எதிரியின் மகளை அரியாசனம் ஏற்றி வைத்த பாவத்தை மட்டும் ஒரு போதும் செய்யேன்! காமரியை மணந்து நாவகன் சுகபோகமாக அரண்மனையில் வாழ்ந்து விட்டுப் போகட்டும். ஆனால் அரியாசனம் ஏறி நாவலந்தீவை ஒருபோதும் ஆள விடேன்!' என்று மனதினுள்ளே சங்கல்பம் எடுத்த பின்னரே பேரரசரால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

குறிப்பிட்ட நேரத்திற்குள் பல்லக்கு ஒன்று வரவழைக்கப்பட்டு பேரரசரை ஏற்றிக்கொண்டது. காமரியை உடன் வருமாறு அவர் அழைக்க, மரியாதை கலந்த புன்னகையோடு அவள் மறுத்து விட்டாள். குதிரையில் நாவகனோடு வருவதாக அவள் குறிப்பாகச் சொல்ல, மக்களின் முன்பு நாவகனோடு ஒன்றாக வந்து தன் இடத்தை உறுதி செய்துகொள்ள காமரி எண்ணுகிறாள் என்று பேரரசருக்கு நன்றாகப்

புரிந்தது. அதனால் அவரும் சரியென்று சொல்ல, நாவகனும் காமரியும் எஞ்சிய படையின் முன் குதிரையில் கம்பீரமாக செல்ல, அவர்களைத் தொடர்ந்து அரசரின் பல்லக்கும் அதை தொடர்ந்து மற்ற உபசேனாதிபதிகளும் சென்றனர். எல்லோருக்கும் பின்னால், கடைசியில் பெருங்காயமுற்றிருந்தவர்கள் வண்டிகளில் வந்தனர்.

மதுரையின் எல்லையை அடைந்ததும் போரில் வென்ற மகிழ்ச்சி அப்படியே குன்றிப் போனது பல வீரர்களுக்கு. எங்கு பார்த்தாலும் சிரிப்பும் கும்மாளமும் சந்தோஷக் கூச்சல்களுமாக இருக்கும் மதுரைக்கு தனக்கென தனியொரு உயிர்ப்பு உண்டு. ஆனால் முந்தைய இரவில் நடந்த கள்ளப்போரின் காரணமாகக் கருகிப் போன இல்லங்களும் புன்னகையைத் தொலைத்த முகங்களுமே வீதிகளில் உலா வந்தன. போரில் வெற்றி பெற்ற வீரர்களை ஜெயகோஷமிட்டு வரவேற்கும் சம்பிரதாயத்திற்காக மட்டுமே மக்கள் அரச வீதியின் இருமருங்கிலும் குழுமி இருக்கிறார்கள் என்பதை சிறுபிள்ளை கூட கண்டுகொள்ளும். அதனால் பெரிதான ஆரவாரங்கள் இல்லாமலேயே பேரரசரின் சிறு படை அரண்மனையை நோக்கிச் சென்றது.

பேரரசரின் படை அணிவகுப்பைப் பார்வையிட்ட மக்களுக்கு நாவகன் தாய்நாட்டிற்குத் திரும்பியது மிக்க மகிழ்ச்சியே. அதிலும் இதுவரை கதைகளில் கூடக் கேட்டிராத அழகோடு தேவதையை விடப் பன்மடங்கு எழில் வாய்ந்த அதிரூப சுந்தரி ஒருத்தி அவன் பக்கத்தில் உரிமையோடு வருவதைக் கண்டு பலர் முகங்களில் புன்னகை தோன்றியது. இளவரசனின் திருமணம் என்றால் சும்மாவா? அதுவும் எப்பேர்ப்பட்ட பேரழகியோடு? என்று பலவிதமாக நினைத்து மக்கள் காமரியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பார்வையில் இருந்த மெச்சுதலையும் லேசான பொறாமையையும் கண்ட நாவகனுக்கு கர்வமாக இருந்தது.

காமரியின் கண்கள் அவள் விளைவித்த சேதாரத்தை முழுதாக அளவெடுத்துக் கொண்டே வந்தது. எப்போதும் முக்காடிட்டு முகத்தை மறைத்துக் கொண்டு செல்பவள் முதன்முறையாகத் தன் முழு முகமும் வெளிப்படுமாறு எழிலோவியமாக நாவகனின் பக்கத்தில் பவனி வந்தாள். மக்களின் முகங்களில் இருந்த ஆராய்ச்சி அவளுக்கு புதிதான ஒரு கிறக்கத்தைக் கொடுத்தது. இனி என் அடியின் கீழ் வாழப் போகிறவர்கள் நீங்கள் என்ற செய்தியை அவள் மக்களுக்குச் சொல்லாமல் சொன்னாள். ஆனால் அதை மக்கள் புரிந்து கொண்டனரா என்ற கேள்விக்கு விடையில்லை!

கோட்டைக் கதவுகளைக் கடந்து அரண்மனை வாசலை

அடைந்தவர்களை பேரரசி அயினி அம்மை ஆரத்தியோடு வரவேற்றார். பேரரசரின் நெற்றியில் திலகமிட்டு அவரை தாங்கிக் கொண்டவர், அவர் காயத்தின் ஆழத்தைப் பார்த்ததும் இரு துளி நீரைச் சிந்தினார். "அழாதே! சிறிய காயம் தான்" என்று பேரரசர் மெல்ல அயினி அம்மையிடம் தெரிவிக்க, முகத்தை இயல்பாக்கிக் கொண்டு புன்முறுவல் பூத்தார் பேரரசி. பின், பேரரசரை அழைத்துக் கொண்டு அந்தப்புரத்திற்குச் செல்லுமாறு மெய்க்காவல் படையினரைப் பணித்தார்.

பேரரசர் அங்கிருந்து சென்றதும் நாவகனும் காமரியும் அவர் முன்பு வந்து நின்றனர். பேரரசிக்கு காமரியை நாவகன் விரும்பும் செய்தி ஏற்கனவே ஒற்றன் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் முகத்தில் எவ்வித அதிர்ச்சியும் காட்டாது, "என்னை உன் அன்னை போலவே எண்ணிக்கொள்ளம்மா!" என்று சிரித்த முகமாகவே அவளை வரவேற்றார் அயினி அம்மை.

காற்றில் ஆடும் வெற்றிலைக் கொடி போல அழகாக சரிந்து அவர் பாதத்தை வணங்கினாள் காமரி. "நீங்களும் என்னை உங்கள் மகளாகவே பாவித்தால் நான் புண்ணியம் பல செய்தவளாவேன் அத்தை... மன்னிக்கவும் பேரரசியாரே!" என்று வேண்டுமென்றே தவறாக அத்தை என்று சொன்னதைப் போல நாக்கை கடித்துக் கொண்டாள்.

"உரிமையோடு உறவைச் சொல்லி அழைப்பதற்கு மன்னிப்பெதற்கு மகளே?" என்று காமரியை அணைத்துக் கொண்டார் பேரரசி. "உனக்கு இளவரசியின் அந்தப்புரத்திலேயே அறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதம்மா. உங்கள் திருமணம் முடிந்ததும், கோட்டைக்குள்ளே உங்களுக்கென்று தனி மாளிகையை கட்டிக்கொள்ளுங்கள். அதுவரையில் அந்தப்புரத்திலேயே நீ தங்கலாம். உன் தோழி... கனலி என்று சொன்னாள், அவளும் அங்கு தான் இருக்கிறாள்." என்று சொல்லிவிட்டு நாவகனை ஒரு பார்வை பார்த்து விட்டு அயினி அம்மை தன் அந்தப்புரத்தை நோக்கி விரைந்தார்.

"அம்மா..." என்று நாவகன் அழைத்ததை அவர் காதில் வாங்கியது போலவே தெரியவில்லை. முகம் கறுக்கத் திரும்பித்திரும்பிப் பார்த்தவனுக்கு சுற்றி இருப்பவர்கள் அவனை சாதாரணமாகப் பார்த்தாலும் தன்னை அவர்கள் உதாசீனமாகப் பார்ப்பது போலவே தோன்றியது. அவன் மனதில் மண்டியிருந்த வெறுப்பு மேலும் வளரத் துவங்கியது.

"காமரி..." என்று ஏதோ பேசப்போனவனை கண்ணாலேயே

நிறுத்தினாள் காமரி. "இளவரசே! பேரரசி உங்களை ஓய்வெடுக்கச் சொன்னார்கள். வாருங்கள் தேவி! உங்களறைக்குச் செல்வோம்!" என்று சேடிப் பெண்கள் தெரிவிக்க, அசரடிக்கும் ஒரு புன்னகையைச் சிந்தியவள், "பிறகு பார்க்கலாம் இளவரசே!" என்று மிழற்றி விட்டு அரண்மனையின் உள்ளே கவனமாக வலது காலை தவிர்த்து விட்டு இடது காலை எடுத்து வைத்துச் சென்றாள்.

காமரி அரண்மனையின் உள்ளே நுழைந்த மறுநிமிடம் பட்டத்து யானை பெரும் பிளிறலோடு ஆக்ரோஷமாக எழுந்தது. அதனைத் தொடர்ந்து பல மிருகங்களும் கூக்குரல் எழுப்பத் துவங்கின. மனிதரின் கண்களுக்குப் புலப்படாத பல சூட்சம சக்திகள் மிருகங்களின் கண்களுக்குப் புலப்பட்டதே அதற்கான காரணம். ஆனால் மற்றவரை எச்சரிக்கை செய்யும் வகை தெரியாமல் அவைத் திண்டாடின.

மாக்களின் சத்தத்தைக் கேட்டவர்களுக்கு நெஞ்சில் இனம் புரியாத கிலி உண்டானது. ஆனால் காமரியோ சற்றும் சளைக்காமல் குறுநகை புரிந்த வண்ணம் அரண்மனையை அளவெடுத்தபடியே சேடிப் பெண்களுடன் அவளறைக்குச் சென்றாள்.

## அத்தியாயம் 6

அந்தப்புரத்தில் பேரரசரின் காயத்திற்கு மருந்திட்டுக்கொண்டிருந்தார் அயினி அம்மை. பேரரசர் வீய பாண்டியனின் ஆட்சியில் இதுவரை நாவலந்தீவில் சிறுசிறு சண்டைகள் வந்திருக்கின்றனவே தவிர போரென்று எதுவுமே நிகழ்ந்திருக்கவில்லை. முதன்முறையாக போர்க்களம் புகுந்து முதுகில் காயம் பட்டுக் கிடக்கும் தன் மணாளனைப் பார்த்துக் கண்கள் தானாக நீர்ப் பெருக்க, மனதின் வார்த்தைகள் அவர் உதடுகளிலேயே உறைந்தன.

அயினி அம்மையின் கண்ணீர் பேரரசரின் முதுகை நனைத்ததும் வலியில் விழி மூடி இருந்தவர் பதறி எழுந்தார். "என்ன இது கண்ணே? ஒரு சிறு புண்ணிற்குப் போய் இவ்வளவா வருந்துவாய்?" என்று பேரரசியின் தலைகோதிக் கேட்டார்.

"காயம் முதுகில் அல்லவா பட்டிருக்கின்றது அரசே? இதுவே எதிரியின் தவறான போர் முறையை எடுத்துரைக்கின்றதே? அது மட்டுமின்றி ரணதீரன் அண்ணனை நினைத்தும் என் தோழி பொன்பாவையின் நிலையைக் குறித்தும் என் மனதின் துயர் அதிகமாகிறது." என்று மென்விசும்பலின் ஊடே பேரரசி தெரிவித்தார். பொன்பாவை, சேனாதிபதி ரணதீரனின் காதல் மனைவி; வீரன்

ஆரானின் தாயார்; பேரரசியின் உற்ற தோழி.

"கவலை வேண்டாம் கண்ணே! பாவையை பத்திரமாக நம் வீரனும் ஆரனும் பார்த்துக்கொள்ளுவார்கள்." என்று தேற்றினார்.

"எனக்கென்னவோ மனம் அமைதியுற மறுக்கிறது அரசே! அரண்யாவைக் காண வேண்டும் போல் இருக்கின்றது. அத்துடன் கமலநாதரிடம் எனக்குச் சில விஷயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கின்றது." என்று யோசனையோடு கூறினார் பேரரசி.

"அரண்யாவை உடனே தருவிக்க வேண்டும் என்று தான் நான் முதலில் நினைத்தேன். ஆனால் இந்தப் பெண் காமரி இங்கே இருக்கும் போது நம் மகளை இங்கு வரச் சொல்லி அழைப்பது எனக்கு அவ்வளவு உகந்ததாக இல்லை கண்மணி. எதற்கும் நம் அரண்மனைச் சோதிடரையும் கமலநாதரையும் ஒரு வார்த்தை கேட்ட பிறகு அரண்யாவை இங்கே வரச் சொல்லுவோம். அவள் கல்விக்குத் தடை போடுவது எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதனால் அரண்யா இன்னும் சில காலம் மேருவிலேயே இருக்கட்டும்." என்று சொன்னவர், சிறு இடைவெளி விட்டு, " ஆனால் நான் அதிக காலம் உயிரோடு இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் இல்லை. ஆதலால்தான் நம் மக்களை ஒரு திறமையான ஆட்சியாளரின் கையில் என் கண் முன்னேயே ஒப்படைக்க விரும்புகிறேன்." என்றார்.

"உங்கள் மனம் நான் அறியாததா அரசே? என் காலமும் அதிக நாட்கள் இல்லை என்பதை நானும் உணர்ந்தே இருக்கிறேன். அரண்யா நம் வம்சத்தின் பெயரை விளங்க வைப்பாள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வீரனும் அவளுக்கு உற்ற துணையாக இருப்பான். ஆனால் என் மனதில் வேறொரு ஐயம் உள்ளது!" என்று தயங்கினார் அயினி அம்மை.

"என்னிடம் கேட்பதற்கு என்ன தயக்கம் அரசியாரே?" என்று அயினி அம்மையின் தலையை அன்போடு தடவிக் கொடுத்தார் பேரரசர்.

"நமக்கொரு பிரச்சனை என்றால் எப்போதும் கமலநாதர் முதல் ஆளாக வந்து துணை நிற்பாரே... ஆனால் இப்போது இவ்வளவு தீங்கு நேர்ந்த போதும் அவரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லையே, ஏன்?" என்று கேட்டார் பேரரசி.

"எனக்கும் அதே கேள்வி தான் அயினி. என்ன தான் இரு அரசர்களுக்கிடையில் நடக்கும் போரில் சித்தர்களான நம் குருதேவர்கள் பங்கெடுப்பது மரபில்லை என்றாலும், நம் தலைநகர் எரிந்த போதும், போர் முடிந்த பின்னரும் அவர் இன்னும் நம்மை வந்து பார்க்காததன்

நோக்கம் என்னவாக இருக்கும்?" என்று புருவங்கள் முடிச்சிட சிந்திக்க ஆரம்பித்தார் பேரரசர்.

பேரரசருக்கும் பேரரசிக்கும் மட்டும் இந்தக் கேள்வி மனதில் இல்லை. அந்நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும் இதே கேள்வியே இருந்தது.

'கமலநாதர் எங்கே?' என்ற கேள்விக்குப் பதில் தெரிந்தவளோ இளவரசியின் அந்தப்புரத்தில் ஒய்யாரமாக பஞ்சணையில் சாய்ந்து கொண்டு அவள் நிகழ்த்திய போரை அசைபோட்டுக் கொண்டிருந்தாள். பக்கத்தில் இருந்த கனலியோ அவளைத் தொந்தரவு செய்யாது அவள் மனம் போகும் போக்கை அறிய முயற்சித்துக் கொண்டிருந்தாள். அரண்மனைச் சோதிடர், மரணத்தைத் தழுவிய செய்தியை யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டாள் காமரி. அதற்குத் தகுந்த காரணமும் அவளுக்கிருந்தது.

காமரி, போருக்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்த போது கமலநாதரை பெருவளநாட்டில் இருந்து அப்புறப்படுத்தும் வழியையே முதலில் சிந்தித்தாள். அவள் தந்தை மகிந்தனின் துர்போதனைகளில் இருந்தும் சில குறளிகளின் வழிகாட்டுதலாலும் கமலநாதரின் பலவீனத்தை அவள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தாள். அதைப் பயன்படுத்தினால் கமலநாதர் வெள்ளி மலையை விட்டு வெளியேறுவாரா என்பதை சோதனை செய்வதற்காகத்தான் மேரு மலையில் இருந்து இந்திர ரகசியப் போட்டி முடிந்து வெள்ளி மலைக்கு சென்றுகொண்டிருந்தவருக்கு யட்சிணி மூலம் தூதனுப்பினாள் காமரி. தூதென்றால் வார்த்தைகளோ அன்றி வாக்கியங்களோ அல்ல. நவிரன் கையில் கமலநாதர் முன்பு கட்டிய ரட்சையை அவர் கரங்களிலேயே யட்சிணியின் மூலமாகச் சேர்ப்பித்திருந்தாள்.

நாவலந்தீவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் சக்திகளில் நவிரனுக்கு முக்கியப் பங்கு இருப்பதாகவே கமலநாதர் உறுதியாக நம்பினார். அதனால் தான் நவிரனது உயிரை மிகுந்த சிரமங்களுக்கு இடையே காத்தார்; காமரியின் கண்களிலிருந்து தற்சமயத்திற்கு நவிரனை மறைத்து வைக்கவும் குவேணியிடமும் இரும்பனிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

கமலநாதர் வெள்ளிமலையை அடைவதற்குள்ளாகவே நவிரன் காமரியிடம் சிக்கி விட்டான் என்ற செய்தியைச் சொல்லாமல் சொன்னது அந்த ரட்சை. கண்கள் மூடி தியானித்தவரால் நவிரனின் தற்போதைய இருப்பிடத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ சரியில்லை என்பதை உடனே புரிந்துகொண்டவருக்கு வேறு சில

காரணங்களினால் கூட அவன் இருப்பிடம் தெரியாதிருக்கலாம் என்கிற யோசனையே வரவில்லை. தன் சக்திகளைக் கட்டுப்படுத்தும் சக்தி எங்கிருக்கிறது என்ற மமதையில் இருந்தவரின் சிந்தை வேலை செய்யவேயில்லை.

நவிரனின் இருப்பிடத்தை மறைப்பதற்காக குவேணி அமைத்திருந்த பாதுகாப்பு வளையங்களோடு காமரியும் பல வகையான மந்திரக் காப்புகளை போட்டிருந்தாள். அதுமட்டுமின்றி கமலநாதரின் தவத்தின் வலிமையையும் அவர் உணராத வகையில் அரை நாழிகைக்குக் கட்டுப்படுத்தி இருந்தாள். அதனாலேயே கமலநாதரால் நவிரனின் தற்போதைய வசிப்பிடத்தை அறியமுடியாமல் போனது.

சற்று நேரம் கழித்து முயன்றிருந்தால் ஒருவேளை கமலநாதரால் நவிரனைக் கண்டுபிடித்திருக்க இயலும். ஆனால் ஐம்புலன்களையும் அடக்கிய அந்த மாபெரும் ஞானி மிக அவசியமான ஒரு நேரத்தில் அமைதியை மறந்தார். சட்டென துகிரனை அழைத்தவர் தான் போகும் காரியத்தை பற்றிக் கூறினார். மற்றவருக்கு சந்தேகம் வாரா வண்ணம் வெள்ளிமலையை நோக்கிப் பயணப்படும்படியும், வீரனுக்கு ஒத்தாசையாக இருக்கும்படியும் அவனிடம் சொல்லிவிட்டு அக்கணமே குதிரையைத் திருப்பினார்.

நவிரன் சென்றிருக்கக் கூடும் என்று கமலநாதர் யூகித்த பாதை வழியே அவர் சென்று கொண்டிருந்த போது திடீரென குவேணியின் குரல் கேட்டது. நவிரனை குவேணியும் இரும்பனும் பத்திரமாக அழைத்துச் செல்வதை பார்த்து மனநிம்மதி கொண்டவர், அவர்களிடத்தில் சென்று நவிரனுக்கு இருக்கும் ஆபத்தைச் சொல்லி, அவனது தாயத்தை அவர்களிடம் தந்து அவனுக்கு அணிவிக்கச் சொன்னார். விரைவில் அவர்களைச் சந்தித்து அடுத்த கட்ட திட்டம் பற்றிப் பேசுவதாகச் சொல்லிவிட்டு வெள்ளிமலையை நோக்கி மீண்டும் பயணப்படலானார்.

தன்னை எதற்காக காமரி அங்கிருந்து அப்புறப்படுத்தினாள் என்று யோசித்துக் கொண்டே வந்தவரின் வழியில் திடீரென ஏற்பட்ட பள்ளத்தில் குதிரையுடன் தலைகுப்பற விழுந்து விட்டார். நொடியில் அவர் சுதாரிப்பதற்குள் பள்ளம் வேகவேகமாகத் தானாக மூடிக்கொள்ள ஆரம்பித்தது. தன் தவ வலிமையை ஒன்று திரட்டித் தன் மீதும் தன் குதிரை மீதும் மண் விழாதவாறு அவர் காத்துக் கொண்ட நேரம், ஏழு ஓநாய்களைக் கொண்ட ஒரு ஓநாய்க் கூட்டம் பள்ளத்தின் அருகில் வந்தது. கமலநாதரைப் பார்த்த அவைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பள்ளத்தில் குதித்தது.

அவற்றின் நிலையில்லாத கண்களை வைத்து, ஓநாய்களை யட்சிணிகள் கட்டுப்படுத்துவதை உணர்ந்த கமலநாதர், தன் கவனத்தை ஓநாய்களின் பக்கம் திருப்ப, கமலநாதரால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மண் சரிவு மறுபடியும் துவங்கியது. தன்னை உயிருடன் புதைக்கும் நோக்கத்தோடே காமரியின் யட்சினைகள் செயல்படுகின்றன என்பதை அந்த நொடியில் உணர்ந்து கொண்டார் கமலநாதர். ஓநாய்கள் சுற்றிலும் நெருங்க, பள்ளம் வேகமாக மூடிக் கொண்டு வர, ஒரே ஒரு புன்னகையைச் சிந்திய கமலநாதர் மந்திரங்களை வேகமாக உச்சரிக்கத் துவங்க, பல்லாயிரம் அரூபங்களின் கரங்கள் அவர் வாயைப் பொத்தின. இருப்பினும் கமலநாதரைத் தடுக்கும் சக்தி அவற்றிற்கு இல்லையாதலால் அங்கிருந்த சூட்சம சக்திகள் அவரிடத்தில் உயிர்ப்பிச்சை வாங்கிக் கொண்டு ஓடி ஒளிந்தன.

தங்களைப் பீடித்திருந்த யட்சிணிகள் நீங்கியதும் தன்னிலைக்குத் திரும்பிய ஓநாய்கள், தாங்கள் எப்படி இங்கே வந்தோம் என்பது புரியாமல் குழம்பின. பைபீலவாதம் அறிந்த கமலநாதர் அவற்றுக்கு அவைகளின் மொழியிலேயே உகந்த பதிலளித்த பின் தன் சக்தியைப் பயன்படுத்தி அந்த விலங்குகளைக் காப்பாற்றினார். பின்னர் தன் குதிரையோடுத் தானும் தரைக்குத் திரும்பினார். பச்சிலைகளின் உதவியால் காயங்களை ஆற்றிக் கொண்டாலும், உடலில் புதிதாக ஏற்பட்டிருந்த தழும்புகள் பிறர் கண்களுக்கு நன்றாகவே புலப்பட்டது. கமலநாதரின் மேனியில் புதிய பல காயங்களைக் கண்ட வீரனும் பெரும் மனக்குழப்பத்திற்கு ஆளாகி, இந்திர ரகசியத்தை கையகப்படுத்துவதில் கோட்டைவிட்டான்.

கமலநாதர் வெள்ளி மலையை அடைந்ததும் பேரரசருக்குப் போர் பற்றிய எச்சரிக்கையை மறுபடியும் அனுப்பியதைத் தெரிந்து கொண்ட காமரி, இனி கமலநாதரை விட்டு வைத்தால் தனக்கு ஆபத்து என்பதை நன்கறிந்து கொண்டாள். இந்திர ரகசியத்தையும் வீரனையும் அடைவதற்கு முதல் தடையாக இருப்பவரை அப்புறப்படுத்த அவரது அடி மடியிலேயே கைவைக்க முடிவு செய்தாள். அவள் மூளையில் குரூரமான திட்டம் ஒன்றும் உருவானது.

கருங்குன்று என்றழைக்கப்பட்ட மலையில் குறவர் இனத்தில் பிறந்தவர் கமலநாதர். இயல்பிலேயே படிப்பும் பாண்டித்தியமும் சிறப்பாகப் பெற்றிருந்தவரை மேரு மலைக்கு கல்வி பயில அவர் பெற்றோர் அனுப்பி வைத்தனர். ஐம்பூதனாரிடம் சிறப்பாக கல்வி பயின்றார் கமலநாதர். கல்வியில் சிறந்து ஞான நிலையை அடைந்ததும் உலக வாழ்க்கையின் மீது பற்றற்றுப் போனதால் ஆசீவக முறைப்படி

தன் வாழ்நாள் முழுதையும் கல்விக்காக அர்ப்பணித்தார் கமலநாதர். ஐம்பூதனார் கமலநாதரை மேரு மலையில் ஆசிரியப் பணியைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாலும், வெள்ளி மலையில் பணியைத் துவங்கினார் கமலநாதர். சிறந்த கல்வியாளர்கள் இருக்கும் மேரு மலையில் பத்தோடு பதினொன்றாக இருப்பதை விட, மிகச்சிறந்த கல்வியாளர்கள் யாரும் இல்லாத வெள்ளி மலையிலேயே தனக்கு அதிகத் தேவையிருப்பதாக கமலநாதர் காரணம் கூறினாலும், அவர் சொந்த ஊர் வெள்ளிமலைக்கு அருகில் இருப்பதே உண்மைக் காரணம் என்பதை ஐம்பூதனார் அறிந்திருந்தார். அதனால் சிரித்தபடியே கமலநாதரை வழியனுப்பி வைத்தார். உலகப்பற்றை அறுத்திருந்தாலும், இன்னமும் அவரின் சொந்த ஊர்ப்பற்றை அவரால் மொத்தமாக அறுக்க முடியவில்லை. அவரின் சகோதர சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள், பெயரன் பெயர்த்திகள் என்று இன்றும் அங்கு நலமோடு வாழ்கிறார்கள். அவர்களை அவ்வப்போது சந்திப்பது கமலநாதரின் வழக்கங்களில் ஒன்று.

ஐம்பூதனாரைப் போன்று மிகச் சிறந்த அறிவாளியாக கமலநாதர் இருந்தாலும், அவரைப் போல விதி வழியே அனைத்தையும் விட கமலநாதரால் என்றுமே முடிந்ததில்லை. வெளியில் விதிப்படி தான் எல்லாம் நடக்க வேண்டும் என்று கூறினாலும், அவர் உள்மனம் என்றுமே விதியை வெல்லக் கூடிய மார்க்கம் இருக்குமா என்பதை எப்போதும் சிந்தித்துக் கொண்டேயிருக்கும். பந்தம் பாசம் என்பது தான் கமலநாதரின் ஒரே பலவீனம் என்பதைத் தெரிந்து கொண்ட காமரி, முதலில் நவிரனின் உயிரை பகடைக்காயாக வைத்து கமலநாதரை சோதனை செய்தாள். அவரும் அவள் எண்ணப்படியே நடந்துகொள்ள, கமலநாதரை முழுதாக அழிக்கும் திட்டத்தை வகுப்பதற்கு அவளுக்கு எளிதாக இருந்தது.

என்றும் போல் அன்றும் அதிகாலையில் வெள்ளி முளைப்பதற்குள்ளாகவே எழுந்தவர், மனதின் சஞ்சலத்தை குறைக்கும் நோக்கில் ஈசனை நினைத்து தியானத்தில் ஈடுபட்டார். இருகைகளையும் கூப்பி, பத்மாசனமிட்டு அமர்ந்து ஈசனின் திருநாமத்தை அவர் உச்சரிக்க, அவரின் மடியில் ஏதோ விழுந்ததை அமைதியின்றித் தவித்த அவர் மனம் அவருக்கு உணர்த்தியது. கண் திறந்து பார்த்தவரின் உயிர் ஒரு வினாடி அவர் உடலை விட்டு வெளியேறிப் பின் திரும்பி வந்தது. காரணம், விழுந்தது ஏதோ சருகோ கல்லோ அன்று. அவர் குடும்பத்தில் புதிதாக இணைந்திருக்கும் ஒரு வயதே நிரம்பிய பிஞ்சுக் குழந்தையின் சதைப்பிண்டமே அது!

சென்ற ஆண்டு அந்தக் குழந்தை பிறந்த போது மற்றவரின் மகிழ்ச்சியை மனநிறைவோடு பார்த்திருந்தவருக்கு இப்போது அவர்களின் நிலையை எண்ணிப் பார்க்கக் கூடத் துணிவில்லை. இதில் ஏதோ சதி இருக்கிறது என்பதை உணர்ந்தவர் குழந்தையின் உடலைப் பரிசோதிக்க, அதில் பல பற்களின் தடம் இருப்பதைப் பார்த்தார். இன்னும் உன்னிப்பாக கவனிக்க, பலர் சேர்ந்து குழந்தையை உயிருடன் புசித்ததைப் போன்ற தடயங்களைப் பார்க்க விக்கித்து அப்படியே சிலையெனச் சமைந்துவிட்டார்.

காமரி என்ன செய்திருக்கிறாள் என்பது புரிய, ஆங்காரத்தோடு எழுந்தவர் குழந்தையின் சடலத்தை எடுத்துக் கொண்டு லகிமம் சித்தியைப் பயன்படுத்தி விரைவாக கருங்குன்றிற்குச் சென்றார்.

எப்போதும் மக்கள் நடமாட்டம் இருக்கும் வீதிகள் இப்போது ஆளரவமின்றி ஓய்ந்து போயிருந்தது. அங்கு நிலவிய நிசப்தமே இங்கு ஏதோ அமானுஷ்யமாக நடந்திருப்பதைத் தெரிவித்தது. காற்றில் வீசிய ரத்த வாடையும் அழுகிய பிணநாற்றமும் குடலைப் பிரட்ட, சாதாரண மனிதக் கண்களுக்குப் புலப்படாத பலவகை அரூப சக்திகள் அங்கே நீக்கமற நிறைந்திருப்பதை கமலநாதர் கண்டு கொண்டார். ஆனால் அவை ஏன் அமைதியாக நிற்கின்றன என்பது புரியாமல் அவர் தாமதித்த ஒரு நொடியில், திமுதிமுவென அந்தச் சிறு மலைக்கிராமத்தின் மொத்த மக்களும் தலைதெறிக்க ஓடி வந்தனர், கமலநாதரைக் கொன்று தின்பதற்காக!

ஆம்! கமலநாதரை வீழ்த்தும் முயற்சியில் காமரி நரமாமிசம் புசிக்கும் பல ஏவல் கின்னரர்களை விடுவித்திருந்தாள். பெறுதற்கரிய சக்திகளைப் பெற்றிருக்கும் பல கோரத் தவ யோகிகள் கூட இந்தவகை சக்திகளைத் தன் பயன்பாட்டிற்காக உபயோகிக்கத் துணியமாட்டார்கள். சிறு இடைவெளி கிடைத்தாலும் ஏவியவரையே கொன்று தின்னும் இவ்வகை பைசாசங்கள் கொடூரத்தின் உச்சம் என்பது மட்டுமல்ல, இவற்றை சரியாகப் பிரயோகிக்கும் முறையை அறிவதற்கே பல்லாண்டுகள் கடுந்தவம் புரிய வேண்டும் என்பதும் தான் இத்தகைய கின்னரர்களை அதிசக்தி வாய்ந்த மாந்த்ரீகர்கள் கூட சீண்டாதிருப்பதற்கான காரணங்கள். அப்பேற்பட்ட கின்னரர்களைக் கைக்கொண்டு தன் ஊர் மக்களின் மீது காமரி ஏவி இருக்கிறாளென்றால், தன்னை வரவழைக்கும் நோக்கோடு இது திட்டமிட்டுத் தெரிந்தே செய்தது என்பதைக் கமலநாதர் புரிந்து கொண்டார். சிறு பெண்ணாக இருந்தாலும் அவளது சக்தி சிறியதல்ல என்றும் தெரிந்து கொண்டார்.

தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்த குழந்தையின் சடலத்திற்குள் ஒரு கின்னரன் புகுந்து கொண்டு வெளியே வரத் துடிக்க, மற்ற யட்சிணிகளைப் போல சுலபமாக இவற்றை அடக்க முடியாது என்பது தெரியத் தன் தவத்தின் வலிமையை எல்லாம் ஒன்று திரட்டித் தனியாளாகப் போராடத் தயாரானார் அந்த வீர சித்தர்.

வருபவர்கள் பலரின் முகங்களும் கோரமாக சிதைக்கப் பட்டு ஆங்காங்கே சதைகள் எலும்புகளை விட்டுப் பிய்ந்து தொங்கின. சிலருக்கு கண்கள் இருந்த இடத்தில் தற்போது குழிகள் மட்டுமே இருந்தன. ஆனாலும் அவர்களும் கமலநாதரை நோக்கி விரைவாகவே மற்றவர்களோடு வந்தனர். தலைமுடிகளும் பற்களும் கொட்டி, உடலின் பல்வேறு இடங்களில் இருந்தும் வழிந்து கொண்டிருந்த தங்களது குருதியை தாங்களே நக்கிக் கொண்டு பலர் ஓடி வந்தனர். இன்னும் சிலரோ, ஓடி வரும் போது தங்களுக்குள்ளாகவே அதிக சதைப்பற்று இருக்கும் நபர்களைத் தின்னத் துவங்கினர். இவற்றையெல்லாம் பார்த்த கமலநாதருக்கு இதயம் வெடிக்கும் அளவிற்கு வலித்தது.

தன்னை எதிர்த்து வருவது தன் உறவுகளும் சிறுவயது நண்பர்களும் அவர்கள் குடும்பமும் என்பதை அறிந்து மிகுந்த துயர் கொண்டார் கமலநாதர். ஏற்கனவே இறந்திருந்த அனைவரும் கின்னரர்களின் கைங்கரியத்தால் மட்டுமே இப்போது நடமாடுகின்றனர் என்பதும் இவர்களில் ஒருவரை விட்டால் கூட, அவர்கள் அப்படியே காண்பவர்களை எல்லாம் தங்களுக்கு உணவாக்கிக்கொள்ளுவார்கள் என்பதும் கமலநாதருக்கு நன்றாகப் புரிந்தது. அதனால் எதிர் வரும் ஒரு சடலத்தைக் கூட விடாமல் அழிக்க வேண்டிய அவசியத்தையும் அவர் அறிந்து கொண்டார்.

கண் மூடி இணைப்பு மந்திரத்தை உச்சரித்தவர் தன்னை நோக்கி வரும் கின்னரர்களை அவர்கள் தங்கியிருந்த உடல்களோடே காலத்திற்கும் பிணைத்தார். பின் அக்கினி தேவனை மனதாரத் துதித்தவர், தன்னை நாற்புறமும் சூழ்ந்திருந்த உடல்களைச் சுட்டுப் பொசுக்கினார். ஏற்கனவே இறந்து போயிருந்த உடல்கள்லாதலால் அவைகளில் தங்கியிருந்த கின்னரர்களுக்கு மட்டுமே காந்தியது. தீயின் அளவு அதிகமாக அதிகமாக மெல்ல மெல்ல அனைவரும் தீ பிடித்து எரிய ஆரம்பித்தனர். கின்னரர்களின் மரண ஓலம் கேட்பவரின் மூளையைக் கீறி உதிரத்தை காதுகளின் வழியாக வெளியேற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தது. அதனால் அவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, தன் காதுகளைக் கட்டினார் கமலநாதர்.

சூழ இருந்த அத்தனை உடல்களையும் அவர் அழித்த பின்

மேலே விழிகளைச் சுழற்ற, அங்கிருந்த அரூப சக்திகள் அத்தனையும் காணாமல் போயிருந்தது. கின்னரர்களுடன் தன் போர் முடிந்ததை உறுதி செய்துகொண்டவருக்கு, அதன் பின்னர் இழப்பின் வலி வீரியம் கொள்ள, தரையில் அப்படியே அமர்ந்து இறந்தவர்களின் ஆன்மாக்கள் அனைத்தும் வீடு பேறடைய மனமார வேண்டிக் கொண்டிருந்தார். இழந்த தன் கிராமத்தை நினைத்து கமலநாதரின் கவனம் சிதறிய அந்த ஒரு நொடியில் எங்கிருந்தோ வந்த ஒரு அம்பு அவரது இடது தோள்பட்டையில் இறங்கியது.

தன்னைத் தாக்கிய அம்பில் விஷம் கலந்திருப்பதை உணர்ந்ததும் தன் உயிர்ப்பறவை பறக்கப் போகிறது என்பதைக் கண்டுகொண்டவர் தன் ஆன்ம பலத்தையும் தவவலிமையையும் ஒன்று திரட்டி ஒரு தேன்சிட்டாக்கினார்.

"தேவை ஏற்படும் போது தேவைப் படுபவருக்கு உதவி செய்!" என்று சொன்னதுடன் அங்கேயே மயங்கிச் சரிந்தார் கமலநாதர். அவர் மயங்கியதும் காலடி ஓசைகள் கேட்க, மாயமானது அந்தத் தேன்சிட்டு.

கமலநாதரை வலுவில்லாத நிலையில் கண்ட காமரிக்குள் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கியது. ஆனால் அவர் இறப்பதை அவள் விரும்பவில்லை. மரணம் என்பது மிகப் பெரிய விடுதலை ஆயிற்றே! அவளது ஜென்ம எதிரி அரண்யா மீது பாசம் கொண்டவர் எவராயினும் அவரை உடனடியாகக் கொல்வதை அவள் வெறுத்தாள். மரணத்தை மீறிய ஒரு தண்டனையை அவருக்குத் தர அவள் விரும்பினாள்.

குறளியை அழைத்துத் தனக்கு வேண்டிய பொருட்களை அதன் காதில் காமரி கிசுகிசுக்க, "அப்படியே ஆகட்டும் தலைவி!" என்று சொல்லி மறைந்தது அது!

மறுநொடியில் அவள் கேட்டதை எல்லாம் எடுத்துக் கொண்டு வந்த குறளியிடம், "இந்தத் தலைச்சன் பிள்ளை எலும்புக் கூடுகளை வைத்து அவன் எங்கும் நகர முடியாமல் ஒரு இறுக்கமான பெட்டிச் சிறையை செய்." என்று உத்தரவிட்டாள்.

பின் ஒரு மோகினியை அழைத்து, "மாற்று மருந்தை கொடுத்து விடு. அவன் மயக்கம் தெளிவதற்குள், ஏழாவது மகனின் ஏழாவது மகனான இந்தச் சிசுவின் நரம்பினை வைத்து அவன் உதடுகளையும் விரல்களையும் அசைய முடியாதவாறு தைத்து விட்டு, அவன் கை கால்களையும் நன்றாகப் பிணைத்து விடு!" என்று அடுத்த ஆணையை இட்டாள்.

வேலை முடிந்ததும் கைகட்டி வாய் பொத்தி நின்ற குறளியிடம், கமலநாதரை அது செய்திருந்த எலும்புப் பெட்டியில் அடைக்கச்

சொன்னாள். அதன் பிறகு, கமலநாதர் தெய்வமாக மதிக்கும் கல்லாலமரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதனை இரண்டாகப் பிளந்து அதனுள்ளேயே கமலநாதரை வைத்து வெளியே தெரியாதவாறு மூடினாள். அவருக்கு எப்போதும் துணையாக இரு யட்சிணிகளை நிறுத்தியவள், ஒவ்வொரு நிமிடமும் அவருக்குப் பிரியமானவர்கள் எவ்வளவு தூரம் துன்புறுகின்றனர் என்பதை மாயக்கண்ணாடி கொண்டு காண்பிக்கச் சொல்லி விட்டு மறைந்து போனாள் காமரி. அவளுக்கு மட்டும் கமலநாதரின் தவவலிமை அவரை விட்டுச் சென்றது தெரிந்திருந்தால், நிச்சயம் இவ்வளவு தூரம் அவரை செயலிழக்கச் செய்யவென பிரயத்தனப் பட்டிருப்பாளா என்பது சந்தேகம் தான்!

கண் விழித்ததும், தான் சிக்குண்டிருக்கும் நிலைமையை உணர்ந்த கமலநாதர் என்ன செய்து விடுதலையடைவது என்றே சிந்திக்கலானார். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல காமரியின் கொடூரங்களுக்கு மறுக்க முடியாத சாட்சியாகிப் போனதைத் தவிர வேறெதையும் அவரால் செய்ய முடியவில்லை.

கமலநாதரைக் காணாமல் வெள்ளிமலை குருகுலமே அல்லோலப்பட்ட போது வீரன் மட்டும் உருப்படியாக இந்திர ரகசியப் பயிற்சியில் ஈடுபடுவானா என்ன? பொன்னான மற்றொரு மாதத்தை அவன் மீண்டும் வீணடித்தான். கமலநாதரின் மறைவு துகிரனுக்கு எதிரியின் வலுவை பொட்டில் அடித்தாற்போல உணர்த்தியது. அதனால் துகிரன் மட்டுமே கமலநாதரின் எண்ணப்படி தன்னை மேலும் மேலும் திறமையுள்ளவனாக மாற்றிக்கொள்ள பெரிதும் உழைத்து அதில் வெற்றியும் கண்டான்.

கமலநாதரை அப்புறப்படுத்திய கதையை நினைத்து ஒரு நீண்ட பெருமூச்சை விட்டாள் காமரி. அதுவரையில் தீராத சிந்தனையில் ஆழ்ந்திருந்த கனலியின் யோசனை கலைய, "பூமிக்குத் திரும்பிவிட்டாயா? எங்கே உன் எண்ண உலகத்திலேயே மீளாத்துயில் கொண்டு விடுவாயோ என்று அச்சமாக இருந்தது எனக்கு!" என்று பகடி பேசினாள் கனலி.

"என் பணி ஆயிரம் நிறைவேறாமல் கிடக்க நான் எப்படியடி சாவேன்?" என்று சிரித்தாள் காமரி.

"சரி, நம் திட்டம் நிறைவேறியது என்னவோ எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால் எனக்குச் சில குழப்பங்கள் இருக்கின்றன. அவற்றைக் கேட்கவா?" என்றாள் கனலி.

"ம்! தாராளமாக கேளடி." என்று அனுமதி தந்தாள் காமரி.

"நமக்கு எத்தனை உதவிகளை கருவலன் மாமா செய்திருப்பார்?

அவரை எதற்காக சிரச்சேதம் செய்தாய்?" என்று முதல் கேள்வியைக் கேட்டாள் கனலி.

"கருவலன் மாமா நமக்கு உதவினார்தான். ஆனால் பாலை நாடுகளின் மீது பற்றுக் கொண்ட அவர், நாம் பெருவள நாட்டிற்குள் நுழையத்தான் இத்தனை பெரிய போரை தொடுக்கச் செய்தோம் என்ற உண்மை தெரிந்ததும் என்னைக் கொல்லாமல் ஓய மாட்டார். அதுமட்டுமின்றி நான் தான் இந்தப் போரின் பின்புலமாக செயல்பட்டேன் என்ற உண்மையையும் அந்தப் பாண்டியனிடம் தெரிவித்து விடுவார். அதன் பிறகு எனக்கு விளையாட நேரமில்லாமல் சீக்கிரமாக அனைவரையும் கொன்றாக வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதனால் தான் நோகாமல் அவரை முதலில் கொன்றேன். ரணதீரனைக் கொன்றதும் அவரைக் கொன்றதால் இந்த முட்டாள் பாண்டிய வீரர்களும் என்னை அந்தக் கொற்றவையாக எண்ணி மதிக்கின்றனர் என்பது நமக்கு கூடுதல் வெகுமதியாக அமைந்தது." என்று முறுவலித்தாள் காமரி.

"அப்படியானால் எதற்காக முன் பாலை மற்றும் பின் பாலை அரசர்களை விட்டு வைத்திருக்கிறாய்? அவர்களையும் அப்போதே கொன்றிருக்கலாமே? கருவலன் மாமாவை விட இவர்கள் சீக்கிரத்தில் கட்சி மாறுவார்கள் என்பதை நீ அறிவாய் அல்லவா?"

"பச்சோந்தியை விடப் பாலை அரசர்கள் சீக்கிரம் நிறம் மாறுவார்கள் என்பதை அறியாதவளா நான்? அவர்களைக் கொல்ல எனக்கு அதிக காலம் ஆகாது. ஆனால் நாவகனை வீரமிக்க இளவரசனாக இந்த பைத்தியக்காரர்கள் ஏற்க வேண்டும் என்றால் அவன் அவர்களைக் கைது செய்தால் தானே முடியும். அதற்காகவே அவர்களை உயிருடன் வைத்திருக்கிறேன். நாளை மறுநாள் சபை கூடும் போது, நாவகனே அவர்களைக் கொன்று, பின், 'மதுரையை எரித்த எதிரிகளை அழித்து மக்களின் துயரத்தைத் துடைத்தவன்' என்ற பெயரையும் பெறுவான். அதுவரை பாலை அரசர்களான அந்த வீணர்கள் நினைத்தாலும் அவர்களால் எதுவுமே பேச முடியாதவாறு அவர்களின் வாயைக் கட்டியுள்ளேன்." என்றாள் காமரி.

"பலே காமரி! உன் மதியூகத்தை நினைத்தால் எனக்கு மெய் சிலிர்க்கிறது போ! அப்படியானால் நம் பக்க கதைக்கு வலு சேர்ப்பதற்காகத்தான் அந்த அடிமை பாதுகனையும் இன்னும் விட்டு வைத்திருக்கிறாயா?"

"ஆம்! அந்த வீயன் நம்மைச் சுலபமாக நம்ப மாட்டான் என்று நமக்கு முன்னமே தெரிந்து தானே பாதுகனிடம் உதவி கேட்பதைப்

போல நாடகமாடினோம். இப்போது பாதுகன் மட்டுமல்ல அந்த ஒற்றனும் நம் கதையை உறுதி செய்வான். அதன் மூலம் சுலபமாக நான் நினைத்த காரியத்தை சாதித்துக்கொள்வேன். சரி, எனக்கும் உன்னிடம் ஒரு கேள்வி இருக்கிறது." என்று பீடிகை போட்டாள் காமரி.

"உனக்குத் தெரியாதது இந்த உலகில் என்ன இருக்கிறது?" என்று வியந்தாள் கனலி.

கனலியின் கேள்வியைக் கேட்டதும் சிரித்தவள், "நீ எப்படி எனக்கு முன்பாக அரண்மனைக்கு வந்தாய்?" என்று கேட்டாள்.

"அந்தக் கதையை ஏன் கேட்கிறாய்? ரணதீரன் வகுத்த போர்த் திட்டத்தைப் பாதுகனிடம் இருந்து தெரிந்து கொண்ட நான் உனக்கு செய்தியை சொல்லிவிட்டு திரும்புவதற்குள் அந்த ஒற்றன் பாதுகனுக்கு மயக்கம் தெளிவித்திருந்தான். மேலோட்டமாக என்னைப் பற்றியும் உன்னைப் பற்றியும் அறிந்து கொண்ட பின், அவன் தோண்டித் துருவுவதற்குள் எப்படியோ நான் அங்கே சென்று விட்டேன். பிறகு ஒற்றனிடம் பல கதைகளைப் பேசி, அவனை எப்படி திசை திருப்பினாலும் அவன் என் போக்கிற்கு வளைந்து கொடுக்கவே இல்லை. பாதுகனோடு என்னையும் பிடித்துக் கொண்டு அந்த ஒற்றர்படைத் தலைவன் தாரகனிடம் சென்று விட்டான்.

அவன் என்னடாவென்றால் பெண்ணென்றும் பாராமல் என்னைக் கேள்வியாலேயே துளைத்து விட்டான். எப்படி எப்படியோ நம்பும் படி பொய் சொன்னாலும் அந்தப் பாவி என்னை நம்பவே இல்லை. அங்கேயே காவலில் வைத்து விட்டான். பிறகு ஒருவழியாக நாவகனும் நீயும் பாண்டியனுக்கு உதவி செய்ததை அறிந்த பிறகு என்னை அயினியிடம் ஒப்படைத்து விட்டான். நீங்கள் காதலிக்கும் செய்தியும் கசிந்து விட, நான் சொன்ன பொய்கள் ஒருவாறாக ஏற்றுக்கொள்ளப் பட்டன. அதன் பிறகு நீ வரும் வரையில் என்னை கிட்டத்தட்ட இங்கே சிறை வைத்திருந்தார்கள். அந்தப் பாண்டியனை விட இந்த அயினி குயுக்தி உடையவளாகத் தெரிகிறாள். அவளிடம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் காமரி." என்று தான் அரண்மனை வந்த வரலாற்றைக் கூறினாள் கனலி.

"எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது கனலி. என்னை மகள் போல என்று சொன்னாளே தவிர நாவகனை மறந்தும் அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் மனதில் என்ன இருக்கிறதென்று என்னால் கூடப் படிக்க முடியவில்லை என்றால் பார்த்துக்கொள்ளேன். அவளை இனி நாம் நன்றாக கவனிக்க வேண்டும்."

"அதுவும் சரி தான். ஐயோ! இன்னும் ஒன்றை மறந்தேனே...

இந்த சமீரணனைக் கண்டாயா? அவன் பாட்டிற்கு இங்கே வந்து நம்மை மாட்டி விட்டுவிடப் போகிறான்!" என்று அச்சத்துடன் சொன்னாள் கனலி.

"அவன் உயிரைக் காத்துக்கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறான். எனக்கு அவன் தேவை இன்னும் முடியவில்லையடி. அதனால் இப்போதைக்கு அவனுமே எனக்கு உயிருடன் தேவை. எங்கே சென்று விடப் போகிறான்? எங்கென்றாலும் என் பார்வையில் இருந்து அவன் தப்பிக்க முடியாது." என்று சொன்னாள் காமரி.

"ம்... சரி. அரண்மனை நந்தவனத்தை சுற்றிப் பார்த்து விட்டு வருவோம் வா. எப்போதும் உள்ளேயே அடைந்திருந்தால் இங்கிருப்பவர்களை நோட்டமிட முடியாது." என்று எழுந்தாள் கனலி.

"செல்லலாம் தான். ஆனால் வீயனை விடுத்து ரணதீரனை மட்டும் கொல்லச் சொல்லி கருவலன் மாமாவிடம் ஏன் சொன்னேன் என்று நினைக்கிறாய்?" என்று கேள்வி எழுப்பினாள் காமரி.

"வீயனுக்கு நீ தான் பல தண்டனைகளை பாக்கி வைத்திருக்கிறாயே. அதனால் தான் அவனைத் தனிமைப் படுத்துவதற்காக அவனது வலது கரமான ரணதீரனை மட்டும் கொல்லச் சொன்னாய். சரியா?" என்று சிரித்தாள் கனலி.

"பாதி சரி." என்று பதிலுக்குச் சிரித்தாள் காமரி.

"என்ன சொல்லுகிறாய்? பாதி சரியா?" என்று குழம்பினாள் கனலி.

"ஆமாம். ரணதீரனை கொன்றது வீயனை தனிமைப்படுத்த மட்டுமன்று. என் மனம் கவர்ந்த வீரனை இங்கே தருவிக்கும் பொருட்டும் தான்! தந்தைக்கு நிகரான குருதேவரை இழந்து பெற்ற தந்தையையும் போரில் பறிகொடுத்து அவன் வாடும் இந்த நேரத்தை நான் எனக்குத் தோதாகப் பயன்படுத்தப் போகிறேன். அந்த அரண்யாவை அவன் மனதினில் இருந்து முற்றிலுமாக அழிக்கப் போகிறேன். அடுத்த முறை அவன் அரண்யாவைப் பார்க்கும் போது, அவளை யாரென்று அவன் வாயாலேயே கேட்க வைக்கப் போகிறேன். இது உறுதி!" என்று சூளுரைத்தாள் காமரி.

"நாவகன், உன்னை மணக்கப் போவதாக நாவலந்தீவிற்கே இந்நேரம் தெரிவித்திருப்பான். பிறகு எப்படி நீ வீரனோடு ஜோடி சேருவாய் காமரி?" என்று மறுபடியும் குழம்பினாள் கனலி.

"இந்த நாவலந்தீவு, இந்திர ரகசியம், யாளி வீரன் மூன்றுமே என் கைக்குள் அடங்குவதை நீ பார்க்கத் தானே போகிறாய்!

பொறுத்திருந்து பார்." என்று கர்வத்தோடு சொல்லிச் சிரித்தாள் காமரி.

அந்நேரத்தில் அவளது அடங்கா ஆசையைத் தீர்ப்பதற்காகவே வருகிறவன் போலத் தன் கருநிறப் புரவியின் மேல் புயல் காற்றைப்போல பெருவளநாட்டை நோக்கிப் பறந்துகொண்டிருந்தான் யாளி வீரன்!

## அத்தியாயம் 7

வெகு நாட்களுக்குப் பிறகு வீரனின் மனம் துளி சலனமும் இன்றித் தெளிந்த நீரோடை போலிருந்தது. ஆற்று வெள்ளத்தில் சிக்குண்ட பல பெரிய உயிர்கள் தத்தளிக்க, ஒரு சிறு இலை உறுதியாக நீச்சல் போடுவதைப் போல, விதியின் நீரோட்டத்திற்கு ஏற்றாற் போலத் தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் நிலையில் வீரன் இருந்தான். தன்னால் முடியாத காரியத்திற்காக வருந்துவது வீணென்று வீரனுக்கு துகிரன் அறிவுறுத்தியிருந்தான். தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யாமல் மற்றவரின் வேலைகளைத் திறம்படச் செய்வதால் தனக்கோ பிறருக்கோ எந்த நன்மையும் இல்லை என்பதை உணர்ந்த வீரனும் இப்போதெல்லாம் மனதை பழையபடி கட்டுக்கோப்பாக வைக்க முயன்று ஓரளவு அதில் வெற்றியும் கண்டான்.

இந்திர ரகசியத்தை வீரன் அடைந்த முதல் இரு தினங்களில் அவன் மனதின் உணர்ச்சிகள் சமநிலையில் இருந்தாலும் அதன் பின்னர் வந்த நாட்களில் இன்பமோ துன்பமோ எது வந்தாலும் அதன் தாக்கம் வீரனிடம் மிக அதிகமாக இருந்தது. வெற்றியென்றால் அதிகமாக மகிழ்வதும் தோல்வியென்றால் அதை விட அதிகமாகத் துவளுவதையும் அவன் வாடிக்கையாக்கி இருந்தான். அதாவது, இந்திரரகசியம் வீரனின் ஒவ்வொரு சின்னச்சின்ன உணர்வையும் பூதாகாரமாக்கி அவன் மனதின் கடிவாளத்தை தளர்த்திக்கொண்டே இருந்தது. இது புரியாத வீரனும் தன்னால் எதுவுமே முடியாது என்ற தன்னிரக்கத்திலேயே காலத்தை கழித்தான். ஆனால் துகிரனின் போதனைகளினால் மனம் தெளிவடைந்ததும் பழையபடி உற்சாகமாக வளைய வந்தான் வீரன், அவன் தந்தை இறந்த செய்தியைக் கேட்கும் வரை.

தன் கடைசி மூச்சு வரையில் பெருவளநாட்டிற்காகவே வாழ்ந்து மடிந்த தன் தந்தையை நினைத்து அவன் கண்கள் கலங்க, பாலை அரசர்கள் மதுரைக்கு செய்த கொடுமையை எண்ணி அவன் குருதி கொதித்தது. 'கூடாது, அவர்களை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது!' என்று சபதமெடுத்தவன் எவரிடமும் சொல்லிக் கொள்ளாது தன்

நாட்டை நோக்கிப் பயணப்படலானான்.

துகிரனிடம் சொல்லியிருக்கலாமோ என்று வீரன் எண்ணிய அதே நேரத்தில் இன்னொரு புரவியில் வீரனைத் துரத்திக்கொண்டே துகிரன் வந்தான்.

விரைவில் வீரனை எட்டிய துகிரன், "என்னை அவ்வளவு சுலபத்தில் உன்னால் தொலைக்க இயலாது வீரா!" என்று விளையாட்டு போலவே கூறினான். அவன் சொல்லாமல் மறந்தாலும் துகிரனுக்கு வீரனின் மனது தெரியாதா? எப்போதும் நிழல் போலிருக்கும் துகிரன் இப்போதும் வீரனைத் தொடர்ந்தான்.

"மன்னித்துவிடு நண்பா! தந்தை இறந்த செய்தி என் இதயத்தை யாரோ துளையிடுவதைப் போலிருந்தது என்றால் மதுரை தீக்கிரையான செய்தி என் இதயத்தை வேரோடு பிடுங்குவதைப் போல் வலிக்கிறது. அந்த வேகத்தில் தான் எதையும் யோசியாது உடனே புறப்பட்டு விட்டேன்." என்றான் வீரன்.

அவன் கண்ணில் தெரிந்த சோகம் துகிரனையும் தாக்க, "நீ இந்திர ரகசியத்தை முழுதாக வசப்படுத்தும் அன்று நாவலந்தீவு பல தீயசக்திகளிடமிருந்து விடுதலை பெரும். மற்றத்தைக் குறித்து இப்போது மனதைத் தளர விடாதே! ஆரன் அண்ணன் அங்கிருக்கிறார் அல்லவா? அவர் எதிரிகளையும் துரோகிகளையும் சரியாக இனம் கண்டு அதற்கேற்ப நடந்துகொள்வார். நீ வருந்தாதே!" என்று வீரனை ஆறுதல் படுத்தினான்.

பலவாறாக பேசிக்கொண்டே நண்பர்கள் இருவரும் மதுரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். இருவர் மனதிலும் வீரனின் தாயாரைப் பற்றியும் அண்ணன் ஆரனைப் பற்றியுமே சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. வாயுவேகம் மனோவேகமாக பறந்தவர்கள் சீக்கிரத்தில் மதுரையை அடைந்தனர். மக்களின் துயரத்திற்கு சாட்சியாக பல சுவர்கள் பாதியாக நிற்க, அவர்களின் வயல்வெளிகளோ பசுமையை மறந்திருந்தது. கனத்த இதயத்தோடு வீரனும் துகிரனும் ரணதீரனின் மாளிகையை அடைந்தனர்.

வீரனுக்கும் சில நெருங்கிய சொந்தங்களுக்கும் சொல்லி அனுப்பிவிட்டு, ஒரு இடத்தில் சோம்பி இருக்க மனமின்றித் தீயில் கருகிய வீடுகளை செப்பனிட மக்களுக்கு உதவுவது, வயல்களை சுத்தப் படுத்துவது என்று கடும் உடல் உழைப்பால் தன் மனதை மரக்கச் செய்து கொண்டிருந்தான் ஆரன். கிட்டத்திட்ட பத்தொன்பது ஆண்டுகள் கழித்துத் தான் தாய்நாடு திரும்பும் போதுதான் இந்த வகையான கொடும்சம்பவங்கள் நிகழ வேண்டுமா என்று அல்லலுற்ற அவன் மனம்

வீரனைக் கண்டதும் மகிழ்ந்தது.

சிறுவயதில் தன் கை பிடித்தபடியே தளிர்நடை பயின்று, தான் செய்வதையெல்லாம் அப்படியே அச்சுப் பிசகாமல் செய்யும் அவனின் அருமைத்தம்பி, இன்று தன் தோள்களுக்கு மேல் உயர்ந்து, இந்திர ரகசியத்தை வென்று, மாபெரும் வீரனாக அவன் முன்னே நிற்பதைப் பார்த்ததும் ஆரன் பெருமிதம் கொண்டான்; ஒரு சுத்தவீரனுக்கு அண்ணனாக இருப்பதை எண்ணி அவன் பெருமகிழ்ச்சி கொண்டான். அதே போல வஜ்ராயுதத்தை ஒத்த தோள்களோடு தன் தகப்பனின் மறு உருவாகவே நிற்கும் தமையனைக் கண்டதும் வீரனின் கண்கள் கலங்கியது. தன் தந்தை இறக்கவில்லை; தமையனின் வடிவில் அவர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று நினைத்தான் வீரன்.

பலகாலம் கழித்து சந்தித்துக்கொள்ளும் இரு சகோதரர்களும் ஒருவரை ஒருவர் தோளோடு சேர்த்து கட்டிக்கொண்டு தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். இப்போதும் வீரனுடன் நிழல் போலிருக்கும் துகிரனின் நட்பைக் கண்டு பெரிதும் வியந்தான் ஆரன். பொதுவான நலவிசாரிப்புகளுக்குப் பிறகு சகோதரர்கள் இருவரும் பேசுவதற்கு இடைஞ்சலாக இல்லாமல் துகிரன் அவன் மாளிகைக்குச் சென்றான்.

"உன்னைப் பார்த்து எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன வீரா?" என்று ஆரனும் "உங்களைப் பார்த்து எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன அண்ணா!" என்று வீரனும் ஒரே சமயத்தில் சொல்ல இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது. அவர்களின் புன்னகை அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களின் அன்னை பொன்பாவையையும் பற்றிக் கொண்டது. இருமகன்களையும் கண்குளிர வெகு காலத்திற்குப் பிறகே சேர்ந்தாற்போல அவர் பார்க்கிறார். இந்தத் தருணத்தில் தன் அன்புக் கணவன் இல்லது போனதை எண்ணி அவர் மனம் வருந்தினாலும் அவரின் சாயலோடு இருக்கும் மகன்களைப் பார்த்து அவர் மிகுந்த ஆறுதல் அடைந்தார். வீரனுக்கும் அரண்யாவிற்கும் திருமணம் பேசப்பட்டிருப்பதைப் போல ஆரனுக்கும் அவன் மனம் விரும்பும் பெண்ணாகப் பார்த்து திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று பொன்பாவை நினைத்திருந்தார். அதுவரை வீரனிடம் அரண்யாவைப் பற்றி எதையும் சொல்ல வேண்டாம் என்றும் முடிவெடுத்தார்.

முதலில் மகிழ்ச்சியை மட்டுமே வெளிக்காட்டிக் கொண்ட சகோதரர்கள், அவர்கள் அன்னையின் கண்ணை விட்டு மறைந்ததும் தங்களின் ரௌத்திரத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

"இப்போது பாலை அரசர்கள் எங்கே அண்ணா?" என்று

கோபமாக வீரன் கேட்க, "சிறையில் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டு மடிந்து போனார்களடா." என்று அதே கோபத்தோடு ஆரன் சொன்னான். தன் கையால் அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும் என்கிற தன் ஆசையில் மண் விழுந்ததை இருவராலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"எப்படி நிகழ்ந்தது இது?" என்று வீரன் கர்ஜித்தான்.

"போர்க் கைதிகளை சிறையில் அடைத்திருந்தார்கள். மறுநாள் விசாரணை என்னும் நிலையில் முதல் நாளே பாலை அரசர்கள் இருவரும் ஏதோ வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பின் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டு மடிந்து போனதாகவும் தகவல் வந்தது. சிறையில் அடைத்த நாள் முதல் வாயே திறக்காதவர்கள் எப்படி திடீரென சண்டையிட்டு மடிந்தனர் என்ற கேள்விக்கு எவரிடத்திலும் பதிலில்லை வீரா. எனக்கென்னமோ இதில் ஏதோ சூதிருப்பதாகவே தோன்றுகிறது. இந்த இரு அரசர்களை வேண்டுமானால் நம்மால் விசாரிக்க முடியாமல் போயிருக்கலாம். ஆனால் போர் பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிந்த இன்னும் ஒரே ஒருவன் இருக்கிறான். பின் பாலை நாடுகளின் சேனாதிபதி சமீரணன் மட்டும் எப்படியோ போர்க்களத்தில் இருந்து தப்பிவிட்டான். அவனைப் பிடித்தால் பல உண்மைகள் வெளிவரும் என்றே நான் நினைக்கிறேன்." என்றான் ஆரன்.

போர்க்களத்தில் தான் அருகில் இருந்தும் கூடத் தன் தந்தையை காக்க முடியாமல் போனதை எண்ணி எண்ணி மனம் குமைந்து போனான் ஆரன். மற்றவர் முன்னிலையில், 'என் கணவர் வீர சுவர்க்கம் அடைந்திருக்க நான் எதற்காக வருந்த வேண்டும்?' என்று நிமிர்வுடன் சொல்லும் அவன் தாயார் தனிமையில் கண்ணீரில் கரைவதைக் கண்டு அவன் குற்றவுணர்ச்சி பன்மடங்காகப் பெருகியிருந்தது.

"நீங்கள் கவலை கொள்ளாதீர்கள் அண்ணா! நானும் துகிரனும் எப்பாடு பட்டாவது உங்கள் காலடியில் அந்த சமீரணனை கொண்டு சேர்க்கிறோம்." என்று உறுதியளித்தான் வீரன்.

"தம்பி உடையான் படைக்கஞ்சான் என்ற முதுமொழியை மெய்ப்பித்து விட்டாய் வீரா!" என்று வீரனின் தோள்களைத் தட்டிக் கொடுத்த ஆரன், "தந்தையின் காரியம் முடிந்ததும் இதைப் பற்றி விரிவாகப் பேசுவோம்!" என்று உள்ளடங்கிப் போன குரலில் கூறினான். இதுவரை இருந்த அவர்களின் உற்சாகம் தந்தையின் இறுதிக் காரியம் பற்றிய சிந்தனையின் பயனாக முற்றாக வடிந்து போனது.

உறவினர்கள் அனைவரும் வந்ததும், தைலப் பாடம் செய்து பதப்படுத்தி வைத்திருந்த ரணதீரனின் உடல் வைத்தியரின் வீட்டிலிருந்து ரணதீரனின் மாளிகையின் முற்றத்தில் வைக்கப்பட்டது. பலர் மரியாதை செலுத்திய பின்னர், இடுகாட்டிற்கு அவர் உடலைச் சுமந்து சென்றனர். நாடே கண்ணீரில் கரைய மக்கள் தங்களின் பிரியமான சேனாதிபதிக்கு இறுதி மரியாதை செலுத்தி வழியனுப்பி வைத்தனர். ஆளுயர தாழியில் ரணதீரனை பக்குவமாக வைத்த பின், அவருக்குப் பிரியமான சில பொருட்களை ஆளுக்கொன்றாக அதில் வைத்தனர்.

தாங்கள் காதலித்த காலத்தில் பிறரறியாமல் தனக்கு ரணதீரன் வழங்கிய முதல் பரிசான கோமேதக மோதிரத்தை அழுது கொண்டே பொன்பாவை தாழியில் வைக்க, வீரனும் ஆரனும் அவரவருக்கு ரணதீரன் தன் கையாலேயே செய்து கொடுத்த முதல் குறுவாட்களை வைத்தனர். பொன்னும் பொருளும் தானியமும் ரத்தினமும் கூடவே தாழியை நிறைக்க, மனமில்லாமல் தாழியை மூடி விட்டு மண்ணில் புதைத்தனர்.

வீடு வரை எதுவும் பேசாமல் வந்தவர்கள் குளித்து முடித்துத் தத்தமது அறையில் முடங்கினர். அவரவர்களின் மனதில் அசைபோடுவதற்கு ஆயிரம் நினைவுகள் இருந்தன. வீரனுக்கு தந்தையோடு விளையாடி மகிழ்ந்த நிகழ்வுகளே அதிகமாக இருந்தாலும் ஆரனுக்கோ மகிழ்ச்சி, சோகம், படிப்பினை என்று கலவையான உணர்ச்சிகளுடன் கூடிய பல நிகழ்ச்சிகள் நினைப்பதற்கு இருந்தன.

வீரன் கூட ஒவ்வொரு விடுமுறைக்கும் மதுரைக்கு வந்திருக்கிறான். ஆனால் ஆரனை ஒருமுறை கூட விடுமுறைக்கு வர விட்டதில்ல ரணதீரன். குடும்பத்தோடு நீலமலைக்குச் சென்று இவர்கள் தான் ஆரனைப் பார்த்து வருவார்கள். நீலமலைக்கு அருகில் இருக்கும் சிற்றூர் ஒன்றில் அழகிய சோலையையும் அதனோடு சேர்ந்த ஒரு சிறு வீட்டையும் ஆரனுக்காகவே வாங்கியிருந்தார் ரணதீரன். ஆரனின் ஒவ்வொரு விடுமுறையும் அந்த சிறு வீட்டிலும் பக்கத்தில் இருக்கும் சிற்றோடையிலுமே கழிந்தது.

அவன் சிறுவனாக இருக்கும் போது தான் மட்டும் தனித்து விடப்பட்டது குறித்து அவன் மிகுந்த விசனப்பட்டிருக்கிறான். அதைத் தெரிந்து கொண்ட ரணதீரன், ஆரனுக்கு புரிந்துகொள்ளும் பக்குவம் வந்த போது அவனை ஏன் வெள்ளிமலை குருகுலத்திற்கு அனுப்பாமல் நீலமலை குருகுலத்திற்கு அனுப்பினார் என்பதை விளக்கினார். உண்மையை உணர்ந்து கொண்டவன் அதன் பிறகு, வருந்தாமல்

கல்வியில் மட்டுமே கவனத்தை செலுத்தினான். போர்க்கலைகளை விட விவசாயத்திலும் கட்டுமானத் துறையிலுமே அதிக நாட்டம் கொண்டிருந்தவனுக்கு இப்போது உபசேனாதிபதிப் பதவி காத்திருக்கிறது.

நாவகன் இயல்பிலேயே பொறாமை அதிகம் கொண்டவன். அதிலும் சமவயதுடைய ஆரனைக் கண்டால் எப்போதுமே அவனுக்கு உவப்பாக இருந்ததில்லை. பேரரசர் வீய பாண்டியனும் சேனாதிபதி ரணதீரனும் சிறுவயது முதலே நெருங்கிய தோழர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்குப் பிறந்த மக்களும் தோழர்கள் ஆவார்கள் என்று எவராவது கூற முடியுமா?

வீரனும் துகிரனும் எந்நேரமும் இரட்டைகள் போலவே வலம் வருவார்கள். ஆனால் ஆரனோ அந்தச் சிறுவயதிலேயே நாவகனைக் கண்டால் எப்படி அவன் கண்ணில் இருந்து மறைவது என்பதைக் கற்றுத் தேறியிருந்தான். அவர்கள் இணைந்து விளையாடும் சூழல் ஒருவேளை பெரியவர்களின் கட்டாயத்தினால் உருவாகுமானால்... தான் ஒரு இளவரசனென்றும் நீ ஒரு சாதாரண சிப்பாய் மகனென்றும் ஆரனின் மனதைப் பல்வேறு விதமாகக் காயப்படுத்துவதை நாவகன் வாடிக்கையாக்கி இருந்தான்.

அவன் வயதில் அவனை விட உயரமாக இருந்த ஆரனை நாவகனுக்குப் பிடிக்கவே இல்லை. நாட்கள் செல்லச் செல்ல ஆரனிடம் தென்பட்ட நற்பண்புகளை நாவகனின் முன்பு எவரேனும் பாராட்டினால் அதற்கும் ஆரனே தண்டிக்கப்பட்டான். அவன் ஓடும் போது காலை இடறி விடுவது, கவன் கல்லை வைத்து ஆரனை அடிப்பது, அவன் ஆசையோடு கட்டியிருக்கும் மணல் வீட்டை மிதித்துத் தரைமட்டமாக்குவது என்று நாவகனின் குழந்தை மூளையால் எவ்வளவு வஞ்சத்தோடு சிந்திக்க முடியுமோ அவ்வளவு வஞ்சத்தோடு அவன் திட்டங்களை செயல்படுத்தி ஆரனை புண்படுத்தினான் நாவகன்.

ஆரனுக்கும் நாவகனுக்கும் குருகுலம் துவங்கும் காலம் வந்ததும் இருவரையுமே மேரு மலையில் சேர்க்கலாம் என்று பேரரசி அயினி அம்மை கூற, சேனாதிபதி ரணதீரன் புன்னகையோடு மறுத்துவிட்டார். காரணம் புரிந்த அவரின் அன்பு மனைவி பொன்பாவையும் அதே புன்னகையோடு மறுக்க, அயினி அம்மை அந்தப் பேச்சை அத்தோடு நிறுத்தி விட்டார். வெள்ளிமலைக் குருகுலத்திலேயே ஆரனை சேர்க்கலாம் என்றெண்ணி இருந்தபோது தான் நாவகன் மேருமலை குருமார்களின் நேர்க்காணலில் தோல்வியடைந்த செய்தி ரணதீரனை எட்டியது. அவனிருக்கும்

மனநிலையை ஒருவாறு யூகித்தவர், உடனே ஆரனை நீலமலையில் சேர்த்து விட்டார். முதலில் மதுரைக்குச் செல்ல முடியாமல் வருந்திய ஆரனும் அதன் பின்னர் நிலைமையை உணர்ந்து கொண்டு அதற்கேற்றாற் போல நடக்கத் துவங்கினான்.

இந்திரரகசியப் போட்டியில் ஆரன் கலந்து கொள்வதையும் ரணதீரன் விரும்பவில்லை. நாவகனை விட ஆரன் சிறந்தவன் என்று அவருக்குத் தெரிந்திருந்தாலும் நாவகனின் பொறாமையைத் தூண்டும் வகையில் நடந்துகொள்ள அவர் துணியவில்லை. ஒரு போட்டியில் ஆரன் வெல்வதை விட, தனக்குப் பிறகான அவனுடைய வாழ்க்கையில் அவன் வெற்றி பெற வேண்டும் என்பதே ரணதீரனின் எண்ணமாக இருந்தது.

ரணதீரனின் விருப்பப்படியே கல்வியில் சிறந்து நாவலந்தீவைச் சுற்றியுள்ள பல தேசங்களுக்கும் சென்று அங்குள்ள வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொண்டு இப்போது தான் அவன் தாய்நாடு திரும்பியிருக்கிறான். இத்தனை ஆண்டுகள் கழித்து நாவகனுக்கு தன் மீதிருக்கும் பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் கொஞ்சமாவது குறைந்திருக்கும் என்றே ஆரன் நினைத்திருந்தான். ஆனால் அவன் எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக முன்னை விட கீழான மனநிலையில் இருந்தான் நாவகன். சண்டை என்று வரும் பட்சத்தில் நாவகனை நொடியில் வீழ்த்தும் திறன் கொண்டிருந்தாலும் தன்னால் வீணான பிரச்சனை எதற்கு என்றே ஆரன் நினைத்தான். அதனால் இப்போதும் நாவகனை விட்டு வெகு தொலைவு விலகுவதையே அவன் விரும்பினான்.

ஆரன் விலகி இருந்தாலும் அவனின் பெருமைகள் நாவகனை உறங்கவிடவே இல்லை. அதிலும் மேற்குக் கோட்டை மதில் காவற்படைத் தலைவன் தான் துரோகி என்பதை இனம் கண்டு அவனோடு சேர்ந்த அத்தனை வீரர்களையும் தூக்கிலிட்டதற்கு முதன்மைக் காரணம் ஆரன் தான் என்ற செய்தியை அறிந்ததில் இருந்தே ஆரனை அவமானப்படுத்தும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான் நாவகன். அதற்கான நல்லதொரு வாய்ப்பும் அவனுக்கு விரைவிலேயே கிட்டியது.

ஆரானின் கட்டுமான அறிவு மதுரை மக்களுக்குப் பலவிதங்களில் உதவிகரமாக இருந்தது. மிகக் குறைந்த பொருட்செலவில் ஏற்கனவே இருக்கும் பொருட்களைக்கொண்டே உறுதியான, அழகான வீடுகளை நிர்மாணித்திருந்தான் ஆரன். நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்குமாறு பார்த்துக் கொண்டவன்

அனைத்து வீடுகளையும் சுற்றி சிறு தோட்டம் ஒன்றையும் அமைத்திருந்தான், குழந்தைகள் விளையாடவென. அவனின் முயற்சியால் மதுரை புத்துயிர் பெற்று இழந்த தன் சோபையை கொஞ்ச கொஞ்சமாக பெற ஆரம்பித்தது.

கட்டுமானத்துறையில் மட்டுமல்ல, விவசாயத்திலும் தன்னால் ஆன சின்னச்சின்ன ஆனால் தேவையான மாற்றங்களை ஆரன் செய்தான். சொட்டு நீர்ப் பாசனத்தை மதுரை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி தண்ணீர் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்தான். எல்லோருக்கும் எல்லாமுமே சமமாக இருந்த காலமாதலால் நல்லதை யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் மக்களுக்கு இருந்தது. அதனால் ஆரனின் முயற்சிகள் சில காலத்திலேயே நன்கு பயன் தர ஆரம்பித்தது.

ஆரனை மக்கள் எங்கு பார்த்தாலும் அன்போடு விசாரிக்க ஆரம்பித்தனர். வீரனின் அண்ணன் ஆரன் என்ற நிலை போய் ஆரனின் தம்பி வீரன் என்று ஊரார் கூறுமளவிற்கு மதுரையின் சுவாசத்தில் தானும் இரண்டறக் கலந்து போனான் ஆரன்.

வீரனோ துகிரனோடு சமீரணனைத் தேடித் திரிந்து கொண்டிருந்தான். கமலநாதரின் அறிவுரைகள் வீரனின் சிந்தையை சரியாக எட்ட ஆரம்பித்திருந்த காரணத்தால் வீரன் கொஞ்சம் கொஞ்சமாக இந்திர ரகசியத்தின் வலிமையையும், அது தனக்கும் இந்த உலகிற்கும் எவ்வளவு பயன் தரக்கூடியது என்பதையும் உணரத் துவங்கினான். அவன் மனநிலையை சமமாக்கி இந்திர ரகசியத்தை கைக்கொள்ள உதவக் கூடிய மந்திரங்கள் அவனுக்கு இப்போது வெகு சுலபமாக வந்தது. குருகுலக் கல்விக்கு முழுக்கு போட்டுவிட்டுத் துகிரனும் கமலநாதர் பயிற்றுவித்திருந்த அபாயகரமான தாந்த்ரீக வித்தைகளை இப்போது முறையாக பயிற்சி செய்ய ஆரம்பித்திருந்தான்.

வீரன் எந்நேரமும் துகிரனோடோ அல்லது அவன் தாயாருடனோ இருந்ததால் காமரி நினைத்ததைப் போல அவளால் எளிதில் வீரனுடன் நேரம் செலவழிக்க முடியவில்லை. நாவகனைத் திருமணம் செய்து கொள்ளப் போகிற பெண் என்ற அடைமொழியுடன் அவளை எப்போதும் வரவேற்கும் பொன்பாவையைக் காமரிக்கு அறவே பிடிக்கவில்லை என்றாலும் வேறு வழியில்லாத காரணத்தால் மகிழ்ச்சியோடு வெட்கப்படுகிறவளைப் போலவே காமரி அனைவர் முன்னிலையிலும் காட்டிக் கொண்டாள். காமரி நாவகனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் என்பது தெரிந்ததும் வீரன் அவளை ஒரு நொடி கூட அதிகமாகப் பார்க்கவில்லை. அவன் மனதினில் எப்போதும்

அரண்யா வாசம் செய்வதால் காமரியை வேறு நிலையில் சந்தித்திருந்தாலும் அவனுக்கு நிச்சயமாக காதல் தோன்றியிருக்க வாய்ப்பில்லை என்பதைக் காமரி உணர மறுத்தாள். அதனால் எப்படியாவது வீரனை தன்னைத் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும் என்று உறுதி பூண்டாள்.

சமீரணன் அரசாணை ஆற்றங்கரையின் வனப்பகுதிகளில் தென்படுவதாக காற்று வாக்கில் செய்தி கசிய, வீரன் துகிரனை அழைத்துக் கொண்டு அரசாணை ஆற்றங்கரையை நோக்கி விரைந்தான். உடன் வருவதாகச் சொன்ன ஆரனிடம், "இதற்கு முன்னர் கிடைத்த செய்திகளைப் போலவே இந்தச் செய்தியும் உண்மையாய் இருக்கும் வாய்ப்புகள் மிகச் சொற்பம் அண்ணா. அதுமட்டுமின்றி நாம் இருவரும் இங்கில்லை என்றால் அம்மா மிகவும் வருத்தப்படுவார்கள்!" என்று சொல்லி அவனைத் தடுத்தான் வீரன்.

கொஞ்சம் கடுப்புடனேயே வீரனை அனுப்பிவிட்டு வயல்களுக்கு விரைந்தான் ஆரன். அவர்களுக்குச் சொந்தமான மாந்தோப்பைக் கடக்கையில் ஒரு மரத்தின் மீதிருந்து மட்டும் தானாக, முற்றாத பிஞ்சு மாங்காய்கள் கீழே விழுவதைப் பார்த்தான் ஆரன். 'தேவையானவர்கள் தேவையான அளவு மாங்காய்களை தாராளமாகப் பறித்துக்கொள்ளலாம்!' என்று ஏற்கனவே அவன் ஊராரிடம் தெரிவித்திருக்க, இப்படிக் குவியலாக அதிலும் திருட்டுத்தனமாக, பறிக்கத் தெரியாமல் பிஞ்சு மாங்காய்களைப் பறிப்பவர் யாராக இருக்கும் என்று எண்ணியவனுக்கு கோபம் வந்தது.

பக்கத்தில் பருமனான ஒரு கழியைப் பார்த்தவன் சற்றும் தாமதியாமல் அந்த மாமரத்தின் கிளைகளைக் குறி வைத்து எறிந்து விட்டு அம்மரத்தை நோக்கி வேகமாக நடந்தான். குறி தப்பாமல் இலக்கை அந்தக் குச்சி தாக்கி விட, "அம்மா!" என்ற அலறலோடு ஒரு பெண் மரத்தின் மீதிருந்து அவள் பறித்துப் போட்டிருந்த மாங்குவியல்களின் மீதே விழுந்தாள். யாரோ திருடனாக இருக்கும் என்றெண்ணிச் செயல்பட்ட ஆரன் அது பெண்ணென்றதும் என்ன செய்வதென்றே தெரியாமல் திருதிருவென விழித்தான்.

முந்நூறடித் தொலைவில் இருந்த அந்தப் பெண் சற்றும் தாமதியாது, "ஆரா! நீ மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவன், இரக்க குணம் கொண்டவன் என்று எல்லோரும் சொல்கின்றனரே அதெல்லாம் வெறும் பொய்தானா? ஒரு சிறு மாங்காயைப் பறித்ததற்காகவா என்னை அடித்தாய்? பார்! என் கைகள் முறிந்து குருதி கொட்டுகிறது! இனி என்னை யார் திருமணம் செய்து கொள்வார்கள்?" என்று அழ

ஆரம்பித்தாள்.

அவளைச் சுற்றியிருந்த மாங்குவியல்களைக் கண்டு, 'ஒரு சிறு மாங்காயா?' என்று கேலியாக புருவம் உயர்த்தினான். அவன் பார்வையைக் கண்டும்காணாமல் இன்னும் பெருங்குரலெடுத்து, "ஐயோ! என் அன்னை எனக்கு ஊட்டி வளர்த்ததெல்லாம் இப்படி உத்திரமாக வீணே வெளியேறுகிறதே!" என்று அவள் அழைத்துவங்க, இதென்னடா புது வேதனை என்று அலுத்துக் கொண்டாலும் அவள் அழுகையை நிறுத்தும் நோக்கோடு ஆரனின் கால்கள் தானாக அந்தப் பெண்ணை நோக்கி நகர்ந்தது. அவள் கைகளை பரிசோதித்தவனுக்கு அவள் கைகள் முறியவில்லை என்று நன்றாகத் தெரிந்தது.

"பார் பெண்ணே! தெரியாமல் நடந்து விட்டது. அதற்காக என்னை மன்னித்து விடு! உன் கைகள் முறியவில்லை; லேசான சிராய்ப்பினால் ஒரு சில துளிகள் உதிரம் வெளிப்பட்டு ஏதோ கொஞ்சமாக வீங்கியிருக்கிறது. அவ்வளவு தான். இங்கே நின்று அழாமல் விரைந்து வீடு போய்ச் சேர்!" என்று சொல்லிவிட்டு திரும்பி நடக்க முயன்றான் ஆரன். முயன்றான் தான் ஆனால் முடியவில்லை. காரணம் அந்தப்பெண் கிடுக்கி பிடி போட்டு அவன் கால்களை நன்றாகப் பற்றியிருந்தாள்.

"என்னை அடித்து வீழ்த்தி விட்டு, அம்போ என்று விட்டுச் செல்லலாம் என்று மட்டும் நினைக்காதீர்கள். காயப்படுத்திய நீங்களே என்னை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்க்க வேண்டும். இல்லையென்றால் இங்கிருந்து உங்களால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது... சொல்லி விட்டேன் அவ்வளவு தான்!" என்று சொல்லித் தன் பிடியை மேலும் இறுக்கினாள் அந்தப் பெண்.

"என்ன செய்கிறாய் நீ? என்னை விடு!" என்று தர்மசங்கடத்துடன் நெளிந்தான் ஆரன். கொள்ளை அழகுடைய இளம்பெண் ஒருத்தி அவனை வம்பிழுப்பது இதுவே முதல் முறை. அதனால் அவனுக்கு அது இன்ப அவஸ்தையாகிப்போனது.

"முடியாது! என்னைத் தூக்கிச் செல்லுங்கள். கீழே விழுந்ததில் கால் கூட முறிந்திருக்கலாம். யார் கண்டது?" என்று விழிகளை உருட்டிஉருட்டி அவள் பேச, வேறு வழியின்றி அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு செல்ல சம்மதம் தெரிவித்தான் ஆரன்.

"யார் வீட்டுப் பெண்ணம்மா நீ?" என்று ஆரன் கேட்டதற்கு, "எல்லாம் தங்களுக்குத் தெரிந்த வீடு தான் உபசேனாதிபதி. வழியைச் சொல்கிறேன். தெரிகிறதா பாருங்கள்." என்று குறும்போடு கண்

சிமிட்டினாள் அந்தப் பெண்.

"சரி... உன் பெயரென்ன?" என்று கேட்டான் ஆரன்.

"போனதும் உங்களுக்கே தெரிந்து விடப் போகிறது!" என்று மறுபடிக் கண் சிமிட்டினாள் அவள்.

"சரியான வாயாடி தான் போ! உன்னை அங்கேயே விட்டு விட்டு வந்திருக்க வேண்டும்!" என்று அவள் போலவே கேலி பேசினான் ஆரன்.

"இனி என்னை விட்டு உங்களால் தனியே ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது!" என்று அவன் கண் பார்த்து உறுதியோடு சொன்னாள் அவள். அந்தப் பெண் அப்படிச் சொன்னதும் ஏனோ ஆரனின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை இனம்புரியாத ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது. 'இவள் யாரோ என்னமோ... எதுவும் தெரியாமல் அலைபாயாதே மனமே!' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவன் அதன் பின்னர் அவள் மதிமுகத்தை நோக்காது அவள் கூறிய வழியில் அப்படியே சென்றான்.

"அந்த வளைவில் இடது புறம் செல்லுங்கள்!"

"இங்கே வலது புறம் திரும்புங்கள்!"

"இங்கிருந்து பத்து வீடுகள் தள்ளி...!"

"இங்கே தான்! உள்ளே செல்லுங்கள்!"

என்று அதிகாரமாக அவள் வழியை சொல்லச் சொல்ல இயந்திரம் போலவே சென்றான் ஆரன். அவன் மூளை முழுதும் அந்தப் பெண்ணே ஆக்கிரமித்திருந்ததால் செல்லும் வழியை அவன் கவனிக்கத் தவறினான். வீட்டு வாசலில் காவலுக்கு இருக்கும் காவல் வீரர்கள் அவனை கேள்வியோடு பார்த்ததன் அர்த்தத்தையும் அவன் உணரவில்லை.

முன்கட்டைத் தாண்டி அவன் உள்ளே சென்றதும் சற்றும் எதிர்பாராமல் அவன் கைகளில் இருந்து துள்ளி மான் போலக் குதித்து உள்ளே ஓடி மறைந்தாள் அவள். கண நேரத்தில் நிகழ்ந்த நிகழ்வை எண்ணி அவன் ஸ்தம்பித்துப் போக, "ஆரா! வயலுக்குப் போகிறேன் என்றாயே? என்ன உடனே திரும்பிவிட்டாய்? அதற்குள்ளாகவா வேலை முடிந்து விட்டது?" என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுக் கொண்டே ஆரானின் அம்மா பொன்பாவை உள்ளிருந்து வர, ஆரனுக்கு மயக்கம் வராத குறை தான்.

'நம் வீட்டிற்கே எதற்காக அழைத்து வந்தாள்?' என்று புரியாமல் ஆரன் திகைக்க, சிரித்துக் கொண்டே பின்கட்டில் இருந்து பேரரசர்

வீயனும் பேரரசி அயினி அம்மையும் இன்னும் இரு பெரியவர்களும் வர, கோழிக்குஞ்சு போல அப்பிராணியான முகத்தோடு பின்னால் வந்து கொண்டிருந்தாள் அப்பெண்.

'பேரரசரோடு வந்திருக்கிறாள் என்றால் இவள் தான் இளவரசி அரண்யாவோ? ஒருவேளை வீரன் என்று நினைத்து என்னிடம் விளையாடினாளோ?' என்று குழம்பினான் ஆரன்.

"அடடே மாப்பிள்ளையே வந்து விட்டாரே!" என்று அயினி அம்மை கூற, குழப்பத்தின் உச்சிக்கே சென்று விட்டான் ஆரன். அவனுக்குத் தான் வீரனுக்கும் அரண்யாவிற்கும் இடையில் திருமணப் பேச்சிருப்பது தெரியுமே. பின் எதற்காக தம்பியை விடுத்து அண்ணனை மாப்பிள்ளை என்கிறார்கள் என்று புரியாமல் தவித்தான்.

அவன் முகத்தைப் பார்த்தே அவன் குழப்பத்தில் இருப்பதை கண்டு கொண்ட அயினி அம்மை, "இவள் என் ஒன்று விட்ட சகோதரியின் மகள். பெயர் வேல்விழி. உன் வீரத்திற்கும் திறமைக்கும் ஏற்ற பரிசைத் தரவேண்டுமென்று உன் பேரரசர் பல நாள் சிந்தித்து கண்டுபிடித்த பரிசாக்கும் இவள்!" என்று கூறி புன்னகை புரிந்தார்.

பேரரசியின் பொருள் பொதிந்த பேச்சு புரியாமல் ஏட்டுச் சுரைக்காய் ஆன ஆரன் விழித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் வேல்விழி கொல்லென்று சிரித்து விட்டாள். அவன் முகத்தைப் பார்த்த மற்றவருக்கும் சிரிப்பு வந்தாலும் பெரியவர்களானதால் அதை அப்படியே விழுங்கினார்கள்.

"ஐயோ பெரியம்மா, நீங்கள் இப்படி நீட்டி முழக்கினால் அவருக்கு எப்படி விளங்கும்? இது தானப்பா உன் வாழ்க்கைத் துணை என்று பட்டென்று சொன்னால் தானே அவருக்குப் புரியும்." என்று உரக்கச் சொல்லி ஆரனிடம் கண்களால் செய்தி சொன்னாள் வேல்விழி.

வேல்விழியின் செய்தி புரிந்ததும், 'வாழ்க்கைத் துணை' என்று புன்னகையோடு கூறியவளை அதே புன்னகையோடு எதிர் கொண்டான் ஆரன். அவனுக்கும் அவளை மிகப் பிடித்திருந்தது. அவளை சந்தித்த இந்த மூன்று நாழிகைக்குள் ஆரனின் மனதினில் பல ரசாயன மாற்றங்களை சத்தமில்லாமல் செய்திருந்தாள் வேல்விழி.

அவன் கண்களில் வழிந்த காதலைக் கண்ட பொன்பாவைக்கு மகனின் உள்ளம் உள்ளங்கை நெல்லிக்கனியாக புரிய, அயினி அம்மையை நோக்கிச் சம்மதமாக சிரித்தபடியே தலையை அசைத்தார்.

இளையவர்களின் சம்மதத்தைப் பெற்றதும் பெரியவர்களின் உள்ளம் நிறைந்திருந்த நேரத்தில் புயல் போல அங்கே நுழைந்தான்

நாவகன். ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தவனைப் பார்த்ததும் பேரரசரின் புருவங்கள் முடிச்சிட, யாரும் எதையும் கேட்கும் முன்னரே ஆரனை பளாரென்று அனைவரின் முன்னிலையிலும் அறைந்து விட்டான் நாவகன்.

அனிச்சையாக நாவகனின் சட்டையைப் பிடித்து பதிலுக்கு ஆரன் கை ஓங்க, "ஆரா! இளவரசர்!" என்று அவனுக்கு நினைவூட்டினார் பொன்பாவை.

சில நொடிகளுக்கு முன்பிருந்த சந்தோஷம் முற்றிலுமாக வடிய, வாடிய முகத்தோடு கையைக் கீழிறக்கினான் ஆரன். அவன் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்ட நாவகனுக்குள் ஒரு குரூர திருப்தி ஏற்பட்டது.

## அத்தியாயம் 8

முகத்தை கல்லாக்கினாலும் ஆரனின் கண்கள் அவன் கையாலாகாத தனத்தை வெளிப்படுத்தியது. அதனைக் கண்டு மனம் வெதும்பிய மற்றவர் பேசுவதற்கு முன்பே முந்திக்கொண்டு, "என்ன திண்ணக்கம் இருந்தால் புனல் நாட்டின் பட்டத்து இளவரசியை, என் தங்கையை தொட்டுத் தூக்கி இருப்பாய்? முறை தவறிய உன் கைகளை இப்போதே வெட்டுகிறேன் பார்!" என்று நாவகன் கத்தத் துவங்கினான்.

"என்னை மணப்பவர் என்னைத் தூக்காமல் பிறகு உங்களையா தூக்குவார்? எப்படி இருந்தாலும் அது என் சொந்த விஷயம், அதில் தலையிட உங்களுக்கு உரிமை இல்லை. அவரை அவமானப்படுத்தியதற்கு இப்போதே மன்னிப்பு கேளுங்கள்!" என்று அமர்ந்த குரலில் சொன்னாள் வேல்விழி.

"புனல் நாட்டின் வருங்கால அரசனை அறையும் தைரியம் ஒரு சாதாரண இளவரசனுக்கு எப்படி வந்தது? நீ மாப்பிள்ளையிடம் மன்னிப்பு கேட்கத் தான் வேண்டும். இல்லையென்றால் அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு எங்கிருந்து வந்தாயோ அங்கேயே சென்று விடு!" என்று வெறுப்புடன் சொன்னார் அயினி அம்மை.

பிறந்ததில் இருந்து பாசத்தை மட்டுமே கண்டிருந்த அவன் அன்னையின் முகத்தில் முதன்முதலாக அப்பட்டமான வெறுப்பைக் கண்டதும் சற்று அவசரப்பட்டு விட்டோமோ என்று நாவகன் ஒரு நொடி தயங்கினான்.

"இவனை வேல்விழிக்கு வரனாக முடிவு செய்திருப்பது பற்றி எனக்கென்ன தெரியும்? நகர வீதியில் வேல்விழியைத் தூக்கிக் கொண்டு

இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தவனைப் பார்த்து ஒரு பொறுப்புள்ள அண்ணனாக நான் கோபப்பட்டதில் தவறென்ன இருக்கிறது?" என்று நடந்ததை ஞாயப்படுத்த முயன்றான் நாவகன்.

"பொறுப்புள்ள அண்ணனா? அது போகட்டும். இப்போது அதைப் பற்றி விவாதிக்க எனக்கு விருப்பமில்லை. ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். என் விருப்பமின்றி ஒரு அந்நிய ஆடவன் என்னைத் தீண்ட முடியும் என்றா நீங்கள் நினைக்கின்றீர்கள்? அப்படி நிகழ்ந்திருந்தால் தொட்ட கையை வெட்டி இருப்பேன். என்னவருடன் நான் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு அவரை... என்னால் நினைக்கக் கூட முடியவில்லை. ச்சை! இப்போதே அவரிடம் மன்னிப்பை வேண்டுங்கள். அப்பா, பெரியப்பா... என்ன இது எதுவும் பேசாமல் ஏன் இப்படிச் சிலைகளைப் போல நிற்கின்றீர்கள்?" என்று பொரிந்து விட்டாள் வேல்விழி.

"நீ சின்னப் பெண், உனக்கு ஒன்றும் தெரியாது. அரச பதவிக்காக என் தங்கையை இவன் தம்பியை விட்டு மயக்கியவன் இவன். இப்போது அப்பாவியான உன்னையும் மயக்கி இருக்கிறான் என்று நன்றாகத் தெரிகிறது." என்று வார்த்தைகளை விஷத்தில் தோய்த்து வீசினான் நாவகன்.

அவன் கூறிய குற்றச்சாட்டுக்களை கேட்டதும், "ஈசா!" என்று இருகாதுகளையும் பொத்திக்கொண்டு கண்ணீர் வடித்தார் பொன்பாவை. *'ஒரே நிமிடத்தில் என் குடும்பத்தை எப்படிப் பழித்து விட்டான்!'* என்று ஆரனின் நரம்புகளும் முறுக்கேறத் துவங்கியது.

"யார் சின்னப் பெண்? என் மணாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கு மட்டுமே உண்டு. பெரியம்மாவின் முகத்திற்காகப் பார்க்கிறேன். இல்லையென்றால் என் குடும்பத்தைப் பழித்த உங்கள் நாவை அக்கணமே துண்டாக்கி இருப்பேன். இனி ஒரு தடவை இப்படி முறை தவறி பேசினீர்கள் என்றால் உங்களுக்கு நேரும் எதற்கும் நான் பொறுப்பாக முடியாது. ம்! வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்!" என்று உறுமினாள் வேல்விழி. அவளின் அடங்காத சினம் அவமானப்பட்ட ஆரனின் மனதிற்கு எத்தனையோ ஆறுதல்களைத் தந்தது.

"சொல்வதைப் புரிந்து கொள்ளும் புத்தி இல்லை?" என்று வேல்விழியின் கையைக் கோபமாகப் பற்றினான் நாவகன். வேல்விழியின் பூந்தளிர் கரத்தை நாவகன் பிடித்ததும் நெற்றி நரம்பு புடைக்க புஜங்கள் துடிக்க எந்த நிமிடமும் வெடித்து விடுபவனைப் போல ஆரன் நின்றிருந்தான். இதற்கு மேலும் அமைதியாக இருந்தால் பெரும் பிசகாகிப் போகும் என்பதை பேரரசர் உணர்ந்தார். அதனால்,

"நிறுத்து!" என்று ஆணையிட்டார் பேரரசர் வீயன்.

"தந்தையே..." என்று ஆரம்பித்தான் நாவகன்.

வலது கையை உயர்த்தி அவனை அமைதியாக்கியவர், "என்று நீ இந்திரரகசியப் போட்டியில் ஏமாற்றினாயோ அந்த நிமிடமே என் பாசத்தை இழந்தாய். என்று நீ யாருக்கும் சொல்லாமல் நள்ளிரவில் அரண்மனையை விட்டு வெளியேறினாயோ, அப்போதே இளவரசன் என்ற பட்டத்தையும் நீ இழந்து விட்டாய். பெற்ற கடனுக்காகவும் போரில் நீ செய்த உதவிக்காகவும் மட்டுமே உன்னையும் நீ கூட்டி வந்த அந்தப் பெண்ணையும் அரண்மனையின் உள்ளே இருக்க அனுமதித்திருக்கிறேன். அப்படியிருக்க, வேற்று நாட்டு அரசனாக முடிசூடப் போகிறவனை கைநீட்டும் அதிகாரமோ அருகதையோ உனக்கு இல்லை. உன் இடம் எதுவென்று புரிந்து நடந்து கொண்டால் உன் தலை தப்பும். இப்போது மாப்பிள்ளையிடம் மன்னிப்புக் கேள்!" என்று தெளிவாகக் கூறினார் பேரரசர்.

எதிர்த்து பேச வாயெடுத்தவன் பேரரசரின் கண்களில் தெரிந்த சினத்தையும் வெறுப்பையும் பார்த்து பயந்தே போனான். முகம் கறுக்க, "மன்னித்து விடு ஆரா!" என்று ஆரனின் முகம் பார்க்காமல் முணுமுணுத்து விட்டு ரணதீரனின் மாளிகையை விட்டு வெளியேறினான் நாவகன். காமரியிடம் சொல்லி எப்படியாவது அந்த பாதகத்தி வேல்விழியைப் பழிவாங்க வேண்டும் என்று முடிவு செய்தவன், காமரியைத் தேடிக்கொண்டு சென்றான்.

நாவகன் சென்றதும், "சரி சரி! இப்படியே நின்றால் என்னாவது? திருமண நாளைக் குறிக்க வேண்டும். மக்களுக்கு அறிவிக்க வேண்டும்! இன்னும் எவ்வளவு வேலை இருக்கிறது!" என்று சூழ்நிலையை லகுவாக்கும் பொருட்டு பேரரசி கூறினார்.

அனைவரும் அவர் கருத்தை ஆமோதிக்கும் போது, ஆரன், "மன்னிக்கவும் பேரரசி! இந்தத் திருமணத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. வேல்விழிக்குத் தகுதியான மாப்பிளையாகப் பார்த்துத் திருமணம் செய்து வையுங்கள்!" என்று விட்டத்தை பார்த்துச் சொன்னான்.

"மாப்பிள்ளை! அவன் ஏதோ சொன்னான் என்பதற்காக எங்கள் மகளை பழிவாங்கி விடாதீர்கள்! நீங்கள் கூறியதைக் கேட்டதும் குழந்தையின் முகம் எப்படி வாடி விட்டது பாருங்கள்!" என்று சொன்னார் பேரரசி.

"நான் நாவகனுக்காக இந்த முடிவை எடுக்கவில்லை பேரரசியாரே. வேல்விழி ஒரு இளவரசி என்று தெரிந்திருந்தால் அவள்

பக்கம் கூட நான் திரும்பியிருக்க மாட்டேன். எனக்குப் பதவியின் மீதெல்லாம் ஆசை இல்லை. காணி நிலமும் கிணற்றுத் தண்ணீரும் ஓலைக் குடிலும் போதும். வேல்விழி அற்புதமான பெண். ஆனால் அவளை மணக்கும் அதிர்ஷ்டம் எனக்கில்லை. தயை கூர்ந்து என்னை வற்புறுத்தாதீர்கள்!" என்று பொறுமையாக ஆனால் உறுதியாகச் சொல்லிவிட்டு தோட்டத்திற்கு சென்று விட்டான் ஆரன்.

என்ன இது ஆரம்பிக்கும் போதே இப்படித் தடைபட்டு விட்டதே! என்று எல்லோரும் சோர்ந்து போகும் போது, வேல்விழி மட்டும், "அத்தை! உங்கள் மகனுடன் நான் பேசலாமா?" என்று பொன்பாவையிடம் புன்னகையோடு அனுமதி கேட்டாள்.

"என் அனுமதியோடு தான் அவனைத் தூக்கி வரச் சொன்னாயா?" என்று நிலைமையை லேசாக்கும் பொருட்டு பொன்பாவை கேலியாகக் கூற, வேல்விழியின் கன்னங்கள் செம்மையாக, ஒரே ஓட்டமாக ஆரனைத் தொடர்ந்து ஓடினாள். அதைப் பார்த்த மற்றவர்களுக்கு, எப்படியாவது ஆரனின் மனம் மாறாதா என்றிருந்தது.

"ஆரா! ஆரா! நில்லடா... என்னால் உன்னைப் போல வேக வேகமாக நடக்க முடியாது!" என்று கத்திக் கொண்டே பின்னோடு வருபவளை என்ன செய்வதென்றே தெரியாமல் பெருமூச்சு விட்டான் ஆரன்.

அவன் நின்ற நொடியைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்ட வேல்விழி தன் வேகத்தை அதிகப்படுத்தி அவனை அடைந்து விட்டாள். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க மூச்சு விட சிரமப்பட்டு நிமிர்ந்து நிற்க முடியாமல் குனிந்து குனிந்து மூச்சு விடுபவளைப் பார்க்க ஆரனுக்கு பரிதாபமாக இருந்தது. இப்படி இவள் ஓடி வருவது எனக்காகத்தானே என்பதை அறிந்தவனுக்குள் காதல் ஊற்றெடுக்க, சற்று கர்வமாகக் கூட இருந்தது. உடனே அருகில் இருந்த தென்னை மரத்தில் இருந்து ஒரு இளநீர்க் காயைப் பறித்தவன், பதமாக வெட்டி அவளிடம் பருகத் தந்தான்.

நாக்கு வறண்டு போயிருந்தவளுக்கு இளநீர் தேவாமிர்தமாக இருக்க, ஒரு சொட்டு மிச்சம் வைக்காமல் குடித்தாள். அவள் குடித்த வேகத்தை பார்த்தவன் மற்றுமொரு காயைத் தர, அதனையும் குடித்த பிறகே வேல்விழி தெளிந்தாள்.

"என் மீது அன்பில்லாமலா என் குரலுக்கு நின்றாய்?" என்று கேலியாக அவள் கேட்க, முகத்தை வேண்டுமென்றே கடினமாகிக் கொண்டான் ஆரன்.

"ஒரு இளவரசியின் குரலுக்கு எப்படி நிற்காமல் இருக்க முடியும்? அது பெருங்குற்றமல்லவா?" என்றான் ஆரன்.

"நான் இளவரசியானது என் பிழையா ஆரா?" என்று கண்கள் குளமாகக் கேட்டவளை அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டுமென்று துடித்த கரங்களை மிகுந்த சிரமப்பட்டு அடக்கினான் ஆரன்.

"உன் மனம் படும்பாடு என்னவென்று நானறிவேன் ஆரா. உன் மனதிற்குள் எப்போதோ நான் புகுந்து விட்டேன் என்பதையும் நானறிவேன். உன் உதடுகள் பொய் சொல்லலாம். ஆனால் இந்தக் கண்கள்... என் ஸ்பரிசம் பட்டதும் பந்தையக் குதிரையாகும் இந்த நெஞ்சம்... என்னை முழுதாக உனக்குள் அடக்கத் துடிக்கும் இந்தக் கைகள்... இவை எதுவுமே பொய் சொல்லாது!" என்று ஆரனின் விழிகளைப் பார்த்து கூறியவள் மெல்ல அவன் தோள் சாய்ந்தாள்.

"உனக்கு அரசனாவதற்கு விருப்பம் இல்லாவிட்டால் எனக்கெதற்கு இந்த இளவரசிப் பட்டம்? உனக்கு வேண்டுமானால் என்னைத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் வெகுகாலமாக நான் உன்னை கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். என் உள்ளத்தில் நீ மட்டுமே நீக்கமற நிறைந்திருக்கிறாய் ஆரா! உன் முன்னால் அற்பமான இந்த பகட்டு வாழ்வு தூசிக்குச் சமம். உன் விருப்பப் படியே காணி நிலம், கிணற்றுத் தண்ணீர், ஓலைக் குடில் இவற்றோடு... இந்த பத்தினிப் பெண்ணும் இருந்து விட்டுப் போகிறேனே!" என்று சொன்னவளின் கண்ணீர் ஆரனின் தோள்களை நனைக்க, அப்படியே உருகி விட்டான். தூய்மையான காதலும் உண்மையும் எப்போதுமே வெல்வது தானே ஞாயம்.

"ஷ்! அழக்கூடாது! ஆரன் அவன் மனைவியை சந்தித்த முதல் நாளே அழ விட்டான் என்றா வரலாறு சொல்ல வேண்டும்? இந்த விழிகளின் கணையில் நான் விழுந்து நேரமாகிறது கண்ணே! என் மனதினில் நீ தான் நிறைந்திருக்கிறாய். என்னை எனக்காக ஏற்றுக் கொண்ட உன்னை, உனக்காகவே நானும் முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறேன்." என்று வேல்விழியின் முன்நெற்றியில் முத்திரை பதித்தான் ஆரன்.

"உங்கள் காணி நிலக் கனவு என்னாவது?" என்று கேலி பேசினாள் வேல்விழி.

"கனவை யார் கைவிட்டார்கள்? வருடத்தில் பாதி நாட்கள் புனல் நாட்டின் அரசியாகவும், மீதி நாட்கள் என் இதய வீட்டின் அரசியாகவும் நீ இருக்க மாட்டாயா என்ன? உங்கள் நாட்டின் அரசனாக நான் முடி சூட ஒருபோதும் சம்மதியேன் கண்ணே! ஆனால் உனக்குப்

பக்கபலமாக இருந்து நீ நல்லாட்சி புரிய நான் உதவியாக இருப்பேன், ஒரு சிறு அணில் போல!" என்று புன்னகைத்தான் ஆரன்.

"நான் புண்ணியம் பல செய்திருக்கிறேன் அன்பே, உங்களை மணக்க!" என்று ஆழ்மனதிலிருந்து கூறினாள் வேல்விழி.

"நானும் கூடத்தான்!" என்று அவளின் காதலுக்கு சற்றும் குறையாத காதலோடு கூறினான் ஆரன். அன்று காலையில் எழுந்தவனிடம், இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்குக் காதல் வருமென்று யாரேனும் சொல்லி இருந்தால் நிச்சயம் அவர்களைப் பைத்தியக்காரன் என்று சொல்லி இருப்பான். ஆனால் மாலைக்குள்ளேயே ஆரனுக்குக் காதல் வந்து கல்யாணத் தேதியும் முடிவாகி இருந்தது. வீரனிடம் விஷயத்தை சொல்ல ஆர்வமாக காத்திருந்தவர்களுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது.

***********************************************************

அரசாணை ஆற்றங்கரைக்குப் பக்கத்தில் இருந்த வனத்திற்கு வீரனும் துகிரனும் சென்றதும் எங்காவது மனிதத் தடம் தெரிகிறதா என்று நாலாபுறமும் கண்களை சுழல விட்டுக் கொண்டே பயணித்தனர். மரங்கள் அடர்ந்த காட்டின் நடுப்பகுதியை நோக்கி அவர்கள் செல்லச் செல்ல வெளிச்சம் வெகுவாக குறைந்து கொண்டே வந்தது. நேரம் சென்றதே ஒழிய எப்படித் தேடினாலும் யாரையும் காணவில்லை என்ற காரணத்தால் இருவரும் வெவ்வேறு திசைகளில் பிரிந்து சென்று தேடுவது என்றும் சமீரணனைப் பார்த்ததும் மற்றவருக்கு சமிக்கை செய்வது என்றும் முடிவு செய்தனர்.

அதன்படியே துகிரன் கிழக்கே செல்ல, வீரன் மேற்கே செல்லத் துவங்கினான். காட்டின் மையப்புள்ளிக்கு வீரன் வந்ததும், அவனிருந்த இடத்திலிருந்து கால் மைல் தொலைவில் பறவைகள் திடீரென பறக்கும் ஓசை அவனுக்குக் கேட்டது. அன்னார்ந்து பார்த்தவனுக்குப் பல பறவைகள் தலைதெறிக்க ஓடுவது போலிருந்தது. பறவைகள் திடீரெனப் பறந்தால் நிச்சயம் அங்கே ஏதோ அல்லது யாரோ இருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்த வீரன், தன் குதிரையை மெல்ல நகர்த்தினான்.

சப்தம் வந்த இடத்தை நெருங்கியதும் கவனமாக வீரன் கண்களைச் சுழற்ற, அங்கே ஒரு ஓரத்தில் ஒரு உருவம் மறைந்திருந்தது. கண்களையும் தலையையும் அசைத்து அசைத்து எட்டிப்பார்த்த தினுசிலேயே அது யாரையோ தேடிக் கொண்டிருக்கிறது அல்லது யாருக்காகவோ காத்திருக்கிறது என்று புரிந்து கொண்டான் வீரன். தலையையும் முகத்தையும் மறைத்திருந்தாலும் அது பெண் என்று பார்த்ததுமே அவன் கண்டு கொண்டான். ஒரு வேளை சமீரணனின்

காதலியாக இருக்கக் கூடுமோ என்று எண்ணியவன் குதிரையை விட்டுக் கீழிறங்கி பூனை போல அவளை நோக்கி நகர்ந்தான்.

அவள் முதுகுப் பக்கம் வீரன் நகர்ந்த போது சட்டென பூமியில் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து வீரனை நோக்கி வீசினாள் அந்தப் பெண். வாள் வீச்சில் வல்லவனான வீரன், அவள் கைகள் வாளை எடுக்கும் போதே சுதாரித்து அவன் வாளைக் கொண்டு அவள் தாக்குதலைச் சமாளித்தான். வாளும் வாளும் மோதிக்கொள்ள அங்கே ஒரு சிறு யுத்தமே நிகழ்ந்து கொண்டிருந்தது. வீரனுக்கு இணையாக இல்லை என்றாலும் அந்தப் பெண்ணும் வாள்வீச்சில் வல்லவள் என்று அவள் கத்தியை பிடித்து சுழற்றும் தினுசிலேயே அறிந்து கொண்டான் வீரன். எதிரியாக இருந்தாலும் பெண்ணாகிப் போன காரணத்தால் அவளை காயப்படுத்தாமல் பிடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டான். ஆனால் வீரனை உயிருடன் விடும் எண்ணம் எதுவும் அவளுக்கு இல்லை போலும். சுழன்று சுழன்று அவனைத் தாக்கினாள்.

ஒரு கட்டத்தில் வீரனின் கழுத்தைக் குறி வைத்து அவள் வாள் வீச, வீரன் சட்டென குனிந்து அவன் சிரசை காப்பாற்றிக் கொண்டான். ஆனால் அவன் தலையில் வைத்திருந்த தலைப்பாகை கீழே உருண்டது. குதிரையில் பயணம் செய்யும் போது முகத்திலடிக்கும் புழுதியில் இருந்து காத்துக்கொள்ள வீரன் தலைப்பாகைத் துணியைக் கொண்டு நாசியையும் வாயையும் மறைத்திருந்தான். தலைப்பாகை உருள, வீரனின் முகம் தெளிவாகத் தெரிந்தது.

திடீரென வீரனைப் பார்த்ததும் அவள் விழிகள் ஆச்சர்யத்தில் விரிந்தது. "நீங்கள் எங்கே இங்கே?" என்று தேனினும் இனிய குரலில் இயம்பினாள்.

யாரது? என்று புரியாமல் வீரன் குழம்ப, கிண்கிணி நாதமென சிரித்தாள் அவள். "என்னைத் தெரியவில்லையா? நான் தான் காமரி!" என்று சொல்லித் தன் முகத்தை மறைத்திருந்த கறுப்புத் துணியை விலக்கினாள். வானில் முழுமதியைச் சூழ்ந்திருக்கும் கருமேகங்கள் விலகியதும், பிரகாசிக்கும் பௌர்ணமி நிலவைப் போல காமரி அத்தனை அழகாக இருந்தாள். சூரிய ஒளி பட்ட அவள் மேனி வைரமென ஜொலிஜொலித்தது; அவளின் கருநீலக்கண்கள் நீலமாணிக்கக் கற்களைவிட அதிகமாக ஒளிர்ந்தது. ஆனால் வீரனின் சிந்தையை அவள் அழகு எட்டவேயில்லை.

"வணக்கம் தேவி! நீங்கள் எதற்காக இங்கே ஒளிந்திருக்கின்றீர்கள்?" என்று சந்தேகமாகவே கேட்டான் வீரன்.

'நாவகனோடு வந்திருக்கும் பெண்ணைப் பார்த்தால்

சந்தேகிக்கத் தோன்றுகிறது' என்று துகிரன் அடிக்கடி சொல்வதுண்டு. வீரனின் மனதை காமரி மாற்றிவிடக் கூடாது என்பதால் நேரடியாக அவள் யாரென்று சொல்லாமல் மறைமுகமாக அவளைப் பற்றிய உண்மைகளை துகிரன் அவ்வப்போது சொல்லி வருவான். இப்போது சமீரணன் பதுங்கி இருப்பதாகச் சொன்ன இடத்தில் காமரியைக் கண்டதும் வீரனின் சந்தேகம் அதிகமாயிற்று. அதனால் உயர்த்திய வாளை அவன் இறக்கவே இல்லை.

"இங்கே சமீரணன் மறைந்திருப்பதாக உங்களுக்குக் கிடைத்த அதே செய்தி எனக்கும் கிடைத்தது. அதனால் நானும் என் தோழி கனலியும் காவல் படைத்தலைவன் பாதுகனின் உதவியோடு இங்கு வந்து, ஆளுக்கொரு திசையாகப் பிரிந்து சமீரணனை தேடிக் கொண்டிருக்கிறோம்." என்றாள் காமரி. வீரனின் ஒதுக்கம் அவளுக்கு எரிச்சலைத் தந்தாலும் அவன் மீதிருந்த அவளது மையலை அவன் அருகாமை அதிகரித்தது.

"சமீரணன் கிடைத்தானா?" என்று விறைப்பாகவே கேட்டான் வீரன்.

"இல்லை. நான் அவனைத் தேடிக் கொண்டிருக்கும் போது இந்த இடத்தில் இருந்து பல்வேறு பறவைகள் பறப்பதைப் பார்த்தேன். இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்த போது வேறு யாரோ வருவது போலிருந்தது. அதனால் இங்கு வந்து மறைந்திருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் நீங்கள் வந்தீர்கள். உங்களை சமீரணன் என்றெண்ணித் தாக்கி விட்டேன். விளக்கம் போதுமா?" என்று புன்னகைத்தாள் காமரி. அவள் புன்னகைக்குக் கூட வீரன் மயங்காததைக் கண்டு வசீகரணம் எனப்படும் வசியக்கலையை அவன் மீது பிரயோகப்படுத்த முடிவெடுத்து அவள் மந்திரத்தை உச்சரிக்கத் துவங்கும் நேரம், துகிரன் வாயும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் இருந்த கனலியை கிட்டத்தட்ட இழுத்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தான்.

"வீரா! இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? ஒளிந்து ஒளிந்து எதையோ செய்து கொண்டிருந்தாள். கேட்ட கேள்வி ஒன்றிற்கு கூடச் சரியான பதிலளிக்கவில்லை. அது தான் பிடித்துக் கொண்டு வந்து விட்டேன்." என்று தெரிவித்தான் துகிரன். வீரனின் கவனம் தன் மேல் இல்லாத போது வசியத்தினால் பெரிய உபாயம் இல்லை என்பதை உணர்ந்த காமரிக்கு துகிரன் மீது எல்லையற்ற வெறுப்பு தோன்றியது. அவனை அங்கிருந்து அப்புறப்படுத்தவே அவள் நினைத்தாள். பின்னே எவ்வளவு சிரமப்பட்டு சமீரணன் இங்கே உலவுவதாக கதை பரப்பி

வீரனை தனியே சந்திக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாள்! இந்த நேரத்தில் கூட ஒட்டுப் புளியாகவே வீரனுடன் இருக்கும் துகிரனின் மீது அவளுக்கு வெறுப்பு தோன்றுவதோ இல்லை அவனை அங்கிருந்து அகற்ற அவள் பாடுபடுவதோ காமரியைப் பற்றி தெரிந்த எவருக்கும் வியப்பளிக்காது.

"என் தோழியை எதற்காக இப்படி மனிதத்தன்மை இன்றி கட்டி இழுத்து வருகிறீர்கள்? மரியாதையாக முதலில் அவள் கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள்!" என்று சொல்லிக் கோபமாக உறுத்து விழித்தாள் காமரி.

"நீங்களே யாரென்று எனக்குத் தெரியாது. இதில் உங்கள் தோழிக்குப் பரிந்து நீங்கள் சொல்லும் எதையும் செய்ய நானென்ன உங்கள் பணிமனிதனா?" என்று எகத்தாளமாகக் கேட்டான் துகிரன்.

"வார்த்தைகளில் கவனம் இருக்கட்டும். என்னை யாரென்று உனக்குத் தெரியாது?" என்று மீண்டும் கேட்டாள் காமரி.

"தெரியாது!" என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்து தோளை அலட்சியமாகக் குலுக்கினான் துகிரன். அவன் செயலைக் கண்டு அச்சத்தில் விரிந்தது கனலியின் கண்கள்.

சில நாட்களுக்கு முன்பு வீரனின் மாளிகைக்குச் சென்றிருந்த போது துகிரனுக்குக் காமரியை பொன்பாவை அறிமுகப்படுத்தி வைத்திருந்தார். அதுமட்டுமின்றி வீரனைத் தனிமையில் சந்திக்க காமரி முயன்றபோதெல்லாம் அதற்கு முட்டுக்கட்டை போட்டவன் துகிரன் என்பதையும் அவள் அறிவாள். அப்படியிருக்க, யாரென்றே தெரியாது என்று திமிராகத் துகிரன் சொல்வதைக் கேட்டதும் காமரி கொதிநிலைக்கே சென்றாள்.

"நான்... நான்... நாவகனை மணமுடிக்கப் போகிறவள்! இந்த நாட்டின் வருங்கால பேரரசி!" என்று கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள் காமரி.

"ஓ! நீங்கள் தானா அது? உங்கள் முகத்தை நினைவு வைத்துக்கொள்ள முடியவில்லை. அதற்காக அடியேனை மன்னிக்கவும்." என்று போலியாகத் தாழ்ந்து பேசினான் துகிரன்.

வீரனின் முன்னாலேயே நாவகனை மணக்கப் போகிறவள் என்று அவள் வாயாலேயே சொல்ல வைத்த திருப்தி துகிரனின் முகத்தில் நன்றாகவே தெரிந்தது. அதனைக் கண்டுகொண்ட காமரியின் ரத்தம் சூடேறியது. அதிலும் 'உங்கள் முகம் நினைவில் வைத்துக்கொள்ளும் படி அத்தனை சிறப்பாக இல்லை!' என்ற பொருளில் துகிரன் பேசியது

அவளது ஆத்திரத்தை அதிகரித்தது; 'இந்த அகிலத்தின் பேரழகி நானே!' என்கிற அவளின் அகங்காரத்தை அசைத்துப் பார்த்தது. எவ்வளவு திமிர் என்று காமரிக்கு உள்ளுக்குள் எரிய, இவனை ஏதாவது செய்ய வேண்டுமே என்று யோசிக்கலானாள். காமரியின் மூளை செல்லும் திசையை அறிந்த கனலி, காரியம் மிஞ்சும் முன்னே கையையும் தலையையும் ஆட்டி ஆட்டி ஏதோ சொல்ல முயலுபவளைப் போல நடித்தாள். அவள் அசைந்ததும் அவளைக் கட்டியிருந்த கயிற்றை வேண்டுமென்றே துகிரன் இறுக்க, வலியில் முனகினாள் கனலி.

அவள் வலி பொறுக்காது துடிப்பதைப் பார்த்த வீரன்,"என்ன இது துகிரா? அந்தப் பெண் எதையோ சொல்ல முயல்கிறாள் பார். அவளை விடுவித்து விடு!" என்று கடிந்து கொண்டான்.

வீரனின் சொல்லைத் தட்ட முடியாமல் கனலியை விடுவித்து விட்டு, "என்ன சொல்ல வேண்டும்?" என்று அவளிடம் சற்று கோபமாகவே கேட்டான் துகிரன்.

"அப்பப்பா! பெருவளநாட்டு ஆடவர் எல்லாம் வெறும் முரடர்கள் போலும். பெண்களிடம் மென்மையாக நடந்துகொள்ளக் கூடத் தெரியாத நீங்கள் எல்லாம் என்ன தான் கல்வி கற்றீர்களோ? அதிலும் எங்கள் தலைவியைத் தெரிந்து கொண்ட பிறகும் இப்படி என்னைக் கட்டி வைத்திருந்தது எந்த வகையில் ஞாயம்?" என்று படபடவென பொரிந்தாள் கனலி.

"மன்னித்துவிடம்மா! எதிரி நாட்டு ஒற்றன் என்று உன்னை நினைத்து சிறை செய்திருப்பானே ஒழிய, அனாவசியமாக உன்னிடம் கடுமை காட்டியிருக்க மாட்டான் என் தோழன். நம்மவர்கள் என்று உறுதிபட தெரியும் முன்பு எச்சரிக்கையோடு இருப்பது அவசியமல்லவா? உன் தலைவியே என் முகம் தெரியும் வரை என்னுடன் வாட்போர் செய்தார்கள். வேண்டுமானால் அவர்களிடமே கேளேன்!" என்று நயமாக எடுத்துரைத்தான் வீரன்.

காமரியைக் குறிப்பாக கனலி பார்க்க, அவள் பார்வையின் பொருள் புரிந்த காமரி, தற்சமயத்திற்கு துகிரன் பிழைத்துப்போகட்டும் என்று விட்டுவிட்டாள். வீரனின் முன்பு எதற்குத் தேவையில்லாத ரசாபாசம் என்றும் காமரி எண்ணினாள். உடனே ஒரு போலிப் புன்னகையை அணிந்து கொண்டு, "உண்மை தான் கனலி. சமீரணன் தப்பி இருக்கும் இந்த நேரத்தில் பார்ப்பவரை எல்லாம் சந்தேகிப்பது அவர்கள் கடமை. அதனால் இந்த விஷயத்தை பெரிதுபடுத்தாதே. விட்டுவிடு!" என்று பெரிய மனதோடு சொல்வதைப் போல நடித்தாள் காமரி.

"நீங்கள் சொல்வதால் இவரை மன்னிக்கிறேன் தலைவி!" என்று மொழிந்துவிட்டுத் துகிரனை முறைத்தாள் கனலி. ஆனால் உண்மையில் துகிரன் காமரியிடம் இருந்து தப்பியது குறித்து அவளுக்கு மகிழ்ச்சியே. தேவையில்லாமல் ஒரு உயிரைப் போக்குவது கனலிக்கு எப்போதும் பிடிக்காது. அதிலும் துறுதுறுவென்று இருக்கும் துகிரனை அவளுக்குப் பிடித்துப்போனது. வீரனைச் சேர்ந்தவர்களின் மீது எப்போதும் ஒரு கண் இருக்கட்டும் என்ற காமரியின் உத்தரவின் படி, துகிரனின் நடவடிக்கைகளை துல்லியமாகக் கவனித்துக் கொண்டிருந்தவளுக்கு அவனை நிரம்பப் பிடித்தது. இந்தப் பிடித்தம் காதலாகுமா என்ற கேள்வி அவளுக்குள் எழுந்தாலும், வருங்காலத்தைப் பற்றிக் கவலைப் பட்டு நிகழ்காலத்தை இழக்க அவர் தயாராக இல்லை. அதனால் அவ்வப்பொழுது துகிரனை தூரத்தில் நின்று ரசிப்பதோடு அவள் நிறுத்திக் கொண்டாள்.

"சரி! பாதுகன் எங்கே?" என்றாள் காமரி.

"அவர் வேறெங்கோ சென்றிருப்பார் போலத் தெரிகிறது தேவி. அவருக்காக நாம் காத்திருந்தால் நேரமாகும். அந்தி சாயத் துவங்கி விட்டது. இனி தாமதித்தால் மிகவும் இருட்டிவிடும். இங்கிருந்து செல்ல சரியான பாதை கூட நமக்குத் தெரியாது. அதனால் வெளிச்சம் இருக்கும் போதே நாம் புறப்படலாம்!" என்று சொல்லி ஓரக்கண்ணால் துகிரனை பார்த்தாள் கனலி.

'நான் உன்னை பத்திரமாக அழைத்துச் செல்கிறேன்!' எனத் துகிரன் சொல்வான் என்று நினைத்தவளுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. அந்த அளவிற்கு பாறை முகத்தோடு துளி சலனமும் இல்லாமல் இருந்தான் துகிரன். ஆனால் வீரனுடன் ஒரே குதிரையில் பயணம் செல்ல வேண்டும் என்று முடிவு செய்து விட்ட காமரி, அவளது குதிரையையும் கனலியின் குதிரையையும் பார்த்து ஏதோ சொல்ல, அடுத்த நொடியில் மின்னலென சீறிப் பாய்ந்து வேறு புறம் நோக்கி அவை ஓடத் துவங்கின.

"ஐயோ! என் குதிரை! ஐயோ! என் குதிரை!" என்று அவற்றின் பின்னோடு ஓடுவதைப் போலவே காமரி ஒரு நாடகத்தைத் துவங்க, கனலி வீரனைப் பார்த்து, "பேரரசியார் காமரி தேவியுடன் தான் இப்போதெல்லாம் இரவு உணவு உண்கிறார். நேரம் வேறு வீணாகச் சென்றுகொண்டிருக்கிறது. அதனால் தயவு செய்து அவரை மட்டும் நீங்கள் அரண்மனையில் விட்டு விடுங்களேன்! இங்கே சமீரணன் இருப்பதற்கான அறிகுறி நிச்சயம் இல்லை. தயவு செய்து பேரரசிக்காக..." என்று கெஞ்சியபடியே இழுத்தாள் கனலி.

அவனின் அன்னைக்கு நிகரான பேரரசியார் தாமதமாக உண்ணுவதா என்றெண்ணியவன், "சரி!" என்று ஒப்புக்கொண்டான்.

கனலியின் எண்ணம் புரிய துகிரனின் முகம் கடுத்தது. "சரி, வா வீரா! நானும் வருகிறேன். நம் வேலை இன்று தோல்வி தான்! சமீரணனைப் பிறகு தேடிக் கொள்ளலாம். " என்று துகிரன் கிளம்ப, இவனுக்கு உயிரோடு வீடு திரும்பும் எண்ணமே இல்லை போலும் என்று மலைத்தாள் கனலி.

"நானும் அதைத்தான் நினைத்தேன். உன் குதிரையில் இந்தப் பெண்ணை ஏற்றிக் கொள். வழியில் அந்தப்பெண்ணை ஏற்றிக் கொள்ளலாம். சீக்கிரம்!" என்று வீரன் சொன்னதும் துகிரனின் முகத்தைப் பார்த்த கனலி அடக்கமாட்டாமல் நகைத்தாள்.

இவள் எதற்கு நகைக்கிறாள் என்று வீரன் புரியாத பார்வை பார்த்தாலும், காரணம் புரிந்த துகிரனுக்கு அவளை அங்கேயே விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் போலத் தோன்றியது. இருப்பினும் வீரனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு கனலியைத் தன் குதிரையில் ஏற்றிக் கொண்டு தானும் ஏறினான்.

வீரன் அவன் குதிரையின் மீது தாவி ஏறி காமரியைத் தேடினான். சற்றுத் தொலைவில் அவள் ஓடுவதைக் கண்டு, "துகிரா! நான் முன் செல்கிறேன்!" என்று சொல்லிவிட்டுக் காற்றெனப் பறந்தான்.

காமரியின் பக்கத்தில் குதிரையை நிறுத்தி அவள் ஏறுவதற்கு வசதியாக வீரன் கையை நீட்டிய நொடி, "ம்க்கும்!" என்று யாரோ தொண்டையைக் கனைக்கும் சத்தம் கேட்டது.

ஓசை வந்த திசையைப் பார்த்த வீரனின் கண்கள் அச்சத்தில் அப்படியே உறைந்து போயின. சட்டென குதிரையை விட்டு இறங்கியவன், காமரியைத் திரும்பிக்கூட பார்க்காமல் அப்படியே ஓட ஆரம்பித்தான்!

ஒருவேளை அவன் திரும்பிப் பார்த்திருந்தால் அவனைப் போலவே துகிரனும் ஓடிக் கொண்டிருப்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

ஆனால் எதற்கு இந்த ஓட்டம்...?

## அத்தியாயம் 9

வீரன் காமரியின் கையைப் பிடிக்கும் நொடியில் சரியாக இடையிட்டது வேறு யாருமல்ல வீரனின் மனதில் நீங்கா இடம்

பிடித்துள்ள இரண்டு ஜீவன்களான அரண்யாவும் சிம்மனும் தான். அரண்யா, சிம்மனுடனும் வைனியுடனும் தலையிலும் முகத்திலும் உதிரம் வழிந்தோட அங்கே நிற்க முடியாமல் நின்று கொண்டிருந்தாள். காமரியைக் கண்டதும் அரண்யாவின் கண்கள் இடுங்கியதே தவிர வேறெதுவும் அவள் சொல்லவில்லை; சொல்லும் நிலையிலும் அவள் இல்லை. வீரனைப் பார்த்ததும் எட்டு வைக்க அவள் முயல, முடியாமல் அப்படியே தரையில் சாய்ந்து விட்டாள்.

அரண்யாவின் கோலத்தைப் பார்த்ததுமே அச்சத்தில் விரிந்த விழிகளுடன் அவளை நோக்கி ஓடினான் வீரன். வீரன் அரண்யாவை எட்டுவதற்கு முன்னமே அவள் மயங்கியதைப் பார்த்ததும் காமரியைப் பார்த்து கர்ஜித்தது சிம்மன். அதனைக் கண்டு கொள்ளாது அரண்யாவை அத்தனை வெறுப்புடன் நோக்கினாள் காமரி. வீரன் அங்கிருப்பதை மனதில் கொண்டு பெரிதாக எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் ஒயிலாக அரண்யாவை நோக்கி நடந்து சென்றாள்.

மயங்கியவளை பக்குவமாக மடியில் போட்டுக்கொண்டு அவள் காயங்களை ஆராயத் துவங்கினான் வீரன். அவனை விலக்கி விட்டு சிறு சிறு காயங்களுடனும் கண்ணீருடனும் வைனி அரண்யாவிற்கு அவசரமாக சிகிச்சையளிக்க ஆரம்பித்தாள். ஏதோவொரு மூலிகையைச் சாறெடுத்து அரண்யாவின் இதழில் தடவிப் பின் அவள் காயங்களுக்கு வைனி பச்சிலைக் கட்டுப் போட, அரண்யாவின் காயங்களில் இருந்து பெருகிய குருதி குறைந்து பின் நின்று போனது. அதன் பிறகு தீ மூட்டி சில வேர்களை அதில் வாட்டினாள் வைனி. அதிலிருந்து எழுந்த புகையை அரண்யாவின் நாசியில் காண்பிக்க, அவள் முகத்திலிருந்த வலியின் வேதனை குறைந்து ஆழ்ந்த துயிலிற்குச் சென்றாள் அரண்யா.

காமரி அரண்யாவை நெருங்குவதற்கு முன்பே துகிரனும் அவர்களை அடைந்து விட்டான். சிம்மனின் கால்களில் காயம் பட்டிருப்பதை உணர்ந்த துகிரன், தனக்குத் தெரிந்த வைத்தியத்தை செய்ய, சிம்மனும் வலி நீங்கி அரண்யாவையும் வீரனையும் பாதுகாப்பதைப் போல அவர்களைச் சுற்றி அரணாக அமர்ந்தது. காமரி அவர்கள் இருக்குமிடத்தை அடைந்ததும் அவளை நெருங்க விடாமல் இருபதடி தூரத்திலேயே கர்ஜித்தது சிம்மன்.

சிம்மனின் எச்சரிக்கையை மீறி காமரி நடக்கத் துவங்க, ஆவேசமாக அடிவயிற்றில் இருந்து ஓசை எழுப்பியது. அந்தச் சத்தம் வீரனுக்கே அச்சத்தை விளைவிக்க, பதறியவன், "தேவி அங்கேயே நில்லுங்கள்! சிம்மனுக்கு புது ஆட்களைக் கண்டால் பிடிக்காது. தாங்கள் தயை கூர்ந்து என்னுடைய குதிரையை எடுத்துக் கொண்டு ஊர்த்

திரும்புங்கள். நாங்கள் சற்றுப் பொறுத்து இளவரசி கண் விழித்ததும் வருகிறோம்." என்றான். அரண்யாவை முதல் பார்வையிலேயே அரவணைத்த சிம்மன் காமரியை மட்டும் ஏன் இவ்வளவு தூரம் எதிர்க்கிறது என்பதனை யோசிக்க வீரன் மறந்து போனான்.

கனலியும் அங்கு வந்துவிட, வேறு வழியின்றி வீரனின் சொல்லிற்கு காமரி பணிய வேண்டியதாகி விட்டது.

"உங்கள் குதிரையை நாங்கள் எடுத்துச் செல்ல அனுமதித்ததற்கு நன்றி. நாங்கள் வருகிறோம்!" என்று சொல்லி கனலியை அவள் பார்க்க, துகிரனுடைய குதிரையில் இருந்து இறங்கி வீரனின் குதிரையில் ஏறினாள் கனலி.

"இளவரசியைப் பார்த்த செய்தியை எவரிடத்திலும் சொல்லாமல் இருந்தால் நலம்!" என்று துகிரன் சொல்ல, அவனை அலட்சியமாக பார்த்தபடியே கனலியின் பின்னால் ஏறிய காமரி, குதிரையை லாவகமாக செலுத்தத் துவங்கினாள். காமரியும் கனலியும் நினைத்திருந்தால் குதிரையின் உதவி இல்லாமல் லகிமம் சித்தியைப் பயன்படுத்தி காற்றிலேயே பயணம் செய்திருக்க முடியும். இருந்தாலும் வீரனின் முன்பு குறிப்பாக துகிரனின் முன்பு தன் சக்திகளைக் காட்ட விருப்பமின்றி சாதாரணமாகப் பயணம் செய்ய ஆரம்பித்தாள் காமரி.

காமரியும் கனலியும் கண்ணுக்கு மறைந்ததும், வீரன் வைனியிடம் திரும்பி, "என்னவாயிற்று?" என்று கலக்கத்துடன் கேள்வி கேட்டான்.

வைனி பதில் சொல்ல வாயெடுப்பதற்கு முன்பு துகிரன், "ஒரு நிமிடம்!" என்று சொல்லி, அவர்களைச் சுற்றி சக்தி மிக்க ஒரு மந்திர வளையத்தைப் போட்டான். காமரி பிரச்சனை செய்யாமல் சென்றதில் இருந்தே அவள் இங்கு நடப்பவற்றை ஒட்டுக் கேட்பதற்கு ஏதோ ஏற்பாடு செய்து விட்டாள் என்று துகிரன் புரிந்து கொண்டான். உள்ளே பேசுவது யாருக்கும் கேட்கக் கூடாது என்பதில் அவன் தெளிவாக இருந்தான். அவன் நினைத்ததைப் போலவே வளையம் முழுமை பெற்றதும், ஒரு குறளி ஆத்திரத்துடன் அவர்கள் பக்கத்தில் இருந்து வெளியேறியது. கமலநாதரின் வழிகாட்டுதலில் சூட்சும சக்திகளில் தேறியிருந்த துகிரனுக்கு அதன் கோர முகம் நன்றாகவே தெரிந்தது. எப்படியாவது காமரியின் வலையில் இருந்து வீரனைக் காக்க வேண்டும் என்கிற உறுதியும் பிறந்தது.

துகிரன் வைனியைப் பார்த்துத் தலையசைக்க, வைனி அவர்கள் எப்படி இங்கு வந்தார்கள் என்ற கதையை சொல்லத் தொடங்கினாள்.

"இந்திர ரகசியப் போட்டி முடிந்ததும் குருதேவர் ஐம்பூதனார் அரண்யாவை சூட்சம சக்திகளைப் பற்றிய வித்தைகள் அனைத்தும் கற்றுத் தேறும்படி ஆணையிட்டிருந்தார். எனக்கும் பல்வேறு மேம்பட்ட மருத்துவ நூல்களையும் போர்க்கலைகளையும் போதிக்கும் படி சிறந்த குருமார்களுக்கு உத்தரவிட்டிருந்தார். அவர் கூற்றின்படியே நான் கல்வி கற்கத் துவங்கினேன்.

முதலில் அரண்யா ஆர்வம் காட்டவில்லை என்றாலும் அதன் பிறகு அந்த வித்தைகளை ஆர்வத்துடனேயே கற்கத் துவங்கினாள். சிலருக்குப் பயிலவே பல்லாண்டுகள் ஆகும் வித்தைகளை ஓரிரு நாட்களிலேயே அரண்யா கற்றுத் தேர்ந்தது அங்கே எல்லோருக்குமே விசித்திரமாக இருந்தது. அரண்யா அந்தக் கொற்றவையின் மறுபிறவி என்றே குருமார்கள் முதற்கொண்டு நம்பத் துவங்கினர்.

சூட்சம சக்திகளோடு, நீர் நிலம் காற்று நெருப்பு முதலிய நான்கு இயற்கைக் கூறுகளைத் தன் வசப்படுத்தும் வித்தையை குருதேவர் ஐம்பூதனாரே அரண்யாவிற்கு நேரடியாகக் கற்பிக்கத் துவங்கினார். அரண்யாவும் குறைவற கல்வி கற்றுக் கொண்டிருந்த போது தான் பெருவளநாட்டின் மீது பாலை அரசர்கள் படையெடுத்து வரும் செய்தி எங்களுக்குக் கிடைத்தது. நாம் தான் வெற்றி பெறுவோம் என்று அரண்யா முழு மனதாக நம்பியதால், அவள் பெரிதாகக் கவலை கொள்ளவில்லை. ஆனால் மதுரையை எதிரிகள் எரித்து விட்டதாகவும், உங்கள் தந்தை சேனாதிபதி ரணதீரன் இறந்து விட்டதாகவும், போரில் பேரரசர் காயமுற்று படுத்த படுக்கையாகி விட்டாரென்றும் பலவிதமான செய்திகள் வர, அரண்யாவின் இதயம் ரணமானது. எப்படியாவது ஒரு முறையேனும் பேரரசரைப் பார்க்க வேண்டுமென்று அவள் உள்ளம் துடிக்க ஆரம்பித்தது.

உங்களுக்கு இருக்கும் மனவேதனைக்கு ஆறுதல்கூடத் தர முடியாத தொலைவில் இருப்பதும் அவளுக்கு உவப்பாக இல்லை. அதனால் மேருவில் இருந்து இரவோடு இரவாக எவரும் அறியாமல் பெருவளநாட்டிற்குச் செல்லத் திட்டம் தீட்டினாள். அதன்படியே முந்தாநாள் இரவு அனைவரும் உறங்கியதை உறுதி செய்து கொண்டு, நீங்கள் அவளுக்கு பரிசளித்த யாளியை மட்டும் எடுத்துக் கொண்டு எவரிடமும் ஏன் என்னிடம் கூடச் சொல்லாமல் குதிரையேறி விட்டாள்." என்று வைனி சொல்லிக் கொண்டிருக்க, "என்னது முந்தாநாளா? ஒரு நாளிற்குள் எப்படி இங்கு வந்தீர்கள்? சிம்மனை எப்படி எங்கே சந்தித்தீர்கள்?" என்று குழப்பமாகக் கேட்டான் துகிரன். ஏனென்றால் மேருவில் இருந்து அதிவிரைவான குதிரையில் வந்தாலும் அவர்கள்

இப்போது இருக்குமிடத்தை அடைவதற்கு குறைந்தபட்சம் இருபது நாட்களாவது தேவைப்படும்.

"அதைத் தான் சொல்ல வருகிறேன். இடை இடையே பேசாமல் பொறுமையாக நான் சொல்வதைக் கேளுங்கள்." என்று காரணமின்றியே எரிந்து விழுந்தாள் வைனி. கனலியைத் துகிரனோடு ஒரே குதிரையில் பார்த்ததும் ஏற்பட்ட பொறாமை தான் அவள் கோபத்திற்கான காரணம் என்பதை உணராத துகிரன், "இனி பேசினால் என் வாயைத் தைத்து விடு! போதுமா?" என்று பதிலுக்கு எரிந்து விழுந்தான். வெகு நாட்களுக்குப் பிறகு வைனியை பார்க்கும் போது இப்படியா அவர்கள் காயமுற்றிருக்க வேண்டும் என்ற அவனது ஆற்றாமையும் காமரியின் மீது அவனுக்கிருந்த வெறுப்பும் வைனியின் மீது எரிச்சலாகத் திரும்பியிருந்தது. நாம் வானளவு நேசிப்பவரைத் தான் எப்போதும் அதீதமாக காயப்படுத்துவோம் போல!

துகிரனின் பதிலை அலட்சியம் செய்தவள் அவனை முறைக்க, வீரன் இடையில் புகுந்து சமாதானப்படுத்தினான். "இங்கே அரண்யா மயங்கிக் கிடைக்க, இப்போது உங்கள் சண்டை தான் மிக முக்கியமான ஒன்றா?" என்று வீரன் பொறுமையுடன் கேட்க, வைனி வீரனிடம் மன்னிப்பை வேண்டி விட்டு, அவள் கதையைத் தொடர்ந்தாள்.

"எங்கே விட்டேன்.... ஆங்! தண்ணீர் அருந்துவதற்காக நான் எழுந்த போது அங்கே அரண்யாவைக் காணாது பதறிப் போனேன். அவள் மனநிலையை நான் முன்பே அறிந்திருந்ததால் அவளைப் போலவே சப்தம் செய்யாமல் எழுந்து சென்று என் குதிரையை எடுத்துக் கொண்டு அரண்யா சென்ற திசையில் பயணம் மேற்கொண்டேன்.

என் கணிப்பு சரியே என்பதைப் போலவே பெருவளநாட்டை நோக்கிச் செல்லும் பாதையில் அவள் சென்று கொண்டிருந்தாள். அவளைச் சமாதானம் செய்து மேருவிற்கு திரும்பச் சொல்லி, எவ்வளவோ போராடினேன். ஆனால் அரண்யா அதற்கு செவி சாய்க்கவே இல்லை. இப்படி மேருவில் இருந்து ஓடிவிட்டால், மறுபடியும் குருகுலத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் வாதாடிய போது, எப்படியும் ஆறாம் நிலைக் கல்வியை ஐந்தாம் நிலையிலேயே கற்று விட்டதால் இனிக் கற்பதற்கு தனக்கு எதுவுமில்லை என்று காட்டமாகக் கூறி விட்டாள்.

அப்போது, 'நீ கூறுவது பெரும் தவறம்மா!' என்று எங்கள் குருதேவர் ஐம்பூதனாரின் குரல் கேட்க, அரண்யாவும் நானும் நின்ற இடத்திலேயே பயத்தில் உறைந்து விட்டோம். எங்களை நோக்கி நடந்து வந்தவர், 'கற்றது கையளவு என்பதை என்றைக்கும் மறவாதே!' என்று

புன்னகையோடு ஆனால் கண்டிப்போடு சொன்னார். விக்கித்து நின்றிருந்த இருவரும் தலையை மட்டுமே அசைத்தோம்.

அதன் பிறகு அரண்யாவிடம் திரும்பி, 'நீ பெருவளநாட்டிற்கு செல்வதற்கு நான் ஒருபோதும் தடையாக இருக்க மாட்டேன் குழந்தாய்! சொல்லப் போனால் விதிப்படி நீ இப்போது அங்கு தான் இருக்க வேண்டும். உனக்கான பணிகள் அங்கே காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்தக் கிழவனுக்காக இந்த ஒரு நாள் விட்டு நாளை புறப்படுவாயா? நீங்கள் விரைவாக பயணம் செய்ய வேறு மார்க்கம் கற்றுத் தருகிறேன்!' என்றார்.

குதிரையை விட விரைவாக செல்லும் மார்க்கம் எதுவாக இருக்கும் என்று குழம்பியபடியே நாங்களும் சரி என்றோம். அதன் பிறகு எங்களை மேருவிற்கு அழைத்துச் செல்லாமல் அருகில் இருக்கும் ஒரு கல்லால மரத்தடியிலேயே இரு பாதுகாப்பு வளையங்களை இட்டு தனித்தனியே எங்கள் இருவரையும் அமரச் செய்தார். என்னிடம் சில மந்திரங்களை உபதேசித்தவர், அவற்றைக் கோடி முறை கொஞ்சம் கூடப் பிசகாமல் மனதினில் சொல்லச் சொன்னார். மந்திரங்களை உருவேற்றி முடித்ததும், என்னை கற்கச் சொல்லி சில நூல்களையும் தந்தார்.

அதன் பிறகு அரண்யாவிற்கான உபதேசம் ஆரம்பமானது. கோடி முறை மந்திரங்களைச் சொல்லிய பின் நான் கண்களைத் திறந்த போது, அரண்யா மின்னலின் பிள்ளை போல தகதகவென மின்னிக்கொண்டு தரையிலிருந்து ஏழடிக்கு மேல் கண் மூடி கைகளை விரித்த நிலையில் சுழன்று கொண்டிருந்தாள். நான் பயத்தோடு குருதேவரைப் பார்த்தால், அவரோ திருப்தியுடன் கண்கள் மின்ன அரண்யாவைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் அவரை அழைத்த போது, வேறு எதிலும் சிந்தையை செலுத்தாது என் பக்கத்தில் இருந்த சுவடிகளில் மட்டும் கவனத்தை வைக்கச் சொன்னார். நான் படிப்பது போல அமர்ந்திருந்தாலும் என் கவலையெல்லாம் அரண்யாவைப் பற்றியே இருந்தது. எத்தனை முறை அப்படி சுழன்றிருப்பாளோ அறியேன்!

ஒரு கட்டத்தில் அவள் கால்கள் தரை தொட, அவள் கண்களில் தென்பட்ட ஒளி, அந்தக் கொற்றவையே இவள் தானோ என்று எண்ணுமளவிற்கு இருந்தது. கையில் இருந்த சுவடி தானாகவே நழுவ, மண்டியிட்டு அவளைத் தொழுதேன்! ஆனால் அது எதையுமே அவள் உணரவில்லை. அமைதியாக கண்மூடி மறுபடி தியானத்தில் ஆழ்ந்துவிட்டாள். இன்று வைகறையில் தான் அவளுக்கான பயிற்சி

முடிந்தது. என்னால் முடிந்த அளவிற்கு நானும் குருதேவர் தந்திருந்த நூல்களை நன்கு பயின்றேன். பெரும்பாலான நூல்களை திரும்பப் பெற்றுக்கொண்டவர், சிலவற்றை மட்டும் பத்திரமாகப் பாதுகாக்கச் சொல்லி என்னிடமே தந்து விட்டார்." என்று சொல்லி, சில ஓலைக் கட்டுகளைத் துகிரனிடமும் வீரனிடமும் காண்பித்தாள். பின் மறுபடியும் தொடர்ந்தாள்.

"விடிந்ததும் அரண்யாவை ஓய்வெடுத்துக்கொள்ளச் சொன்னார் குருதேவர். ஆனால் பிடிவாதமாக அரண்யா மறுத்துவிட்டாள். ஏற்கனவே பயிற்சியினால் பலவீனமாக இருந்தவள் அப்போதே செல்ல வேண்டும் என்று அடம் பிடிக்க, வேறு வழியின்றி, குருதேவரும் எங்களுக்கு அவர் கூறியிருந்த உபாயத்தைத் தந்தார். எங்கள் கைகளில் ஒரு குடுவையைத் தந்தவர், அவற்றில் இருக்கும் குளிகைகள் லகிமம் சித்திக்கு ஒப்பானவை என்று சொன்னார். ஒரு மாத்திரையை உபயோகித்தால் போதும், பெருவளநாட்டை அடைந்து விடலாம் என்றும் சொன்னார். அவற்றோடு முதன்முறை ஆகாயத்தில் பயணம் செய்வதால் சூட்சம சக்திகளிடம் இருந்தும் இயற்கையின் இடர்களிடம் இருந்தும் விலகி எப்படிப் பாதுகாப்பாக பயணம் செய்ய வேண்டும் என்றும் விளக்கினார்.

குருதேவரின் வழிகாட்டுதலின்படியே நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த போது திடீரென மயிர்க்கூச்சம் ஏற்பட்டது. காற்றின் வேகம் அதிகரிக்க, எங்களால் சீரான வேகத்தில் செல்ல முடியவில்லை. எங்கள் காதுகளில் பல குரல்கள் கேட்க ஆரம்பிக்க, எங்கள் உடலை யார் யாரோ கத்தி கொண்டு கீறுவது போலிருந்தது. தலைவி, தலைவலி என்றெல்லாம் எங்கள் செவிப்பறை கிழிவது போலப் பல கதறல்கள் கேட்டன. எங்களைக் காத்துக்கொள்ள வேண்டி நான் பல வகைகளில் முயன்றேன். ஆனால் ஏற்கனவே வலுவிழந்த நிலையில் இருந்த அரண்யவால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

அவள் மட்டும் எப்போதும் போலிருந்திருந்தால் எங்களை வதைத்த அத்தனை பேய்களையும் ஒரே நொடியில் விரட்டியிருப்பாள். ஆனால்... என்ன செய்ய? கடைசி நிமிடம் வரை நாங்கள் போராடிக் கொண்டு தான் இருந்தோம். அப்போது சட்டென வானில் சூழல் காற்று தோன்றியது. எங்கள் இருவரையும் அது பீடிக்காத படி நாங்கள் நகர முயலும் நேரம் பல கைகள் எங்களைப் பிடித்து வலுக்கட்டாயமாக அந்தச் சூறாவளியின் உள்ளே தூக்கி எறிந்தன. சுற்றிச் சுழன்ற காற்று எங்கள் சுவாசத்தைத் தடை செய்ய, அவ்வப்போது அங்கே தோன்றிய சில அரூபங்கள் எங்கள் ரத்தத்தை ருசி பார்க்கத் துவங்கின. இனி உயிர்

பிழைப்பது சிரமம் என்பது புரிந்ததும் போராடும் எண்ணத்தை நான் கைவிட்டு விட்டேன். ஆனால் அரண்யா மிஞ்சியிருந்த தன் முழு சக்தியையும் ஒன்று திரட்டி ஆதவனின் கதிர்களுக்கு ஒப்பான கிரணங்களை அவள் உள்ளங்கையின் வழியாக வெளியிட, சூழல் காற்று நின்றது. எங்களைச் சூழ்ந்திருந்த சூட்சம சக்திகள் அனைத்தும் விலகியது என்று நாங்கள் நினைத்த நேரம் எதிர்பாராமல் எங்கிருந்தோ வந்த மின்னல் ஒன்று எங்கள் இருவரையும் தாக்கித் தரையை நோக்கித் தள்ள, அதனைத் தவிர்க்க முடியாமல் அப்படியே கீழே விழ ஆரம்பித்தோம்.

நிலத்தில் விழுந்து நாங்கள் சிதறும் நேரம் சரியாக சிம்மன் வந்து எங்களைத் தாங்கிக் கொண்டான். எப்படி அவன் அங்கு வந்தான் என்பதை நாங்கள் அறியோம். ஆனால் அவன் மட்டும் அந்த நேரத்தில் வரவில்லை என்றால் இப்போது நாங்கள் உயிருடன் இருந்திருப்போமா என்பது சந்தேகமே. நாங்கள் அவன் மீது விழுந்ததும், எங்களைத் தள்ளிய மின்னல் அவனையும் தாக்க முயல, அவனது ஒரே கர்ஜனையில் அது அடங்கியது. அப்போது தான் அந்த மின்னல் கூட ஏதோ சக்திவாய்ந்த யட்சிணியின் வேலை என்று எங்களுக்குப் புரிந்தது.

என்னையும் அரண்யாவையும் அவன் முதுகில் சுமந்து சிம்மன் ஓட ஆரம்பித்தான். அவன் எங்கே செல்கிறான் என்று புரியாவிடினும் எங்களை பாதுகாப்பான ஒரு இடத்திற்குத் தான் அவன் அழைத்துச் செல்வான் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. கடைசியில் இந்த வனத்தை அவன் அடைந்ததும் உங்கள் பேச்சுக் குரல்கள் எங்களுக்கு கேட்க, தப்பி விட்டோம் என்ற நிம்மதி வந்தது. ஆனால், திடீரெனத் தோன்றிய ஆளுயர கள்ளிச் செடிகள் சிம்மனின் மீது சரமாரியாக பாய்ந்தது. கள்ளியின் முட்கள் எங்கள் இருவரையும் தாக்கி விடக்கூடாது என்று எங்களைப் பாதுகாத்த சிம்மனால் அவனை சரியாக தற்காத்துக்கொள்ளமுடியாமல் போனது. அவன் அடிவயிற்றில் ஒரு முள் கிழிக்க, வலி தாங்காது அங்கேயே விழுந்துவிட்டான். அவன் உயிருக்கு எந்த ஆபத்தும் நேரவில்லை என்றாலும் அவன் முன்னங்கால்களில் பலமான காயம் ஏற்பட்டது.

எங்களைத் துரத்தும் யட்சிணிகளையும் குறளிகளையும் கடைசி வாய்ப்பாக பெருமுயற்சி செய்து நாங்கள் தோற்கடிக்கும் நேரத்தில் தான் குதிரைக் குளம்படிகளின் சத்தம் கேட்டது. உடனே அத்தனை சக்திகளும் மறைந்து போக, வருபவர் யாராக இருக்கும் என்று நோக்கினோம். பார்த்தால்... இதோ... இந்தத் துகிரன் ஒரு பெண்ணுடன் உல்லாசமாக வந்து கொண்டிருந்தார். நீங்களோ மற்றொரு பெண்ணைத்

தூக்குவதற்குத் தயாராக இருந்தீர்கள். பேசும் திராணியற்று அரண்யா தவிக்க, தொண்டை காய்ந்து போயிருந்த நான் சற்று கனைத்தேன். நல்ல வேளையாக அது உங்கள் காதுகளில் கேட்டது. இல்லையென்றால் உங்கள் சல்லாப நினைவில் எங்களை யட்சிணிகளுக்கு பலி கொடுத்திருப்பீர்கள்!" என்று காட்டமாக முடித்தாள் வைனி. துகிரனின் முன்பு அமர்ந்திருந்த கனலியின் முகத்தில் தெரிந்த சிரிப்பு வைனியின் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த பொறாமைத் தீயை அணையவிடாமல் பார்த்துக் கொண்டது.

"இங்கு என்ன நடந்தது என்பது புரியாமல் முட்டாள்தனமாக உளறாதே!" என்று துகிரன் எகிற, "உங்கள் கண்களுக்கு இப்போது நான் முட்டாளாகத் தான் தெரிவேன். சிலரை நம்பியதற்கு முட்டாள் பட்டம் எனக்கு அவசியம் தான்!" என்று நொடித்தாள் வைனி.

"அப்படி யாரை நம்பியது மோசம் போனதாம்?" என்று விடாமல் துகிரன் கேட்க, பதில் சொல்லாமல் விசும்பினாள் வைனி.

அவள் கண்களில் கண்ணீரைக் கண்டதும் துகிரன் அயர்ந்து போனான். "வைனி, இங்கே பாரேன்! வீரன் கைகொடுத்தது நாவகன் அண்ணனை மணக்கப் போகிறவளுக்கு. நான் ஏற்றிக் கொண்டு வந்தது அவள் தோழியை. நீ நினைப்பதைப் போல உல்லாசம் சல்லாபம் இதற்கெல்லாம் இதுவரை எங்களுக்கு நேரமும் இல்லை; எங்கள் மனம் கவர்ந்தவர்களும் எங்கள் அருகில் இல்லை!" என்று இரு பொருள் பட துகிரன் கூற, மேலே வானத்தில் தெரிந்த சிவப்பைத் தன் கன்னத்தில் படர விட்டாள் வைனி.

வைனியின் கோபம் பறந்தும், நடந்த போர் பற்றியும் சமீரணனைப் பற்றியும் அவன் அறிந்தவரையில் அவளுக்கு விவரித்தான் துகிரன். 'நாவகனை காமரி என்ற பெண் மணக்கப் போகிறாள்!' என்று துகிரன் சொன்னதும் பேரதிர்ச்சிக்கு உள்ளானாள் வைனி. தேனருவியின் மலைக்குகையில் கமலநாதரிடம் அகப்பட்ட யட்சிணிகள் காமரி, என்று கதறிய பின் தீக்கிரையான நிகழ்ச்சி வைனியின் கண் முன்னே வந்து போனது. அது பற்றிக் கேட்க அவள் வாயெடுத்த போது, வீரனைக் குறிப்பாக காட்டி இப்போது அது பற்றி பேச வேண்டாம் என்று ஜாடை செய்தான் துகிரன். அதனால் அந்தப் பேச்சை அப்படியே விடுத்தாள் வைனி.

துகிரனும் வைனியும் கண் ஜாடை காண்பித்து பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வீரனுக்கு ஏதோ புரிவது போலிருந்தது. விஷயம் அவர்கள் வாயாலேயே வரட்டும் என்று முடிவு செய்தவன் அரண்யாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

போர் முடிந்தது என்று நிம்மதியாக நாம் இருக்கையில் இதென்ன புதுப் பிரச்சனை என்று குழம்பித் தவித்தான் வீரன். அதிலும் கோழைத்தனமாக இப்படி மாயப்போர் புரியும் கீழ்மக்கள் யாரெனப் புரியாமல் அவன் உள்ளம் கொதித்தது.

அரண்யாவிற்கு தீங்கு நினைக்கும் எண்ணம் எவருக்கு வரக் கூடும் என்று எண்ணி எண்ணி குமைந்தான். கடைசியில் சமீரணன் தான் இவற்றிற்கெல்லாம் காரணம் என்று முடிவு செய்து அவன் தலையைத் துண்டிக்க சபதம் எடுத்தான். அரண்யாவைத் துடிக்க வைப்பதென்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிபவள், அவள் வீட்டிற்குள்ளேயே வந்துவிட்டாள் என்பதும் அதற்கு அரண்யாவுடைய உருப்படாத அண்ணன் நாவகனே துணை நிற்கிறான் என்பதும் பாவம் அவனுக்குத் தெரியவில்லை. இதுவரை கண்ணால் கூடப் பார்த்திராத சமீரணன் மீதே அத்தனை கவனத்தையும் அவன் செலுத்தியதால் அவன் கண் முன்பே பல அக்கிரமங்கள் செய்தவர்களை அவன் கவனிக்கத் தவறினான்.

நடக்கும் தீமைகளுக்கெல்லாம் காரணமானவர் யாரெனத் தெரிந்திருந்த துகிரானாலோ கமலநாதரின் ஆணையில்லாமல் எதுவும் செய்ய முடியாது போயிற்று. அவனுக்கு கமலநாதருக்கு நேர்ந்த கதி இன்னும் தெரியாததால் அவர் வந்து தான் செய்ய வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கையைச் சொல்லுவார் என்று ஒவ்வொரு நொடியும் காத்திருந்தான். அவர் வரவே போவதில்லை என்று அறியும் போது, துகிரனால் சுயமாக முடிவெடுக்க முடியுமா? காலம் தான் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்.

அரண்யாவை மடியில் தாங்கிக் கொண்டு வருத்தமுடன் அமர்ந்திருந்த வீரனின் முகத்தை நாவால் நக்கியது சிம்மன். மனவருத்தம் சற்றுத் தெளிய, சிம்மனின் மேல் சாய்ந்து கொண்டான் வீரன். தன் அன்னையின் கதகதப்பையும் பாதுகாப்பையும் ஒரு சேரத் தரும் தன் அன்பிற்கினிய ஆத்ம நண்பனை ஒரு கையால் தடவிக் கொடுத்தான் வீரன். சிம்மனும் வீரனும் ஒருவருக்கொருவர் ஆறுதல் அளித்தபடியே அமர்ந்திருந்தனர். வைனி சொல்லச் சொல்ல கேட்காமல் அவள் காயங்களை பரிசோதித்து அவளுக்கு வைத்தியம் பார்த்தான் துகிரன். மேருவின் தலை சிறந்த மருத்துவ மாணவிக்கே மருத்துவம் பார்த்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

நிலவு வந்ததும் மூவருக்கும் பசி எடுக்க ஆரம்பித்தது. அதிலும் நேற்றிரவில் இருந்து எதுவும் சாப்பிடாத வைனியின் வயிற்றுக்குள் இருந்து பலவித சப்தங்கள் வர, சிரித்தபடியே துகிரன் எழுந்தான்,

உணவு கொண்டு வருவதற்காக. "பத்திரம்!" என்று அச்சத்தோடு சொன்ன வைனிக்கு ஒரு புன்னகையைப் பரிசளித்து விட்டு, உடன் வருவதாகச் சொன்ன வீரனையும் தடுத்துவிட்டு தனியாளாகச் சென்றான். அதற்கும் பசித்ததோ அன்றித் துகிரனைப் பாதுகாக்கவோ காயங்கள் குணமாகி இருந்த சிம்மனும் துகிரனுடனேயே சென்றது.

அரண்யா இன்னும் உறக்கத்திலேயே இருக்க, அவளது காயங்களை மறுபடி பரிசோதித்தாள் வைனி. மூலிகைகளின் உதவியால் நன்றாகக் காயங்கள் ஆறி இருந்தது. கடும் வலியிலும் களைப்பிலும் தான் அரண்யா இன்னும் கண் விழிக்கவில்லை என்பது வைனிக்கு நன்றாகவே தெரிந்தது. அதனால் விரைந்து அரண்மனைக்குச் செல்வது நலம் என்று அவள் முடிவு செய்தாள்.

காட்டுத் தேனும் கிழங்கும் பழங்களும் கொண்டு வந்திருந்தான் துகிரன். பக்கத்தில் இருந்த சருகுகளை ஒன்று திரட்டி தீ மூட்டி கிழங்குகளை அதில் இட்டான். தேனையும் பழங்களையும் வீரனுக்கும் வைனிக்கும் அவன் தர, சுவை எதையும் உணராமலேயே உண்டனர்.

சாப்பிட்டதும் வைனி வீரனை அழைத்து மெல்ல பேச்சை ஆரம்பித்தாள். "இதற்கு மேலும் இங்கிருப்பது ஆபத்து அண்ணா! அதனால் அரண்யாவைத் தூக்கிக் கொண்டு நாம் அரண்மனைக்குச் செல்வது தான் சரி!" என்றாள்.

"ஆமாம் வீரா! வைனி சொல்வது தான் சரி. நாம் இப்போதே புறப்படுவோம்." என்று துகிரன் கூற, சிம்மனும் தலையை அசைத்து ஆமோதித்தது.

"சரி! இப்போது நம்மிடம் இருப்பதோ ஒரே ஒரு குதிரை. நாம் நால்வரும் எப்படிப் பயணம் செய்வது?" என்று வீரன் கேட்டதும், தன் மீது ஏறிக்கொள்ளும் படி சிம்மன் சமிக்கை செய்தது.

"வேண்டாம் சிம்மா! இப்போது தானே உனக்கு அடிபட்டிருக்கிறது. இந்த நேரத்தில் வேண்டாம்." என்று வீரன் மறுக்க, சிம்மன் தலையை ஆட்டி ஆட்டி அவனிடம் வலியுறுத்தியது.

"அண்ணா! சிம்மன் நம்முடன் வருவது தான் நமக்குப் பாதுகாப்பு. ஒரு வேளை சமீரணனைக் கண்டால் அவனைப் பிடிக்கவும் சிம்மன் உதவுவான். சாதாரண கள்ளி முள்ளிற்கு எல்லாம் சிம்மனை காயப்படுத்தும் வலிமையில்லை. எனவே அதிகமாக யோசிக்காதீர்கள். நொடியும் தாமதிக்காது ஏறுங்கள். நானும் துகிரனும் பின்னால் அவர் குதிரையில் வருகிறோம்." என்றாள் வைனி.

"என்ன? இருவரும் என் குதிரையில் செல்வதா?" என்று

திகைத்த துகிரனிடம் "ஏன் பேய் பிசாசுகளை மட்டும் தான் உன் குதிரையில் ஏற்றுவாயோ?" என்று அவனுக்கு மட்டும் கேட்குமாறு சூடாகப் பேசினாள் வைனி.

"அம்மா தாயே! நான் ஒன்றும் சொல்லவில்லை. நீ சொல்லுகிறபடியே நான் நடந்து கொள்கிறேன்! போதுமா?" என்று மென்குரலில் அவள் காதுகளில் துகிரன் கிசுகிசுக்க இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தாள் வைனி.

அவர்கள் முடிவு செய்தபடியே வீரன் அரண்யாவை பிறந்த குழந்தையைத் தூக்குவதைப் போல மென்மையாகத் தூக்கிக் கொண்டு சிம்மனின் மீது ஏறினான்.

அவனைத் தொடர்ந்து துகிரனும் வைனியை குதிரையில் ஏற்றி விட முனைய, அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு தானே தாவி ஏறினாள் வைனி. அவள் பின்னே துகிரன் ஏறியதும் வைனியின் மேனி சிலிர்த்தது. பேசாமல் நடந்தே போயிருக்கலாமோ? என்று அவள் எண்ணமிட, "இதற்குத்தான் இருவரும் ஒரே குதிரையிலா என்று கேட்டேன்! என் பேச்சை யார் மதித்தார்கள்?" என்று இடக்காக பேசி வேண்டுமென்றே இன்னும் நெருங்கி அமர்ந்து கொண்டான் துகிரன்.

"மரப்பாச்சி பொம்மைக்கெல்லாம் சட்டென உயிர் வருமென்று யார் கண்டது?" என்று நக்கலாக பதிலளித்து விட்டு விலகி அமர்ந்தாள் வைனி.

அரசாணை ஆற்றங்கரை வரை வந்தது போனது பற்றிப் பேசி நேரத்தைக் கழித்த வைனியும் துகிரனும் அதன் பிறகு பிடிக்கவில்லை என்றாலும் காமரியைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

"அந்தப்பெண்ணின் விழிகள் வீரன் அண்ணாவின் மீது படியும் தினுசே சரியில்லை துகிரா! அவள் தோழி உன்னைப் பார்க்கும் விதமும் எனக்குப் பிடிக்கவில்லை." என்று முகத்தை சுளித்தபடியே சொன்னாள் வைனி.

"அவர்கள் எங்களைப் பார்த்தால் நாங்கள் என்ன செய்வது? நான் என்ன அந்தப் பெண்ணையோ அல்லது அவள் தோழியையோ ஆசையோடா பார்க்கிறேன்?" என்று அலுத்துக் கொண்டான் துகிரன்.

"என்ன செய்வதா? அப்பால் போய்த் தொலை என்று சொல்வதற்கென்ன? இப்படித்தான் அவளையும் உரசிக் கொண்டு வந்தாயோ?" என்று மறுபடியும் வைனி கோபம் கொள்ள, "இல்லை என்றால் நீ நம்பப் போகிறாயா?" என்று பதில் கேள்வி வைத்தான் துகிரன்.

கழுத்தை வளைத்துத் திரும்பி அவனை ஏற இறங்கப் பார்த்தவள், "சரி, போகட்டும் விடு! அதுதான் நானும் அரண்யாவும் வந்துவிட்டோமே. எங்களுடையதை பாதுகாத்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும்." என்று அமர்த்தலாக மொழிந்தாள்.

"அரண்யாவுடையது எதுவென்று எனக்குத் தெரியும். ஆமாம், உன்னுடையது என்றாயே... அது என்னது? எனக்குப் புரியவில்லையே!" என்று வாயால் கேட்டுக் கண்களால் சிரித்தான் துகிரன்.

"ஆண்களுக்குப் பல நேரங்களில் மூளை வேலை செய்யாது என்பது சரி தான்." என்று சொன்னாளே தவிர அவளது எதுவென்று வாயைத் திறக்கவில்லை வைனி.

வீரன் சிம்மனின் மீதும் துகிரன் அவன் குதிரையின் மீதும் பயணம் செய்து, நிலவு உச்சிக்கு வருவதற்குள்ளாகவே மதுரையின் எல்லையை அடைந்து விட்டனர்.

எவருக்கும் அறிவிக்காமல் ரகசியமாக அரண்மைக்குள்ளே அரண்யாவை சேர்ப்பித்து விட வேண்டும் என்பது தான் வீரனின் திட்டமாக இருந்தது. அதன்படியே சிம்மனை மெதுவாக செலுத்தத் துவங்கினான் வீரன். அவனைப் பார்த்துத் துகிரனும் தன் குதிரையின் வேகத்தைக் குறைத்தான்.

ஊருக்குள் மூவரும் நுழையும் போது எங்கே பார்த்தாலும் ஒரே அழுகைச் சத்தமாகவே இருந்தது. எல்லாத் திசைகளில் இருந்தும் ஒப்பாரிச் சத்தம் கேட்க, என்ன ஏதென்று தெரியாமல் திடுக்கிட்டனர். ஒரு வேளை முன் போல் எதுவும் அசம்பாவிதம் நேர்ந்து விட்டதோ என்ற பீதியில் முகமெங்கும் கவலை ரேகைகள் படர, வீதிகளில் ஏதேனும் தீமைக்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று பார்த்துக் கொண்டே அரண்மனையை நோக்கி விரைந்தனர். அரண்மனையின் கிழக்கு வாசலை அடைந்த வீரன், தன்னை யாரென அறிவிக்க, கதவு திறந்தது.

கதவு திறந்ததும் அவன் கண்ட முதல் காட்சியே யாரோ ஒரு மூதாட்டி நெஞ்சில் அடித்துக் கொண்டு புழுதியில் புரளுவது தான். இனம் புரியாத துக்கம் தொண்டையை அடைக்க, வீரன் அங்கேயே ஸ்தம்பித்து நிற்க, உப்பரிகையில் இருந்து மக்களை அமைதிப்படுத்த முயன்று கொண்டிருந்த பேரரசனும் பேரரசியும் வீரனையும் துகிரனையும் அவர்களுடன் இருந்த இரு பெண்களையும் பார்த்ததும் பதறியடித்து ஓடி வந்தனர்.

கூட்டத்தை விலக்கிப் பேரரசனும் பேரரசியும் தங்களை நோக்கி வருவதைக் கண்ட வீரனும் துகிரனும் தங்களது வாகனங்களில்

இருந்து கீழே இறங்கினர்.

பேரரசியை அச்சில் வார்த்ததைப் போன்றிருந்த அரண்யாவை வீரனின் கையில் பார்த்ததும் அங்கிருந்த மொத்த மக்களுமே திகைத்துப் போய் ஒரு நிமிடம் மௌனமானார்கள். பின் மீண்டும் அவர்களின் அழுகை விண்ணைப் பிளந்தது.

ஒப்பாரிச் சத்தம் அதிகரிக்க, கண்களை மெல்லத் திறந்த அரண்யா எதிரில் மூச்சு வாங்க நின்று கொண்டிருக்கும் பேரரசரைப் பார்த்தாள்.

"அப்பா...?" என்று பேச முடியாமல் சோர்ந்து போய் அவள் குரல் வெளிவர, அதனைக் கேட்ட பேரரசி அயினி அம்மை அப்படியே மயங்கிச் சரிந்தார்!

குடிகளும் அவர்களை ஆளும் கோனும் இத்தனை துயரத்திற்கு ஆட்பட்டதற்கு என்ன காரணமாக இருக்க முடியும்?

## அத்தியாயம் 10

வீரனின் குதிரையில் கம்பீரமாகச் சென்ற காமரி அரசாணை ஆற்றங்கரையில் குறளிக்காகக் காத்திருந்தாள். அரண்யாவின் இந்த நிலைக்குக் காரணம் தனக்கு விசுவாசமான யட்சிணிகளும் கிங்கரர்களுமே என்பதை அரண்யாவின் காயங்களில் இருந்தே கண்டுகொண்டாள் காமரி. ஆனால் மேரு மலையில் இருக்க வேண்டியவள் எப்படித் திடீரென இங்கு வந்து சேர்ந்தாள் என்பதை அறியாவிட்டால் காமரிக்குத் தலை வெடித்துவிடும் போலிருந்தது. நேற்றைக்குக் கூட அரண்யா மேருவில் இருப்பதாகத்தான் அவளுக்குத் தகவல் கிடைத்திருந்தது. அப்படியிருக்க... எப்படி ஏன் எதற்கு என்ற பல கேள்விகள் அவளைக் குடைந்து கொண்டிருந்தன. அதனாலேயே ஒரு குறளியை அங்கே விட்டுவிட்டு வந்திருந்தாள்.

ஆற்றங்கரை ஓரமிருந்த ஒரு கல்லில் கனலி அமர்ந்திருக்க, உட்காரப் பொறுமையின்றி இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தாள் காமரி. அரண்யா, அவளையும் வீரனையும் பார்த்த ஒரே ஒரு பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்திருந்தது. அவை அத்தனையையும் காமரி அறிவாள். பாம்பின் கால் பாம்பறியாதா? ஆனால் சடாரென வீரன் அப்படி ஓடியது தான் காமரிக்கு எரிச்சலாக இருந்தது. 'அரண்யா கீழே விழுந்தால் என்ன? அன்றி அவள் இறந்தாலுமே தான் இவனுக்கென்ன?' என்று வீரன் மீது கோபம் கோபமாய் வந்தது. எப்படி அவன் மனதிலிருந்து அரண்யாவை அப்புறப்

படுத்துவது என்ற நோக்கிலேயே சிந்திக்கத் துவங்கினாள்.

காமரியைக் காக்க வைக்காமல் அவர்கள் இருந்த இடத்திற்கு சீக்கிரமாகவே ஒரு குறளி வந்து சேர்ந்தது; தலை தாழ்ந்து காமரியை வணங்கியது.

"முழுவதையும் கேட்டாயா? ஏன் அதற்குள்ளாக வந்துவிட்டாய்?" என்று கடிந்து கொண்டாள் காமரி.

"மன்னிக்கவும் தலைவி. அந்தப் பயல் துகிரன் தம்பனம் பயின்றிருப்பான் போல. என்னை எட்ட நிறுத்தும் மந்திரத்தை மிகச் சரியாக பிரயோகம் செய்து விட்டான். என்னை மட்டுமல்ல... யட்சிணிகள், கிங்கரர்கள், பைசாச கணங்கள் என்று எல்லோரையும் எதிர்க்கும் சக்தி வாய்ந்த மந்திர வளையத்தைப் போட்டு விட்டான். அதனால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்கவோ அவர்களது உதட்டசைவு மற்றும் முகமாற்றங்களை வைத்து விஷயத்தை கணிக்கவோ என்னால் இயலாது போயிற்று." என்று தலை தொங்கிய நிலையிலேயே கூறியது குறளி.

"அவன் ஒரு சாதாரண மாணவன். அவனுக்கு நீ சொல்லுகிற அளவிற்கு எல்லாம் சக்தி கிடையாது!" என்று கனலி சொல்ல, "இல்லை கனலி! என் சந்தேகம் உறுதியாகி விட்டது." என்றாள் காமரி.

"என்ன சந்தேகம்?" என்று கேட்டாள் கனலி.

"கமலநாதன் சும்மா போயிருக்க மாட்டான் என்ற என் சந்தேகத்தை குறளி இப்போது கூறிய செய்து தீர்த்து வைத்துவிட்டது. நம்மைப் பற்றிய உண்மையை அந்தத் துகிரனுக்கு சொல்லி விட்டுத் தான் அவன் போயிருக்கிறான். இந்திர ரகசியப் போட்டியின் போது நாம் யட்சிணிகளை ஏவினோமே, உனக்கு நினைவிருக்கிறதா?" என்று காமரி கேட்க, "நினைவிருக்கிறது!" என்று சொன்னாள் கனலி.

"நடந்த சண்டையில் இருவரைக் கமலநாதன் பிடித்துவிட்டான். யார் உங்களை ஏவியது என்று அவைகளை அவன் துன்புறுத்த, வேறு வழியின்றி அவைகளும் என் பெயரைச் சொல்லிவிட்டன. அதனால் நானே சென்று அவைகளை அழிக்க நேர்ந்தது. அப்போது கமலநாதனோடு அந்தத் துகிரனும் இன்று அரண்யாவோடு வந்திருந்தாளே அந்தப் பெண்ணும் இருந்தார்கள். நான் பேசுவது கமலநாதனுக்கு மட்டும் கேட்குமாறு மற்ற இருவரையும் கட்டியிருந்தேன். எப்படியும் என்னைப் பற்றி பிறருக்கு கமலநாதன் அறிவிக்க மாட்டான் என்று நினைத்ததாலாலேயே அவர்கள் இருவரையும் அன்று உயிருடன் விட்டு வைத்தேன். ஆனால் நடப்பவற்றைப் பார்க்கும் பொழுது கமலநாதன் அந்தப்

பெண்ணிடத்தில் இல்லை என்றாலும் துகிரனிடம் கண்டிப்பாக என்னைப் பற்றி அவனுக்குத் தெரிந்தவற்றை எல்லாம் கூறியிருப்பான் என்றே நான் நினைக்கிறேன். ஆதலால் துகிரனுக்கு நம்மைப் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்த பின் அவனைக் கொன்று விடு கனலி!" என்று கனலிக்கு உத்தரவிட்டாள் காமரி.

"என்னது? நானா?" என்று கனலி தயங்கினாள்.

"ஆமாம். நீயே தான். உனக்கு அவன் மீது மையலிருந்தால் அவனை உன் ஆசை தீர உபயோகப்படுத்திய பின் கொன்று விடு. எனக்கு அவன் சாக வேண்டும் அவ்வளவு தான். எப்போது என்பதை உன் விருப்பம் போல நீயே முடிவு செய்து கொள்." என்று கூறினாள் காமரி.

துகிரனைக் கொல்ல வேண்டுமா என்று கனலி யோசித்தாள். ஆனால் காமரி கனலியின் முடிவை எதிர்பார்த்து காத்திருக்க, வேறு வழியின்றி சரி என்றாள். நேரம் பார்த்துத் துகிரனை காமரியிடம் இருந்து காக்க வேண்டும் என்றும் அவள் முடிவு செய்தாள்.

"நல்லது. ஏய் குறளி! நீ மேருமலைக்குச் சென்று அரண்யா இங்கே எப்படி வந்தாள் என்பதை தெரிந்து கொண்டு வா. அதிலும் லகிமம் சக்தி இவளுக்கு எப்படி வந்தது என்பதை ஆராய்ந்து வா. அத்தோடு அவளைத் தாக்கிய நம்மவர்கள் யாரெனக் கண்டு, அவர்களைப் பாராட்டி விடு." என்று உத்தரவிட்டாள் காமரி.

"அப்படியே தலைவி!" என்று சிரம் தாழ்ந்து மறுபடி வணங்கிவிட்டுக் குறளி விடை பெற்றது.

குறளி சென்ற பின்னும் கிளம்பாமல் அங்கேயே நின்று சிந்தித்துக் கொண்டிருந்த காமரியைப் பார்த்து, "காமரி! நாம் கிளம்பலாம் தானே?" என்று கேள்வி எழுப்பினாள் கனலி.

"கிளம்பலாம் கிளம்பலாம். ஆனால் நாவலந்தீவின் கண்மணி... இளவரசி அரண்யா பிறந்தகத்துக்கு இத்தனை ஆண்டுகள் கழித்து வந்திருக்கிறாள். அவளுக்கு என்ன பரிசு தருவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்." என்று சொல்லி புன்னகைத்தாள் காமரி. அவள் சிரிப்பில் துளி கூட மகிழ்ச்சியில்லை.

"பரிசு தருவது உனக்கு புதிதா என்ன? நேரமாகிறது. வா!" என்று சொல்லிக் கனலி காமரியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினாள்.

எங்கே சென்றீர்கள்? ஏன் இவ்வளவு தாமதம்? என்று ஒரு

கேள்வி கூட கேட்காது பணிப்பெண்களை விட்டு காமரிக்கும் கனலிக்கும் உணவு பரிமாறச் சொன்னார் அயினி அம்மை.

"நீங்கள் சாப்பிட்டீர்களா அத்தை?" என்று பதுவிசாக காமரி கேட்டதற்கு "அனைவரும் பசியாறி விட்டோம்." என்று பதிலளித்தார் பேரரசி. கனலி வீரனிடம், 'பேரரசியார் காமரி தேவியுடன் தான் இப்பொழுதெல்லாம் உணவு உண்கிறார்!' என்று சொல்லியிருந்த பொய்யை நினைத்து காமரியின் முகம் கறுத்தது. நான் வரும் வரையில் உண்ணாதிருந்தால் செத்து விடுவாயா என்ன? என்று மனதினுள் பேரரசியை கரித்துக் கொட்டினாள் காமரி. அரண்மனையில் எங்கு தேடியும் கிடைக்காத ஒருத்திக்காக எதற்காக அனைவரும் பசியோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் காமரிக்குத் தோன்றவேயில்லை.

"நல்லது அத்தை. நாங்கள் அப்படியே உலவி விட்டு வந்தோமா, அது தான் நேரம் போனதே தெரியவில்லை. ஆனாலும் உங்கள் மதுரை கொள்ளை அழகுதான் போங்கள்!" என்று மனதை மறைத்து அழகாய்ச் சிரித்தாள் காமரி.

"பாதி கருகிய நிலையில் இருக்கும் மதுரையே உன் கண்களுக்குப் பேரழகாய்த் தெரிந்தால், வீதிகளின் இருபுறமும் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்திருக்க, சுற்றிலும் பச்சை வயல்களும் பலவகை பழமரங்களும் அடர்ந்திருக்க, அதில் பச்சைக்கிளிகள் தேஞ்சிட்டுக்கள் குயில்கள் புறாக்கள் காக்கைகள் என்று எண்ணற்ற பறவைகள் வாழ்ந்திருக்கும். எங்கள் வயல்களின் ஊடே பாயும் நீரின் சுவைக்கு இளநீர் கூட ஈடாகாது. காற்றில் ஆடும் பச்சைப் பயிர்களின் அழகை ஆசை தீரப் பருகினால் பசி கூட மறந்து போகும். வீசுகின்ற தென்றலில் இருக்கும் இதம் இங்கிருக்கும் மனிதர்களின் மனதைப் போலவே பதமானது.

பெருமை என்று நாங்கள் நினைத்தது விண்ணை முட்டும் கோபுரங்களையும் அகன்ற மதில் சுவர்களையும் கொண்ட அரண்மனையையோ இல்லை சாதாரண வீடுகளில் கூட நிறைந்து வழியும் செல்வத்தையோ அல்ல. எங்கள் பெருமை எல்லாம் எங்களின் உழைப்பினால் விளைந்த வயல்களே. மக்களுக்கு பசி என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாதிருக்க பேருதவி புரிந்த எம் நிலத்தைத் தீயோன் தீக்கிரையாக்கினான். உலகிற்கே உணவை வாரி வாரி வழங்கிய எம் மக்கள், ஒரு வேளை உணவிற்கு அவர்களின் அரசனை அண்டி நிற்கும் கதிக்கு ஆளாயினர்.

குழந்தைகள், வாயில்லா மிருகங்கள், முதியவர்கள் என்ற இரக்கம் எதுவுமின்றி துடிக்கத் துடிக்க பலர் தீயில் வெந்து போயினர்.

பார்த்துப் பார்த்து கட்டிய வீடுகள் மண்ணோடு மண்ணாயின. இத்தனை பாதகத்தை செய்ய எப்படித்தான் சதிகாரனுக்கு மனம் வந்ததோ தெரியவில்லை. சரி அதை விடு! நீ என்னமோ சொல்லிக் கொண்டிருக்க, நான் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறேன்!" என்று பேச்சை அத்தோடு நிறுத்தினார் பேரரசி.

அயினி அம்மை கூறிய செய்திகளைக் கேட்டதும் கனலிக்கு உணவு தொண்டைக்குழிக்குள் இறங்க மறுத்தது. ஆனால் காமரியோ அயினி அம்மையின் முகத்தில் தெரிந்த வேதனையை ரசித்தபடியே சாப்பிட்டாள்.

காமரியும் கனலியும் பசியாறியதும், "நம் வேல்விழிக்கும் ஆரனுக்கும் வரும் வெள்ளியன்று திருமணம் செய்யத் தீர்மானித்திருக்கிறோம் அம்மா. உங்களுக்குத் தேவையான புத்தாடைகளையும் ஆபரணங்களையும் நாளை நீங்களே தேர்வு செய்து கொள்ளுங்கள். இப்போது சென்று ஓய்வெடுங்கள்." என்று சொல்லிவிட்டுப் பேரரசி சென்று விட்டார்.

பேரரசி கண் மறைந்ததும், "ஆனாலும் கிழவிக்குத் திமிர் அதிகமடி!" என்று இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இளவரசியின் அந்தப்புரத்தில் கனலியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் காமரி.

"அப்படியொன்றும் தெரியவில்லையே காமரி!" என்று சொன்ன கனலியை முறைத்தாள்.

"என்ன தெரியவில்லை? நான் வேண்டுமென்றே தான் உங்கள் மதுரை என்றேன். அவள், 'நம் மதுரை என்று சொல்லம்மா!' என்றல்லவா என்னைத் திருத்தியிருக்க வேண்டும். அதைவிடுத்து அவள் பாட்டுக்கு பேசிக்கொண்டே போகிறாள். வயலாம் காற்றாம்... இந்த முட்டாள் எப்படித்தான் இத்தனை ஆண்டுகள் அரியாசனத்தில் அந்த வீயனுக்குப் பக்கத்தில் இருந்து ஆட்சி புரிந்தாளோ! ச்சை! பேரரசி என்ற சொல்லிற்கே இவள் மாபெரும் களங்கம்." என்று பொரிந்து தள்ளினாள் காமரி.

"அமைதியோடிரு காமரி. இப்போது பிரச்சனை அவர் அல்ல. அரண்யாவை எப்படி சமாளிக்கப் போகிறாய்? உன் சித்து விளையாட்டு அவளிடம் செல்லுபடியாகாது என்று உன் தந்தை மகிந்தன் தெரிவித்ததை மறந்து போனாயா?" என்று கேட்டு காமரியின் முறைப்பைப் பரிசாகப் பெற்றுக்கொண்டாள் கனலி.

"அவர் கூறிய எதையும் நான் மறந்து போகவில்லை. ஆனால் என்னை எதிர்க்கும் திறன் அவளுக்கில்லை என்பதை நான் அறிந்து கொண்டேன். விரைவில் நீயும் அறிந்து கொள்ளுவாய்!" என்று

கனலிக்குப் பூடகமாக பதில் கூறினாள் காமரி.

"என்ன செய்யப் போகிறாய்?"

"பொறுத்திருந்து பார். அரண்யா மதுரையின் எல்லையில் கால் பதித்த நிமிடம் தொடங்கி அவள் மீது பரிசு மழை பொழியப்போகிறேன். இப்போது எனக்கு உறக்கம் வருகிறது." என்று சொல்லிப் பஞ்சணையில் ஒயிலாகப் படுத்தாள் காமரி. அவளிடமிருந்து எந்த வார்த்தையும் இனி வெளிவராது என்பதை அறிந்த கனலியும் பேசாமல் படுத்துக்கொண்டாள்.

இரவு உணவின் போது தீவிர யோசனையில் இருந்த காமரியைப் பார்த்து பேரரசி அயினி அம்மைக்கு லேசாக நெஞ்சம் நிம்மதி இழந்தது. ஆரானின் திருமணச் செய்தி குறித்து பேரரசி காமரியிடம் தெரிவித்தபோது முகத்தில் ஆச்சர்யத்தைப் படர விட்டாளே தவிர வேறெந்த கேள்வியும் அவள் கேட்கவில்லை. குறிப்பாக தன் திருமணத்தைப் பற்றி காமரி மூச்சு கூட விடவில்லை. இதுவே பேரரசியின் உள்ளத்தில் பல ஐயங்களை எழுப்பியது. சரி சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்து தானே ஆக வேண்டும் என்று எண்ணமிட்டபடியே அவர் உறங்கிப் போனார்.

நள்ளிரவில் தான் அந்த முதல் அலறலைக் கேட்டார் பேரரசர் வீய பாண்டியன். மூடிய இமைகளின் வழியே தாரை தாரையாக பேரரசி கண்ணீர் உகுப்பதையும் அவர் உடல் அதிர்வதையும் பார்த்தவர், உடனே எழ முயற்சிக்க அவரால் தன் சுண்டு விரல் நகத்தைக் கூட அசைக்க முடியவில்லை; பேசுவதற்கு வாயெடுத்தால் நா எழவில்லை. மூளை விழித்திருக்க அவர் உடல் முடங்கியிருந்தது. என்ன செய்வதென்று ஒரு கணம் திகைத்தாலும் மனதினில் ஈசனையும் தன் குருநாதர் கமலநாதரையும் நினைத்து தியானித்தார். பின் தானாக அவர் உதடுகள் சில மந்திரங்களை உச்சரிக்க, தன்னைப் பிணைத்திருந்தத் தளையிலிருந்து அவர் விடுதலைப் பெற்றார்.

பேரரசியின் தலையில் கரம் வைத்து வேறு சில மந்திரங்களை அவர் சொல்ல, பேரரசியும் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார். "அரசே! அரசே!" என்று பேரரசரை கட்டிப்பிடித்துக் கொண்டு கதறினார்.

"அயினி... கண்ணே! என்னவாயிற்று? ஏதேனும் துர்சொப்பனமா?" என்று அவர் தலையை மெல்லத் தடவிக் கொடுத்து தண்ணீர் தந்தார் பேரரசர்.

"சொப்பனம் போலவே தெரியவில்லை அரசே! ஏதோ உண்மையான சம்பவம் போலவே எனக்குத் தோன்றியது. நான் அங்கேயே இருந்தும் எதுவும் செய்யமுடியாத கையாலாகாத நிலைமை...

என்னால் எழக் கூட முடியவில்லை. கைகால்கள் விழுந்து விட்டதைப் போல் உணர்ந்தேன்." என்று பேரரசி சொல்லிக் கொண்டே போக, 'அதெப்படி எனக்கு உடல் மரத்த அதே நேரத்தில் அயினிக்கும் உடல் மரத்துப் போகும்?' என்ற கேள்வி அரசரின் மனதினில் எழுந்தது. கூடவே ஈசனின் நாமத்தை ஜெபித்த பிறகே மந்திரங்கள் தனக்கு நினைவு வந்ததையும் அவர் குறித்துக் கொண்டார். அப்படியானால் இது ஏதோ அமானுஷ்யத்தின் வேலை தான் என்று பேரரசர் முடிவு செய்தார். மேலும் கேள்வி கேட்டுப் பேரரசியை வருத்தாமல் அவரைத் தூங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

பல்வேறு சக்தி வளையங்களைத் தாண்டி மதுரைக்குள் அரூப சக்திகள் எப்படி நுழைந்திருக்க முடியும் என்ற கேள்விக்கு பதிலாகக் காமரியின் முகமே அவருக்குத் தெரிந்தது. காலையில் முதல் வேலையாக இதை விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தவர் அயினி அம்மையை மடியில் சாய்த்துக் கொண்டு ஆதரவாக அவர் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

ஒரு நிமிடம் உறங்குவதும் அடுத்த நொடியே பதறியடித்து எழுவதுமாக அயினி அம்மையைப் பார்க்கவே மனம் கனத்தது பேரரசருக்கு. அதனால் அயினி அம்மைக்குப் பிடித்த பாடலை தன் இனிய குரலில் பேரரசர் பாட, மெல்ல மெல்ல உறக்கத்திற்குச் சென்றார் பேரரசி. அப்போது தான் யாரும் எதிர்பாராவண்ணம் மதுரை முழுவதிலுமிருந்தும் மரண ஓலமும் ஒப்பாரியும் கேட்டது.

பேரரசரைப் போல மாயக்கலையில் வித்தகர்களாக இருந்தவர்கள் தங்களை விடுவித்துக் கொண்டு மற்றவரையும் விடுவிக்க, மதுரை எங்கிலும் விளக்குகளின் திரி தூண்டப்பட்டு இரவில் ஜொலித்தது. வீடுகளை விட்டு அச்சத்தோடு மக்கள் வெளிவர, எல்லோருக்குமே தங்களுக்கு ஏற்பட்ட அதே அனுபவம் நேர்ந்திருப்பதை அறிந்ததும் அவர்களின் பீதி பன்மடங்காகப் பெருகியது.

"பேரரசே! எங்களைக் காப்பாற்றுங்கள்!" என்று ஓலமிட்டபடியே நான்கு திசைக் கோட்டைக் கதவுகளையும் திறந்துகொண்டு மக்கள் வெள்ளம் அரண்மனை வளாகத்தினுள் பாய்ந்தது. சற்று நேரம் முன்பு கண்ணயர்ந்திருந்த பேரரசியின் செவிகளில் வெளியில் கேட்ட கூக்குரல்கள் விழ, மறுபடியும் திடுக்கிட்டு எழுந்தார்.

உப்பரிகைக்குச் சென்று வெளியில் இருந்த மக்களை சமாதானப் படுத்த பேரரசர் முயன்று கொண்டிருப்பதைப் பார்த்த பேரரசி, நடுங்கும் கால்களோடு தள்ளாடியபடியே சென்று பேரரசரின்

பக்கத்தில் நின்றார். களையிழந்திருந்த பேரரசியின் முகமே தங்களைப் போல அவரும் பாதிக்கப் பட்டிருப்பதை மக்களுக்கு உணர்த்த மக்களின் துயரம் பன்மடங்காகிப் போனது.

பேரரசர் தன் வலது கையை உயர்த்த, மக்கள் சற்றே சாந்தமானார்கள். "என்னாயிற்று என்று ஒருவர் விளக்கமாக கூறுங்கள்!" என்று சொன்னார் பேரரசர்.

அங்கிருந்தவர்களில் கொஞ்சமே கொஞ்சம் தைரியசாலியாக இருந்தவன் முன்னால் வந்தான். "வணக்கம் அரசே! இன்று நள்ளிரவின் போது திடீரென நான் பெற்ற செல்வங்கள் இருவரையும் நான் உயிராக நேசிக்கும் என் வயற்காட்டின் நடுவில் என் கைகளாலேயே கட்டினேன். பிறகு நானே அவர்களுக்கும் என் வயல்களுக்கும் தீ வைத்ததைப் போலக் கண்டேன். தீயில் வெந்த என் பிள்ளைகள் கதறியதைக் கேட்டதும் தன்னிலைக்குத் திரும்பி அவர்களை மீட்க நான் முயன்றால் என்னால் நகரக் கூட முடியவில்லை. எவ்வளவு அழுது புரண்டாலும் என்னால் என் பிள்ளைகளைக் காக்க முடியாமல், என் கண் முன்பே என் வம்சமும் வயல்களும் கருகிப் போனது. நான் பெற்ற குழந்தைகளை என் கைகளினாலேயே கொன்ற பாவியாகி விட்டேன் அரசே! குற்றவுணர்ச்சியும் துக்கமும் தாங்காது முற்றத்தில் இருந்த வேலினால் என்னை நானே மாய்த்துக் கொள்ள முயலும் போது யாரோ ஒரு காவல்வீரன் வந்து என்னைத் தடுத்து விட்டான். என் கையில் இருந்த வேலையும் பிடுங்கிப் போட்டு விட்டான். அப்போது தான் நான் அதுவரைக் கண்டது கனவென்றே எனக்குப் புரிந்தது. காவல்வீரன் ஒரு நொடி தாமதித்திருந்தாலும் இந்நேரம் என் உயிர் என் உடலை விட்டு நீங்கியிருக்கும்." என்று சொல்லிவிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

அவன் கூறியதைக் கேட்ட அயினி அம்மையின் உடல் விறைக்க, கிட்டத்தட்ட இதே போன்றொரு கனவைத்தான் பேரரசியும் கண்டிருக்க வேண்டுமென்று பேரரசர் கண்டுகொண்டார்.

"எங்களுக்கும் அதே போன்ற கனவே வந்தது!" என்று மக்கள் அனைவரும் சொன்னார்கள். இன்னும் கனவின் தாக்கத்திலேயே இருந்த பலரின் ஒப்பாரி ஊரையே நிறைத்தது. இந்த நேரத்தில் தான் சிம்மனின் மீது அரண்யாவைத் தாங்கிக்கொண்டு வீரன் மதுரைக்குள் வந்தான். அரண்யா வந்து விட்டாளென்று உணர்ந்த காமரி மக்களின் அழுகையை பன்மடங்காகப் பெருக்கினாள். இளவரசிக்கு இழவு மொழியில் வரவேற்பை வழங்கினாள் காமரி.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வீரன் வர, அவன் கையில் மயக்கமாக இருந்த அரண்யாவைப் பார்த்ததும் அவள் இறந்து

விட்டாளென்று நினைத்து மீண்டும் ஒரு ஒப்பாரிக்கு மக்கள் தயாராக, மேலிருந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த பேரரசனும் பேரரசியும் தலை தெறிக்க ஓடி வந்தனர். மக்களின் ஓலம் அரண்யாவின் மயக்கத்தைக் கலைக்க, மெல்லக் கண்விழித்தவள் தன் எதிரே நிற்கும் பேரரசரைப் பார்த்ததும் மனம் நிறைந்து போனாள். 'அப்பா! எத்தனை நாட்கள் ஆயிற்று உங்களைப் பார்த்து!' என்று சொல்ல வாயெடுத்தவளுக்கு உண்ணாமல் இருந்ததால் ஏற்பட்ட களைப்பினாலும் அலைச்சலினாலும், "அப்பா!" என்று மட்டுமே சொல்ல முடிந்தது.

பேரரசியின் கனவில் அரண்யாவிற்கு அவர் தீ வைத்த போது, இதே போன்ற தீனமான குரலில் தான் அவரை அம்மா என்று அழைத்திருந்தாள். அந்த நினைவு மறுபடியும் தாக்க அப்படியே வேரற்ற மரம் போலச் சாய்ந்து விட்டார் பேரரசி. அவரைப் பேரரசரும் வைனியும் தாங்கிக் கொள்ள, அரண்யாவையும் பேரரசியையும் அந்தப்புரத்திற்குள் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர் மற்றவர்.

மக்களிடம் விசாரித்து உண்மை நிலவரத்தை கிரகித்துக் கொண்ட துகிரனுக்கு இது யாருடைய வேலை என்று புரிந்து போயிற்று. கமலநாதர் துகிரனுக்கு சூட்சம சக்திகளைப் பார்க்கும் ஞானக் கண்களை வழங்கியிருந்தார். அதன் மூலம் பார்த்தவனுக்கு ஏறக்குறைய அனைத்து வீடுகளின் மீதும் மதிமயக்கி கிங்கரர்கள் இருப்பது தெரிந்தது. அனைவருக்கும் ஒரே மாதிரிக் கனவு வந்ததற்கான காரணமும் அவனுக்குப் புலப்பட்டது. சக்திவாய்ந்த இந்த வகை கிங்கரர்களை முற்றாக அழிக்கும் அளவிற்கு தனக்கு மந்திர சக்தி இல்லை என்பதை உணர்ந்த துகிரன், தற்காலிக ஏற்பாடாக மதுரையை சுற்றிப் பாதுகாப்பு வளையமிட்டான். முதலில் அவன் முயற்சியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்த கிங்கரர்களை நேரம் ஆக ஆக அவன் வளையம் தகித்தது துகிரனுக்கே வியப்புத் தான்.

அங்கிருந்த அத்தனை கிங்கரர்களும் வளையத்தின் உக்கிரம் தாங்காமல் துகிரனை வசைபாடிக்கொண்டே சென்று விட, துகிரனுக்கு இது கமலநாதரின் வேலை என்று புரிந்து போனது. அதனால் சுற்றும் முற்றும் அவரைத் தேடித் திரிந்தான். கமலநாதரைத் தேடியவனின் கண்களுக்கு அவரது தவவலிமைகள் தேன்சிட்டின் வடிவில் அவன் தலைக்கு மேலே வட்டமிடுவது தெரியாமல் போனது.

கிங்கரர்கள் மதுரையில் இருந்து ஓடிய செய்தியைக் கேட்டதும் காமரிக்குள் சந்தேகம் பிறந்தது. துகிரனின் சக்தியைப் பரிசோதிக்க வேண்டுமென்று நினைத்து அவளறையில் இருந்து அவள் வெளிவர,

துகிரனிடம் தன்னை வெளிப்படுத்தாமலேயே மறைந்தது அந்தத் தேன்சிட்டு. அதனால், தன் திட்டத்தை முறியடித்தது துகிரனே என்றெண்ணிய காமரி துகிரனின் மீது தீராத வன்மம் கொண்டாள். அவனைப் பழி தீர்க்கும் நாளினை ஆவலோடு எதிர்பார்க்கவும் ஆரம்பித்தாள்.

அரண்மனை அந்தப்புரத்தில் அத்தனை பணிப்பெண்கள் இருந்தும் பேரரசியையும் அரண்யாவையும் தானே அன்போடு கவனித்துக் கொண்டாள் வைனி. ஏழு குணக்கரை நாடுகளின் ஒற்றை இளவரசியை வேலை வாங்குவதா என்று முதலில் தயங்கிய பேரரசரிடம், "அரண்யா எனக்குச் சகோதரி எனின் பேரரசி எனக்கு அன்னையாவார்கள் அரசே. அதனால் தங்களுக்கு எவ்வகையான சங்கடமும் வேண்டாம். நீங்கள் சென்று ஓய்வெடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று சொல்லி அவரை அனுப்பி விட்டாள். வீரனையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினாள். மனமே இல்லாது அரண்யாவைத் திரும்பித்திரும்பி பார்த்துக்கொண்டே சென்றவனைக் கண்டு அங்கிருந்த அனைவர் முகங்களிலும் கேலிச் சிரிப்பு ஒட்டிக்கொண்டது. அன்றிரவு நடந்த களேபரத்திற்கு அந்தக் குறுநகையே மருந்தானது.

வைனியின் கனிவிலும் அரண்யாவின் மீது அவள் கொண்டிருந்த அன்பையும் பார்த்த பணிப்பெண்கள், வைனியின் மீது பெருமதிப்பு கொண்டனர். அவள் கேட்காமலேயே காமரியைப் பற்றியும் அவள் தோழியாகிய கனலியைப் பற்றியும் அவர்கள் கண்டதையும் கேட்டதையும் அப்படியே ஒப்பித்தனர். பல விஷயங்களில் கவனமாக இருந்த காமரி சிற்சில விஷயங்களில் கவனக்குறைவாக இருந்தாள். ஆண்களின் மனநிலையைத் துல்லியமாக கணித்துத் தன் விருப்பப்படியெல்லாம் ஆட்டி வைத்தவளுக்குப் பெண்களின் அதிலும் குறிப்பாக அவள் அலட்சியமாக நினைத்திருந்த பணிப்பெண்களின் புத்திக்கூர்மையைப் பற்றித் தெரியாமல் போனது. அவளின் ஒவ்வொரு அசைவையும் அவர்கள் கண்காணித்து தங்களுக்குள்ளாகப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்ற உண்மையும் அவளுக்குத் தெரியாமல் போயிற்று. அதனால் பேரரசியின் முன் அவள் நடித்தாலும் அவளது உண்மையான குணத்தை சுலபமாக இவர்கள் அறிந்து சமயம் பார்த்து உரியவர்களின் காதுகளுக்குள் போட்டுக்கொண்டு இருந்தார்கள்.

காமரியின் குணத்தையும் அவளுக்கு வீரனின் மீது ஒரு கண் இருப்பதையும் கூட வைனியிடம் அவர்கள் தெரிவித்துவிட்டனர். கனலியிடம் இருந்த ஒதுக்கம் வைனியிடம் ஏனோ அவர்களுக்குத் தோன்றவேயில்லை. தனக்குத் தேவையான விபரங்களைச் சேகரித்த

வைனி அடுத்து என்ன செய்வதென்று தீவிர யோசனையில் ஆழ்ந்தாள். நேரம் செல்லச்செல்ல, ஏற்கனவே மிகுந்த களைப்புற்றிருந்தவள் அமர்ந்த நிலையிலேயே உறங்கியும் போனாள். அவள் கனவில் ஐம்பூதனார் வந்து அவளை எச்சரிக்கை செய்வது போலவும் கமலநாதர் அவளிடம் உதவி கேட்பதைப் போலவும் வந்ததும் தூக்கிவாரிப் போட கண்விழித்தாள்.

அரைத்தூக்கத்தில் இருந்தவளுக்குத் தான் எங்கிருக்கிறோம் என்று உணரவே சில நிமிடங்கள் தேவைப்பட்டன. நாற்காலியில் இருந்து எழுந்து சோம்பல் முறித்தவளுக்கு உடலெல்லாம் வலித்தது. அரண்யா அளவிற்கு அதிக காயங்கள் இல்லை என்றாலும் வைனிக்கும் நிறைய காயங்கள் ஏற்பட்டிருந்தது. ஆனால் அதை கவனிக்கும் மனநிலையில் துகிரனைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் மட்டும் நேற்றைக்கு அவளுக்குத் தேவையான மருந்தைப் புகட்டவில்லை என்றால் இந்நேரம் அவளுமே சுருண்டிருக்கக் கூடும். துகிரனைப் பற்றிய எண்ணங்கள் அவள் மனதினை நிறைக்க, அவளை அறியாமலேயே அவள் உதடுகள் அவளுக்குப் பிடித்த பாடலைப் புன்னகையோடு முணுமுணுத்தது. பலகணியின் வழியாக வெளியே வேடிக்கை பார்த்தவளுக்குச் சூரியன் கிழக்கில் உதயமாவது அற்புதமாகத் தெரிந்தது.

"என்னடி விழித்துக்கொண்டே கனவு காண்கிறாயா?" என்று கேலியாக அரண்யாவின் குரல் கேட்க, வைனியின் மோனநிலை கலைந்து போனது.

புன்னகையுடன் திரும்பியவள், "இளவரசியாருக்கு இப்போது தான் உறக்கம் கலைந்ததோ?" என்று அவள் பங்கிற்குக் கேலியாகக் கேட்டாள்.

"என்றைக்கு நீ கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறியிருக்கிறாய்?" என்று கேட்ட அரண்யாவிற்கு வைனி பழிப்பு காட்டினாள்.

"எப்படியும் நீ இரவில் உறங்கியிருக்க மாட்டாய். உன் காயங்களுக்கான வைத்தியத்தையும் செய்திருக்க மாட்டாய். முதலில் வந்து ஓய்வெடு வைனி." என்று சொல்லித் தன் பலவீனமான நிலையிலும் அரண்யா எழ முயற்சிக்க, அங்கிருந்த மற்ற பணிப்பெண்களுக்கு அரண்யாவிற்கும் வைனிக்கும் இடையில் இருந்த நட்பின் ஆழம் புரிந்தது. சரியான ஆளிடம் தான் விஷயத்தைக் கூறியிருக்கிறோம் என்ற நிம்மதியும் அவர்களுக்குப் பிறந்தது.

"உறக்கம் பெரிதா என்ன? அதெல்லாம் பிறகு

பார்த்துக்கொள்ளலாம். இப்போது நீயும் அம்மாவும் தான் முக்கியம்." என்று பதிலுக்கு வைனி பேச, இந்த சம்பாஷணைகளைக் கேட்டவர்கள், 'இந்த நாவகன் வைனியை காதலித்திருந்தால் என்ன கேடாம்?' என்று தங்கள் மனதினில் நினைத்துக் கொண்டார்கள். அழகு மட்டுமே நிறைந்திருந்த காமரியையும் அவளோடு எப்போதுமே தலைக்கனத்தோடுத் திரியும் கனலியையும் அந்த அரண்மனையில் மட்டுமின்றி பெருவளநாட்டில் அவர்களைத் தெரிந்தவர்கள் யாருக்குமே பிடிக்கவில்லை.

அரண்யாவின் பேச்சுக்குரல் கேட்டதும், துயில் கலைந்து எழுந்தார் பேரரசி. அதைக் கண்ட தோழிகள் இருவரும், "உங்களை எழுப்பியதற்கு மன்னித்துவிடுங்கள் அம்மா!" என்று வருத்தம் தெரிவிக்க, "உங்கள் குரல்களைக் கேட்காமல் இத்தனை காலம் என் செவிகள் செவிடாகி இருந்தது! இனி உங்களை எங்குமே போக விட மாட்டேன்!" என்று சொல்லிப் புன்னகைத்தார் பேரரசி.

'உங்கள் குரல்கள்' என்று வைனியையும் சேர்த்துச் சொல்லி அவளையும் அரண்யா போலவே மகளாக ஏற்றுக்கொண்டதை சொல்லாமல் சொன்னார் அயினி அம்மை. அவர் அன்பில் வைனி நெகிழ, பிரிந்திருந்த தாய் சேய் பேசுவதற்கு ஆயிரம் கதைகள் இருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் சொல்வதற்குத் தடையாக அபசுரமான ஒரு குரல் கேட்டது.

"நாசமாகப் போகிறது! எல்லாமே அழியப் போகிறது!" என்று அழகிய அந்தக் காலை வேளையில் அபசகுனமாகப் பேசிக்கொண்டே அரண்மனை சோதிடர் அராஜகமாக அந்தப்புரத்திற்குள் நுழைந்தார்.

ஆமாம்... மதுரையை எரித்த அன்றே காமரி கொன்றுவிட்ட அரண்மனை சோதிடர் எப்படி உயிருடன் வந்தார்? எதைச் சொல்ல வந்தார்?

## அத்தியாயம் 11

"என்ன? எது அழியப்போகிறது?" என்று மற்றவர்கள் குழம்பிய நேரம், "அந்தப்புரத்திற்குள் பேரரசனே ஆனாலும் அனுமதி பெற்ற பின்பு தான் நுழையமுடியும். அப்படியிருக்க காலை வேளையில் இளவரசியின் பள்ளியறையில் அத்துமீறி நுழைய உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?" என்று பேரரசி அயினி அம்மை கடும் கோபத்தோடு சோதிடரைப் பார்த்துக் கேட்டார்.

"அம்மா அயினி, விஷயம் கைமீறிப் போயிற்று. மதுரைக்குத்

தீங்கு நேரும் என்று கணித்த அன்றே நான் கமலநாதனைக் காண விரைந்தேன். அவர் கூறிய சில தீச்செய்திகளைச் சுமந்து கொண்டு தள்ளாத கிழவன் ஓடோடி வந்திருக்கின்றேன், உன்னைப் பார்க்க! என் மீது கோபம் கொள்ளாதே அம்மா. இளவரசி நான் பார்த்துப் பிறந்த பெண் தானே! நான் வந்தது வேண்டுமானால் முறை தவறி இருக்கலாம். ஆனால் இந்தத் தொண்டு கிழத்திற்குத் தவறான பார்வை என்றுமே இருந்ததில்லை என்பதை அறியாதவளா நீ? நான் கூற வருவதைக் கேட்டுவிட்டுப் பிறகு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் தா!" என்று பேரரசியை சாந்தப்படுத்த அரண்மனை சோதிடர் முயன்றார்.

"எதுவென்றாலும் பேரரசரிடம் நீங்கள் சொல்வது தான் முறைமை. இப்பொழுது இடத்தை காலி செய்யுங்கள்!" என்று சற்றும் இளகாமல் பேரரசி ஆணையிட, சலித்துக்கொண்டே, "சரி! நாவலந்தீவு அழியப்போகிறது என்பதையும் எப்படி என்பதையும் இப்போது ஆயுள் பலவீனமாக இருக்கும் பேரரசனிடமே தெரிவித்துவிடுகிறேன். அதன் பிறகு அவருக்கு என்ன நடந்தாலும் அதற்கு நான் பொறுப்பாக முடியாது!" என்று தெளிவாக முணவிக்கொண்டே சென்றார் அரண்மனை சோதிடர்.

'இப்போது பேரரசனுக்கு ஆயுள் பலவீனமாக இருக்கிறது!' என்ற செய்தியே பேரரசிக்கு அதிக அதிர்ச்சியைத் தந்தது. மதுரை தீக்கிரையான அன்று அரண்மனை சோதிடரை வீரர்கள் தேடியதும் அவரைக் காணவில்லை என்று கூறியதும் பேரரசிக்குத் தெரியும். 'சோதிடர் தப்பியிருப்பார் என்று நினைத்தால் இவர் கமலநாதரைக் கண்டு வந்ததாக அல்லவா கூறுகிறார்?!' என்று நினைத்தபடியே, "நில்லுங்கள். வசந்தமண்டபத்தில் காத்திருங்கள். வருகிறேன்!" என்று கூறினார் பேரரசி. இளவரசி அரண்யா பிறந்த அன்று அரண்மனை சோதிடரின் கணிப்புத்தான் காமரியைக் கொல்லச் சொல்லி பேரரசரைத் தூண்டிவிட்டது என்று அயினி அம்மைக்குத் தெரியும். பின்னாளில் வந்த குழப்பங்களுக்கெல்லாம் அவர் தான் மூலகாரணம் என்று பேரரசி நினைத்தார். அதிலிருந்து அரண்மனை சோதிடரை சந்திப்பதைத் தவிர்த்துவிட்டார். அதுவே காமரிக்கு ஒருவகையில் வசதியாகப் போயிற்று.

"சீக்கிரம் வந்துவிடம்மா. கொண்டு வந்திருக்கும் செய்தியைத் தாமதப்படுத்தும் ஒவ்வொரு நொடியும் நாம் அழிவுப்பாதையில் துரிதமாகச் செல்கிறோம்." என்று எச்சரித்துவிட்டு சோதிடர் சென்றுவிட்டார்.

அரண்யாவையும் வைனியையும் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு, அவசரஅவசரமாக வசந்தமண்டபத்தை நோக்கிச் சென்றார் பேரரசி. ஆனால் பேரரசியை முந்திக்கொண்டு அரண்மனை சோதிடரிடம் பேசிக்கொண்டிருந்தாள் காமரி.

"யட்சி! யாருக்கும் சந்தேகம் வராமல் பார்த்துக்கொள். கமலநாதன் இல்லாத காரணத்தால் அவனின் பாதுகாப்பு வளையங்கள் பலமிழந்து போயிருக்கின்றன. அதனால் தான் உன்னால் எளிதாக அரண்மனை சோதிடனின் உருவை எடுக்க முடிந்தது. அவன் உருவில் இருப்பதால் இவர்கள் உன்னை எளிதாக நம்பிவிடுவார்கள் என்று நினைக்காதே. கிழவியின் வீரத்தைப் பார்த்தாயல்லவா? இளவரசியின் அறைக்குள் அனுமதியின்றி நுழைந்ததற்கே அந்தக் கத்து கத்தியவள், இளவரசியை இந்த உலகை விட்டு அனுப்பத்தான் நீ இங்கே வந்திருக்கின்றாய் என்பதை அறிந்தால் அவ்வளவு தான்! அதனால் பார்த்து நடந்து கொள்!" என்று காமரி கிசுகிசுத்தாள்.

"தலைவி! உங்கள் உத்தரவை நிறைவேற்றுவதே என் கடமை. நிச்சயம் அந்த அரண்யாவை இங்கிருந்து அகற்றுகிறேன். நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். வெற்றி உங்களுக்கே!" என்று நினைத்த நேரத்தில் நினைத்த உருவெடுக்கும் வல்லமை பெற்ற அந்த இச்சாதாரி யட்சிணி காமரிக்கு உறுதியளித்த போது அயினி அம்மை வருவதை உணர்ந்த காமரி, வெறும் தலையசைப்போடு அங்கிருந்து நழுவினாள்.

"சொல்லுங்கள் சோதிடரே, அப்படி என்ன தலைபோகிற செய்தி கொண்டு வந்தீர்?" என்று மிடுக்காகக் கேட்டார் அயினி அம்மை.

"சொல்லுகிறேன் அம்மா! சொல்லத்தானே வந்திருக்கிறேன். முதலில் நீ அமர்ந்து கொள். பிறகு சொல்கிறேன்." என்று பொடிவைத்துப் பேசினார் சோதிடர்.

சோதிடரின் செய்கைகள் யாவும் வித்தியாசமாக இருக்கிறதே என்ற குழப்பத்தோடு அமர்ந்தார் பேரரசி. அதன்பின்னர் சோதிடர் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் பேரரசியின் இதயத்தை யாரோ வேரோடு பிடுங்கி எறிவதைப் போல அவருக்கு வலித்தது.

சோதிடர் பேசி முடித்ததும், "வேறு வழியே இல்லையா?" என்று பாவமாகக் கேட்டார் பேரரசி.

"இருந்தால் கமலநாதன் சொல்லியிருப்பானே அம்மா! அவனாலும் இப்போது இங்கு வர இயலாது போயிற்று. அதனால் நாம் தான் நம் சக்திக்கு மீறிய வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. பேரரசரிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி காரியத்தை வெற்றிகரமாக முடித்துவையம்மா! இப்போது நான் வருகிறேன். கமலநாதனைப்

பார்த்துவிட்டு நேராக இங்கே வந்துவிட்டதால் உடல் நோகிறது!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்தது அரண்மனை சோதிடர் வடிவிலிருந்த யட்சிணி.

'பாவம்! உடல்நிலை சரியில்லாதவரைப் போய் திட்டிவிட்டோமே!' என்று கழிவிரக்கம் கொண்ட பேரரசி பணிப்பெண் ஒருத்தியை அழைத்து சோதிடருக்கு வேண்டிய உதவியை செய்யச் சொன்னார். ஆனால் மனம் சோதிடர் சொல்லிய செய்தியிலேயே உழன்றது. 'இனி எங்கும் விடமாட்டேன்! என்று சொல்லி ஒரு பொழுது கூட போகவில்லை. அதற்குள்ளாகவே பிரிவா?' என்று பேரரசியின் மனம் சங்கடத்தில் ஆழ்ந்தது. நிச்சயம் இதற்கு ஒரு தீர்வைக் கண்டாக வேண்டும் என்ற எண்ணத்துடனேயே பேரரசரை நாடிச் சென்றார் பேரரசி.

சமீரணனால் ஏற்பட்ட காயம் நன்றாக ஆறியிருக்க, பேரரசி மற்றும் அரண்யாவின் உடல்நிலை குறித்த கவலையைப் போக்கிக்கொள்வதற்காக பேரரசர் வாள்பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அவர்கள் விழித்து எழுந்து தயாராகித் தனக்கு செய்தியனுப்பும் வரையில் நேரத்தைப் போக்க அவர் வாள் சுழற்றிக்கொண்டிருக்க, இந்த வயதிலும் கட்டுக்கோப்பாக உடலை வைத்திருந்த பேரரசரைப் பார்த்து வியந்தான் வீரன். காலை வேளையை உருப்படியாகக் கழிக்கப் போகிறோம் என்ற போர்வையில் வீரனும் துகிரனும் அரண்மனைத் திடலில் பேரரசரோடு பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். துகிரனுக்கு அரண்மனையின் பாதுகாப்பை உறுதிசெய்வது தான் நோக்கமென்றால் வீரனுக்கோ அரண்யாவின் பாதுகாப்பை உறுதிசெய்வது தான் முதன்மை நோக்கமாயிருந்தது.

பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் பேரரசியைப் பார்த்ததும் வணங்கிவிட்டு, அங்கிருந்து செல்ல முனைந்தனர். அப்போது பேரரசி, "வீரா, துகிரா! நில்லுங்கள். சொல்லும் விஷயம் உங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று தான்! என்று சொல்லி வீரனையும் துகிரனையும் தடுத்து நிறுத்தினார்.

"சொல்லுங்கள் தாயே!" என்று மறுமுறை வணங்கி பேரரசியின் வாய்மொழிக்காகக் காத்திருந்தார்கள்.

"நான் இப்பொழுது சொல்லப்போகும் செய்தி கமலநாதரிடமிருந்து அரண்மனை சோதிடரின் வாயிலாக என்னை வந்தடைந்திருக்கின்றது. நம் நாவலந்தீவின் எதிர்காலமே இதில் தான் அடங்கியுள்ளது." என்ற பெரிய பீடிகையோடு பேச்சைத் துவங்கினார் பேரரசி.

"நம் நாவலந்தீவு பெரும் கண்டத்தை சந்திக்கவிருக்கிறது. வானவீதிகளில் தென்படுகின்ற பல மாற்றங்கள் குறித்துக் குருதேவர் ஆய்வு செய்த போது இன்னும் ஓராண்டிற்குள் விண்கற்கள் மழையாக நம் நாவலந்தீவினை நோக்கிப் பொழியப்போகிறது என்றும் அதனால் ஏற்படும் பேரலைகள் நம் மொத்த நிலப்பரப்பையுமே விழுங்கக் காத்திருக்கிறதென்றும் சிற்றுயிர் முதல் பேருயிர் வரை அனைத்துமே அழியப்போகிறதென்றும் தெரிந்துகொண்டு நமக்குச் செய்தி அனுப்பியிருக்கின்றார்." என்று முடித்தார் பேரரசி.

"என்ன?" என்று பேரரசர் அதிர்ந்த போது, "உண்மைதான் பேரரசி. இதை முன்பே குருதேவர் என்னிடம் தெரிவித்திருந்தார். இத்தகைய இயற்கைப் பேரிடரிலிருந்து நம்மை காத்துக்கொள்வதற்கு இந்திர ரகசியம் நமக்குப் பயன்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அதனால் வருந்த வேண்டாம். நம் நாவலந்தீவைக் காப்பது எங்கள் கடமை." என்று துகிரனையும் சேர்த்துக்கொண்டு வீரன் பதிலளித்தான்.

வீரனிடம் விண்கற்களைப் பற்றியும் கடற்கோளினைப் பற்றியும் தெரிவித்திருந்ததாக கமலநாதர் துகிரனிடம் முன்னமே கூறியிருந்ததால் துகிரனும், "ஆமாம் பேரரசி." என்று வீரனை ஒத்துப் பேசினான் துகிரன்.

"அப்படியானால் பாதகமில்லை. இந்திரரகசியம் வலிமை பெறுவதற்கு தேவைப்படும் நேரத்தையும் விண்கற்கள் நாவலந்தீவை அடைவதற்கு தேவைப்படும் காலத்தையும் கணக்கிட்டு அடுத்து செய்யவேண்டியதை செய்வோம்!" என்று பேரரசர் கூற அதை பேரரசி மறுத்தார்.

"இல்லை அரசே! நமக்கு நேரம் குறைவாகத்தான் இருக்கிறது. ஒருவருட காலமென்று கமலநாதர் முன்பு நினைத்திருக்க, இப்போது இன்னும் மூன்று மாதங்களுக்குள் விண்கற்கள் நம்மை வந்தடைந்து விடும் என்று சோதிடரிடம் தெரிவித்திருக்கிறார். வீரனுக்கோ இன்னும் குறைந்தது பத்து மாதங்கள் தேவைப்படலாம். அதனால் இந்திரரகசியத்தை விடுத்து வேறொரு உபாயத்தை சொல்லியனுப்பியிருக்கிறார் குருதேவர்."

"இந்திரரகசியத்தை விட சக்திவாய்ந்த ஆயுதத்தை எங்கே சென்று தேடுவது?" என்று கவலை கொண்டனர் மற்ற மூவரும்.

"மந்தரை மலையில்!" என்று தெரிவித்தார் பேரரசி.

"மந்தரை மலையா? அதுதான் முன்பு ஏற்பட்ட நீரூழியில் சிதைந்து போயிற்றே!" என்று துகிரன் சொல்ல, "இல்லையப்பா. முற்றிலுமாக அழிந்து போகவில்லை. மந்தரைமலையின் எச்சம் இன்னும்

மிச்சமிருக்கிறது. ஆனால் பல நூறாண்டுகளாக மனிதரின் கால் படாத அம்மலைக்கு இப்போது போவது பேராபத்து." என்று தெரிவித்தார் பேரரசர்.

"எந்த ஆபத்தையும் சந்திக்க இங்கு இரு தீரர்கள் இருக்கிறார்கள் அரசே. எதைக் கொண்டு வரவேண்டும் என்று மட்டும் ஆணையிடுங்கள். நாவலந்தீவைக் காக்க எங்கள் உயிரையும் தருவோம்!" என்று சூளுரைத்தனர் வீரனும் துகிரனும்.

"நீங்கள் சொன்னதே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது! ஆனால் ஆயுதத்தைக் கொண்டு வரும் பொறுப்பு உங்களுக்கு விதிக்கப்படவில்லையே!" என்று வருத்தமாகக் கூறினார் பேரரசி.

"அப்படியானால்...?" என்று இழுத்த பேரரசருக்கு பேரரசி சொல்ல வரும் விஷயம் புரிந்ததும் விழிகள் வெளியே தெறித்து விழுமளவிற்குக் கோபம் வந்தது.

"அரண்யாவை அனுப்பச் சொல்லித்தான் உத்தரவு வந்திருக்கின்றது!" என்று கண்கள் பனிக்கச் சொன்னார் பேரரசி.

"ஒருக்காலும் நடக்காது!" என்று என்று பேரரசர் சீறிய நேரம், "என் வாளுக்கும் புத்திக்கும் வேலை வந்துவிட்டது!" என்று பொறுமையாகச் சொன்னாள் அரண்யா. "'எங்கள்' வாளுக்கும் புத்திக்கும்!" என்று அரண்யாவைத் திருத்தினாள் வைனி.

திடீரென அரண்யாவையும் வைனியையும் அங்கு பார்த்ததும் என்ன சொல்வதென்று புரியாமல் பேரரசி தவிக்க, "அம்மா! நான் அனைத்தையும் கேட்டுவிட்டுத்தான் வந்தேன். பாதகம் எதுவும் நிகழாமல் நாவலந்தீவைக் காப்பது என் கடமை அல்லவா? நான் மேருமலையில் பயின்ற கல்வியும் உங்களின் ஆசீர்வாதமும் எனக்கு எப்போதும் துணையிருக்கும். கவலைப்படாதீர்கள். நான் கொண்டுவரவேண்டிய ஆயுதம் எது? கொஞ்சம் விளக்குகிறீர்களா?" என்று கேட்டாள் அரண்யா.

"மகளே! நீ சிறுபெண். முன்பு கல்விச்சாலையாக விளங்கிய இடம் இப்போது ஆளரவமற்று புதைகுழியாக இருக்கின்றது. அந்தக் கருவியைத் தேடிச் சென்றவர் திரும்பிய சரித்திரம் இதுவரையில் இல்லை! இது விபரீத விளையாட்டு!" என்று மறுத்தார் பேரரசி.

"அம்மா! நீங்கள் சொன்னால்தானே எனக்குத் தெளிவாகப் புரியும்." என்று அரண்யா மறுபடியும் கேட்க, "சிவனின் செங்கோல்!" என்று மெலிதாக முணுமுணுத்தார் பேரரசி.

"கொஞ்சம் சத்தமாகச் சொல்லுங்களேன்!" என்று அரண்யா

கேட்க, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "சிவனின் செங்கோல்!" என்று மீண்டும் ஒருமுறை சத்தமாகக் கூறினார் பேரரசி. ஏற்கனவே ஊகித்திருந்தாலும் பேரரசியின் வாயால் கேட்ட பிறகு பேரரசரின் முகம் அப்பட்டமான அதிர்ச்சியை வெளிப்படுத்தியது.

"இது விபரீத விளையாட்டு! இப்பொழுதே வெள்ளிமலைக்குச் சென்று கமலநாதரைக் கண்டு வருகிறேன். அதன் பின்னர் மந்திராலோசனை சபையைக் கூட்டி மற்ற மந்திரிகளின் யோசனையைக் கேட்டபின் அடுத்தகட்ட நடவடிக்கையை முடிவு செய்வோம்." என்று கண்டிப்புடன் தெரிவித்து விட்டார் பேரரசர்.

"நில்லுங்கள். இன்னும் ஒரு செய்தி இருக்கிறது. அதையும் கேட்ட பிறகு நேரத்தைக் கடத்த வேண்டுமா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்." என்றார் பேரரசி.

என்ன என்பதைப்போல ஒற்றைப் புருவத்தை பேரரசர் உயர்த்த, "கமலநாதர் இறந்துவிட்டார்!" என்று கண்களில் நீர் வழியக் கூறினார் பேரரசி.

"நிச்சயம் இருக்காது!" என்று வீரனும் துகிரனும் அலற, "நிர்வாண நிலையை அடைந்த நம் குலகுருவுக்கு இறப்பு என்பதே கிடையாதம்மா. இது தவறான செய்தி!" என்று நம்பமறுத்தார் பேரரசர்.

"தோன்றும் எதுவாயினும் அழிந்தே ஆகவேண்டும் என்பது நம் குருதேவர் வாக்கு. நேரடியாக அவரை வெல்லமுடியாத கோழைகள் மந்திரதந்திர வகையில் அவரை வீழ்த்திவிட்டனர். தான் இறப்பதற்கு முன்பு அரண்மனை சோதிடரை மட்டும் எப்படியோ தப்பிக்க வைத்தாராம் குருதேவர். அதனால் தான் மதுரை எரிந்த போதும் நீங்கள் காயமடைந்த போதும் கூட குருதேவர் நம்மைக் காண வரவில்லை. குருதேவர் அழிந்ததும் அவரிட்ட பாதுகாப்பு வளையங்கள் யாவும் செயலிழக்கத் துவங்கிவிட்டன. அதனால் எதிரிகளின் பலம் பல மடங்காகிவிட்டது. நேரிடைப் போரில் வெற்றியடைய முடியாத நம் எதிரிகள் மாயப்போரைத் துவக்கிவிட்டதன் அறிகுறிதான் நேற்றிரவு நம் மக்களுக்கு வந்த அந்தக் கொடுங்கனவு. இப்போது நம் பகைவர்களை எதிர்க்கவும் நமக்குச் சிவனின் செங்கோல் தேவைப்படுகின்றது அரசே. குறைந்தபட்சம் இந்திரரகசியத்தை வீரன் கைக்கொள்ளும் மட்டிலாவது நம்மைப் பாதுகாக்க சிவனின் செங்கோல் அவசியம்." என்று விளக்கினார் பேரரசி.

"நீ சொல்வது புரிகிறது கண்மணி. ஆனால் அரண்யாவை எப்படி அனுப்புவது? அவள் இந்த நாட்டின் பேரரசியாகப் போகிறவள்." என்று பேரரசர் கூறினார்.

"அண்ணன் இருக்க நானெப்படி பேரரசியாவேன் தந்தையே?" என்று அரண்யா கேட்டுக்கொண்டிருக்கும் போதே அரண்மனை சோதிடர் பயிற்சித் திடலுக்குள் வந்தார்.

"அரசே! உங்களுக்கு அரண்யாவின் மீது எவ்வளவு பாசம் இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். அவள் பிறந்தபோதே அவள் ஜாதகத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டவன் நான். அவள் வாழ்வு சிறக்க மற்றவர் நினைக்கக் கூட நடுங்கும் கொடுஞ்செயல்களைக் கூட பரிந்துரைத்தவன் நான். அப்படியிருக்க, இப்போது அவளுக்குத் தீங்கு நேர விட்டுவிடுவேனா என்ன? அவள் கிரகநிலைகள் இப்போது உச்சத்தில் இருக்கிறது. இளவரசி அரண்யா மந்தரை மலைக்குச் செல்லவேண்டும் என்பது அவள் விதி. அதை மாற்ற முயலாதீர்கள். நாவலந்தீவின் எதிர்காலத்தை பாழாக்காதீர்கள்." என்று பேரரசரின் மனதினை மாற்ற முயற்சி செய்தார் அரண்மனை சோதிடர்.

'என் வாழ்வு சிறக்க அப்படியென்ன கொடுஞ்செயல்களைப் பரிந்துரைத்திருப்பார்?' என்று அரண்யா எண்ணமிடும் போதே, 'உண்மை தான். அரண்யாவிற்குத் தீமை தரக்கூடிய எதையும் சோதிடர் சொல்ல மாட்டார்!' என்று நினைத்து பேரரசர் சமாதானமானார்.

"மீள வேறு வழியே இல்லையா?" என்று இறுதி வாய்ப்பாகக் கேட்டார் பேரரசர்.

"இருந்தால் சொல்லியிருக்க மாட்டேனா?" என்று போலியான பரிவுடன் தெரிவித்தார் சோதிடர்.

"சரி எப்போது கிளம்பவேண்டும்?" என்று வீரன் கேட்க, "நீயெங்கே செல்கிறாய் அப்பா?" என்று குழப்பத்தோடு கேட்டார் சோதிடர்.

"அரண்யாவைத் தனியே அனுப்பவேண்டுமென்று குருதேவர் கூறினாரா?" என்று துகிரன் கேட்க, "இல்லை!" என்று சோதிடரின் நாக்கு தானாக அசைந்து விட்டது.

"நல்லது! அப்படியானால் நானும் வீரனும் அரண்யாவிற்குத் துணையாகச் செல்கிறோம்." என்று துகிரன் சொல்ல, "என்னை விட்டுவிட்டீர்களே!" என்று அதுவரையில் அமைதியோடிருந்த வைனி இடையிட்டாள்.

"இது அபாயகரமான பயணம். அதிலும் நீ வேற்று நாட்டு இளவரசி. அதனால்..." என்று துகிரன் இழுக்க, "என் நாடும் நாவலந்தீவிற்குள் அடக்கம் என்பதை மறந்துவிட்டுப் பேசாதீர்கள். அரண்யாவிற்குத் துணையாக நான் வருவது உறுதி. என்னைத் தடுக்கும்

அதிகாரம் எவருக்கும் இல்லை." என்று பொரிந்தாள் வைனி.

"நீ வந்தால் உன்னை யார் பாதுகாப்பார்கள்? விளையாடாதே!" என்று அடிக்குரலில் துகிரன் சொல்ல, அடம்பிடித்து மனதில் நினைத்ததை சாதித்தாள் வைனி.

இறுதியில் அரண்யா, வைனி, வீரன் துகிரன் என அவர்கள் நால்வருமே செல்வதென்று தீர்மானிக்கப்பட்டது. வைனியின் அன்னை பேரரசரின் பால்யகாலத் தோழி என்பதால் வைனியின் பெற்றோரிடம் அவளின் பயணம் குறித்துத் தெரிவிக்கும் பொறுப்பை பேரரசரே ஏற்றுக் கொண்டார்.

அரண்யாவையும் வீரனையும் பிரிப்பதற்காகக் காமரி போட்ட திட்டம் தவிடுபொடியானது சோதிடரின் கவனக்குறைவான 'இல்லை!' என்கிற ஒரே ஒரு பதிலில் தான்!

நாளை மறுதினம் ஆரன்- வேல்விழியின் திருமணம் என்னும் நிலையில் அவசர அவசரமாக மந்திரிசபை கூட்டப்பட்டது. காரணம் தெரியாமலேயே நாட்டின் முக்கியமானவர்கள் அனைவரும் ஒன்று கூடினர்.

பேரரசர் கம்பீரமாக பேரரசியுடன் நடந்துவர அவர் பின்னால் அழகும் அறிவும் போட்டிபோட்டுக் கொண்டு சுடர் விடும் முகத்தோடு புலி போல நன்னடை பயின்று வந்தாள் அரண்யா. அவளோடு வைனியும் வந்தாள். நாவகன் ஏற்கனவே அவனுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் மந்திரிகளோடு அமர்ந்திருக்க, அவன் பக்கத்தில் வெகு எச்சரிக்கையோடு காமரி அமர்ந்திருந்தாள். காரியத்தைக் கெடுத்த யட்சிணியின் மீது அவள் கடுங்கோபத்தில் இருந்தாள். ஆனாலும் எதற்கிந்த திடீர் சபை என்று அவளுக்குப் புரியவேயில்லை. எதுவோ அவள் கைமீறிப் போவதாக அவள் உள்மனம் அவளுக்கு உணர்த்தியது.

அதுவரையில் சலசலத்துக்கொண்டிருந்த சபை, பேரரசரின் வருகையை கட்டியங்காரன் அறிவிக்க, மரியாதையோடு எழுந்து நின்றது. எல்லோர் முகத்தையும் புன்னகையுடன் பார்த்துக்கொண்டு வந்த அரண்யா, காமரியைக் கடக்கும் போது மட்டும் ஒரு நிமிடம் அதிகமாக அவளை ஆராய்ந்ததைப் போல இருவருமே உணர்ந்தனர். அங்கிருந்த அனைவருமே ஏதோ ஒருவகையில் காமரியையும் அரண்யாவையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டுதான் இருந்தனர். அதற்கான காரணம் இருவரில் ஒருவர் தங்களின் வருங்கால பேரரசி என்பது தான். அரண்யாவின் அழகு அகல்விளக்கின் தீபமென்றால் காமரியின் அழகோ எவருக்கும் அடங்காத காட்டுத்தீ!

பேரரசரும் பேரரசியும் அரியாசனத்தில் நடுநாயகமாக அமர,

அவருக்குப் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அரண்யாவும் வைனியும் அமர்ந்தனர். மூத்தவன் நாவகன் மந்திரிகளோடு கீழே அமர்ந்திருக்க, மேடையில் பேரரசருக்குப் பக்கத்தில் அரண்யா அமர்ந்திருப்பது பலரின் புருவங்களை உயர்த்தியது. ஏற்கனவே பேரரசர் அரண்யாதான் பட்டத்து இளவரசி என்று அறிவித்ததை அறிந்தவர்களுக்கு, அரண்யாவின் கனிவும் கண்டிப்புமான கண்கள் நிறைவைத் தந்தன.

உலைக்களமான உள்ளத்தோடும் நெஞ்சம் முழுக்க வஞ்சகத்தோடும் நடப்பவற்றை நாவகன் பார்த்திருந்தான். அவன் முகத்தை இயல்பாக்கும் பொருட்டு காமரி அவன் கையைப் பற்றியிருந்தாள். எப்போதெல்லாம் அவன் முகம் அவன் மனதின் குரூரத்தை வெளிக்காட்டுகிறதோ அப்போதெல்லாம் காமரி அவன் கைகளை அழுத்தி அவன் முகம் மாறாமல் செய்தாள்.

சபையோர் அனைவரும் அமர்ந்ததும் பேரரசர் அனைவருக்கும் முகமன் கூறினார். பின் தன் வெண்கலக் குரலில், "உங்களில் சிலருக்கு நாம் இங்கு கூடியிருப்பதன் காரணம் ஏற்கனவே தெரியும். மற்றவருக்கும் அதனை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவே இந்தக்கூட்டம். மேருவில் கல்வி கற்று அறிவில் சிறந்து விளங்கும் என் மகள் அரண்யாவிற்கு முடிசூட முடிவெடுத்திருக்கிறேன். அதை உங்களுக்கெல்லாம் தெரியப்படுத்திவிடத்தான் இந்த அவசரக் கூட்டம். நாளை மறுதினம் ஆரன்- வேல்விழியின் திருமணம் முடிந்ததும் இளவரசி அரண்யா நம் நாவலந்தீவின் அரசகுல வழக்கப்படி திக்விஜயம் மேற்கொள்ளப் போகிறார்கள். அவர்களுக்குத் துணையாக நம் சேனாதிபதி ரணதீரனின் இரண்டாவது மகனும் இந்திரரகசியத்தை வென்ற நம் யாளிவீரனும், இளவரசி அரண்யாவின் உயிர்த்தோழி ஏழு குணக்கரை நாடுகளின் இளவரசி வைனி தேவியும், நமது தான்யாதிகாரி திண்ணனின் மகனும் வெள்ளிமலைக் குருகுலத்தின் மிகச்சிறந்த மாணாக்கருள் ஒருவனான துகிரனும் செல்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்." என்று சிரித்த முகத்தோடு சொன்னார். அவர் மனதினில் பல நாட்களாக இருந்த பாரம் இறங்கியதைப் போல உணர்ந்தார்.

"இளவரசி அரண்யா வாழ்க! யாளிவீரன் வாழ்க! இளவரசி வைனி வாழ்க! துகிரன் வாழ்க!" என்று பல்வேறு ஜெயகோஷங்கள் சபையில் கேட்டது. சபையினுள்ளே வீரனும் துகிரனும் இல்லாவிடினும் கூட அவர்களை வாழ்த்தும் ஒலி வீதியெங்கும் கேட்டது. அப்போது ஒரு அமைச்சர் எழுந்து, "இளவரசிக்குத் திருமணம் செய்து முடித்துவிட்டு திக்விஜயம் அனுப்பலாமே!" என்று யோசனை சொன்னார்.

திருமணம் என்றதும் அரண்யாவின் முகம் ஒருகணம் சுருங்கிப் பின் இயல்பானது. அவளுக்கு இன்னமும் வீரனுக்கும் அவளுக்கும் திருமணப்பேச்சு நடந்திருப்பது தெரியாது. அதனால் இதென்ன புதுக்குழப்பம் என்றே நினைத்தாள். நேற்று முழுதும் அரண்மனை சோதிடர் சொல்லிச்சென்ற விஷயத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தவர்கள், நேற்றிரவு அரண்யாதான் அரசபதவியை ஏற்கவேண்டும் என்று பேரரசனும் பேரரசியும் அவளிடம் விவாதம் செய்தனர். அப்போது கூட திருமணம் பற்றிய பேச்சை எடுக்கவில்லை. அதனால் அவள் மனதை வெளியிடும் வாய்ப்பும் அவளுக்குக் கிடைக்கவில்லை. பேரரசர் என்ன சொல்லப்போகிறாரோ என்று கவலையோடு அவர் முகத்தையே பார்த்திருந்தாள் அரண்யா.

"என் மகளின் மனம் நான் அறியாததா? திக்விஜயம் முடித்து அவள் வெற்றியோடு திரும்பி வரும் போது அவள் மனம் கவர்ந்தவனுடன் அவள் திருமணம் சிறப்பாக நடைபெறும். அன்றே மகுடதாரண விழாவும் நடக்கும்." என்று புன்னகையோடு சொன்னார் பேரரசர்.

உங்களுக்குத் தெரியுமா? என்கிற தோரணையில் பேரரசியை அரண்யா பார்க்க, 'எல்லாம் தெரியும்' என்று சமிக்கை செய்தார் பேரரசி. உடனே வீரனிடம் சொல்ல வேண்டும் போலத் துடித்த மனதை முயன்று அடக்கினாள் அரண்யா.

"வேறெதுவும் இல்லை என்றால் சபை கலையலாம்!" என்று பேரரசர் எழுந்து சொல்ல அனைவரும் பேரரசரை வணங்கிவிட்டு அங்கிருந்து கலைந்தார்கள். எவரையும் திரும்பிப் பார்க்காது நாவகனும் கூட்டத்தில் கலந்துவிட்டான்.

நாவகன் யாரோ ஒருவன் போலச் செல்வது மனதைச் சுட, "அப்பா! அண்ணனுக்கே அரியாசனத்தைத் தந்திருக்கலாமே. சிறுவயது முதலே அவனுக்கு நாவலந்தீவை ஆளவேண்டும் என்கிற ஆசை உண்டு. இப்போது எனக்கு மணிமுடி என்று நீங்கள் அறிவித்த காரணத்தால் அவன் முகம் களையாகவே இல்லை. அவன் மனதினில் எனக்கு எதிரான எண்ணங்கள் கூடத் தோன்றலாம்." என்றாள் அரண்யா.

"நாவகன் முடிந்து போன கதையம்மா! அவனை விடு. என்னதான் நல்லவள் என்று சொல்லிக்கொண்டாலும் பகைவனின் மகளை அரியாசனம் ஏற்றிவைக்கும் தவறை மட்டும் இந்த வீயபாண்டியன் ஒருபோதும் செய்யமாட்டான். இது உனக்கான அரசு மகளே! எங்களுக்காக இல்லையென்றாலும் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு நீ ஏற்கத்தான் வேண்டும்." என்று மீண்டும்

வலியுறுத்தினார் பேரரசர்.

"அண்ணன் என்னை சந்திக்கவும் மறுத்துவிட்டானே அப்பா! அதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது. அவனைப் பேசவிடாது தடுக்க அந்தப்பெண் அவன் கரத்தைப் பற்றியபடியே அமர்ந்திருந்தாள். இதையெல்லாம் பார்க்கும் பொழுது என் மனம் அமைதியுற மறுக்கிறது." என்று வருந்தினாள் அரண்யா.

"அரண்யா, ஒருவனின் பேராசைக்காக ஒரு பேரரசு வீழவேண்டுமா? மக்கள் நிறைவாக வாழ நாவகன் ஒருவன் குறையோடு வாழ்ந்தால் பரவாயில்லை. வேல்விழி உன்னைக் காண ஆவலோடு காத்திருக்கிறாள். அவளுடைய திருமணத்திற்கு தேவையான ஆடை அணிகலன்களை தேர்ந்தெடுப்பதில் உங்கள் இருவரின் உதவியை நாடியிருக்கிறாள். உன் மீது பேரன்பு கொண்டிருக்கும் பலரை விடுத்து ஏன் யார் யாரையோ பற்றிக் கவலைப்படுகிறாய்? அதிலும் உன் ஓரகத்தியாகப் போகிறவள் வேல்விழி." என்று சூழ்நிலையை லகுவாக்கும் பொருட்டு பேரரசி கூற, வியப்பில் விழி விரித்தாள் அரண்யா.

"என்ன ஆச்சர்யமாக இருக்கிறதா? கமலநாதர் இந்திரரகசியப் போட்டி முடிந்ததுமே எங்களிடம் தெரிவித்துவிட்டாரம்மா. உன் மனதிற்குப் பிடிக்காத எந்தவொரு விஷயமும் இந்த நாவலந்தீவிலேயே நடக்காது." என்று பேரரசர் அன்போடு அரண்யாவின் தலையைத் தடவிக்கொடுக்க இருளில் மறைந்திருந்த நாவகனின் முகம் கொடூரத்தின் உச்சம் என்றானது.

எப்படியாவது அரண்யாவைக் கொன்றாக வேண்டுமென்று முடிவு செய்தவன் காமரியைத் தேடிக்கொண்டு சென்றான். அவன் வரவை எதிர்பார்த்தபடியே அரண்மனைத் தோட்டத்தில் அமர்ந்திருந்தாள் காமரி.

நாவகனின் கறுத்த முகத்தை பார்த்ததுமே, "என்ன நாவகா, நான் சொன்னது மெய்யென்று இப்பொழுதாவது நம்புகிறாயா?" என்று பரிகசித்தாள். வெளியில் காட்டிக்கொள்ளவில்லை என்றாலும் அவள் மனமும் குமுறிக்கொண்டு தான் இருந்தது. அரண்யாவைப் பிரித்து வெளியே அனுப்ப அவள் சதி செய்தால், கடைசியில் அவளுக்கே கேடாக முடிந்தது அவளுடைய திட்டம். எந்த அரண்யாவையும் வீரனையும் பிரிக்க வேண்டும் என்று அவள் திட்டமிட்டாளோ அவர்கள் இருவரும் இன்னும் நெருங்குவதற்கு வாய்ப்பாக அவளின் திட்டம் அமைந்ததைக் காமரியால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. என்ன செய்வது என்று அவளும் மூளையைக் கசக்கி யோசித்துக்

கொண்டுதானிருக்கிறாள். ஆனால் பலனென்னவோ சுழியம் தான்.

"நீயும் ஏன் என் மனதை காயப்படுத்துகிறாய் காமரி. நிறைந்த சபையில் என்னை எப்படி அவமானப் படுத்திவிட்டனர் பார்த்தாயா? என்னால் தாங்க முடியவில்லை. இதில் அரண்யாவின் திருமணப்பேச்சு வேறு. நான் தானே மூத்தவன். என் திருமணத்தைக் குறித்த கவலை எதுவும் இவர்களுக்கு இருப்பதைப் போலவே தெரியவில்லையே. நானே வெட்கத்தை விட்டு நம் திருமணத்தைக் குறித்து பேசவேண்டுமென்று என் பெற்றோர் நினைக்கிறார்கள் போலும். பேரரசு தான் கைக்குக் கிடைக்கவில்லை. இந்தப் பேரழகியாவது எனக்கு சீக்கிரம் கிடைக்கட்டும்!" என்று சொல்லிக்கொண்டே காமரியின் தோள் சாயப்போனவனை ஆங்காரமாகத் தள்ளிவிட்டாள் காமரி.

"என் நாட்டினைக் கைப்பற்றி எங்களை அனாதைகளாகத் திரியவிட்டு, என் தந்தையையும் கொன்று இப்போது என் மணாளனாக நினைக்கும் உனக்குச் சேரவேண்டிய அரியாசனத்தையும் பிடுங்குவார்கள். அதை சகித்துக் கொண்டு உன்னுடன் நான் இந்த அரண்மனையில் சுகிக்க வேண்டுமோ? நீயும் ஒரு ஆண் மகனா? ச்சை! உன்னைக் காதலித்ததை எண்ணி வெட்கப்படுகிறேன்." என்று கனலாகத் தகித்தாள்.

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய் காமரி? நாம் போடும் திட்டங்கள் அனைத்தும் தகர்ந்து போகிறதே! நான் என்ன செய்வேன்? நீயும் என்னை வெறுத்துவிடாதே கண்மணி! எனக்கு அரண்யாவை அப்படியே கழுத்தைத் திருகி கொல்லவேண்டும் போலிருந்தது. என்னை எதுவும் செய்யக்கூடாது என்று நீ சொன்ன ஒற்றை வார்த்தைக்காகத்தான் பிணமென இங்கே வந்திருக்கிறேன். நீயும் என்னை வதைக்காதே!" என்று சபையில் அரண்யாவும் அவன் பெற்றோரும் பேசிக்கொண்டிருந்தவற்றைத் தெரிவித்தான் நாவகன்.

"கொக்குக்கு ஒன்றே மதி நாவகா! அதுபோல நமக்கும் ஒரு இலக்குண்டு. இந்த நாவலந்தீவை நாம் தான் ஆளவேண்டும். இப்போது நம் கை தாழ்ந்திருப்பது போலத் தெரியலாம். ஆனால் திக்விஜயம் செல்லும் ஒருவர் கூட உயிருடன் திரும்பப் போவதில்லை. அதற்கான ஏற்பாடுகளை நான் செவ்வனவே செய்திருக்கிறேன். நீ வருந்தாதே! ஆனால் அரியாசனம் நம் கைக்கு வருமுன்னே இனியொரு தடவை கல்யாணம் என்ற பேச்செடுத்தாய்... உன்னை நான் வணங்கும் ருத்ரகாளிக்கு பலியிட்டு விடுவேன். ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்துவிட்டு திடுக்கிட்டு நிற்கும் நாவகனை சட்டை செய்யாமல் இளவரசிகளின் அந்தப்புரம் நோக்கிச் சென்றாள் காமரி.

அரண்யாவை கிட்ட இருந்து வேவு பார்க்கும் தருணமிது என்று முடிவு செய்து அங்கே சென்றவளுக்கு ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டும் சிரித்துக்கொண்டுமிருந்த மூவரையும் கண்டு பொறாமை எழுந்தது. அதிலும் அரண்யா வைனி என்ற இருவரின் கேலியில் செங்கொழுந்தாகிப் போயிருந்த வேல்விழியைக் கண்டவளால் அவளது மகிழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை.

வேல்விழியின் ஆனந்தத்தைக் குலைத்து அவளை அழவைத்தே ஆகவேண்டும் என்று முடிவு செய்தவளின் மனதினில் பல்வேறு குரூரமான திட்டங்கள் உதித்தன!

## அத்தியாயம் 12

"இளவரசிகளுக்கு மத்தியில் இந்த ஏழைக்கும் ஒரு இடமிருக்குமா?" என்று போலி அடக்கத்தோடு நிலைப்படியில் நின்றுகொண்டே கேட்டாள் காமரி.

"நாவலந்தீவில் ஏழை என்றோ இளவரசி என்றோ என்றைக்குமே பேதமிருந்ததில்லை தேவி. அதிலும் எங்கள் அண்ணனை மணக்கப்போகிறவர் எப்படி ஏழையாக இருக்க முடியும்?" என்று பதில் கேள்வி எழுப்பினாள் அரண்யா.

"உள்ளே வாருங்கள் அண்ணி!" என்று உரிமையோடு அழைத்தாள் வேல்விழி. அவள் குழந்தை முகத்தில் அத்தனை பாசம். என்னதான் நாவகனை அன்று வறுத்தெடுத்திருந்தாலும் அதையெல்லாம் அப்பொழுதே வேல்விழி மறந்துவிட்டாள். ஒரே குடும்பத்திற்குள் என்ன பெரிய பிணக்கு? இன்று எழும் பிரச்சனை நாளையே சரியாகிவிடும் என்ற எண்ணம் தான் அவளுக்கு. இப்போது காமரியின் பொறாமையை அறியாததைப் போலவே அன்று நாவகனை எதிர்த்துப் பேசியதால் அவன் இவள் மீது வன்மம் கொண்டுள்ளதையும் வேல்விழி அறியாள்.

அசரடிக்கும் புன்னகை ஒன்றைச் சிந்திவிட்டு, காமரி கருநாகத்தைப் போல மெல்ல உள்ளே புகுந்து வேல்விழியின் பக்கத்தில் அமர்ந்தாள்.

"உங்கள் தோழி எங்கே அண்ணி?" என்று கேட்ட வேல்விழியிடம், "அவள் இங்குதான் எங்கோ இருப்பாளம்மா. தோழி என்றால் என்றைக்குமே முதுகில் அமர்ந்துகொண்டு அழையா விருந்தாளியாக ஒட்டிக்கொண்டே வந்து குடும்ப விஷயத்தில் எல்லாம் மூக்கை நுழைக்க வேண்டுமா என்ன?" என்று குறிப்பாக வைனியைப்

பார்த்துக்கொண்டே காமரி பதிலளிக்க, வைனியின் முகம் அவமானத்தால் சிறுத்தது.

சபை நாகரிகம் கருதி அரண்யா பல்லைக்கடித்துக் கொண்டு பொறுமை காக்க, வேல்விழியோ, "உயிரைக்கொடுக்கும் நண்பர்கள் நமக்கு இருப்பார்களானால் அவர்களும் நமது குடும்ப உறுப்பினர்களே அண்ணி. பாவம்... தெரியாத மக்கள் நடுவில் தனியாக அவர்களும் சிரமப்பட்டுக்கொண்டே தானே இருப்பார்கள். ஒருநிமிடம்!" என்று சொல்லிவிட்டு, கையோடு கனலியை அழைத்துவரச் சொல்லி அருகில் இருந்த பணிப்பெண்ணிடம் கேட்டுக்கொண்டாள்.

துகிரனை வேவு பார்த்துக்கொண்டு இருந்த கனலியிடம், "இளவரசி உங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்கள்!" என்று பணிப்பெண் தெரிவிக்க, கனலிக்கு வியர்க்க ஆரம்பித்தது. துகிரனுக்கு சோதிடரைப் பற்றித் தெரிந்து போய் அரண்யாவிடம் சொல்லிவிட்டானோ என்று பதறியபடியே பணிப்பெண்ணுடன் நடந்தாள் கனலி. பத்து நிமிட நடைக்குள் பத்தாயிரம் முறை எதை எப்படிச் சொல்லித் தன்னையும் காமரியையும் காத்துக்கொள்ள வேண்டும் என்று ஒத்திகை பார்த்திருப்பாள். கடைசியில் வேல்விழியின் அறைக்குள் நுழைந்ததும்தான் கனலியால் சீராக மூச்சுவிடவே முடிந்தது.

போலிப் புன்னகையை அணிந்துகொண்டு, "இளவரசி! அழைத்தீர்களா?" என்று அரண்யாவிடம் கேட்டாள் கனலி.

"இல்லையம்மா. உங்கள் பெயர் கூட எனக்குத் தெரியாதே! உங்களை அழைத்தது வேல்விழி." என்று சொல்லி பதிலுக்கு முறுவலித்தாள் அரண்யா.

"ஆமாம். நான்தான் அழைத்தேன் கனலி. ம்... கனலி தானே உங்கள் பெயர்? நான் வந்து பத்து நாட்கள் ஆயிற்று என்றாலும் அண்ணியையோ உங்களையோ இதுவரை கண்டு பேசியதேயில்லை. கிட்டத்தட்ட சமவயதில் இருக்கும் இளம்பெண்கள் ஐவர் இருந்தும் அந்த இடத்தில் சந்தோஷக் கூச்சல் இல்லையென்றால் அந்தக் கொற்றவை கூடப் பொறுக்கமாட்டாள். நாளை மறுதினம் எனக்குத் திருமணம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதனால் வாருங்கள், உங்களுக்குத் தேவையான ஆடைகளையும் அணிமணிகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்." என்று கள்ளமில்லாமல் கன்னக்குழி சிரிப்புடன் சொன்ன வேல்விழியைக் கண்டு எதற்கும் கலங்காத கனலியின் இதயம் கூட ஒரு நொடி கசிந்தது. வெளித்தோற்றத்தில் அமைதியாக காமரி அமர்ந்திருப்பதைப் போல மற்றவர்களுக்குத்

தெரிந்தாலும் அவள் கண்களின் பின்னே சுழலும் சூறாவளியைப் பலமுறை இதற்கு முன்பும் கண்டிருந்த கனலி, அதில் சிக்கி இந்தச் சின்னப்பெண் சின்னாபின்னமாகக் கூடாதே என்ற கவலையோடு ஈசனை மனதார வேண்டிக்கொண்டாள்.

அந்த நொடியில் மனிதனுக்கு எத்தனை வகையான நிறங்கள் பரிச்சயமோ அத்தனை வகையான நிறத்திலும் ஆடைகள் அங்கே கடை பரப்பப்பட்டன. முதலில் எதற்கெடுத்தாலும் குறை சொல்வதும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போல அரண்யாவையும் வைனியையும் குத்திப் பேசுவதுமாக இருந்த காமரி, நேரம் செல்லச்செல்ல அவளின் முறையை மாற்றிக்கொண்டாள். எவ்வளவு சினமூட்டினாலும் அரண்யாவும் வைனியும் வாய்திறக்காது தங்கள் வேலையே கண்ணாக இருக்க, காமரியால் வேறெதுவும் செய்ய முடியாது போனது. நேரடியாக வாய்ச்சண்டையில் ஈடுபட்டால் அங்கிருக்கும் பணிப்பெண்கள் முதற்கொண்டு அனைவரும் காமரியை வெளியே துரத்திவிடக் கூடும் என்பதை உணர்ந்தவள், அதன் பிறகு தன் குத்தல் மொழிகளை நிறுத்திக் கொண்டாள்.

கனலியோ தன்னையும் மனுஷியாக பாவித்துச் சமமாக நடத்தும் வேல்விழியுடன் சிரித்துக்கொண்டு வாழ்வில் முதன்முறையாக ஓர் இளம்பெண்ணைப் போல நடந்துகொண்டாள். அடுத்த நொடி என்ன நடக்கும் என்ற கவலையில்லாது யார் குடியைக் கெடுக்க வேண்டும் என்ற யோசனையின்றி வேல்விழியைக் கேலி பேசுவதும் பதிலுக்கு அவள் இவளைப் பரிகசிப்பதும் என்று பொழுதைக் கழித்தது அவளுக்கு எல்லையில்லா ஆனந்தத்தை அளித்தது. அரண்யாவும் வைனியும் ஒருவரை ஒருவர் கேலி பேசினாலும் பரஸ்பரம் இருவருக்குள்ளும் மரியாதையோடு கூடிய அதீத அன்பிருப்பதைக் கண்டவளுக்கு, காமரிக்கு ஏன் தன்னிடம் அத்தகைய அன்பில்லை என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் அதே நோக்கில் பயணப்பட்டால் விடியலுக்குள் காமரி தன்னைப் புதைக்கக் கூடும் என்பதை அறிந்து தன் கவனத்தை முழுதாக வேல்விழியின் மீது திருப்பினாள்.

மதிய உணவைக் கூட மறந்து போய், ஆடைத் தேர்வில் பரபரப்பாக ஈடுபட்டிருந்தவர்களைப் பார்த்து அயினி அம்மைக்குக் கூட ஆச்சரியமாக இருந்தது. அந்த நேரத்தில் எவர் அவர்களைப் பார்த்திருந்தாலும் சிறுவயது முதலே ஒன்றாக வளர்ந்த உற்ற தோழியர் என்று தான் அவர்கள் ஐவரைப் பற்றியும் நினைத்திருப்பார்கள்.

இறுதியில் மணப்பெண்ணான வேல்விழி பச்சைப் பட்டாடையைத் தேர்வு செய்ய, அதற்குத் தோதாக மாணிக்கங்களையும்

மரகதப்பச்சையையும் சேர்த்த கழுத்தணிகளையும் காதணிகளையும் எடுத்து வைத்தார்கள். கனலியின் கண்கள் ஒரு வெண்பட்டில் நிலைப்பதைக் கண்ட வேல்விழி அவளிடம் அந்த ஆடையையே தந்து முத்துக்கள் கோர்த்த தங்க நகைகளைத் தந்தாள். ஒரு கழுத்தணி போதும் என்று கனலி எவ்வளவோ மறுக்க, "நீங்கள் இதை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்!" என்று கூறி அவள் கைகளில் அனைத்தையும் திணித்து விட்டுச் சிரித்தாள் வேல்விழி. அவளின் தூய அன்பில் நெகிழ்ந்த கனலியால் தலையை மட்டுமே ஆட்ட முடிந்தது.

நடப்பவற்றைக் கண்டும் காணாமலுமிருந்த மற்ற மூவரில் வைனி திடீரென ஒரு மஞ்சளாடையைக் கையில் எடுக்க, "பிரமாதம்!" "அற்புதம்!" என்று ஒரே நேரத்தில் காமரியும் அரண்யாவும் வைனி தேர்ந்தெடுத்த ஆடையின் அடியில் இருந்த மயில்நீல வண்ண உடையை ஒரே சமயத்தில் பற்றினர்.

அரண்யா ஒருபக்கம் ஆடையை வலுவாகப் பற்றியிருக்க, மறுபுறமிருந்த காமரியின் பிடியும் இறுகியது. சாதாரணமாக இருந்திருந்தால் அரண்யாவே முதலில் விட்டுக்கொடுத்திருப்பாள். ஆனால் காலை முதலே அவளையும் வைனியையும் எரிச்சல் படுத்திக்கொண்டிருந்த காமரிக்குத் தனக்குப் பிடித்த உடையை விட்டுத்தருவதற்கு அரண்யாவிற்கு விருப்பமின்றிப் போய் விட்டது. அவள் மனதினில் ஏனோ காமரி அவளிடம் வெறுமனே ஒரு ஆடைக்கு மட்டும் போட்டியிடுவதாகத் தோன்றவில்லை.

இருவரும் பிடியை தளர்த்திக்கொள்ள விரும்பாததால், வேல்விழி ஒரு உபாயம் சொன்னாள். "நீங்கள் இருவருமே பிடிவாதம் பிடிப்பதால் ஒரு போட்டி வைத்துக்கொள்வோம். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கே அந்த மயில்நீல உடை. சரிதானா?" என்று வேல்விழி கேட்க, "சம்மதம்!" என்று இருவருமே ஒப்புக்கொண்டனர். 'என்னை விட மிஞ்சிய சக்தி இவளுக்கேது' என்று காமரியும் 'மேருமலையில் கல்வி கற்ற என்னிடமே போட்டியா?' என்று அரண்யாவும் அகங்காரத்தோடே சம்மதித்திருந்தனர்.

சரி என்று புன்னகைத்த வேல்விழி அவள் வலது கையிலிருந்த மோதிரத்தை எடுத்தாள். "இந்த மோதிரத்தை நான் ஒளித்து வைக்கப்போகிறேன். அதை சரியாகக் கண்டுபிடிப்பவருக்கே உடை. புரிந்ததா?" என்றாள். "ப்பூ! இவ்வளவு தானா உன் போட்டி? நொடியில் கண்டு பிடிக்கிறேன் பார்." என்று காமரி ஏளனமாகச் சொல்ல, அப்போதும் புன்னகை மாறாமல் வைனியையும் கனலியையும் அழைத்தாள் வேல்விழி.

"நீங்கள் இருவரும் இவர்கள் இருவரின் கண்களை மூடுங்கள்!" என்று வேல்விழி சொன்னதும், வைனி அரண்யாவை நோக்கி அடியெடுத்து வைக்க, "இல்லை இல்லை! வைனி நீ அண்ணியின் கண்களை மூடு, கனலி நீ அரண்யாவின் கண்களை மூடு!" என்று சொல்லிவிட்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தாள் வேல்விழி. வைனி எப்படி காமரிக்கு உதவமாட்டாளோ அதே போல கனலி அரண்யாவிற்காக ஒரு துரும்பையும் அசைக்கமாட்டாள் என்பதை நன்றாகக் கணித்திருந்தாள் வேல்விழி.

அறையில் எங்கெங்கோ சென்றவள் இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்து, "ம்! தேடுங்கள்!" என்று சொன்னாள். அவ்வளவு தான், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல, வைனியைத் கிட்டத்தட்ட தள்ளிவிட்டுவிட்டு காமரி அறையைத் தேட ஆரம்பிக்க, அரண்யாவும் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தாள். ஐந்து நிமிடம் பத்தானது, பத்து நிமிடம் அரைமணியானது, அரைமணி இரண்டு மணி நேரமானது. ஆனாலும் மோதிரத்தை இருவராலும் கண்டுபிடிக்க இயலவில்லை. காமரி குறளிகளைக்கூட ஏவியிருந்தாள். அப்படியிருந்தும் அவளால் வெற்றி பெற முடியவில்லை.

மாலை மங்கும் நேரம் வரைத் தேடினாலும் இருவருக்கும் தோல்வியே மிஞ்ச, "போட்டியை முடித்துக்கொள்ளலாமா? தோல்வியை இருவருமே ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று வேல்விழி கண்சிமிட்ட, சரியென்று காமரியும் அரண்யாவும் தலையாட்டும் நேரத்தில் அப்போது ஏற்றப்பட்ட தீபத்தின் ஒளியில் அரண்யா வேல்விழியின் கையை கவனித்தாள். 'அடியே கள்ளி!' என்று மனதினில் சிரித்துக்கொண்டு, "ஏன் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்? நான் தான் மோதிரத்தைக் கண்டுபிடித்து விட்டேனே?!" என்று சிரித்தாள் அரண்யா.

"வாயால் சொன்னால் எப்படி நம்புவது? நீ திருதிருவென்று விழித்த அழகைத்தான் இரு நொடிகளுக்கு முன்பு நான் பார்த்தேனே!" என்று காமரி நொடித்துக்கொள்ள, புன்னகைத்தவாறே வேல்விழியை நோக்கிச் சென்ற அரண்யா அவள் இடதுகை மோதிர விரலில் இருந்த மோதிரத்தை உருவினாள். மோதிரத்தை மறைத்து வைப்பதைப்போல போக்குக் காட்டிவிட்டு வலது கையில் இருந்த மோதிரத்தை இடது கையில் போட்டுக்கொண்டு இருவரையும் நன்றாகத் தேடி அலைய விட்டுவிட்டாள் வேல்விழி என்பதைக் கண்டுபிடித்த அரண்யா, "இதோ! மோதிரம் இங்கிருக்கிறது! இப்போது நம்புகிறாயா... அண்ணி!" என்று அண்ணி என்பதில் மிகையான அழுத்தம் கொடுத்து அரண்யா கேட்க, கோபத்தில் முகமெல்லாம் சிவக்க, அங்கிருந்து ஓடிவிட்டாள் காமரி.

"அண்ணி..." என்று அழைத்துக்கொண்டே காமரியின் பின்னால் சென்ற வேல்விழியைத் தடுத்து நிறுத்தினாள் கனலி. இப்போது காமரி இருக்கும் மனநிலையில் வேல்விழி சென்றால் அதோகதிதான் என்பதை நன்கு அறிந்திருந்தவள் அவளிடம், "வேண்டாம் செல்லாதீர்கள்!" என்று சொல்லிவிட்டு அரண்யாவிடம் திரும்பி, "இளவரசி! நீங்கள் எத்தனையோ பெரியவர்கள், கல்வியிலும் செல்வத்திலும் எங்களை விட மிக மேன்மையானவர்கள். நீங்கள் நினைத்தால் ஒன்றென்ன ஓராயிரம் ஆடைகளை வைரத்திலும் வைடூரியத்திலுமே இழைத்து அணிந்துகொள்ளலாம். ஆனால் பாவம், காமரிக்கும் எனக்கும் அந்தக் கொடுப்பினை இல்லை. அருமையாய் வளர்க்க அன்னை தந்தை இருந்தும் அவர்களைப் பிரிந்து நீங்கள் மேருவிற்குச் சென்றது கல்வி பயிலவேண்டுமென்ற உங்கள் ஆசையினால். ஆனால் எங்கள் பெற்றோர்கள் எங்களிடமிருந்து வலுக்கட்டாயமாக காலத்தினால் பறிக்கப்பட்டார்கள். அரச வம்சத்தில் பிறந்த எங்கள் காமரியைப் பஞ்சப்பராரியாக அலையவிட்ட அதே விதி தான் இன்று அவளை இந்த உடைக்கு ஆசைப்பட வைத்தது போலும். வாழ்க்கையில் நீங்கள் விரும்பிய அனைத்துமே உங்களுக்குக் கிடைத்திருக்கும் போது, எதுவுமே கிடைக்காத அந்த அநாதைப் பெண்ணிற்கு ஒரே ஒருதரம் நீங்கள் விட்டுக்கொடுத்திருக்கலாமே? சரி! போனது போகட்டும். தவறாக பேசியிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்! நான் வருகிறேன்." என்று வருத்தத்துடன் பேசிவிட்டு நடந்தாள் கனலி.

அவள் சோகம் உண்மை என்பதை அறிந்த அரண்யாவிற்கு மனம் வலிக்க, "கனலி! ஒரு நிமிடம் நில்லேன். இதோ! காமரி தேவிக்கு பிடித்த ஆடை. அவர்களிடமே தந்துவிடு! நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்டதாக தயவு செய்து தெரிவித்து விடு. அவர்கள் என்னை சந்திக்கச் சம்மதித்தால், நேரில் கூட மன்னிப்பு கேட்க நான் சித்தமாகயிருக்கிறேன் என்றும் தெரிவித்துவிடு. அப்புறம் இன்னும் ஒன்று, வாழ்க்கையில் எதுவுமே கிடைக்காதவளல்ல காமரி, உன்னைப்போன்ற ஒரு உயிர்தோழியைப் பெற்றிருக்கிறாள்; இந்த நாவலந்தீவின் இளவரசனையே மணாளனாகப் பெற்றிருக்கிறாள். அவன் மூலம் எங்கள் அனைவரையுமே உறவாகப் பெற்றிருக்கிறாள். அதனால் இனியொரு தடவை என் அண்ணியை அநாதை என்று கூறாதே!" என்று சொல்லி, கனலிக்கு முன்பு எடுத்து வைத்திருந்தவைகளையும் இப்போது காமரிக்குப் பிடித்த உடையினையும் நீலமாணிக்க அணிமணிகளையும் சேர்த்துத் தந்தாள் அரண்யா.

"நன்றி இளவரசி!" என்று மெய்யான மகிழ்ச்சியோடு

காமரியின் அறைக்குச் சென்றாள் கனலி.

"காமரி, காமரி! இதோ பார்! இளவரசி அரண்யா உனக்காக அந்த ஆடையைத் தந்துவிட்டார்கள். உனக்கே வெற்றி! நீ கலங்காதே!" என்று சொல்லியபடியே காமரியின் தோளை கனலி தொட, பளாரென்று கனலியின் பொறி கலங்கும் அளவிற்கு அறைந்தாள் காமரி.

"நான் தோற்ற உடையை அந்த அரண்யா கைகாரியிடம் யாசகமாகப் பெற்றுக்கொண்டு வந்து அதை என்னிடம் தர உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்? அதிலும் இளவரசியாமே? காட்டில் அநாதையாகக் கிடந்து ஓநாயும் நரியும் திண்ண வேண்டிய பிண்டமாகிய உன்னை எடுத்து... வளர்த்து... கல்வி கற்பித்து... என் தோழி என்கிற அந்தஸ்த்தையும் தந்தால், நீ என்னமோ ஒற்றைப் பட்டாடையையும் சில நகைகளையும் அந்த மந்தி வேல்விழி வீசினாள் என்பதற்காக அவளுக்கு வாலாட்ட ஆரம்பித்து விட்டாயோ? தொலைத்து விடுவேன், ஜாக்கிரதை!" என்று கனலியின் கன்னங்கள் வீங்கும் வரை அறைந்த காமரி அந்த மயில் நீல உடையை எடுத்துத் தீயில் போட்டு அது கருகும் வரை ஒரு குரூர அமைதியோடு பார்த்திருந்தாள்.

"இது... உனக்கு நான் விடுக்கும் கடைசி எச்சரிக்கை கனலி. இனி ஒரு முறை எதிரியிடம் என் உத்தரவின்றி நீயாக பேசினால் கூட உன்னை நரமாமிசம் உண்ணும் யட்சிணிகளிடம் தாரை வார்த்துவிடுவேன்!" என்று காமரி கர்ஜிக்க, 'வேல்விழியுமா உனக்கு எதிரி?' என்பதைப் போலப் பார்த்தாள் கனலி.

கனலியின் பார்வையைப் புரிந்து கொண்ட காமரி, "இந்த உலகத்தில் என்னைத் தவிர இருக்கும் அனைவருமே எனக்கு எதிரிகள் தான்!" என்று ஆவேசமாகச் சொல்லிவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

இரவெல்லாம் அழுதழுது சிவந்த விழிகளுடனும் கன்றிய கன்னங்களோடும் அமர்ந்திருந்த கனலியை எப்போதும் போலவே எதிர்கொண்டாள் காமரி. தன் உற்ற தோழியையே காயப்படுத்திவிட்டோம் என்கிற குற்றவுணர்ச்சி கிஞ்சித்தும் அவளுக்கில்லை. ஆனால் கனலி எதுவும் நடவாததைப் போலவே நடந்துகொள்ள வேண்டுமென்று காமரி எதிர்பார்த்தாள்.

வழக்கமான முகமன் கூறிய காமரியைக் கனலி ஏறெடுத்தும் பார்க்கவில்லை. குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்த கனலியின் கண்களிலிருந்து பெரிய பெரிய நீர்மணிகள் விழ, அவளை சமாதானப்படுத்தும் முயற்சியில் காமரி இறங்கினாள்.

"நான் நினைத்த அளவிற்குத் துகிரன் சக்திவாய்ந்தவன் அல்ல

கனலி. அவனால் யட்சிணி தான் சோதிடர் உருவில் இருக்கிறாள் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இவன் நமக்கு எந்த வகையிலும் முட்டுக்கட்டை போடமாட்டான் என்றே நான் நினைக்கிறேன். அதனால் பிழைத்துப் போகட்டும். இப்போதைக்கு அவனை எதுவும் செய்யவேண்டாம் என்று குறளியிடம் உத்தரவிட்டுவிட்டேன். உன்னிடமும் இப்போது சொல்லிவிட்டேன். பயலுக்கு ஆயுசு கொஞ்சம் கெட்டி தான். இல்லாவிட்டால் என்னால் நாள் குறிக்கப்பட்டவன் என் மூலமே விடுவிக்கப்படுவானா என்ன?" என்று சொல்லிவிட்டுப் பேய்ச் சிரிப்பு சிரித்தாள்.

காமரி எதிர்பார்த்த அளவிற்கு கனலி இறங்கி வரவில்லை என்றாலும் துகிரனை உயிரோடு விடுகிறேன் என்று சொன்னபோது கனலியிடமிருந்து மெல்லிய ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிவந்ததை காமரி உணர்ந்து கொண்டாள். கனலி இளக ஆரம்பித்ததை உணர்ந்தவள், அவளுக்கு மேலும் ஒரு வாக்குத் தந்தாள்.

"உன்னை அடித்தது உனக்கு வருத்தமாக இருக்கலாம் கனலி. ஆனால் என் நிலைமையை உணராது நீ நடந்துகொள்ளலாமா? சரி, உன்னை நான் அடித்ததற்காக உனக்கு மேலும் ஒரு பரிசு தருகிறேன். எந்த நிலையிலும் என்னால் வேல்விழியின் உயிருக்கு மட்டும் எந்த ஆபத்தும் நேராது என்று வாக்குத் தருகிறேன். போதுமா?" என்று காமரி கேட்க, வெளிப்படையாகவே நிம்மதியானாள் கனலி. பாவம் அவளுக்குத் தெரியாது, காமரியின் மனதில் வேல்விழிக்காக அவள் தீட்டியிருக்கும் வஞ்சகமானத் திட்டம் மரணத்தை விடக்கூடியது என்று!

"நான் குளித்துத் தயாராகிறேன். இன்று ஈசனுக்குப் பூசை இருப்பதாக நேற்றே பேரரசி சொன்னார். நாம் கட்டாயம் வரவேண்டும் என்றும் சொன்னார். ஊரே ஒன்று கூடியிருக்க, நாம் மட்டும் இங்கே பூட்டிய கதவுகளின் பின்னே எந்நேரமும் இருப்பது சந்தேகத்தைத் தருவிக்கும். நீயும் கிளம்பு காமரி. சீக்கிரம் செல்வோம்!" என்று கூறித் தயாராகி வந்தாள் கனலி.

"இந்த முகத்தோடு எங்கே செல்கிறாய்?" என்று கேலி போலக்கேட்டு கனலியின் வீங்கிய முகத்தை கண்ணாடியில் காமரி காட்ட, கனலியின் முகம் மேலும் வாடிவிட்டது.

"என்னைச் சேர்ந்தவர்களுக்கு நான் மிகவும் நல்லவளடி. அநாவசியமாக என்னை ஏன் பொல்லாதவளாக்குகின்றாய்?" என்று கனலியிடம் கேட்டுக்கொண்டே மந்திரத்தைப் பயன்படுத்தி அவள் காயங்களைக் குணப்படுத்தினாள் காமரி.

எதுவும் பேசாமல் சிலையென நின்றிருந்த கனலியை

அழைத்துக்கொண்டு அரண்மனை முகப்பிற்குச் சென்றாள் காமரி. அங்கே அரண்யாவோடு வைனியும் வேல்விழியும் நின்றிருக்க, காமரியாகவே சென்று அவர்களிடம் பேசினாள். நேற்று அவள் நடந்துகொண்ட முறைக்கு மன்னிப்பு வேறு கேட்டாள். காமரியின் நடவடிக்கைகள் வெகு வித்தியாசமாக இருக்க, அவள் ஏதோ பெரிதாகத் திட்டம் போடுகிறாளென்று கனலிக்குப் புரிந்தது.

விழிகளாலேயே கதை பேசிச் சிரிக்கும் வீரனையும் அரண்யாவையும் காமரி நோட்டம் விட்டுக்கொண்டே அவர்களை அழிக்கத் திட்டம் தீட்டுவதையும், நாவகனைக் கண்களாலேயே அவள் வேலை வாங்கும் விதத்தையும் பார்த்த கனலியால் எத்துனை முயற்சி செய்தும் இயல்பாகவே இருக்க முடியவில்லை. பெருமுயற்சி செய்து அங்கிருந்து நழுவித் தனியே அமர்ந்திருந்தாள்.

ஈசனுக்குப் பூசைகள் செய்த பின், ஆரனையும் வேல்விழியையும் பெரியவர்கள் வாழ்த்திய நொடியில், நாவலந்தீவின் நிமித்தக்காரனுக்கெல்லாம் தலைமைக் குரு போன்ற நிசும்பன் திடீரென ஆவேசம் வந்தவனைப் போல ஆடினான்.

"அடே பாண்டியா! என் இடத்திற்கு என் உடமையைத் திருட என் அனுமதியின்றியே உன் குலக்கொடியை அனுப்புவாயா? சிவன் சொத்து குலநாசம் என்பது மறந்துபோயிற்றா இல்லை ஈசன் செத்துவிட்டான் என்ற மமதையா?" என்று சொல்லிக்கொண்டே நிசும்பன் ருத்திரதாண்டவம் ஆட, பேரரசரும் பேரரசியும் ஓடிச்சென்று நிசும்பனின் கால்களில் விழுந்தனர். உடனே காவலாளிகள் அரசகுடும்பத்தை சேர்ந்தவர்களை விடுத்து மற்ற மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

"அப்பா! ஈசா! மக்களைக் காக்க எனக்கு வேறு வழி தெரியவில்லையே. வாழவேண்டிய பிள்ளைகளப்பா. கருணை காட்டு!" என்று பேரரசி மனமுருக வேண்ட, "கருணையா? தொட்டிலிலாடும் பச்சைப் பிள்ளை என்றும் பாராமல் பகைவனின் மகளை இரு துண்டாகப் பிளக்கத் துணிந்தவனுடைய மனையாட்டி என்னிடம் மட்டும் எதற்காக கருணையை எதிர்பார்க்கிறாளாம்?" என்று நிசும்பன் பரிகாசம் செய்ய, அவன் பேசுவதைக் கேட்ட அரண்யாவின் முகம் செத்துவிட்டது.

"நாங்கள் செய்த பிழைகள் எல்லாமே மக்களுக்காகத்தான்! மன்னித்து அருள்க! பெருமானே! மன்னித்தருள்க!" என்று பேரரசர் வீரபாண்டியனும் இறைஞ்ச ஆரம்பித்தார்.

"மக்களுக்காகவா? சரி இருக்கட்டும்! கூப்பிடு அவர்களை! என்

தேசம் தேடிப் புறப்படப் போகிறவர்களை!" என்று நிசும்பன் கூறியதும் அடுத்த நொடியே அரண்யா, வீரன், துகிரன், வைனி என நால்வரும் அவன் கால்களில் விழுந்தார்கள்.

திருநீறெடுத்து அனைவரின் நெற்றியிலும் பூசியவன், "இந்த நொடியே பயணம் தொடங்கட்டும்!என்னை ஏய்க்க எவராலும் முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!" என்று கூறிக்கொண்டே தரையில் சரிந்தான். சில காவல் வீரர்கள் அவனைத் தூக்கிச் சென்று பின்மண்டபத்தில் படுக்க வைத்தார்கள்.

"நிமித்தக்காரன் என்ன ஆரூடம் சொன்னான்?" என்று கேட்டு மக்கள் பேரரசரை நெருக்க ஆரம்பித்தனர். மக்களுக்கு அரண்யா திக்விஜயம் செய்யப்போவதையோ அதன் பிறகு அவளுக்கு மகுடதாரணம் செய்ய முடிவெடுத்திருப்பதையோ இன்னும் முரசறைந்து சொல்லவேயில்லை. அதனால் விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவர்களிடம் அதிகமாகவே இருந்தது.

மக்களை அமைதிப்படுத்திய பேரரசன், "என் உயிர் போன்ற மக்களே! நாவலந்தீவிற்கு விண்கற்கள் வாயிலாகப் பெரிய அபாயம் வந்துள்ளது. அதிலிருந்து நம்மைக் காக்க நமக்கிருக்கும் ஒரே துருப்புச் சீட்டு சிவனின் செங்கோலைக் கைப்பற்றுவது தான். நம் அரண்மனை சோதிடர் இளவரசி அரண்யாவினால் மட்டுமே இக்காரியத்தைச் சாதிக்க முடியுமென்று கூறினார். அதனால் நாளை ஆரன் வேல்விழித் திருமணம் முடிந்ததும் அரண்யா, வீரன், துகிரன் வைனி என நால்வரும் மந்தரை மலைக்குச் செல்லவிருந்தார்கள்! ஆனால் ஈசன் நம் நிசும்பனின் மூலம் அவர்களை உடனே கிளம்பச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறார். அவர்கள் பயணம் வெற்றியாகட்டும் என்று வாழ்த்துவோம்!" என்று கூறினார்.

மந்தரை மலை என்ற சொல்லைக் கேட்டதுமே அங்கிருந்த மக்கள் அனைவரும் கல்லெனச் சமைந்தார்கள். "இளவரசி வாழ வேண்டிய பெண் அரசே! அவர்களை படுகுழியில் தள்ளாதீர்கள்!" என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்க, "வேண்டாம்! போக வேண்டாம்!" என்று பல குரல்கள் கேட்டன.

எப்போதும் பேரரசரின் ஒரு வார்த்தைக்குக் கட்டுப்படும் மக்கள், இன்று கட்டுப்படாது இருக்க, அரண்யா பூசைத்தட்டிலிருந்த சங்கை எடுத்து ஊதினாள். சங்கு சத்தம் கேட்ட மக்கள் அவர்களாகவே அமைதியானார்கள்.

"ஒரு இளவரசி என்பவள் தந்தை சேமித்திருக்கும் செல்வத்தை எல்லாம் நோகாமல் கைக்கொண்டு ஆட்சி புரிபவளல்ல. அத்தகைய இளவரசியும் நானல்ல. என் மக்களுக்குத் துயரமென்றால்... அதை

என்னால் நிவர்த்தி செய்ய முடியுமென்றால், அதனைச் செய்ய உயிரே போனாலும் நான் ஒருக்காலும் தயங்கேன். மேருவில் நான் கல்வி கற்றது என் தனிப்பெருமைக்காகவா? நிச்சயம் இல்லை! உங்களை நல்ல முறையில் காப்பதற்கான படிப்பினைகளை கற்பதற்காகவே! அத்தோடு நான் தனியாகவும் செல்லவில்லை. சிம்மயாளியை அடக்கி, இந்திர ரகசியத்தையும் வெற்றி பெற்ற ஒரு மாபெரும் வீரனே என்னுடன் வருகிறான். அவன் மட்டுமா? மருத்துவத்தில் தலை சிறந்தவளும் என் தோழியுமாகிய வைனியும் சூட்சமக் கல்வியில் கரை கண்ட என் தோழன் துகிரனும் என்னுடன் பயணிக்கிறார்கள். தவிர, இத்தனை பேருடைய நல்லாசிகளும் என்னுடன் இருக்கும் போது, எனக்கென்ன ஆகும்? ஒரு சிறு கீறல் கூட என்மீது விழாது என்னை இவர்கள் பார்த்துக்கொள்வார்கள். ஆதலால் தடை சொல்லாமல் எங்கள் காரியம் நிறைவேற வேண்டுமென வாழ்த்துங்கள் பார்க்கலாம்!" என்று தன் நீண்ட உரையை அரண்யா முடித்துக்கொள்ள, நாலாபுறமும் வாழ்த்தொலிகளும் ஜெயகோஷமும் கேட்டன. ஆனால் நாவகனின் முகம் தூய வெறுப்பை மட்டுமே வெளிக்காட்டியது. மக்களின் வாழ்த்தொலிகளைக் கேட்கப் பிடிக்காமல் அவன் எங்கோ சென்று மறைந்தான்.

"சரி! ஈசனின் வாக்குப்படி இப்போதே கிளம்பத் தயாராகுங்கள்!" என்று பேரரசன் உத்தரவிட, ஏற்கெனவே அவரவர்கள் தயார் நிலையில் வைத்திருந்த பயணப்பையை பணிமக்கள் எடுத்துவந்தனர். மறுபடியும் ஈசனை வணங்கிட, பேரரசர் யாருக்கோ காத்திருப்பது போல அனைவருக்குமே தோன்றியது.

"யாருக்காக காத்திருக்கின்றீர்கள் பேரரசே?" என்று துகிரன் கேட்க, "எல்லாம் நம் அரண்மனை சோதிடருக்குத்தான் துகிரா. காலையிலேயே வந்துவிடுவதாகச் சொன்னவரை இன்னும் காணோம்!" என்று கூறினார் பேரரசர்.

"அரசே! உங்களுக்குத் தெரியும் என்றல்லவா நினைத்தேன்? சோதிடர் நேற்றிரவே சிவபதம் அடைந்துவிட்டார். அவர் இல்லத்தில் அவர் வைத்திருக்கும் தாழியிலேயே சமாதியடைந்து விட்டார். என்ன இருந்தாலும் சக்தி வாய்ந்த சோதிடரல்லவா? அவர் மரணத்தைக் கணிக்க அவருக்குத் தெரியாதா என்ன?" என்று காமரியைப் பார்த்துக்கொண்டே துகிரன் சொல்ல, அலட்சியமான முகபாவத்தோடு அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள் காமரி. ஆனால் அவள் உள்ளத்திலோ தீ கொளுந்துவிட்டு எரிந்தது.

"அப்படியானால் சரி! நமக்கு அதிக நேரமில்லை. கிளம்பலாம்!"

என்று சொல்லிய பேரரசர் ஒவ்வொருவராக ஆசீர்வதித்தார். துகிரனும் வைனியும் பேரரசரிடம் ஆசி பெற்ற பின்னர், முறையே பேரரசியையும் துகிரனின் பெற்றோரையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டிருந்தனர்.

அரண்யாவின் முறை வரும்போது, "மகளே! நிசும்பன் சொன்னதை முழுமையாயாகக் கேட்ட உனக்கு எத்தனையோ கேள்விகள் இருக்கும். பச்சைக்குழந்தையைக் கொல்லும் பாதகனல்ல உன் தகப்பன். நாம் அடுத்தமுறை சந்திக்கும் போது உனக்கு எல்லாவற்றையும் விரிவாக விளக்குகிறேன்! என்னை வெறுத்துவிடாதே குழந்தாய்!" என்று சொல்லிக் கலங்க, "அப்பா! என்னயிது? நான் உங்களை வெறுப்பதானால் சூரியன் மேற்கே அல்லவா உதிக்க வேண்டும்? என் மனதில் கேள்விகள் இருப்பது உண்மைதான். ஆனால் நீங்கள் எப்போது எனக்கு விளக்கம் தரவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்போது தந்தால் போதுமானது. நான் வரும் வரையில் அன்னையை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு அயினி அம்மையிடம் விடைபெறச் சென்றாள் அரண்யா.

அடுத்ததாக வீரன் வர, அங்கிருந்த மக்கள் ஏற்படுத்திய வாழ்த்தொலி கோழையையும் பெருவீரனாக்கும் வல்லமை படைத்தது.

"வீரா... இளவரசிக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்வது உன் கடமை! உன் கடமையை நீ செவ்வனே நிறைவேற்றுவாய் என்று நம்புகிறேன்!" என்று கம்பீரமாகப் பேரரசர் வீயபாண்டியன் வீரனிடம் சொன்னார்.

"என் உயிர் இருக்கும் வரையில் இளவரசிக்குத் தீங்கு நேர அனுமதியேன் அரசே!" என்று வீரன் உணர்ச்சி பொங்க வாக்கு தந்தான். அவன் முகத்தில் மின்னும் உறுதியே மற்றவருக்கு ஆறுதலை அளித்தது.

"யாளி வீரன் வாழ்க! இளவரசி அரண்யா வாழ்க! வாழ்க!" என்ற மக்களின் ஜெய கோஷம் விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்தது.

கோவிலிலிருந்து புறப்பட்ட நால்வரும் அவரவர் குதிரைகளில் ஏறிச் சென்றதும் அங்கே நீலமலை குருகுலத்தின் தலைமைக்குருவும் வைனியின் குலகுருவுமாகிய தீசகர் வந்து சேர்ந்தார்.

திடீரெனத் தோன்றியவரை வரவேற்ற பேரரசரிடம், "நல்ல எமகண்டத்தில் இவர்களை எங்கே அனுப்புகிறீர்கள்?" என்று கேட்டாரே ஒரு கேள்வி, அப்படியே பேரரசரின் மொத்த உடலும் ஆடிப்போயிற்று. சிவனின் செங்கோலைத் தேடிச் செல்லும் கதையை ஆதியிலிருந்து சற்று முன்பு நடந்த நிகழ்ச்சிகள் வரை அத்தனையையும் சுருக்கமாகப் பேரரசர் சொல்ல, தீசகரின் முகத்தில் ஒரு மர்மப் புன்னகை தோன்றியது.

"எங்கள் நாட்டு இளவரசிக்குப் பாதுகாப்பாக பாதி வழி வரையேனும் நான் செல்லத்தான் வேண்டும். இப்போது நேரமில்லை!" என்று சொல்லி வந்த வேகத்திலேயே அவர்கள் நால்வரையும் பின்தொடர்ந்தார் தீசகர்.

"சனியன் பிடித்தவன்! காரியத்தையே கெடுத்துவிட்டான்." என்று தீசகரைப் பார்த்து முணுமுணுத்த காமரி, கோவில் மண்டபத்தில் படுத்திருக்கும் நிசும்பனை அழைத்துக்கொண்டு தனியே சென்றாள்.

தீசகர் சென்றதும், "ஈசா! நீயே துணை!" என்று சொல்லிக் கோவிலிலேயே தியானத்தில் அமர்ந்தனர் பேரரசனும் பேரரசியும். அரண்யா நல்லபடியாகத் திரும்பிவரும் வரையில் அவர்களின் உயிர் அவரிடத்தில் தங்காது அரண்யாவையே சுற்றிக்கொண்டிருக்கும்.

ஒரு மறைவிடத்திற்கு நிசும்பனைக் காமரி இழுத்துச் சென்றதும், "நீ சொன்னபடியே நடித்து அனைவரையும் ஏமாற்றிவிட்டேன். என் குடும்பம்?" என்று இழுத்தான் நிசும்பன்.

"காரியம் பழமாகியிருந்தால் ஒருவேளை உன் குடும்பத்தை உனக்குத் திருப்பித் தந்திருப்பேன். ஆனால் என்னைப் பொறுத்தவரை அரைகுறை வெற்றி தோல்வியை விடக் கீழானது. அதனால்..." என்று சொல்லிக்கொண்டே அவன் மீது வர்மத்தைப் பிரயோகிக்க, கைகால் இழுத்துக்கொண்டு அங்கேயே சரிந்தான் நிசும்பன்.

"உனக்கு உப்பிட்ட அரசனுக்கே துரோகம் செய்த உன்னை என்னைத்தவிர வேறு யாராலும் காப்பாற்ற முடியாது. எந்த மருத்துவனாலும் உன் கட்டை அவிழ்க்க முடியாது. உண்மையையும் உன்னால் சொல்ல இயலாது. இப்படியே வேதனைப்பட்டு இறந்து போ!" என்று சொல்லிவிட்டுக் கனலி இருக்குமிடத்தை நோக்கிச் சென்றாள் காமரி.

கனலியோ துகிரன் செல்லும் முன்பு அவளிடம் சொல்லிச் சென்றதையே நினைத்து நினைத்து மறுகினாள்.

"வெற்றிகரமாக என்னை இங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டதாக பெருமகிழ்ச்சி கொள்ளவேண்டாம். யட்சிணி தான் சோதிடர் என்பதைத் தெரிந்தே தான் இந்தப் பயணத்திற்கு நான் ஒப்புக்கொண்டேன். அதற்கான காரணம் எனக்கும் என் குருதேவருக்கும் தெரியும். உங்களுக்குத் தெரியும் போது தெரியும். நான் இல்லாமல் இருக்கும் இந்நிலையைப் பயன்படுத்தி பேரரசர் குடும்பத்திற்கோ மக்களுக்கோ எந்தத் தீங்கினையாவது செய்ய நினைத்தீர்கள் என்றால் உங்கள் சக்திகளை அழித்து உங்களை பாதாளத்தில் புதைக்கும் வேலையை நாங்கள் நால்வரும் செய்ய நேரிடும். ஜாக்கிரதை!" என்று

நீண்ட எச்சரிக்கையைத் தந்துவிட்டுப் போயிருந்தான் துகிரன்.

'இருக்கும் குழப்பம் போதாதென்று இவன் வேறு! இவனுக்கு யட்சிணியைப் பற்றிய உண்மை தெரிந்துவிட்டது என்று காமரிக்குத் தெரிந்துவிட்டால் அவ்வளவுதான். அவனை மீண்டும் கொல்ல வேண்டுமென்று மலையேறுவாளே! ஈசா! என்னைக் காப்பாற்று, என்னிடமே உளறிவிட்டுப் போகும் இந்த முட்டாள் துகிரனையும் காப்பாற்று!' என்று தனக்குள்ளேயே கனலி பேசிக்கொண்டிருக்கும் நேரம், காமரி வந்தாள்.

"துகிரனைக் கொன்றுவிடு!" என்று எடுத்தயெடுப்பிலேயே அடிக்குரலில் சீறினாள் காமரி.

கனலி எதை நினைத்து பயந்தாளோ... அது அந்த நொடியே நடந்துவிட்டது. காமரியின் கண்களில் தென்பட்ட கடுமை இந்த விஷயம் விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்பதை கனலிக்கு உணர்த்தியது.

வேறுவழியின்றி, "சரி!" என்று வருத்தத்துடன் சொல்லிவிட்டு அவர்களைக் கனலி பின்தொடர எத்தனிக்க, "செங்கோலை ஒருவேளை இந்தக் குரங்குகள் கைப்பற்றினால்... நீயதைக் கைப்பற்றி விடு! அதன்பிறகு அந்த அடங்காப்பிடாரன் துகிரனை அணுஅணுவாகச் சித்ரவதை செய்த பின் கொன்றுவிடு!" என்று புதிய ஆணையை காமரி பிறப்பிக்க, அதற்கும் சரியென்று தலையாட்டிவிட்டுக் கனலி கிளம்பினாள்.

காமரிக்கு நன்மை தீமைகளைச் சொல்லி, சிலநேரம் அவளை நல்வழிப் படுத்த முயலும் ஒரே ஆளான கனலியும் இல்லாத நிலையில் மதுரை இன்னும் என்னென்ன கொடுமைகளைக் காமரியின் கைகளால் அனுபவிக்கப் போகிறதோ?

குறிப்பாக வேல்விழி தோழிகளாக நினைக்கும் அத்தனை பேரையும் அவளின் திருமணத்திற்கு சரியாக ஒருநாள் முன்பு காமரி அப்புறப்படுத்துவதன் நோக்கம் என்னவாக இருக்கும்?

## அத்தியாயம் 13

வீரன் துகிரன் அரண்யா வைனி என நால்வரும் அமைதியாக ஆனால் அதே நேரத்தில் துடிப்புடன் தத்தமது குதிரைகளில் பிரயாணம் செய்தனர். அரசாணை ஆற்றைக் கடந்து அடர்வனத்திற்குள் அடியெடுத்து வைக்கும் போது யாரோ வைனியை அழைப்பது போலிருந்தது.

"அரண்யா! என்னை யாரோ அழைப்பதைப் போல இல்லை?" என்று கேட்டுக்கொண்டே தன் புரவியை நிறுத்தினாள் வைனி. அவளைத் தொடர்ந்து அரண்யாவும் குதிரையை நிறுத்தி விட்டு காதைத் தீட்டிக்கொண்டு கேட்டாள்.

"எனக்கொன்றும் கேட்கவில்லையே வைனி!" என்று அரண்யா சொல்ல, "எனக்கென்னமோ இங்கே நிற்பது சரியாகப்படவில்லை." என்று சொல்லிக்கொண்டே வீரனும் குதிரையை நிறுத்தினான்.

உடனே துகிரனும் தன் குதிரையை நிறுத்திவிட்டு சுற்றும் முற்றும் பார்க்க, அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

"இங்கே நிற்கவில்லை என்றால் தான் பெரும் பிசகாகிப் போகும்!" என்று சொல்லிவிட்டுக் குதிரையை விட்டுக் கீழிறங்கினான் துகிரன்.

"எதற்காக இங்கே இறங்குகின்றாய்?" என்று கேள்வி எழுப்பினாலும் அவனைப் பின்பற்றி மற்ற மூவருமே இறங்கினார்கள்.

"குருதேவர், அடியேனுக்குக் காட்சி தர வேண்டும்!" என்று துகிரன் பணிந்து வணங்க, சிரித்தபடியே அவர்கள் முன் தோன்றினார் தீசகர்.

"வணக்கம் குருதேவா!" என்று மற்ற மூவரும் உடனே தீசகரை வணங்க, "உங்கள் பயணத்தின் நோக்கம் நிறைவேறட்டும்!" என்று அவர்களை ஆசீர்வதித்தார் தீசகர்.

தீசகரின் வாழ்த்து அவர்களின் புருவங்களை உயர்த்த, "எனக்கெப்படித் தெரியும் என்று பார்க்கிறீர்களா? சொல்கிறேன். ஏனம்மா வைனி, சிவனின் செங்கோல் என்னும் புதைகுழியில் நீ இறங்குவதைப் பார்த்துக்கொண்டு உன் அன்னை சும்மா இருப்பாளா என்ன? பேரரசர் வீயன் என்ன தான் சமாதானம் சொல்லியனுப்பி இருந்தாலும் உன்னை இந்த விபரீத விளையாட்டில் ஈடுபடுத்த உன் பெற்றோர் ஒப்புக்கொள்ளவேயில்லை. உடனே என்னைச் சந்தித்து உபாயம் கேட்டனர். நானும், 'வைனி பிறப்பெடுத்ததின் நோக்கத்தை நிறைவேற்றத் தடை செய்யாதீர்கள்!' என்று சொல்லிவிட்டேன். ஆனாலும் அவர்கள் மனம் அமைதியுறவில்லை. அதனால் உங்கள் பயணத்திற்கு உதவுவதாக உன் பெற்றோரிடம் வாக்குத் தந்தேனம்மா. நீங்கள் நாளை கிளம்புவதாகத் தகவல் சொன்னதால், இன்றே உங்களைச் சந்தித்து சில முக்கியக் குறிப்புக்களை விளக்கி விடலாம் என்று வந்தால், நல்ல எமகண்டத்தில் நீங்கள் புதையலைத் தேடிப் புறப்பட்டு விட்டீர்கள்! அதுதான் உங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தி நாளை பயணத்தைத் தொடருமாறு சொல்லவே யாமும்

உங்களைப் பின்தொடர்ந்தோம்!" என்றார்.

"எமகண்டமா?" என்று நால்வரும் அதிர்ச்சிக்குள்ளாக, "ஆமாம். கிரகநிலைகளை ஆராயும் தன்மையை அங்கே அனைவருமே இழந்திருந்தீர்கள். இன்று நீங்கள் பெருவளநாட்டின் எல்லையைக் கடந்திருந்தால் நிச்சயம் உயிர்ப்பலி ஏற்பட்டிருக்கும். கவலை வேண்டாம். ஊரைப் பொறுத்தவரை நீங்கள் கிளம்பியதாகவே இருக்கட்டும். நாளை ஆரன் வேல்விழியின் திருமணத்தைப் பார்த்த பின்னர் பயணம் தொடரட்டும்." என்று சொல்லிப் புன்னகைத்தார். அங்கிருந்த அனைவர் மனதிலும் ஆரன் வேல்விழியின் திருமணத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் இருந்ததை தீசகர் அறிவார். அதனாலேயே திருமணம் முடிந்தபிறகு கிளம்புங்கள் என்றார்.

"புரியவில்லையே குருதேவா! ஊராருக்குத் தெரியவேண்டாம் என்று சொல்கிறீர்கள். திருமணம் முடிந்த பிறகு செல்லுங்கள் என்றும் சொல்கிறீர்கள். ஊருக்குள் செல்லாமல் திருமணத்தை எப்படிப் பார்ப்பது?" என்று வைனி குறைப்பட்டாள்.

"லகிமம் சித்தியைக் கையில் வைத்துக்கொண்டு கவலைப்படலாமா மகளே?" என்று தீசகர் கேட்க, அனைவர் முகங்களும் பிரகாசமாகின. ஆனால் அடுத்த நொடியே அனைவரின் முகங்களும் வாடின.

"என்னவாயிற்று? ஐம்பூதனார் கொடுத்த குளிகைகள் உங்களிடம் இன்னும் மிச்சமிருக்கிறது தானே?" என்று தீசகர் வினவ, "குளிகைகள் இருக்கின்றன குருதேவா. ஆனால்..." என்று இழுத்தபடியே அரண்யாவும் வைனியும் மேருவில் இருந்து மதுரை வரும்போது வழியில் சந்தித்த அரூப சக்திகளின் அட்டகாசத்தை விளக்கினர். ஐம்பூதனாரின் அனுமதியின்றித் தீசகர் தங்களுக்கு உதவி செய்ய இசைந்திருக்க மாட்டார் என்று கணித்தவர்களுக்கு அவர் லகிமக் குளிகையைப் பற்றிக் கேட்டது ஆச்சரியமாகப் படவில்லை.

அவர்கள் சொன்னதை முழுவதுமாகக் கேட்ட தீசகர், "இந்தத் தீசகன் உடனிருக்கையில் உங்களைச் சீண்டும் தைரியம் யாருக்கு வருகிறது என்று பார்ப்போம்!" என்று அமர்ந்த குரலில் கூற எல்லோர் முகங்களிலும் புன்னகை விரிந்தது.

"நன்றி குருதேவா! நீங்களும் எங்களோடு மந்தரை மலைக்கு வருவதற்கு!" என்று வைனி நன்றி கூறினாள்.

"மந்தரை மலைக்கு வருவதாக நான் எப்போது கூறினேன்?" என்று தீசகர் புதிர் போட, "இப்போது தானே உடனிருப்பதாகச் சொன்னீர்கள்?" என்று அரண்யா குழம்பினாள்.

"இப்போதும் உடனிருப்பதாகத்தான் சொல்கிறேன்!" என்று தீசகர் சொல்ல, நால்வருக்குமே தலை கிறுகிறுத்தது. அவர்கள் முகம் போன போக்கை பார்த்தவருக்கு, இனியும் இவர்களை சோதிக்க வேண்டாம் என்று தோன்றியது போலும்.

"துகிரா! வெளிச்சம் குறையத் துவங்கி விட்டது. இனியும் வீணே நேரத்தைக் கடத்துவது சரியல்ல. நெருப்பு மூட்டு, பாதுகாப்பு வளையத்தைப் போட்டுவிட்டு அனைத்தையும் விளக்குகிறேன்." என்று சொல்லிவிட்டு அவர் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

துகிரனும் வைனியும் தீ மூட்டுவதற்காக சுள்ளிகளை பொறுக்கிக் கொண்டு வர வீரனும் அரண்யாவும் அன்றைய இரவு உணவிற்கு வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டு வந்தனர்.

தீசகரோடு சேர்த்து ஐவரும் வட்டவடிவில் அமர்ந்துகொண்ட பின்னர், "சிவனின் செங்கோல் இருப்பது மந்தரை மலையில்தான் என்றாலும், அங்கு செல்லும் மார்க்கத்தை முழுமையாக நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்.

"தென்பாலி நாட்டிற்குத் தெற்கே இருக்கும் கடலில் எங்கேயோ மறைந்திருக்கிறது என்று பேரரசர் சொன்னார் குருதேவா!" என்று வீரன் பதிலளித்தான்.

"சரி. மறைந்திருப்பதை எப்படி வெளிக்கொணரப் போகின்றீர்கள்?" என்று தீசகர் கேட்க, "போகும் வழியில் தென்படும் சின்னங்களையும் மந்திரத்தின் உதவியுடனும் கண்டு பிடிக்கலாமென்று நினைத்திருக்கிறோம்." என்று அரண்யா கூறினாள்.

"ஓகோ! அது அவ்வளவு சுலபமென்றால் ஏன் இன்னும் எவரும் சிவனின் செங்கோலைக் கண்டுபிடிக்கவில்லை? அல்லது யாரும் இதுவரை முயலவே இல்லை என்று நினைக்கின்றீர்களா?" என்று அடுத்த கேள்வியை அவர் கேட்க, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் நால்வருமே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

"நீங்கள் முழிப்பதிலேயே தெரிகிறது, எந்த விதச் சரியான தகவலுமின்றியே நீங்கள் கிளம்பியிருக்கிறீர்கள் என்று! ம், என்ன செய்ய சோதிடன் உயிருடன் இருந்திருந்தால் உண்மையைச் சொல்லி உங்களைத் தயார்ப் படுத்தியதன் பிறகே அனுப்பியிருப்பான். ஆனால் உங்களை செல்லச்சொல்லி தூண்டியதே ஒரு யட்சிணி தானே!" என்று திடுமென உண்மையை அவர் போட்டுடைக்க, துகிரனைத் தவிர மீதி மூவரும் திடுக்கிட்டனர்.

"என்ன சொல்கிறீர்கள் குருதேவா?" என்று குரல் நடுங்க

வைனி வினவ, "துகிரன் உன்னிடம் கூட சொல்லவில்லையா மகளே?" என்று கேட்டு உச்சுக்கொட்டினார் தீசகர்.

தீப்பார்வை ஒன்றைத் துகிரனை நோக்கி வைனி செலுத்த, எச்சில் விழுங்கினான் துகிரன். மனதினில், 'இவர் நமக்கு உதவுவதற்காக வந்தாரா இல்லை கலகம் மூட்ட வந்தாரா?' என்று துகிரன் நினைக்க, "சில கலகங்கள் நன்மையில் முடிவதுண்டு மகனே. இப்போது சோதிடர் விஷயத்தை நீ தெளிவுபடுத்தி விடு. செங்கோல் விஷயத்தை நான் தெளிவுபடுத்துகிறேன்." என்று சிரித்தபடியே கூறினார் தீசகர்.

'மனதினில் நினைப்பதைக்கூடக் கண்டறிகிறாரே!' என்று வியந்தபடியே துகிரன் சோதிடர் தான் யட்சிணி என்று கண்டுபிடித்தக் கதையை விளக்க ஆரம்பித்தான்.

"சேனாதிபதியின் இறுதிச்சடங்கிற்காக நானும் வீரனும் மதுரையை அடைந்த பிறகு ஒருநாள் நகர்வலம் சென்றேன். அப்போது இரு பெரியவர்கள், 'அரண்மனைச் சோதிடன் உயிருடன் இருந்தும் இத்தனை பெரிய விடயத்தைக் கணிக்காமல் இருந்துவிட்டானே!' என்று வருந்துவதைக் கேட்டேன். உடனே, நம் சோதிடர் தாத்தாவுக்கு எதுவும் ஆகியிருக்குமோ என்று பதறி அவர் இல்லத்தை அடைந்தேன். சுத்தமாகத் துடைத்து வைத்திருந்த வீட்டில் அவர் இருந்ததற்கான அடையாளமே இல்லை. கைகால்கள் அவ்வளவாக வேலை செய்யாத நிலையில் முழு ஓய்வில் இருந்தவர் எங்கு சென்றிருக்கக் கூடும் என்று யோசித்தபடியே அருகில் சென்று அவரைத் தேடினேன். அவர் அகப்படவில்லை. ஆனால் ஒரு கறுப்புத்துணி கிடைத்தது. மதுரையை எரித்த பாலை வீரர்கள் முகத்தை ஒரு வித்தியாசமான கறுப்புத் துணியைக் கொண்டு மூடியிருந்ததாக ஆரன் அண்ணன் முன்பொரு சமயம் சொல்லியிருந்தார். அத்தகைய துணியின் ஒருபகுதியை அங்கு கண்டேன். கையிலெடுத்துப் பார்த்த பொழுது அதில் படிந்திருந்த குருதிக் கறை எனக்குள் சந்தேகத்தை விதைத்தது. ஆனால் எதுவும் முழுதாகத் தெரியாமல் குழப்பம் விளைவிக்க என் மனது இடம் தரவில்லை. ஆகையாலேயே உன்னிடம் கூட எதையும் நான் சொல்லவில்லை நண்பா!" என்று வீரனிடம் கண்களாலேயே கெஞ்சினான் துகிரன்.

துகிரன் என்னிடம் எதையுமே மறைக்க மாட்டான் என்று அதுவரையில் இறுமாந்திருந்த வீரனின் நம்பிக்கையில் மண் விழுந்தது. இருப்பினும் துகிரனின் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு மேலே தொடரும்படி சைகை செய்தான் வீரன்.

ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு, "சோதிடர் பற்றி யாராவது

ஏதாவது கூறுவார்களா என்று காதுகளைத் தீட்டிக்கொண்டே திரிந்தேன். ஆனால் அதன்பிறகு ஒருவர் கூட அவரைப்பற்றி நினைக்கவோ பேசவோ இல்லை. சரி! அவரின் சோதிட அறிவிற்காக எதிரிகள் அவரைக் கடத்தியிருக்கக் கூடும் என்று நான் ஐயம் கொண்ட வேளையில் தான் நேற்றைக்குப் பயிற்சித் திடலில் சோதிடரைக் கண்டேன். என்றைக்கும் இல்லாத திருநாளாக கொளுத்தும் வெய்யிலில் கழுத்தைச் சுற்றி கனமான போர்வையை அவர் போர்த்தியிருந்தது எனக்கு விசித்திரமாகப் பட்டது.

குருதேவர் கமலநாதரின் உத்தரவின்படி செயல்படுவதாக அவர் சொன்னதுமே என்னுள் பொறி தட்டியது. வெள்ளிமலையின் தலைமைச் சீடர்களான வீரனும் நானும் இங்கிருக்கும் போது எதற்காக தள்ளாத ஒரு கிழவரின் உதவியை குருதேவர் நாடவேண்டும் என்கிற எண்ணம் என் சந்தேகத்தை அதிகரித்தது. அதிலும் பாட்டி கதைகளில் மட்டுமே கேட்ட ஒரு பொருளை அரண்யா தான் எடுத்துவர வேண்டும் என்று கிட்டத்திட்ட அடம்பிடிப்பதைப் போல அவர் பேசிக்கொண்டே செல்ல, என் சந்தேகமும் கூடிக்கொண்டே சென்றது.

அரண்யா தனியே செல்லத் தேவையில்லை என்று சொல்லி நாமும் அவளுடன் செல்வதாக முடிவெடுத்ததும் அவர் முகம் ஒருகணம் அப்பட்டமான பயத்தை வெளிப்படுத்தியது. அவர் பார்வை சென்று திசையை நான் கூர்ந்து கவனிக்க, அங்கொரு குறளி இருந்ததைப் புரிந்து கொண்டேன். ஆனால் என் மந்திரசக்திகள் மட்டுப்பட்டதையும் உணர்ந்து கொண்டேன். அதனால் தான் அப்போது எதுவும் சொல்லாமல் அவர் பின்னாலேயே சென்று அவர் குடிலுக்குள்ளேயே அவரை மடக்கிப் பிடித்தேன்.

என்னை மாய்க்க அவர் முயலும் போது, மனித உருவம் நீங்கப்பெற்று அவருள் இருந்த யட்சிணி வெளிப்பட்டாள். பேராற்றல் வாய்ந்த அவளை அரும்பாடுபட்டு அழித்ததும் தான் அவர் எதற்காக கழுத்தை மறைத்திருந்தார் என்று விளங்கியது. எதிரிகள் அவரின் கழுத்தில் கத்தி வீசியதால் அவர் இறந்திருக்க வேண்டும். யட்சிணி அவர் உடலை விட்டு நீங்கியதுமே கழுத்திலிருந்து மறுமுறை உதிரம் வெளியேற அப்படியே சரிந்துவிட்டார். அதன் பிறகு சோதிடரின் உடலை அவர் எப்போதும் சொல்வதைப்போல தாழிக்குள் வைத்து புதைத்து விட்டு அங்கிருந்த ரத்தத்தையும் சுத்தம் செய்து விட்டு வீடு திரும்பினேன். இன்று காலையில் சிவனின் உத்தரவு என்ற பெயரில் நடந்த கூத்து அனைவர்க்கும் தெரியும் என்றாலும், நம்மைக் குறிப்பாக அரண்யாவை அரண்மனையிலிருந்து விரைந்து வெளியேற்றவே

இத்தனை நாடகமும்!" என்று முடித்தான் துகிரன்.

"என்ன? என்னை வெளியேற்றவா?" என்று அரண்யா வியந்தாள்.

"ஆமாம் இளவரசி." என்றான் துகிரன்.

"காரணம்?"

இதற்கு மேலும் மறைப்பது பெரும் பிழையாகிப் போகும் என்பதை துகிரனின் உள்ளுணர்வு அவனுக்கு உணர்த்தியது. அதனால், "அந்தக் காமரிக்கு நாடாள வேண்டுமென்ற பேராசை. நீங்கள் அங்கிருக்கும் வரை அது நடக்காது என்பதால் உங்களை நைச்சியமாக வெளியேற்றியிருக்கிறாள். உங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூட அவள் முயலலாம். அதனால்தான் உங்களைப் பாதுகாக்க நானும் வீரனும் வைனியும் உடன் வருகிறோம்." என்று காமரியின் சக்திகளையும் அவள் நோக்கம் என்ன என்பதைப் பற்றிய பாதி உண்மையைக் கூறினான் துகிரன்.

"அரண்யா! குதிரையைத் திருப்புவோம். இப்போதே பேரரசரைப் பார்த்து நடந்ததைச் சொல்லி அந்தப்பெண்ணை சிறை செய்வோம்." என்று வீரன் கோபமாகச் சொன்னான்.

"அது அவ்வளவு சுலபமில்லை வீரா! சொல்வதைக்கேள். இப்போது நாம் மந்தரை மலை செல்லவேண்டும். தயவு செய்து புரிந்துகொள்." என்று இறைஞ்சினான் துகிரன்.

"நீ எப்போது துரோகியாக மாறினாய் துகிரா?" என்று வீரன் கேட்க, அடிபட்ட பறவை போலத் துடிதுடித்து அப்படியே மடங்கி அமர்ந்துவிட்டான் துகிரன். 'உன் கடமையை நீ சரிவரச் செய்யும் போது உன்னைச் சேர்ந்தவர்களே உன்னை வெறுக்கக்கூடும்!' என்று குருதேவர் சொன்னது எவ்வளவு தூரம் உண்மையாகிப் போயிற்று என்று நினைத்தவனது மனம் ஊமையாகி அழுதது.

வலி நிறைந்த கண்களோடு அவன் வீரனைப் பார்க்க, வீரனுக்கு என்னவோ போல இருந்தது. ஆனாலும் அரண்யாவின் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்த பிறகு இந்தப்பயணத்தை மேற்கொள்ள அவன் துளியும் விரும்பவில்லை. இத்தனை பெரிய உண்மையை அவனிடமிருந்து துகிரன் மறைத்ததை அவனால் சீரணிக்கவும் முடியவில்லை.

"வீரா! துகிரனின் மௌனத்திற்குப் பின் ஒரு வலுவான காரணம் இருக்குமென்றே நான் நினைக்கிறேன். நீ இப்படி அவசரப்பட்டு எதையாவது செய்துவைப்பாய் என்று கூட அவன்

அமைதி காத்திருக்கலாம். ஆனால் அவனை துரோகி என்று மட்டும் சொல்லாதே. அது அவனை உயிருடன் தீயிட்டுக் கொளுத்துவதற்குச் சமம்." என்று வீரனின் தோளைத்தொட்டு அரண்யா சமாதானம் செய்தாள்.

"அண்ணா! உண்மையை அவர் நம் நலத்திற்காகத்தான் மறைத்தார். உங்கள் குருதேவர் தான் அவரே வந்து சொல்லும்வரை உங்களிடம் காமரி பற்றிய செய்திகளை மறைக்கச் சொல்லி எங்களிடம் சத்தியம் வாங்கினார். தன் உற்ற தோழனா இல்லை தனக்கு கல்விக்கண் திறந்த ஞானகுருவா என்று வருகையில், குருதட்சிணையாக அவர் குருதேவர் கூறுவதை அப்படியே செயலாக்க முடிவெடுத்தார் உங்கள் நண்பர். அதற்காக வார்த்தைகளால் அவரைக் கொல்லாதீர்கள்! உங்களைக் கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்!" என்று வைனி கைகூப்பிக் கெஞ்ச, வீரனின் கோபம் மறைந்து துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. அவன் துரோகி என்று கூறிய ஒரு வார்த்தையால் துகிரனின் மனம் எவ்வளவு வேதனையிலிருக்கும் என்று உணர்ந்து கொண்டவன் துகிரனுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு அவனிடம் மன்னிப்பை வேண்டினான்.

"உனக்கும் காமரியைப் பற்றித் தெரியுமா வைனி?" என்று வியந்தாள் அரண்யா.

"ஆமாம் அரண்யா. ஆனால் குருதேவரின் ஆணைக்காகவும் நான் கொடுத்த வாக்கிற்காகவும் நான் மௌனமாக வேண்டிய கட்டாயம். என்னை மன்னிப்பாயா?" என்றாள் வைனி. வீரன் துகிரனைத் திட்டியது போல அரண்யா ஏதேனும் தவறாக எண்ணுவாளோ என்கிற பரிதவிப்பு வைனியின் முகத்தில் தெரிந்தது.

"காரணமின்றி நீ எதையும் செய்யமாட்டாய் என்று நான் நம்புகிறேன் வைனி. நடந்ததை விட்டுத்தள்ளு!" என்று பெரியமனதாக அரண்யா கூற, அவளைக் கட்டிக்கொண்டாள் வைனி.

"நிச்சயமாக நாம் இந்தப் பயணத்தை மேற்கொள்ளத்தான் வேண்டுமா துகிரா?" என்று வீரன் இறங்கிவர, "நிச்சயமாக வீரா. ஒருமுறை மட்டும் என்னை நம்பு. இது குருதேவர் எனக்கிட்ட கடைசி ஆணை." என்று வேதனையிலும் சிறு நம்பிக்கை தோன்றத் துகிரன் சொன்னான்.

"ஆட்சிக்கு ஆசைப்பட்டு அவள் அரண்யாவை ஏதாவது செய்துவிட்டால்?" என்று அப்போதும் வீரன் இழுக்க, "என் உயிரைக் கொடுத்தாவது உங்கள் உயிரை மீட்பேன். இது சத்தியம்!" என்று சூளுரைத்தான் துகிரன்.

"துகிரா! என்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நாடாளும் ஆசையும் எனக்கில்லை. ஆனால் அங்கே என் அன்னை தந்தை மட்டுமல்ல, ஒரு நாட்டையே அவளின் பிடியில் விட்டு வந்திருக்கின்றோம். அதுதான் என்னை இந்தப் பயணத்தை ரத்து செய்யச் சொல்லித் தூண்டுகிறது." என்றாள் அரண்யா.

"இளவரசி! ஆட்சியும் அதிகாரமும் நாம் தேடிப்போகும் ஒன்றல்ல; நம் திறமையால் நமக்குத் தானே கிடைப்பது. மக்களின் நலன் கருதி நீங்கள் அதை ஏற்கத்தான் வேண்டும். ஆட்சியைப் பெறுவதோடு காமரி திருப்திப்படுவாளா என்றும் நீங்கள் சிந்திக்க வேண்டும். அதுமட்டுமின்றி அங்கே என் பெற்றோரும் கூடத்தான் இருக்கின்றனர். என் மீது இருக்கும் கோபத்தில் காமரி என் பெற்றோரை வதைப்பாளே தவிர உங்கள் பெற்றோரை அல்ல. முடிந்தவரையில் மக்களிடம் நற்பெயரை சம்பாதித்து ஆட்சியில் அமரவே அவள் முயலுவாள். அதிலும் உங்கள் அண்ணன் நாவகனும், ஆரன் அண்ணணும் இருக்க, மக்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ எந்தத் தீங்கும் நேராது. தவிரவும் நீங்கள் அங்கிருப்பதால் அவள் திருந்தப்போவதுமில்லை. மாறாக உங்களை வதைப்பதற்காகவே சிந்தித்து அவள் எந்த எல்லைக்கும் செல்வாள். அதனால் யோசிக்காமல் புறப்படுங்கள். இனி தான் நமக்கான வேலையே ஆரம்பம். சர்வசக்தி வாய்ந்த காமரியை வெல்வது அவ்வளவு சுலபமல்ல. அரிய சக்திகள் பலவற்றை நாம் சேகரிக்கத்தான் வேண்டும்." என்றான் துகிரன். அவன் தீர்க்கமான பார்வையைத் தாங்கிய அரண்யா வைனியின் முகத்தைப் பார்க்க, அவளும் சரியென்றே தலையசைத்தாள்.

"சரி! துகிரா. உன் விருப்பப்படியே நாம் பயணத்தைத் தொடங்குவோம். வெற்றி நன்மையின் பக்கமா அன்றித் தீமையின் பக்கமா என்று பார்த்துவிடுவோம்!" என்று உறுதியான குரலில் அரண்யா கூற, தாங்கள் போருக்குப் புறப்படுவதைப் போலவே மற்றவர் உணர்ந்தனர்.

பல சண்டைகள் சமாதானங்கள் என்று நால்வரும் ஒருவாறு அமைதியுற்றதும், "காமரி ஒருபக்கம் குடைச்சலைத் தந்தாலும் விண்கல் மழை என்பதும் ஒருவகையில் உண்மையே. அதனால் ஒன்றிற்கு இரண்டாக இருக்கும் அபாயத்தையும் செங்கோலின் தேவையையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்றே நான் நினைக்கின்றேன். இனி நான் சொல்வது உங்கள் மனதினில் நன்கு பதியும்." என்ற தீசகர் சிவனின் செங்கோல் பற்றிக் கூற ஆரம்பித்தார்.

"ஆதியோகியான நம் ஈசன் சமாதிநிலையை அடையும் முன்பு

அவரின் தவவலிமைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி அவர் அதுவரை பயன்படுத்திய கோலில் சேமித்துவைத்தார் என்றும் எதிர்காலத்தில் மக்களைக் காக்கும் பொருட்டு இந்தச் சக்திகள் பயன்படுத்தப்படுமென்று சொல்லிவிட்டு அவர் சமாதியடைந்ததாகவும் வரலாறு சொல்கிறது. ஆனால் எவர் வேண்டுமானாலும் தங்களின் சுயலாபத்துக்காக ஈசனின் சித்திகளைப் பயன்படுத்தி விடக்கூடாதே என்பதால் அவரின் முதன்மைச் சீடர்கள் நால்வரும் மூன்று தடைகளை ஏற்படுத்தி வைத்தனர். தூய உள்ளத்தோடு அந்தத் தடைகளைக் கடந்து ஒருவர் செங்கோலை அடைந்தாலும் அவர்களால் ஒருமுறைக்கு மேல் மறுமுறை அதைப் பிரயோகப்படுத்த முடியாத வகையிலும் ஏற்பாடுகள் செய்தனர். ஆதலால் நீங்கள் வெகு எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். புரிகிறதா?" என்று கேட்க, நால்வரும் புரிகிறது என்றனர்.

"மந்தரைமலை தென்பாலி நாடுகளின் தெற்கே இருப்பது உண்மைதான். மந்தரைமலைக்குச் செல்லும் வழியைக் குறிப்பாகச் சொல்வதற்கு அங்கே கொற்றவைக்கு ஒரு கோவிலும் உண்டு. கொற்றவைக் கோவிலில் நீங்கள் வந்த காரியத்தைக் கூறி வழிகாட்டும் படி அவளிடம் முறையிட்டால், ஒரு சோதனையின் பின் அன்னை உங்களுக்கு முதல் தடையைக் காண்பிப்பாள். முதல் தடை, காதல்!" என்று சொன்னதும் நால்வரும் ஒருவரை ஒருவர் கவலையோடு பார்த்துக்கொண்டனர். அதை கவனித்த தீசகர் சிரித்துக்கொண்டே, "நாம் எப்போது அன்பிற்கும் நேசத்திற்கும் தடையாக இருந்திருக்கின்றோம்? அதனால் காதலிப்பது பிழையில்லை. ஆனால் தூய நேசத்தோடு இல்லாதிருப்பது தான் பிழை. இன்பதுன்பம் எது வந்தாலும் உன்னுடனேயே வாழ்ந்து மரிப்பேன் என்ற மனக்கட்டுப்பாடு இருப்பவர்களால் மட்டுமே இந்த முதல் தடையைக் கடக்க இயலும்.

நாம் இலக்கியத்தில் அன்றில் பறவைகளைப் பற்றிப் படித்திருக்கிறோம் இல்லையா? அந்தப் பறவைகள் மனது வைத்தால் மட்டுமே உங்களால் வெற்றிகரமாக அடுத்த தடையை நோக்கி முன்னேற முடியும். சுலபத்தில் எவருக்கும் காட்சியளிக்காத இந்த அன்றில்கள், தூயநேசம் இருப்பவரின் முன் மட்டுமே தோன்றும். நட்போ காதலோ ஏதோவொரு உண்மையான பாசப்பிணைப்பு உங்கள் உள்ளத்தில் இருந்தால் மட்டுமே அவைகள் உங்களுக்கு உதவும். கேட்பதற்குச் சுலபமாக இருந்தாலும் கோடிக்கணக்கானவர்கள் இந்தத் தடையைக் கடக்க முடியாது திரும்பியிருக்கின்றனர்.

இரண்டாம் தடை பைசாச கணங்கள். எரிமலை ஒன்று அங்கிருப்பதாகவும் தகவல்கள் உண்டு. ஆனால் அதைப்பற்றி எனக்கு

சரியாகத் தெரியவில்லை. கண்களுக்குப் புலப்பட்டும் போக்குக் காட்டியும் பலவகை அமானுஷ்யங்கள் நான் குறிப்பிட்ட இரண்டாவது தடையில் ஏராளம் உண்டு. தோன்றும் எதுவும் உண்மையில்லை என்பதே உண்மை. இந்த இடத்தில் கிடைக்கும் எதையும் நீங்கள் உட்கொள்ளவே கூடாது. சிறு துளி நீரருந்தினாலும் பின்பு உங்களால் அந்த இடத்தை விட்டு மீளவே முடியாது பைசாசங்களோடு பைசாசமாகத் திரியவேண்டி வரும் என்பதை மனதில் இருத்துங்கள். எந்தத் திசையில் உள் நுழைகிறீர்களோ அங்கிருந்து நேர்கோடாக மட்டுமே நீங்கள் பயணம் செய்யவேண்டும். இடமோ வலமோ பாதை மாறினால் பிறகு உங்களைக் காக்க ஈசனே வந்தாலும் முடியாது. ஏனென்றால் எத்தனை காலங்கள் சென்றாலும் பாதை மாறியவர்கள் ஒரு வட்டப்பாதையிலேயே சென்று கொண்டிருப்பர். நீரின்றிச் சோறின்றி எவ்வளவு நாட்கள் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியும்? இறுதியில் இந்த ஒருசாண் வயிற்றிற்கு அடிமையாகி பைசாசகணமாக மாறிடுவர்.

மூன்றாம் தடை மதிமயக்கி வனம். பெருமாயங்களின் மொத்தக் கூடாரம் இந்த வனம். கூர்மதியோடு இருந்தால் மட்டுமே இங்கிருந்து நீங்கள் பிழைக்க முடியும்; செங்கோலையும் கைப்பற்ற முடியும். ஈசனின் செங்கோல் எப்படி இருக்கும், என்ன வடிவத்தில் இருக்கும் என்று கண்டவர் எவரும் இப்போது இங்கில்லை. இந்த இடத்தில் மட்டும் உங்கள் புத்தி சொல்வதை ஒருபோதும் கேட்காதீர்கள். உங்கள் ஆழ்மனம் சொல்வதை மட்டுமே செயலாற்றுங்கள். கண்டிப்பாக உங்களுக்கு வெற்றி கிட்டும்.

போகும் போது என்னென்ன தடைகளைக் கடந்தீர்களோ அதே தடைகளை வரும்போதும் நீங்கள் கடக்க வேண்டும். செங்கோல் கையில் இருக்குமட்டும் உங்களை யாராலும் எதுவும் செய்துவிட முடியாது. அதனால் செங்கோலை யார் கைப்பற்றுகிறார்களோ அவர்களே முதலில் செல்ல வேண்டும். நடக்கும்போது வலதுகையில் செங்கோலை உயரப் பிடித்திருக்க வேண்டும். அப்போதுதான் உங்களால் சுலபமாக வெளியேற முடியும். இன்னும் ஒன்று, செங்கோலைக் கைப்பற்றியவுடன் உங்கள் மனதினை நீங்கள் கட்டவேண்டும். தேவையின்றி ஆசைகள் எதுவும் தோன்றினால் அவற்றை நிறைவேற்றிவிட்டு அந்த நொடியே செங்கோல் உங்கள் கையிலிருந்து மறைந்து போகும். போகும் பாதையை விட திரும்பும் பாதையே கடினமானது என்பதை நினைவில் வையுங்கள். தீவை விட்டுச் செங்கோல் வெளியேறுவதை அதைப் பாதுகாக்கும் சக்திகள் ஒருபோதும் விரும்பாது. உங்களைத் தோற்கடிக்க என்னென்ன

வழிகளுண்டோ அத்தனையையும் அவைகள் செயல்படுத்தும்.

ஆசீவக மரபில் நான் துறவறம் ஏற்றபோது ஈசனின் செங்கோலைத் தேடிச் செல்ல மாட்டேன் என்று சபதம் மேற்கொண்டிருந்தேன். அதனால் உங்களுடன் நான் கொற்றவைக் கோவில் வரை மட்டுமே வருவேன். பிறகு உங்கள் முயற்சியினால் மட்டுமே நீங்கள் வெற்றி பெறவேண்டும். ஏதேனும் சந்தேகம் இருந்தால் இப்போதே கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் சீக்கிரம் படுத்துக்கொள்ளுங்கள். நாளை காலையில்... வைகறையில் திருமணத்தை முடித்துவிட்டுச் சீக்கிரம் கிளம்ப வேண்டும்." என்று தீசகர் கேட்டார்.

"சந்தேகமென்று எதுவும் இல்லை குருவே, ஆனால் கொஞ்சம் பதட்டமாக இருக்கிறது." என்றாள் அரண்யா.

"மகளே! எதற்கும் கலங்காதே, எதைப் பார்த்தும் ஆச்சர்யம் கொள்ளாதே. வருவதை அப்படியே ஏற்க நீ பழகிவிட்டால் வெற்றி உன் வசமாவதைத் தடுப்பவர் யாரோ?" என்று எப்போதும் போலப் பூடகமாகவே பதிலளித்தார் தீசகர்.

குருதேவர் தீசகரின் பதிலில் இன்னும் குழம்பியவர்கள் அமைதியாகப் படுத்துக்கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருப்பவைகளை அறிந்துகொள்ள முடியவில்லை என்றாலும் அங்கே எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் யாராவது பாதுகாப்பு வட்டத்தை விட்டு வெளியே வருவார்களா என்றும் வெகுதீவிரமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள் கனலி. நடந்து கொண்டிருந்தவைகளைத் தூரத்திலிருந்து கனலி கண்காணிப்பதை அறிந்த தீசகரின் இதழ்களில் ஒரு புன்முறுவல் விரிந்தது.

கண்கள் எதிரில் இருப்பவரின் மீதிருக்க, மனமெல்லாம் வேல்விழியைச் சுற்றியே இருந்தது கனலிக்கு. ஏனென்றே தெரியாத ஒரு சகோதர பாசமும் தோழமையும் அவளிடத்தில் கனலிக்கு ஏற்பட்டிருந்தது. அதனால்தான் காமரியின் எச்சரிக்கையை மீறிச் சில வேலைகளைப் புறப்படும் முன் செய்துவிட்டு வந்திருந்தாள் கனலி. காமரியின் தோழி என்பதற்காகக் கனலியின் ஏவல் வேலைகளைச் செய்ய சில யட்சிணிகள் இருந்தாலும், அவை காமரிக்கு மட்டுமே விசுவாசமானவை என்பதை கனலி அறிவாள். அதனால் அவள் தவத்தின் ஒறு பகுதியை அவளால் இயன்ற இரு சங்குவளையல்களாக்கி வேல்விழியைக் காக்கும் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்துவிட்டிருந்தாள். ஆனால் வேல்விழியிடம் வளையல்களை நேரடியாகத் தருவதற்கு காமரியின் கழுகுக் கண்கள் இடமளிக்கவில்லை.

ஆதலால் எப்படியோ வேல்விழியின் மஞ்சத்திற்குப் பக்கத்தில் அவற்றை, 'ஒரு ஏழையின் திருமணப்பரிசு!' என்ற சிறு குறிப்போடு வைத்துவிட்டுக் கிளம்பியிருந்தாள் கனலி. அவள் மனம் முழுக்க வேல்விழி அந்த எளிய வளையல்களை ஏற்றுக்கொண்டு அணிந்துகொள்ள வேண்டுமே என்ற கவலையே வியாபித்திருந்தது.

காலை சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்தவர்கள் தத்தமது காலைக் கடன்களை முடித்துவிட்டு ஐம்பூதனார் முன்பு அரண்யா வைனியிடம் தந்திருந்த லகிமக் குளிகையைக் கிழக்கு திசையைப் பார்த்தபடி நின்றுகொண்டு கைகளைப் பிணைத்தபடியே அரண்யா, வீரன், துகிரன், வைனி என நால்வரும் உட்கொள்ள, அவர்களுடன் தீசகரும் சேர்ந்துகொண்டார்.

இரவு முழுக்க உறங்காமல் இவர்களையே நோட்டம் விட்டுக்கொண்டிருந்த கனலியும் அவர்களைப் பின்தொடர ஆயத்தமானாள். ஆனால் அவளே எதிர்பாராமல் அங்கிருந்த ஐவரும் சட்டென மாயமானதால் என்ன செய்வதென்றுப் புரியாமல் குறளியை அழைத்து அவர்கள் செல்லுமிடத்தை அறிந்துகொண்டு வருமாறு பணித்தாள். தான் அவர்களைக் கோட்டை விட்ட செய்தி காமரிக்கு தெரியவந்தால் தன் கதி என்னாகுமோ என்கிற கவலையும் அவள் மனதில் சேர்ந்துகொண்டது.

மொட்டுக்கள் பூக்களாக மாறும் தருணத்திற்காகக் காத்திருப்பதைப் போலச் சிறுபெண்ணான வேல்விழி ஆரானின் மணையாளாக மாறப்போகும் தருணத்திற்காக வெட்கப்பூக்களை சுமந்துகொண்டு காத்திருந்தாள். அரண்யாவும் வைனியும் இல்லாத குறையைத் தவிர வேறு குறையொன்றும் அவளுக்கு இல்லை. பெட்டி நிறையத் தங்கவளையல்கள் நிறைந்திருந்தும் கனலி அவளுக்குப் பரிசாகக் கொடுத்த இரு சங்கு வளையல்களை சந்தோஷமாக அணிந்திருந்தாள். அவளுக்குப் பார்த்துப் பார்த்துத் தனியாளாக அலங்காரம் செய்துகொண்டிருந்தாள் காமரி. காமரிக்கு பயந்து பணிப்பெண்கள் அனைவரும் எட்டியே நின்றனர்.

"என் கண்ணே பட்டுவிடும் போல அத்தனை அழகாய் இருக்கிறாய் வேல்விழி. உன்னைக் கண்டதுமே தாலி கட்டுவதற்கு பதிலாக ஆரன் மயங்கி விழுந்துவிடப் போகிறார்!" என்று காமரி கேலி செய்ய, "போங்கள் அண்ணி! இங்கிருப்பதிலேயே நீங்கள் தான் கொள்ளை அழகு." என்று வெட்கப்பட்டாலும் குழந்தை போலவே பதிலளித்தாள் வேல்விழி.

"அழகிருந்து என்ன? மனம் போல வாழ்வு

அமையவேண்டுமே!" என்று சொன்ன காமரியின் கண்கள் கலங்கியதை வேல்விழி குறித்துக்கொண்டாள். 'எதுவோ சரியில்லை; அண்ணியிடம் பிறகு பேசவேண்டும்.' என்று வேல்விழி எண்ணமிட, அதனைத் தெரிந்து கொண்ட காமரியின் கண்கள் சிரித்தன.

"சரி சரி, நேரமாகிறது! நான் வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறேன் பார். எல்லோரும் நமக்காகவே காத்திருக்கின்றனர்." என்று காமரி சொல்லிக்கொண்டிருக்கும் போதே பேரரசி அயினி அம்மையும் வேல்விழியின் அன்னை நிறைமதி அம்மையும் அங்கே வந்தனர்.

"என் கண்ணே!" என்று இருவருமே ஆனந்தக் கண்ணீரோடு வேல்விழியை உச்சிமுகர, தனக்கு இப்படிப்பட்ட தாய்ப்பாசம் கிடைக்கவில்லையே என்று காமரியின் பொறாமை மேலும் அதிகமானது.

"அத்தை, நீங்கள் அழுதால் அவளும் அழுவாள். அலங்காரங்கள் அலங்கோலமாகும். அதனால் உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்." என்றாள் காமரி.

காமரி அலங்கோலம் என்று சொல்லும் போது அவள் முகம் போன போக்கை அயினி அம்மை ரசிக்கவில்லை என்றாலும், வேல்விழிக்காகவே அவள் சொல்கிறாள் என்பதை உணர்ந்ததும் தன் முகபாவத்தை மாற்றிக்கொண்டார். அரண்யாவும் வைனியும் இல்லாத குறையை நிரப்ப பம்பரமாகச் சுழன்று வேலை செய்யும் காமரியின் மீது சிறு நல்லெண்ணம் கூடத் தோன்றியது பேரரசிக்கு. கடமைக்காக இல்லாமல் இயல்பாகவே காமரி மீது அன்பு செலுத்த அவர் முயன்றார். அவரின் தாய்மைக் குணம் அதற்கு உதவி செய்தது. ஆனால் 'இதையெல்லாம் இத்தனை நாள் இல்லாமல் இப்பொழுது ஏன் காமரி செய்கிறாள்?' என்ற கேள்வி அவர் மனதினில் எழாமல் இல்லை.

அரண்மனைத் திடலில் பூப்பந்தலின் கீழ் கம்பீரமாக ஆரன் நின்றிருக்க, அவனுக்காகவே அப்பிறப்பில் பிறந்த வேல்விழி அழகுச் சிலையென அவன் பக்கத்தில் நின்றாள். முதல் சந்திப்பில் கடுகு போல் பொரிந்தவள் இப்போது அவனது சரிபாதியாகும் போது நாணமே பார்வையாகி மௌனமே மொழியாக நின்றாள். அவளின் இம்மாற்றங்கள் ஆரானை வேறு உலகிற்கே அழைத்துச் சென்றது. இதயம் சுகமாக படபடக்க விவரிக்க முடியாத உணர்வினால் அவன் நெஞ்சம் நிறைந்தது.

இவள் என்னவள் என்று மகிழ்ந்தபடியே மங்களநாணை வேல்விழியின் கழுத்தில் பூட்டினான். இவன் என்னவன் என்கிற

நினைவோடே ஆரானின் கால் விரலில் மிஞ்சியை அணிவித்தாள் வேல்விழி. ஆனால் அவளின் இயல்பான குறும்புத்தனம் அப்போது வெளிவர, அவன் கால்களை நன்றாகக் கிள்ளிவிட்டாள்.

"ஆ!" என்று அலறியவனைப் பார்த்துக் குறும்பாக அவள் கண்ணடிக்க, பக்கத்தில் இருந்த பெரியவர்கள் வேல்விழியின் குறும்பைப் பார்த்துத் தங்களுக்குள் சிரித்துக்கொண்டு மனம் நிறைய, இவர்களின் மகிழ்ச்சியில் கலந்து கொள்ள விருப்பமின்றி இருஜோடிக் கண்கள் மட்டும் கனலைக் கக்கியது. அவை நாவகன் மற்றும் காமரியின் கண்களே தான்!

"எனக்குப் பிடிக்கும் என்று தானே பச்சைநிறப் பட்டுடுத்தி இருக்கிறாய்?" என்று அவளுக்கு மட்டும் கேட்குமாறு ஆரன் கிசுகிசுக்க, "ஆமாம், பெண்ணை விடப் பயிர்கள் மேல் தான் உங்களுக்குப் பிரியமென்று நான் அறியமாட்டேனா?" என்று பதிலுக்குக் கிசுகிசுத்தாள் வேல்விழி.

ஒருவர் மற்றவரின் விரலை உரிமையோடு பிடித்தபடியே ஆரனின் மாளிகைக்குச் சென்றார்கள். வழியில் பூவும் புதுநெல்லும் தூவி மணமக்களைப் பெரியவர்கள் வாழ்த்த இனிதே அவர்கள் திருமணம் நடந்து முடிந்தது.

ஆகாயத்தில் நின்றபடியே ஆரன் வேல்விழியின் திருமணத்தை நிம்மதியோடும் மகிழ்ச்சியோடும் பார்த்துவிட்டு கொற்றவைக் கோவிலை நோக்கிப் பயணப்பட்டனர் தீசகரும் நால்வரும். மனம் முழுக்க மகிழ்ச்சியே நிறைந்திருக்க, காமரி அவர்கள் வானில் இருந்த இடத்தையே யோசனையோடு பார்ப்பதைக் கவனிக்க அவர்கள் தவறினார்கள்.

'எப்படித் தடுத்தும் திருமணத்தில் கலந்து கொண்டனரே!' என்கிற ஆத்திரம் காமரியை அறிவிழக்கச் செய்யுமோ?

## அத்தியாயம் 14

லகிமம் சித்தியை முறைப்படி பயன்படுத்தத் தெரிந்த காமரிக்கு அதே சித்தியைப் பயன்படுத்தும் நபர்களைக் கண்டுகொள்வது அத்தனை பெரிய சிரமமான காரியமாக இருந்திருக்கவில்லை. நால்வரைக் கண்டவள் உள்ளுக்குள் குமுற, குறளியை அழைத்து கனலியை எச்சரிக்கை செய்யுமாறு பணித்தாள்.

'சிவனின் செங்கோலை மட்டும் அரண்யா அடைந்துவிட்டால் அவளது சக்தி பன்மடங்காகும்!' என்ற யோசனையே காமரியின்

நிம்மதியைத் தின்றது.

எவ்வளவு முயன்றும் நால்வரையும் பின்தொடர முடியாத கனலி எப்படியும் கொற்றவைக் கோவிலுக்குத்தானே அவர்கள் செல்வார்கள் என்று சரியாகக் கணித்து நால்வரை முந்திக்கொண்டு கொற்றவைக் கோயிலுக்குச் சென்று காத்திருந்தாள். காமரிக்கு சொல்லித்தந்ததைப் போலவே கனலிக்கும் மந்தரைமலைக்குச் செல்லும் வழியை ஏற்கனவே மகிந்தன் கற்பித்திருந்தான். இந்திர ரகசியத்தை அடைய முயற்சிக்கும் முன்னரே அவன் சிவனின் செங்கோலைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியைத் தழுவியிருந்தான். அதனால் காமரி பிறந்த பின், பல வேள்விகள் செய்தும் பல பலிகள் தந்தும் செங்கோலை அடையும் மார்க்கத்தை முழுமையாகத் தெரிந்துகொண்டான். ஆயுள் முழுவதும் முயன்றால் கூட அவனால் செங்கோலை அடைய முடியாது என்கிற உண்மை சுட, காமரிக்கும் கனலிக்கும் என்றைக்காவது காலம் கனியும் போது அதை பயன்படுத்திக்கொள்ளச் சொல்லி ஆலோசனை வழங்கியிருந்தான். அவன் அறிவுறுத்தியிருந்தபடியே அரண்யாவை அழிக்கும் திட்டத்திற்கு சிவனின் செங்கோலைத் துருப்புச் சீட்டாக காமரி பயன்படுத்திக் கொண்டாள்.

காத்திருக்கும் அபாயங்களைப் பற்றித் தெரியாமல் செல்பவர்களின் நிலை என்னவாகும் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்த கனலிக்கு கோவிலின் உள்ளே இருக்கும் கொற்றவை தேவியின் புல்லாக்குத் தெரிந்தது. அது உண்மையிலேயே தேவியின் புல்லாக்கா அன்றிக் கனலியின் கற்பனையா என்பதை யாரும் அறியார். ஆனால் ஒளி தெரிந்த மறு நொடி அவளையும் அறியாமல் துகிரனைக் காக்கவேண்டுமென்று மனதார தேவியிடம் மன்றாடினாள்.

கடற்கரையில் ஒரு சிறு கோவிலில் குடியிருக்கும் இந்தக் கொற்றவை தேவியின் அருள் தான் எத்தகையது? நம்பி வந்தவரைக் கைவிட்டுவிடாத அவள் சக்தியைப் பற்றி நாளெல்லாம் பாடிக்கொண்டே இருக்கலாமே! அடைக்கலம் தரும் போது சாந்த சொரூபிணியாகவும் அச்சுறுத்தும் போது பயங்கரியாகவும் ஓர் நொடியில் எப்படித்தான் அவளால் மாற முடிகிறதோ தெரியவில்லை. கோவிலின் வாசல் தெரியுமாறு மறைந்து நின்ற கனலிக்கு கண்களைத் திறந்தவுடன் உள்ளுக்குள் உதைப்பெடுத்தது என்றால் மிகையல்ல. தெரியாமல் தவறு செய்யும் போது வராத பயம் தெரிந்தே தப்பு செய்யும் போது நூறு மடங்காகுமே... அதைப் போலத்தான் கனலியும் வியர்த்துக் கொண்டிருந்தாள்.

காமரியின் கட்டளையைச் சுமந்து கொண்டு வந்த குறளி, "கனலி, தலைவியிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கின்றேன். முதல் செய்தி, செங்கோல் அரண்யாவின் கைகளுக்குச் சென்றிடவே கூடாது! அப்புறம் இரண்டாவது செய்தி, துகிரன் உயிருடன் இந்த கடற்கரையைத் தாண்டக் கூடாது. இரண்டுமே உன் பொறுப்பு. இரண்டில் ஒன்று தப்பினாலும் உன் உயிர் உன்னுடையது இல்லை. அவ்வளவு தான். எச்சரிக்கையோடு நடந்து கொள்." என்று காமரியைப் போலவே சொல்லிக் காட்டியது.

"என்னால் முடிந்ததைச் செய்வேன் என்று சொல்லிவிடு!" என்று கனலி மிடுக்காகச் சொல்ல, அவளை ஏற இரங்கப் பார்த்த குறளி ஒரு தலையசைப்போடு சென்றுவிட்டது. குறளி சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் தீசகரும் நால்வரும் எந்தச் சேதாரமுமின்றி வந்து சேர்ந்தனர்.

"உங்களை பத்திரமாகத் தேவியின் பாதங்களில் சேர்பித்துவிட்டேன். இத்தோடு என் கடமையும் முடிந்தது. நான் வருகிறேன். ஈசனின் மனம் போல் நடக்கட்டும்!" என்று சொல்லி கொற்றவையை வணங்கிய பின் நால்வரின் நெற்றியிலும் திருநீரைப் பூசிவிட்டு வந்த வழியே சென்று விட்டார் தீசகர்.

"குருதேவரின் உதவியின்றி எப்படி நாம் இலக்கை அடைவது?" என்று கவலையோடு கேட்டாள் வைனி.

"எல்லாவற்றிக்கும் பதில் இதோ இங்கிருக்கும் கொற்றவை அன்னையிடமே இருக்கிறது." என்று பதிலுரைத்தான் வீரன்.

"சரி. கோவில் சுவர்களில் ஏதேனும் கல்வெட்டுக்கள் இருக்கின்றனவா என்று பார்த்து வருகிறேன். ஒரு வேளை மந்தரை மலைக்குச் செல்லும் வழியை அதில் பொறித்திருக்கலாம்." என்று துகிரன் கிளம்ப, அவனுடனேயே வீரனும் கிளம்பினான்.

"நாங்கள் உட்சுவரில் ஏதேனும் தென்படுகின்றதா என்று பார்க்கிறோம்." என்று சொல்லி அருகில் இருந்த அகல்விளக்கை ஏற்றிக்கொண்டு அரண்யாவும் வைனியும் உட்சுவர்களை ஆராயத் துவங்கினார்கள்.

கொற்றவை அன்னையின் மெய்க்கீர்த்தியைக் காணும் இடமெல்லாம் பொறித்திருந்தனரே தவிர ஒரு இடத்தில் கூட மந்தரைமலையைப் பற்றிக் குறிப்பிருக்கவில்லை. கண்களில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு இண்டு இடுக்குகளில் கூட விடாது தேடினர் நால்வரும். ஆனால் அவர்கள் விரும்பிய பலன் மட்டும் கிடைக்கவில்லை.

பொறுமையிழந்த வைனி, "தாயே! ஒரு நற்காரியத்திற்காக உன் பிள்ளைகள் நாங்கள் வந்திருக்கின்றோம். எங்களை நீ சோதிக்கலாமா? மந்தரைமலைக்குச் செல்லும் வழியைக் காட்டம்மா!" என்று கொற்றவையின் முகத்தைப் பார்த்துக் கெஞ்சுதலாகக் கேட்க, அதே நேரத்தில் ஆதவன் ஆழியினுள்ளே அமிழத் துவங்கினான்.

சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக கடலுக்குள் முங்க, அவன் ஒளி பட்ட சிலையில் மெல்லிய மாற்றங்கள் ஏற்பட்டன. சற்று உற்று நோக்கியவளுக்கு கொற்றவை தேவியின் சிலையில் எழுதியிருந்த வாசகங்கள் புலப்பட்டன. கடைசியாக கொற்றவை தேவியின் பீடத்திற்குக் கீழ் உள்ள தரையில் பலவித ஓவியங்கள் தோன்றின.

"அரண்யா, துகிரா, வீரா! சீக்கிரம் வாருங்கள். சீக்கிரம் வாருங்கள்!" என்று வைனி போட்ட சப்தத்தில் அனைவருமே ஓடி வந்தனர்.

வந்தவர்களிடம் அவள் ஓவியங்களைக் காட்ட, மகிழ்ச்சியோடு அவளைக் கட்டிக்கொண்டாள் அரண்யா. ஆனால் சூரியன் மறைந்த அடுத்த நொடியே அனைத்தும் மறைந்து போனது.

"என்ன இது? வந்ததைப் போலவே மறைந்தும் போயிற்றே!" என்று துகிரன் குறை பட, "நான் தான் மனனம் செய்துவிட்டேனே, பிறகென்ன?" என்று சிரித்தாள் வைனி.

"தீமதியோடு தொடர்வீர்காள் கூற்றமெனும் பெருந்தீயை அடைவீர்கள்!

தொடரும் முத்தடைகள் படையறுக்கும் பந்தமறுக்கும் உயிரருக்கும்

காதல் கசிந்தோட உண்டி சுருக்கி மதிமயங்கித் திரிய

ஆழிசூழ் உலகையாளும் ஆத்தனின் முதல் கோலாறு மதியே!

என்று நாலு வரி எழுதியிருந்தது. தீசகர் நம்மிடம் சொன்னதைப் போலவே அன்னப்பறவையும் பைசாசங்களும் அடர்வனமும் ஓவியங்களில் ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்றிருந்தன. ஓவியங்கள் நம்மை எச்சரித்து வெளியேற்றுவதற்கான யுக்தி போலும். அதனால் சொற்களைப் புரிந்து கொண்டால் போக வேண்டிய வழியும் புலப்படுமென்று நான் நினைக்கிறேன்." என்றாள் வைனி.

"அப்படித்தான் இருக்க வேண்டும். எங்கே மறுமுறை வரிகளைச் சொல்லு!" என்று அரண்யா கேட்டாள்.

"தீமதியோடு தொடர்வீர்காள் கூற்றமெனும் பெருந்தீயை அடைவீர்கள்!

தொடரும் முத்தடைகள் படையறுக்கும் பந்தமறுக்கும் உயிரருக்கும்
காதல் கசிந்தோட உண்டி சுருக்கி மதிமயங்கித் திரிய
ஆழிசூழ் உலகையாளும் ஆத்தனின் முதற் கோலாறு மதியே!" என்று மறுமுறை வாக்கியங்களை வைனி சொன்னாள்.

"முதல் வரி எளிதில் புரிகிறது. தீமதியோடு அதாவது கெட்ட எண்ணங்களோடு பயணத்தைத் தொடர்ந்தால் கூற்றம் அதாவது எமனை அடைவீர்கள் என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாம் வரியும் சுலபமாக பொருள் கொள்ளும்படியே இருக்கின்றது. பயணத்தின் போது வரும் மூன்று தடைகள் படையறுக்கும் பந்தமறுக்கும் உயிரருக்கும்." என்று சொன்ன அரண்யா யோசனையில் ஆழ்ந்தாள்.

"முதல் தடை படையறுக்கும் வல்லமை பெற்று நம்மைத் தனிமைப்படுத்தலாம். இரண்டாவது தடை நம்மிடையே இருக்கும் பந்தத்தையோ இல்லை பாசத்தையோ அறுத்து விடலாம். மூன்றாவது தடை நம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம்!" என்றபடியே வீரனும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"மூன்றாம் வரி, மூன்று தடைகளினால் நமக்கு விளையப்போவதைப் பற்றிக் கூறுகிறது. இது தீசகர் கூறியதுடன் பொருந்திப்போகிறது. முதல் தடையில் காதல் உணர்வு அதிகரிக்கும், இரண்டாம் தடையில் உணவைத் தவிர்க்க வேண்டும், மூன்றாம் தடையில் மதி மயங்கி அதாவது மூளை மங்கித் திரியவேண்டும். தீசகர் சொன்னதைப்போல புத்தியை விடுத்து மனத்தின் சொல்லுக்குச் செவிசாய்க்க வேண்டும்." என்றான் துகிரன்.

"ஆனால்... நான்காம் வரி ஈசனைத் திட்டுவது போலிருக்கிறதே!" என்று அலுத்துக் கொண்டான் வீரன்.

"என்ன? எப்படி?" என்று அரண்யா கேட்டாள்.

"ஆத்தன் என்றால் ஈசன் என்ற பொருளுண்டு அல்லவா? ஆழி அதாவது கடல் சூழ்ந்த இவ்வுலகத்தை ஆளும் ஈசனின் முதல் கோளாறு மதியே என்றால்... ஈசனின் புத்தியில் பிழையிருப்பதாக பொருள் வருகிறதல்லவா?" என்று வீரன் கூறியவுடனேயே அனைவரும் வருத்தமுற்று மௌனமானார்கள்.

திடீரென, "அடக்கடவுளே! நானொரு மட்டி" என்று தலையில் அடித்துக் கொண்டாள் வைனி. "வீரன் அண்ணா, அது அப்படியல்ல. பிழை என்ற பொருளில் வருவது கோளாறு, ஆனால் இங்கே எழுதியிருந்தது கோலாறு. 'ல'கர, 'ள'கரத்தில் இருக்கும் வேறுபாட்டினை

உணருங்கள்." என்று சொன்னவளின் கண்களில் விடுகதைக்கு விடை தெரிந்து விட்ட மகிழ்ச்சி இருந்தது.

"கோலாறு என்பதை கோல் ஆறு என்று பிரிக்கலாம் இல்லையா?" என்று வைனி கேட்க, 'ஆமாம்' என்று தலையாட்டினார் மற்ற மூவரும்.

"இங்கே கோல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சிவனின் செங்கோலாகத்தான் இருக்க வேண்டும். பிறகு ஆறு என்பதும் எண் அல்ல, வழி என்று பொருள் கொள்ள வேண்டும். விளக்கிச் சொல்ல வேண்டுமானால் சிவனின் செங்கோலை அடையும் முதல் வழி மதியே! இப்போது புரிகிறதா?" என்று வினவினாள் வைனி.

"புரிகிறது. ஆனால் முதல் வழி மட்டுமல்ல அனைத்து வழிகளுக்குமே அறிவு தான் மூலம் என்பதை நாம் முன்னமே அறிவோமே." என்றான் துகிரன்.

"முதல் வரிகளில் தான் மதியென்றால் அறிவு என்ற பொருளில் வார்த்தைகளை அமைத்திருக்கிறார்கள். கடைசி வரியில் மதி என்பதற்கு நிலவு என்று அர்த்தம் செய்தால்..." என்று விளக்கிக் கொண்டே வைனி கோவிலை விட்டு வெளியே வர, பிறை நிலவு வானில் மின்னியது.

"அதோ பாருங்கள்!" என்று அரண்யா காட்டிய திசையில் மற்றவர் பார்க்க, கொற்றவை தேவியின் சிலை அணிந்திருந்த புல்லாக்கில் நிலவொளி பட்டுத் தெறித்து கடல் நீரில் பாதை ஒன்று தோன்றியது. வெளியே வந்து நிலவை அவர்கள் ஆராயவில்லை என்றால் கடலில் தோன்றிய அந்த அதிசயப் பாலத்தை நிச்சயமாக அவர்கள் கண்டிருக்க வாய்ப்பே ஏற்பட்டிருக்காது.

"சந்திரனைத் தொடர்வோம் வாருங்கள்!" என்று வீரன் உற்சாகக் குரலெழுப்ப, மறுமுறையும் கொற்றவை அன்னையை வணங்கியவர்கள் அச்சமின்றி ஐயமின்றி மேலே சென்றார்கள். முதலில் துகிரன் செல்ல, அவன் பின்னர் வைனி, அரண்யா செல்ல கடைசியாக வீரன் சென்றான். வீரன் கடல்நீரில் கால் வைத்த மறுநொடி எங்கிருந்தோ ஒரு சிம்மயாளியின் கம்பீரமான கர்ஜனை கேட்க, "சிம்மனா?" என்ற கேள்வியோடு அனைவரும் திரும்பிப் பார்க்க, அங்கே சிம்மன் நின்றுகொண்டிருந்தது.

"சிம்மா..." என்று அழைத்தபடியே வீரன் திரும்ப முனைய, "வேண்டாம்! காலைப் பின் வைக்காதே!" என்று சொல்வதைப்போல பலமாக தலையை ஆட்டியது அந்த பாசமிகு யாளி. வீரனும் மற்றவர்களும் குழப்பமாக பார்த்துக்கொண்டிருக்கும் போதே சிம்மனும் அவர்களைத் தொடர்ந்து நிலவுப் பாதையில் நடக்க

ஆரம்பித்தது.

"உற்ற நண்பன் ஒருவன் இருந்தால் யாளி பலம் என்பார்கள். இங்கே யாளியையே நண்பனாகப் பெற்றிருக்கிறாய். அவன் நம்மைப் பாதுகாப்பான்." என்று அரண்யா வீரனிடம் சொல்ல, அதை ஆமோதிப்பதைப்போல கர்ஜனை செய்தது சிம்மன்.

சற்று தூரம் நடந்ததும் துகிரன் எதேச்சையாக திரும்பிப் பார்க்க, அவர்கள் வந்த வழி தானாக மறைய ஆரம்பித்திருந்தது. அதுவரையில் மேகப்பொதியைப் போன்று மெத்தென்றிருந்த பாதை மெல்ல உருக ஆரம்பித்தது. எங்கு சுற்றிப் பார்த்தாலும் கடலே இருக்க, எந்தவொரு பிடிமானமும் இன்றி நீரின் மீது அவர்கள் நின்றிருந்தனர். பாதை மறைந்தால் அங்கேயே முழுகி விடுவோம் என்பது புரிந்ததும் அங்கிருந்த அனைவருக்குமே நெஞ்சம் பதைக்க ஆரம்பித்தது.

"வானில் நிலவு நகரத் துவங்கியதும் பாதை மறையத் துவங்கிவிட்டது. நீர்க்கட்டு வித்தையால் கூட இங்கிருக்கும் தண்ணீரை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. சீக்கிரம்... ஓடுங்கள்!" என்று துகிரன் உரக்கக் கூற, அனைவரும் விழுந்தடித்து ஓடத் துவங்கினர். அப்படியும் ஆழிப் பேரலை ஒன்று அவர்களை முழுவதுமாக விழுங்கிவிட்டது.

அலைக்குள்ளே சிக்குண்டவர்கள் எவ்வளவு சிரமப்பட்டாலும் அவர்களால் நீந்த முடியவில்லை. சிம்மனோடு சேர்த்து அனைவரையும் வாரிச் சுருட்டி ஏதோ ஒரு சுழலுக்குள் தள்ளியது பேரலை. சப்தமிடக்கூட வழியில்லாது தவித்தவர்கள் சுழன்று சுழன்று கீழே கீழே சென்று கொண்டேயிருந்தனர். அந்நேரம் பார்த்து கைகால்களை அசைக்கும் திறன் முற்றாக அவர்களிடமிருந்து விடைபெற, அனைவருமே மயங்கினர். கண்களை மூடும் தருவாயில் ஏதோ ஒளிப்பிழம்பை மட்டும் அனைவருமே கண்டிருந்தனர்.

அரண்யா எத்தனை நேரம் கழித்துக் கண் விழித்திருப்பாள் என்று அவளுக்கே தெரியவில்லை. கண்களைத் திறக்க விடாமல் எதிரே இருந்த ஒளி கண்கூசச் செய்தது. அவள் கண்மூடிய பொழுது கண்ட அதே ஒளியைக் கண் திறக்கும் போதும் கண்டதால் சற்று நேரத்திற்கு எங்கிருக்கிறோம் என்பதே அவளுக்குப் புரியவில்லை. சுழலில் சிக்கி நீரில் அமிழ்ந்து போனது நினைவுக்கு வந்த பிறகு பதறிக்கொண்டு எழ முயன்றவளுக்குத் தலை சுற்றியது. வயிற்றைப் புரட்ட, குடித்திருந்த நீரெல்லாம் வெளியேறியது. முகத்திலிருந்த மணலைக் கழுவியவளுக்குத் தான் இருக்கும் இடம் மெல்ல நினைவுக்கு வந்தது. ஆகாயத்தைப் பார்த்தவள் அப்படியே பிரமித்துப் போனாள். காரணம் சூரியனோ,

சந்திரனோ அல்லது விண்மீனோ எதுவுமே அங்கில்லை. நீலவானம் முழுவதுமே மஞ்சளாகவே மஞ்சள்வெளியாகவே இருந்தது.

மந்தரை மலைக்குச் செல்லும் வழியை எப்படியோ கண்டுபிடித்து விட்டோம் என்கிற நிம்மதி அவளுக்குள் நிறைய, வீரனும் மற்றவர்களும் அவளருகில் இல்லாததை உணர்ந்ததும் அதே நிம்மதி வந்த வழியே சென்றுவிட்டது. இதயத்துடிப்பு பன்மடங்காக கடற்கரையோரமாகவே தேடத் துவங்கினாள். சூரியனை வைத்துத்தான் திசையை அறிய முடியும். ஆனால் இங்கோ திசையைக் கண்டறியும் மார்க்கமே இல்லையே என்ற குழப்பத்தோடே நடந்தாள்.

"வீரா! வைனி! துகிரா! சிம்மா!" என்று அழைத்துக்கொண்டே அவள் மற்றவர்களைத் தேட, "அரண்யா!" என்று வீரனின் குரல் கடற்கரையை ஒட்டியிருந்த காடுகளில் இருந்து கேட்டது. குரல் வந்த திசையில் நடக்கப்போனவளை ஒரு வலிய கரம் தடுத்தது. கோபத்தோடு அவள் திரும்ப உதட்டின் மீது விரல் வைத்து அவளை அமைதியோடிருக்கும் படி சைகை செய்தான் துகிரன். என்ன என்று கண்களாலேயே கேட்டவளுக்கு அருகில் இருந்த பாறையை சுட்டிக் காட்டினான் துகிரன். அதனருகில் வீரனும் வைனியும் இன்னும் மயக்க நிலையிலேயே கிடந்தனர்.

விழி அகல அவர்களை அரண்யா பார்க்க, "படையறுக்கும்!" என்று உதடசைத்தான் துகிரன். புரிந்தது என்பதற்கு அடையாளமாக அரண்யா தலையசைக்க, இருவரும் வேகவேகமாக ஓடிச் சென்று வீரனுக்கும் வைனிக்கும் முதலுதவி செய்தனர்.

என்ன செய்தாலும் மூர்ச்சை தெளியாமலேயே அவர்கள் இருக்க, சற்று நேரம் கழித்து சிம்மன் அங்கு வந்து சேர்ந்தது. சிம்மனைக் கண்டவள் ஓடிச்சென்று அதன் காலைக் கட்டிக்கொண்டாள். சிம்மனோ அரண்யாவை கவனிக்காது அவள் பின்னாலிருந்த பாறையைப் பார்த்து கர்ஜித்தது.

"என்னவாயிற்று சிம்மா? வீரனுக்கு ஒன்றுமில்லை, வெறும் மயக்கம் தான்!" என்று சொல்லிக்கொண்டே அரண்யா திரும்ப அங்கே பாறையுமில்லை வீரனுமில்லை துகிரனுமில்லை! அதிர்ந்தவள் சிம்மனின் பின்னே ஒளிய, "அரண்யா!" என்று எல்லாத் திசைகளில் இருந்தும் வீரனின் குரல் அவளை நெருக்கியது.

சத்தம் அதிகமாக செவிப்பறைகளை மூடிக்கொண்டு இன்னும் சிம்மனோடு ஒட்டிக்கொண்டாள். அப்போது எங்கிருந்தோ ஒலித்த சங்கு நாதமும் உடுக்கை ஒலியும் அரண்யாவின் இதயத்துடிப்பை எகிற வைத்து மூர்ச்சையாக்கியது. "வீரா!" என்று விசும்பியபடியே இரண்டாம்

முறையாக மயங்கினாள் அரண்யா.

****************************************************************

"அரண்யா? அரண்யா?" என்று அழைத்தபடியே யாரோ அரண்யாவின் கன்னங்களைத் தட்டுவது போலிருந்தது.

"ம்... ம்..." என்று முனக மட்டுமே அவளால் முடிந்தது. தூரத்தில் எங்கோ துகிரனும் வைனியும் பேசிக்கொள்வது போல அரண்யாவின் காதுகளில் கேட்டது.

"நல்ல வேளை சிம்மன் சரியான நேரத்திற்குச் சென்றான். இல்லையென்றால் என்னவாகியிருக்குமோ! வீரனைப் போல இவளும் மட்டியாகவே இருக்கிறாள்!" என்று துகிரன் கடிந்து கொண்டான்.

"இந்த இடத்தின் இயல்பே வெகு விசித்திரமாக இருக்கும் போது அவளை எதற்கு நொந்து கொள்கிறாய் துகிரா? அதோ பார், இருவருக்குமே மயக்கம் தெளிவது போலத் தெரிகிறது. முதலில் அவர்கள் திடமாகட்டும். அப்புறம் நீ தாம் தூம் என்று குதிக்கலாம். புரிகிறதா?" என்று ஒரு அன்னைக்குரிய கனிவோடும் கண்டிப்போடும் வைனி பேச, அவளை அணைக்கத் துடித்த கரங்களை முயன்று கட்டுப்படுத்திக்கொண்டு சரியென்று தலையசைத்தான் துகிரன்.

வைனியின் மீது அவனுக்கு எப்போதுமே ஒரு ஈர்ப்பு உண்டு. அது இந்த இடத்தில் பன்மடங்காகிறது என்றே அவன் நினைத்தான். அதனால் வைனியின் முகத்தைப் பார்க்கும் வேளையில் அவன் நெஞ்சம் நிறையும் காரணத்தை அறிந்துகொள்ள அவன் பெரிதாக முயலவில்லை. வைனியின் மீதிருந்த ஈர்ப்பை விட, வீரனின் மீதிருந்த நட்பே அவனுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றியது. அதனால் தேவையில்லாத ஒன்று என்று அவன் கருதியதை ஆராய்ச்சி செய்வதை விட குருதேவர் கமலநாதர் அவனிடம் ஒப்படைத்திருந்த பொறுப்பை நிறைவேற்றவே அவன் விரும்பினான்.

வீரனையும் அரண்யாவையும் பாதித்த அளவு அந்த இடம் துகிரனையும் வைனியையும் பாதிக்கவில்லை. அதனால் இருவரும் தெளிந்த சிந்தனையோடு அடுத்து நடப்பவற்றை ஆராய்ந்து தீர்மானித்தனர். பகலெது இரவெது என்றே தெரியாத வண்ணம் அவர்கள் இருந்த இடம் வெளிச்சமாகவே இருந்தது.

காலத்தை கணக்கிடும் வழி தெரியாமல் அவர்கள் இருவரும் தத்தமது மன உலகில் சஞ்சரிக்க, வீரனும் அரண்யாவும் மயக்கம் தெளிந்து எழுந்தனர். ஆனால் எதிரே இருந்த இருவரையும் பார்த்ததும் சந்தோஷப் படுவதற்குப் பதிலாக சந்தேகப்பட்டனர்.

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்?" என்று வைனி அரண்யாவைக் கேட்க, துகிரனும் வீரனையே ஆராய்ந்து கொண்டிருந்தான்.

"நீ... நீ வைனி தானா?" என்று சந்தேகமாக அரண்யா இழுக்க, "பின்னே? நானென்ன காமரியா?" என்றாள் வைனி.

"நீ வைனியென்று நான் எப்படி நம்புவது?" என்று அரண்யா அப்போதும் நம்பாத பார்வை பார்க்க, "வேண்டுமானால் 'நீ எத்தால் விடியும் இரா' என்று..." என்று வைனி சொல்லி முடிப்பதற்கு முன்னமே அவள் வாயை மூடினாள் அரண்யா.

"நீ என் வைனியே தான்!" என்று அவளைக் கட்டிக்கொண்டு நடந்தவற்றைத் தெரிவித்தாள் அரண்யா. அவள் பேசும் வரை பொறுமை காத்த வீரன், "கிட்டத்திட்ட எனக்கும் அதே போன்ற அனுபவமே நிகழ்ந்தது. ஆனால் சிம்மனுக்குப் பதில் என்னைத் துகிரனும் வைனியும் காப்பாற்றினர்." என்றான்.

"உங்களுக்கு நடந்தவைகள் எங்களுக்கு மட்டும் ஏன் நடக்கவில்லை?" என்று வைனி கேள்வி எழுப்பினாள்.

"பற்பல அதிசயங்களை உள்ளடக்கிய இந்த இடத்தில் எல்லாவற்றிக்கும் காரணகாரியம் இருப்பது போலவே தோன்றும்; ஆனால் காரணமில்லாமல் கூட பல காரியங்கள் நிகழலாம். அதிகம் யோசிக்காமல் வருவதை அப்படியே ஏற்றுக்கொள்வதே நம் அனைவருக்கும் நல்லது!" என்று அவளுக்கு பதிலளித்தான் துகிரன்.

"ஆமாம்! குருதேவர் தீசகர் கூறிய வார்த்தைகளும் அவையே! 'எதற்கும் கலங்காதே, எதைப் பார்த்தும் ஆச்சர்யம் கொள்ளாதே. வருவதை அப்படியே ஏற்க நீ பழகிவிட்டால் வெற்றி உன் வசமாவதைத் தடுப்பவர் யாரோ?' என்று குருதேவர் கூறியபடியே நடப்பவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்றாள் அரண்யா.

"முக்காலமும் உணர்ந்த அவர் சொல்படி நடந்தால் தோல்வியின் நிழல் கூட நம்மை நெருங்காது." என்றாள் வைனி.

"சரி, நாம் எப்படி இங்கு வந்தோம் என்று யாருக்கேனும் நினைவிருக்கிறதா?" என்றான் வீரன். அரண்யாவைப் போல அவனால் இயல்பாகவே இருக்க முடியவில்லை. அதெப்படி இவர்கள் இருவருக்கும் மட்டும் எதுவுமே நடக்கவில்லை என்கிற சந்தேகம் அவன் மூளையைக் குடைந்துகொண்டே இருந்தது. அதனால் அவர்களது பேச்சில் கலந்து கொள்ளாது பெரும்பாலும் அமைதியாகவே அவர்களை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தான். அவன் அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளவில்லை என்பதனால் துகிரனும் அவனுக்குத் தேவையான

இடைவெளியை அவனுக்குத் தந்தான்.

"சுழலில் அகப்பட்ட நாம் எப்படியோ இங்கே கரை ஒதுங்கியிருக்கவேண்டும். இல்லை, அந்தச் சுழல் தான் நம்மை இவ்விடம் நோக்கி அனுப்பியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது." என்றாள் வைனி.

"நாம் வைத்திருந்த அத்தனை பொருட்களும் மாயமாக கட்டிய ஆடையுடனேயே நாம் கரை சேர்ந்திருக்கிறோம். அதனால் நீ இரண்டாவதாகச் சொன்ன காரணமே சரி. நம்மை இங்கே சேர்த்தது அந்தச் சுழல் தான். முதலில் மயக்கம் தெளிந்து எழுந்த நான் பக்கத்திலிருந்த வைனியையும் எழுப்பினேன். அதன் பின்னர் உங்கள் இருவரையும் தேடிக்கொண்டு நாங்கள் இருவரும் செல்ல, ஏதோ கனவின் தாக்கத்தில், அருகில் இருந்த காட்டில் பிதற்றியபடி இருந்த வீரனை முதலில் மீட்டோம். வீரனின் மயக்கத்தை நாங்கள் தெளிவித்துக் கொண்டிருக்கும் போதே சிம்மன் அரண்யாவை தூக்கிக்கொண்டு வந்தான். அதன் பின்னர் சில மூலிகைகளை உபயோகித்து உங்களுக்கு வைனி சிகிச்சையளித்தாள்." என்று விளக்கினான் துகிரன்.

"பொருட்கள் அத்தனையும் மாயமாக இவள் வைத்திருந்த பச்சிலைகள் மட்டும் அப்படியே இருந்ததோ?" என்று ஏளனத் தொனியில் வீரன் கேட்டான்.

"இங்கேயும் சில மூலிகைகள் வளரத்தான் செய்கிறது அண்ணா. அதைக்கொண்டே உங்கள் மூர்ச்சையைத் தெளிவித்தேன். நமக்குப் பரிச்சயமுள்ள மூலிகைகளை விட நாம் அறிந்து கொண்டிராத மூலிகைகள் இங்கே ஏராளம் இருக்கின்றன. குறிப்பாக உண்பவருக்கு பசியோ தாகமோ எடுக்காத ஒரு அற்புத மூலிகை இருக்கிறது என்றும் ஆனால் அவை நாவலந்தீவில் கிடைக்காது என்றும் நாங்கள் படித்திருக்கிறோம். அந்த அற்புத மூலிகையை நான் இங்கே கண்டேன். சந்தேகம் இருந்தால் சோதித்துப் பாருங்கள்!" என்று சொல்லி ஒரு வேரைத் தந்தாள் வைனி.

வைனியின் கையிலிருந்த வேரை வாங்காது அவளை சந்தேகக்கண் கொண்டு வீரன் பார்க்க, வைனியின் முகம் வேதனையோடு சுருங்கியது. அதைக்கண்ட அரண்யா சட்டென்று அந்த வேரைப் அவள் கையிலிருந்து பிடுங்கி சுவைத்துவிட்டாள்.

"அரண்யா! பைத்தியம் போல என்ன காரியம் செய்கிறாய்?" என்று வீரன் அவளை உலுக்க, "எனக்குத் தோன்றுவதைச் செய்கிறேன். நன்றாகப் பார்த்துக்கொள். எனக்கு எதுவும் நிகழவில்லை." என்று சொல்லி அவனுக்கும் அந்த வேரினை ஊட்டினாள். அரண்யா உண்ட

பிறகு அதை மறுதலிக்க மனமில்லாது வீரனும் அந்த வேரினை எதுவும் சொல்லாமல் உண்டு விட்டுக் கோபமாக எழுந்து சென்றான். அவனைத் துரத்திக்கொண்டு அரண்யாவும் அவன் பின்னால் சென்றாள். அவர்கள் இருவரையும் பின் தொடர்ந்து துகிரன் செல்ல எத்தனிக்க, அவன் கைபற்றித் தடுத்தாள் வைனி.

"அவர்கள் செல்லட்டும் விடு. வீரனைக் குளிர்விக்க அவளால் மட்டுமே முடியும். உண்மை தெரிந்தபின் அவர் தெளிந்துவிடுவார். வருந்தாதே!" என்று துகிரனை சமாதானப்படுத்தினாள் வைனி.

"சரி தான். ஆனால் முதல் தடை படையறுக்கும் என்று தெரிந்த பின்னும் அவர்களை எப்படி என்னால் தனியே விட முடியும் வைனி. இப்போது அவர்களது தனிமையை விட, நம் கடமையே முக்கியம்." என்று சொல்லி வீரனையும் அரண்யாவையும் பின்தொடர்ந்து துகிரன் சென்றான்.

வீரனை அமைதிப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தாள் அரண்யா. அவன் மீது அவளுக்கிருந்த நேசம் நேரம் செல்லச்செல்ல அலைகடலென ஆர்ப்பரித்தது. சிறிது நேரத்திலேயே வருவதைப் பற்றிய அக்கறையின்றி மூளையைக் கழற்றிவிட்டு கால் போன போக்கில் திரிந்தார்கள். அல்லது அவர்களை அப்படித் திரியுமாறு கண்ணுக்குத் தெரியாத ஏதோவொரு சக்தி கட்டுப்படுத்தியது. காதல் மொழி பேசியபடியே போனவர்கள் ஒரு குகையின் முன்பு நின்றனர்.

அது ஒரு அதியற்புதமான குகை. அரண்யாவையும் வீரனையும் ரத்தினக்கம்பளம் விரித்து அழைக்காத குறையாக அந்தக் குகை அழைத்தது.

"வேண்டாம்! இளவரசி, வீரா... உள்ளே செல்லாதீர்கள்!" என்ற துகிரனுடைய எச்சரிக்கையை துளி கூட மதிக்காமல் புன்னகையோடு வீரனின் கைப்பற்றி அரண்யா உள்ளே சென்றாள்.

இருவரும் உள்ளே நுழைந்ததும், அவர்களுக்குப் பின்னால் ஓடி வந்த துகிரனை அனுமதிக்காது தானாகவே அந்தக் குகை மூடிக் கொண்டது.

"இளவரசி? வீரா..." அவனால் முடிந்த மட்டில் துகிரன் உரக்க அழைக்க, உள்ளே இருப்பவர்களுக்கு அது கேட்காமலேயே போனது.

"அரண்யா! என்ன இது? குகை வாயில் இப்படி மூடிக்கொண்டதே?" என்று கேட்ட வீரனின் குரலில் லேசான கலக்கம் தெரிய, "ஆறு வயதிலேயே சிம்மயாளியை அடக்கியவர், ஒரு சிறு குகை மூடிக் கொண்டதற்காகவா அச்சப்படுகிறார்?" என்று வீரனை

சீண்டினாள் அரண்யா.

"அச்சப்படுவது உண்மை தான் கண்மணி! ஆயிரம் யாளிகள் என் முன்னே மதம் கொண்டு நின்றாலும், என் உடலில் உயிரிருக்கும் போதே நூறு வல்லூறுகள் என் கண்களைக் கொத்தினாலும், நஞ்சு மிகுந்த லட்சம் நாகங்களிடம் என்னை வீசினாலும், ஏன் உயிரே போகும் நிலையிலும் கூட நான் அஞ்சேன். ஆனால் அன்னச் சிறகினையும் அனிச்சப் பூவினையும் நாணச் செய்யும் உன் பட்டுப் பாதங்கள் இந்த சன்னமான ஒளியுடைய குகையில் நடப்பதால் நோகுமே என்று நினைக்கையில், நான் அஞ்சத்தான் வேண்டியிருக்கிறது!" என்று சிரிப்பும் காதலுமாய் பதிலுரைத்தான் வீரன்.

அவன் தந்த பதிலில் முகம் பாரிஜாதப் பூவாக மலர்ந்தாலும், உடனேயே அதை மறைத்துக் கொண்டு, "ஆஹாஹா... இந்த சமாளிப்புகளுக்கு என்றைக்குமே நீங்கள் குறை வைத்ததில்லை!" என்று மீண்டும் அவனை சீண்டினாள். அவளுக்குத் தெரியாதா அவன் எத்தகைய வீரனென்று? இருந்தும் அவனை வம்புக்கிழுப்பது அவள் மேல் அவன் கொண்டுள்ள நேசத்தை அவன் வாயாலேயே கேட்பதற்காகத் தானே!

"உன் உதடுகள் கள்ளம் உரைத்தாலும் உன் கண்கள் நான் சொல்வது மெய் என்று பறை கொட்டுகிறதே?"

"என் கண்கள் என்ன சொன்னாலும் அதை அறிவீரோ?"

"பதினாயிரம் அரம்பையர் சூழ நீ இருந்தாலும் என் கண்கள் உன்னை விட்டு அகலாதிருக்கும் போது, உன் விழி பேசும் மொழியை நான் அறிய மாட்டேனா?" என்று அரண்யாவின் தோள்களைப் பற்றினான் வீரன்.

"அரம்பையர் சூழ இருந்தால் சரி... ஆனால்..." என்று அரண்யா ஏதோ சொல்ல வாய்திறக்கும் முன்பு, திடீரென அவர்களின் முன் வேறு ஒரு கதவு திறந்தது. உள்ளே தடாகம் போலத் தெரிய, வீரன் அரண்யாவை பின்னால் பாதுகாப்பாக மறைத்துக்கொண்டு முன் சென்றான். அங்கே அவன் கண்ட காட்சியை அவனாலேயே நம்ப முடியவில்லை.

வீரன் பேச்சற்று நிற்கவும், அவனை தாண்டிக்கொண்டு அங்கு என்ன இருக்கிறது என்று பார்த்த அரண்யாவும் வியப்பில் விழி விரித்தாள்.

"வீரா...? அப்படியானால்...." சொல்ல வந்ததை முடிக்க முடியாமல் திணறினாள்.

"நமக்கு சொல்லப்பட்டதெல்லாம் உண்மை போலத் தான் தெரிகிறது கண்மணி!" என்று அவள் கைகளை பற்றிக்கொண்டு மேலே நடந்தான்.

அவர்கள் கண்முன்னே தெரிந்த குளம் முடிவில்லாமல் நீண்டிருந்தது. வெள்ளியை உருக்கி நீராக்கினார் போல, அந்த குளத்தில் இருக்கும் நீர் அத்தனை ஜொலிஜொலித்தது. மிதமான வெளிச்சம் மட்டுமே வந்து கொண்டிருந்த குகைக்குள்ளே சட்டென நட்சத்திரங்களின் மழை பொழிந்ததைப் போல, மின்மினிப் பூச்சிகள் எங்கும் பறக்க, பாலின் வெண்மையையும் பழிக்கும் வெள்ளை நிறத்தில் தங்க நிறச் சிறகுகளுடன் மாணிக்கங்களை கண்களாகக் கொண்டு ஐந்தடியில் ஆஜானுபாகுவான இரண்டு அன்றில் பறவைகள் அவர்களை நோக்கி நீந்தி வந்தன.

"காதலின் தேவதைகள் இங்கிருக்கும் இந்த இரு அன்றில்கள். உருவத்தில் நம் நெய்தல் நிலத்தில் வசிக்கும் அன்றில்களை விட இவை வித்தியாசமானவை. அந்த நெய்தற்பறவைகளைப் போல மீன்களை உண்ணாது, இவைகளுக்குத் தன் துணையின் அருகாமையே உணவாகும். ஒன்று பிரிந்தாலோ இறந்தாலோ மற்றொன்றும் அக்கணமே உயிர் துறக்கும் அபூர்வ பிறவிகள். உன்னைப் பிரிந்தால் என் நிலை என்னவாகும் என்பதற்கு சான்று பகர்பவை இந்த அன்றில்கள்." என்று வீரன் அந்த அன்றில்களை பற்றிக் கூறினான்.

"உங்களைப் பிரிந்தால் நான் மட்டும் சுகிக்கவா செய்வேன்? என் உயிர் உங்களதாயிற்றே? நீங்கள் என்னை நீங்கினால் உங்களோடு சேர்த்து உங்கள் உடைமையான என் உயிரும் நீங்காதோ?" என்று வீரனின் மார்பில் சாய்ந்து மெல்ல கூறினாள் அரண்யா.

"எந்தப் பிறவியிலும், எங்கு பிறப்பினும், எந்த நிதர்சனத்தில் வாழ்வினும், எந்த நிலையிலும், எந்த வழியிலேனும் நான் உன்னிடமே வந்தடைவேன் கண்மணி! இது சத்தியம்!"

"என் இதயக் கதவுகள் நீங்கள் வரும் வரையில் திறவுகோலை தொலைத்திருக்கும் வீரா! இது உறுதி!"

"அன்றில்கள் சாட்சியாக இப்பிறப்பிலும், இன்னும் எத்தனை பிறப்பெடுத்தாலும், நான் உன்னுடையவன் அரண்யா!"

"அன்றில்கள் சாட்சியாக இப்பிறப்பிலும், இன்னும் எத்தனை பிறப்பெடுத்தாலும், நான் உங்களுடையவள்!" என்று வீரனும் அரண்யாவும் அன்றில் தேவதைகளை சாட்சியாக வைத்து ஒருவருக்கொருவர் வாக்கு தந்தனர்.

கைகளை பற்றிக்கொண்டு இருவரும் பேசி முடிக்க, அவர்கள் அருகில் வந்த அன்றில் தேவதைகள் ஒன்றை ஒன்று பார்த்துக் கண்களாலேயே சிரித்தது. உண்மை காதல் இருப்பவர்களிடத்தின் முன் மட்டுமே அவைகள் தோன்றும். வீரனும் அரண்யாவும் ஒருவரை ஒருவர் வானளவு நேசிப்பதை அறிந்தே அவைகள் அவர்களை குகைக்குள்ளே அழைத்திருந்தன.

இன்முகத்துடன், "அப்படியே ஆகட்டும்!" என்று அன்றில்கள் வாழ்த்திட, இருவரின் வலது மணிக்கட்டுகளையும் ஒரு மெல்லிய பொன் சங்கிலி பிணைத்தது. பின் அவர்களின் மணிக்கட்டுகளிலேயே நிரந்தரமாக அந்தச் சங்கிலி படிந்து அவர்கள் தோலோடு கலந்து பச்சை குத்தியதைப் போல தங்க நிறத்தில் ஒளிர்ந்தது.

இருவருக்குமே அப்போது தான் ஒன்று உரைத்தது... அது... அவர்களின் காந்தர்வ விவாகம் அன்றில்களின் முன்னிலையிலேயே நிறைவாக நடந்தேறி விட்டது என்பது தான்!

மனம் முழுக்க காதலில் நிறைய, உரிமையோடு, தன்னவளாகிப் போன அரண்யாவைப் பார்த்துக் கிறங்கினான் வீரன். அவன் பார்வையைத் தாங்காது அரண்யாவின் இமைக்குடைகள் மூடிக்கொண்டன. அவள் மூங்கில் தோள்களை அணைத்தவன் அவளில் தன்னைத் தொலைத்தான்! முதலெது முடிவெது என்று தெரியாவண்ணம் இருவரும் ஒருவரில் ஒருவர் கரைந்தனர்; கலந்தனர்!

*****************************************************************

வெகுநேரமாகியும் துகிரன் வரவில்லை என்பதை உணர்ந்து அவனைத் தேடிக்கொண்டு வைனி வந்த பொழுது, "வீரா! இளவரசி! அரண்யா!" என்று முடிந்த மட்டில் குகையின் வெளியே கத்திக்கொண்டிருந்தான் துகிரன்.

"என்னாயிற்று? ஏன் இங்கே தனியாக கத்திக்கொண்டிருக்கிறாய்? அரண்யா எங்கே?" என்று பித்துப் பிடித்தவளைப் போல வைனி அடுக்கடுக்கான கேள்விகளால் துகிரனைத் துளைத்தாள்.

"கத்தாதே! இதற்குத்தான் அவர்களை தனியே அனுப்பவேண்டாமென முன்னமே சொன்னேன். நீ தான் தனிமை அது இதுவென்று என் பிராணனை வாங்கினாய். இப்போது பார்!" என்று வைனியைத் திட்டிவிட்டு அரண்யாவும் வீரனும் உள்ளே சென்ற கதையை துகிரன் வைனிக்கு எடுத்துரைத்தான்.

இருகைகளினாலும் தலையைத் தாங்கிக்கொண்டு அங்கேயே

அமர்ந்து வைனி அழ ஆரம்பித்தாள். அவளை சமாதானப்படுத்தும் வகை அறியாது துகிரன் அவளருகில் பேசாமல் அமர்ந்துகொண்டான்.

குகை வாயிலில் இவர்களைக் கண்ட அன்றில் தேவதைகளில் ஒன்று, "காதலை விடக் கடமையே இவர்களுக்குப் பெரியது. நம்மை சந்திக்கும் பக்குவம் இவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை." என்றது.

"இருக்கலாம். ஆனால் அவர்களின் நட்பு தூய்மையானது அல்லவே! இதோ இந்தப் பேதையின் கண்ணீர் அவள் தோழிக்காகத் தானே!" என்றது அதன் இணை.

"ஆமாம். அதில் நட்போடு கடமையே அதிகம் கலந்திருக்கின்றது. இன்னும் ஒரு பிறவி இவர்கள் மீண்டும் பிறப்பர். அப்பொழுதாவது காதலில் கரைகின்றார்களா என்று பார்ப்போம்!" என்றது ஆண் அன்றில்.

"இன்னும் ஒரு பிறவியா? அப்படியென்றால் இப்பிறப்பில் என்னவாகும்?" என்று கேட்டது பெண் அன்றில்.

"அதை இப்பொழுதே சொல்லிவிட்டால் சுவாரசியம் ஏது? நடப்பதைப் பார்க்கும் சாட்சி மட்டுமே நாம்!" என்று தன் இணையைப் பார்த்து கண்சிமிட்டியது ஆண் அன்றில்.

"அப்படியானால் இவர்களை..." என்று கூறிப் பெண் அன்றில் ஆண் அன்றிலைப் பார்க்க, "எங்கு துவங்கினார்களோ அங்கேயே அனுப்பிவிடுவோம்!" என்று ஆண் அன்றில் பதில் சொல்ல, எங்கிருந்தோ வந்த ஒரு சூறாவளி துகிரனையும் வைனியையும் குகை வாயிலிலிருந்து அப்புறப்படுத்தி கொற்றவைக் கோவிலின் வாயிலில் கொண்டு போட்டது.

அரண்யாவும் வீரனும் வராமல் துகிரனும் வைனியும் மட்டும் வந்து விழுந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த கனலியின் உள்ளத்தில் ஒரு திட்டம் உதித்தது. ஆனால் சுற்றி நடப்பவை எதையும் அறிந்துகொள்ளும் நிலையில் இல்லாத இருவரும் தாங்கள் செய்த பிழை என்ன என்று தெரியாமல் உள்ளுக்குள்ளேயே மருகினார்கள்.

பாடலில் குறிப்பிட்டிருந்ததைப் போலவே முதல் தடை படையறுத்து விட்டது. அப்படியானால் இரண்டாம் தடை அரண்யா வீரனுக்கு இடையே மலர்ந்திருக்கும் புதிய பந்தத்தை அறுத்து மூன்றாம் தடை அவர்களின் உயிரறுத்து விடுமோ?

## அத்தியாயம் 15

அரண்யாவிற்கும் வீரனுக்கும் தாங்கள் இருக்கும் நிலை புரிய, வெட்கம் இருவரையுமே பிடுங்கித் தின்றது. இப்படி நடக்கும் என்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை என்றாலும் நடந்த செயலுக்கு இருவருமே பொறுப்பேற்றுக்கொண்டனர். குகையைச் சுற்றிப் பார்த்தவர்களுக்கு அன்றில் பறவைகள் அங்கில்லாதது பெரிய ஆச்சரியமாகப்படவில்லை. தெளிந்த சிந்தையோடு நடப்பு நிலவரத்தை ஆராயத் துவங்கினார்கள்.

"துகிரனும் வைனியும் என்னவானார்கள் என்றே தெரியவில்லையே! வா! உடனே சென்று அவர்களைத் தேடுவோம்." என்று வீரன் அரண்யாவை அழைக்க, மறுக்காமல் அவன் பின்னாலேயே வந்த வழியே திரும்பிச் சென்றாள் அரண்யா. ஆனால் எந்த வழியாக குகையின் உள்ளே நுழைந்தனர் என்றே அவர்களுக்குப் புரியாமல் போனது. ஏனெனில் அன்றில்கள் இருந்த தடாகத்தை ஒட்டி, முன்னால் தெரிந்த ஒரு வாசலைத் தவிர வேறெந்த வழியும் அங்கில்லை.

திரும்பிச் செல்லும் திட்டம் பலிக்காது போக, இருவருக்கும் தனியே மேலே செல்வது மட்டுமே சாத்தியமான ஒன்றாகத் தோன்றியது. ஆனால் துகிரனையும் வைனியையும் விட்டுவிட்டு அவர்கள் மட்டும் மேலே செல்வது இருவருக்குமே விருப்பமில்லாத ஒன்றாகயிருந்தது.

"துகிரனுக்கும் வைனிக்கும் ஏதேனும் ஆகியிருக்குமோ?" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டாள் அரண்யா.

"அவர்கள் தொடங்கிய இடத்திற்குப் பத்திரமாகச் சென்றுவிட்டார்கள். நீங்கள் இரண்டாம் நிலைக்குச் செல்லலாம்." என்ற அசரீரி வாக்கு அப்போது அவர்களுக்குக் கேட்டது.

"சிம்மன்?" என்று வீரன் கேட்க, மெலிதான சிரிப்புச் சத்தம் கேட்டது.

"கடமை என்கிற உணர்வை நாங்கள் பெரிதும் மதித்தாலும் தூய நேசத்திற்கும் நட்பிற்கும் மட்டுமே நாங்கள் வழிவிடுவோம். உங்கள் நண்பன் உங்களை முந்திக்கொண்டான். அவனை அதிகம் காக்க வைக்காமல் உங்கள் பயணம் தொடரட்டும். இப்பிறப்பில் மட்டுமின்றி எப்பிறப்பிலும் நீங்கள் இணை பிரியாது வாழ வாழ்த்துகிறோம்." என்று மறுபடியும் அசரீரி வாக்கு கேட்க, அரண்யா, வீரனின் மீது பூத்தூறல் தூவியது.

வீரன், அவனது வலது கையை நீட்ட அவன் கரத்தில் தன் கரம் சேர்த்தாள் அரண்யா. அவர்கள் கைகளில் பச்சை குத்தப்பட்டிருந்த பொன் சங்கிலி மெல்ல ஒளிர்ந்து அவர்கள் உடலினையும் மனதினையும் பூரிக்கச் செய்தது. ரோஜாப்பூ கன்னங்களோடு வீரனின் கைப்பிடித்து

அவன் இதழோரம் வழியும் புன்னகையை ரசித்தபடியே முன்னேறிச் சென்றாள் அரண்யா.

காற்றில் லவசேனமும் ஈரப்பதம் இருக்கவில்லை. மெலிதான துர்நாற்றம் எங்கும் வீசியது. அவர்களின் கண் முன்னே பலவித அரூபங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. அவைகளின் அகோர உருவங்கள் எப்பேர்ப்பட்ட நெஞ்சுரம் கொண்டவர்களையும் கதிகலங்க வைக்க வல்லதாக இருந்தது. அதன் மூலம் குகையின் வாயிலைக் கடந்தபொழுதே இரண்டாம் சோதனை ஆரம்பமாகிவிட்டது என்பதை அரண்யாவும் வீரனும் உணர்ந்துகொண்டனர்.

அரண்யாவிற்கும் வீரனுக்கும் மனம் நிறைய பலப்பல கவலைகளும் அச்சங்களும் இருந்தன. ஆயினும், 'தான் கலங்கினால் அவளும் கலங்குவாளே!' என்று வீரனும் 'நான் கலங்கினால் அவனும் கலங்குவானே!' என்று அரண்யாவும் தத்தமது பயத்தினை மற்றவரிடமிருந்து மறைத்தார்கள்.

"வீரா! நேர் பாதையில் மட்டுமே செல்லவேண்டும். வலமோ இடமோ பாதை தவறக்கூடாது! நம்மை அழிக்கத் துடிக்கும் பைசாசங்கள் அனைத்தையும் மண்ணோடு புதைப்போம்!" என்று அரண்யா உணர்ச்சி பொங்கக் கூறினாள். வீரனின் மனையாளாக மாறிய கணத்திலிருந்து அவளுக்கு வாழ்வின் மீது பெரும் பற்று ஏற்பட்டிருந்தது. வீரனுக்கும் அப்படித்தான்; அரண்யாவுடன் பெருவாழ்வு வாழ அவன் துடித்துக் கொண்டிருந்தான்.

"எது வரினும் என் கையை விடாதே!" என்று சொல்லி அவள் கைப்பற்றி அரண்யாவை மறைத்துக்கொண்டு முன்னே சென்றான் வீரன். வைனி தந்திருந்த வேரின் உபாயத்தால் இருவருக்கும் பசியோ தாகமோ ஏற்படவில்லை என்பதை உணர்ந்ததிலிருந்து நிச்சயம் அவர்கள் உண்மையான துகிரன், வைனி தான் என்று காலம் கடந்து புரிந்துகொண்டான் வீரன். துகிரனை கடைசியாக பார்த்தபோது அவனை நம்ப மறுத்தது எவ்வளவு பெரிய பிழை என்று காலம் போன காலத்தில் வருந்தினான் வீரன். அவன் மட்டும் நம்முடனிருந்திருந்தால் எவ்வளவு துன்பம் வரினும் இன்னும் அதிக பலத்தோடு சமாளித்திருக்கலாம் என்றெண்ணி அவன் மனவருத்தம் அதிகரித்தது. எப்படியாவது முயன்று துகிரனுடன் அவனுக்கு ஏற்பட்ட பிணக்கை சரி செய்ய வேண்டுமென்று அவன் விரும்பினான். அதனாலேயே இந்தப் புதையல் பயணம் சீக்கிரம் நிறைவுற வேண்டுமென்று ஈசனிடம் வேண்டிக்கொண்டான்.

இரண்டாம் நிலையில் வீரனும் அரண்யாவும் கால் வைத்த

மறுநொடி அவர்களை முன்னேற விடாமல் பலமான சூறைக்காற்று அவர்களை எதிர்த் திசையிலிருந்து தாக்கியது. 'பூத கணங்களின் வேலை இது!' என்பதை உணர்ந்ததும் அவைகளைக் கட்டுப்படுத்தும் மந்திரங்கள் தானாக அரண்யாவிற்கு நினைவிற்கு வர, மனதினில் ஐம்பூதனாருக்கு நன்றி தெரிவித்தாள் அரண்யா. அவர் மட்டும் கட்டாயப்படுத்தி தம்பனக் கலைகளை அவளுக்குக் கற்பித்திராவிட்டால், இருவரின் நிலையும் கவலைக்கிடமாகவே போயிருக்கும்.

அரண்யாவின் மந்திரங்கள் வேலை செய்தது என்பதற்குச் சாட்சியாக காற்றின் வேகம் குறைந்து பின் நின்று போனது. அடுத்து வந்த குறளிகள் அரண்யாவையும் வீரனையும் தனித்தனியே இழுத்துப் பிரிப்பதற்கு முயல, அரண்யா வீரனின் கைகளிலிருந்த பொன் சங்கிலிப் பச்சை, பாதுகாப்பு வளையம் போலச் செயல்பட்டு, குறளிகள் அவர்களைத் தீண்டவும் விடாமல் செய்தது. அவர்கள் கைகளை நோட்டம் விட்ட ஒரு குறளியின் கண்கள் வியப்பில் விரிந்தன. காமரியின் உளவுப் பிரிவில் முக்கியப்பொறுப்பில் இருக்கும் குறளி அது!

'எது நடக்கக்கூடாது என்று நான் பயந்தேனோ அது நடந்தேவிட்டது! இதைத் தலைவியிடம் உடனே கூற வேண்டும்.' என்று முடிவு செய்த அந்தக்குறளி அங்கிருந்து மறைந்தது.

அரண்யாவையும் வீரனையும் தீண்ட முடியாமல் பல குறளிகள் அந்நேரத்தில் மாயமாக, இந்தக் குறளியின் நடவடிக்கை பெரிய வித்தியாசமாக அரண்யாவிற்கும் வீரனுக்கும் தோன்றாமல் போனது.

"வீரா! இங்கிருக்கும் பைசாசங்கள் ஒன்றினாலும் நம்மை நேரடியாகத் தீண்டமுடியாது என்றே நான் நினைக்கிறன்." என்று சற்றே நிம்மதியான குரலில் அரண்யா கூற, "ஆமாம் அரண்யா. பாதை மாறாமல் சென்றால் வெற்றி நிச்சயம் என்றே எனக்கும் தோன்றுகிறது." என்றான் வீரன்.

நேராகச் சென்றுகொண்டிருந்தவர்களின் பாதையில் திடீரென ஒரு புதைகுழி தோன்றியது. கால் வைக்கலாமா வேண்டாமா என்று குழம்பி நின்று கொண்டிருந்தவர்களின் இடப் புறத்தில் ஒரு மோகினி தோன்றினாள்.

"வேண்டாம்! நேரே செல்லாதீர்கள்! நன்றாகப் பாருங்கள்! அங்கே புதைகுழி இருக்கிறது. வீணே உயிரை விடாதீர்கள், என் கைகளைப் பிடித்துக்கொள்ளுங்கள்; வாருங்கள் இந்தப்பக்கம். உங்களை மீட்கவே நான் வந்திருக்கின்றேன்!" என்று சொல்லி வீரனின் மனதை மாற்ற முயற்சி செய்தாள் மோகினி.

சற்றும் இளகாது வீரன் நிற்க, "உன் மாங்கல்யத்தை காப்பாற்றிக் கொள்ளம்மா. என் கையைப் பிடித்துக்கொள்! இங்கே வா! பெயரன் பெயர்த்தி என்று சுற்றத்தோடு வாழ வேண்டிய நீ, அற்ப ஆயுளில் இறப்பதை என்னால் தாங்க முடியவில்லையே! என்செய்வேன் நான்... ஒரு தரம், ஒரே ஒரு தரம் என் கையைப் பிடியேன்!" என்று அரண்யாவிடம் அழுதுகொண்டே மன்றாடினாள் மோகினி.

'பெயரன், பெயர்த்தி!' என்று மோகினி சொன்ன நொடியில் வீரனின் முக ஜாடையில் குஞ்சுக் குளுவான்கள் மத்தியில் மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கும் வயதான அரண்யாவை அரண்யா கண்டாள். குழந்தைகள், பெயரன் பெயர்த்திகள் என்கிற மாயையைக் காட்டி, "இவர்கள் வாழ வேண்டுமானால், முதலில் நீ வாழவேண்டும். பிடி என் கையை!" என்று மோகினி ஆங்காரக் கூச்சலிட, அரண்யா மோகினியை நோக்கி கைகளை வேகமாக நீட்டினாள். அவளைப் பிடித்து நிறுத்த முயன்ற வீரனிடம் திமிறியவளை வீரனால் கூடத் தடுக்கமுடியாமல் போனது.

"அரண்யா! வேண்டாம்! அவள் கூறுவது பொய்! எல்லாமே மாயை... எல்லாமே மாயை!" என்று அரண்யாவை வீரன் உலுக்க, அவன் பிடியை உதறவே அரண்யா முயன்றாள். இன்னும் கொஞ்ச தூரம் கையை நீட்டினால் மோகினியின் கையைப் பிடித்துவிடலாம் என்று தெரிந்து அரண்யா இன்னும் முயல, மோகினியின் நோக்கத்தை குலைக்கும் நோக்குடனேயே தரை அதிர, கோபத்தோடு கர்ஜனை செய்தபடியே சிம்மன் வந்தது.

சிம்மனைக் கண்ட மோகினி அச்சத்தில் வெளிற, அவளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த அரண்யா விடுதலையடைந்தாள். சட்டென கையைத் தன்வசம் இழுத்துக்கொண்டு வீரனைக் கட்டிக்கொண்டாள்; அவள் உடல் மெல்ல நடுங்கியது.

"ஷ்! ஒன்றுமில்லை கண்மணி! ஒன்றுமில்லை!" என்று அரண்யாவை வீரன் சமாதானம் செய்ய, தன் முதுகின் மீது ஏறிக்கொள்ளும்படி சிம்மன் சமிக்கை செய்தது. எந்த துர்சக்திகளாலும் எளிதில் கட்டுப்படுத்த முடியாத சிம்மனின் மீது சவாரி செய்வது தான் சரியான வழியென்று புரிய, அரண்யாவும் வீரனும் மறுப்பெதுவும் கூறாமல் சிம்மனின் முதுகில் ஏறிக்கொண்டனர். பயணமும் தொடந்தது.

சிம்மன் ஒரு சாதாரண சிம்மயாளியன்று; அற்புத சக்திகளை உள்ளடக்கிய சித்தர் பெருமான் ஒருவரின் வளர்ப்பு மிருகம். அதனாலேயே சுலபத்தில் எந்த அரூபசக்திகளாலும் சிம்மனை அடக்கவோ அன்றி ஆட்கொள்ளவோ முடியவில்லை. வீரன் அடக்கிய

ஆத்தன் என்னும் சிம்மயாளியின் புதல்வன் தான் சிம்மன். சிறுவயதிலேயே வீரத்தோடும் பாசத்தோடும் நடந்துகொண்ட வீரனின் மீது நட்பு கொண்டு அவனைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது சிம்மன். அதன்பொருட்டே எப்போதெல்லாம் வீரனுக்குத் தீங்கு நேரவிருந்ததோ அப்போதெல்லாம் சிம்மன் தோன்றி வீரனை காப்பாற்றும்; குறைந்தபட்சம் எச்சரிக்கையாவது செய்யும். மகிந்தனின் கண்களில் வீரன் புலப்படாதிருக்க சிம்மனும் ஒரு முக்கியக் காரணமாகத் திகழ்ந்தது.

வழியில் பலவகை யட்சிணிகளின் உபாயத்தால் தடைகள் பல வந்தாலும் அவற்றையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக சமாளித்துக்கொண்டே முன்னேறினர். எந்தத்தடை வந்தாலும் பாதை தவறாமல் இருப்பதில் சிம்மன் மிக மிகக் கவனமாக இருந்தது. நேரே சென்று கொண்டிருந்தவர்கள், இரண்டாம் தடையை நிறைவு செய்யும் தருணம் வந்தது. சுலபத்தில் கடந்து விட்டோமே என்று அரண்யாவும் வீரனும் மகிழ்ந்திருக்க, "நில்!" என்ற அதிகாரக் குரல் கேட்டது. எவற்றாலும் கட்டுப்படுத்த முடியாத சிம்மனே அந்தக்குரலை மீறும் வலுவில்லாமல் ஆணி அடித்தாற்போல அப்படியே அந்த இடத்தில் நின்றது.

"இத்தடையை நீங்கள் கடக்க வேண்டுமாயின், மனமுவந்து எனக்கொரு பலியைத் தரவேண்டும்." என்று அந்தக்குரல் மீண்டும் சொல்ல, பூமியைப் பிளந்து கொண்டு தோன்றிய ஒரு எரிமலை விண்ணை முட்டிக்கொண்டு நின்றது.

"இரண்டாம் தடை பந்தமறுக்கும்!" என்று காற்றாகிப் போன குரலில் அரண்யா சொல்ல, என்ன செய்வதென்றே தெரியாமல் திக்குமுக்காடிப் போனான் வீரன்!

*****************************************************************

தென்மதுரை:

"இல்லை...!" என்று ஆவேசமாகக் கத்திக்கொண்டே குறளியின் கழுத்தைப் பிடித்தாள் காமரி.

"த... தலைவி..." என்று பயத்தில் தடுமாறியது குறளி. காமரியிடமிருந்து கோபத்தை எதிர்பார்த்திருந்தாலும் தூதுவனைக் கொலை செய்யும் அளவிற்கு அவளுக்கு ஆத்திரம் வருமென குறளி எதிர்பார்த்திருக்கவேயில்லை.

"நன்றாக யோசித்துச் சொல்! அவர்கள் இருவர் கையிலும் பொன் சங்கிலிப் பச்சை இருந்ததா?" என்று குறளியை மேலும்

இறுக்கினாள் காமரி.

"உங்கள் மீது ஆணை தேவி! அவர்களுக்கு அன்றில்கள் மணமுடித்துவைத்து விட்டன. இனி எப்பிறப்பிலும் அவனுக்கு அவள் தான் இணை. ஏதோவொரு பிறப்பில் ஒருவர் மட்டும் தனித்து பிறந்தால் கூட துணையின்றியே தனிமையில் வாழ்ந்து முடிப்பரே தவிர, இன்னொரு துணையோடு அவர்கள் வாழ்க்கை இருக்காது. அப்படியே விதிவசத்தால் ஒரு துணை அமைந்தாலும் அந்த உறவிற்கு ஆயுள் மிகச் சொற்பம் தான். இருவரும் பிறப்பெடுத்திருந்தாலோ, எந்த எல்லையில் அவர்களை நிறுத்தினாலும் அவர்கள் ஒன்று சேருவதை அந்த ஈசனே நினைத்தாலும் தடுக்கமுடியாது!" என்று மறுபடியும் விளக்கிச் சொல்லியது குறளி.

"இந்த விளக்கத்தை உன்னிடம் இப்போது யார் கேட்டார்கள்?" என்று எரிந்து விழுந்தாள் காமரி. அவளுக்கு பதில் சொல்லாமல் தலை குனிந்து நின்றது குறளி.

"நான் முதன்முதலில் விரும்பிய பொருள் இந்திரரகசியம்; விரும்பிய முதல் ஆடவன் யாளி வீரன். இவை இரண்டும் எனக்கு மட்டுமே சொந்தமாக இருக்கவேண்டும். அந்த அரண்யாவின் வாயாலேயே அவளை விட்டு வீரனை விலகச் சொல்கிறேன் பார்!" என்று சவால் விட்டாள் காமரி.

'அது... எப்படி நடக்கும்?' என்று மனதிற்குள்ளேயே குறளி சொல்லிக்கொண்டது.

"நடக்காததை நடத்திக் காட்டுவாள் இந்தக் காமரி. இந்த நாவலந்தீவையே அழித்து சுடுகாடாக்கி சாம்பல்களின் இடையே மண்டையோடுகளின் ராணியாக இருப்பேனே தவிர என் வீரனை எந்தக் கீழ்மகளுக்கும் விட்டுத்தர சம்மதியேன்!" என்று கோவைப்பழங்களாகச் சிவந்த விழிகளுடன் சூளுரைத்த காமரியின் கண்கள் மாடப்புறாக்களோடு அரண்மனைத் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த வேல்விழியின் மீது நிலைத்தது.

அவள் உக்கிரத்திற்குச் சற்றும் பொருந்தாத வகையில் அவள் உதடுகள் புன்னகையில் விரிந்தன.

*****************************************************************

கொற்றவைக் கோவில்!

'துகிரனை கொலை செய்வது என்னால் ஒருக்காலும் முடியாத காரியம். வேண்டுமானால் அரண்யாவின் தோழியை காமரியிடம் ஒப்படைத்துவிட வேண்டியதுதான். வீரனின் நண்பனைக் கொன்று

வீரனிடம் பகைமையை சம்பாதித்துக் கொள்வதை விட, அரண்யாவின் தோழியைக் கொன்று அரண்யாவின் மனதை வருத்தலாம் என்று காமரியிடம் நல்லபடியாக சொல்லி இவனை எப்படியாவது காப்பாற்றினால் போதும்!' என்ற நினைப்புடனேயே பித்துப் பிடித்தவனைப் போலத் தனியே கடலை வெறித்தபடி அமர்ந்திருந்த துகிரனை நோக்கி அன்னமயில் போல அசைந்து வந்தாள் கனலி.

"துகிரா!" என்று துகிரனை கொஞ்சிக் கூப்பிட்டாள் கனலி.

அவளைக் கண்ட நொடி, சீறும் சிறுத்தையென பாய்ந்து சென்று அவள் கழுத்தைப் பிடித்தான் துகிரன். கோவிலுக்குள்ளே கொற்றவை தேவியை வழிபட்டுக்கொண்டிருந்த வைனியின் காதுகளில் கனலியின் அலறல் கேட்க, பதறியபடியே வெளியே வந்தவள், துகிரனிடமிருந்து கனலியைக் காத்தாள்.

"துகிரா, என்ன இது? பெண்களை துன்புறுத்தும் கலையையும் கமலநாதர் கற்பிக்கிறாரோ?" என்று வைனி கடிந்து கொள்ள, "இவளெல்லாம் பெண்ணா?" என்று திருப்பிக் கத்தினான் துகிரன்.

"பெண்ணோ ஆணோ, உன்னை விட பலம் குறைந்தவர்களை இப்படியா நடத்துவது? அவளிடம் இப்பொழுதே மன்னிப்பை வேண்டு!" என்று உறுதியான குரலில் வைனி கூற, வேறுவழியின்றி மனதேயில்லாமல், "என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான் துகிரன்.

துகிரன் மன்னிப்பைக் வேண்டியதும் ஒரு ஏளனப் புன்னகையோடு நின்றிருந்த கனலியின் கைகளை சட்டென பிடித்துத் திருகினாள் வைனி.

வலி தாங்காது கத்தியவளைப் பார்த்து, "ஷ்! சத்தம் வரக்கூடாது! நான் மேருவின் தலை சிறந்த மருத்துவ மாணவி என்பதோடு வர்மக்கலையிலும் வல்லவள் என்பதை நினைவில் வை. மூச்சு விடும் ஓசை கேட்டால் கூட உன் கையத் தனியே பிரித்தெடுத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்றாள்.

வைனியின் வைத்தியத்தைப் பார்த்து பிரமித்து நின்றிருந்த துகிரன், "அவளைத் துன்புறுத்தக்கூடாது என்று என்னிடம் சொல்லிவிட்டு நீ ஏன் இப்படி நடந்துகொள்கிறாய்?" என்று கோபமாகக் கேட்க நினைத்து புன்னகையோடு கேட்டான்.

"உன்னை விட வலுவிழந்த இவளை நீ துன்புறுத்துவது பாவம். ஆனால் இவளுக்கு சமமான பலத்தில் இருக்கும் நான் இவளிடம் நடக்கும் முறை தர்மம். என்னையும் என் தோழியையும் சவக்குழியில் தள்ளப்பார்த்த இவளுக்கும் இவள் தோழிக்கும் நான் தரும் பரிசு இது!"

என்று கூறி அவள் கையை இன்னும் வலுவாக முறுக்கினாள் வைனி. ஆனால் கனலியோ வலித்தாலும் வாய் திறக்கவில்லை.

காமரியை அவள் தோழியென்று வைனி சொன்னபோது உள்ளத்தில் சுருக்கென்று தைத்தது கனலிக்கு. அரண்யாவிற்காக காமரியின் சக்தி தெரிந்தும் அவளிடம் மோதத் தயாராகும் வைனியைப் பார்த்தவளுக்கு, 'உண்மையில் காமரி எனக்குத் தோழியா?' என்ற கேள்வி எழுந்தது.

"இங்கே பார்! ஏதோ தெரிந்தவர் தனிமையில் வருத்தமாக இருப்பதைப் போல் தெரிகிறதே என்று இரக்கப்பட்டு பேச வந்தால், ஆளாளுக்கு என்னை பந்தாடுகிறீர்கள்? தாயில்லா பெண்ணென்றால் எடுப்பார் கைப்பிள்ளையா?" என்று முயன்று சினத்துடன் சீறினாள் கனலி. அவள் தாயில்லாப் பெண் என்றதும் வைனியின் பிடி இளகியதே தவிர முழுதாக அவளை விடுவிக்கவில்லை.

"உன்னைப் பற்றியும் அந்தப் பிசாசு காமரியைப் பற்றியும் நான் நன்கறிவேன். அதனால் இந்த நடிப்பெல்லாம் என்னிடம் செல்லுபடியாகாது கனலி. நான் கேட்பவற்றிற்கு உண்மையைக் கூறினால் உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன்!" என்றாள் வைனி.

"அதுதான் எங்களைப் பற்றி உனக்கு எல்லாம் தெரியும் என்கிறாயே, இனிமேல் நான் வேறு எதை கூறவேண்டுமென்று நீ எதிர்பார்க்கிறாய்?" என்று நக்கலாகவே பதிலளித்தாள் கனலி.

"இப்போது என் பிடியில் நீ இருக்கிறாய்! அதனால் மரியாதையாகப் பேசு!" என்று வைனி சொல்ல, கனலி கலகலவென நகைத்தாள்.

"என்னது? உன் பிடியில் நானிருக்கிறேனா? பைத்தியம்!" என்று கூறிச் சிரித்து நொடியில் வைனியைத் தரையில் தூக்கியடித்தாள் கனலி. இப்போது கனலியின் பிடியில் வைனி சிக்க, அவளுக்கு உதவுவதற்காக ஓடி வந்தான் துகிரன். ஒரு சிறு கையசைவில் அவனை எதிரில் தெரிந்த ஒரு மரத்தோடு மந்திரத்தால் கட்டியவள், வைனியிடம் மெல்லக் கேட்டாள், "இப்பொழுதாவது ஒழுங்காக பேச்சைத் துவங்கலாமா?" என்று!

கனலியின் சக்தியை முதன்முதலாக நேரில் பார்த்த அதிர்ச்சியிலிருந்த வைனி, சரியென்று தலையசைத்தாள்.

தன்னை விடுவித்தவளிடம், "துகிரனை ஒன்றும் செய்துவிடாதே!" என்று வைனி இறைஞ்ச, "அவன் உயிருடன் இருப்பது உன் கையில் தான் இருக்கிறது!" என்று ஒரு மர்மப் புன்னகையுடன்

சொன்னாள் கனலி.

*************************************************************************

தென்மதுரை:

'பேரரசரைப் பார்க்க வேண்டும்!' என்ற கோரிக்கையுடன் அந்தி சாயும் நேரத்தில் அசுரப்பாய்ச்சலில் வந்த குதிரையிலிருந்து கம்பீரமாக இறங்கினாள் அந்த இளம்பெண்.

"பேரரசர் இப்போது தான் ஓய்வெடுக்க அந்தப்புரம் சென்றாரம்மா. அதனால் நாளை காலையில் அரசவைக்கு வாருங்கள்!" என்று அரண்மனைக் காவலர்கள் கூறினார்கள்.

"மன்னிக்கவும் வீரர்களே! மேருமலையின் தலைமை குருதேவர் ஐம்பூதனாரின் கட்டளையைச் சுமந்து வந்திருக்கின்றேன். அதனால் வழி விடுங்கள். நான் இப்பொழுதே பேரரசரைக் காண வேண்டும்." என்று சற்று அழுத்தமாகவே கூறினாள்.

"அட என்னம்மா நீ? இப்போதுதான் பேரரசர் சென்றார் என்கிறேன். திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்கிறாயே!" என்று அவளை உள்ளே விட மறுத்தனர் காவலாளிகள்.

"என்னைத் தடுத்ததற்காக நீங்கள் பிறகு வருந்துவீர்கள். தயவு செய்து நகருங்கள். இல்லையென்றால் உங்களை நானே நகர்த்தும்படி ஆகிவிடும்!" என்று அடிக்குரலில் அவள் சீற, காவலர்கள் அவளைத் தடுத்து நிறுத்தி மறுத்துப் பேச, சற்று நேரத்தில் அது வாய்ச்சண்டையாகவும் முற்றியது.

வாயிலில் நடைபெறும் கலவரத்தைப் பார்த்தபடியே அரண்மனை உள்ளிருந்து வந்த தான்யாதிகாரி திண்ணன், "அம்மா! யார் நீ? ஏன் இங்கே நின்று வீண் சண்டை பிடிக்கிறாய்?" என்று வினவினார்.

"ஐயா! என் பெயர் குவேணி. நான் ஏழு குணக்கரை நாடுகளிலும் புகழ் பெற்ற கூலவாணிகர் குமணனின் ஒரே புதல்வி; குருதேவர் தீசகரின் முதன்மை மாணவி. மேருமலையில் நடைபெற்ற இந்திர ரகசியப் போட்டியின் இறுதிச் சுற்றிற்குத் தேர்வாகியிருந்த மூவருள் நானும் ஒருத்தி. சந்தேகமிருப்பின் இந்நாட்டு தான்யாதிகாரி திண்ணன் அவர்களின் புதல்வன் துகிரனையோ அல்லது சேனாதிபதி ரணதீரன் அவர்களின் மகன் வீரனையோ கேட்டுப் பாருங்கள். விஷயம் வெகு அவசரம். தயவு செய்து பேரரசரைப் பார்க்க அனுமதிக்க வேண்டும்!" என்றாள் குவேணி. திண்ணனின் மரியாதை தரும்படியான தோற்றத்தையும் அவரைக் கண்டதும் காவலர்கள் வணங்கியதையும் பார்த்த குவேணி, நிச்சயம் இவர் ஒரு

உயரதிகாரியாகத்தான் இருக்க வேண்டும் என்று கணித்து சுருக்கமாக தன்னைப்பற்றிக் கூறினாள்.

"அடடே! குமணனின் மகளா? உன் தந்தை எனக்கு நல்ல பரிச்சயமம்மா. உங்கள் குடும்பத்திற்கும் பெருவளநாட்டிற்கும் நீண்ட காலமாக வியாபாரத் தொடர்பு உண்டு. நீ நீலமலை குருகுலத்தலைவர் தீசகரிடமா கல்வி பயிலுகிறாய்? நல்லது நல்லது!" என்று சொல்லிக்கொண்டே போனவரை வியப்பாக குவேணி பார்க்க, "இந்தக் கிழவன் தன்னை அறிமுகம் செய்துகொள்ளாது பேசிக்கொண்டிருக்கிறானே என்று பார்க்கிறாயா? நீ இப்போது சொன்னாயே, 'தான்யாதிகாரி திண்ணன் அவர்களின் புதல்வன் துகிரனிடம்' கேட்கச் சொல்லி, அந்தத் துகிரனின் தந்தை நான்தானம்மா." என்று புன்னகைத்தார்.

சற்றும் தாமதியாது அவர் பாதம் பணிந்து எழுந்தாள் குவேணி. "மன்னிக்கவேண்டும் ஐயா! அபாயம் நம்மைச் சூழ்ந்துள்ளது. உடனே பேரரசரைப் பார்க்க வேண்டும்!" என்று அவள் பிடியிலேயே குவேணி இருந்தாள். அவள் முகத்தில் தெரிந்த தீவிரம் அந்தப்புரத்திற்கு அவளை அழைத்துச்செல்ல திண்ணனை ஊக்கியது.

அந்தப்புர வாயில் காப்போனிடம் அவசர விஷயம் என்று பேரரசருக்குச் செய்தியனுப்பிவிட்டு வெளியே காத்திருந்தனர் திண்ணனும் குவேணியும். அடுத்த ஐந்து நிமிடத்திற்குள் பேரரசர் அழைப்பதாக காவலன் வந்து கூற, இருவரும் உள்ளே விரைந்தனர்.

"வாம்மா! இந்திர ரகசியப் போட்டியில் இறுதிச் சுற்று வரை சென்றாயாமே! வாழ்த்துக்கள். எங்கள் மகள் அரண்யாவைக் கண்டிருக்கிறாயா?" என்று அவர் பாதம் பணிந்தவளை அன்போடு கேட்டார் பேரரசர்.

"மேருமலைக்குச் சென்றவர் அனைவருக்கும் அரண்யா என்றால் பரிச்சயம்தான் அரசே! அவளைப் போன்ற ஒரு வீரதீர பராக்கிரமசாலியை எவரும் கண்டிருக்க முடியாது. முன்பொரு சமயம் யட்சிணியால் ஆட்கொள்ளப்பட்டிருந்த யானை யாளியை தனியாகவே வீழ்த்தினாள் என்றால் அவள் வீரத்தை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஆனால் அவளைப் பற்றிப் பேசுவதற்கு இது சமயமல்ல அரசே! குருதேவர் ஐம்பூதனார் உங்களைக்கண்டு சில விஷயங்களைத் தெரிவிக்கச் சொன்னார். அதன் பொருட்டே நான் இங்கு வந்திருக்கின்றேன்!" என்றாள் குவேணி.

"சொல்லம்மா, என்ன விஷயம்?" என்று பேரரசர் கேட்கும் போதே, "ஒரு நிமிடம் இருங்கள்! குழந்தை வெகு தூரம்

பிரயாணப்பட்டிருப்பாள் போலத் தெரிகிறது. இந்தப் பாலை அருந்திக்கொண்டே பேசம்மா." என்று பிரியத்துடன் பேரரசி அவள் கையில் ஒரு தங்கக்கோப்பை நிறைய பனைவெல்லமும் ஏலக்காயும் சேர்த்துப் பதமாகக் காய்ச்சிய பாலைத் தந்தார். அவர் அன்பில் நெகிழ்ந்த குவேணிக்கு, அரண்யாவின் விருந்தோம்பல் குணம் வழிவழியாக ரத்தத்தில் ஊறியது என்று புரிந்தது.

"நன்றி தாயே!" என்று சொல்லிவிட்டு அவரிடமும் ஆசியை பெற்றுக்கொண்டாள் குவேணி. ஒரே மடக்கில் ஒரு கோப்பைப் பாலையும் குடித்தவள், "நாவலந்தீவிற்கு பெருந்தீமை நிகழவிருக்கிறது அரசே. வானிலிருந்து விண்கற்கள் மழை பொழிந்து நாவலந்தீவை கடற்கோள் கொண்டுபோகப் போகிறது. நிகழவிருக்கும் பிரளயத்திலிருந்து நம்மை மீட்க முடியாமல் கூடப் போகலாம். அதனால் மிகப்பெரிய கப்பல்களைக் கட்டும் பணியை உடனே துவங்கச் சொல்லி என்னை அனுப்பியிருக்கிறார் ஐம்பூதனார்." என்று கூறி மறுமுறை அனைவரையும் வணங்கினாள் குவேணி. அவள் கூறியவற்றைக் கேட்ட பேரரசரின் முகத்தில் கவலை ரேகைகள் ஓடியது. *'மீட்க முடியாமல் கூடப் போகலாம்!'* என்றால்... சிவனின் செங்கோலைத் தேடிச் சென்றிருக்கும் அரண்யாவின் நிலை என்னவாகும்? என்ற நினைவில் பேரரசரின் கவலை பன்மடங்காகியது.

"என்ன? ஒரு சிறு பெண்ணிடம் இத்தனை பெரிய பொறுப்பை ஒப்படைப்பதா?" என்று திண்ணன் வெளிப்படையாகவே வியந்தார்.

"இந்தப் பொறுப்பை ஐம்பூதனார் மட்டுமே எனக்கு அளிக்கவில்லை ஐயா!" என்று துவங்கி இந்திர ரகசியப் போட்டியின் கடைசி சுற்றின் போது அவளுக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கினாள் குவேணி. அதன் பிறகே திண்ணன் ஒருவாறு சமாதானமடைந்தார்.

"உங்கள் மூவருக்கும் ஆளுக்கொரு பணியை ஈசன் தந்திருக்கிறாரா? அப்படியானால் துகிரன் மற்றும் வீரனுக்கு என்ன கடமைகள்?" என்று ஆவலோடு கேட்டார் திண்ணன்.

"மன்னிக்கவும் ஐயா! அது எனக்குத் தெரியாது. ஆனால் ஐம்பூதனார் ஒன்று சொன்னால் அது நடக்காமல் இதுவரை இருந்ததில்லை என்பது எனக்குத் திண்ணம்." என்று பணிவாக ஆனால் அதே நேரம் ஒரு நிமிர்வுடன் பதிலளித்தாள் குவேணி.

"அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?" என்று திண்ணன் கேட்டார்.

"போட்டி முடிந்தவுடன் உடனே என் பெற்றோரை

தரிசித்துவிட்டுக் கப்பல் கட்டும் பணியைத் துவங்கவேண்டுமென்று குருதேவர் என்னிடம் கூறினார். ஒருவேளை என்னால் என் பெற்றோரைக் காண முடியாது போனால் அதன் பிறகு என்னால் என்றுமே அவர்களைக் காண முடியாது என்றார். குருதேவர் வாக்கு பலித்துவிட்டது!" என்று சொல்லும்போது இப்பொழுது விழுந்துவிடுவேன் என்று எச்சரித்த கண்ணீரை சிரமத்துடன் உள்ளிழுத்துக் கொண்டாள் குவேணி.

அவள் பேச்சின் பொருளுணர்ந்தவர்கள் நாவலந்தீவின் எதிர்காலம் என்னாவாகுமோ என்ற அதிர்ச்சியில் உறைந்தனர்!

*******************************************************************

மந்தரை மலை!

"பலியா?" என்று நடுங்கிய குரலில் அரண்யா கேட்க, "ஆமாம், பலி தான். உங்கள் உயிரையோ அல்லது உங்களுக்கு இடையில் இருக்கும் பந்தத்தையோ எனக்குத் தத்தம் செய்துவிட்டு இந்தத் தடையை சுலபமாக நீங்கள் கடந்து போகலாம்!" என்று அந்தக் குரல் சொன்னது.

உயிரைத் தரவேண்டும் என்று கேட்டபோது கலங்காதவர்கள் பந்தத்தைத் தரவேண்டும் என்ற போது உயிர்வலி சுமந்தனர்.

"எங்கள் பந்தத்தை ஒருபோதும் எங்களால் இழக்க இயலாது. இதோ! என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள்." என்று வீரன் முன்வந்தான்.

"வீரா! நில்! இந்திரரகசியத்தை அறிந்தவர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. அது மட்டுமின்றி நாவலந்தீவைக் காக்கும் கடமையும் உனக்கு இருக்கிறது. அதனால் உன் உயிர் விலைமதிப்பில்லாதது. என் உயிரினால் யாருக்கும் எந்த உபகாரமும் இல்லை." என்று அரண்யா சொல்லிக்கொண்டிருக்கும் போதே, "நிறுத்து!" என்று அவள் வாயை மூடினான் வீரன்.

"அரண்யா, என் உயிரே நீயல்லவா? நீயின்றி நானேது? தயவு செய்து இப்படிப் பிதற்றுவதை நிறுத்து. உன்னைக் காப்பதற்குப் பயன்படாத இந்த உயிர் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன?" என்று கூறி அரண்யாவின் முன்நெற்றியில் இதழ் பதித்தான் வீரன். அவன் முத்தத்தின் ஈரத்தை உணர்ந்தவளின் கண்களில் இருந்து பெரிய பெரிய நீர் மணிகள் வெளியேறின.

மனம் முழுக்க வலி இருந்தாலும், அரண்யாவை ஒரு முறை இறுக அணைத்து அவள் உச்சியில் மறு முத்தம் வைத்த வீரன், அவளை

விலக்கி நிறுத்தினான். அவள் முகத்தை நன்றாகப் பார்த்துவிட்டு, சீறும் எரிமலையினுள்ளே அவன் குதிக்க நினைத்த நொடி, அரண்யாவின் கையிலிருந்த பச்சையிலிருந்து ஒரு பொன் சங்கிலி தானாக எழுந்து வீரனின் கரத்திலிருந்த சங்கிலியோடு பலமாகப் பிண்ணிப் பிணைந்தது.

வீரனால் மேலே செல்ல முடியாமல் போக, "அன்றில் பறவைகள் உங்களைப் பிணைத்திருப்பது போலத் தெரிகிறதே? நல்லது. உயிருக்கு பதில் உங்கள் பந்தத்தை இங்கேயே அறுத்தெறிந்துவிட்டு நீங்கள் மேலே செல்லலாம்." என்று மீண்டும் குரல் கேட்டது.

"நம் பந்தத்தை இங்கு ஒருமுறை இழந்தால் பிறகு வரும் அத்தனை பிறப்பிலும் எவ்வளவு முயன்றாலும் நம்மால் ஒன்று சேரவே முடியாது. அதனால் பந்தத்தை இழக்க ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன்!" என்று அரண்யா தெளிவாகச் சொல்ல, "என்னாலும் நம் நேசத்தை தியாகம் என்கிற பெயரில் கொலை செய்ய முடியாது!" என்று வீரனும் உறுதியாகச் சொன்னான்.

அவர்களது பதிலைக் கேட்ட அன்றில் பறவைகளுக்கு மகிழ்ச்சி என்றால் இரண்டாம் தடையில் இருந்த அசரீரிக்கோ பெரும் குழப்பமாகிப் போனது. ஏனென்றால் இதற்கு முன்பு முயன்றவர்கள் அத்தனை பேரும் பந்தத்தையோ உயிரையோ எதையோ ஒன்றை மட்டுமே இழந்தார்கள். ஏனென்றால் அன்றில்கள் இதுவரையிலும் எவரையும் அரண்யா வீரனைப் போலப் பிணைத்ததேயில்லை. அதன் காரணமாகவே, 'இந்த அன்றில்கள் இவர்களின் உயிரை எடுக்க விடாமல் இப்படிச் சதிசெய்து வைத்திருக்கிறதே!' என்று அசரீரி குழம்பித் தவித்தது.

சற்று யோசித்த அசரீரி, "அப்படியானால் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்!" என்று கண்டிப்பான குரலில் கூற, "மன்னிக்கவும்! முன் வைக்கும் காலை பின் வைக்கும் பழக்கம் என்னிடமில்லை. என் முன்னிருக்கும் எரிமலைக் குழம்பில் என் உடல் கலக்கட்டும்; அதன் பயனாகக் கிடைக்கும் செங்கோலினால் எங்கள் நாவலந்தீவு காக்கப்படட்டும்!" என்றான் வீரன்.

"துகிரனும் வைனியும் நம்முடனிருந்திருந்தால் பயணத்தை அவர்கள் தொடரட்டும் என்று உன்னுடன் சேர்ந்து நானும் குதித்திருப்பேனே வீரா! என்னைத் தனிமையில் தள்ளிவிட்டு நீ மட்டும் நிம்மதியாக இறந்து போவாயோ?" என்று அரண்யா அரற்றினாள்.

அவள் அழுகையைப் பார்க்கும் கல்நெஞ்சனுக்கும் கண்களில் ஈரம் சுரக்கும். மெழுகு மணம் படைத்த வீரனுக்கு எப்படி இருந்திருக்கும்? அவள் கண்ணீரில் அவன் மனம் கரைந்தாலும் நாட்டு நலனிற்காக

முன்னே சென்றான். ஆனால் அவனால் அடுத்த அடி எடுக்க முடியாதபடி சங்கிலி தடுக்க, அவன் கைகளில் தானாக ஒரு வாள் தோன்றியது.

"இதோ! மந்திர வாள். இதைக்கொண்டு அந்தச் சங்கிலியைத் துணித்துவிடு! உன் கையில் பச்சை இருக்கும் வரை, உன்னால் உன் உயிரைத் தர முடியாது. நீ மனமுவந்து தராமல் என்னால் உன்னைக் கொலை செய்யவும் முடியாது. அதனால் செங்கோல் வேண்டுமாயின் பந்தத்தை அறுத்துவிட்டு முன்னேறிச் செல்லுங்கள்!" என்று அசரீரி அவசரப்படுத்தியது.

வாளைக் கையில் ஏந்தியவனின் கண்கள் பளிச்சிட்டன. அதைப்பார்த்த அரண்யாவின் இதயத்தை யாரோ பிழிவதைப் போலிருந்தது.

"இப்பிறப்பிலும், ஏழேழ்பிறப்பிலும் நான் உன்னுடையவன் அரண்யா!" என்று கண்களில் கண்ணீரோடு சிரித்தபடியே சூளுரைத்தவன், சங்கிலிக்கு பதிலாக தன் மணிக்கட்டையே வெட்டுவதற்கு வாளை உயர்த்த, அவனைத் தள்ளிக்கொண்டு சிம்மன் எரிமலையில் குதித்து உயிர் துறந்தது; வீரனின் கையிலிருந்த மந்திரவாள் எப்படி வந்ததோ அப்படியே மறைந்து போயிற்று!

சிம்மனின் ஆன்மா பிரிந்த நொடி, அரண்யாவும் வீரனும் மூன்றாம் நிலையில் இருந்தார்கள்! ஆனால் வெற்றிக்குப் பதில் தோற்றுவிட்டதாகவே இருவரும் உணர்ந்தனர்.

வீரனை இமை போலக் காக்கும் சிம்மன் இல்லாமல் போனால் அவனுக்கு நிகழவிருக்கும் தீமைகளை இனி யார் அவனுக்கு உரிய நேரத்தில் உணர்த்தி எச்சரிக்கை செய்வார்கள்?

சிம்மனின் தூய தியாகத்தால் நன்மைக்குப் பதில் கேடே அதிகம் விளையுமோ? ஈசனின் மனதில் என்ன தான் இருக்கிறதோ?! அவனுக்கு மட்டுமே வெளிச்சம்!

## அத்தியாயம் 16

"மூன்றாம் நிலை உயிரறுக்கும் வீரா! கவனம்!" என்று குரல் நடுங்க அரண்யா கூறியபோது, "எது வரினும் இருவரும் சேர்ந்தே எதிர்கொள்வோம்!" என்றான் வீரன்.

"சிம்மனின் தியாகத்தைப் போற்றுவதற்கு வார்த்தைகளே இல்லை வீரா."

"ருத்ரன். ஆருத்ரன். அதுதான் என் பெற்றோர் எனக்கிட்ட பெயர்." என்று மென்மையாகச் சொன்னான் வீரன்.

அவன் பதிலில் அவள் இதழ்கள் விரிந்தன. "ஊருக்கெல்லாம் நீ வீரன், எனக்கு மட்டும் ருத்ரன்." என்று மென்னகையோடு கூறினாள் அரண்யா. அவள் பட்டுக்கரங்களில் முத்தமிட்டு வீரனும் புன்னகை புரிந்தான்.

"சிம்மனின் உயிர்த்தியாகம் அளப்பரியது கண்ணே. அவன் நினைவை போற்றுவதற்கு நமக்கிருக்கும் மிகச்சிறந்த வழி சிவனின் செங்கோலைக் கைப்பற்றி நாவலந்தீவைக் காப்பது தான். அதுமட்டுமின்றி மதுரைக்குச் சென்றதும் சிம்மனுக்கு ஒரு பள்ளிப்படை கோவிலையும் எழுப்பப்போகிறேன்!" என்று சொல்லும் போதே சிம்மனின் நினைவில் வீரனின் கண்கள் நீர் சொரிந்தன.

போரில் வீரத்துடன் போராடி இயற்கையோடு இரண்டறக் கலந்த அரசர்களுக்கும் மாவீரர்களுக்கும், சில நேரம் பேரறிவு பெற்ற புலவர்களுக்கும் சமாதி எழுப்பி அவற்றை பள்ளிப்படை கோவில் என்று அழைப்பது தமிழர் மரபு. ஒருங்கிணைந்த நாற்பத்தியொன்பது நாடுகளைக் கொண்ட நாவலந்தீவைக் காக்கும் பொருட்டு இன்னுயிர் நீத்த சிம்மனுக்கும் அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பள்ளிப்படை கோவிலை எழுப்ப வேண்டுமென்று வீரன் விரும்புவதில் பெரிய ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"ருத்ரா! நாம் இன்னும் ஓரடி முன்னால் எடுத்துவைத்தால் மூன்றாம் சோதனை துவங்கிவிடும். புத்தியை விடுத்து மனதின் பாதை செல்வோம். எது நடந்தாலும் நல்லதாக இருக்கட்டும்! கலங்காதே. சிம்மன் என்றும் நம்முடனேயே இருப்பான். அவன் நினைவுகளை நம்மிடமிருந்து அந்த ஈசனாலும் பிரிக்க முடியாது!" என்று சொல்லி வீரனின் முதுகை மெல்ல வருடிக் கொடுத்தாள் அரண்யா. அதே நேரத்தில் வானில் மிகப்பெரிய மின்னல் ஒன்று தோன்றி மறைந்தது.

"காலம் கனிந்து விட்டது கண்ணே! முன் செல்வோம்." என்று ஒரு நெடிய மூச்சை விட்டுவிட்டு அரண்யாவின் கையைப் பிடித்து முன்னேறினான் வீரன்.

வீரனும் அரண்யாவும் முதலடி எடுத்து வைத்திட, கண நேரத்தில் அவர்கள் கண்முன்னே தெரிந்த அனைத்தும் மாயமானது. ஒரு சிறு புல் கூட இல்லை. மனிதரைத் தவிர உலகத்திலுள்ள பொருட்களையெல்லாம் எடுத்து அப்புறப்படுத்திவிட்டு வெறும் வெள்ளை வண்ணம் பூசினால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அந்த இடம்.

'ஏன் இப்படியானது?' என்று வீரன் ஆராயத்துவங்கிய மறுநொடி தலையைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்துவிட்டான்.

அவன் மூளைக்குள் ஒரே நேரத்தில் பலவித குரல்கள் கேட்டன. குரல்கள் நின்றதும் காதைக் கிழிக்கும் சப்தங்கள் கேட்டன. பிறகு மறுபடியும் குரல்கள் கேட்டன. அதன் பயனாய் விளைந்த தலைவலி தாளாது அவன் அலற ஆரம்பித்தான்.

நரம்புகள் புடைத்து அவன் நெற்றி துடித்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவன் உடல் விறைப்புற்று கண்கள் மேல் நோக்க, கைகால்கள் இழுக்க ஆரம்பித்தன.

"ஈசா! ஏனிந்த சோதனை எங்களுக்கு?" என்று வீரனை அமைதிப்படுத்தும் வகையறியாது அழுது அரற்றினாள் அரண்யா.

"கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

என்று இரு கரம் கூப்பி ஆதியோகியான சிவபெருமானை அவள் வணங்க, மெல்ல மெல்ல வீரனின் வலிப்பு குறைந்து ஒரு கட்டத்தில் நின்றும் போனது. உடல் வலுவெல்லாம் வடிந்து போக, மிகுந்த சோர்வுடன் எழுந்து அமர முயற்சி செய்தான் வீரன். அவனுக்கு உதவினாள் அரண்யா.

அப்போது இரண்டாம் நிலையைப் போலவே, இங்கும் ஒரு அசரீரியின் குரல் கேட்டது. "ஆழ் மனதின் ஒளியில் காண வேண்டியவற்றை வெறும் மேலோட்டமான புத்தக அறிவினால் தேட முயற்சித்தால் எதைத்தான் உங்களால் சரியாகக் காண முடியும்? மனதின் தெளிந்த சிந்தையே புத்தியாகிறது. அதைத் தெரிந்து கொள்ளாது நான்கு பாடங்களை மனனம் செய்தால் வருவது தான் புத்தி என்று நினைக்கிறீர்கள்! உங்களைச் சொல்லி என்ன பயன்? உங்கள் கல்வியின் குறைபாடு அது! ஈசன் ஒரு பெரும் புதிர். அந்தப் புதிரை விடுவிக்கும் திறனிருந்தால் மட்டும் முன்னே செல்லுங்கள். இல்லை வந்த வழியே திரும்புங்கள். உங்கள் உயிராவது மிஞ்சும்!" என்று சொல்லி மறைந்தது அக்குரல்.

"ஈசனே! நாங்கள் வந்த காரியம் நீயறியாததா? இந்த நாவலந்தீவு உனக்கும் வீடல்லவா? அதைக் காக்கும் கடமை எங்களைப் போல உனக்கும் உண்டல்லவா? எங்கள் பிழை பொறுத்து வழி அருளுவாய் வேந்தே!" என்று வீரன் இறைஞ்ச, அரண்யாவும், "நடந்தவையோ நடப்பவையோ எதுவும் உனக்குத் தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை அப்பா! சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து மக்கள் நலனிற்காக மட்டுமே நாங்கள் இங்கே நிற்கின்றோம்.

எங்களுடன் துணை நிற்பது உன் கடமை!" என்றாள்.

ஐந்து நிமிடம் பத்தாகியது. ஆனால் எந்த மாற்றமுமின்றி அப்படியே அவர்கள் நின்றார்கள். எந்த வழியும் தெரியாவிட்டாலும் திரும்பிப் போக மட்டும் இருவரும் நினைக்கவேயில்லை. பல யுகம் போலத் தோன்றிய காலம் கழிய, அந்த இடமே ஜோதி மயமாகியது. கண் கூச, இருவரும் கண்களை மூடிக்கொண்டனர். அவர்கள் கண்களைத் திறந்த போது ஒரு கானகத்தில் நின்று கொண்டிருந்தனர்; அவர்கள் முன்னால் மூன்று கதவுகள் இருந்தன.

"அரண்யா! இந்த மூன்று கதவுகளில் ஏதோவொரு கதவின் பின்னே தான் சிவனின் செங்கோல் இருக்க வேண்டுமென்று என் மனம் சொல்கிறது." என்றான் வீரன்.

"நிச்சயமாக ருத்ரா. ஆனால் எந்தக் கதவென்பதை எப்படி அறிவது?" என்று கேட்டாள் அரண்யா.

"ஈசனின் மீது முழு பாரத்தையும் போட்டுவிட்டு ஏதோவொரு கதவைத் திறக்க வேண்டியதுதான். தனக்காக இல்லாமல் பிறருக்காக யாசிப்பவனுக்கு ஈசன் உதவுவான். நமக்குப் பாதை காட்ட வழித்துணையாக அவனே வருவான்!" என்று நம்பிக்கையோடு பேசிய வீரனின் மீதும் ஈசனின் மீதும் பெருநம்பிக்கை பிறந்தது அரண்யாவிற்கு.

"ஈசா போற்றி! எமை ஆளும் வேந்தே போற்றி போற்றி!" என்று உள்ளம் உருக கல்லும் கனியும் வண்ணம் ஈசனைத் துதித்தார்கள் இருவரும். பிறகு மூன்று கதவுகளையும் ஒன்றன் பின் ஒன்றாகப் பார்த்தார்கள்.

"இரண்டாம் கதவு!" என்று ஒரே நேரத்தில் வீரனும் அரண்யாவும் சொல்ல, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

இரண்டாம் கதவில் கை வைத்ததுமே அது தானாகவே திறந்துகொண்டது. வெளியில் இருக்கும் வெளிச்சம் என்பது துளியும் இல்லாது இருள் சூழ்ந்த பாதையே அங்கிருந்தது. வெப்பம் என்பது மருந்திற்கும் இல்லாது, பனிக்காற்றே வீசியது. இருப்பினும் ஐயமோ அச்சமோ கொள்ளாது உள்ளே சென்றனர் இருவரும். உடனே வந்த வழி மறைந்து போயிற்று.

நட்சத்திரங்களின் சன்னமான ஒளி கூட இல்லாமல் கறுமைப் போர்வையைப் போர்த்தியிருந்தது அவ்வழி. குளிரில் அரண்யாவின் உதடுகள் தானாகத் தந்தியடிக்க, வீரன் அவளை அருகில் இழுத்துக் கொண்டான். இருவரின் உடல் வெப்பத்தைத் தவிர எந்தவொரு

வெப்பமும் இல்லாதிருந்தாலும், "ஈசா! ஈசா!" என்று உச்சரித்துக்கொண்டே சென்றார்கள். அவர்களைச் சுற்றி ஒரு புகைப்படலம் இருந்ததை கவனிக்கும் நிலையில் அவர்கள் இல்லை!

நேராகச் சென்றுகொண்டிருந்த பாதை ஓரிடத்தில் இரண்டாகப் பிரிந்தது. இடமா வலமா என்ற கேள்வியே இல்லாது பதுமை போலவே இருவரும் இடப்புறத்தில் திரும்பினர். பொம்மலாட்ட பொம்மைகள் போல அவர்களை ஆட்டுவிப்பவனின் விருப்பப்படி ஆடினார்கள். வீரனிடமோ அரண்யாவிடமோ எந்த வழியில் சென்றீர்கள் என்று யாராவது கேட்டிருந்தால் நிச்சயமாக அவர்களால் பதில் சொல்லியிருக்க முடியாது. மதிமயக்கி வனமென்ற பெயர் அவ்விடத்திற்கு அத்தனை சரியாக பொருந்திப் போயிற்று. இருவரின் அறிவும் முற்றிலுமாக மழுங்கி ஏதோ ஒரு சக்தியின் வழிகாட்டுதலின்படியே பயணத்தைத் தொடர்ந்தார்கள். அவர்கள் சென்றுகொண்டிருந்த பாதை திடீரென ஒரு வாயிலின் முன்னே அவர்களைக் கொண்டு சென்று நிறுத்தியது.

"நில் அங்கே! வந்த நோக்கம் பகர்!" என்ற கட்டளைக் குரல் கேட்டது.

"நம் நாவலந்தீவை அழிவுப் பாதையிலிருந்து காக்கும் வழி தேடி வந்திருக்கின்றோம்!" என்று அரண்யா சொன்னாள்.

"கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் சொன்னால் உபாயம் கூறுவேன்!" என்று புதிர் போட்டது குரல்.

"தெரிந்தவரையில் சொல்ல முயற்சிக்கிறோம்!" என்றான் வீரன்.

"நல்லது. முதல் கேள்வி, அரண்யா! நீ நாடாளும் யோகம் பெற்றவள். உன் உதிரமே உனக்குக் கூற்றாக மாறினால் என்செய்வாய்?" என்று அந்தக் குரல் கேட்டதும் அரண்யா திடுக்கிட்டுப் போனாள்.

'என் உதிரமே எப்படி என்னைக் கொல்லும்?' என்று முதலில் விழித்தவள், பிறகு பதில் கூறினாள். "பிறக்கும் அனைத்து உயிர்களும் ஒரு கட்டத்தில் இயற்கையோடு இணைந்துதான் ஆகவேண்டும். அறத்தின் வழியே என் உயிர் பிரியுமானால் அதை எந்தத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்வேன். ஆனால் வஞ்சகத்தின் வழி நின்றால் பகை முடிப்பேன்." என்று தைரியமாகச் சொன்னாள் அரண்யா.

"காலம் வரும் போது நீ சொல்லிய சொல் உனக்கு நினைவிருந்தால் சரி!" என்று மறுபடியும் புதிர் போட்ட குரல், வீரனிடம்

அடுத்த கேள்வியைக் கேட்டது.

"சுவர்க்கம் நரகம் என்பது எங்கிருக்கிறது? அவற்றின் பொருள் கூறு!"

"ஐயா! சுவர்க்கம் நரகம் என்பது எங்கோ இல்லை. இங்கே, இந்த நிமிடம் நம்முள்ளேயே இருக்கிறது. தன்னைச் சார்ந்த, தனக்குப் பிரியமானவர்களுடன் இருக்குமிடம் சுவர்க்கம். தனக்கு விருப்பமில்லாத இடத்தில் பிடிக்காத நபர்களுடன் இருக்குமிடம் நரகம்." என்று பதிலளித்தான் வீரன்.

"பலே! அருமை!" என்று தன்னையும் மீறி வீரனின் பதிலை ரசித்த குரல், "மூன்றாவது கேள்வி! ஈசனை எங்கே துதித்தல் முழுமையான பலனைத் தரும்?" என்றது.

"உள்ளம் பெருங்கோ யிலூனுடம் பாலயம்

வள்ளல் பிரானார்க் குவாய்கோ புரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க் குசீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கு" என்றாள் அரண்யா.

"ஒவ்வொரு மனிதனின் உடலும் கோவில் போன்றது. அவன் உள்ளமே சிவபெருமான் எழுந்தருளுவதற்கு ஏற்ற கருவறையாகும். இறைவனை போற்றுவதற்கும் அவனை வழிபடுவதற்கும் உதவும் வாய் கோபுர வாசலாகும். சிவனை நினைத்து ஞானம் அடைந்தவர்களுக்குத் தம் சீவனே சிவனென்னும் உண்மை புரியும். அப்படி உணர்ந்தவர்களுக்குத் தம் ஐந்து புலன்களுமே விளக்குகளாகும். அதனால் சிவபெருமானை எங்கோ இருக்கும் கோவில்களில் வழிபடுவதை விட ஒவ்வொருவரும் தத்தமது மனத்தில் இருத்தி வழிபடுவதே முழுமையான பலனைத் தரும்." என்று விளக்கமாக பதில் கூறினான் வீரன்.

"அபாரம் குழந்தைகளே! உங்கள் பதில்கள் எமக்குத் திருப்தி அளிக்கின்றன. இப்போது செங்கோலை அடையும் உபாயத்தை சொல்கிறேன். கவனத்துடன் கேளுங்கள். உங்கள் எதிரிலிருக்கும் வாயிலைக் கடக்கும் வழியில் பொக்கிஷங்கள் பலவுண்டு. வந்த வேலை மறந்து அவனருளை விட்டு பொருள் மீது நாட்டம் கொண்டீர்களென்றால் அக்கணமே ஆலகால விஷத்தை உங்கள் மீது பாய்ச்சி விடுவோம். கவனம் சிதறாமல் வாயிலைக் கடந்தால் ஒரு கல்மேடை வரும். அங்கே அமர்ந்து தான் நம் ஈசன் நான்மறைகளை அவன் முதன்மைச் சீடர்களாகிய எங்கள் நால்வருக்கும் கற்பித்தான். அந்த மேடையின் மீதிருக்கும் பல பொருட்களில் ஒன்று தான் நீங்கள்

தேடி வந்திருக்கும் செங்கோல். மற்றவை உங்கள் மனதை திசை திருப்புவதற்காக வைக்கப்பட்டிருக்கும் போலிகள். உங்களுக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும். சரியான பொருளைத் தேர்ந்தெடுத்தால் அடுத்த கட்டத்திற்கு தானாக நீங்கள் அனுப்பி வைக்கப்படுவீர்கள். இல்லாவிட்டால் கொற்றவை தேவியின் பாதகமலங்களில் உங்களைச் சேர்பித்துவிடுவோம். தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!!!" என்று ஓங்கி ஒலித்த குரல் முற்றாக நின்று போனது; மயான அமைதி அங்கே குடிகொண்டது.

எதிரே இருக்கும் வாயிலில் அவர்கள் நுழைந்ததும் அந்தப் பாதை மெல்ல நீல நிறத்திற்கு மாறியது. வீரன், அரண்யாவின் கால்களில் பொன்னும் மணியும், வைரமும் வைடூரியமும் குவிந்தன. ஆனால் அவற்றைப் பார்த்து துளி கூட அரண்யாவிற்கு ஆசை தோன்றவில்லை. நகையைப் பார்த்து சலனப்படாதவர்களின் முன்பு வியத்தகு போர்க்கருவிகள் தோன்றின.

பருவமங்கையின் புருவங்களையும் நாணச் செய்யும் விற்களின் அழகில் அரண்யா மயங்கினாள் என்றால் ஆளுயர இருக்கும் ஒரு நெடுவாளின் மீது வீரனுக்குப் பெருங்காதல் தோன்றியது.

"ஒரு கைதேர்ந்த கருமானால் மட்டுமே இப்படி பார்த்துப் பார்த்து செய்திருக்க முடியும்!" என்று வீரனும் "இத்தகைய போர்க்கருவிகள் இருப்பவருக்கு எதிரிகள் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை!" என்று அரண்யாவும் வியந்தபடியே ஒரே நேரத்தில் கைநீட்ட, இருவரின் கைகளும் முட்டிக்கொண்டன. அதன் பிறகே தங்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவே இப்பேற்பட்ட ஆயுதங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது இருவருக்கும் புரிந்தது. ஆலகால விஷத்தைப் பற்றி அசரீரி எச்சரித்ததும் அவர்களுக்கு ஞாபகம் வந்தது.

"கவனம் சிதறாமல் செல்ல வேண்டும் ருத்ரா!" என்று தனக்கும் சேர்த்து அரண்யா சொன்னதற்கு சரியென்று தலையாட்டினான் வீரன்.

பாதை முடியும் வரை மறந்தும் வேறெங்கும் பார்வையைச் செலுத்தவில்லை இருவரும். கடிவாளமிட்ட குதிரைகளாக முன்னே சென்றுகொண்டேயிருந்தனர். இறுதியில் அவர்கள் தேடி வந்த செங்கோலைச் சுமந்துகொண்டு அந்தக் கல் மேடை காட்சியளித்தது.

கல் மேடையின் பின்னால் மிகப்பெரிய ஒரு சிவலிங்கம் ஈஸ்வர சொரூபமாக இருந்தது. லிங்கத்தின் தலைக்கு மேல் ஒரு கலயம் தானாக நீரூற்றிக் கொண்டிருக்க, திருநீறும் வில்வ மாலையும் அணிந்து, சாம்பிராணி மற்றும் அகிலின் நறுமணப் புகை சுற்றிலும் கமழ,

அசாத்திய அமைதியோடிருந்தது அந்த மகாலிங்கம். அதைக் கண்டதுமே கரம் கூப்பிக் கண்ணீர் மல்க இருவரும் வந்த வேலை மறந்து நின்றனர்.

அப்போது திடீரெனத் தோன்றிய ஒலியும் சிரிப்புச் சத்தமும் வீரன் மற்றும் அரண்யாவின் கவனத்தைக் கலைத்தது.

"என்னப்பா இது! வந்த வேலை மறந்து போயிற்றா?" என்று சிரித்துக்கொண்டே ஒரு குரல் கேட்டது. முன்பு கேட்ட குரல்களில் இருந்த அதிகாரம் ஏனோ இந்தக் குரலில் இல்லை. ஆனால் அவைகளோடு ஒப்பிடுகையில் இக்குரலில் ஏதோ காந்த சக்தி இருப்பது போலவே இருவருக்கும் தோன்றியது.

"ஈசா! அம்மையப்பா! காண்பது உன் உருவே! கேட்பது உன் குரலோ? எங்கள் கலி தீர்க்க நீயே வந்தாயா?" என்று கண்கள் கசியக் கேட்ட அரண்யா கீழே விழுந்து பணிந்தாள். வீரனும் அவளைப் பின்தொடர்ந்து பணிந்தான்.

"மனம் என்னும் மந்திரச் சாவி கொண்டு திறந்தால் உண்மை அனைத்தும் புலனாகுமம்மா! எழுந்திரு! நாம் பேச வேண்டியது அதிகம் இருக்கிறது. ஆனால் நேரமோ மிகக்குறைவு!" என்று கூறியது ஈசனே தான்.

'எதைக்கண்டும் ஆச்சரியம் கொள்ளாதே!' என்று தீசகர் கூறியது எவ்வளவு உண்மை என்று அரண்யா மறுபடியும் வியந்தாள். 'ஈசனைக் காண என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்!' என்ற நினைவில் அவள் மேனி சிலிர்த்தது; கண்கள் பணித்தது.

"காலச்சக்கரம் இங்கே சுழல்வதைப் போல வெளியே சுழல்வதில்லையம்மா. வெளியே சென்றதும் உனக்கான உயிரொன்று காத்திருக்கிறது. முடிந்தவரை போராடு மகளே. இப்பிறப்பில் உன் கடமை முடியாது போனாலும் ஏதோவொரு பிறப்பில் உன் கடனை நீ தீர்த்துக்கொள்வாய்!" என்று சொல்லிவிட்டு வீரனை அழைத்தார் ஈசன்.

"வீரா! நீ அரும்பெரும் செயல்கள் புரியப் பிறந்தவன். ஆனால் பாசத்திற்கும் பந்தத்திற்கும் நீ அடிமை. சரி, போகட்டும்! இந்திர ரகசியத்தை உருவேற்றும் மந்திரத்தை கடைசியாக எப்போது உச்சரித்தாய்?" என்று வினவினார் ஈசன்.

"இன்று காலை கரை ஒதுங்கியவுடன் இந்திர ரகசியத்திற்கு உருவேற்றினேன் வேந்தே!" என்று பதிலளித்தான் வீரன். ஏனென்ற கேள்வி அவன் தொண்டை வரை வந்து வாய் வழியே வெளியேறவில்லை.

"ஏனென்று திரும்பும் போது தெரியுமப்பா. நீங்கள் வந்த வேலையை முடித்து விட்டு நேரம் வரும் போது என்னை வந்தடைவீர்களாக!" என்று ஆசி கூறி ஈசன் மறைந்து போனார்.

"ருத்ரா! இதென்ன புதிய புதிர்!" என்று ஈசனின் கூற்றிற்கு பொருள் புரியாது அரண்யா தவித்தாள்.

"ஈசனே என்றும் பொருள் விளங்காப் பெரும்புதிர் தானே!" என்றான் வீரன்.

சிவனை மனதினில் இருத்தியபடியே இருவரும் கல்மேடையின் முன்பு நின்றனர். "ஒரே ஒரு சந்தர்ப்பம் என்று மூன்றாம் நிலை அசரீரி கூறியதை நினைவில் வை!" என்றான் வீரன்.

சரியென்று தலையசைத்த அரண்யா அங்கிருந்த பலவகை பொருட்களைப் பார்வையிட்டாள். தந்தத்தாலான ஒரு மந்திர தண்டம், வைரங்கள் இழைத்த ஒரு பொன் பிரம்பு, உடுக்கையுடன் பிணைத்த ஒரு திரிசூலம், தேக்கில் கடைந்தெடுத்த ஆளுயரக்கோல் இவற்றுடன் சம்மந்தமே இல்லாமல் ஒரு சாதாரண குச்சியும் இருந்தது.

"மொத்தம் ஐந்து பொருட்கள் இருக்கின்றன. இவற்றில் எதுவென்று நீ நினைக்கிறாய்?" என்று வீரன் அரண்யாவிடம் கேட்டான்.

"இதோ! இங்கிருக்கும் இந்தக் குச்சி தான் சிவனின் செங்கோலாக இருக்கவேண்டும்!" என்று யோசியாமல் சொன்னவள் கைகளால் அதை எடுத்ததும், அரை நொடியில் மற்ற அனைத்தும் மறைந்து இரண்டாம் நிலைக்கே திரும்பினார்கள் இருவரும்.

சரியானதைத்தான் தேர்ந்தெடுத்தோமா என்று வீரன் புரியாது விழிக்க, அரண்யா ஆனந்தக் கூத்தாடினாள். "சரியாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் ருத்ரா! இல்லையென்றால் இந்நேரம் நாம் கொற்றவைக் கோவிலில் அல்லவா இருந்திருப்போம்! நாம் வந்தவழியே திரும்பிச் சென்றால் மட்டுமே செங்கோலை நம்மால் வெளியில் எடுத்துச் செல்ல முடியும் என்று குருதேவர் தீசகர் சொன்னதை நினைவில் கொள். எந்த வித எண்ணமும் தோன்றாமல் மனதைக் கட்டுப்படுத்து. இல்லாவிட்டால் செங்கோல் கைநழுவிப் போகும்!" என்று வீரனுக்கு எச்சரிக்கை செய்து விட்டு வலது கையால் செங்கோலை உயரத் தூக்கியபடி இடது கையால் வீரனைப் பிடித்தபடி நடந்தாள் அரண்யா.

"எப்படிச் சரியாகத் தேர்ந்தெடுத்தாய் அரண்யா?" என்று வியப்புடன் வீரன் வினவினான்.

"இது சாதாரண குச்சியன்று. கல்லாலமரத்தின் ஒரு

கிளையாகும். ஈசன் கல்லால மரத்தோடு முதல் தொடர்புடையவனாயிற்றே. அதுமட்டுமின்றி எளிமை விரும்பியான நம் சிவன் கண்ணைப் பறிக்கும் எந்தவொரு பொருளையும் உபயோகித்திருக்க மாட்டார்!" என்றாள்.

"நான் திரிசூலமாக இருக்குமென்று ஐயம் கொண்டேன்." என்றான் வீரன்.

"திரிசூலமும் அதனுடன் கூடிய உடுக்கையும் சிவன் கண்டுபிடித்தவைகள். அதனால் அவைகளை செங்கோலாகப் பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பதே என் கணிப்பாக இருந்தது. அது சரியாகவும் அமைந்ததற்கு ஈசனுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்!" என்று முறுவலித்தாள் அரண்யா. அவளைப் பார்த்து வீரனும் புன்னகை பூத்தான்.

நேர் பாதை வழியாக செல்லவேண்டும் என்பது நினைவிருந்த காரணத்தால் பாதை தவறாது அடி மேல் அடி எடுத்து உறுதியாக நடை பயின்றாள் அரண்யா. கொஞ்ச தூரம் சென்றதுமே பைசாசங்கள் தங்கள் வேலையைத் துவங்கின. பலநூறு ஆண்டுகளாகத் தாங்கள் அரும்பாடுபட்டு அடைகாத்து வைத்திருந்த செல்வத்தைக் கவர்ந்து செல்லும் இரு மானுடர்கள் மீதும் எல்லையில்லாத ஆத்திரம் வந்தது அவைகளுக்கு. அரண்யாவின் முடியைப் பிடித்து இழுக்கவும், அவள் மேனியைக் கீறவும் பெருமுயற்சி செய்தன. போகும் போது சிம்மன் உடனிருந்த காரணத்தாலும் அன்றில்களின் ஆசியினாலும் பைசாசங்களால் வீரனையும் அரண்யாவையும் தீண்ட முடியாது போனது. ஆனால் செங்கோலைக் கைப்பற்றி அவர்கள் திரும்பும் வழியில் முதலில் தீண்ட முடியாதிருந்த பூதகணங்கள், நேரம் ஆக ஆக வலுப்பெற்று வீரனையும் அரண்யாவையும் துன்புறுத்தத் துவங்கின.

ஐம்பூதனார் சொல்லிக்கொடுத்திருந்த மந்திரங்களில் ஒன்றால் கூட அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் என்ன தான் காயப்படுத்தினாலும் அவைகளால் வீரனையும் அரண்யாவையும் பாதை மாற வைக்க முடியவில்லை. தன்னைத் தாக்க வரும் அரூபத்தின் முன் செங்கோலைக் காட்டினால் மட்டுமே அவைகள் பயந்து பின் சென்றன. மற்ற நேரமெல்லாம் கண்டபடி காதுகளில் அலறியும் உடல் முழுக்க கீறிக்கொண்டும், அவைகளுக்குள்ளேயே ஆக்ரோஷமாக ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டும் பார்ப்பவர் மனதினில் கிலியை அதிகரித்துக் கோரத்தாண்டவம் ஆடின.

முதலில் நெஞ்சுரத்தோடு சமாளித்தவர்களுக்குப் போகப்போக பெரும் கஷ்டமாகிப் போனது. முன்னால் ஒரு அடி எடுத்து வைத்தால்,

பின்னால் பத்தடி தூரம் தள்ளிப் போனார்கள். முடிவே இல்லாமல் பாதை நீண்டு கொண்டேயிருந்தது. வரும் போது தெரியாத தூரம் இப்போது பன்மடங்காகத் தெரிந்தது.

நேரம் செல்லச் செல்ல அயர்ந்து களைத்துப் போனார்கள். அங்கேயே அமர்ந்து விடுவோமா என்று கூட இருவரும் ஆலோசித்தனர். ஆனால் நடப்பதை நிறுத்தினால் நிச்சயம் வீடு திரும்ப முடியாது என்று இருவரின் உள்ளுணர்வும் எச்சரிக்கை செய்ய, மெதுவாக என்றாலும் நடப்பதை நிறுத்தாமல் தொடர்ந்தனர்.

வைனி அவர்களுக்குக் கொடுத்த வேரின் வீரியம் குறைய ஆரம்பித்தது என்பதன் அறிகுறியாக வீரனுக்குத் தாகம் எடுக்க ஆரம்பித்தது. அரண்யாவின் வயிற்றினுள் ஏதோ பிசைவது போன்ற உணர்வு தோன்ற கண்ணில் பட்ட எல்லாவற்றையும் கபளீகரம் செய்யவேண்டும் போலிருந்தது அவளுக்கு!

"அரண்யா! எனக்குப் பசி தாகம் எடுக்கத் துவங்கிவிட்டது." என்று பைசாசங்களின் இரைச்சலின் நடுவே வீரன் தன்னை மறந்து கத்த, அவர்களைச் சூழ்ந்திருந்த பைசாசங்கள் ஒரு கணம் அப்படியே உறைந்தன. பின் மறைந்தும் போயின.

"ஈசா! நல்லவேளை, இனி பிழைத்து விடுவோம்!" என்று சொல்லி அரண்யா நடக்க, திடீரென அவர்கள் முன்னால் தலைவாழை இலை போட்டுப் பத்துவகை வெஞ்சினத்தோடு பாயசமும் மணமணக்க அறுசுவை உணவு தோன்றியது. அதனைப் பார்த்த வீரனின் கட்டுப்பாடு பறந்து போக, அனிச்சை செயல் போல அரண்யாவின் கையை விட்டுவிட்டான். அவ்வளவு தான், மறைந்திருந்த அத்தனை அரூப சக்திகளும் தங்களின் கோர முகத்துடன் தோன்றி வீரனின் உடலை பதம் பார்க்கத் துவங்கின.

இப்படியே விட்டால், வீரனை அவைகள் உயிருடன் கொன்று புசித்து ஒரு பைசாசமாகவே மாற்றிவிடும் என்பதை உணர்ந்து அஞ்சிய அரண்யா, மறுபடியும் வீரனின் கைப்பிடிக்கப் போராடினாள். முன்பு வீரனின் உயிர் காத்த பொன்சங்கிலி கூட இப்போது உதவிக்கு வராத தன்னிலையை நினைத்து நினைத்து அழுது கரைந்தாள்.

"ருத்ரா! வீரா! வீரா!" என்று அரண்யா துடிக்க, "என்னைப் பற்றிக் கவலை கொள்ளாமல் முன் செல். நாவலந்தீவைக் காப்பாற்று!" என்று பேசமுடியாமல் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் வீரன்.

"மாட்டேன்! உன்னை ஒருக்காலும் நான் விட்டு விட மாட்டேன்!" என்று அரண்யா புதிய உத்வேகத்தோடு சொல்ல, கண்களை மூடி சூட்சுமத் தம்பனத்தின் பல்வேறு அதிசக்தி வாய்ந்த

மந்திரங்களை தன் உயிர்சக்தியோடு சேர்த்துப் பிணைத்து உச்சரிக்க ஆரம்பித்தாள். அவள் சொல்லும் மந்திரங்களின் ஒலியின் உக்கிரத்தால் தாக்கப்பட்ட பைசாசங்கள் பலவும் வீரனை விட்டுவிட்டு தலை தெறிக்க ஓடின.

வீரன், மீதியிருக்கும் பைசாசங்களை உதறிவிட்டு அரண்யாவை நோக்கி ஓடி வரவும், ஏற்கனவே பசியால் பலவீனமாக இருந்தவள் மயக்கமுறவும் சரியாக இருந்தது. அரண்யா மூர்ச்சையாவதைப் பார்த்துக்கொண்டிருந்த பைசாசங்கள் மறுபடியும் அவர்களைத் தாக்க வர, வேறு வழி தெரியாது, சிவனின் செங்கோலைப் பயன்படுத்த முடிவு செய்தான் வீரன்.

'எங்களை எந்த வித அரூபமும் அண்டாத ஒரு பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பித்து விடு!' என்று செங்கோலிடம் அவன் வேண்ட, அடுத்த கணமே சிறு அருவி தோன்றும் ஒரு மலை முகட்டில் அரண்யாவும் வீரனும் இருந்தார்கள். எங்கிருந்தோ வரும் மூலிகை கலந்த நீரோடையே அருவியாக கொட்டுகிறது என்பதை அறிந்த வீரன், ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்து அரண்யாவின் முகத்தில் தெளித்தான்.

நீரின் சில்லுப்பு அரண்யாவின் மயக்கத்தைத் தெளிவித்தது. பக்கத்திலிருந்த வீரனைப் பார்த்து, "நாம் எங்கிருக்கிறோம்? செங்கோல் எங்கே?" என்று பதறினாள்.

"நம்மைக் காக்க செங்கோலை உபயோகிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை கண்மணி!" என்று சொல்லி நடந்தவற்றை விளக்கினான் வீரன். அவன் கூறுவதை பொறுமையோடு அரண்யா கேட்டுக்கொண்டிருக்க, "சிம்மனின் தியாகமும் நம்முடைய உழைப்பும் ஒரு சேர வீணாகி விட்டதே!" என்று வருந்தினான் வீரன்.

"கலங்காதே! செங்கோல் மந்தரைமலையைத் தாண்டக் கூடாது என்பதில் சித்தர்கள் பலர் கண்ணும் கருத்துமாய் வேலை செய்திருக்க சிறுவர்களான நாம் நம்மால் முடிந்த அளவு முயலலாமே தவிர எப்படி வெற்றி பெற முடியும்? முடிந்து போனதை எண்ணித் துக்கப்படுவதில் எந்த அர்த்தமுமில்லை; ஆதாயமுமில்லை. நாம் உடனே மதுரைக்குச் செல்ல வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்குவோம் வா!" என்று சொல்லி அரண்யா வேகமாக எழுந்திரிக்க, அப்படியே தலைசுற்றிக் கீழே விழப்போனாள். வீரன் மட்டும் அவளைத் தாங்கியிருக்கவில்லை என்றால் பக்கத்திலிருந்த பாறையில் மோதி அவள் தலை சிதறியிருக்கக்கூடும்.

"பசியால் மிகவும் சோர்வுற்றிருக்கிறாய் கண்ணே! ஓய்வெடுத்துக்கொள். இதோ நொடியில் வந்து விடுகிறேன்!" என்று கூறி

வீரன் உணவு தேடிப் பக்கத்தில் சென்றான்.

வீரன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அவளது வலப்புறம் புரவியின் மீது முகத்தை மறைத்துக்கொண்டு பாய்ந்து வரும் யாரையோ வீரர்கள் பலர் குதிரையில் துரத்திக்கொண்டு வருவதைப் போலிருந்தது. அவள் கண்களுக்கு எட்டும் தூரம் அவர்கள் வந்ததும், முதலாமவனை மற்ற குதிரை வீரர்கள் சூழ்ந்து கொண்டு சண்டையிட ஆரம்பித்தனர். அவனும் போர்க்கலைகளில் வல்லவன் தான் போல. குதிரையில் இருந்தபடியே மற்றவர்களை அனாயசமாகப் போரிட்டு தள்ளிவிட்டுக் கொண்டிருந்தான். பாறை ஒன்றின் பின்னே அரண்யாவை வீரன் படுக்கவைத்திருந்ததால் அவர்களால் இவளைக் கவனிக்க முடியாமல் போனது.

போரிடுபவனை உற்று கவனித்தவளுக்கு, அவனை இதற்கு முன்பு எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது. ஆனால் முகத்தை மூடியிருந்ததால் அவன் யாரென அறிந்துகொள்ள அவளால் இயலவில்லை. அதனால் யாரென்று பக்கத்தில் சென்று பார்க்கலாம் என்ற யோசனையோடு துவளும் கால்களுடனேயே தள்ளாடியபடியே சென்றாள் அரண்யா. போரிடும் போது அவர்களின் பேசிய வார்த்தைகள் இப்போது அரண்யாவிற்குத் தெளிவாகக் கேட்டது.

"மரியாதையாக அந்தக் கிழவன் எங்கேயென்று சொல்லிவிடு. எங்கள் பேரரசி அன்பே வடிவானவர். உனக்கு உயிர்ப்பிச்சை தருவார்கள்!" என்று சொல்லிக்கொண்டே வாள் வீசினான் வீரன் ஒருவன்.

"உங்கள் பேரரசி? எப்படி எப்படி? அன்பே வடிவானவளா? நல்ல வேடிக்கை!" என்று ஏளனமாகச் சிரித்துவிட்டு அவன் கழுத்தைச் சீவினான் அவன்.

*'பேரரசியா? என் அன்னையையா அவமானப்படுத்துகிறான்?'* என்றெண்ணியவளுக்குள் சினம் மிகுந்தது. அவனை எப்படியாவது தாக்க வேண்டுமென்று முடிவு செய்தவள், பக்கத்திலிருந்த சிறிய பாறை ஒன்றைக் கையில் ஏந்தினாள். அவள் அவன் தலையை நோக்கி வீசுவதற்குள் மீதி இருந்த இரண்டு வீரர்களின் கதையையும் முடித்தவன், கையில் பாறையுடன் முகத்தில் கோபம் கொப்பளிக்க நிற்கும் அரண்யாவைப் பார்த்தான்.

வியப்பில் புருவங்கள் உயர, அவன் கண்கள் சிரித்தன. ஆனால் இவை எதையும் கண்டுகொள்ளும் மனநிலையில் இல்லாத அரண்யா, அவன் மீது பாறையை எறிந்துவிட்டாள். ஏற்கனவே அவள் வலுவிழந்திருந்த காரணத்தால் அவன் தலையைத் தாக்குவதற்கு பதில்

அவன் குதிரையின் கால்களைத் தாக்கியது அவளெறிந்த பாறை. வலி தாளாமல் குதிரை நிலை தடுமாற, அதன் மேலிருந்தவன் மலை உச்சியிலிருந்து கீழே விழுந்தான்.

விழுந்தவன் சும்மா விழாது, "அரண்யா!" என்று கத்திக்கொண்டே விழுந்தான். அவன் குரல் அவன் யாரெனத் தெரிவிக்க, பதறித் துடித்தவள் அவன் விழுந்த இடத்தை நோக்கி ஓடினாள். வயிறு புரட்டிக்கொண்டு வந்தது. மனதினில் ஏதேதோ புதிதான உணர்வுகள் தோன்றி அவளை மெள்ள நடக்குமாறு பணித்தது. ஆனால் எதையும் கவனிக்கும் நிலையில் அவள் இல்லை. பைத்தியக்காரி போலத் தலைதெறிக்க ஓடியவள், அங்கே ஒரு மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருப்பவனைக் கண்டாள்.

"உன் சகோதரனை இப்படித்தான் வரவேற்பாயா?" என்று உயிர் போகும் நிலையிலும் அவளை லகுவாகப் பரிகாசித்தான் அவன்.

"என் அன்னையைப் பழித்த உன்னைச் சகோதரன் என்று எப்படிச் சொல்வது?" என்று வெறுப்புடன் கூறினாலும் அவன் மேலேறி வருவதற்கு வாகாகக் கையை நீட்டினாள் அரண்யா.

"அன்னையைப் பழித்தேனா?" என்று யோசனையுடன் கூறியவன் பெரும் சிரமத்துக்கிடையில் அவள் கையைப் பற்றிய நொடியில் தான் அவள் எதைச் சொல்கிறாளென்று புரிந்து கொண்டான்.

"கேட்டவள் முழுவதையும் கேட்டிருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருக்காது போல!" என்று சொன்னவன், அவள் கையைப் பற்றி ஆனால் அதே நேரம் அவளுக்கு வலிக்காதவாறு மெதுவாக மேலேறி வந்தான்.

"எதைக் கேட்க வேண்டும்? நீ என் தந்தையை அவமானப்படுத்துவதையும் சேர்த்துக் கேட்டிருக்க வேண்டும் என்கிறாயா?" என்றாள்.

"நான் பேரரசி என்று சொன்னது மகாகணம் பொருந்திய காமரி தேவி அவர்களை!" என்று பொட்டில் அடித்தாற்போல அவன் போட்ட போடில் அரண்யா அப்படியே உறைந்து பின் கண்கள் இருள மறுபடியும் சரிந்தாள்.

அரண்யாவிற்கு லேசாக நினைவு வந்தபோது வைனியின் குரல் அவளுக்குக் கேட்டது போலிருந்தது. சிரமப்பட்டு விழிகளைத் திறக்க முயன்றவளுக்கு ஓரளவு வெற்றியும் கிடைக்க, அவள் இருந்த இடத்தை சுற்றிப் பார்த்தாள். ஏதோவொரு குகையில் ஓர் பழைய துணியைப் பாயாக்கி அதன் மீது தான் படுத்திருப்பதை அரண்யா உணர்ந்து

கொண்டாள்.

இன்னும் மயக்கம் தெளியாத விழிகளுடன் அவள் நடந்து வெளியே வர, "ஈருயிராக அவள் இருப்பதைக் கூடவா உங்கள் மரமண்டைகள் பதிவு செய்யத் தவறின?" என்று உச்சஸ்தாயியில் வைனி வீரனையும் நவிரனையும் வறுத்துக் கொண்டிருந்தாள்.

ஆம்! மலை முகட்டில் அரண்யா சந்தித்தது வேறு யாரையுமல்ல, ஒளி நாட்டின் இளவரசன் நவிரனைத் தான்!

வைனியை நவிரன் எங்கே எப்படிச் சந்தித்தான்?

துகிரன் எங்கே?

காமரியை எதற்காக நவிரன் பேரரசி என்றான்?

என்பன போன்ற பல கேள்விகள் அரண்யாவின் மூளையைச் சூழ்ந்து கொண்டன.

ஆனால் எதைப்பற்றியுமே அவளைச் சிந்திக்க விடாது, அவள் வயிற்றில் மறுபடியும் ஏதோ மாற்றம் நிகழ, அதை உற்று கவனித்தவளுக்கு, அது தன் வயிற்றில் வளர்ந்துகொண்டிருக்கும் குழந்தையின் குட்டிக் கைகள் மற்றும் கால்களின் பரிசு என்று நன்றாகப் புரிந்தது! குழந்தையின் அசைவைக் கை வைத்து உணர்ந்து ரசித்தாள்.

''வெளியே சென்றதும் உனக்கான உயிரொன்று காத்திருக்கிறது.' என்று ஈசன் சொன்னது இதைத்தானோ?' என்று நினைத்து நினைத்து பூரித்துப் போனாள்.

"என் பிள்ளை! நானும் வீரனும் சேர்ந்து உருவாக்கிய எங்கள் காதலின் சின்னமிது!" என்று முணுமுணுத்தவளின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது.

போர்க்களத்தின் மத்தியில் பூத்திருக்கும் புதுப்பூவின் நிலை காமரிக்குத் தெரிந்தால் என்னவாகும்?!

## அத்தியாயம் 17

அரண்யா குகையின் வாசலோடு ஒட்டிக்கொண்டு நிற்கமுடியாமல் நின்றதைப் பார்த்ததும் பேசுவதை பாதியிலேயே நிறுத்திவிட்டு வைனி ஓடோடி வந்தாள்.

"அரண்யா! உன்னைச் சந்திக்கும் வரையில் எனக்கு உயிரே இல்லையடி!" என்று சொல்லி அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

"நீ எங்கே என்று தெரியாமல் என் மனமும் தவியாய்த் தவித்துக்

கொண்டிருந்ததடி." என்று சொல்லி பதிலுக்கு வைனியை அவள் அணைக்க, "ஸ்ஸ்! அம்மா!" என்று தன்னையும் மீறிக் கத்தி விட்டாள் வைனி.

"என்னவாயிற்று?" என்று அரண்யா வைனியை ஆராயத் துவங்கினாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ அணைக்கிறேன் என்கிற பெயரில் என்னை நசுக்கினால் நானென்ன செய்ய?" என்று புன்னகைத்தாள் வைனி.

"இல்லையே! நான் மெதுவாகத்தானே..." என்று சொல்லிக்கொண்டே போனவளின் பேச்சு நவிரனின் முகத்தில் நின்றது. முன்பு பளிங்கு போலிருந்த அவன் முகம் இப்போது அவன் வயதிற்குச் சற்றும் பொருந்தாத வகையில் சுருக்கங்களோடும் தழும்புகளோடும் காணப்பட்டது.

அவள் பார்வை சென்ற திசையைக் கணித்த வைனி சட்டென, "நீ எவ்வளவு சோர்வாக இருக்கிறாய் என்று தெரியுமா? விசாரணைகளை அப்புறம் வைத்துக்கொள்ளலாம். உன் உடலில் சில மணி நேரங்களில் ஏகப்பட்ட மாறுதல்களை நீ உணர்ந்திருக்க வேண்டும். வா! வா! குருதேவர் ஐம்பூதனார் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்." என்று சொல்லி அரண்யாவை தாங்கிக்கொண்டு முன்னால் நடக்க முற்பட்டாள்.

"பேச்சை திசை திருப்பும் கலையில் நீ வல்லவள் என்பதை நானறிவேன். பேசாதிரு!" என்று சொல்லி, வைனியை உற்றுப் பார்த்தாள். மயக்கத்தை கண்களிலிருந்து விரட்டி விடும் உத்வேகத்தோடு விழிகளை நன்றாகத் தேய்த்துக்கொண்டு வைனியைப் பார்த்தவளுக்கு அவள் முகத்தில் ஆறியும் ஆறாமலும் இருந்த பல புதிய காயங்களும் இன்னும் பல தழும்புகளும் புலப்பட்டன.

அவள் கால் விரல்கள் சில நசுங்கியிருந்தது கண்டு மறைவிடத்திற்கு வைனியை நகர்த்திக்கொண்டு சென்றாள் அரண்யா. அப்போது வைனியின் நடையில் ஏற்பட்டிருந்த மாறுதலை வைத்து அவளுக்கு கால்களிலும் இடுப்பிலும் கூட இன்னும் பல காயங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டாள். கண்களில் கண்ணீரோடு அவள் முழு உடலையும் ஆராய்ந்தவளுக்கு, வைனி பலவித சித்தரவதைகளுக்கு உள்ளாகியிருந்தது நன்றாகவே தெரிந்தது.

கனவிலும் கற்பனை செய்து பார்க்க முடியாத கொடூரங்கள் பலவும் அவளுக்கு நடந்திருக்கின்றது என்பதற்கு வைனியின் உடலே சாட்சி சொன்னது. அவள் முதுகைப் பார்த்த அரண்யாவிற்கு, அதற்கு

மேலும் கட்டுப்படுத்த முடியாமல், கைகள் நடுங்க, "நான் ஒரு நாள் தானே இங்கில்லை! அதற்குள் என்ன தான் நடந்தது?" என்று விசும்பிக்கொண்டே கத்தினாள்.

"மட்டி! ஏற்கனவே சோர்வாகக் காணப்படுகிறாய். வயிற்றில் ஆறு மாதக் கருவாக என் மருமகனை வேறு சுமந்து கொண்டிருக்கிறாய். நீ இப்படி இறைந்து பேசுவது, அவனுக்கு நல்லதில்லை! சற்று அமைதியோடிரு. எதுவும் இன்னும் நம் கைமீறிப் போய்விடவில்லை." என்று எதுவும் நடக்காததைப் போல சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, ஆடையை சரி செய்து கொண்டு அரண்யாவின் தலையில் குட்டினாள் வைனி.

"எப்படியடி உன்னால் இப்படி நடந்துகொள்ள முடிகிறது?" என்று அழுதபடியே அரண்யா கேட்க, "சிந்திய பாலிற்கும் கடந்து போன நொடிக்கும் கவலைப்படுவது வீணென்று அறிந்தவள் நான்!" என்று நிமிர்வுடன் கூறினாள் வைனி.

வைனிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அரண்யா அழுதே கரைய, "இவ்வளவு அழுதால் குழந்தை தாங்க மாட்டான். உன் கேள்விகள் அனைத்திற்கும் விடை அறிந்தவர் குருதேவர் ஒருவரே! வா, அவர் உனக்காக வெகு நேரம் காத்திருக்கிறார்" என்று அவளை சமாதானப்படுத்தினாள் வைனி.

"உண்மையிலேயே குருதேவர் இங்கிருக்கிறாரா?" என்று விழி விரித்தாள் அரண்யா. வைனி அவள் கேள்விகளை மடை மாற்றம் செய்யும் நோக்கோடு தான் குருதேவர் பெயரை உச்சரித்ததாக அரண்யா எண்ணியிருந்தாள். அதனால் தான் முன்பு வைனி சொன்னதை அவள் பெரிதாக மதிக்கவில்லை.

"குருதேவர் மட்டுமல்ல, துகிரனும் இரும்பன் அண்ணாவும் கூட இங்கே தான் இருக்கின்றார்கள். வேறு ஒரு காரியமாக அவர்கள் இருவரும் வெளியில் சென்றிருக்கின்றனர். அதனால் தான் அவர்களை நீ இன்னும் காணவில்லை. முதலில் வா, குருதேவரை தரிசிக்கலாம்!" என்று சொல்லி, அரண்யாவின் கண்களைத் துடைத்து விட்டு அழைத்துச் சென்றாள் வைனி.

அரண்யாவைக் கண்டதுமே கண்கள் கனிய, "வா மகளே!" என்று வாஞ்சையோடு அழைத்தார் ஐம்பூதனார்.

"குருதேவா!" என்று அவரைப் பார்த்து அதிர்ந்தாள் அரண்யா. ஏனென்றால் முகத்தின் ஒளி சற்றும் மங்காதிருந்தாலும் கிட்டத்தட்ட கால் உடம்பாக இளைத்திருந்தார் ஐம்பூதனார். அவர் முகத்தில் பதில்களைத் தேடியவளுக்குப் பெரிதாக எந்தப் பதிலும்

கிடைக்கவில்லை. எப்போதுமிருக்கும் சாந்தமும் புன்னகையுமே அவளுக்குப் பரிசாகக் கிடைத்தது.

"இந்தக் கிழவனை ஆராய்வதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம் அம்மா. முதலில் இங்கே வா. மந்தரைமலையில் ஜனித்திருக்கும் வீரனின் வாரிசை நான் பரிசோதிக்க வேண்டாமா?" என்று பரிவோடு அவளை அழைக்க, மறுக்காமல் அவர் பக்கத்தில் சென்றாள் அரண்யா.

அரண்யாவின் நாடி பிடித்து பார்த்தவருக்கு முகத்தில் திருப்தி பரவியது. "குழந்தை நன்றாக இருக்கிறதம்மா. வீரனைத் தந்தையாகவும் உன்னைத் தாயாகவும் பெற்றிருக்கும் போது எக்குறையும் அண்டாமல் அது வளரும்." என்று அவள் தலை தொட்டு ஆசீர்வதித்தார் ஐம்பூதனார். அவரது ஆசி அரண்யாவிற்கு அவள் அன்னையை நினைவுறுத்தியது.

"என் அம்மா அப்பா இப்போது எங்கிருக்கிறார்கள்? அவர்களுக்கு என்னவாயிற்று குருதேவா?" என்று தீனமாகக் கேட்டாள் அரண்யா.

கண்களை மூடி ஒரு நெடிய மூச்சை வெளியிட்டார் ஐம்பூதனார். "வைனி! வீரனையும் நவிரனையும் உடனே இங்கு அழைத்து வா அம்மா." என்று கூறினார்.

"ஐயா! என் கேள்வியை ஏன் எல்லோரும் தவிர்க்கிறீர்கள்? எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறதே! நான் இங்கிருந்து சென்று ஒரே ஒரு நாள் தானே ஆகிறது! அதற்குள்ளாக இதோ இந்த ஆறு மாதக் கரு எப்படி வந்தது? வைனிக்கும் என் பெற்றோருக்கும் என்னவானது? நீங்கள் மேருவில் இல்லாமல் ஏன் இங்கிருக்கிறீர்கள்? இளவரசன் நவிரனைக் கொல்வதற்காக அரச வீரர்கள் ஏன் துரத்திக்கொண்டு வர வேண்டும்? காமரியை நவிரன் ஏன் பேரரசி என்றான்? என்ன தான் நடந்தது? தயவு செய்து சொல்லுங்கள் குருதேவா! தயவு செய்து சொல்லுங்கள்!" என்று அவர் கால்களில் விழுந்தாள்.

உடலால் பலவீனமாக இருப்பவளை மனதாலும் பலவீனப்படுத்த வேண்டாமே என்று மௌனம் சாதிப்பதால் இனி எந்த நன்மையும் விளையப் போவதில்லை என்பதை உணர்ந்த ஐம்பூதனார், அரண்யாவை எழுந்து அமரச் சொன்னார். அவள் அசையாது விழுந்து கிடைக்க, அவர் கண்ணசைவில் வைனி அரண்யாவை உட்கார வைத்துவிட்டு அருகில் இருந்த குடத்திலிருந்து ஒரு குவளை நீரை அவளுக்குப் பருகத் தந்தாள். அதன் பிறகு வீரனையும் நவிரனையும் அழைத்துக்கொண்டு உள்ளே வரும் போது ஒரு மண் தட்டில்

அரண்யாவிற்கு உணவு கொண்டு வந்தாள். ஆனால் உணவை உண்ணாது அரண்யா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

வைனி பரிதவிப்போடு குருதேவரைப் பார்க்க, "சாப்பிடம்மா! உன் கேள்விகளும் என் பதில்களும் எங்கும் போகாது. உனக்குள் இருக்கும் சிற்றுயிரை நினைத்துப் பார்! இதுவரையிலும் திட உணவு உட்கொள்ளாது வலுவிழந்து இருக்கிறது. அதை நினைத்தாவது சாப்பிடம்மா!" என்று ஐம்பூதனார் சொல்ல, அரண்யா அப்பொழுதும் அசைந்தாளில்லை.

வீரன் உடனே வைனியிடமிருந்து தட்டை வாங்கி, கெஞ்சி கொஞ்சி மிஞ்சி, அரண்யாவை ஒருவாறு உண்ண வைத்தான். ஒரு வாய் உண்டதும்தான் தான் எவ்வளவு பசியில் இருக்கிறோமென்றே அரண்யா உணர்ந்தாள். தட்டில் இருப்பவற்றில் ஒரு பருக்கை கூட மிச்சம் வைக்காது முழுவதும் உண்டதும் வைனி தந்த கஷாயத்தையும் மறுக்காமல் குடித்தாள். இழந்த தெம்பு கொஞ்சம் மீண்டு வருவதைப் போலிருந்தது அரண்யாவிற்கு.

'இப்பொழுதாவது சொல்லுங்களேன்!' என்று பார்வையாலேயே அவள் ஐம்பூதனாரைக் கெஞ்ச, மீண்டும் ஒரு நெடிய மூச்சை விட்டுவிட்டு, பேச ஆரம்பித்தார் ஐம்பூதனார். காமரியைப் பற்றி அவருக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொன்னார். அவள் பிறப்பு, வாழ்க்கை, நாவகனை அவள் கைக்குள் போட்ட கதை, நவிரனை சந்தித்த கதை, அவனை அவள் கொலை செய்ய முயன்ற கதை என ஒன்றையும் அவர் விடவில்லை. ஐம்பூதனார் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நவிரனின் முகத்தில் அவமான ரேகைகள் ஓடின என்றால் வீரனோ கொதிநிலைக்குச் சென்றுகொண்டிருந்தான். அரண்யாவோ அவளைக் கண்டதுண்டமாக வெட்டிப்போடும் அளவிற்கு ஆத்திரத்துடன் அமர்ந்திருந்தாள்.

குருதேவர் பேசி முடித்ததும், "நான் இங்கில்லாத நேரத்தில் பாதகத்தி இன்னும் என்னவெல்லாம் செய்திருக்கிறாளோ! இப்போதே அவள் தலையைக் கொய்தால் மட்டுமே என் ஆத்திரம் அடங்கும் குருதேவா!" என்று அரண்யா சினத்துடன் முகம் சிவக்கச் சொன்னாள்.

"முதலில் நீங்கள் எத்தனை நாள் இங்கில்லை என்பதை அறிவீர்களா?" என்று குருதேவர் கேட்க, "இல்லை!" என்று வீரனும் அரண்யாவும் ஒரே குரலில் கூறினர்.

"ஏழு மாதங்களும் சொற்ப நாட்களுமாகிறது, நீங்கள் மதுரையிலிருந்து செங்கோலைத் தேடி பயணப்பட ஆரம்பித்து!" என்று ஐம்பூதனார் சொன்னதும் வீரனும் அரண்யாவும் அதிர்ந்தனர்.

"காலச்சக்கரம் இங்கே சுழல்வதைப் போல வெளியே சுழல்வதில்லையம்மா" என்ற ஈசனின் வார்த்தைகளைத் தானாக அவள் உதடுகள் உச்சரிக்க, என்ன என்று பார்த்த ஐம்பூதனாருக்கு மந்தரை மலையில் நடந்த நிகழ்வுகளை விளக்கினான் வீரன்.

அவன் கூறியதை முழுவதும் கேட்டவர், 'ஈசா! உன் சோதனையின் முடிவு தான் என்ன?!' என்று மனதிற்குள் நினைத்தார்.

"உண்மைதானம்மா! மந்தரை மலையில் பகலோ இரவோ கிடையாது. ஏன், காலம் அங்கே நகருவதே இல்லை. சொல்லப் போனால் பூமிப்பந்திற்குரிய ஒரு இயற்பியல் விதியும் மந்தரை மலையில் செல்லுபடியாவதில்லை. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் தான் உன் மணிவயிற்றில் உதித்திருக்கும் மழலைச் செல்வம். நாளுக்கு நாள் வளர வேண்டிய சிசு, நீ அங்கிருந்து கிளம்பியதும் நிகழ்காலத்திற்கு ஏற்ப குறைந்த காலத்தில் துரிதமாக வளர்ந்தது. விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால், வேகமாக ஓடும் நதி குளிர் பிரதேசங்களில் பனிக்கட்டியாக உறைவதில்லையா? அதே போலத்தான் மந்தரை மலையிலும் காலம் உறைந்து போய்க் கிடக்கிறது. ஆனால் அங்கிருந்து வெளிவரும் போது, உள்ளே நடந்ததற்கு ஏற்ப, வெளியில் மாறியிருக்கும் காலத்திற்கு ஏற்றபடி மாற்றம் நிகழும், உறைந்த பனிக்கட்டி மறுபடி ஓடும் நதியாவதைப் போல!" என்றார் ஐம்பூதனார்.

புரியாது விழித்தவர்களிடம், "வீரா! நீ கடைசி முறை இந்திர ரகசியத்திற்கு உருவேற்றியது மந்தரை மலையில் தானே? அங்கு ஒரு முறை உருவேற்றியது, வெளியே நீங்களில்லாத இந்த ஏழு மாதங்களுக்கும் சேர்த்து உருவேற்றிய பலனைத் தந்திருக்கும். சந்தேகமிருப்பின் நாளை காலை இந்திர ரகசியத்திற்கு உருவேற்றும் போது சோதனை செய்து பார்! இந்திர ரகசியம் முழுதாக உன் வசமாகும் நாள் வெகு அருகில் இருக்கிறது மகனே! இப்போது நான் கூறப்போவதைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யாதே! இந்திர ரகசியத்தை முழுமையாகக் கைக்கொள்வதே உன் முதன்மைக் கடன். புரிந்ததா?" என்று கேட்டார் ஐம்பூதனார்.

"தங்கள் ஆணைப்படியே குருதேவா!" என்று சொன்னான் வீரன்.

"அம்மா அரண்யா! முட்டாள்தனமாக எதையும் செய்யமாட்டேன் என்று வாக்குத் தருவாயா?" என்று ஐம்பூதனார் கேட்க, "குருதேவா! நீங்கள் இப்படி இழுப்பது தான் எனக்கு இன்னும் பயத்தைத் தருகிறது!" என்று நடுங்கியபடியே அரண்யா சொன்னாள். ஆனால் மறுமொழி கூறாது ஐம்பூதனார் அவள் விழிகளையே

பார்த்திருக்க, சரியென்று தலையசைத்தாள்.

"உங்கள் இருவரின் பெற்றோரும் இறந்து விட்டனர்!" என்று எந்தவொரு முன்னறிவிப்புமின்றி ஐம்பூதனார் கூறியதும், இருவருக்குமே பூமி நழுவியது.

"எ... என்ன?" என்று திக்கித் திணறி வீரன் கேட்க, பிரமை பிடித்தவளைப் போல அரண்யா அமர்ந்திருந்தாள்.

"உங்களை அங்கிருந்து அப்புறப்படுத்திய சில நாட்களிலேயே காமரி என்னும் சூறாவளி நமக்கு நெருக்கமான அனைத்தையும் உருத்தெரியாமல் அழித்துவிட்டதப்பா!" என்று எதற்கும் கலங்காத ஐம்பூதனாரே பழைய நினைவுகளின் தாக்கத்தில் கண்ணீர் விட்டார்.

"ஐயோ! ஆரனும் வேல்விழியும் நாவகனும் என்னவானார்கள்?" என்று குரல் நடுங்க வீரன் கேட்டான்.

"நாவகன் பெயரளவிற்கு என்றாலும் மிகுந்த மகிழ்ச்சியோடு இப்போது பேரரசனாக இருக்கிறானப்பா. ஆரனும் வேல்விழியும் எங்கிருக்கிறார்கள் என்னவானார்கள் என்று என்னால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அவர்கள் காமரியின் பிடியிலிருந்து தப்பிவிட்டதாக வைனிக்கு செய்தி கிடைத்திருக்கிறது. அதனால் அவர்கள் எங்கேயோ பத்திரமாக உயிருடன் இருப்பது மட்டும் நிச்சயம்." என்றார் ஐம்பூதனார்.

அவர் பதிலில் அரண்யாவும் வீரனும் அடைந்த நிம்மதிக்கு அளவேயில்லை. ஆனால் அந்த நிம்மதியின் ஆயுள் சொற்பமென்பதை அறிந்த வைனி, நவிரனின் முகங்கள் கல்லாகவே இருந்தன.

"உங்களை அப்புறப்படுத்துவதே காமரியின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். சிவனின் செங்கோல் என்னும் போகாத ஊருக்கு ஆகாத வழி சொல்லி உங்களை அவள் அனுப்பியதன் நோக்கத்தை நாவலந்தீவே விரைவில் தெரிந்து கொண்டது.

நீங்கள் சென்ற அடுத்த நாளே காமரி மக்களின் மனநிலையை நாவகனுக்குச் சாதகமாக மாற்றுவதற்கு பல்வேறு விதமாக முயன்றிருக்கிறாள். அரண்யாவை விடுத்து நாவகனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று பல சிற்றரசர்களிடமும் மந்திரி பிரதானிகளிடமும் பேசியிருக்கிறாள். ஆனால் இதை முன்பே எதிர்பார்த்திருந்த பேரரசனும் பேரரசியும் அவள் முயற்சிகளை முடிந்தவரை தடுத்திருக்கின்றனர்.

திடீரென ஒருநாள்..." என்று ஆரம்பித்து நடந்தவற்றை சொல்ல ஆரம்பித்தார் ஐம்பூதனார்!

*****************************************************************

மதுரை - சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு!

அன்று மாலையில் தான் குறளி அவளிடம் வீரனுக்கும் அரண்யாவிற்கும் அன்றில் பறவைகள் திருமணம் செய்து வைத்து விட்டதை தெரிவித்திருந்தது. இரவு உணவின் போது காமரி கொதிநிலையில் இருந்தாள். இருப்பினும் தன் மீது சந்தேகம் தோன்றாதவாறு நடந்துகொண்டாள்.

பேரரசன் பேரரசி காமரி நாவகன் என்று நால்வரும் எப்போதும் போலச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இளையவர்கள் இருவரின் முகத்தைப் பார்க்கவே பெரியவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் நேரடியாக நாவகன் இன்னும் எந்தக் கலகத்திலும் ஈடுபடாததால் அதுநாள்வரை பேரரசனும் பேரரசியும் எதுவும் பேசாதிருந்தனர். ஆனால் அவர்களின் மனக்கசப்பை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டுதானிருந்தனர்.

"அரண்யா உயிருடன் திரும்புவதற்கான வாய்ப்புக்கள் மிகச் சொற்பம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். தவிரவும் ஜாதகத்தின் படி அவளுக்கு அற்ப ஆயுள் வேறு! அதனால்..." என்று நாவகன் சட்டென பேச்சைத் துவங்க, அவனை வெட்டும் பார்வை பார்த்த பேரரசன், "அதனால்?" என்று சீறினார்.

"நானும் உங்கள் மகன் தானே? அதிலும் மூத்த மகன். எனக்குப் பட்டம் கட்டினால் குறைந்தா போவீர்கள்?" என்று சாப்பிடுவதை நிறுத்திவிட்டுக் கேட்டான் நாவகன்.

"இப்போதெதற்கு இந்தப் பேச்சு?" என்று சொல்லி நிலைமையை சுமுகமாக்க நினைத்தார் பேரரசி.

"நீங்கள் எதுவும் பேசாதீர்கள். நானும் பல சிற்றரசர்களின் மூலம் உங்களுக்குத் தூதனுப்பிக் கொண்டிருக்கிறேன். ஆனால் என்ன பயன்? ஆற்றில் போட்ட அம்மிக்கல் போலவே புருஷனும் பொஞ்சாதியும் அமுக்கிக்கொண்டு இருக்கிறீர்கள்! என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கிறது. இன்று எனக்கு இரண்டில் ஒன்று தெரியவேண்டும்!" என்று நாக்கில் நரம்பின்றிப் பேசினான் நாவகன்.

"நான் தான் ஏற்கனவே அரண்யா தான் பட்டத்துக்குரியவள் என்று அறிவித்து விட்டேனே? உனக்கு இன்னும் என்ன தெரியவேண்டும்? உனக்கு வேண்டுமானால் உன் தகுதிக்கேற்ப அமைச்சர் பதவி ஏதேனும் தரச் சொல்கிறேன். அதுதான் என்னால் முடிந்தது." என்று சொல்லிவிட்டுப் பேரரசர் பாதிச் சாப்பாட்டில் கைகழுவ, பேரரசியும் வேதனையோடு எழுந்தார்.

"நான் பேசிக்கொண்டிருக்கும் போது எங்கே எழுந்து ஓடுகிறீர்கள்?" என்று சாப்பிட்ட கையாலேயே வெறியோடு பேரரசரின் தோளைப் பிடித்து நாவகன் திருப்ப, அவன் கன்னத்தில் ஓங்கி ஒன்று வைத்தார் பேரரசர். அதிர்ச்சியிலும் வலியிலும் இரண்டடி தள்ளிப்போனான் நாவகன்.

"நானும், நான் பெற்ற பிள்ளையாயிற்றே என்று பொறுமையோடிருந்தால், எல்லை மீறிக்கொண்டே செல்வாயோ? இப்போதே உன்னைக் கழுவேற்றி விடுவேன்! ஜாக்கிரதை!" என்று உறுமியவரை பேரரசி கூட சமாதானம் செய்ய முயலவில்லை.

"ஒரே ஒரு காரணம் சொல்லுங்கள், நான் எதில் குறைந்தவனென்று!" என்று கன்னத்தை பிடித்துக்கொண்டே நாவகன் கேட்டான்.

"ஒன்றென்ன நூறு காரணங்களை என்னால் பட்டியலிட முடியும். முதல் காரணம் உன் மூளை ஊனம் என்பது! இரண்டாம் காரணம்... இதோ இங்கே இத்தனை கலவரங்களுக்கு இடையிலும் ஒன்றுமே நடக்காததைப்போல தின்றுகொண்டிருக்கிறாளே அவள் தான்! பகைவனின் மகளை நான் உயிருடன் இருக்கும் வரையில் அரியாசனம் ஏற்றி வைக்க ஒருபோதும் உடன்பட மாட்டேன்!" என்று பதிலுக்குக் கத்தினார் பேரரசர்.

அதுவரை எதையும் கண்டுகொள்ளாதிருந்த காமரியின் காதுகளில் கடைசி வரி விழுந்ததும், நிதானமாகக் கையைக் கழுவிவிட்டு எழுந்தாள்.

"ஹ்ம்ம்! ஏதோ குடும்ப விவகாரம் என்று அமைதியாக இருந்தால் இந்தக் கிழட்டு மூதேவிகள் விடமாட்டேன் என்கிறதே!" என்று காமரி நாடக பாணியில் வசனம் பேச, "காமரி! நாவடக்கத்தோடு பேசு!" என்றார் பேரரசி.

"வாயை மூடடி!" என்று சொன்னவள் ஒரு கையால் சொடக்கு போட, பேரரசியின் கழுத்தை யாரோ பிடித்துத் தூக்குவதைப் போல அப்படியே அந்தரத்தில் மிதந்தார்.

"எங்கே விட்டேன்... ஆங்... ஞாபகம் வந்துவிட்டது! மயிலே மயிலே என்றால் அது இறகு போடுமா? நாமாகத்தான் பிடுங்க வேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே பேரரசரின் வயிற்றில் குறுவாள் ஒன்றைத் திருகிவிட்டாள் காமரி. அதைப் பார்த்த பேரரசி அப்படியே சரிந்து கீழே விழுந்துவிட்டார்!

"அப்பாடா! ஒரு பிரச்சனை தீர்ந்தது!" என்று சொல்லியபடியே

நாவகனின் எதிரில் போய் நின்றாள். பெற்றோரின் சலனமற்ற உடல்களைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றிருந்தவன், காமரியை அதிர்ச்சியோடு பார்க்க, "என்னால் முடிந்தவரை முயன்றேன் நாவகா! ஆனால் உன் பெற்றோர் கடைசி வரை என் வழிக்கே வரவில்லை. மாலையில் குறளி வேறு வீரனுக்கும் அரண்யாவிற்கும் அன்றில்கள் திருமணம் நடத்திவைத்து விட்டன என்று சொன்னது. அவள் வயிற்றில் வாரிசு வேறு உருவாகி விட்டால்... பிறகு உன் நிலைமை மட்டுமல்ல உன் சந்ததியின் நிலைமையே சேவகம் புரிவதாகத்தான் இருக்கும்! உன் குழந்தைகளுக்கு அந்நிலை வர விடுவாயா?" என்று கொஞ்சல் மொழியில் காமரி கேட்டாள்.

"இல்லை! நிச்சயம் இல்லை! நம் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக உலகாள வேண்டும் கண்ணே!" என்று காமரியின் கண்களைப் பார்த்துக் கூறினான் நாவகன்.

"அப்படியானால் நான் சொல்வதைப் போலச் செய்! நாளை காலை நமக்கு மகுடதாரண விழா நடக்கும்!" என்று நாவகனுக்குள் பேராசைத் தீயை மூட்டினாள் காமரி.

காமரியின் சொற்படி அவன் பெற்றோர்களின் உடல்களைக் கூட மறுமுறை காணாது, அமைச்சர்களோடு அவசர கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தான் நாவகன். பல இச்சாதாரி யட்சிணிக்களை தூதுவர் போல மனித வேடமிட்டு அனைத்து சிற்றரசர்களும் தூதனுப்பி நாவகனே அடுத்த பேரரசன் என்று அறிவிக்கச் சொன்னாள். நாவகனை பேரரசனாக ஏற்றுக்கொண்டவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டவள், மறுத்தவர்களின் குடும்பங்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தாள். அவர்களின் இடத்திற்கு காமரியின் ஆதரவாளர்களை உடனே நியமித்தாள்.

'அனைவரையும் கொல்வதற்குப் பதில் கைதிகளாகப் பிடிக்கலாமே!' என்று யோசனை சொன்னவர்களிடம், "இவர்களைக் கைது செய்தால் சிறை நிறையும்! கொஞ்சமாகவேணுமென்றாலும் நீரும் சோறும் தர வேண்டும். எனக்கு வீண் செலவீனங்களில் உடன்பாடில்லை! இவர்கள் உடல்கள் நம் மண்ணை வளமாக்கியாவது எனக்குப் பயன்படட்டும்!" என்று அமைதியாகச் சொன்னவளின் மீது உயிர் தப்பிய அனைவருக்கும் மரணபயம் வந்ததென்றால் அது மிகையன்று. ஆனால் அவளுக்குப் பயன்தரக் கூடும் என்று நினைத்த சிலரை மட்டும் அவள் கைது செய்ய உத்தரவிட்டாள். மரணத்தை விடக் கொடுமையான வாழ்க்கை முறையை அவர்களுக்குப் பரிசளித்தாள். ஒற்றர்படைத்தலைவன் தாரகன் உட்பட பலர்

சிறையிலேயே மாண்டு போனார்கள். அல்லது காமரியின் கைகளுக்குள் சிக்காது தற்கொலை செய்துகொண்டனர்.

வேல்விழியை கைது செய்து அழைத்து வரவேண்டும் என்ற காமரியின் கட்டளையோடு ஆரானின் இல்லம் சென்றவர்கள், அங்கே ஆரனோ வேல்விழியோ இல்லாதிருந்ததைப் பார்த்துத் திகைத்தனர். எங்கு தேடினாலும் அவர்கள் கிடைக்கவில்லை என்று காமரியிடம் சொன்னபோது, அவர்களை விட்டுப் பிடிக்க அவள் முடிவு செய்தாள். ஆனால் முன்னெச்சரிக்கையாக வீரனின் அம்மா பொன்பாவையையும் துகிரனின் பெற்றோரையும் பிடித்து வந்த வீரர்களுக்குப் பாராட்டாக விளைநிலங்களைப் பரிசளித்தாள்.

இப்படித்தான் ஒரே இரவில் மொத்த ஆட்சி அதிகாரத்தையும் தன் கைக்குள் கொண்டுவந்தாள் காமரி!

காலை இளங்குயில்கள் இன்னிசை பாட, சூரியன் வருவதற்குள் உணவிடும் தெய்வங்களாம் உழவர்கள் வயலில் இறங்கி அடுத்த நடவிற்காக உழுது கொண்டிருக்க, வீடுகளில் அன்று கறந்த நுரைத்த பாலைக் காய்ச்சி மகளிர் பிள்ளைகளை எழுப்பினர். 'இன்று எவர் தோப்பில் எதை பறித்துத் திங்கலாம்?' என்ற யோசனையுடனேயே சிறார்கள் பலர் எழுந்து பல் துலக்கிக்கொண்டிருக்க, அரண்மனை முரசறைவோன் உயிரே நடுங்குவது போல முரசறைந்தான். அந்தக் காலை வேளையின் ரம்மியமான பொழுது அந்த நிமிடத்தோடு சமாதியானது!

"மக்களனைவருக்கும் ஒரு நற்செய்தி! இன்று பகலில் இளவரசர் நாவகன் பேரரசராக முடிசூட்டப்படுவார். காமரி தேவி பேரரசியாக அவர் பக்கத்தில் வீற்றிருப்பார்! வீட்டிற்கு ஒருவராவது விழாவில் பங்கேற்க வேண்டும்! இது அரச கட்டளை! மீறினால் சிரச்சேதம் செய்யப்படுவீர்கள்!" என்று வீதி வீதியாக முரசறைந்துகொண்டே சென்றான். முரசறைபவனுக்கு பாதுகாப்பாக பாதுகன் தலைமையில் ஒரு காவல் படை வேறு இருந்தது.

'இந்தக் கேவலமான முடிவிற்கு நாங்கள் ஒருக்காலும் சம்மதிக்க முடியாது!' என்றும்

'பேரரசனும் பேரரசியும் எங்கே?' என்றும்

'இளவரசி அரண்யா தேவி எங்கே?' என்றும்

'இது இளவரசிக்குரிய அரியாசனம்!' என்றும் பல கேள்விகளும் பதில்களும் கூட்டத்திலிருந்து எழுந்தாலும் ஏனிந்த திடீர் மாற்றம் என்று யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

"நம் நலத்திற்காக உயிரைப் பணையம் வைத்து மந்தரை மலைக்கு இளவரசி சென்றிருக்க, நன்றி மறந்து புறவாசல் வழியாக பேரரசனாக முடிசூட்டிக்கொள்ளும் ஒருவனது விழாவில் நாம் ஏன் பங்குபெற வேண்டும்?" என்று ஊர்த்தலைவர் ஒருவர் கேட்க, "ஆமாம்! ஆமாம்! மகுடதாரண விழாவை அனைவரும் புறக்கணிப்போம்! இளவரசி அரண்யா தேவி வாழ்க வாழ்க!" என்று மதுரை வீதிகளில் ஒலித்த சத்தம் காமரியின் முகத்தில் அஞ்சத் தகுந்த ஒரு புன்னகையைத் தருவித்தது.

வானுலக தேவதை போல அலங்காரங்கள் செய்துகொண்டு காமரி அரியாசனத்தின் பக்கத்தில் நிற்க, சிங்காதனத்தில் நாவகன் வீற்றிருந்தான். அங்கே குழுமியிருந்த அமைச்சர்களில் வேறு வழியின்றி நாவகனை ஏற்றுக்கொண்டோர் முகங்களில் சிறிதும் மகிழ்ச்சி இல்லை! கடனே என்று சிலை போலவே நின்றிருந்தனர்.

"கமலநாதர் காணாமல் போனதால், பாலை நாடுகளின் அரசகுரு கலரன் பெருவளநாட்டின் அரசகுருவாக இருந்து, மகுடதாரண விழாவை நடத்துவார்!" என்று கணீர் குரலில் காமரி தெரிவித்தாள். அதன்படியே கையில் கிரீடத்தோடு முகத்தில் பெருமை கொப்பளிக்க கலரன் நின்றுகொண்டிருந்தான்.

காமரியின் தாத்தா பாளையனின் வலது கரமாகச் செயல்பட்ட பிதுரனின் உறவினனான கலரன், தீமதியில் பிதுரனை மிஞ்சியவன். வெளித்தோற்றத்தில் நல்லவன் போல நடிப்பவனின் தனிப்பட்ட வாழ்க்கை பிறரின் குருதியால் எழுதப்பட்டது. இவன், சிந்தனைக்கு அப்பாற்பட்ட கொடூர வேள்விகளைச் செய்வதில் வல்லவன்; மந்திரங்களின் துணை கொண்டு பிஞ்சுகளை நசுக்குவதில் பேர் பெற்றவன். ஆனால் அவன் கொடுமைகளுக்கு தக்க சாட்சியில்லாத காரணத்தால் சுதந்திரமாக பேரரசர் வீயனின் காலத்தில் வலம் வந்துகொண்டிருந்தான். அப்பேர்ப்பட்ட காமாந்தக அரக்கனைத்தான் காமரி நாவலந்தீவின் அரசகுருவாக அறிவித்திருந்தாள்.

"ம்!" என்று காமரி கண் காட்ட, கலரன் கிரீடத்தை நாவகனின் தலையில் சூட்டினான். பின் பேரரசி கிரீடத்தை காமரியின் தலையில் சூட்டினான். '*முறைப்படி திருமணம் செய்யாத ஒருத்தியை மகாராணி என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?*' என்று யாரோ ஒருவர் கிசுகிசுக்க, '*ஆமாம்! அப்படியே இங்கு எல்லாமே முறைப்படி தான் நடந்துகொண்டிருக்கிறதோ?*' என்று பதில் கேள்வி கேட்டு இன்னொருவர் அவர் வாயை மூடினார். '*நீங்கள் பேசிக்கொண்டிருப்பதை அவள் பார்த்தால், உங்கள் மொத்த*

குடும்பத்தையுமே தாழியில் அடைத்துவிடுவாள். வசதி எப்படி?' என்று மூன்றாம் நபர் கேட்க, அதன் பின்னர் மூச்சு விடும் சத்தம் கூட அங்கிருந்து கேட்கவில்லை.

விழா முடிந்ததும் நாவகனும் காமரியும் வெளியில் மக்களுக்குக் காட்சி தருவதற்காக அரியாசனத்திலிருந்து இறங்கி நடந்து வர, இருபக்கமும் அமர்ந்திருந்தவர்கள் எழுந்து நின்று, இழவு வீட்டுக்காரன் வேறு வகையற்று எதிர் வீட்டுத் திருமணத்தை நடத்துவதைப் போல, அங்கிருந்தோரில் பாதி பேர் முகமும் மனதும் நோக, அவர்களின் மீது பூவும் புதுநெல்லும் தூவினார்கள். அதைக் கண்டும் காணாமலுமிருந்த காமரி, மிகப்பெரிய வெற்றியை சுவைத்த பூரிப்போடிருந்த நாவகனைப் பார்த்து குறுஞ்சிரிப்பை உதிர்த்தாள்.

"காமரி! பார்ப்பதற்கு நான் பேரரசனைப் போல் இருக்கிறேனா? மக்களுக்கு என்னைப் பார்த்ததும் அன்பும் மரியாதையும் வரும்தானே?" என்று சிறுபிள்ளை கேட்பதைப் போலக் கேட்டான் நாவகன்.

"உனக்கென்ன நாவகா! என் கண்ணே பட்டுவிடும் போல அத்தனை அழகாய் இருக்கிறாய். வெளியே குழுமியிருக்கும் இளம்பெண்களெல்லாம் உன்னழகில் மயங்கித் திரியப் போகிறார்கள். இனி நீ என்னை மறக்காமல் இருப்பது பெரும்பாடு தான்!" என்று அவன் தாடையைப் பிடித்துக் கொஞ்சினாள். அவளது தொடுகை நாவகனுக்கு லேசான வெட்கத்தைக் கொடுக்க, சிறிய பரபரப்போடும் நடையில் துள்ளலோடும் நடந்தான் நாவகன்.

நாவகனைப் பார்த்ததும் அங்கிருந்த காவலாளி அரசவைக் கதவைத் திறக்க, "நாவலந்தீவின் பெருமைமிகு பேரரசர் வீயபாண்டியனின் மூத்த புதல்வர், வெள்ளிமலையில் கமலநாதரிடம் பாடம் பயின்ற அறிவுச் செல்வன், பாலை அரசர்களுக்கு எதிரான போரில் நாம் வெற்றி வாகை சூட வழி செய்த வீராதி வீரர், நம் புதிய பேரரசர் நாவகன் வருகிறார்! வருகிறார்! வருகிறார்!" என்று கட்டியங்காரன் நாவகனின் வருகையை உணர்த்தும் கட்டியம் கூறினான்.

"வாழ்க! வாழ்க!" என்று ஜெய கோஷம் கேட்குமென்று எதிர்பார்த்த நாவகனுக்கு அங்கே காவல் வீரர்களைத் தவிர, குடிமக்கள் ஒருவர் கூட இல்லாதது அடங்கா சினத்தை வருவித்தது.

இதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்த காமரி, "யாரங்கே! இந்த முட்டாள் மக்கள் கூட்டம் எங்கே போயிற்று? என்ன திமிரிருந்தால் வீட்டுக்கு ஒருவரை அழைத்தும் வராமல் விழாவைப்

புறக்கணிப்பார்கள்? இது ராஜதுரோகம்! உடனே மக்களனைவரையும் அடித்து இழுத்துக்கொண்டு வாருங்கள்!" என்று ஆணையிட்டாள்.

அவள் கூறியதைக் கேட்டுக் கலங்கிய வீரர்கள் நாவகனை ஏக்கமாகப் பார்க்க, அவனோ கோபத்தில், "உங்கள் பேரரசி சொல்வது கேட்கவில்லை? உடனே செல்லுங்கள்!" என்று வெறி பிடித்த மிருகம் போலக் கத்தினான்.

அடுத்த அரைமணிக்குள் மதுரையின் மக்கள் அனைவரையும் திரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள் காவலர்கள். காமரியின் சுயரூபத்தை இன்னும் அறிந்திராத மக்கள், தைரியமாகவே நின்றனர். அதைக்கண்டு காமரி ஒரு ஏளனப் புன்னகையைச் சிந்தினாள். *'உங்கள் கொட்டத்தை ஒரு நாழிகையில் அடக்குகிறேன்!'* என்று மனதினுள் கறுவிக்கொண்டாள். பக்கத்திலிருந்த காவல்வீரனின் காதுகளில் அவள் ஏதோ முணுமுணுக்க, எரிமலைக் குழம்பைக் குடித்ததைப் போல அவன் முகம் பீதியில் விகாரமானது.

"தாயே..." என்று காமரியைப் பார்த்து ஏதோ சொல்ல வந்தவனைத் தடுத்தாள். "உனக்கு இப்பொழுது தான் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது என்று கேள்வி..." என்று குறிப்பாக அவனை அவள் பார்க்க, தொங்கிய தலையோடு காமரி ஏவிய பணியைச் செய்யப் புறப்பட்டான் அவன். அதற்குள்ளாக மக்கள் கொந்தளிக்க ஆரம்பித்திருந்தனர். அவர்களின் வாழ்க்கையில் இப்படி ஆடுமாடுகளைப் போல அவர்களை இழுத்து வரச் சொல்லி எந்த பாண்டிய அரசனும் சொன்னதில்லை. அதிலும் இயல்பிலேயே மானவுணர்ச்சி அதிகமிருப்பதால் நாவகனையும் காமரியையும் கேள்விகளால் துளைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்கெல்லாம் அசருபவளா காமரி?

"நிறுத்துங்கள் உங்கள் கூச்சலை! உங்கள் மதிப்பிற்குரிய அந்தக் கிழவனும் கிழவியும் இறந்து விட்டார்கள்! இதோ இங்கேயிருக்கும் நாவகன் தான் இனி உங்கள் அரசன். இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை!" என்று காமரி கூறியதும், கோபம், ஆற்றாமை, வருத்தம் என எல்லாம் சேர்ந்து மக்கள் வீரர்களை தள்ளிக்கொண்டு காமரியையும் நாவகனையும் நோக்கி வரத் துவங்கினார்கள்.

அப்போது கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் வீரனின் தாயார் பொன்பாவையை அழைத்து வந்தான் ஓர் காவல் வீரன்.

"அவளை நடுவில் நிறுத்து!" என்று கட்டளையிட்டாள் காமரி. பிடிக்கவில்லை என்றாலும் பணிந்தான் காவலன்.

"என்னை மீறிப் பேசுபவர்களுக்கும் எங்களை ஏற்காதவர்களுக்கும் என்ன நடக்கும் என்பதை உங்களுக்கெல்லாம் இப்போது ஒரு செயல்முறை விளக்கத்தின் வாயிலாகக் காட்டுகிறேன். அப்பொழுதாவது புரிந்து நடந்து கொள்ளுங்கள்!" என்று அமைதியாகச் சொன்னவள், அக்கினி மந்திரத்தை உச்சரித்து அங்கிருந்த குத்துவிளக்கின் தீபத்திலிருந்த நெருப்பை எடுத்து அப்படியே உயிருடன் பொன்பாவை அம்மையைக் கொளுத்தினாள். பெருவீரனை மணந்து இரு வீரப்புதல்வர்களைப் பெற்ற தாயல்லவா, கரிந்து காற்றில் கரையும் வரை ஒரு சிறு முணகலையும் வெளிப்படுத்தவில்லை அந்த மாதரசி!

மக்களால் இந்தக் கொடுஞ்செயலை தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. மிகச்சிறந்த ஒரு சேனாதிபதியின் மனைவிக்கு நடந்த கொடுமையைத் தாளாது காவல் வீரர்கள் பலரும் கண்ணீர் வடித்தனர். தீமையின் பக்கம் நிற்கும்படியான தம் நிலையை எண்ணி அவர்கள் பெருவேதனை அடைந்தனர். அவர்கள் வாழ்நாளில் இப்படிப்பட்ட கொடூர நிகழ்வுகளைக் கண்டிராத பெரியவர்கள் காமரியை எதிர்த்துக் கேள்வி கேட்க வக்கற்ற தங்கள் நிலையை எண்ணிக் குமைந்தனர்.

காவலர்களின் கவனம் சிதறியிருக்க, அவர்களைச் சுலபமாக தள்ளிக்கொண்டு முன்னால் வந்தனர் மக்கள். "எங்கள் நாட்டிற்கு வந்து எங்களின் மதிப்புமிக்க சேனாதிபதியின் மனைவியையே கொல்லுவாயா?" என்று ஆங்காரக் கூச்சலிட்டபடியே காமரியைத் தாக்க மக்கள் வெறியோடு வர, அவர்களைத் தடுக்கவும் மனமின்றி அப்படியே நின்றனர் பல வீரர்கள்.

"ஒரு உதாரணம் போதுமென்று நினைத்தது என் தவறுதான்!" என்று தன்னைச் சூழ்ந்துள்ள மக்கள் வெள்ளத்தைப் பார்த்துக் கொஞ்சமும் கலங்காமல், ஒரு சிறு கையசைவில் அனைவரையும் தூரச் சென்று விழவைத்தாள்.

பின், அவளின் வழக்கமான மோகனப் புன்னகையுடனேயே நடு வீதியில் நின்று மந்திரங்களை உச்சரித்து இருக்கரங்களையும் வான் நோக்கி அவள் உயர்த்த, ஒவ்வொரு வீட்டின் தலைச்சன்பிள்ளைகளும் காற்றில் மிதக்க ஆரம்பித்தனர். காமரி கையைத் திருப்ப, இப்பொழுது அவர்கள் தலைகீழாக அந்தரத்தில் தொங்கினர்.

"வீட்டிற்கு ஒருவரை விழாவுக்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்தால், வராமலா அவமானப்படுத்துகிறீர்கள்? ஆளுபவர்களின் காலை நக்கிப் பிழைக்கப் பிறந்த உங்களுக்கே இவ்வளவு திண்ணக்கம் இருந்தால், உங்களை எல்லாம் மந்தைகளைப் போலக் கட்டி ஆளப் பிறந்த எனக்கு எவ்வளவு நெஞ்சுரமிருக்கும்? இப்போது நான்

வழங்கப்போகும் தண்டனையைப் பார்த்த பின், என்னை எதிர்த்து இனி உங்கள் தலையின் ஒற்றை முடி கூட அசையக்கூடாது!" என்று கண்களைப் பெரிதாக்கி அடிக்குரலில் உறுமினாள் காமரி.

அதுவரையில் மக்களிடமிருந்த தைரியம் சென்ற இடம் தெரியவில்லை. தவிக்கும் தங்கள் வீட்டு மனிதர்களைக் காமரியிடமிருந்து எப்படிக் காப்பது என்ற சிந்தனையிலேயே அவர்கள் உழன்று கொண்டிருந்தனர்.

"ஐயோ! தாயே! அவர்களை விட்டு விடுங்களேன்!"

"நாங்கள் இனி வாயே திறக்க மாட்டோம்!"

"எங்கள் பிள்ளைகளை விட்டுவிடுங்கள்!"

"எங்களை மன்னித்து விடுங்கள்!"

என்று பலதரப்பட்ட கூக்குரல்கள் எங்கும் ஒலித்தன. அசையாது பாறை போலவே காமரி நின்றிருக்க, மொத்த மக்கள் கூட்டமுமே அவள் காலடியில் விழுந்தது!

"இதை நீங்கள் முன்னமே செய்திருக்க வேண்டும். பட்டால் தான் திருந்துவேனென்று இருந்தீர்களல்லவா? நாவலந்தீவில் இனி வாழும் முறையை உங்கள் உச்சந்தலையில் ஆணி அடித்துக் கற்பிக்கிறேன்!" என்று உக்கிரமாகக் கத்தியவள், அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தவர்களை ஒருவர் பின் ஒருவராக நிதானமாகக் கொன்று குவித்தாள். சிதறும் ரத்தத்துளிகளையும் திசுக்களையும் உண்ணுவதற்காகவே பல பைசாசங்களை அங்கே அலைய விட்டாள். வழக்கமாக அரூபங்களைக் காணும் திறனற்ற மக்களின் கண்களுக்கும் அவைகள் தெரியுமாறு செய்தாள். இந்தக் கொடுமையைக் காணச் சகியாது பயந்து போனவர்களால் தங்களின் கண்களை மூடக் கூட முடியவில்லை. காரணம், அவர்களின் இமையை மூட விடாமல் அப்படியே கட்டிப் போட்டிருந்தாள் காமரி.

தங்கள் கண்முன்னேயே தங்களின் பிரிய உறவுகளின் அகால மரணம் நிகழ, எதிர்த்துக் கேள்வி கேட்கக்கூட வக்கற்று சோகத்தை மென்று முழுங்கப் பழகினர் பெருவளநாட்டின் குடிகள். அன்று அந்தி சாய்வதற்குள் மக்களிடமிருந்த மானம், ரோஷம், வீரம், நம்பிக்கை போன்ற உணர்வுகளை முழுதாகக் கொன்று புதைத்திருந்தாள் காமரி.

ஒரு பெரும் சாம்ராஜ்யத்தையே தீவினைகளின் உதவி கொண்டு வெற்றிகரமாகத் தனக்கு அடிமையாக்கினாள் காமரி!

*****************************************************************

நடந்தவற்றில் ஒரு பகுதியை ஐம்பூதனார் கூறியவுடன்

வீரனுக்கும் அரண்யாவிற்கும் முறுக்கேறியது. "ஊருக்கு முன்னால் என் தாயைத் துடிக்கத் துடிக்க கொன்றவளை என்ன செய்தாலும் என் ஆத்திரம் அடங்காது!" என்று உடனே எழுந்தான் வீரன். அவனை அமைதிப்படுத்தி மீண்டும் அமரச் செய்தான் நவிரன்.

"அது அத்தனை எளிதென்றால் இவ்வளவு நேரம் அவளை நாங்கள் உயிருடன் விட்டிருப்போமா என்ன?" என்று மெதுவாகக் கூறினாள் வைனி.

மறுவார்த்தை பேச முடியாது உறைந்து போனான் வீரன். அரண்யாவோ அழுகையை அடக்க முடியாமல் தேம்பிக் கொண்டேயிருந்தாள்.

மீண்டும் ஒரு நெடுமூச்சை எடுத்து விட்டு, "உன் பெற்றோருக்கு என்னவானது என்றும் காமரி அதிகாரத்திற்கு வந்தது எப்படியென்றும் நான் சொல்லி விட்டேனம்மா. ஆனால் வைனிக்கும் நவிரனுக்கும் நடந்தது என்னவென்று அவர்கள் தான் கூற வேண்டும்!" என்று சொன்னார் ஐம்பூதனார்.

"பட்ட அவமானங்களை மீண்டும் நினைக்கச் சொல்கிறீர்களா குருதேவா?" என்று கேட்ட வைனியின் குரலிலிருந்த வலி, அரண்யாவின் இதயத்தைக் கூறு போட்டது.

"ஐயோ! நான் பாவி! நான் பாவி! உன்னைத் தனியே தவிக்க விட்ட பாவி!" என்று தலையிலடித்துக்கொண்டு அரண்யா கதறினாள்.

"இது நானாக ஏற்றுக்கொண்ட வனவாசம் அரண்யா. உன் பிழையென்று இதில் எதுவுமில்லை!" என்று அவளைச் சமாதானப் படுத்தினாள் வைனி.

"காமரியை நீங்கள் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதற்காகவும் அவள் எந்த எல்லைக்கும் செல்லும் அரக்கி என்பதை உங்களுக்கு விளக்கவும் நடந்தவற்றை நான் உங்களுக்குக் கூறத் தான் வேண்டும்!" என்று சொன்ன வைனியின் பெரிய கண்களிலிருந்து இரு பெரிய நீர்மணிகள் உருண்டோடின.

கொற்றவை தேவியின் கோவிலுக்குத் துகிரனும் வைனியும் எப்படி வந்தார்கள் என்பதையும், கனலியை அங்கே சந்தித்ததையும் கூறியவள் அதன் பிறகு நடந்தவைகளைக் கல்லாகிப் போன மனதோடு சொல்லத் துவங்கினாள்.

அரண்யாவின் பார்வை அவளையும் மீறி வைனியின் முதுகில் படிந்தது. அமிலத்தை ஊற்றியதைப் போல வெந்திருந்த அவளின் மேனியை ஒருகணம் நினைத்தவளின் மொத்த உடலும் பயத்தில்

வெளிறியது!

வைனியின் கதையைக் கேட்கும் திடம் அரண்யாவிற்கு இருக்குமா?

## அத்தியாயம் 18

கொற்றவைக் கோவில் - சில மாதங்களுக்கு முன்பு!

"துகிரனை உயிருடன் விட வேண்டுமானால் உன் உயிர் எனக்கு வேண்டும்!" என்று வைனியின் கண்களை நேராகப் பார்த்துச் சொன்னாள் கனலி.

"என் உயிரைத் தந்த பிறகு பேச்சு மாற மாட்டாய் என்று என்ன நிச்சயம்?" என்று கனலியைப் போலவே கேட்டாள் வைனி.

"அவன் உயிர் என் பொறுப்பு. இது நான் வணங்கும் காளி தேவியின் மீது ஆணை!" என்று கனலி சொன்னதை ஏற்று, அவளுடன் காமரியிடம் செல்வதற்கு இசைவு தெரிவித்தாள் வைனி. அரண்யா திரும்பி வரும் வரையில் வைனியை உயிருடன் வைத்திருப்பதே சிறந்தது என்பதை அறிந்திருந்த காரணத்தால் அவளைச் சிறை பிடிக்கவே கனலி எண்ணினாள். வைனியின் உயிரைக்கொண்டு துகிரனைக் காக்கலாம் என்பது அவளது திட்டமாகயிருந்தது.

"சரி. அப்படியானால் இப்பொழுதே உன்னுடன் நான் வருகிறேன். துகிரனின் உயிரை நீ காக்கும் வரை என் உயிர் உனக்குச் சொந்தம்!" என்று கனலியிடம் சொல்லிவிட்டு நேராக துகிரன் கட்டப்பட்டிருந்த மரத்தை நோக்கி விரைந்தாள் வைனி.

"எங்கே செல்கிறாய்?" என்று நக்கலாக கனலி கேட்டதற்கு, கலங்கிய கண்களோடு வைனி ஒரே ஒரு பதில் பார்வை பார்க்க, எதற்கும் கலங்காத கனலியின் இதயம் கூட ஒரு நொடி நின்று பின் துடித்தது. எதுவும் சொல்லாமல் வைனியே திரும்பி வரட்டும் என்று காத்திருந்தாள்.

"ஏன் உன் முகம் இப்படியிருக்கிறது? என்ன சொன்னாள் அவள்?" என்று பதட்டமாகவே கேட்டான் துகிரன். கட்டியவரால் மட்டுமே விடுவிக்கக் கூடிய ஒரு பிரத்யேகமான மந்திரக்கட்டை கனலி உபயோகப்படுத்தியிருந்ததால் துகிரனால் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாமல் போனது.

"துகிரா! அரண்யாவையும் வீரனையும் பாதுகாப்பது உன் முதல் கடமை. அதை நீ என்றைக்கும் மறக்கக் கூடாது!" என்று சொல்லிவிட்டு அவன் தலையை அன்புடன் கோதி விட்டாள்.

"என் கடமை என்று சொல்லாதே, நம் கடமை என்று சொல்!" என்று சொன்னவன் வைனியின் முகத்தை ஆராய, அங்கே அவன் கண்ட செய்திகள் அவனுக்கு அணுவளவும் பிடிக்கவில்லை.

துகிரன் சொன்ன வார்த்தைகள் வைனியின் கண்களை மேலும் கசியச் செய்தது. இனி திரும்பி அவன் முகத்தைப் பார்க்கவே முடியாது என்ற உண்மை சுட, சற்றும் யோசியாமல் அவன் முகத்தில் முத்தமழை பொழிந்தாள். பிறகு திரும்பியும் பார்க்காமல் நேராக கனலியை நோக்கி நடந்தாள். வைனி அவனுக்கு முத்தமிட்டதா இல்லை அவனை விட்டு விலகுவதா... எது அவனுக்கு அதிக அதிர்ச்சியென்று துகிரனுக்கு புரிபடவேயில்லை.

"வைனி! வைனி!" என்று தொண்டை வறண்டு போகுமளவிற்கு கத்திக்கொண்டே கண்ணுக்குத் தெரியாத மந்திரக்கட்டுக்களுடன் அவன் போராடிக் கொண்டிருந்தான். அவன் குரல் கேட்கக் கேட்க வைனியின் இதயம் வெடித்து உதிரம் கசிந்தது.

"என்னை விட்டுப் போகாதே!" என்று துகிரன் கத்திய பிறகு, தாங்க முடியாத பாரத்தை சுமப்பவள் போல, இரு காதுகளையும் தன் கைகளால் பொத்திக்கொண்டு அழுதபடியே கனலியை நோக்கி ஓடினாள்.

துகிரன் வைனி என இருவர் முகத்திலும் தெரிந்த மரண வேதனையைப் பார்த்த கனலி, *'காதலென்றால் இவ்வளவு கஷ்டமா? பேசாமல் இருவரையுமே விட்டுவிடலாமா?!'* என்று யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராதவிதமாக காமரியின் ஏவல் குறளி ஒன்று அங்கு வந்தது.

"பரவாயில்லையே கனலி! தலைவியின் கட்டளைப்படியே துகிரனைப் பிடித்துவிட்டாயே! போதாக்குறைக்கு இலவச இணைப்பாக அந்தப் பெண் வைனியையும் பிடித்திருக்கிறாயே!" என்று மெச்சியது குறளி.

"நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கனலி சாதாரணமாக கேட்பதைப் போலக் கேட்டாலும் அவள் குரலில் எரிச்சல் மிகுந்திருந்தது. குறளியை ஏமாற்றி எப்படித் துகிரனை தப்பிக்கவைப்பது என்று அவள் மூளை வேகமாகச் சுழன்றது.

"துகிரன் விஷயத்தில் உன் மூளை சரியாக வேலை செய்யாது என்று தலைவி கருதினார்கள். அதனால் உன்னை வேவு பார்க்க என்னை அனுப்பினார்கள்." என்று உண்மையைக் கூறியது குறளி.

"என்ன?" என்று முகம் கறுத்தாள் கனலி. இதுவரையில்

அவளைக் காமரி வேவு பார்த்ததேயில்லை. அப்படியிருக்க, இதென்ன புதுப்பழக்கம்? என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. காமரியின் கணிப்பு சரிதான் என்ற உண்மையும் அவளைச் சுட, அவள் மனம் இருதலைக்கொள்ளி எறும்பானது.

"நீ அவன் மீது மையல் கொண்டுள்ள காரணத்தால் தலைவிக்கு உன் மீது ஐயம். அவ்வளவு தான்; வேறு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை கனலி. சரி சரி, வீண் பேச்சு பேசி நேரத்தைக் கடத்தாமல், அவர்கள் இருவரையும் இழுத்துக்கொண்டு தலைவியின் முன் செல்ல வேண்டும். விரைவில் நாவகனுக்குப் பட்டம் சூட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தலைவி சொன்னார்!" என்றது குறளி.

"நாவகனுக்கு பட்டமா? அரண்யாவின் கதி என்னவாவது?" என்று வினவிய கனலியிடம், "அது விரைவில் அணையப் போகிற சுடராயிற்றே! அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? தலைவி நம்மில் பலரை பலநாட்டு சிற்றரசருக்கும் தூதாக அனுப்பியிருக்கிறார். அதில் ஒருவனாவது இந்த வீய பாண்டியனின் மனதினை மாற்ற மாட்டானா என்ன?" என்று சொல்லி இடிஇடியென சிரித்தது குறளி.

'வீய பாண்டியனின் மனதினை மரணம் மட்டுமே மாற்றக்கூடும்!' என்று நினைத்தாலும் கனலி எதுவும் பேசவில்லை. ஆனால் அவள் மௌனத்தை ஆராயும் பொறுமையின்றி குறளி பேசிக்கொண்டே சென்றது.

"அந்தத் துகிரன் மந்திரக்கலையோடு போர்க் கலைகளையும் கற்றுக்கொண்டிருப்பதாகத் தலைவி கூறினார். அதனால் அவனை என்னுடன் பிணைத்துக்கொள்கிறேன். அதன் பின் சுலபமாக அவனை தலைவியிடம் கொண்டு சென்றுவிடலாம். நீ அவளை மூர்ச்சையடையச் செய்து உன்னோடு கட்டி விடு."

"மூர்ச்சையெல்லாம் வேண்டாம். அவள் என்னுடன் முழுச்சம்மதத்துடனே வருவாள்." என்றாள் கனலி.

"எப்படியோ அவள் வந்தால் போதும்!" என்று சொன்ன குறளி, மெல்லத் துகிரனை நோக்கிச் சென்றது.

குறளி அசந்த நேரம் பார்த்துத் துகிரனை தப்பிக்க வைப்பதிலேயே கனலியின் மொத்த கவனமும் இருந்தது. ஆனால் அதற்குள்ளாக அவளை நெருங்கிய வைனி, "நான் தயார். போகலாம்!" என்று சொன்னாள்.

'இவளிடம் குறளியைப் பற்றித் தெரிவிக்க வேண்டும்.' என்று கனலி நினைத்துக்கொண்டிருக்கும் போதே, குறளி துகிரனை

மூர்ச்சையடையச் செய்து தன்னோடு பிணைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தது.

கனலியின் கண்கள் துகிரனைக் கண்டு யோசனையில் விரிய, அவள் கண்கள் போன திசையில் பார்த்த வைனிக்குள் ஆத்திரம் பொங்கியது. "பாவி! நம்ப வைத்து கழுத்தறுத்து விட்டாயே?! என் துகிரனை எங்கே அனுப்புகிறாய்?" என்று கனலியிடம் சண்டையிட்டாள். காரணம் வைனியின் கண்களுக்குக் குறளி தென்படவில்லை; எங்கோ வெறித்தபடியே செல்லும் துகிரன் மட்டுமே தெரிந்தான்.

"ஷ்! சப்தம் செய்யாதே! இது உன் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். நான் சொல்லுவது போல நடந்தால், அவன் உயிர் பிழைப்பான். நான் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவள்." என்று வைனியை ஆசுவாசப்படுத்தினாள் கனலி. அப்போதும் வைனி அவளை நம்பமறுக்க, ஒரு சில மந்திரங்களை உச்சரித்து, அவள் நெற்றிப்பொட்டுகளிலும் புருவத்தின் மத்தியிலும் கனலி தன் கட்டை விரல்களை வைக்க, வைனியால் துகிரனோடு இணைந்திருந்த குறளியைப் பார்க்க முடிந்தது.

"நீங்களெல்லாம் என்ன வகை மனிதர்கள்? எந்த நேரமும் ஏதோ வகை பைசாசங்களுடனேயே திரிகின்றீர்களே!" என்று வைனி வேதனையோடு கேட்க, "அநாதை என்ற வகை மனிதர்கள்!" என்று சற்றும் கலங்காமல் பதிலளித்தாள் கனலி.

அவள் எதிர்பார்த்ததைப் போன்றே வைனியின் வாய் தானாக மூடிக்கொண்டது. "இங்கேயே நின்று என்னுடன் தர்க்கம் செய்து காலம் கழிக்கப் போகிறாயா இல்லை துகிரனை மீட்க எனக்கு உதவப் போகிறாயா என்பதை நீயே முடிவு செய்து கொள்!" என்று சொல்லிவிட்டுத் தன் திட்டத்தை விளக்கிவிட்டுக் கனலி குறளியைப் பின் தொடர்ந்தாள். நொடி நேரத்தில், நடப்பவைகளை அலசிப்பார்த்த வைனி, கனலியை பின் தொடர்ந்து ஓடினாள்.

குறளியை எட்டிய கனலி, "குறளி, இவர்கள் இருவரையும் இப்படியே அழைத்துச்சென்றால் ஏதாவது சிக்கல் வரலாம். அதிலும் இவள் ஏழு குணக்கரை நாடுகளின் இளவரசி வேறு. துகிரன் சுயநினைவின்றி இருக்கும் நிலையைப் பயன்படுத்தி இருவரையும் ஒரு மூடு பல்லக்கில் கொண்டு செல்வோம்!" என்றாள்.

"பல்லக்கு என்றால் அதிக நேரம் பிடிக்குமே?" என்று கேட்டது குறளி. காமரியோ கனலியோ, இருவரில் ஒருவரின் யோசனைப்படியே நடந்துகொள்ளும் குறளிக்குத் தனியாக சிந்திக்கும் வல்லமை

வளர்ந்திருக்கவில்லை. லகிமம் சித்தியை பயன்படுத்தச் சொல்லாமல் பல்லக்கை எதற்காக வரவழைக்கச் சொல்கிறாள் என்கிற கேள்வி அதற்குள் எழவில்லை. மாறாக வேலை செய்யவேண்டுமே என்ற அலுப்பு மட்டுமே அதற்குள் நிறைந்திருந்தது.

"நாமென்ன மனிதர்களை வைத்தா பல்லக்கை சுமக்கச் சொல்லப் போகிறோம்? கிங்கரர்களைத் தானே! ஒரே இரவில் அவர்கள் மதுரையை அடைந்துவிட மாட்டார்களா என்ன? அப்படியே சற்று தாமதமானாலும் கூட பரவாயில்லை. இவர்களைப் பார்த்ததும் காமரி நமக்கு ஏராளமான வெகுமதிகளைத் தருவாள். உனக்கு முக்தி கூட கிடைக்கலாம். யார் கண்டது?" என்று நைச்சியமாகப் பேசி குறளின் பேராசையைத் தூண்டினாள் கனலி.

"நீ சொல்வதும் சரிதான் கனலி. உன் திட்டப்படியே நடக்கட்டும்!" என்று மகிழ்ச்சியோடு சொன்ன குறளி, நான்கு கிங்கரர்களை அழைத்து பல்லக்கை தயார் செய்ய உத்தரவிட்டது.

"மாலை மங்கி விட்டது. நீ பல்லக்கைத் தயாரிப்பதற்கான வேலையைப் பார். நான் இவர்கள் இருவரையும் பார்த்துக்கொள்கிறேன்." என்று கனலி கூறியபோது, "பசிக்கிறது!" என்று சொன்னாள் வைனி.

கிளம்பும் நேரத்தை தாமதப்படுத்துவதற்காகவே வைனி நாடகம் நடத்துகிறாள் என்பதைப் புரிந்துகொண்ட கனலி, "பகையாளியாக இருந்தாலும் பசியாறட்டும்!" என்று கூற, வேண்டா வெறுப்பாக உணவைத் தருவித்தது குறளி.

"துகிரனை விடுவித்துவிடு!" என்றாள் கனலி. அவன் குறளியுடன் பிணைந்திருக்கும் வரையில் இருவரையும் தப்பிக்க வைக்க முடியாது என்பதை கனலி அறிந்திருந்தாள்.

"வேண்டாம் வேண்டாம்! அவன் எழுந்தால் ஆபத்து நேரலாம்." என்று குறளி மறுத்தது. ஆனால் கனலியின் மீது அதற்கு சந்தேகம் வரவில்லை.

"இவள் நம்மிடம் சிக்கியிருக்கும் போது அவன் நம்மை மீறி எதையும் செய்யமாட்டான். என்னை நம்பு!" என்று ஒருவாறு குறளியை சமாதானப்படுத்தினாள் கனலி.

துகிரனின் கட்டை குறளி நீக்க, மொத்த உடலையும் ஒருமுறை குலுக்கிவிட்டு எழுந்தான் துகிரன். கண்ணெதிரேயிருந்த கனலியை திட்டுவதற்கு வாயைத் திறந்தவனைப் பார்த்த வைனி, 'பேசாதே!' என்று சமிக்கை செய்தாள். வைனியும் கனலியும் கண்களாலேயே

பேசிக்கொண்டிருக்க, தான் காண்பது கனவா என்று துகிரன் குழம்பிப்போனான்.

உணவை அவன் முன்பு கனலி வைக்க, வைனியின் பார்வைக்குக் கட்டுப்பட்டு எதுவும் சொல்லாமல் உண்ணும் துகிரனை ஆச்சர்யமாகப் பார்த்தாள் கனலி. வெளியில் சொல்லவில்லை என்றாலும் இருவர் மனதிலும் ஒருவரை ஒருவர் எவ்வளவு ஆழமாக நேசிக்கின்றனர் என்பதைப் புரிந்துகொண்டவளுக்கு துகிரன் மீதிருந்த மையல் துணி கொண்டு துடைத்தாற்போல மறைந்திருந்தது. பிறர் இலையில் உணவுண்ணும் கேடுகெட்ட மனநிலை அவளிடம் இருக்கவில்லை. இருப்பினும் அவளது மனமாற்றத்தை வெளியில் காட்டாமல் தவறானவள் போலவே நடித்துக்கொண்டிருந்தாள்.

பக்கத்திலிருந்த உறுதியான மரங்களைக்கொண்டு ஒரு நாழிகையில் பல்லக்கு தயாராக இருக்க, குறளி கனலியிடம் கிளம்பச் சொன்னது. அப்போது, "கனலி! உனக்கு தலைவி செய்தியனுப்பி இருக்கின்றார்கள்!" என்று இன்னொரு குறளி அங்கே கனலியை தேடிக்கொண்டு வந்தது.

"என்ன விஷயம்?" என்று கனலி செவி மடிக்க, பேரரசனும் பேரரசியும் இறந்த விஷயத்தையும் வீரன் மற்றும் துகிரனின் பெற்றோர்கள் கைது செய்யப்பட்ட விஷயத்தையும் ஆரனையும் வேல்விழியையும் தேடிக்கொண்டிருப்பதையும் மொத்தமாகக் குறளி ஒப்பித்தது. வேல்விழியின் உயிருக்கு எந்தவொரு ஆபத்தையும் உண்டாக்க மாட்டேன் என்று வாக்குத் தந்துவிட்டு அவளை கைது செய்ய காமரி உத்தரவிட்டதன் நோக்கம் ஒருவாறு கனலிக்குப் புரிய, துகிரனோடு சேர்த்து வைனியையும் எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டாள்.

"பல சிற்றரசர்கள் நம் வழிக்கு வர மறுத்துவிட்டனர். அதனால் அவர்களைக் கொன்று புதியவர்களை பணியமர்த்தும் பணியில் தலைவி ஈடுபட்டிருக்கின்றார். நாளைக் காலையில் நாவகனுக்கு மகுடதாரண விழாவை நம் பிதுரனின் உறவினன் கலரன் நடத்திவைக்க உள்ளார். இனி அவரே நாவலந்தீவின் தலைமைக்குருவாகவும் இருப்பார்! உன்னை எங்கிருந்தாலும் உடனே வரச்சொல்லி தலைவி உத்தரவிட்டிருக்கிறார்!" என்று முடித்தது இரண்டாம் குறளி.

கலரன் என்கிற பெயரைக் கேட்டதுமே கனலியின் முகம் அரண்டு போனது. 'இந்த நாவலந்தீவில் அவனை விட்டால் வேறு யாருமேவா கிடைக்கவில்லை இந்தக் காமரிக்கு?' என்று மனதிற்குள் அவளால் வசைபாடாமல் இருக்கமுடியவில்லை. 'ஐயோ! இந்த

நிலையில் வைனியை அங்கே அழைத்துச் செல்வது மூடத்தனத்தின் உச்சக்கட்டம்!' என்று தனக்குளேயே சொல்லிக்கொண்டவள், "மிக்க மகிழ்ச்சி! மிக நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறாய்! நான் பரிசுகளுடன் காமரியை வந்து சந்திக்கின்றேன் என்று சொல்லிவிடு!" என்று குறிப்பால் துகிரனையும் வைனியையும் காட்டினாள் கனலி. அவர்களைக் கண்ட குறளியின் முகத்தில் இன்னதென்றே விவரிக்க முடியாத ஒருவகை இளிப்பு தோன்றியது. உடனே இரண்டாவதாக வந்தக் குறளி மறைந்து போனது.

"நாம் கிளம்பலாம்!" என்று கனலி சொன்னதும், அவள் முகத்தின் செய்தியைப் படிக்க முடியாமல் வைனி திணறினாள். ஆனால் அந்த நேரத்தில் வேறெதுவும் செய்யும் திராணி இல்லாத காரணத்தால் பேசாமல் பல்லக்கில் ஏறினாள் வைனி. அவளைத் தொடர்ந்து துகிரனும் ஏற, கனலியும் ஏறிக்கொண்டாள். அவளுடனே உள்ளே வர எத்தனித்த குறளியைத் தடுத்து நிறுத்தியவள், "நாளை நான் காமரியுடன் இருக்கும் அவசியத்தை அந்தக் குறளி சொல்லிச் சென்றதை அறிவாயில்லையா? நீயும் உள்ளே வந்தால் கிங்கரர்களை யார் வேலை வாங்குவார்கள்? அதுமட்டுமின்றி எனக்கு ஓய்வு தேவைப்படுகிறது. போ! சீக்கிரம் மதுரைக்குச் செல்லும்படி கிங்கரர்களை விரட்டு!" என்று மிடுக்காகச் சொல்லி கனலி சாய்ந்துகொள்ள வேறு வழியின்றிக் குறளி வெளியே கிங்கரர்களுடன் நின்று கொண்டது.

'என்ன?' என்று பார்வையாலேயே கேட்ட வைனியிடம் உதட்டில் விரலை வைத்து, 'ஷ்! பிறகு' என்றாள் கனலி. வாயுவேகம் மனோவேகமாக பல்லக்கு சென்றுகொண்டிருந்தது. வெளியிலிருந்து பார்க்கும் மனிதக் கண்களுக்கு அப்படியொரு பல்லக்கு அவர்களைக் கடந்து செல்கிறது என்று சத்தியம் செய்தாலும் தெரியாது.

வெளியில் காவலுக்கு இருக்கும் குறளி உள்ளே பேசிக்கொண்டிருப்பதை ஒட்டுக்கேட்கிறது என்பதாலேயே கனலி வைனியை எச்சரித்தாள். பின் பல்லக்கு வேகமெடுக்க ஆரம்பித்ததும், குறளிக்கு சந்தேகம் வராதபடி சுற்றிலும் ஒவ்வொரு மந்திரக்கட்டுக்களாகப் போட்டவள், சுருக்கமாக மதுரையில் நடந்தவற்றை துகிரனிடமும் வைனியிடமும் கூறினாள். 'நெஞ்சு பொறுக்குதில்லையே!' என்று கதறிய இருவரையும் அமைதிப்படுத்த கனலி படாதபாடு படவேண்டி இருந்தது.

"இப்போது துக்கப்படுவதற்கோ கோபப்படுவதற்கோ நேரமில்லை. அரண்யாவையும் வீரனையும் எப்படியாவது காமரியின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் அவர்கள் இருவரையும்

நாவலந்தீவிலிருந்து வேறு எங்காவது அழைத்துச் சென்று விடுங்கள். கடந்ததை மறந்து கண்காணாத இடத்தில் ஒரு தேசத்தை உருவாக்கி அவளை அங்கே மகாராணியாகும்படி புத்தி சொல்லுங்கள். நான் இங்கே காமரிக்கு புத்தி சொல்லி, நாவகனை மணந்துகொண்டு மகிழ்ச்சியோடு வாழச் செய்கிறேன். நீங்கள் இருவரும் எப்படியாவது அரண்யா வீரனோடு வேறு நாட்டிற்குச் சென்று விடுங்கள். தென்பாலி நாடுகளின் அடர்வனத்தில் ஒளிநாட்டின் இளவரசன் நவிரன் மறைந்திருப்பதாக செய்தியிருக்கிறது. அவனிடம் சென்றுவிட்டீர்களென்றால், உங்களை பத்திரமாக நாடு கடத்தும் வேலையை அவன் பார்த்துக்கொள்வான்." என்றாள் கனலி.

"கோழை போல ஓடச்சொல்கிறாயா?" என்று ஏளனமாக பேசினான் துகிரன்.

"இல்லை! புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளச் சொல்கிறேன்!" என்றாள் கனலி.

"இதற்கு எங்களில் யாரும் சம்மதிக்க மாட்டார்கள்." என்றான் துகிரன்.

"உயிரை விட எதுவும் பெரிதில்லை துகிரா!" என்றாள் கனலி.

"எதிரியின் மீது இதென்ன திடீர் பாசம்? உன்னை நம்புவது எனக்குச் சரியாகப் படவில்லை!" என்று அவளை நம்பாத பார்வை பார்த்தான் துகிரன்.

"ஐயோ! நிலைமை புரியாமல் உளறாதே துகிரா! உனக்குக் காமரியின் சக்தி பற்றிய அரிச்சுவடிப் புரிதல் கூடக் கிடையாது. அதிலும் அந்தக் கலரன் இருக்கிறானே! அப்பப்பா! அவன் பைசாசங்களை விடக் கொடூரமானவன். அவன் கைகளில் வைனி சிக்கினால், அவளை அணுஅணுவாக வதைத்து சிதைத்துவிடுவான். வைனியை பத்திரப்படுத்தும் வரையாவது தயவு செய்து உன் வீர தீரத்தை எல்லாம் மூட்டை கட்டி வை." என்று அவள் குணத்திற்குப் பொருந்தாவகையில் கெஞ்சினாள் கனலி.

வைனி என்கிற மந்திரச் சொல் கனலி நினைத்த மாற்றத்தை துகிரனிடம் உண்டாக்கியது. "நீ சொல்வது உண்மையென்றால் என் உயிரிருக்கும் வரை உனக்குக் கடன்பட்டவனாவேன்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் துகிரன்.

"உன் கடன் யாருக்கு வேண்டும்? ஏதோ தோன்றியதை செய்கிறேன். அவ்வளவு தான்!" என்று தோளைக் குலுக்கிய கனலியைக் கட்டிக்கொண்டாள் வைனி.

"நாங்கள் இல்லாமல் நீ மட்டும் சென்றால் காமரி உன்னை எதுவும் செய்ய மாட்டாளா?" என்று அதுவரை பேசாதிருந்த வைனி கேட்டாள்.

"அவளுக்கிருக்கும் ஒரே உறவு, நட்பு நான் மட்டுமே! முதலில் கோபித்தாலும் பிறகு என் எண்ணத்தை அவள் புரிந்துகொள்ளுவாள். அதிக உயிர்பலி நேராதவாறு, ஆனால் அதே நேரத்தில் அவள் நோக்கத்தை அடையுமாறு செய்வதே என் வேலை. அதனால் என் பேச்சை அவள் கேட்பாள்!" என்றாள் கனலி. காமரியின் வெறிக்கு முன் நட்பென்றோ உறவென்றோ எதுவும் நிற்கமுடியாது என்பது தெரிந்திருந்தும் வைனியிடம் மனதறிந்து பொய் சொன்னாள் கனலி.

"இதுவரை அரண்யாவை மட்டுமே என் உடன்பிறவா சகோதரி என்று எண்ணியிருந்தேன். இன்றிலிருந்து நீயும் எனக்கு ஒரு சகோதரி போன்றவளே!" என்று வைனி சொன்னதும், துளிர்த்த கண்ணீரை சிரமப்பட்டு விழுங்கினாள் கனலி. பந்தபாசத்திற்கு இப்போது நேரமில்லை. காமரியின் மனதினை மாற்றினால் ஒழிய இவர்களால் வாழ முடியாது என்பதைக் கனலி நன்கறிந்திருந்தாள்.

"நீங்கள் செல்லும் முன் கடைசியாக ஒன்று! இதோ! இந்தத் தாயத்தை இருவரும் கட்டிக்கொள்ளுங்கள். இது உங்களை அரூபங்களின் பார்வையிலிருந்து காப்பாற்றும். பல்லக்கின் வேகத்தை குறைக்கும்படி குறளியிடம் நான் பேச்சுக்கொடுக்கும் வேளையில், நீங்கள் இருவரும் வெளியே குதித்து விடுங்கள். பல்லக்கை சுமக்கும் கிங்கரர்களுக்கு பாரம் குறைந்தது போன்று தோன்றாதவாறு நான் ஏதாவது செய்து சமாளித்துக்கொள்கிறேன். அதன்பிறகு உங்கள் சமர்த்து. எப்படியாவது நவிரனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அவனுடன் சேர்ந்துகொள்ளுங்கள். நாம் சந்திப்பது இதுவே கடைசி முறையாக இருக்கட்டும் என்று ஈசனைப் பிராத்திக்கிறேன்! எக்காரணம் கொண்டும் தாயத்தை மட்டும் இழந்து விடாதீர்கள்! ஜாக்கிரதை!" என்று சொன்ன கனலி, மற்ற இருவரும் பதில் கூறும் முன்னமே பல்லக்கின் சாளரத்தை மூடியிருந்த திரையை கொஞ்சமாக விலக்கி அவள் முகம் மட்டும் வெளியே தெரியுமாறு பார்த்துக்கொண்டாள். பின் குறளியை அழைத்தாள்.

கனலியின் கண் ஜாடையில் கைகளில் தாயத்தை கட்டிக்கொண்டவர்கள், அவளின் சமிக்கையை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

"உடலெல்லாம் நோகிறது குறளி. ஒரு சில நிமிடங்களுக்கேனும் மனித வேகத்தில் செல்லச் சொல்லேன். எனக்கு

கைகால்களை நன்றாக நீட்டி நெட்டி முறிக்கவேண்டும் போலிருக்கிறது. அதன் பிறகு எவ்வளவு வேகத்தில் சென்றாலும் மதுரை வரையிலும் நான் வாய் திறக்கவே மாட்டேன்!" என்றாள் கனலி.

அவளை ஏறஇரங்கப் பார்த்த குறளி பல்லக்கின் வேகத்தைக் குறைத்தது. கனலி கூறியபடியே பல்லக்கின் வேகத்தைக் குறைத்த மறுநொடியில் வைனியும் துகிரனும் கீழே குதித்தனர்.

பேச்சு சுவாரசியத்தில் அவர்களைக் குறளி கவனிக்காதவாறு, மந்திரத்தால் குறளியைக் கட்டினாள் கனலி . லேசான சிராய்ப்புகளோடு தப்பித்தவர்கள் காமரியின் கைகளில் சிக்கக்கூடாது என்று வேண்டுவதைத் தவிர அவளால் அந்த நொடியில் வேறெதையும் செய்ய முடியவில்லை. துகிரனுக்கும் வைனிக்கும் தெரியாத இன்னொரு விஷயம் என்னவென்றால், அவர்கள் இருவருக்கும் கனலி தந்தது, காமரியே அவளுக்குப் பரிசளித்த தாயத்துகள். கனலியே மனமுவந்து அவற்றை அவர்களுக்குத் தந்தாள் என்று மட்டும் காமரிக்குத் தெரிந்தது... கனலியின் நிலை அந்தோ பரிதாபம் தான்!

கனலியின் தயவால் தப்பிப் பிழைத்த துகிரனும் வைனியும் எங்கிருக்கிறோம் என்றே புரியாமல் அருகில் ஏதேனும் கிராமம் தென்படுமா என்று பார்த்துக்கொண்டே நடந்தனர். பொழுது விடியவும் ஒரு வீட்டை அவர்கள் அடையவும் சரியாக இருந்தது. முழு இரவும் எங்கும் நிற்காமல் நடந்துகொண்டேயிருந்ததினால் இருவரும் கீழே விழுந்துவிடும் அளவிற்கு சோர்ந்து போயிருந்தனர். பத்தாததற்கு உடலெங்கும் சிராய்ப்புகள் வேறு. இவர்களின் நிலையைப் பார்த்த அந்த வீட்டுப் பெண்மணி, வாசல் தெளித்துக்கொண்டிருந்த வேலையை உடனே நிறுத்திவிட்டு வைனியை கைத்தாங்கலாக அழைத்துச் சென்று அவர் வீட்டுத் திண்ணையில் அவளை அமரவைத்தார். பின் உள்ளே குரல் கொடுக்க, அவரது கணவன் வந்து துகிரனுக்கு உதவினார்.

"உங்கள் வீடு போல் நினைத்துக் கொள்ளுங்கள் மக்களே!" என்று கனிந்த முகத்தோடு சொன்ன அந்த வீட்டின் தலைவர், இருவரின் நன்றிகளையும் பெற்றுக்கொண்டு, பக்கத்தில் பட்டியிலிருந்த மாடுகளை ஓடிக்கொண்டு மேய்ச்சலுக்குச் சென்றார்.

வைனியும் துகிரனும் கால்களை நீட்டி அமர்ந்ததும் எந்தவொரு கேள்வியும் கேட்காமல் இருவருக்கும் நீரும் சோறும் தந்தார் அந்தப் பெண்மணி. பின் இருவரின் காயங்களுக்கும் மருந்திட்டார். சற்று நேரம் கண்மூடி உட்கார்ந்ததும், இருவருக்கும் இழந்த வலிமை ஓரளவிற்குத் திரும்பிக் கிடைத்தது.

"நன்றி அம்மா!" என்று வைனி கை கூப்ப, "உன்னைப்

பார்த்தால் அதிக களைப்பாகத் தெரிகிறாய். சற்று நேரம் உறங்கம்மா. நீயும் உறங்கப்பா" என்று சொல்லி வைனியை உள்ளே அனுப்பிவிட்டு துகிரனுக்கு திண்ணையில் ஒரு பாயும் தலையணையும் தந்தார். ஆனால் துகிரன் அதை மறுத்து விட்டு, "இது எந்த இடம்?" என்று கேட்க, அவனை ஒரு முறை நன்கு ஆராய்ந்தார். களையாக இருந்த முகத்தில் பிழையாக ஒரு ரேகைகூடத் தெரியவில்லை அவருக்கு. அதனால் அவனுக்கு பதில் தருவதென்று முடிவு செய்தார்.

"இது ஆய்குடி, தென்பாலி நாட்டிலிருந்து மதுரைக்கும் மேருவிற்கும் பிரியும் பாதையில் இருக்கிறது." என்று அவர் சொன்னதும், துகிரனின் மூளை வேகமாகக் கணக்குப் போட ஆரம்பித்தது.

"உங்கள் இருவரையும் பார்த்தால் எதிலிருந்தோ தப்பி வந்தது போலத் தெரிகிறது. ஆனால் உங்கள் முகங்களைப் பார்த்தால் தப்பு செய்தவர்களைப் போலவும் தெரியவில்லை! நீங்கள் யார்?" என்று கேட்டார் அந்தப் பெண்.

அவர் முகத்தைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ, துகிரன் அப்படியே நடந்த விஷயங்களை எல்லாம் அவரிடம் தெரிவித்துவிட்டான்.

அவர்கள் கதையைக் கேட்ட அந்தப் பெண், "அடிப்பாவி! இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? அதுவும் நம்ம ராசா குடும்பத்துல இவ்வளவு கலகமா?" என்று நொந்து போனார்.

"நான் என் நண்பன் நவிரனைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது தாயே! அதுவரையில் உங்களால் வைனியை மட்டும் பார்த்துக்கொள்ள முடியுமா? என் உயிர் உள்ளவரை உங்கள் குடும்பத்திற்கு மாடாய் உழைத்து என் நன்றிக் கடனை செலுத்துவேன்!" என்று அவரை வணங்கினான் துகிரன்.

அவன் அன்பில் நெகிழ்ந்தவர், "அட! என்னப்பா இது? ஏழு குணக்கரை நாடுகளின் இளவரசி இந்த ஏழைக் குடிலில் தங்குவதற்கு நானல்லவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும்? நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கிறேன். நீ கலங்காது திரும்பி வா!" என்று அவனுக்கு உறுதி தந்தார்.

"நான் தனியே செல்வது அவளுக்குத் தெரிந்தால், விட மாட்டாள். அதனால் நான் இப்பொழுதே செல்கிறேன் தாயே!" என்றான் துகிரன்.

"நடந்து சென்றால் எப்போது உன் நண்பனை நீ பார்ப்பது?

கொல்லையில் என் கணவரின் குதிரை இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு செல்!" என்று எதையும் எதிர்பாரா அன்போடு துகிரனுக்கு குதிரை ஒன்றையும் தந்தார் அந்த மாதரசி.

"இந்த உதவியை நான் என்றும் மறவேன்!" என்று சொல்லித் துகிரன் குதிரையின் மீதேறி நவிரனைத் தேடிக்கொண்டு தென்பாலி நாட்டின் அடர்வனத்தை நோக்கி விரைந்தான். அசந்து தூங்கிவிட்டு வைனி எழுந்திருக்கும் போது துகிரன் எங்கோ மறைந்துவிட்டான். என்னைக் கேட்காமல் அவன் எப்படி தனியே செல்லலாம் என்று கோபமாக இருந்தவளை ஒரு அன்னையின் வடிவில் இருந்து உண்ண வைத்து உறங்க வைத்து பார்த்துக் கொண்டார் அந்தப் பெண்.

இரண்டு நாட்கள் ஆய்குடியில் மகிழ்ச்சியோடு இருந்த வைனியின் இருதயத்தை பிளக்க வேண்டும் என்ற முடிவுடனேயே அன்று அந்தி சாய்ந்தது. மேச்சல் முடிந்து மாடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டுக் கணவனும் மனைவியும் வர, சூறைக்காற்று அந்தக் குடிலை துவம்சம் செய்தது. கூரை பிய்த்துக்கொண்டு எங்கோ பறக்க, என்ன செய்வதென்று தெரியாமல் கையை பிசைந்தனர் இருவரும்.

வெளியே வந்த வைனிக்கு இது சூட்சம சக்திகளின் வேலை என்பது நன்றாகத் தெரிந்ததும், அவள் கையை பார்க்க, அங்கேயிருந்த தாயத்தைக் காணாது பதறினாள். '"ஐயோ! நான் இருக்கும் இடம் தெரிந்து போயிற்றே!'" என்பது தான் அவள் கடைசியாகப் பேசிய வார்த்தைகள். அவள் பின்னந்தலையில் யாரோ ஓங்கி அடிக்க, அப்படியே தரையில் முன்புறம் சரிந்து குப்புற விழுந்தாள் வைனி. கண்களை மூடும் போது அவளுக்கு அதுவரை பாதுகாப்பாக இருந்த அந்த அன்பான கணவனும் மனைவியும் ரத்த வெள்ளத்தில் மிதப்பதைக் கண்டாள். கதறக்கூடத் திராணியின்றி இறந்துவிடப் போகிறோம் என்கிற உணர்வுடன் அப்படியே மயங்கினாள்.

வைனி கண்களைத் திறந்த போது ஒரு புதிர்ப்பாதையின் நடுவே கிடத்தி வைக்கப் பட்டிருந்தாள். அவள் முன்னால் குறைந்தது ஒரு பத்துப் பாதைகளாவது இருக்கும். எழுந்து நிற்க முயன்றால் தலை மிகவும் பாரமாக இருந்தது. வெறும் வயிறு காந்தியது. நெஞ்சமெல்லாம் படபடவென்று அடித்துக்கொண்டு ஏதோ இனம் புரியாத பயம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

"இதுதான் மரணமோ?" என்று வாய்விட்டு யோசித்தாள் வைனி. உடனே அவள் ஈரக்குலை நடுங்குமளவிற்கு ஒரு சிரிப்புச் சத்தத்தைக் கேட்டாள்.

"மரணமா? ஆனாலும் உனக்குப் பேராசை பெண்ணே!

துவங்குவதற்கு முன்னமே நீ இறந்து போனால் எனக்கெப்படி பொழுது போகும்?" என்று சொல்லியபடியே அவள் பின்கழுத்தில் வெப்பமான மூச்சுக்காற்று பட, அருவருத்தபடியே வேகமாகத் திரும்பினாள். ஆனால் அங்கு யாருமே இல்லை.

"யாரது?" என்று நடுங்கும் குரலில் வைனி கேட்டாள்.

"உன் விதியை இனி எழுதுபவன்!" என்று அவள் காதில் கிசுகிசுப்பான ஒரு ஆண் குரல் கேட்க, கைகள் நடுங்க, நகர்ந்து போனாள். அவளின் நடுக்கத்தைப் பார்த்து இன்னும் அதிகமாகச் சிரித்தான் அவன். மற்றவரின் பயம் அவனுக்கு எப்போதுமே ஒரு போதையைத் தரும். அதிலும் அழகான இளம்பெண்ணென்றால் அதுவொரு தனி சுகம் தான் அவனுக்கு.

"நீ மிகவும் தைரியசாலியாமே? பார்ப்போம் உன் நெஞ்சுரத்தை!" என்று கொக்கரித்தது குரல்.

"என் துணிவை நீ பரிசோதிப்பது இருக்கட்டும். உனக்குத் துணிவிருந்தால் உன் முகத்தைக் காட்டடா!" என்று முயன்று வரவழைக்கப்பட்ட வீரத்துடன் வைனி கூறினாள்.

"என் கைதிகளிடம் நான் மிகவும் அன்புடன் தான் நடந்து கொள்வேன். மரியாதை தந்தால் அதே மரியாதை உனக்கும் திரும்பக் கிடைக்கும்!" என்று எச்சரித்தது குரல்.

"நான் ஏழு குணக்கரை நாடுகளின் இளவரசி! இப்பொழுதே என்னை விடுதலை செய்!" என்று ஆணையிட்டாள் வைனி. ஆனால் அப்போதும் சிரிப்புத்தான் அவளுக்குக் கேட்டது.

"இளவரசியா? பலே! வேண்டுமானால் ஒரு போட்டி வைத்துக்கொள்ளுவோம். அதில் நீ வென்றால் உன் முன் தோன்றி உன்னை உடனே விடுவித்து விடுவேன். இல்லை நான் வென்றால், அக்கணத்திலிருந்து நீ என் அடிமை. புரிகிறதா?" என்று குரல் மட்டும் மீண்டும் கேட்டது. வைனி பேசாது அப்படியே நிற்க, "ஒப்புக்கொள்வதைத் தவிர உனக்கு வேறு வழியில்லை கண்ணே!" என்று எள்ளி நகையாடியது அந்தக் குரல்.

"என்ன போட்டி?" என்றாள் வைனி.

"நீ ஒரு புதிரின் மையத்தில் இருக்கிறாய். உன் முன்பு பத்து வழிகள் பிரிகின்றது. ஆனால் இங்கிருந்து வெளியேற ஒரே ஒரு சரியான வழி மட்டுமே உள்ளது. அதைக் கண்டுபிடித்து விட்டால், நீ வெற்றி பெற்று விடுவாய்; நானும் உன்னை விடுவித்து விடுவேன்." என்று சிரித்தது குரல்.

"சரி!" என்று வைனி சொன்ன மறுநிமிடம், தரை வேகமாக சுழலத் துவங்கியது.

"போட்டி ஆரம்பமாகட்டும்!" என்ற குரலைத் தொடர்ந்து பலரின் கைதட்டல்களும் மகிழ்ச்சி ஆரவாரங்களும் வைனிக்குக் கேட்டது. ஆனால் அவள் கண் முன்னே யாருமே இல்லை. சன்னமான வெளிச்சம் மட்டுமே அவளைச் சூழ்ந்திருந்தது.

முதலில் சாதாரணமாகத் தோன்றிய பாதை, நேரம் செல்லச் செல்ல அபாயகரமாகிக் கொண்டே சென்றதை வைனி உணரவேயில்லை. சரியான வழியென்று நினைத்து அவள் செல்லும் போது திடீரென பாதை நழுவும்; பூமி சுழலும். ஆரம்பித்த இடத்திற்கே அவள் வந்து சேருவாள். மறுபடியும் இன்னொரு பாதை வழியே பயணத்தைத் தொடங்குவாள்.

வலது புறத்தில் திருப்பம் இருப்பதைப்போன்று தோன்றும். ஆனால் திரும்பினாலோ, நெருஞ்சி முட்கள் காலைப் பதம் பார்க்கும். சென்று கொண்டிருக்கும் போதே திடீரென ஏதோவொரு பிசாசு தோன்றி உயிர் நோக வைனியை அறைந்து தள்ளும். இல்லாவிட்டால் உயிர்நாடியிலேயே எட்டி உதைக்கும். வலியில் வைனி துடிக்கும் ஒவ்வொரு நொடியும் உல்லாசக்கூச்சல்கள் அந்த இடத்தையே நிறைக்கும்.

எவ்வளவு இடர் வரினும், வைனி வெளியே செல்லும் பாதையைத் தேடுவதை நிறுத்தவேயில்லை. சாப்பாடு தூக்கமின்றி பைசாசங்களோடு பைசாசமாக வெறிகொண்டு வழி தேடினாள் வைனி. அவளுள்ளே அப்படியொரு உறுதி இருக்குமென்பதைக் கலரனே எதிர்பார்க்கவில்லை. ஆம்! வைனியை ஆய்குடியில் இருந்து தூக்கிவந்து கலரனிடம் தான் ஒப்படைத்திருந்தன யட்சிணிகள்.

துன்பத்தில் அவள் துவண்டு போகும் வேளையில் எல்லாம், துகிரனின் முகத்தை நினைத்தே முன்னேறினாள். அந்த நேரத்தில் உலகில் இருக்கும் எவரைப் பற்றியும் அவளுக்குக் கவலையில்லை. துகிரனை சந்தித்து அவள் காதலை சொல்ல வேண்டும் என்ற ஒற்றை எண்ணமே அவளை வழி நடத்தியது.

சரியான போக்கில் அவள் சென்றால் சொல்லொண்ணாத் துயர்கள் அவளுக்கு நடந்தேறின. உடலோடு மனமும் புண்படும் வகையில் பல கொடுமைகள் அரங்கேறின. அவள் விரல்களைச் சுத்தியல் கொண்டு அடிப்பதும், ஆடையைக் களைய முயல்வதும், பழுக்கக் காய்ச்சிய கம்பியினால் உடலில் சூடு வைப்பதும் எப்பொழுதும் நடக்கும் நிகழ்வானது. ஆனாலும் என்ன செய்தாலும் அவள்

மனவுறுதியை மட்டும் குலைக்க முடியவில்லை என்பது நாளுக்கு நாள் அதிகரிக்கும் சித்ரவதைகளில் இருந்தே அவள் தெரிந்து கொண்டாள்.

வைனி மட்டுமல்ல, கலரனும் அவளின் உறுதியைத் தெரிந்து கொண்டது தான் அவளுக்கு வினையாகிப் போனது!

'என்னைக் கொன்று விடு!' என்று விரைவில் அவனிடம் கெஞ்சும்படி அவள் நிலையைத் தாழ்த்தியது.

*************************************************************

துகிரன், வைனியை பத்திரமான ஓரிடத்தில் வைத்திருப்பதாக நினைத்து நிம்மதியாக நவிரனைத் தேடிக்கொண்டு தென்பாலி நாட்டின் அடர்வனத்திற்குள் புகுந்தான். வைனியைப் போலவே துகிரனும் புதிர்ப்பாதையின் ஊடே சென்றுகொண்டிருப்பதைப் போல, பல வளைவுகள் திருப்பங்கள் என்று அவன் போனாலும், நவிரன் இருக்குமிடம் மட்டும் அவனுக்குத் தெரியவில்லை.

"நவிரா!" என்று விரக்தியடைந்த துகிரன் ஒரு கட்டத்தில் உரக்கக் கத்தினான். அப்போது சட்டென முகமூடி அணிந்திருந்த ஒருவன் துகிரனின் முன் தோன்றி ஒரு நெடுவாளால் அவன் கழுத்தைக் குறி வைத்து, "யார் நீங்கள்?" என்று கேட்டான்.

"நான் துகிரன். நவிரனின் நண்பன்!" என்று அஞ்சாமல் துகிரன் பதிலளிக்க, அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆராய்ந்தான் மற்றவன். துகிரன் ஆயுதம் இல்லாமல் இருப்பதை உறுதி செய்துகொண்டவன், நவிரன் மறைந்திருக்கும் இடத்திற்குத் துகிரனை இட்டுச் சென்றான்.

"நவிரா! உன்னைப் பார்க்க துகிரன் என்பவர் வந்திருக்கிறார்." என்று முகமூடி அணிந்தவன் கூற, "நண்பா! எப்படியிருக்கிறாய்? என்று கேட்டபடியே நவிரன் வெளியே வந்தான். வெகுகாலம் கழித்து சந்தித்துக்கொள்ளும் நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்ட பின் துகிரனை குகையினுள்ளே அழைத்துச் சென்றான் நவிரன். 'ஏன் சொல்லாமல் சென்றாய்?' என்று துகிரன் கேட்கும் முன்னரே நவிரன் காமரியைப் பற்றியும் மரணத்தின் பிடியிலிருந்து அவன் தப்பியதை பற்றியும் கூறினான். குவேணியும் இரும்பனும் அவனுக்கு உறுதுணையாக இருந்ததைக் கேட்க்கையில் துகிரனின் புருவங்கள் உயர்ந்தன. அதிலும் குவேணி இப்போது கப்பல் கட்டும் வேலையைத் தொடங்கிவிட்டாள் என்பதை அறிந்ததும் குருதேவர் கமலநாதர் கணித்த நாள் விரைவிலேயே வரப் போகிறது என்பதைத் துகிரன் உணர்ந்து கொண்டான். நவிரனின் கதையைக் கேட்டவன், அவன் கடந்த வந்த பாதையை சொல்லிக் கொண்டிருந்தான்.

"நவிரா! குவேணியிடமிருந்து செய்தி வந்திருக்கிறது! நாம் பயந்தது நடந்துவிட்டது!" என்று கத்திக்கொண்டே முகமூடி அணிந்திருந்தவன் மறுபடியும் உள்ளே வந்தான்.

"சமீராணா பொறு! என்ன நடந்தது?" என்று நவிரன் கேட்க, 'என்னது சமீரணனா?' என்று பாய்ந்து சென்று அவன் கழுத்தைப் பிடித்தான் துகிரன். அவன் பிடியிலிருந்து சமீரணனை விலக்கி நிறுத்தினான் நவிரன்.

"துகிரா! உன் கோபம் நியாயமானதே. வீரனின் அப்பா ரணதீரரின் மரணத்திற்கு சமீரணனும் ஒரு காரணம் என்றாலும், அவரைக் கொன்றது கருவலன் என்பதை மறவாதே! காமரியின் பிடியில் சிக்கித் தன் வாழ்வை இழந்த பலநூறு மனிதர்களில் நானும் அவனும் இருக்கிறோம். எங்கள் பாவங்களுக்கு எங்களால் இயன்ற பிராயச்சித்தங்களை செய்கிறோம். தயவு செய்து அமைதியோடிரு!" என்று துகிரனை அமைதிப்படுத்தினான் நவிரன்.

"அவரை விடு நவிரா! வஞ்சகியின் காதலை உண்மை என்று நம்பிய என் மூடத்தனத்தை என்னவென்று சொல்லி நொந்து கொள்வது? நாட்டுப்பற்று என்ற போலிச் சாயம் பூசி நான் உயிராக நேசிக்கும் என் படைகளை என் கண்ணுக்கு முன்னாலேயே பலிகொடுத்து விட்டாள் அந்தப் பாவி! உயிர் கொடுத்தாவது காப்பேன் என்று உறுதியெடுத்த மன்னனைப் பறி கொடுத்து, பதவி இழந்து, மக்களின் அபிமானத்தை இழந்து நாடு திரும்பும் யோக்கிதையற்ற நிலையில் தனிமரமாக நிற்கிறேன்! அவர் என்னைக் கொல்ல நினைப்பதிலும் ஞாயம் இருக்கிறது. நான் தடுக்க மாட்டேன். அவர் விருப்பப்படியே விட்டுவிடு. எனக்கும் இந்த அற்ப வாழ்விலிருந்து விடுதலை கிடைக்கட்டும்!" என்று சொல்லிக் குலுங்கிக் குலுங்கி அழுதான் சமீரணன்; ஒருகாலத்தில் பின்பாலை நாடுகளின் சேனாதிபதி சமீரணனாக காமரியின் வலது கரம் போலச் செயல்பட்டவன்.

நவிரனின் மீதிருந்த நம்பிக்கையாலும் சமீரணனின் கண்ணீரில் இருக்கும் உண்மையை அறிந்ததாலும் துகிரன் சமீரணனை மன்னித்தான். அதன் பிறகு, குறளி தெரிவித்த விஷயங்களைத் துகிரன் சொல்ல, குவேணியும் அதையே செய்தியாக அனுப்பியிருப்பதாகச் சமீரணன் சொன்னான்.

"இன்னுமொரு கூடுதல் செய்தி! ஆனால் அதை எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை." என்று சமீரணன் தயங்கினான்.

"எதுவாகயிருந்தாலும் தயங்காமல் சொல்!" என்று ஊக்கினான் நவிரன்.

"இரண்டு இளம்பெண்களைச் சிறை பிடித்துச் சித்ரவதை செய்துகொண்டிருப்பதாகவும்... அதில் ஒருத்தி பார்ப்பதற்கு வைனி என்ற பெண் போலிருப்பதாகவும் செய்தியில் இருக்கிறது." என்று சமீரணன் சொல்லவும், துகிரனின் முகம் வெளுத்து கண்கள் இருண்டு விட்டது.

"வைனி, வைனி!" என்று துகிரன் அரற்ற, அவன் சோகத்தை வைத்து வைனி எந்தளவிற்கு அவன் மனதை பாதித்திருக்கிறாள் என்று நவிரனும் சமீரணனும் புரிந்து கொண்டனர்.

"கவலைப் படாதே துகிரா! உடனே கிளம்புவோம். வைனியை மீட்டு வருவோம்!" என்று நவிரன் சூளுரைத்த நொடியில், "என்னால் முடிந்த உதவியைச் செய்யலாமா?" என்று கேட்டபடியே இரும்பனின் மீது சாய்ந்து கொண்டு குருதேவர் ஐம்பூதனார் நின்றுகொண்டிருந்தார்.

கொடும்போர் புரிந்ததைப் போன்ற பல காயங்கள் அவர் உடலில் இருந்தது. குருதி வழிய நின்றிருந்தவரின் முகத்தில் தோல்வியின் வேதனை படர்ந்திருந்தது.

"குருதேவா!" என்று நவிரனும் துகிரனும் பதறி எழ, சமீரணன் ஐம்பூதனாருக்கு வேண்டிய படுக்கையைத் தயார் செய்தான்.

"மேருவை அழித்து விட்டாளாப்பா! பாதகத்தி, மேருவை அழித்தே விட்டாள்!" என்று விழிநீர் வழியப் பொதுவாகச் சொன்னவர், உணர்விழந்து அப்படியே மூர்ச்சையானார்.

வைனியைப் பார்ப்பதா இல்லை குருதேவரை முதலில் பார்ப்பதா என்ற பெருங்கேள்வி அவர்கள் முன்னிலையில் பூதாகாரமாக வந்து நின்றது.

துகிரனின் மனதை இன்னுமொரு கேள்வி அரித்துக் கொண்டிருந்தது. இரண்டு இளம்பெண்கள் என்றால் வைனியோடு சேர்ந்து அல்லல் படும் மற்றொரு மடந்தை யார்?

'கடவுளே! எங்களைக் காத்ததற்காக கனலியை அந்தப்பேய் தண்டித்துவிடாமல் பார்த்துக்கொள்!' என்று இறைஞ்சுவதைத்தவிர வேறெதுவும் அந்நேரத்தில் அவனுக்குத் தோன்றவில்லை!

## அத்தியாயம் 19

தென்மதுரை - நாவகன் பதவியேற்ற அன்று மாலை!

கனலி ஊருக்குள் நுழையும் போதே அவள் மனம் திகிலடைந்தது. அங்கே என்னென்ன நடந்திருக்கும் என்பதையும் காமரியின் தற்போதைய மனநிலையையும் அவளால் சுலபமாக யூகிக்க முடிந்தது.

'ஐயையோ! இதில் நான்தான் துகிரனையும் வைனியையும் தப்பிக்க வைத்தேன் என்று காமரிக்குத் தெரிந்தால், முதல் பலி நானாகத்தான் இருக்கும்!' என்று பீதியுடன் நினைத்தவளுக்கு என்ன செய்தால் தப்பலாம் என்ற யோசனை நொடிநேரத்தில் அவள் மூளையில் வெட்டியது. அதன்படியே தன்னைத்தானே பக்கத்திலிருந்த துணியால் கட்டிக்கொண்டவள் மந்திரத்தைச் சொல்லி, சுயநினைவற்ற நிலைக்குச் சென்றுவிட்டாள்.

வைனியையும் துகிரனையும் எதிர்பார்த்து ஆசையோடு பல்லக்கின் திரையை விலக்கிய காமரிக்கு மயங்கிய நிலையில் கைகால்கள் கட்டப்பட்டுக் கிடந்த கனலியைப் பார்த்ததும் சினம் தலைக்கேறியது. அவளைப் பரிசோதித்தவளுக்கு மந்திரத்தின் உதவியாலேயே கனலி மயக்கமுற்றிருக்கிறாள் என்பது தெரிந்ததும் அவள் விழிகள் ஆத்திரத்தில் சிவந்தன. ஆனால் யார் மந்திரத்தை உச்சரித்திருப்பார்கள் என்ற கேள்வி அவளுக்கு எழவில்லை. துகிரன் தான் வைனியைக் காக்க கனலியை வீழ்த்தியிருக்கிறான் என்றே அவள் புரிந்து கொண்டாள். உடனே அவர்கள் இருவரையும் தேடச் சொல்லி பற்பல அரூபங்களுக்கு ஆணையிட்டாள். கனலியின் கட்டுக்களை அவசரஅவசரமாக விடுவித்த பின் பணிப்பெண்களை அழைத்து கனலியை அவளறைக்கு தூக்கிச் செல்ல பணித்தாள். அறையில் கனலிக்கு மூர்ச்சை தெளிவித்து அவள் எழும் வரையில் காத்திருந்தாள் காமரி.

கனலி எழுந்ததும், "என்னவாயிற்று?" என்ற ஒற்றைக் கேள்வியுடன் நாசி விடைக்க காமரி நின்ற தோற்றம் கனலியின் பேசும் திறனை வெகுவாக பாதித்தது. இருப்பினும் சூழ்நிலைக்கு ஏற்ப பொய் சொல்லித் தப்பிக்கும் திறமை நிறையவே இருந்ததால் தன்னை சுலபமாக மீட்டுக்கொள்ளவும் செய்தாள்.

"என்னை மன்னித்துவிடு காமரி! நான் சர்வஜாக்கிரதையாகத் தான் இருந்தேன். ஆனாலும் என்னை ஏமாற்றிவிட்டு தப்பித்து விட்டார்கள். வைனி வர்மம் பயின்றவள் என்பதைத் தாமதமாகவே உணர்ந்தேன். ஒரு நொடிக்குள் என்னை வீழ்த்திவிட்டு குறளியையும் கிங்கரர்களையும் கட்டிவிட்டு எப்படித்தான் அவர்கள் தப்பினரோ! துகிரன் நாம் நினைத்ததை விட ஒரு பங்கு அதிக திறமையானவன் போலிருக்கிறது!" என்ற கனலி பொருத்தமாக ஒரு கதை சொல்லி தோற்றுப்போனவள் போல சோகமாக முகத்தை வைத்துக்கொண்டாள்.

"எங்கே போய் விடப்போகிறார்கள். என் பார்வையிலிருந்து தப்பும் திறன் இந்த வையத்தில் எவருக்குமே இல்லை! ஆனால் இதுதான்

உனக்குக் கடைசி எச்சரிக்கை. உன் திறமைக்குறைவால் இன்னொரு முறை இப்படி நடந்ததென்றால், என் கோபம் முழுமையாக உன் மீதுதான் பாயும்! நினைவிருக்கட்டும்!" என்று எச்சரித்தாள் காமரி.

கனலி நினைத்ததைப் போலவே காமரி கனலியை மன்னித்தாள். ஆனால் தனக்கு விசுவாசமாக இருக்கும் ஒருத்தியைத் தன் எதிரிகள் வென்றது அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவர்களை என்ன செய்வது என்று யோசித்தவளுக்கு, சட்டென மூளையில் மணியடித்தது!

காமரியின் முகம் நொடியில் பிரகாசமானத்தைப் பார்த்துக் கனலியின் வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தன. ஏதோ பெரிதாக அவள் திட்டம் தீட்டி விட்டாள் என்று புரிந்ததும் என்ன செய்யப்போகிறாளோ யார் தலை உருளப்போகிறதோ என்ற கவலையில் காமரியின் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தாள் கனலி.

"என்னை எதிர்க்கத் துணிந்தவருக்கு மட்டுமல்லாது, ஒருவேளை அரண்யா மந்தரைமலையில் இருந்து திரும்பி வந்தால், அவளுக்கும் சேர்த்து உன்னதமான ஒரு பரிசினைத் தர உத்தேசித்துள்ளேன்!" என்று சொல்லி கண்கள் மின்ன அவளது மோகனப் புன்னகையைச் சிந்தினாள் காமரி.

"என்ன செய்யப் போகிறாய்?" என்று எழும்பாத குரலில் வினவினாள் கனலி.

"மேரு மலையில் கல்வி பயில வேண்டும் என்று ஒருகாலத்தில் நானும் ஆசைப்பட்டேன். ஆனால் அப்போதைய சூழ்நிலையில் அது நடக்கவில்லை. அதனால் இப்பொழுது மேருவிற்கே கல்வி கற்பிக்க ஆசைப்படுகிறேன்!" என்று மீண்டும் புன்னகைத்தாள் காமரி. அவள் பதிலில் உறைந்து போனாள் கனலி.

எப்படியாவது முயன்று காமரியின் மனதை மாற்றுவதற்காக கனலி எடுத்த முயற்சிகள் எதுவுமே வெற்றி பெறவில்லை. "நீ பேசாமல் ஓய்வெடு!" என்ற ஒற்றை வாக்கியத்தில் கனலியின் வாயை அடைத்து விட்டாள் காமரி.

நினைத்ததை உடனே நடத்தி முடிக்காவிட்டால் அவள் பெயர் காமரியாக இருக்க முடியாதே! அடுத்த நாழிகைக்குள் லகிமம் சித்தியில் தேர்ந்த ஒரு சிறுபடையை உருவாக்கினாள். அவர்களின் இலக்கு ஒன்றே ஒன்று தான் என்று சொல்லி அவள் திட்டத்தை விவரிக்கத் துவங்கியதும், அங்கிருந்தோரின் முகங்கள் ரத்தப்பசையை இழந்து முற்றிலுமாக வெளுத்தது. அவர்களின் பயத்தைப் போக்கும் நோக்கோடு, "தைரியமாக இருங்கள்! வெற்றி நமதே!" என்று சொல்லி

மூன்றாவது முறையாக அன்றைக்குப் புன்னகைத்தாள் காமரி.

அவளின் உதடுகள் புன்னகைத்தனவே ஒழிய, அவள் கண்கள் கொலைவெறியில் திளைத்திருந்தது!

*******************************************************************

மேருமலை குருகுலம்!

ஆதவன் உதிக்கப்போகிறேன் என்று எச்சரிக்கை செய்யும் பாணியில் வானில் லேசாக வெளிச்சம் பரப்பினான். இன்னும் எழுந்திரிக்க மனமில்லாமல் புதிதாக முதல் நிலையில் சேர்ந்திருந்த ஆறு வயது மாணவர்கள், போர்வைகளுக்குள்ளேயே சுருண்டிருந்தனர். அவர்களை எல்லாம் எழுப்ப அடுத்த நிலை மாணவர்கள் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தனர். ஆறாம் நிலை மாணவர்களோ இதில் எதிலும் ஈடுபடாது காலைக்கடன்களை முடித்த பிறகு, உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். சில்லென்ற வாடைக்காற்றோ மிதமான பனியோ அவர்களை எதுவும் செய்யவில்லை.

கடம்பன் மனதினில் எண்ணற்ற கேள்விகள் நிறைந்திருந்தன. 'இரும்பன் இந்திரரகசியப் போட்டி முடிந்து எங்கே போனான்? அரண்யாவும் வைனியும் கூட திடீரெனக் காணாமல் போனது ஏன்? படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு ஓடிடும் அளவிற்கு அவர்கள் கோழைகளோ அன்றி அறிவிலிகளோ கிடையாது. அப்படியிருக்க அவர்கள் எங்கே சென்றிருக்கக் கூடும்? முக்கியமாக, அவர்களைத் தேடாது, குருதேவர் ஐம்பூதனார் அரண்யா காணாமல் போனதிலிருந்து மறுநாள் தொடங்கி முழு தியானத்திலேயே இருப்பதன் காரணம் என்ன?' என்று அவன் மனதினில் இருந்த கேள்விகள் ஒன்றிக்குக் கூட இன்னும் அவனுக்கு விடை கிடைத்தபாடில்லை. குருதேவர் ஐம்பூதனாரிடம் பேசலாம் என்றாலோ அவர் தியானத்திலிருந்து இன்னும் கண் திறக்கவேயில்லை. அவர் தியானத்தைக் கலைக்கும் துணிவும் ஒருவருக்கும் இல்லை. ஆனால் செப்பனிடப்பட்ட இயந்திரம் என்பதால் மேருவின் அன்றாட செயல்பாடுகளில் எந்த சுணக்கமும் ஏற்படாது அவரவர் வேலைகளை அவரவர் குறைவற பார்த்துக்கொண்டிருந்தனர்.

கடம்பன் தன் யோசனையில் மூழ்கியிருந்த சமயம், அழையா விருந்தாளிகள் வருவதை அறிவிக்கும் பறையொலி மலையடிவாரத்திலிருந்து கேட்டது போலிருந்தது. அதிகபட்சம் இரண்டு நொடிகள் கேட்டிருக்கும், அதன் பிறகு மீண்டும் நிசப்தமே எங்கும் நிறைந்தது.

"கடம்பா! பறையொலி எழுப்பப்பட்டதா?" என்று

கேட்டபடியே ஆசிரியர் ஒருவர் வெளிவந்தார்.

"கேட்டது குருவே. ஆனால் நின்று..." 'விட்டது' என்று கடம்பன் சொல்லி முடிக்கும் முன்பே அவன் கண்முன்னாலேயே அந்த ஆசிரியர் கீழே சாய்ந்தார். என்னவென்று பார்த்தவனுக்கு உடலெல்லாம் அச்சம் நிறைந்தது. ஏனெனில் அவர் வலது கண்ணில் ஒரே ஒரு அம்பு பாய்ந்திருந்தது; அவர் உயிரும் அவர் உடலை விட்டுப் பறந்திருந்தது.

ஆசிரியரின் தலையிலிருந்து பொங்கிய குருதியைப் பார்த்த யாரோ வீறிட்டுக் கத்த, "பின் செல்லுங்கள். முதல் நிலை மாணவர்களை பத்திரப்படுத்துங்கள்! ஆசிரியர்களுக்குத் தகவல் சொல்லுங்கள்! உயர்நிலை மாணவர்கள் ஆயுதங்களை ஏந்துங்கள்!" என்று அருகில் வைத்திருந்த வாளையும் வேலையும் எடுத்துக்கொண்டு ஆணைகளை பிறப்பித்துக்கொண்டே கடம்பன் ஓடத் துவங்கினான்.

போரை அறிவிக்கும் சங்கு முழங்கத் துவங்கியதும் அதுவரை உறங்கிக்கொண்டிருந்த குழந்தைகளின் நெஞ்சில் இனம் புரியாத கிலி சூழ்ந்துகொள்ள, ஆறாம் நிலைப் பெண்கள் அங்கிருந்த ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தனர்.

இதுவரை எந்த இடத்தில் எந்தப் போர் நடந்தாலும் அங்கிருக்கும் மிகச்சிறிய கல்விக்கூடத்தை கூடத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதே போர் விதியாக இருக்க, திடீரென பாடசாலைகளுக்கெல்லாம் தலைமையிடமாக இருக்கும் மேருமலை குருகுலத்தையே தாக்கும் துணிவு பெற்றவன் எவன்? என்கிற எண்ணத்தில் உள்ளேயிருந்து ஆசிரியர்கள் சாரைசாரையாக மேருவைக் காக்க அணிவகுத்து வந்தனர். வெளியே அவர்கள் கண்ட காட்சி அவர்கள் இருதயத்தையே நடுங்க வைத்தது.

மிரள வைக்கும் ஆயுதங்களோடும் கோர முகத்தோடும் ரத்தவெறி கொண்ட பல அரூபங்கள் அந்த இடத்தை நிறைத்திருந்தன. அவற்றிற்கெல்லாம் தலைமை ஏற்று தலைவிரி கோலமாக நெற்றியில் ரத்தத் திலகமிட்டு கருநீல விழிகளில் வெறி மிக, இதழில் குறுநகையோடு குதிரையில் கம்பீரமாக அமர்ந்திருந்தாள் காமரி.

"பைசாசங்கள் நம் எல்லையை எப்படிக் கடந்தன?"

"மந்திர கவசங்கள் என்னவாயிற்று?"

"யார் இந்தப் பெண்?"

என்று பல கேள்விகளோடு பதறியபடியே ஆசிரியர்கள் போராட ஆரம்பித்தனர். முடிவு எப்படி வேண்டுமானாலும் மாறலாம் என்று சண்டை துவங்கிய ஐந்து நிமிடங்களுக்குள் அவர்களுக்குத்

தெரிந்து விட்டது. அதனால் போரிட்டுக் கொண்டிருக்கும் உயர் நிலை மாணவர்களிடம் சொல்லி, சிறியவர்களை அங்கிருந்து உடனே அப்புறப்படுத்த ஆணையிட்டனர். தேவையெனில் லகிமக் குளிகையைப் பயன்படுத்தி அவர்களை அவரவர் பெற்றோரிடமோ இல்லை வேறு குருகுலத்திலோ ஒப்படைக்கும்படி யோசனை தெரிவித்தனர். குருதேவர் ஐம்பூதனாரை உடனே தியானத்திலிருந்து எழுப்பச் சொல்லி மற்றொரு உத்தரவு வர, கடம்பன் வேகமாக ஐம்பூதனாரின் வசிப்பிடத்தை நோக்கி விரைந்தான்.

கடம்பன் எங்கே செல்கிறான் என்று ஊகிக்க காமரிக்கு ஒரு வினாடிகூடத் தேவைப்படவில்லை. வெளியில் நடக்கும் எந்தக் களேபரமும் உள்ளுக்குள் இருக்கும் ஐம்பூதனாருக்குத் தெரியக்கூடாது என்பதால் அவரது குகையை சுற்றி பல மந்திர வளையங்களைப் போட்டிருந்தாள் காமரி. இது தெரியாமல் சென்ற கடம்பனால் அவரது குகை வாயிலைக்கூட நெருங்கமுடியவில்லை.

அப்போது ஏளனமான ஒரு முறுவலோடு அவனை எதிர்கொண்டாள் காமரி. அவளுக்கு எதிராக வாளேந்தி, முதலில் பெண் என்ற இரக்கத்தோடு அவளுடன் சண்டையிட்டவன், போகப்போக அவளை வெல்வதற்குத் தன் முழுத்திறனையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டான்.

கடம்பனின் அசுரத் தாக்குதலில் நிலைகுலைந்த காமரி, தோல்வியை ஏற்றுக்கொள்ள விரும்பாமல் அவன் முழு உடலையும் மந்திரத்தால் கட்டினாள். உடல் விறைக்க அவன் அப்படியே விழுந்தான். பின் ஒரு யட்சிணியை ஏவி அவனை மரத்தில் கட்டினாள்.

"எவராலும் என்னை வெற்றி கொள்ள முடியாது! உன் முடிவு மற்றவருக்கு பாடமாக மாறப்போகிறது!" என்று இறுமாந்தபடியே சொன்னவள், ஐம்பூதனாரின் குகைக்குள்ளே எந்தத் தடையுமின்றி சென்றாள்.

எந்தவொரு கவலையும் இல்லாமல் நிர்மலமான மனதுடன் ஈசனை நினைத்து தவத்திலிருக்கும் ஐம்பூதனாரைப் பார்த்து உச்சுக்கொட்டியவள், சற்று நேரம் எதுவும் செய்யாமல் அவர் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். நேரம் கனிந்ததும், காற்றில் இருக்கும் மின்னாற்றலை எல்லாம் ஒன்று திரட்டி பந்துபோலாக்கி அப்படியே ஐம்பூதனாரின் மீது வீசினாள்.

தன்னைச் சுற்றி நடக்கும் எதுவும் தெரியாத நிலையிலிருந்த ஐம்பூதனாரை எந்தவொரு முன்னறிவிப்புமின்றி காமரி தாக்க, அதைத் தடுக்கவும் முடியாமல் பத்தடி தள்ளிப்போய் விழுந்தார் ஐம்பூதனார்.

அவர் உடலில் மின்சாரம் பாய்ந்ததும் சுற்றுப்புறம் உணர்ந்து கண்ணைத் திறந்தவருக்கு அவர் முன்னிருக்கும் காமரியைப் பார்த்து என்ன நிகழ்ந்திருக்கும் என்று புரிந்தது.

"மகளே! இது கல்விச்சாலை. உன் வன்மங்களுக்கு இங்கே இடமில்லை. வெளியேறிவிடு!" என்று பொறுமையாகச் சொன்னார்.

"வெளியேறத்தான் போகிறேன் கிழவா! உன்னையும் இங்கிருக்கும் அத்தனை பேரையும் கொன்றொழித்துவிட்டு நான் வெளியேறத்தான் போகிறேன்!" என்று கத்தினாள் காமரி.

"உனக்கு கடைசி சந்தர்ப்பம் காமரி. பெண்களைக் கொல்வதில்லை என்று சங்கல்பம் செய்தவன் நான். என் திடத்தை சோதிக்காதே, தாங்க மாட்டாய்!" என்று ஐம்பூதனார் அமைதியாக அவளை எச்சரிக்க, அந்தக் குகையே அதிரும்படி சிரித்தாள் காமரி.

"வெளியே வந்து பார், என்னை எச்சரிக்கை செய்யும் யோக்கியதை உனக்கில்லை என்பது புரிந்துவிடும்!" என்று சொல்லி பைத்தியக்காரி போல மறுபடியும் சிரித்தாள்.

"காமரி!" என்று லேசாக ஐம்பூதனார் குரலை உயர்த்த, அவர் உடலில் பாய்ந்திருந்த மின்சாரம் அவருக்கு மிகுந்த வலியைத் தந்தது.

"உன் கதையை நான் முடிப்பதற்கு முன்னமே இறந்து தொலைக்காதே கிழவா!" என்று எரிச்சலுடன் சொன்னவள், ஐம்பூதனாரை நெட்டித் தள்ளிக்கொண்டு வெளியில் சென்றாள்.

ஐம்பூதனார் மேருமலையின் திடலுக்குள் வருவதற்கு பலரின் சடலத்தைக் கடந்து விட்டார். ஆறு வயது முதல் இருபத்திநான்கு வயது வரை அவர் பார்த்துப் பார்த்து வளர்த்துக் கொண்டிருக்கும் பல குழந்தைகளை பிணமாகவோ அல்லது ஊனமுற்ற நிலையிலோ பார்த்தவரின் மனம் கணத்தது. ஐம்பூதனாரைக் கலங்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் அந்தப் பாதையெங்கும் சதைத் துண்டங்களைப் போடும் படி முன்பே கட்டளையிட்டிருந்தாள் காமரி.

"என்ன கண்கள் வியர்க்கின்றனவா? உன் ஆசிரியர்கள் எங்கே என்று தேடுகிறாயா? அதோ! அங்கே மேலே பார். நன்றாகக் கண்களைத் திறந்து பார்த்தால் அவர்கள் உனக்கு காட்சி தருவார்கள்!" என்று காமரி ஒவ்வொரு வார்த்தையாக நிறுத்தி நிதானமாகச் சொல்ல, மேலே அன்னார்ந்து பார்த்தவரின் கால்கள் அப்படியே வேரோடிப் போயின.

அனைத்து ஆசிரியர்களையும் தயவு தாட்சண்ணியம் பார்க்காமல் கழுவேற்றி இருந்தார்கள். கழுவேற்றுவதில் பலவகை இருந்தாலும் அதில் மிகக்கொடுமையான முறையையே காமரி

தேர்ந்தெடுத்திருந்தாள். ஒரு பெரிய கூர் முனையுள்ள கழியை எடுத்து ஒருவரின் ஆசனவாயினுள் விட்டு அவரது வாய் வழியே அந்தக் கழியை வெளியே எடுத்து, அதன் பின்னர் அந்தக் கம்பை பூமியில் நட்டு வைக்கும் மிகக்கொடூரமான தண்டனையைக் காமரியின் ஆணையின் பேரில் நிறைவேற்றியிருந்தனர். கொடுத்துவைத்த சிலர் அப்படிக் கம்பை விடும் போதே இறந்து போயினர். ஆனால் துரதிஷ்டம் பிடித்த சிலர் குற்றுயிரும் குலை உயிருமாக இன்னும் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். சிலரது நாக்குகள் அறுபட்டு வலியில் கத்தக்கூட முடியாமல் முனகிக்கொண்டிருந்தனர்.

மேரு மலையின் ஆசிரியர்கள் தான் வையத்திலேயே சிறந்தவர்கள் என்று பெறுமை கொண்டிருந்த ஐம்பூதனாருக்கு ஒரு சிறு பெண்ணிடம் அவர்கள் தோற்றத்தை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. 'எத்தனை வித அரூபங்கள் போருக்கு வந்தாலும் ஒரே ஒரு பவித்திர கலையமும் மந்திர வாளும் போதுமே அத்தனையையும் மண்ணில் புதைக்க! மேருவின் ஐந்தாம் நிலை மாணவர்கள் கூடச் சுலபமாகச் செய்யும் இந்தக்கலை ஆசிரியர்களுக்கு ஏன் கைகொடுக்கவில்லை?' என்று அவர் எண்ணமிடுவதை துல்லியமாகக் கணித்தாள் காமரி.

"என்ன? இதுகள் எப்படிச் செத்தன என்று தெரியவேண்டுமா?" என்று ஏளனமாகக் கேட்டபடியே ஐம்பூதனாரின் தாடையைப் பிடித்து வலுக்கட்டாயமாகத் திருப்பினாள் காமரி. அங்கே மலை போல சாம்பலும் அதிலிருந்து சில சின்னஞ்சிறிய எலும்புத் துண்டுகளும் வெளியே எட்டிப்பார்த்தன.

"ஆ...." என்று ஐம்பூதனார் அடிவயிற்றிலிருந்து அலறினார்.

*****************************************************************

முதல்நிலை மாணவர்களையும் மற்ற சிறுவர்களையும் பத்திரப்படுத்துங்கள் என்ற ஆசிரியர்களின் உத்தரவைத் தொடர்ந்து குழந்தைகளை ஒன்று திரட்டி அங்கிருந்து தப்பிக்கவைப்பதில் ஒரு குழு ஈடுபட்டிருந்தது. அப்போது ஆசிரியர்களைப் போல வேடமணிந்து அங்கே வந்த இச்சாதாரி யட்சிணிகள், நைச்சியமாகப் பேசி, குழந்தைகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு போர் நடந்துகொண்டிருந்த, மேருவின் முன்புறத் திடலுக்குள் நுழைந்தன. காமரியின் போர்வீரர்கள் சிலர் அங்கு ஏற்கனவே போரிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து சிறுவர்கள் அச்சத்தில் அழுதனர். அதன்பிறகு தான் தாங்கள் ஏமாற்றப்பட்டதை பல உயர்நிலை மாணவர்கள் உணர்ந்துகொண்டனர்.

மறைவிடத்தில் பாதுகாப்பு வளையங்கள் இருந்ததால்

யட்சிணிகளால் உள்ளே நுழைந்திருக்க முடியாது என்று எண்ணியிருந்தவர்களின் எண்ணத்தில் மண் விழுந்தது. காரணம் குருகுலத்தைச் சுற்றியிருந்த பாதுகாப்பு வளையங்களை காமரி முன்னமே எதிர்மந்திரங்களைச் சொல்லி அறுத்துவிட்டிருந்தாள். கலரனும் அவளுக்கு பக்க பலமாக இருந்ததால், வளையத்தின் பலவீனமான பகுதியைக் கண்டுபிடித்து வளையத்தை அறுப்பது அவளுக்கு சுலபமான ஒன்றாகிப் போனது!

ஐம்பூதனார் போட்டிருந்த வளையத்தையே அறுத்தவளுக்கு சிறு பிள்ளைகள் போட்டிருந்த பாதுகாப்பு வளையங்களை அறுப்பது சிரமமா என்ன? சிறுவர்களுக்குத் தெரிந்திருந்த வகை யட்சிணிகளை விட, இவை பன்மடங்கு சக்தி வாய்ந்தவை என்பதைக் காலம் கழித்தே உயர்நிலை மாணவர்கள் உணர்ந்தனர். உடனே விரைந்து சென்று சின்னப் பிள்ளைகளைப் பாதுகாக்க தங்களால் இயன்ற வரை முயன்றனர். ஆனாலும் பலம் பொருந்திய பைசாசங்களுக்கு இடையில் இன்று பூத்த புதுப்பூக்கள் என்ன செய்ய முடியும்?

ஏட்டுக்கல்விக்கும் நிஜ உலகிற்கும் தான் எத்தனை வேறுபாடுகள்? கண் சிமிட்டும் நொடிக்குள் கண்ணில் பட்டவரையெல்லாம் கொன்றன பிசாசுகள். மறைந்திருந்தவர்களைக் கூட விடாது, தேடித் தேடி அழித்தன அரூபங்கள்.

ஆயுதங்களைக் கீழே போடவில்லை என்றால் உங்கள் மாணவர்களைக் கொன்று விடுவோம் என்று காமரியின் போர்வீரர்கள் பத்து வயதிற்கும் குறைந்த பச்சிளம் குழந்தைகளைக் காட்டி மிரட்ட, அதுவரையில் திட சித்தத்துடன் போராடிக்கொண்டிருந்த ஆசிரியர்கள் வேறு வழியின்றி தங்கள் கைகளில் வைத்திருந்த ஆயுதங்களைக் கீழே போட்டனர். அதன் பிறகு சற்றும் தாமதியாது அவர்கள் அனைவரும் கழுவேற்றப் பட்டனர்.

கழுவில் சிலர் உயிருடன் இருக்கிறார்கள் என்பது புரிந்ததும், எந்தக் குழந்தைகளைக் காட்டி ஆசிரியர்களை சாய்த்தனரோ அதே குழந்தைகளை அப்படியே உயிருடன் கொளுத்தினர் அரக்கர்கள். தங்களின் தியாகம் வீண் போய்விட்டதே என்ற வேதனையுடனே இறக்கும் தருவாயிலும் நிம்மதியின்றி பலர் பரிதவித்துக்கொண்டே மரணத்தை வேண்டினர்.

*****************************************************************

எப்படி ஆசிரியர்களைக் கொன்றாள் என்பதை உற்சாகத்தோடு காமரி சொல்லி முடித்ததும், காமரியின் குரல்வளையைத் திருக வேண்டுமென்று ஐம்பூதனாரின் கரங்கள் துடித்தன.

"உன்னையும் கழுவில் ஏற்றும் நேரம் வந்துவிட்டது! அந்த அரண்யா திரும்பி வரும் வரை இங்கிருக்கும் ஒருவரது உடலையும் கீழிறக்கப் போவதில்லை! அவள் கண்ணீரில் இவ்விடம் நனையாமல் உங்கள் ஒருவருக்கும் ஈமச்சடங்கும் நடக்கப் போவதில்லை. இறந்த பிறகும் நிம்மதியின்றி அலையுங்கள்! அந்தக் கிறுக்கிக்குப் பாடம் நடத்திய உங்கள் அனைவருக்கும் அதுவே நான் வழங்கும் தண்டனை!" என்று காமரி சொல்ல, பக்கத்திலிருந்த ஒருவன் ஐம்பூதனாரைக் கழுவேற்றும் நோக்கோடு வர, இனியும் அமைதி காத்தல் மதியீனம் என்று எழுந்தார் ஐம்பூதனார். அவர் கையை நீட்ட, எங்கிருந்தோ இரு கூரிய நெடுவாட்கள் வந்து அவரது கையில் தஞ்சம் புகுந்தன.

ஒரு கிழவனுக்குள் இவ்வளவு வீரமா என்று காமரி வியக்குமளவிற்கு போர் புரிந்து தனியாளாகவே காமரியின் படையைச் சிதைத்தார். அவரது வாய் அதியற்புத சக்தி வாய்ந்த மந்திரங்களை உச்சரிக்க அவர் கையிலிருந்த வாட்களோ ஒரு காவியமே பாடியது. அவர் சுழன்ற வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் எல்லோரும் திணற, சற்றும் யோசிக்காமல் ஐம்பூதனாரின் முதுகை குறிவைத்து ஒரு குறுவாளை எறிந்தாள் காமரி. ஏற்கனவே மின்சாரம் பாய்ந்த உடல், நைந்த மனம் என்று பலவீனமாக இருந்தவர் அப்படியே மடங்கி விழுந்தார்.

"சனியன் பிடித்தக் கிழவன்! என் திட்டத்தைக் குலைப்பதே இது மாதிரிகளுக்கு வேலையாக இருக்கிறது! ச்சை! இவன் சாவை ரசிக்க முடியாது செய்கிறான்!" என்று காறித்துப்பினாள் காமரி.

"நான் எங்கு எப்படிச் சாக வேண்டும் என்று எனக்குத் தெரியுமம்மா! ஆனால் அது இன்று இங்கல்ல!" என்று தீனக் குரலில் சொன்னவர், அவர் பேச்சின் பொருள் புரிந்து காமரி சுதாரிக்கும் முன்பே அங்கிருந்து மறைந்தார்.

"இல்லை!" என்று தொண்டை கிழிய கத்தியவள், "ஒன்றுக்கும் உதவாத பைசாசங்களே! அவனை உடனே தேடிக் கண்டுபிடியுங்கள். அவன் காற்றாய் மாறினாலும், கடலில் புகுந்து மறைந்தாலும் நீங்கள் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. அந்தக் கிழவன் என் காலடியில் விழ வேண்டும். இல்லையென்றால் உங்களில் ஒருவர் கூட உயிரோடு இருக்கமாட்டீர்கள்!" என்று எஞ்சியிருந்தவர்களை ஏவினாள் காமரி.

"அப்படியே தலைவி!" என்று அவளை வணங்கி, விட்டால் போதுமென்று எல்லா அரூபங்களும் பயத்தில் சிதறி ஓடிவிட்டன.

மிஞ்சியிருந்த ஒன்றிரண்டு வீரர்களைப் பார்த்தவள், "நன்றாகத்

தேடுங்கள். ஒருவர் கூட இங்கே உயிரோடு மிஞ்சக்கூடாது. இந்தக் காமரியைப் பற்றி இந்த உலகம் தெரிந்துகொள்ளும் நேரம் வந்துவிட்டது!" என்று கொக்கரித்த வண்ணம் நடந்தவளின் கண்ணில் மரத்தோடு கட்டப்பட்டிருந்த கடம்பன் பட்டான்.

அவனைப் பார்த்து சிரித்தபடியே அருகில் சென்றாள். "நல்ல வேளை உன்னைக் கொல்லவில்லை! உன்னால் எனக்கொரு காரியம் ஆகவேண்டுமே!" என்று சொல்லி அவன் வலது தோள்பட்டையிலிருந்து கை நடுவிரல் வரை அவள் நகத்தால் கீறினாள். பின்பு, "யட்சிணி!" என்று ஆவேசமாகக் கத்தினாள்.

அவள் குரலுக்கு பணிந்து நின்ற யட்சிணியிடம், யட்சிணி விஷத்தை கடம்பனுள் பாய்ச்ச உத்தரவிட்டாள். அவளது கட்டளை தாமதமின்றி நிறைவேற்றப்பட்டது. இந்த வகை விஷமென்பது மிகக் கொடுமையானது. குருதியில் இந்த நஞ்சு கலந்து விட்டால் மூன்று நாட்களுக்கு உயிருடன் இருப்பார்கள் என்றாலும், கடைசி இருநாட்கள் வெறி பிடித்த நாயை போலே பார்ப்பதை எல்லாம் கடித்துக் குதறுவார்கள். அதனால் மாற்று மருந்தைத் தந்தாலும் முதல் இருபத்தி நான்கு மணி நேரங்களுக்குள்ளாக செலுத்தினால் மட்டுமே முழு மனிதனாக கடம்பனால் குணமாக முடியும். தாமதமாக மருந்தை செலுத்தினாலோ, அவன் உயிருடன் இருந்தாலும் வெறிநாய் போலத் தான் அவனின் மீதி வாழ்க்கையைக் கழிக்க முடியும்.

நஞ்சின் தன்மையை கடம்பனுக்கு விளக்கிய காமரி, "கவலைப்படாதே! உன் உயிருக்கு எந்த ஆபத்தும் நேராது. உனக்கு இந்தக் குருகுலமென்றால் மிகவும் பிடிக்குமல்லவா? அதனால் உன்னை இந்தக் குருகுலத்தின் எல்லையோடு பிணைக்கப் போகிறேன். என்னைத் தவிர எவர் வந்து இந்தப் பிணங்களை அகற்ற முற்பட்டாலும் அவர்களைத் தின்று விடு!" என்று சொல்லி அவன் கன்னத்தைத் தட்டிச் சிரித்தாள் காமரி. இன்னமும் அவன் உடல் அவன் கட்டுப்பாட்டில் இல்லை என்பதால் அவன் சொல்ல வந்த வசவுச் சொற்கள் அவன் தொண்டைக்குழியிலேயே புதைந்தது.

அவளைத் திட்டக்கூட முடியாது கடம்பன் துன்புறுவதை பார்க்கவே காமரிக்கு வேடிக்கையாகயிருந்தது. யட்சிணியிடம் திரும்பி, "இரண்டு நாட்களுக்குப் பிறகு மாற்று மருந்தைத் தந்துவிடு!" என்று விட்டு அவள் நடுநாயகமாகத் திடலில் அமர்ந்துகொண்டாள். அந்த நேரத்தில் அவளைப் பார்த்தால் சுடுகாட்டின் ராணி போலவே தெரிந்தாள்.

கொஞ்ச நேரம் கழிந்ததும், "தேவி! அனைத்து இடங்களிலும்

தேடி விட்டோம். இந்த ஒரு பெண் மட்டுமே கிடைத்தாள்." என்று பதினைந்து வயதுள்ள ஒரு பெண்ணை பிடித்து வந்தார்கள் வீரர்கள்.

"பெயரென்ன?" என்று கேட்டாள் காமரி.

"தீபிகை." என்று சொன்னவளின் முகத்தில் கவலையின் சாயல் தெரிந்தது.

"ம்... சின்ன பெண்ணாக இருக்கிறாள்... அழகாக இருக்கிறாள்... இவளை அப்படியே கொல்வதற்கு எனக்கு மனம் வரவில்லையே! என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்?" என்று யோசிப்பதைப்போல நடித்தவள், அந்தப் பெண்ணின் முகத்தில் நம்பிக்கையின் ஒளி தோன்றியதும், "இவளைக் கலரனிடம் ஒப்படைத்துவிடு!" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டாள்.

'இதற்கு இந்தப் பெண்ணை அவள் கொன்றே இருக்கலாம்!' என்று அந்த வீரர்கள் எண்ணினாலும் காமரியை மீறி அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. அவர்களுக்கும் குடும்பம் குழந்தை என்று இருக்கிறதே! காமரியின் உத்தரவை மீறினால் அவர்கள் குடும்பங்களுக்கு நேரும் கதியை அறிந்த காரணத்தினால் அந்தப் பாவப்பட்ட படை வீரர்கள் கல்லாகிப் போன மனங்களோடு பிணமென ஏவிய வேலையைச் செய்தார்கள்!

எங்கெங்கோ திரிந்து தன்னைத் தானே குணப்படுத்திக் கொண்ட ஐம்பூதனார், மிகவும் நலிந்த நிலையில் இருந்தபோது இரும்பனைக் கண்டார். தான் இன்னும் உயிருடன் இருக்கும் காரணத்தை அறிந்தவருக்கு அதற்குள் தன்னுயிர் போய்விடக்கூடாது என்பதில் வைராக்கியமிருந்தது. இரும்பனிடம் விஷயத்தைத் தெரிவித்தவர், நவிரனையும் துகிரனையும் கண்டார். அடுத்த கட்ட நகர்வைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார். அதன்படியே நவிரன், துகிரன், சமீரணன் ஆகியோரை வைனியை மீட்பதற்கு அனுப்பி வைத்தார். ஏற்கனவே கமலநாதர் நவிரனிடம் தாயத்து தந்திருக்க, துகிரனுக்கு கனலி ஒரு தாயத்தைத் தந்திருந்தாள். அது போக சமீரணனிடமும் ஒரு தாயத்து இருந்தது. அதன் காரணமாகவே மூவரையும் தேர்ந்தெடுத்தார் ஐம்பூதனார். லகிமக் குளிகையை மூவருக்கும் தந்து, விரைந்து சென்று வைனியை மீட்டு வரும்படி பணித்தார் ஐம்பூதனார்.

கலரன் காமரியின் அரண்மனையில் வசிக்கவில்லை. அரசாணை ஆற்றங்கரையின் அழகில் மயங்கி, அங்கேயே ஒரு மாளிகை சிருஷ்டித்து அதில் வசித்து வந்தான். அவனது பொழுதுபோக்கிற்கும் ஆளரவமற்ற அந்த இடம் அவனுக்கு வசதியாக இருந்தது. அவன் மாளிகையின் கீழே பல நிலவறைகள் உண்டு; அதில் தான் கைதிகளை

அடைத்து வைத்து அவன் சித்ரவதை செய்வான். பெருமாயக்கலையில் வல்லவனான கலரன், எவர் மனதின் உறுதியையும் குலைப்பதில் வல்லவன். அப்பேற்பட்ட கலரனிடம் அகப்பட்ட தீபிகையின் நிலை வார்த்தைகளால் விவரிக்க இயலாதது. உடல் மனம் என அனைத்தும் பல வகைகளில் வதைக்கப்பட்டு அரை உயிராய் இருந்தாள் தீபிகை.

வைனி நினைத்திருந்தபடி அவள் ஒன்றும் புதிர்ப்பாதையில் இருக்கவில்லை. கலரனின் நிலவறை ஒன்றிலேயே அடைத்து வைக்கப்பட்டிருந்தாள். பாதை வேண்டுமானால் பெருமாயமாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு நடந்த அத்தனை சித்ரவதைகளும் உண்மை. தீபிகையும் அங்கே தான் அடைக்கப்பட்டிருந்தாள். ஆனால் இருவருக்கும் மற்றவர் அங்கிருப்பது தெரியாத வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தான் கலரன்.

வைனியின் அழகில் ஏற்கனவே மயங்கியிருந்த கலரனுக்கு அவளின் நெஞ்சுறுதி வியப்பளித்தது. அந்த வயதில் அவனை வியப்படையச் செய்வதென்று எதுவும் இல்லை என்று நினைத்திருந்தவனின் எண்ணத்தைப் பொய்யாக்கிய வைனி அவனுக்கு புத்துணர்ச்சி தந்தாள். அதுவே வைனியின் விதியை மாற்றியது.

வைனி எப்போதும் போலப் புதிர்ப்பாதையைக் கண்டுபிடிப்பதாக நினைத்துக்கொண்டு நடந்து கொண்டிருந்த போது கலரனின் ஒரே சொடக்கு சத்தத்தில் அவளின் மாயப்பிடி முற்றிலுமாக விலகியது. மங்கிய விளக்கு வெளிச்சம் பரப்ப முயல, சூரிய ஒளி எட்டிக்கூட பார்க்காத ஒரு நிலவறையில் தானிருக்கிறோம் என்று நொடியில் அவளுக்குப் புரிந்தது.

எதிரில் காட்டெருமையைப் போன்ற தேகத்தோடு மாமிசமலையென நின்றிருந்த கலரன் வைனியைப் பார்த்துச் சிரித்தான். ஆனால் ஏதோ பார்க்கக் கூடாத ஒன்றைப் பார்ப்பதைப் போலவே முகம் சுளித்தாள் வைனி. அவள் செயல் அவனுக்குள் கோபத்தையும் தாபத்தையும் ஒருங்கே வரவழைத்தது.

"பெண்ணே! நீ யார் முன் இருக்கிறாய் தெரியுமா?" என்று எகத்தாளமாகக் கேட்டான் கலரன்.

"காமரி என்றொரு பெண் பேயுண்டு. அதன் ஏவலுக்கு கட்டுப்படும் ஏதோவொரு பிசாசாக இருக்கலாம்!" என்று வைனியும் எகத்தாளமாகவே பதிலளித்தாள்.

"என்ன திமிர்!" என்று ஆத்திரப்பட்டவன் மிகவும் முயன்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். பிறகு, "இந்தத் திமிர்... இதுதான் உன்னிடம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!" என்று

வைனியைப் பார்த்து இளித்தான் கலரன். ஆனால் வைனியோ அவனைத் துளி கூட மதிக்காது, வெகு நேர்த்தியாக தன் நகங்களில் படிந்திருந்த தூசியை எடுத்துக் கொண்டிருந்தாள்.

"பெண்ணே! இங்கே பார். உன்னை முதன்முதலில் பார்த்ததும் என் மனம் சபலப்பட்டது. உன் நெஞ்சுறுதியைக் கண்டதும் அது சலனப்பட்டுவிட்டது. இப்போது என் பேச்சை கேட்காமல் நீ தான் வேண்டுமென்று அடம் பிடிக்கிறது. நான் என்ன செய்யட்டும்?" என்று அவன் கட்டைக் குரலுக்கு கொஞ்சமும் பொருந்தாத காதல் வசனம் பேசினான் கலரன்.

"இதோ பார்! நீ யாரோ எவரோ எனக்குத் தெரியாது. என் துகிரனுக்கு மட்டும் நான் இருக்குமிடம் தெரிந்தால் சூறாவளியாய் வருவான். உன்னைச் சுருட்டி பாடாய்ப்படுத்தி விடுவான். அவன் வரும் வரையில் என்னைச் செய்யவேண்டிய சித்ரவதை ஏதேனும் மிச்சமிருந்தால் செய். இல்லையென்றால் வெறுமனே உளறி என் நேரத்தை வீணடிக்காமல் சென்று விடு!" என்று மிடுக்காகச் சொன்னவளை விழி தெறிக்கப் பார்த்தான் கலரன்.

"இந்த நாவலந்தீவின் அரசகுரு இந்தக் கலரன். என்னை விட அந்த வெறும் பயல் துகிரன் உனக்குச் சிறந்தவனா? பார்த்துவிடுகிறேன். என்னை மணக்கிறேன் என்று சொல்லாமல் உனக்கு விடிவே கிடையாது!" என்று சீறினான் கலரன்.

"என் தந்தை வயதில் இருக்கிறாயே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் அடித்துத் துவைத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று அசைந்து கொடுக்கவே இல்லை வைனி.

"உன் வழியில் சென்றால் என்னை இப்படித்தான் ஏறி மிதிப்பாய். நான் என் விழியிலேயே செல்கிறேன்!" என்று உறுமியவன், ஏதோ மந்திரங்களை உச்சரிக்க, பக்கத்து அறையில் அடைத்துவைக்கப் பட்டிருந்த தீபிகை தெரிந்தாள்.

அதுவரையில் அசுவாரசியமாக இருந்தவள், தீபிகையைப் பார்த்ததும் பாய்ந்து சென்று, "தீபி, தீபி! இங்கே பார்!" என்று தீபிகையின் உருவம் தெரிந்த சுவரைத் தட்டினாள்.

"நினைத்தேன். நீயும் மேருவில் பயின்றவள் என்று தெரிந்ததுமே நினைத்தேன், உங்கள் இருவருக்கும் பரிச்சயம் உண்டு என்று! நீ அந்தத் துகிரன் இருக்குமிடத்தைக் கக்கி விட்டு என்னை மணக்கும் வரை, இவளுக்கு நிகழும் அத்தனைக்குமே நீ தான் பொறுப்பு!" என்று சொன்னவன், தீபிகையின் ஒவ்வொரு எலும்பாக உடைக்கத் துவங்கினான். வலி தாளாமல் அவள் ஒவ்வொரு முறை

அலறும் போதும் வைனியும் சேர்ந்து கதறினாள். இருந்தாலும் துகிரனைக் காட்டிக் கொடுக்கும் மனம் அவளுக்கு வரவில்லை.

கடைசியில் தீபிகையின் தோலை கலரன் பொசுக்கி உரிக்கத் துவங்கவும், "என்னைக் கொன்று விடு! என்னைக் கொன்று விடு!" என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறினாள் வைனி.

"நீ இறப்பதால் யாருக்கென்ன லாபம் பெண்ணே? விடியும் வரை உனக்கு அவகாசம் தருகிறேன். மரியாதையாக எனக்கு இணங்கிவிடு. இல்லையென்றால் எனக்கு வேண்டியதை நானே எடுத்துக்கொள்வேன். எப்படியென்றாலும் என் இச்சை மட்டுமே நிறைவேறும் என்பதை நினைவில் கொள்!" என்று மொழிந்துவிட்டுக் கலரன் வெளியேறினான்.

பொழுது விடிவேனா என்று நீண்டு கொண்டிருந்த போது கனலி அவசரஅவசரமாக கலரனின் மாளிகைக் கதவைத் தட்டினாள்.

"குருதேவா குருதேவா!" என்ற அவள் குரலிலிருந்த பதட்டம் கலரனின் நித்திரையைக் கலைத்தது.

"என்ன?" என்று கேட்டபடியே கதவைத் திறந்தான் கலரன்.

"காமரி உங்களை அவசரமாகப் பார்க்கவேண்டுமென்று சொன்னாள்." என்றாள் கனலி.

"காலை வரை பொறுக்க முடியாத விஷயம் அப்படி என்ன இருக்கிறது?" என்று அவன் சிடுசிடுக்க, அவன் காதில் ரகசியம் பேசினாள் கனலி. அவள் சொன்னதை முழுதும் கேட்டவன், "சரி சரி! நீ இங்கே இருந்து நம் விருந்தாளிகளைப் பார்த்துக்கொள். நான் இரு நாழிகைக்குள் வந்து விடுவேன்!" என்று சொல்லி மறைந்தான் கலரன். பிடிக்கவில்லை என்றாலும் வேறு வழியின்றி அங்கேயே இருந்தாள் கனலி. அவளுக்கு வைனி பிடிபட்ட விஷயம் இன்னும் தெரியாது; இரண்டு பெண்கள் கலரனிடம் சிக்கியிருக்கிறார்கள் என்கிற பாதி உண்மை மட்டுமே அவளுக்குத் தெரியும். அது வைனி என்பதை காமரி மறைத்துவிட்டாள். முதலில் கனலியின் மீது வராத சந்தேகம் நாட்கள் நகர நகர அவளுக்குத் துளிர்த்ததே அதற்குக் காரணம்.

நடுநிசி தாண்டியதும், மெல்ல கலரனின் மாளிகைக்குள் யாரோ புகுவது போலத் தோன்ற, திடுக்கிட்டு எழுந்தாள் கனலி. மற்ற மாந்த்ரீகர்களைப் போல கலரன் தன் மாளிகைக்கு சிறப்புக் காவல் எதையும் போடமாட்டான். அவனை மீறி எதுவும் நடக்காது என்கிற அவனது அகங்காரமே அவன் பலம் பலவீனம் இரண்டும். தவிரவும் யாராவது உள்நுழைய முயன்றால், நிச்சயமாக அவர்களைப் பிடித்து

வறுத்து விடுவான். அதனாலேயே அவன் இருக்குமிடத்தை ஒரு சில்வண்டு கூட அண்டாது. அப்படிப்பட்டவனின் மாளிகைக்குள் அவன் அனுமதியின்றி பிரவேசிப்பது யாராக இருக்கும்? சந்தேகமே இல்லாமல் வைனியைக் காப்பதற்காகக் கிளம்பிய நவிரன், துகிரன் மற்றும் சமீரணன் தான்!

ஒவ்வொரு அறையாக அவர்கள் தேடத் துவங்க, யாரென்று அறியாத கனலி, கையில் கிடைத்த ஒரு வாளை எடுத்துக்கொண்டு சண்டைக்குச் சென்றாள். முதலில் அகப்பட்டவனுடன் அவள் போர் செய்யத் துவங்க, "கனலி நீயா?" என்று அதிர்ந்தான் அவன்.

"துகிரா! நீயா? எதற்கு இங்கே வந்தாய்? உன் உயிரைக் காக்க என் உயிரை நான் பணயமாக வைத்தது எதற்கு? வைனியை விட்டுவிட்டு நீ இப்படி முட்டாள்த்தனமான இறந்து போவதற்கா?" என்று கோபித்தாள்.

"என்ன? வைனி இங்குமில்லையா?" என்று அவன் வினவியதைக் கேட்ட கனலி அதிர்ந்தாள்.

"வைனி உன்னுடனில்லையா?" என்று அதிர்வது இப்போது கனலியின் முறையானது. உடனே நடந்தவற்றை சுருக்கமாகக் கூறினான் துகிரன். அதன் பிறகே வைனி இங்கிருப்பது கனலிக்கு உறுதியானது.

"அவள் இருக்குமிடத்தை நானறிவேன். உன்னோடு யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டுக்கொண்டே நிலவறைக்கு அவனை அழைத்துச் சென்றாள் கனலி. அங்கே, கண்களில் மட்டுமே உயிர் மிச்சமிருக்க, விட்டத்தை வெறித்தபடி இருந்த வைனியைப் பார்த்த இருவருக்குள்ளும் துயர் மிகுந்தது.

"வைனி!" என்று துகிரன் அழைக்க, ஓடி வந்து அவனைக் கட்டிக்கொண்டாள். "வந்து விட்டாயா துகிரா? இல்லை இதுவும் என் கனவா? இது நிஜமென்றால் இப்பொழுதே நான் சாகிறேன். இல்லை கனவென்றால், என் உறக்கம் கலையவே கூடாது! கலையவே கூடாது!" என்று சொல்லிவிட்டு அவன் மேனியைக் கண்ணீரால் நனைத்தாள்.

"சாவா? முட்டாள் பெண்ணே! என்னுடன் பன்னெடுங்காலம் வாழுவாய் என்று நான் கனவு கண்டுகொண்டிருக்கிறேன்! நீயானால் சாகிறேன் என்கிறாயே!" என்று வைனியின் உச்சி முகர்ந்தான்.

அப்போது தொண்டையைச் செருமினாள் கனலி. "இப்படியே பேசி நேரத்தை வீணடித்தால், அந்த எருமைமுகன் வந்துவிடுவான். நான் தான் உங்களுக்கு மீண்டும் உதவினேன் என்று தெரிந்தால் என்னைக்

கொன்றே விடுவான். தயவு செய்து சீக்கிரம் கிளம்புங்கள்." என்று கைகூப்பினாள் கனலி. ஆனால் அவள் குரலில் லேசான மகிழ்ச்சி இருந்தது.

"ஒரு நிமிடம். பக்கத்து அறையில் என் தோழி தீபிகையை அடைத்து வைத்திருக்கிறான். அவளையும் அழைத்துச் செல்ல வேண்டும்!" என்று வைனி அவளுக்கு நிகழ்ந்த கொடுமைகளை சுருங்கச் சொன்னதும் உடனே அடுத்த அறையைத் திறந்தனர். அங்கே உயிர் கூட இருக்கிறதோ இல்லையோ என்றே தெரியாத வண்ணம் ஒரு குழந்தை மூச்சு விடக்கூட சிரமப்பட்டுக் கொண்டிருந்தது.

"தீபி!" என்று வைனி கண்ணீரில் கரைய, "அக்கா! நீங்களா? தெய்வம் இருக்கிறது. என்னைக் கொன்றுவிடுங்கள்! எனக்கு விடுதலை தாருங்கள்! என்னால் முடியவில்லையே! வலி தாங்க முடியவில்லையே!" என்று அழுதுகொண்டே வெறி பிடித்தவள் போலக் கத்தத் துவங்கினாள் தீபிகை.

"ஷ்! ஷ்! ஒன்றுமில்லை. அக்கா உன்னை குணமாக்குகின்றேன்! கவலை கொள்ளாதே!" என்று தீபிகையின் தலையைத் தடவிக்கொண்டு வைனி சொல்லிக்கொண்டிருக்கும் போதே, தீபிகையின் இதயத்தில் துகிரனின் குறுவாளை இறக்கினாள் கனலி. கடைசியாக கனலியைக் கும்பிட்டபடியே தீபிகை இறந்து போனாள்.

"உனக்கென பைத்தியமா? அவளை நான் குணமாக்குகின்றேன் என்றது உன் செவிகளில் விழவில்லையா?" என்று வைனி கனலியிடம் கோபத்தை வெளிப்படுத்த, கனலி கண்களால் தீபிகையின் வயிற்றுப் பகுதியை சுட்டினாள். அடிவயிறு கிழிக்கப்பட்டு உதிரம் நிற்காமல் வழிந்து கொண்டிருந்தது. என்ன மருத்துவம் செய்திருந்தாலும் தீபிகை இறந்திருப்பாள் என்பது அந்த நொடியில் வைனிக்கு உறைத்தது. கனலி ஒரே நொடியில் தீபிகையின் வேதனையை நிறுத்தி விட்டதற்காக கனலியை கட்டிக்கொண்டு அழுதாள் வைனி.

"இதுவும் கடந்து போகும்!" என்று கனலி வைனியின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

இனியும் தாமதிப்பது பெரும் பிசகாகிப் போகும் என்பதை உணர்ந்தவர்கள் மேல் தளத்திற்குச் சென்று நவிரனையும் சமீரணையும் சந்தித்தார்கள்.

"இனியொரு தரம் இங்கே வராதீர்கள். தயவு செய்து தூரதேசம் செல்லுங்கள்!" என்று வைனியையும் துகிரனையும் எச்சரித்த கனலியை ஆச்சரியமாகப் பார்த்தார்கள் நவிரனும் சமீரணனும்.

"உனக்கும் ஒருவழியாக புத்தி வந்து விட்டதா? சரி, எங்களுடனேயே வந்து விடு! அவளைப் பற்றிய ரகசியங்களைத் தெரிவித்து விட்டாயென்றால் அவளை அழிப்பது எங்களுக்குச் சுலபமாகிப் போகும்!" என்ற சமீரணனின் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள் கனலி.

"நான் அநாதையாகத் திரிந்த போது எனக்கு அடைக்கலம் தந்தவர்கள் மகிந்தன் மாமாவும் அவர் மகள் காமரியும். வீண் உயிர்ச்சேதம் வேண்டாமென்று தான் இவர்களுக்கு நான் உதவுகிறேன். அதற்காக உப்பிட்டவருக்கு துரோகம் செய்யும் கீழ்மகள் என்று என்னை நினைத்தயோ? என் வாழ்வும் தாழ்வும் காமரியோடு தான்!" என்று தீர்க்கமாக பதிலளித்தாள் கனலி.

"உன்னை அநாதையாக்கியதும் அந்த மகிந்தன் தான். இது காமரிக்கும் தெரியும்!" என்று கனலியின் தலையில் இடியை இறக்கினான் சமீரணன்.

"இல்லை! நீ பொய் சொல்கிறாய்! என்னை ஏமாற்றுகிறாய்!" என்று காற்றாகிப் போன குரலில் கனலி பேசினாள்.

"அடுத்த முறை விவரமாகச் சொல்கிறேன். இப்போது என்னை மன்னித்துவிடு!" என்று சொல்லிய சமீரணன், ஜாடை காட்ட, லகிமக் குளிகையை மற்றவர் விழுங்கினார்கள். சமீரணனும் வாயில் குளிகையைப் போட்டுக்கொண்டு தலை கிறுகிறுக்குமளவிற்கு கனலியை அறைந்தான். பின் அங்கிருந்து மறைந்து போனான்.

என்னவாயிற்று? ஏன் அடித்தான் என்று புரியாமல் தலைவலியோடு கனலி எழுந்திரிக்க முயல, "துரோகி! காமரி உனக்குத் தந்த தாயத்து அந்தத் துகிரன் கைக்கு எப்படிப் போனது?" என்று கேட்டபடியே கலரன் கனலியின் முடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு நிலவறைக்குச் சென்றான்.

நல்லது நினைத்தாலும் காமரிக்கு விசுவாசமாக இருக்கும் கனலியின் நிலை இனி என்னாகுமோ? அவள் வாழ்நாளில் என்றேனும் ஒருநாள் மீண்டும் சூரிய ஒளியைக் காணும் பாக்கியம் அவளுக்கு இருக்கிறதோ இல்லையோ!

## அத்தியாயம் 20

வைனி மரத்த குரலில் அவள் பக்கக் கதையை சொல்லி முடித்ததும், ஆழ்ந்த அமைதியே அங்கு நிலவியது. அரண்யாவின் விசும்பல் சத்தம் மட்டும் பேரிரைச்சலாக அங்கே

கேட்டுக்கொண்டிருந்தது.

"கனலியின் நிலை என்னவானது?" என்று கவலையுடன் வீரன் கேட்டான்.

"தெரியவில்லை. ஆனால் அவள் நலமுடன் இருக்கவேண்டும் என்பதே என் வேண்டுதல்!" என்று கலக்கமாகவே கூறினாள் வைனி.

"அவளுக்கு எந்தத் தீங்கும் நேர்ந்திருக்காது! அப்படி ஏதேனும் ஏற்பட்டிருந்தால் குவேணி நிச்சயம் நமக்குத் தகவல் அனுப்பியிருப்பாளே!" என்று வைனியை நவிரன் சமாதானப்படுத்தினான்.

"கனலியின் தேவை காமரிக்கு இருக்கும் வரை அவளுக்கு எதுவும் ஆகாது சகோதரி. வருந்தாதே!" என்று பாதிக்கதையில் அவர்களுடன் இணைந்துக்கொண்ட சமீரணனும் அவன் பங்கிற்கு வைனியை சமாதானப்படுத்த, மற்றவர்களுக்காகத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டாள் வைனி.

"இப்போது துகிரன் எங்கே?" என்று பேச்சை திசை திருப்பும் நோக்கில் வீரன் வினவினான்.

"கடவுளுக்கு நிகரான ஆசிரியர்களின் உடல்களை முறைப்படி தகனம் செய்யாமல் இருப்பது பெரும்பாவம் என்று வாதிட்டவன், நான் எவ்வளவோ தடுத்தும் கேளாது இரும்பனோடு மேருவிற்கு சென்றிருக்கிறான்." என்று மூச்சு விட சிரமப்பட்ட படியே ஐம்பூதனார் கூறினார். நாளுக்கு நாள் அவர் உடல்நிலை மோசமாகிக்கொண்டு வருவதை உணர்ந்திருந்த வைனி, "குருதேவா! நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் பிறகு வந்து உங்களை சந்திக்கின்றோம்!" என்று சொல்லிவிட்டு அனைவரையும் அழைத்துக்கொண்டு வெளியில் செல்ல எத்தனித்தாள்.

"வீரா! ஒரு நிமிடம்!" என்று ஐம்பூதனார் அழைக்க, வீரனை மட்டும் விட்டுவிட்டு வைனியும் மற்றவர்களும் அவ்விடம் விட்டுச் சென்றனர்.

"சொல்லுங்கள் குருதேவா!" என்று பணிவோடு வீரன் கேட்டான்.

வீரனின் கையைப் பற்றிக்கொண்டு, "என் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறேனப்பா. அதனால் நான் சொல்லும் செய்திகளை நான்றாக உள்வாங்கிக் கொள். இந்திர ரகசியம் ரகசியமாகவே இருக்கும் நேரம் முடிந்துவிட்டது. எப்போது ஓராண்டு பூர்த்தியாகிறதோ அப்போதிலிருந்து இந்திரரகசியம் பிறர் கண்களுக்கும்

புலப்பட ஆரம்பித்து விடும்; தீயவர் கைகளுக்குச் சிக்காதவாறு அதைப் பாதுகாக்கும் உன் வேலையும் பன்மடங்காகப் பெருகும். எக்காரணம் கொண்டும் இந்திரரகசியத்தைப் பயன்படுத்தும் முறையை மட்டும் எவருக்கும் தெரிவித்துவிடாதே! அது பல அபாயங்களுக்கு வழிவகுத்து விடும். இறுதியாக ஒன்று, அரண்யாவும் அவள் வயிற்றில் வளரும் பிள்ளையும் அதிமுக்கியம். அதனால் எது நடந்தாலும், அரண்யாவை மட்டும் வாடவிட்டுவிடாதே!" என்று ஐம்பூதனார் மிகுந்த சிரமத்துக்கிடையில் தெரிவித்துவிட்டு கண்ணயர்ந்து விட்டார்.

ஐம்பூதனார் சொல்லிய செய்திகளை அசைபோட்டபடியே வீரன் அரண்யாவைத் தேடிச் சென்றான். கூடிய விரைவில் இந்திர ரகசியத்திற்கு உருவேற்றும் வேலை முடிந்துவிடும் என்று வீரனுக்கு இப்போது தெளிவாகத் தெரிந்தது. அதனால் எப்பாடுபட்டாவது இந்திரரகசியத்தையும் அரண்யாவையும் மட்டுமின்றி அவன் சுவாசமாக நேசிக்கும் நாவலந்தீவையும் காக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டான்.

குகையின் இன்னொரு அறையில் வைனியின் மடி சாய்ந்து அரண்யா விழி மூடிப் படுத்திருந்தாள். கர்ப்பத்தின் விளைவாக வந்த உடல் சோர்வும், அவள் தெரிந்துகொண்ட செய்திகளின் விளைவாய் வந்த மனச்சோர்வும் சேர்ந்து அவளை நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தது. கர்ப்பக்காலத்தில் எல்லாப் பெண்களுமே ஏங்கும் அன்னையின் மடி, இனி தனக்கு எட்டாக்கனி என்பதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவள் மனநிலையை நன்கறிந்திருந்த வைனி, மெல்ல அவள் தலை கோதி அரண்யாவைத் தேற்ற முயன்றாள்.

அரண்யாவின் முகத்தில் தெரிந்த வேதனை வீரனின் மனதையும் கசக்கிப் பிழிந்தது. அவள் துயருக்குக் காரணமான காமரி மற்றும் நாவகன் மீது அவனுக்கு கண்மண் தெரியாத கோபம் வந்தது. வீரனின் முகம் மாறுவதை கவனித்த நவிரன், அவனை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றான். தலைகால் புரியாத கோபத்தால் வீரன் ஏதேனும் பைத்தியக்காரத்தனம் செய்யக்கூடும் என்பதைக் கணித்தே நவிரன் அவனை நகர்த்திக்கொண்டு சென்றான். குகைக்கு வெளியே நின்றிருந்த சமீரணனை மெல்லிய வெறுப்போடு பார்த்தான் வீரன். *'என் தந்தை இறக்க இவனுமொரு காரணம்!'* என்ற நினைவே வீரனுக்கு பெரும் மனக்கசப்பைத் தந்தது. ஆனால் துகிரன் சமீரணனைக் கண்ட பின்பும் அவன் உயிருடன் இருக்கிறானென்றால், நிச்சயம் இவன் பக்கம் ஏதோ ஞாயமிருக்கிறது என்பதை உணர்ந்தான் வீரன். அதனாலேயே அவன் கை வாளேந்தவில்லை. ஆனால்

சமீரணனைப் பார்க்கும் போதெல்லாம் அவன் உள்ளம் குமுறிக்கொண்டேயிருந்தது.

வீரனின் கோபம் புரிந்த நவிரன், "வீரா! உன் சினம் ஞாயமானதே. ஆனால் வேகத்தோடு இப்போது விவேகமும் நமக்கு மிக அவசியம். கடந்த ஐந்தாறு மாதங்களாக எங்களால் முடிந்த பல சிற்றூர்களுக்குச் சென்று காமரியால் அல்லலுறும் மக்களுக்கு பற்பல உதவிகள் செய்திருக்கிறோம். எளிதில் நிறைவேற்ற முடியாத பல காரியங்களையும் வெற்றிகரமாக நாங்கள் சாதிப்பதன் காரணம் பொறுமையோடும் நுண்திறனோடும் செயல்படுவதால்தான். அதனாலேயே இதுவரையிலும் எங்கள் தலைகள் தப்பியிருக்கின்றன. மக்களுக்கு உதவவேண்டும் என்கிற உன் துடிப்பு உண்மையென்றால், முதலில் நீ நன்றாக இருக்கவேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று நீ ஏதாவது செய்யப்போனால் அது பெரும் பிழையில்தான் சென்று முடியும்." என்றான்.

வீரன் எதுவும் பேசாமல் இருப்பதைக் கண்ட சமீரணன், "காமரியின் நெஞ்சம் மட்டுமல்ல, அவள் உடலின் ஒவ்வொரு அணுவும் நஞ்சு மிகுந்தது. அவள் எங்கே எப்படிச் சாய்வாள், எப்போது யாரைக் கொல்லுவாள் என்று அவளைத் தவிர யாருக்கும் தெரியாது. அவளைச் சார்ந்தவர்கள் என்கிற பாசமோ இல்லை அடிப்படை மனிதாபிமானமோ அவளுக்கு என்றுமே இருந்ததில்லை. அப்படியிருந்திருந்தால் அவள் ஒருத்தியின் சுயநலத்திற்காக இரு பெரும் தேசங்களின் மொத்த போர்ப்படையையும் நொடியில் அழித்திருப்பாளா? அதிலும் அவளை சிறுவயது முதலே தூக்கி வளர்த்த ஒரு உன்னத வீரனை ஏதோ சாதாரண பகடைக்காயைப் போல எல்லோர் முன்னிலையிலும் சிரச்சேதம் செய்து..." 'கொன்றிருப்பாளா?' என்று சொல்ல முடியாமல் சமீரணனின் குரல் உடைந்தது.

'வீரப்பாட்டனார்' என்று பாலை நாடுகள் முழுவதிலும் போற்றப்படும் கருவலனின் தலையை சமீரணனின் கண் முன்னாலேயே காமரி வெட்டியதை இன்னும் அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. சமீரணனுக்கும் கருவலனிற்கும் பல கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், பெருவீரனான அவர் மீது அவனுக்கு என்றுமே தனி மரியாதை உண்டு.

தன்னை மீட்டெடுத்துக் கொண்டவன், மீண்டும் தொடர்ந்தான். "போர்க்களத்திலிருந்து காயங்களோடு தப்பிப்பிழைத்த நான், எப்படியாவது பேரரசர் வீய பாண்டியனைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று முயன்றதெல்லாம் விழலுக்கு இறைத்த நீரானது. ஒரு முறை

பேரரசரின் அரண்மனைக்கு அருகில் நான் சுற்றிக்கொண்டிருக்கும் போது காமரி என்னைக் கண்டுபிடித்து விட்டாள். அவளிடம் அகப்பட்டு வீணே இறப்பதை விட அவளைப்பற்றிய உண்மையை ஒருவரிடமாவது சொல்லவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக என் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கிருந்து தப்பினேன். பல இன்னல்கள், தடைகளைத் தாண்டி இதோ இங்கிருக்கும் நவிரனை சந்தித்தேன். வெறுமையான என் வாழ்வில் புத்தொளி பாய்ச்சிய என் இறைவன் அவன்! காமரியின் கோரத்தாண்டவம் ஆரம்பித்ததும் அவள் பிடியில் மாட்டிக்கொண்டு சிக்கித்தவித்த பல கிராமங்களுக்கு எங்களால் இயன்ற விடுதலையைப் பெற்றுத் தந்தோம். காதல் என்ற மாயவலையில் வீழ்ந்து பெரும்பாவங்கள் செய்திருந்த எனக்கு மன்னிப்பு கிடைக்குமா என்று கூடத் தெரியவில்லை. ஆனால் என்னால் முடிந்த பிராயச்சித்தத்தை நிச்சயம் செய்ய முயலுவேன். நன்மை தீமையை ஆராயும் அறிவில்லாமலிருந்த நிலையில் நான் செய்த பிழைகளுக்காக தயை கூர்ந்து என்னை மன்னித்து விடு வீரா!" என்று கைகூப்பித் தலைவணங்கினான் சமீரணன்.

வைனியைக் காப்பதற்காக சமீரணன் எடுத்துக்கொண்ட முயற்சியும், இப்போது அவனே வந்து மன்னிப்பை வேண்டியதையும் வைத்துப்பார்க்கும் போது நவிரனைப்போல சமீரணனும் காமரியின் காதல் வலையில் வீழ்ந்து சூழ்நிலைக் கைதியாகி தவறிழைத்தவன் என்று வீரன் புரிந்துகொண்டான். எதிரி யார் நண்பன் யார் என்று தெரியாத இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருப்பவர்களுடன் பகைமை பாராட்டுவது சரியல்ல என்றும் அவன் நினைத்தான்.

அதனாலேயே, "நடந்ததை பேசிப் புண்ணியமில்லை. துகிரன் உங்களைச் சந்தித்த பிறகும் நீங்கள் உயிருடன் இருப்பதாலேயே உங்கள் பாவங்களை நீங்கள் உணர்ந்து வருந்தத் துவங்கிவிட்டீர்கள் என்று எனக்குப் புரிகிறது. உங்களை நான் மன்னிப்பதை விட உங்களை நீங்களே மன்னிப்பது தான் சரியாக இருக்கும்." என்று பெருந்தன்மையோடு வீரன் பேசினான்.

வீரனின் பதிலில் சமீரணனின் குற்றவுணர்ச்சி சற்றே மட்டுப்பட, வீரனின் கரங்களை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டான் சமீரணன். காமரி மீது கொண்ட காதலால் சமீரணன் இழந்தவைகள் என்னென்ன என்பதை முதலிலேயே அறிந்த நவிரனும் அவனைத் தேற்றுவதற்காக சமீரணனின் முதுகில் தட்டிக்கொடுத்தான். காதல் என்கிற ஒற்றை வார்த்தை ஏற்படுத்தும் வலியை எண்ணி அந்த மாவீரர்களின் கண்கள் கூடக் கசிந்தது.

சற்று நேர அமைதிக்குப் பிறகு, "துகிரன் என்ன செய்துகொண்டிருக்கிறானோ? எப்போது வருவானோ? ஒன்றுமே விளங்கவில்லை!" என்று வீரன் சொல்ல, "எனக்கும் அதே கவலைதான்!" என்று நவிரன் சொன்னான்.

வீரனும் நவிரனும் வேறு பேச்சு பேசுவது தனக்காக என்று புரிந்துகொண்ட சமீரணனும் அவர்களின் பேச்சில் இணைந்துகொண்டான். அவர்கள் காமரியின் படைவீரர்களை எதிர்த்து வெற்றிகொண்ட நிகழ்வுகளை நவிரன் சுவைப்படச் சொல்ல, மந்தரைமலையில் நடந்தவற்றை வீரனும் சொன்னான்.

இங்கே இவர்கள் பேசிக்கொண்டிருந்த அதே நேரம் துகிரனும் இரும்பனும் தத்தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வெறிபிடித்த நாயைப்போல அவர்களைத் துரத்தி வரும் கடம்பனிடமிருந்து தப்பிக்க திக்கு தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தனர்!

*******************************************************************

மேருமலை!

வீரனும் அரண்யாவும் மந்தரைமலையிலிருந்து திரும்பப் போகின்றனர் என்பதை அறிவதற்கு முன்னமே துகிரன் இரும்பனுடன் மேருமலையின் ஆசிரியர்களுக்கான உரிய கடைசி காரியத்தை செய்வதற்காகச் சென்றுவிட்டான்.

வழியில் பல தடைகளை காமரி ஏற்படுத்தி வைத்திருப்பாளென்று எதிர்பார்த்திருந்த துகிரனுக்கு அங்கே அப்படி எதுவுமில்லை என்று தெரிந்ததுமே சந்தேகமாக இருந்தது. ஆதலால் துகிரனும் இரும்பனும் மிகக்கவனமாக தங்கள் புரவியை மேருமலை குருகுலத்தை நோக்கிச் செலுத்தினர்.

"இரும்பா! எனக்கு ஏதோ சரியாகப்படவில்லை!" என்று உள்ளுணர்வின் தாக்கத்தால் துகிரன் சொன்னான்.

"எனக்கும் அப்படித்தான் முதலில் தோன்றியது துகிரா! ஆனால் சற்று சிந்தித்துப் பார்த்தால் காமரிக்கு தன்னை எதிர்க்கும் துணிவும் திராணியும் எவருக்குமில்லை என்கிற எண்ணமுண்டு. அதனால் தான் எந்தத் தடையையும் அவள் ஏற்படுத்தவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது!" என்று கூறினான் இரும்பன்.

'அப்படியும் இருக்குமோ?' என்ற ஐயப்பாடுடனேயே குருகுலத்திற்குள் சென்றான் துகிரன். ஒரு காலத்தில் பகல் நேரத்தில் பாடமும் பயிற்சியுமாக உயிரோட்டத்துடனிருந்த குருகுலம் இன்றோ மயானத்தைப் போலிருந்தது. பூக்களின் மிதமான வாசமும் மூலிகை

வாசமும் கலந்து எந்நேரமும் நறுமணம் மிக்க காற்று வீசும் இடம் இப்போது அழுகிய மனித உடல்களின் பிண நாற்றத்தைத் தாங்கிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே தொங்கிய எலும்புகளும் துண்டாடப்பட்ட சதைப்பிண்டங்களும் மலையென குவிந்திருந்த சாம்பல்களும் அதிலிருந்த மண்டையோடுகளும் அங்கே எத்தகைய கொடுமைகள் நடந்தேறியிருக்கின்றன என்பதை அறிவித்தது. அதிலும் அறிவுச்சுடராக மேருவின் ஒளி கூட்டியவர்களை இப்போது ஆடையிழந்து உயிரிழந்து கழுவில் ஒட்டிக்கொண்டிருக்கும் நிலையில் கண்டதும் இருவருக்கும் அந்த நொடியே பூமி பிளந்து காமரியை விழுங்கி விடாதா என்கிற ஆவேசம் தோன்றியது. அவசரஅவசரமாகக் குதிரையிலிருந்து இறங்கிய இருவரும் சுற்றுப்புரத்தை ஆராய மறந்தனர். முடிந்த அளவிற்கு விரைவாக கழுவில் இருந்த ஆசிரியர்களை ஒன்றன் பின் ஒருவராக இறக்க ஆரம்பித்தனர்.

"ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்..." என்ற பெருங்கூச்சல் அருகாமையில் கேட்கும் வரையில் இருவருமே அவர்களைச் சுற்றி திடீரென நடந்த சூழ்நிலை மாற்றங்களை கவனிக்கத் தவறினார்கள்.

சத்தம் வந்த திசையில் என்ன என்று திரும்பிய இரும்பனின் பார்வை கடம்பன் மீது விழ, அவன் தோற்றத்தைப் பார்த்துக் குழம்பிய இரும்பன், "கடம்பா?!" என்று கேள்வியோடு இழுத்தான். அடுத்த நொடியை இரும்பனின் மீது பாய்ந்து அவன் கழுத்திலேயே கடித்தான் கடம்பன். வலி தாங்காது இரும்பன் அலற, அவனை கடம்பனின் பிடியிலிருந்து மிகவும் சிரமப்பட்டு மீட்டான் துகிரன்.

கழுத்திலிருந்து குருதி பீறிட்டு வெளியேற, கையில் இருந்த பச்சிலைகளை காயத்தில் வைத்துத் தேய்த்துக்கொண்டே, "துகிரா! ஓடு!" என்று உரக்கக் கத்தினான் இரும்பன். இரும்பனின் வார்த்தைக்குப் பணிந்து துகிரன் வேகமெடுத்து ஓடத்துவங்க, கடம்பனும் அவர்களைப் பின் தொடர்ந்து ஓடினான்.

கடம்பன் ஏன் இப்படி வெறி கொண்டு நாலு கால் பாய்ச்சலில் தங்களை துரத்திக்கொண்டு வருகிறான் என்று துகிரனுக்கும் இரும்பனுக்கும் புரியவேயில்லை. கடம்பனுக்கு ஏற்பட்ட நிலை அவனுக்கு மட்டுமின்றி ஐம்பூதனாருக்கே தெரியவில்லை; தெரியவிடாமல் காமரி பார்த்துக்கொண்டாள். ஏனெனில் அவளை எதிர்க்கத் துணிந்தவர்கள் மட்டுமே மேருவிற்கு இனி வருகை புரிவார்கள் என்று அவள் சரியாகக் கணித்திருந்தாள். அதனாலேயே அவர்களுக்கான அழிவுப்பொறியை கடம்பன் உருவத்தில் அங்கே விட்டுவைத்திருந்தாள் காமரி.

ஓடிக்கொண்டிருந்தவர்கள், சீட்டி அடிக்க, அவர்களது குதிரைகள் தங்கள் எஜமானர்களை இனம் கண்டுகொண்டு அவர்களை நோக்கி வந்தன. பொதுவாக குதிரைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் தரமான குதிரை என்றால் எஜமானர் சிக்கலில் இருக்கிறார் என்று புரிந்ததுமே, அவருக்கு ஓடி வந்து உதவும். இரண்டாம் தர குதிரை என்றால், தன்னுயிரைக் காத்துக்கொள்வதற்காக பிரச்சனை இருக்குமிடத்திலிருந்து பஞ்சாய் பறந்து போகும். குதிரையேற்ற வித்தையை முறையாகப் பயின்றிருந்த துகிரனும் இரும்பனும் உயர்ரக காட்டுக்குதிரைகளை தங்கள் வசப்படுத்தியிருந்ததால் அவர்கள் ஓடத்துவங்கியதுமே சிட்டாக வந்து அவர்கள் வாகாக ஏறிக்கொள்ள உதவி செய்தன. அதன் காரணமாக மட்டுமே அதிவேகமாக அவர்களை நெருங்கிக்கொண்டிருந்த கடம்பனிடமிருந்து இவர்களால் வேகமாக தப்பிக்க முடிந்தது.

வாயுவேகமாக சென்றுகொண்டிருந்தவர்கள், குருகுலத்தின் எல்லையைக் கடந்ததும் பின்னால் கடம்பன் வருகிறானா என்று திரும்பிப்பார்க்க, குருகுல எல்லையிலேயே நின்று கொண்டு, வெளியே வரமுடியாமல் அவன் தவிப்பதையும், பின் அங்கேயே அமர்ந்து அவன் கால் கட்டை விரலை வாயில் வைத்துக் கடிப்பதையும் கண்டு உடைந்து போனார்கள்.

"அவனை எல்லையோடு பிணைத்திருக்கிறாள் என்று நான் கருதுகிறேன். அதனால் தான் அவனால் நம்மைப் பின்தொடர்ந்து வர இயலவில்லை போலும்!" என்று சொன்ன துகிரன், மெல்ல கடம்பனின் அருகில் சென்று பார்க்க, உடலெங்கும் ஒருவித நீல நிறம் பாய்ந்திருக்க, கைகளில் அளவுமீறி வளர்ந்திருக்கும் மஞ்சள் நகத்தால் தன்னைத்தானே கீறிக்கொண்டான் கடம்பன். பின் தன் ரத்தத்தைத் தானே குடித்து அதன் சுவையை விழி மூடி ரசிக்க வேறு செய்தான்.

"இது என்ன? காண்பதற்கே இத்தனை கோரமாக இருக்கிறதே!" என்று கடம்பனுக்காக வருந்திய துகிரன் இரும்பனிடமிருந்து எந்தப் பதிலும் வராது போக திகைத்துத் திரும்பினான்.

குதிரையின் மீது வேரற்ற மரம் போல அசைவற்றுச் சாய்ந்து கிடந்தான் இரும்பன். அவன் நிலை துகிரனின் நெஞ்சைப் பிசைய, அருகில் சென்று பார்த்தான். உடலெல்லாம் வியர்வையில் நனைந்திருக்க, கண்கள் நிலைகுத்தி மயங்கியிருந்தான் இரும்பன். மருத்துவத்தில் பெரிய ஞானம் இல்லையென்றாலும் இரும்பனின் உதிரத்தில் நஞ்சு கலந்திருக்கின்றது என்பதை பார்த்த மாத்திரத்திலேயே

தெரிந்து கொண்டான் துகிரன்.

இரும்பனின் கழுத்தில் இருந்த காயத்தை சோதனை செய்து பார்க்கலாம் என்று பச்சிலைக் கட்டை விலக்கினால், ரத்தம் இன்னும் உறையாமல் வழிந்து கொண்டிருந்தது. அதுமட்டுமின்றி, அவன் கழுத்துப்பகுதி மொத்தமாக அழுகிப் போய் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. மெல்ல இரும்பனின் உடல் நிறம் மாறத்துவங்க, என்ன செய்வதென்றே தெரியாமல் துகிரன் கையை பிசைந்தபடியே நின்றுகொண்டிருந்தான். அவன் உள்ளுணர்வோ, மாற்று மருந்தைத் தரவில்லை எனின், கடம்பனைப்போல இரும்பனையும் இழக்க வேண்டி வருமென்று துகிரனுக்கு எச்சரிக்கை செய்தது.

தலை வெடித்துவிடும் போலிருக்க, இரும்பனின் குதிரையில் கட்டப்பட்டிருந்த மூலிகைப் பையிலிருந்த அத்தனை மூலிகைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக இரும்பனுக்கு புகட்டியும், அவன் காயத்தில் சாறு பிழிந்தும் தனக்குத் தெரிந்த சிகிச்சைகளை பைத்தியக்காரனைப் போலச் செய்துகொண்டிருந்தான் துகிரன்.

கடைசி மூலிகையையும் உபயோகப் படுத்திய பின்னர், "இரும்பா! இரும்பா! நீ இறந்து போனால் நவிரனுக்கும் குவேணிக்கும் என்ன பதிலை என்னால் சொல்ல முடியும்! கண்ணைத் திறந்து பார்! கண்ணைத் திறந்து பார்!" என்று ஆற்றாமையில் இரும்பனின் தோள்களைப் பிடித்து உலுக்கினான் துகிரன்.

துகிரனின் அழுகுரலோ அன்றி மருந்தின் தாக்கமோ, ஏதோ ஒன்று இரும்பனிடம் மாற்றத்தைத் தருவித்திருந்தது. கண்களைத் திறக்க முடியாமல் திறந்தவன், கடம்பனைக் காட்டி, தலையை இடவலமாக அசைத்தான். பின் தன் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி கண்களில் நீர் வழிய, "தயவு செய்து எரித்துவிடு!" என்று ஈனஸ்வரத்தில் முனகிவிட்டு அப்படியே கண்களை மூடிவிட்டான்.

சிறிது நேரத்திற்கு துகிரனிடமிருந்து எந்தச் சத்தமும் எழவில்லை. அதிர்ச்சியில் அப்படியே அவன் உறைந்து போயிருந்தான்.

"இரும்பா! இரும்பா!" என்று மடியில் கிடந்த அவன் உடலை ஒருமுறைக்கு இருமுறை அசைத்துப்பார்த்தான் துகிரன். அப்படியும் இரும்பனிடமிருந்து அதிவேகமாகத் துடிக்கும் அவன் இதயத்தைத் தவிர எந்த ஓசையும் எழவில்லை. ஆனால் அவன் உடல் நிறம் இப்போது கடம்பனைப் போலவே மாறத் துவங்கியதைக் கண்டு காமரியின் மீது பொங்கிய ஆத்திரத்தில் வேறெதுவும் செய்யமுடியாது, ஓவென்று கதறி அழுதான் துகிரன்.

கண் முன்னே கிடக்கும் நண்பனின் உடலைப் பார்த்து

வீறிட்டுக் கதறினான். ஆனால் தன் வேதனையால் இரும்பனை திருப்பிக்கொண்டுவர முடியாது என்று நன்றாக உணர்ந்தான் துகிரன். அவன் ஒட்டு மொத்த ரௌத்திரமும் காமரியின் மீது திரும்பியது.

"காமரி! உன்னை அழிக்காது நான் ஓயமாட்டேன்! இது என் அன்னையின் மீது சத்தியம்!" என்று துகிரன் உரக்க சபதமிட, தன் கையை நக்கிக்கொண்டிருந்த கடம்பன் கூட தான் செய்வதை நிறுத்திவிட்டுத் துகிரனை ஒரு முறை பார்த்து உறுமினான்.

கடம்பனின் நிலையைப் பார்த்ததும் வேதனை, அருவருப்பு, கையறுநிலை போன்ற சகல எதிர்மறை உணர்வுகளும் மீண்டும் மோத, மனதை முயன்று கல்லாக்கிக்கொண்டு தன் தோளிலிருந்த வில்லை எடுத்து நாணேற்றி கடம்பனை நோக்கி முதல் பானத்தை எறிந்தான். ஒரு வேளை சுயநினைவுடனிருந்திருந்தால் அம்பு வரும் திசையைப் பார்த்து கடம்பன் விலகியிருக்கக்கூடும். ஆனால் மூளை செத்துவிட்டிருந்த அவன், எதுவும் செய்யத்தோன்றாது, துகிரனையே பார்த்துக்கொண்டிருந்தான்.

துகிரனின் கண்களை வெறிகொண்ட கடம்பனின் கண்கள் சந்தித்த நொடி, கடம்பனின் இதயத்தைக் கிழித்துக்கொண்டு அவன் உடலில் துகிரனின் அம்பு இறங்கியது! அடிபட்ட மிருகம் போலச் சாய்ந்தவன், அக்கணமே உயிர் துறந்தான்.

பின் இரும்பனின் உடலை மறுமுறை சோதனை செய்தவன், இனி அவன் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பதை அவன் காயத்திலிருந்து ரத்தத்திற்கு பதிலாக வழியும் கருப்பு நிற திரவத்தைக் கண்டதுமே புரிந்துகொண்டான். தன் குறுவாளினை எடுத்து இரும்பனின் இதயத்தில் அவன் இறக்க, சற்றும் சிரமமின்றி இரும்பனின் உயிர் பிரிந்தது. இரும்பனின் இதயத்திலிருந்து வழிந்த குருதியை விட துகிரனின் மனதிலிருந்து வழிந்த உதிரமே அதிகம்.

குறைந்த நாட்களிலேயே உற்ற தோழனாக மாறியிருந்த ஒருவனையும் மேருமலையின் தலைசிறந்த மாணவர்கள் என்று ஐம்பூதனார் வியக்கும் இருவரையும் சுமக்க முடியாத துயரோடு ஒன்றாக வைத்துத் தீமூட்டினான் துகிரன். அவர்கள் இருவரும் சாம்பலாவதை காணச் சகியாது, திரும்பவும் குருகுலத்திற்குள் சென்றவன், ஆசிரியர்களுக்கு முறைப்படி செய்யவேண்டிய அனைத்து கடமைகளையும் ஒரு மகன் ஸ்தானத்தில் இருந்து செய்தான்.

பின் திரும்பியும் பாராது குருகுலத்திலிருந்து தென்பாலி நாட்டை நோக்கிப் பயணப்பட்டான். 'கனலியிடம் நேரம் பார்த்துப் பேச வேண்டும். காமரியைப் போல அவள் பிசாசு இல்லை. அவளுக்கு

மட்டும் இங்கே நடந்தவைகள் தெரிந்தால் நிச்சயம் அவள் உதவி கிடைக்கும்!' என்று கொந்தளித்துக்கொண்டிருந்த அவன் மனம் காமரியை எப்படி அழிப்பது என்று கணக்குப் போட்டுக்கொண்டிருந்தது.

துகிரனுக்கு மட்டும் கனலி அவள் தாயத்தை அவனுக்குத் தந்ததாலேயே மேருவில் காவலுக்கிருந்த எந்த அரூபமும் அவனைத் தொந்தரவு செய்யவில்லை என்று தெரிந்திருந்தால் அவள் மீது அவனுக்கு பெருமதிப்பு வந்திருக்கும். ஆனால் அவனுக்கு தாயத்தைத் தாரைவார்த்த ஒரே காரணத்தினால் அவள் கலரனிடம் படும் சித்ரவதைகளை அறிந்தானானால் கனலியின் அன்பின் ஆழத்தை அவன் புரிந்துகொண்டிருப்பான்!

*****************************************************************

கலரனின் நிலவறை!

நைந்து போன நிலையில் ஒரு கூண்டில் கிடந்தாள் கனலி. தான் இங்கே எத்தனை நாட்களாக அடைக்கப்பட்டிருக்கிறோம் என்றே தெரியாத நிலையில் கிட்டத்திட்ட பித்து பிடித்தவள் போலவே ஓரிடத்தை வெறித்துக்கொண்டிருந்தாள் கனலி.

கலரனிடம் அகப்பட்ட நாள் முதலாக அவள் உறங்கவேயில்லை. தெளிவாகச் சொல்லப்போனால் அவளை கலரன் உறங்கவிடாமல் பார்த்துக்கொண்டான். மற்றவரைப்போல பெருமாயம் செய்து கனலியை ஏமாற்ற முடியாது என்பதை அறிந்திருந்த கலரன், கனலிக்காக புதுவிதமான ஒரு தண்டனையை வடிவமைத்திட்டான்.

ஒரு பெரிய நிலவறையின் நடுவில், கோழி, முயல், நாய்க்குட்டி முதலிய சிறிய மிருகங்களை அடைத்து வைக்கப் பயன்படும் சின்னஞ்சிறிய கூண்டில் கனலியை திணித்தான். பதினெட்டு வயதுப்பெண்ணின் உடல் எப்படி அந்தச் சிறிய கூண்டில் அடைபடும்? முதல் ஒரு மணி நேரத்திலேயே முதுகுத்தண்டு ஒடிந்துவிடுவதைப்போல வலித்தது. உடலை எப்படிக் குறுக்கினாலும் அவளால் மூச்சு கூட இயல்பாக விட முடியவில்லை. உடலெங்கும் வலியெடுக்க, அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

கனலி மூர்ச்சையானது ஒரே ஒரு நொடி தான். அடுத்த நொடி, ஒரு வாளி கடுங்குளிர் நீரை அவளிருந்த கூண்டின் மீது ஊற்றினான். மனம் பதற விழித்தவளின் உடலெல்லாம் நடுங்கத் துவங்கியது. அரை அங்குலம் நகர்ந்தாலும் அவள் தலை மறுபடியும் கூண்டின் மேல்புறத்தில் இடித்துக்கொண்டது.

பேசமுடியாமல் பற்கள் தந்தியடித்தன. இருந்தும், "என்னை

எதற்காக இங்கே அடைத்திருக்கிறாய்? இது காமரிக்குத் தெரிந்தால் உன்னைக் கொன்றுவிடுவாள்!" என்று நடுங்கும் உடலை தேய்த்தபடியே கனலி கூறினாள்.

"அவள் உனக்குக் கொடுத்த ரட்சை அந்தத் துகிரனின் கைக்கு எப்படிப் போனது?" என்று உறுமினான் கலரன்.

"எனக்கெப்படித் தெரியும். நான் மயக்கமடைந்த பிறகு அவன் திருடிவிட்டானோ என்னவோ!" என்று சமாளித்தாள் கனலி.

"பொய் சொல்கிறாய்! நீ தான் அவனை முன்பும் தப்பவைத்திருக்கிறாய். இப்பொழுதும் தப்பவைத்திருக்கிறாய்!" என்றான் கலரன்.

"நான் எதற்காக அவனை தப்பவைக்கப் போகிறேன். முட்டாள்த்தனமாக உளறாதே! காமரிக்குத் தெரிந்தால் உன் தலை தப்பாது! திறந்துவிடு என்னை!" என்று அதட்டினாள் கனலி.

"உன் பசப்பு வார்த்தைகள் என்னிடம் பலிக்காதடி! அந்தத் துகிரனை நீ பார்த்த பார்வையின் பொருளை நானறிவேன்!" என்று அசராமல் பதிலளித்தான் கலரன்.

"துகிரனின் மனதில் முப்பொழுதும் இருப்பவள் வைனி. பிறரின் எச்சிலை சுவைக்க நானொன்றும் நீயில்லை! மரியாதையாக என்னை விடுவித்து விடு!" என்று கத்தினாள் கனலி.

"உன்னை என்னால் நம்ப முடியவில்லை. எனக்குத் தகுந்த சான்றை நீயே அளிக்கும் வரையில் உன்னை விட மாட்டேன். காமரி என்றால் பயந்துவிடுவேன் என்றா நினைக்கிறாய்? நீ துரோகி என்று அறியும் போது, உன்னை ஒரு வினாடியில் தூக்கிப் போட்டுவிடுவாள் என்பதை மறக்காதே!" என்று சொன்னவன், கனலியை பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினான். ஆனாலும் சொன்னதையே திரும்பத் திரும்ப சொன்னாளே தவிர துகிரனுக்கு உதவியதை கனலி ஒப்புக்கொள்ளவே இல்லை.

தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாத கலரனுக்கு அப்போது தான் அந்த யோசனை தோன்றியது. கனலியின் கூண்டை வேறொரு நிலவறைக்கு மாற்றினான். அங்கே சற்று பெரிய கூண்டில் இருவர் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் இவளதை இறக்கினான்.

"நன்றாக உன்னைச் சுற்றிப் பார் கனலி!" என்று கலரன் கொக்கரிக்க, மனதில் இருக்கும் அச்சம் விழிகளில் தெரியாதவாறு அலட்சியமாக பார்த்தாள் கனலி. பக்கத்திலிருந்த கூண்டில் ஒரு முதிர்ந்த

ஆணும் பெண்ணும் மயங்கிக் கிடந்தனர். இன்னும் சற்று உற்றுப் பார்த்தவளுக்கு அவள் கூண்டைச் சுற்றி மனிதர்களா விலங்குகளா என்றே பகுத்துப்பார்க்க முடியாமல் பலர் கட்டிவைக்கப்பட்டிருந்தது புலப்பட்டது.

கலரன் ஏதோ மந்திரத்தை உச்சரிக்க, வெறி மிகுந்த கண்களுடனும் நீல நிற உடலுடனும் பற்களை நறநறத்துக்கொண்டே கனலியை நெருங்கினார்கள் அவர்கள். அதுவரையில் அவள் ஒளித்து வைத்திருந்த பயம், எதிர்வரும் யட்சிணி விஷம் பாய்ந்த மனிதர்களைக் கண்டதும் பீறிட்டுக் கிளம்பியது.

"என்னை விட்டு விடு! என்னை விட்டு விடு!" என்று முதன்முறையாக கனலி வீறிட்டு அலறினாள்.

"துகிரனுக்கு நீ தான் உதவினாய் என்று ஒப்புக்கொள்! உடனே விடுவிக்கிறேன்!" என்று கலரன் அவன் பிடியை இறுக்க, "இல்லை! நான் இல்லை!" என்று மன்றாடினாள் கனலி. காமரிக்கு மட்டும் உண்மை தெரிந்தால் தன் மரணம் இதை விடக் கொடுமையாக இருக்கும் என்று நன்கு அறிந்த கனலி அந்த இக்கட்டான நிலையிலும் நைச்சியமாக சமாளித்தாள்.

"சரி! நாம் ஒரு பந்தயம் வைத்துக்கொள்ளுவோம். அதில் நீ வெற்றி பெற்றால் உன்னை விடுதலை செய்கிறேன். இல்லையென்றால் நீ உண்மையை ஒப்புக்கொண்டு காமரியின் கையால் இறந்து போ!" என்றான் கலரன். வேறுவழியின்றிக் கனலியும் சம்மதித்தாள்.

"இன்றிலிருந்து ஐந்து நாட்கள் நீ உறங்கவே கூடாது! நீ உறங்கிவிட்டால் இதோ இங்கிருக்கும் ஏதாவது ஒரு மனித மிருகம் உன் மீது நஞ்சைப் பாய்ச்சிவிடும்! ஒருவேளை நீ உறங்காமல் இருந்து விட்டால், ஊரறிய உன்னிடம் மன்னிப்புக் கேட்டு, காமரி எனக்குத் தரும் தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்!" என்று சிரித்தான் கலரன். தீபிகை குறுவாளால் இறந்ததற்கும் வைனி தப்பியதற்கும் கனலிக்கும் நிச்சயம் ஏதோ தொடர்பிருக்கிறது என்று அவன் மனம் சொல்லிக்கொண்டே இருந்தது! தான் கரம் பற்றத் துடிக்கும் வைனியை கனலி அவனிடமிருந்து பிரித்ததாக முட்டாள்த்தனமாக நம்பிக்கொண்டிருந்தான் கலரன். அதன் காரணமாகவே காமரிக்குத் தெரியாமல் அவளைத் துன்புறுத்தி ரசித்தான்.

கனலியிடமிருந்து பதிலே வரவில்லை என்றதும், "போட்டி துவங்குகிறது!" என்று ஏளனமாக சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றான். அதன்பின்னர், அவளால் பக்கத்திலிருந்தவர்களின் முகத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை. அந்தளவிற்கு அந்த அறையில்

இருள் நிரம்பியிருந்தது.

முதல் நாள் எப்படியோ தூங்காமல் சமாளித்தவளுக்கு இரண்டாம் நாள் சுலபமாக இல்லை. மூன்றாம் நாள் கண்களெல்லாம் பொங்கி வீங்கியது. அவளை மீறி அவள் கண்ணயரும் நேரமெல்லாம் உர்ரென்ற சப்தமெழுப்பிக் கொண்டு வேட்டை நாய்களைப்போல் ஓடி வந்தனர் தன்னிலை மறந்திருந்த மனித மிருகங்கள். என்ன நடந்தாலும் வாழ்க்கையின் மீது அவளுக்கிருந்த பேராசையின் காரணமாகவே இன்னும் பைத்தியமாகாமல் இருந்தாள். இதே சாதாரண மனிதர்கள் என்றால் இந்நேரம் அவர்களின் உயிர்ப்பறவை பறந்திருக்கும்.

இப்படியே நாட்கள் செல்ல, இன்னும் போட்டி முடிவதற்கு எத்தனை நாட்கள் மீதமிருக்கிறது என்பது தெரியாமலேயே ஒவ்வொரு நொடியாக எண்ணிக்கொண்டிருந்தாள் கனலி.

கனலியைப் பார்த்து நாட்கள் மாதங்களாக மாறியிருக்க, காமரிக்கு கனலி எங்கிருக்கிறாள் என்கிற கேள்வி எழுந்தது. ஒருவேளை வேவு பார்க்கப் போன இடத்தில் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டாளா என்கிற சந்தேகம் வர, உடனே குறளியைக் கூப்பிட்டுக் கனலி எங்கிருக்கிறாள் என்று கண்டுபிடிக்கச் சொன்னாள். அடுத்த அரை நாழிகையில் குறளி பதற்றத்துடன் வந்து கனலியை கலரன் துன்புறுத்தும் செய்தியைச் சொல்ல, ஆங்காரத்துடன் எழுந்து கலரனின் மாளிகைக்குச் சென்றாள் காமரி.

இதோ வந்துவிடப்போகிறேன் என்று சொல்வதைப்போலவே உறக்கம் கனலியின் கண்களை கட்டிக்கொண்டு வர, அவளைச் சுற்றிலுமிருந்து பெரும் ஓசையுடன் அவள் மீது நஞ்சு பாய்ச்சுவதற்குத் தோதாக அவளைச் சுற்றியிருந்த மனித மிருகங்கள் பாய்ந்து வர, மனதின் திடம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு விழிகளைத் திறக்க முயன்றுகொண்டிருந்தாள் கனலி. அவளை சூழ்ந்திருந்த மனித மிருகங்களின் துர்நாற்றம் வாந்தியை வரவழைக்க, லேசாகக் கண் திறந்தவள் அப்படியே சரிந்தாள். உடனே வேட்டையை உறுதி செய்துகொண்ட மிருகங்கள், நாவை சுழற்றிக்கொண்டு கனலியை நெருங்க, தன் மரணம் நிகழப்போவதை அறியாமலேயே கிடந்தாள் கனலி.

கூண்டை நெருங்கிய முதல் மனித மிருகம் கனலியின் கையைக் கடிக்க முயன்றபோது, தீப்பந்தத்தோடு உள்ளே பிரவேசித்த காமரி, அங்கிருந்த அத்தனை மனித மிருகங்களையும் ஆவேசமாகக் கொளுத்தினாள்.

கனலியை அடைக்கும் போது, அந்த நிலவறையில் சற்று

பெரிய கூண்டில் அடைக்கப்பட்டு கண்திறக்காமலிருந்த இருவரும் திடீரென்று கிடைத்த வெப்பத்தால் உந்தப்பட்டு மெல்லக் கண்விழித்தனர். எரியும் தீயின் உதவியால் தெரியும் பக்கத்திலிருந்த பெண்ணின் முகத்தை ஒரு முறை பார்த்த அந்த முதியவள், "அரசே! நம் மதுரமொழியாளைப் பாருங்கள்!" என்று பக்கத்தில் அவர் கணவர் போலத் தென்பட்ட ஒருவரை நோக்கி கூக்குரலிட்டார்.

அந்தக் குரலிலிருந்த அவசரம் அந்த ஆணை உலுக்க, தாங்கள் இருந்த கூண்டை பிடித்துக்கொண்டு, "மதுரா! மதுரா!" என்று கத்தினார். அவர் கத்தியதைக் கேட்ட காமரி, என்ன சத்தம் என்று திரும்பிப் பார்த்தவள் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனாள்.

எதற்குமே கலங்காத காமரி, அங்கிருந்த இருவரையும் பார்த்ததும் அச்சத்தில் அரண்டாள். கையில் ஏந்தியிருந்த கனலி இன்னும் மயக்கத்தில் இருக்கிறாளா என்பதை உறுதி செய்துகொண்டவள், "கலரா!" என்று வானே அதிரும்படிக் கத்தினாள்.

அவள் குரலில் தெரிந்த கோபத்தைக் கண்டு நடுங்கியபடியே வந்த கலரனை, "மட ஜென்மமே! என்ன காரியம் செய்திருக்கிறாய் நீ!" என்று கேட்டபடியே எத்தனை முறை ஓங்கி அறைந்திருப்பாளென்று அவளுக்கே தெரியாது!

கனலியின் கண்கள் லேசாக திறப்பதைப் பார்த்தவள், அவளைத் தாங்கிக்கொண்டு அங்கிருந்து மறைந்து போனாள். அவள் காதுகளில் விழுந்த 'மதுரா மதுரா' என்கிற சத்தம் அவளை துரத்திக்கொண்டேயிருந்தது!

அதே நேரத்தில், கண்மூடி தியானத்திலிருந்த ஐம்பூதனார், தன் நேரம் நெருங்கிவிட்டது என்று புரிந்ததும் குகையிலிருந்து புறப்பட்டார்!

## அத்தியாயம் 21

"கனலி! அம்மா கனலி!" தன் சொந்த மகளை அழைப்பதைப் போலவே அந்தக் குரலில் அவ்வளவு பாசம் இழையோடியிருந்தது. ஆனால் கனலியால்தான் கண்களைத் திறக்க முடியவில்லை. பல நாட்கள் உறங்காததினால் ஏற்பட்ட சோர்வின் காரணமாய் உடலைப் பந்து போல சுருட்டிக்கொண்டு உறங்கவே அவள் விரும்பினாள். மனதிலிருந்த அத்தனை தீய எண்ணங்களும் வடிந்து போய் புதிதாய்ப் பிறந்த மழலையைப்போல அவள் உறங்குவதைக் கண்டு யாரோ நெடுமூச்சு விடுவதைப் போலிருந்தது அவளுக்கு!

மறுபடியும் கலரனிடம் சிக்கிக்கொண்டோமா என்கிற

பயத்திலும் பீதியிலும் அரக்கப்பரக்க எழுந்தவளுக்கு எதிரினில் அன்பே வடிவான கண்களோடு ஐம்பூதனார் அமர்ந்திருந்தது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஒருங்கே அளித்தது. உண்மையில் தன்னைக் காத்தது காமரியா? என்ற கேள்வியும் அவள் மனதினில் எழுந்தது. "மதுரா!" என்று கதறிய குரலிலிருந்த பாசமும் பரிதவிப்பும் ஏதோ தாக்கத்தை அவளுக்குள் ஏற்படுத்த, கண்களை கால்வாசி திறந்து பார்த்திருந்தாள் கனலி. அப்போது காமரியின் செங்குழல் அவள் கண்களை நிறைத்திருந்தது. அப்படியானால் வந்தது காமாரியாகத்தானே இருக்கமுடியும்? நாவலந்தீவில் அவளைத்தவிர அக்குழல் வேறு எவருக்கு சொந்தமாகயிருக்க முடியும்? என்று தனக்குள்ளே குழம்பி அவள் திருதிருவென விழிப்பதைப் பார்த்து ஐம்பூதனார் முறுவலித்தார்.

"உன்னைக் கலரனிடமிருந்து காப்பாற்றியது காமரி தானம்மா." என்று அவள் குழப்பத்தை அவர் தெளிவிக்க, 'அப்போது இவர் இங்கே என்ன செய்கிறார்?' என்ற அடுத்த கேள்வி அவளுக்கு முன்னால் விஸ்வரூபம் எடுத்தது.

"கண்களைத் திறந்து பாரம்மா. உண்மை உனக்கே தெளிவாகத் தெரியும்." என்று புன்னகை மாறாமல் கூறினார் ஐம்பூதனார்.

தான் எங்கிருக்கிறோம் என்று அப்பொழுதுதான் சுற்றுப்புறத்தை ஆராய்ந்தாள் கனலி. ஒரு சோலையின் நடுவே அவள் இருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் வானளவு உயர்ந்திருந்த ஒரு பனை மரம் இருந்தது. வானை ஆராய்ந்து பார்த்தால் வைரங்களை வாரி இறைத்ததைப்போன்ற நட்சத்திரத் தூறல்களுக்கிடையில் நடுநாயகமாக மிகப்பெரிதாக ஒரு வெள்ளி நிலவு அவளையே கவனித்துக்கொண்டிருப்பது போலத் தோன்றியது. நாவலந்தீவு முழுக்க அவளுக்கு அத்துப்படி என்றாலும் அப்படியொரு இடத்தை அவள் வாழ்நாளில் அதுவரையில் அவள் கண்டதேயில்லை.

"ஐயா! நான் எங்கிருக்கிறேன் என்றே எனக்குப் புரியவில்லையே." என்று தயங்கியபடியே கனலி கேட்டாள்.

"இது எனக்கு மிகமிக விருப்பமான இடமம்மா. நான் அமைதிவேண்டி தியானிக்கும் போதெல்லாம் இங்குதான் வருவேன். உன்னிடம் சில விஷயங்களை யார் தொந்தரவுமின்றி பேசுவதற்காகவே உன்னை இங்கே அழைத்தேன்!" என்று பொறுமையோடு விளக்கினார் ஐம்பூதனார்.

ஒருவர் தன்னிலை மறந்து ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது, அவரது சூட்சம சரீரத்தை வசப்படுத்தி விரும்பிய இடத்திற்கு அழைத்துச் செல்லலாம் என்பதை கனலி அறிவாள். கற்பதற்கு மிகக்கடினமான

அந்தக் கலையை ஐம்பூதனார் தெரிந்துவைத்திருப்பதில் அவளுக்கு பெரிய வியப்பு எதுவும் இல்லைதான். ஆனால் பகைமை மறந்து தன்னிடம் பேசுவதற்கு இவருக்கு என்ன விஷயம் இருக்கக்கூடும் என்றும் இது காமரிக்குத் தெரிந்தால் அவ்வளவு தான் என்றும் அவள் பயம் கொண்டாள்.

"தயவு செய்து என்னை என் தோழி காமரியிடம் அனுப்பிவிடுங்கள். அவளை நேரில் கண்டு என் நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும். அவளுக்குத் தெரியாமல் நான் சிலது செய்திருந்தாலும், நான் அகப்பட்ட செய்தியறிந்து என்னைக் காத்த தேவதை அவள்! அவள் கால்களில் ஆயிரம் முறை விழுந்து தொழுதாலும் நான் செய்த துரோகத்திற்கு பிராயச்சித்தமில்லை!" என்று வருந்தினாள் கனலி.

"தவறென்று காமரி சொல்லுவதை சரியென்று இந்த அகிலமே ஒப்புக்கொள்ளும் குழந்தாய்! நன்மை வெற்றி பெறுவதற்கான போரில் நீயும் ஒரு சிறு பகடைக்காய். உன்னை வளர்த்தது தீமதியில் சிறந்த மகிந்தனானாலும், உன்னைப் பெற்றவள் மதுரமொழியாளாயிற்றே! நாட்டு மக்களை மட்டுமல்லாது, ஒரு சிறு சில்வண்டிற்குக்கூடத் தீங்கு நினைக்கத் தெரியாத பெருவீரன் மாயவன் உன் தந்தை எனும் போது எப்படி உன்னால் பிறருக்குத் தெரிந்தே தீங்கிழைக்க முடியும்?" என்று பொறுமையுடன் கேட்டார் ஐம்பூதனார்.

முதன்முறை பெற்றோரின் பெயரைக் கேட்ட அதிர்ச்சியில் கனலி உறைந்தாள். அதிலும் யாரோ, 'மதுரா! மதுரா!' என்று அழுதபடியே அழைப்பதைப் போலத் தோன்ற அவள் உடல் தானாக சிலிர்த்தது. புரியாத உணர்வில் அவள் கண்கள் பணிக்க, தன்னைத்தானே நன்றாக உலுக்கிக்கொண்டாள்.

அவளிடமிருந்து பதில் வரவில்லை என்றதும், "உன் பெற்றோரைக் கொன்று சின்னஞ்சிறு சிசுவான உன்னை அவர்களிடமிருந்து பிரித்தவன் மகிந்தன்!" என்று நேரிடையாகவே விஷயத்தைத் தெரிவித்தார் ஐம்பூதனார்.

"நீங்கள் சொல்வது பொய்! என்னை பெற்றவர்கள் யாரென்றே தெரியாது என்று மகிந்தன் மாமா கூறியிருக்கிறார். காட்டில் அனாதையாகத் திரிந்துகொண்டிருந்த என்னைக் காப்பாற்றி பெற்ற மகளைப்போல வளர்த்தவரைப் பற்றி இனி ஒரு வார்த்தை தவறாகப் பேசாதீர்கள்!" என்று அதிர்ச்சியில் கிறீச்சிட்டாள் கனலி.

"மகளே! இதுநாள் வரையில் உனக்கு தெரியக்கூடாது என்று மகிந்தனும் காமரியும் மறைத்து வைத்த விடயத்தை நீ தெரிந்துகொள்ளும் நேரம் வந்துவிட்டது. அதன் பிறகும் தீயவர்களின்

பக்கமே நீ நிற்பாய் என்றால், அது உன் விருப்பம்!" என்று சொன்ன ஐம்பூதனார், கனலியின் உண்மையான பெற்றோரைப் பற்றிக் கூற ஆரம்பித்தார்.

"ஒளிநாட்டை ஆண்டு வந்த வில்லாளனுக்கு ஒன்று விட்ட தங்கை ஒருத்தி உண்டு. அவள் தான் மதுரமொழியாள். பெயருக்கு ஏற்றாற்போல மிக இனிமையானவள். எதிரிக்கும் இரங்கும் இரக்க குணம் படைத்தவள். அவள் சிறுமியாக இருந்த பொழுதிலேயே கல்வி கேள்விகளில் வித்தகியாக இருந்தாள். ஒரே குருகுலதததில் பயின்றதால் வில்லாளனுக்கும் அவன் தங்கை சித்திரப்பாவைக்கும் கண்ணின் மணி போன்றவளானாள் மதுரமொழியாள்.

வில்லாளன் குருகுலக்கல்வியை முடிக்கும் சமயம், அவனுக்கு பெண் தேடத் துவங்கினர். அப்போது பைங்கனி நாட்டு இளவரசி நறுமுகை அவனுக்கு சரியான தேர்வாக இருப்பாள் என்று நினைத்த பெரியோர்கள், இருவரிடமும் விஷயத்தை சொல்ல, போரில் வல்லவனாக இருந்தாலும் பெண்கள் விஷயத்தில் கூச்ச சுபாவம் கொண்ட வில்லாளன், தனியே சென்று பெண் பார்க்க யோசித்துத் தன் தங்கைகள் இருவருடனும் சென்றான். அங்கே நறுமுகையைக் கண்டவன், அவருடன் பேசிய பின்பு தன் மனதைப் பறிகொடுத்தான். நறுமுகையும் அவ்வாறே உணர, இருநாடுகளின் கோன்களும் குடிகளும் மகிழும் வண்ணம் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

ஓராண்டு சென்றதும், வில்லாளனின் தங்கை சித்திரப்பாவை அவர்களின் குலப்பகைவன் மகிந்தனின் வலையில் விழுந்து தன் குடும்பத்தைத் துறந்து களவு மணம் புரிந்து கொண்டதும் அவர்களின் முழுக் குடும்பமுமே அதிர்ந்தது. காரணம் மகிந்தனின் பூர்வீகம் அப்படிப்பட்டது. சுயநலம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு எதிர் வரும் எவரையும் அழிக்கத் தயங்காத கயவர்கள்தான் அவர்கள். அதனாலேயே இருவரும் தீராப்பகை கொண்டிருந்தனர்.

எவ்வளவோ புத்தி சொல்லியும் கேட்காமல் சென்றுவிட்ட தங்கையின் செயலில் மனம் வருந்திய வில்லாளனுக்கும் நறுமுகை அம்மைக்கும் அந்நேரம் அழகான ஆண் குழந்தை பிறந்தது. நவிரன் என்று பெயர் சூட்டியவர்கள், அவன் முகத்தைப் பார்த்து சித்திரப்பாவையின் செயலை மறக்கத் துவங்கினர். ஆனால் மகிந்தனைப் பற்றி ஏற்கனவே சரியாகக் கணித்திருந்ததால், சித்திரப்பாவையின் நலத்தை அறிந்துகொள்ளும் ஆவலில் ஆங்காங்கே பல ஒற்றர்களை நியமித்தார் வில்லாளன். துயரம் என்னவென்றால் சித்திரப்பாவையை வில்லாளன் மீண்டும் கண்டது பிணமாகத்தான்.

குழந்தை மட்டும் போதுமென்ற மனநிலையில், பிரசவத்தின் போது உயிருக்குப் போராடிய சித்திரப்பாவையை அப்படியே இறக்கட்டுமென்று விட்டுவிட்டான் மகிந்தன். அவர் சவத்திற்கு ஒரு கணவன் என்கிற முறையில் செய்யவேண்டிய கடைசி காரியங்களைக்கூடச் செய்யாமல் நிற்கதியாய் போட்டுவிட்டு, அவன் பெற்ற காமரியுடன் வேறிடம் சென்றுவிட்டான்.

ஒற்றர்கள் மூலம் செய்தியறிந்தவர்கள் துயரக்கடலில் மூழ்கினார்கள். எப்போதும் சோகத்துடனேயே வலம் வந்த அரசகுடும்பத்திற்கு ஈராண்டுகள் கழித்து ஒரு நல்ல செய்தி வந்தது. வில்லாளனோடு பைங்கனி நாட்டிற்குச் சென்றிருந்த மதுரமொழியாளை அந்த நாட்டின் பட்டத்து இளவரசன் மாயவன் மணந்துகொள்ள விருப்பம் தெரிவித்து ஓலை அனுப்பியிருந்தது தான் அந்தச் செய்தி! தன் மனம் போல மாங்கல்யம் அமைந்ததை நினைத்து மதுரமொழியாளும் திருமணத்திற்கு இசைந்தார்.

மேருவைத் தவிர்த்த மற்ற குருகுலங்களில் பயிலும் அரச குடும்பத்தினர் பெரும்பாலும் ஆறு நிலைக் கல்விகளைப் பயில்வதில்லை. போர்க்கலைகள், நீதி நூல்களென்று அவர்களுக்குத் தேவையான கலைகளை மட்டுமே குருகுலத்தில் அவர்கள் பயிலுவர். மீதிக்கலைகளை தேவைக்கேற்ப அவர்களின் அரண்மனைகளில் இருந்தபடியே பிரத்யேக ஆசிரியர்களைக்கொண்டு கற்றுக்கொள்வர். திருமணம், அரியாசனம், மகுடதாரணம் போன்ற பல கடமைகள் இருப்பதால் அவர்களால் எல்லாக் கலைகளையும் குருகுலத்தில் முறையே கற்க முடியாது. அப்படித்தான் உன் அன்னையும் அரசை நிர்வகிப்பதற்குத் தேவையான கலைகளை மட்டுமே பயின்றார்கள். அதனால் ஐந்தாம் நிலையை முடிப்பதற்குள்ளேயே அவர்களுக்குத் திருமணம் முடிந்து விட்டது.

அன்பும் அறமுமாக இல்லறம் நடத்தியவர்கள் தங்களின் காதலை உருக்கி உருக்கி உன்னைச் செய்தார்கள். நீ பிறந்த அன்று பைங்கனி நாடே அமளிதுமளிப்பட்டது. தங்களின் போற்றுதலுக்குரிய அரசனுக்கு அழகு மகள் பிறந்திருக்கிறாள் என்ற செய்தி கேட்டு மக்கள் வருவோர் போவோருக்கெல்லாம் விருந்து படைத்தனர். கண்ணால் காணவில்லை என்றாலும் அத்தனை பாசம் பச்சிளம் குழந்தையான உன் மீது! அதே போல ஒளிநாட்டிலும் வருங்கால அரசி பிறந்துவிட்டாள் என்று மக்களும் அவர்களது அரசனும் கோலாகலமான கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள்." என்று சொன்னவர் கனலியின் அதிர்ந்த பார்வையைக் கண்டதும், "என்னம்மா அப்படிப்

பார்க்கின்றாய்? உன்னை நவிரனுக்கு மணமுடித்து வைக்க வேண்டுமென்பது உங்கள் இருவரின் பெற்றோர் விருப்பம். ஆனால் அதற்காக உங்களை நிச்சயம் கட்டாயப்படுத்தி இருக்கமாட்டார்கள்." என்று புன்னகையுடன் கூறிவிட்டு கதையை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர்ந்தார்.

"நெடுநாட்களாக பிறந்தகம் செல்லாமல் இருந்த உன் தாய், நீ ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் பொழுது ஒளிநாட்டிற்குச் செல்ல விரும்பினார். உன் அன்னையின் ஆசையை நிறைவேற்றுவதையே தன் வாழ்நாளின் லட்சியம் என்று வாழ்ந்த உன் தந்தையும் உடனே பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்தார்.

ஒளிநாட்டிற்குச் செல்லும் வழியில் பேரிடர்கள் எதுவும் இல்லாததால் ஒரு சிறு படையை மட்டுமே துணைக்கொண்டு அவர்கள் பயணம் மேற்கொண்டனர். அழகான மனைவி குழந்தையோடு, உலகத்தின் மொத்த மகிழ்ச்சியையும் தனதாக்கிக் கொண்டதாக மாயவன் கர்வத்தோடு நினைத்திருந்த பொழுதுதான் மகிந்தன் அங்கு வந்தான்!

ஒற்றைப் பிள்ளையாகவே தனித்து விடப்பட்ட காமரிக்கு தோழியாகவும் நிழலாகவும் இருக்க ஒரு தோழி அவசியம் என்று குறளி சொல்லியதைக் கேட்டு, காமரிக்கு சிறந்த தோழியாக இருக்கும் வல்லமை யாருக்கு உண்டு என்று சோழி உருட்டினான் மகிந்தன். நீ அவள் தோழியானால் காமரியின் பலம் பன்மடங்கு பெருகும் என்று உன் சாதகம் சாட்சி சொல்ல, உன்னை எப்படியும் காமரியிடம் சேர்ப்பது என்று முடிவு செய்தான். நீ உன் பெற்றோரின் நிழலில் வளர்ந்தால், நிச்சயம் மாயக்கலைகளை கற்க மாட்டாய் என்று அறிந்ததனால் உன்னை உன் பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிரிக்கத் துணிந்தான். அதன்படியே பெருமாயப்போர் புரிந்து உன் பெற்றோரையும் அவருக்குத் துணையாக இருந்த படைவீரர்களையும் கொன்றொழித்தான்.

பைங்கனி நாட்டின் கருவிழி போல அன்பும் அரவணைப்புமாக வளரவேண்டிய உன்னை அனாதையாக்கி, காட்டிலும் மேட்டிலும் திரியும் நாடோடியாக்கினான். எங்கே உனக்கு உண்மை தெரிந்தால் நீ அவர்களை விட்டுச் சென்றுவிடுவாயோ என்கிற பதற்றத்திலேயே பல பொய்க் கதைகளைப் புனைந்து, உன் நெஞ்சில் நன்றியுணர்வைத் தூண்டி வளர்த்தான். நீயும் அவன் சொல்வதே வேதம் என்று வளர்ந்தாய். ஆனால் அவர்கள் செய்யும் அட்டூழியங்களை உன்னால் என்றைக்குமே பொறுத்துக்கொள்ள முடிந்ததில்லை. செஞ்சோற்றுக்

கடனுக்காகவே நீ இன்னும் அவர்களுக்கு விசுவாசமாக இருக்கிறாய்." என்று முடித்தார் ஐம்பூதனார்.

ஒன்றோ அல்லது பல நிமிடங்களோ எதுவும் பேசாமல் ஏன் அழக்கூட திராணியின்றி அப்படியே அமர்ந்திருந்தாள் கனலி. அவளாகவே பேசட்டுமென்று ஐம்பூதனாரும் அவளையே பார்த்திருந்தார்.

தொண்டையை கனைத்துக்கொண்டு, "காமரிக்கு..." என்று அவள் இழுக்கையிலேயே, "தெரியும்!" என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தார் ஐம்பூதனார்.

மின்சாரம் பாய்ந்த சிறு புறாவைப்போல் அவள் உள்ளம் துடித்தது. அழுது அரற்றினால் கூட ஆற்றுவாரோ தேற்றுவாரோ இன்றித் தனிமரமாகிவிட்டதைப் போலுணர்ந்து விதியின் விளையாட்டை எண்ணி மனதொடிந்து போனாள் கனலி.

'ஒளிநாட்டின் அரசன் என் அன்னைக்கு அண்ணன் என்றால் அவர் மகன் நவிரன் எனக்கு அத்தானாயிற்றே! அதிலும் அவனை எனக்கு மணமுடிக்கும் எண்ணத்திலா எங்கள் பெற்றோர் இருந்தனர்? என் மாமன் மகன் நவிரனை ஏமாற்றிக் கொல்ல முயன்ற காமரி எனக்கு பெரியம்மா மகளென்றால் எனக்கு சகோதரி முறையாயிற்றே! அவளுக்கு எல்லாம் தெரியுமென்றால்... பிறகேன் வளரும் பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, வார்த்தைக்கு வார்த்தை என்னை அநாதை என்றே குறிப்பிடுகிறாள்?' என்று நினைக்க நினைக்க அவள் கண்கள் குளமாகின.

எல்லாக் கேடுகளிலும் அவளுக்குத் துணை போன பாவி நான்தானே என்று தோன்ற, சட்டென எட்டிப்பார்த்த சிறு துளி கண்ணீர் கூட வற்றிப்போனது. நவிரனைப் பற்றி எண்ணுகையில், 'என் உறவினனைக் கொல்வதற்கு நானே துணை சென்றேனா?' என்ற குற்றவுணர்ச்சி அவளைத் தின்றது.

சிறு வயது முதலே காமரியின் மகிழ்ச்சியை மட்டுமே முக்கியமாகக் கருதி அவளுக்கு பக்க பலமாக இருக்கும்படியே மகிந்தன் கனலியை வளர்த்திருந்தான். அவள் பொருட்டு இதுவரை தான் செய்திருந்த குற்றங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கனலி நினைத்துப் பார்த்தாள். 'என்னை அனாதையாக்கியது மகிந்தன் என்றால், என்னை மற்றவருடன் அண்டவிடாமல் செய்தது காமரியன்றோ!' என்ற உண்மை சுட, மனதளவில் அவள் ஒடிந்து போனாள்.

செத்த பாம்பினைப் போன்றிருந்த முகத்தை நிமிர்த்தி ஐம்பூதனாரைப் பார்த்தாள். "நவிரனுக்கு..." என்று அவள் அடுத்த

கேள்வி கேட்கையிலேயே, "இன்னும் தெரியாது! அவனுக்குத் தெரிவதும் தெரியாததும் உன் விருப்பம் மகளே!" என்று ஐம்பூதனார் சொல்ல, "வேண்டாம்! இந்தப் பாவி அவனுக்கு உறவென்று அவனுக்குத் தெரியவே வேண்டாம்!" என்று கத்தியவள், அதற்கு மேலும் அடக்கமாட்டாமல் அழுது தீர்த்தாள்.

கனலியாக தெளியட்டும் என்று பொறுத்திருந்தார் ஐம்பூதனார். அவர் நினைத்தபடியே கண்களைத் துடைத்துக்கொண்ட கனலி, "என் அன்னை தந்தையைக் கொன்றவனை என்னால் இப்போது பழி தீர்க்க முடியாது. அதற்காக அப்பாவியான அவன் மகளை அழிப்பதற்கு நான் துணை போக மாட்டேன். சரியோ தவறோ எனக்கு உப்பிட்டவர்களுக்கு துரோகமிழைக்க மாட்டேன்!" என்று உறுதியாக கனலி கூறினாள்.

"மாயவனின் மகளிடம் இதைத்தான் நான் எதிர்பார்த்தேனம்மா! ஆனால் உன் குடும்பத்தை சிதைத்த பாவத்தைச் செய்த மகிந்தனைப் பழிவாங்க 'அப்பாவியான உன் தோழி காமரியை' கொல்லச் சொல்வேன் என்று நினைத்தாயா அம்மா?" என்று 'அப்பாவியான உன் தோழி காமரி' என்பதில் மிகையான அழுத்தம் கொடுத்துக் கேட்ட ஐம்பூதனார், திடுக்கிட்ட கனலியைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டு மேலும் தொடர்ந்தார்.

"ஒரு பிறவியில் செய்த தவறுக்கு அதே பிறவியில் தண்டனையை அனுபவிக்கும் யோகம் கூட பல பேருக்கு வாய்க்கும். ஆனால் தான் செய்த தவறை அதே பிறவியில் சரியாக்கும் வாய்ப்பு கோடியில் ஒருத்தருக்கே கிடைக்குமம்மா. தன் நெஞ்சு பொய்யற்க மகளே! துகிரனை வேண்டுமானால் நீ விடுவித்ததன் காரணம் அவன் மேல் நீ கொண்டிருந்த ஆசையாக இருக்கலாம். ஆனால் வைனியையும் சேர்த்து நீ காப்பாற்றக் காரணம் இன்னும் களங்கப்படாத உன் மனமே தவிர வேறில்லை! காமரியின் ஆட்டத்திற்கு முடிவு கட்டும் நாள் நெருங்கிவிட்டது என்பதை நீயும் நானும் அறிவோம். உன் உதவியில்லாமல் அது நடக்காதம்மா! மக்கள் இன்புற்று வாழ, இதை நீ செய்துதான் ஆக வேண்டும். இந்தக் கிழவனின் கடைசி விருப்பம் அதுவே மகளே!" என்று சொல்லிவிட்டுக் கனலியின் முகத்தில் தெரியும் மாற்றங்களை ஆராயத் துவங்கினார் ஐம்பூதனார்.

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி, என்னால் காமரிக்கு எதிராக ஒரு துரும்பையும் அசைக்க முடியாது!" என்று கனலி உறுதிபட தெரிவித்துவிட்டாள்.

"உன்னைக் கட்டாயப்படுத்தும் உரிமை எனக்கில்லை. அதே போல நான் இப்பொழுது தரும் பரிசை மறுக்கும் உரிமை உனக்கும்

உன் சந்ததிகளுக்கும் இல்லையம்மா!" என்று அமைதியாகச் சொன்னவர், தன் இரு கட்டை விரல்களையும் கனலியின் இரு நெற்றிப் பொட்டுகளிலும் வைத்துக்கொண்டு மந்திர உச்சாடனத்தைத் துவங்கினார்.

கனலி திமிர வேண்டுமென்று நினைத்தாலும் அவளால் அசையக்கூட முடியவில்லை. தன் தவபலம் ஆன்மபலம் என எல்லாவற்றையும் கனலிக்கே தத்தம் செய்துவிட்டார் ஐம்பூதனார். பெற்றுக்கொண்ட பெரும்சக்தியின் தாக்கத்தால் கனலி மயக்கமுற, சக்திகளை முற்றாக இழந்த ஐம்பூதனாரும் மயங்கியபடியே அங்கிருந்து மாயமாக மறைந்துபோனார்.

****************************************************************

மின்னல் தாக்கியதைப்போலப் பதறி எழுந்தவள், தான் இருக்குமிடத்தை ஆராய்ந்தாள். இன்னும் கலரனின் மாளிகையில்தானிருக்கிறோம் என்பது முதலில் புரிய, காமரி தன்னை கலரனின் சித்திரவதைகளிலிருந்து காப்பாற்றியது உண்மை தான் என்று உணர்ந்தாள்.

வெளியில் தெரிந்த பிறை நிலவைப் பார்த்தவளுக்கு, அப்போதுதான் தான் கனவு கண்டிருக்கிறோம் என்று உரைத்தது. ஒரு பதட்டமான சிரிப்பை உதிர்த்தவள், "அடச்சை! கனவு!" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் படுக்கையில் சாய்ந்தாள்.

'அதானே, இந்த ஐம்பூதனார் எனக்கெதற்காக அவரது சக்திகளைத் தர வேண்டும்? மகிந்தன் மாமா என்னைப் பெற்றவர்களைக் கொன்றிருந்தால் என்னை எதற்குப் பாசமாக வளர்த்திருக்க வேண்டும்? காமரி எனக்கு அக்கா என்றால் அடிக்கடி எப்படி என்னை அநாதை என்று குத்திக் காண்பித்திருப்பாள்? எல்லாமே ஏதோ மாயை!' என்று நினைத்தவள் மீண்டும் கண்மூட, 'அப்படியானால் மதுரா, என்ற குரல் கேட்டதே, அது யாராக இருக்கும்? என்னை ஏன் அந்தப்பெயரைச் சொல்லி அழைக்க வேண்டும்?' என்ற யோசனை அவள் மூளையைக் குடைந்தது. காலையில் காமரியிடமே நேரடியாகக் கேட்க வேண்டும் என்று முடிவு செய்து மீண்டும் கண் மூடியவளைப் பக்கத்து அறையிலிருந்து வந்த சத்தமான பேச்சுக்குரல்கள் உறங்கவிடாமல் செய்தன.

அப்படி என்ன பேசுகிறார்கள் என்ற இயல்பான ஆர்வம் தலை தூக்க, காதுகளை நன்றாகத் தீட்டினாள் கனலி. கனலி ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு, காமரியும் கலரனும் தான் அங்கே சூடான விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். அவ்வப்பொழுது

சவுக்குச் சத்தமும் கேட்டது.

"காமரி! எத்தனை முறை தான் மன்னிப்புக் கேட்பது! உனக்கு உறுதுணையாக இருக்கும் என்னை நீயே அழித்துவிடாதே!" என்று கலரன் கெஞ்சிக்கொண்டிருந்தான். தன்னைத் துன்புறுத்தியதற்காக கலரனை காமரி வறுத்தெடுக்கிறாள் போல என்று நினைத்த கனலிக்கு காமரியின் மேல் பாசம் அதிகரித்தது.

"முட்டாளே! இன்னும் ஒரு வார்த்தை பேசினாய் என்றால் உன் உதிரத்தை அப்படியே குடித்துவிடுவேன்! நீ செய்த காரியத்திற்கு என்ன தண்டனை தந்தாலும் தகும்!" என்று கத்தினாள் காமரி.

"கனலியை துன்புறுத்தியது தவறு தான்! ஆனால் அவள் மீது கொண்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்காக அப்படிச் செய்தேனே தவிர, பகைகொண்டு அல்ல! என்னை மன்னித்துவிடு" என்று மீண்டும் கெஞ்சினான் கலரன்.

"என்ன? அவளை சித்ரவதை செய்ததற்காக உன்னை தண்டிக்கிறேன் என்றா நினைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று சொல்லிச் சிரித்த காமரி, "உன்னை எல்லாம் பெரிய அறிவாளி என்று சொல்லிச் சென்றானே என் தகப்பன் அவனைச் சொல்ல வேண்டும்!" என்று மீண்டும் சிரித்தாள்.

"புரியவில்லையே!" என்றான் கலரன்.

"மட்டி! உனக்கு எதுதான் தானாகப் புரிந்திருக்கிறது? கனலி எனக்கு எதிராக அவள் சுண்டுவிரலைக்கூட அசைக்க மாட்டாள்; அசைக்கவும் விடமாட்டேன். அவள் பெற்றோரை நடுக்காட்டில் கொன்று இதுவரை அவளை என் கண்பார்வையிலேயே வளர்த்தது எதற்காக? அவளின் சக்திகள் எனக்குச் சாதகமாக பயன்படும் என்ற ஒரே காரணத்துக்காகத்தான். விசுவாசம், செஞ்சோற்றுக்கடன், நட்பு, என்றெல்லாம் சிறுவயது முதலே அவள் மூளையை சலவை செய்து வைத்திருக்கிறோம். துகிரனை வேண்டுமானால் அவள் தப்புவித்திருக்கலாம். ஆனால் வைனியையும் சேர்த்து அவள் எதற்குக் காப்பாற்ற வேண்டும் என்று யோசித்தாயா நீ? நான் இட்ட பணியை வாலை ஆட்டிக்கொண்டே செய்யும் நாய் போலத்தான் கனலியும். வளர்த்த நாயை எங்கிருந்தோ வந்த காட்டுப்பன்றி துன்புறுத்துவதை என்னால் எப்படி சகிக்கமுடியும்? அதனால் தான் நிலவறையிலேயே உன்னை அறைந்தேன். ஆனால் இப்போது உனக்குத் தந்துகொண்டிருக்கும் தண்டனை அவளை சித்ரவதை செய்ததற்காக அல்ல!" என்றாள் காமரி. கலரனை காட்டுப்பன்றி என்று காமரி சொன்னதை ஒப்புக்கொண்ட கனலிக்கு தன்னை நாயோடு அவள்

ஒப்பிட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"வேறெதற்காக?" என்று குழம்பியபடியே கலரன் கேட்டான்.

"கனலியை யாருடன் அடைத்து வைத்திருந்தாய் என்பதை அறிவாயா மூடனே? அவளுக்கு மட்டும் அவர்கள் யாரென்று தெரிந்திருந்தால் தேவையில்லாத பல கேள்விகள் எழுந்திருக்கும். அவற்றை என்னால் கூட சமாளித்திருக்க முடியாது. நான் நாவலந்தீவை அடையும் வரை கனலி எனக்குப் பக்கபலமாக இருக்கவேண்டுமென்று என் தந்தை சொல்லியிருக்கிறான். ஏன் தெரியுமா? அவளின் கிரக நிலைகள் எனக்குச் சாதகமாக இருக்கும் வரையில் என்னை யாராலும் அழிக்கவே முடியாது என்பதால்தான்! உன் முட்டாள்த்தனத்தினால் அவள் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருந்தாலோ இல்லை அவள் என்னைப் பிரிய முற்பட்டாலோ எனக்குத்தான் பாதிப்பு நேர்ந்திருக்கும்." என்று கோவமாகச் சொன்னாள் காமரி.

"நீ இவ்வளவு ஆத்திரம் கொள்ளுமளவிற்கு அப்படி கனலிக்கும் அவர்களுக்கும் என்ன தான் தொடர்போ?" என்று ஆர்வமுடன் கேட்டான் கலரன்.

"அவர்கள் யார்?" எனக் கேட்டாள் காமரி.

"நவிரனின் பெற்றோர்." என்றான் கலரன். இதைக்கேட்டதும் கனலியின் இருதயமே நின்று போனது. புத்தி சுவாதீனமில்லாமல் மனித மிருகங்களுக்கிடையே சிக்கிக்கொண்டு மரணத்தை வேண்டி நிற்பவர்கள் நவிரனின் பெற்றோர் என்பதை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

"அப்படியானால் கனலிக்கு அவர்கள் என்ன உறவு?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டாள் காமரி

"தாய்மாமன்-மாமி" என்றான் கலரன்.

"அது கனலிக்குத் தெரிந்தால் அவள் அநாதை இல்லை என்பது அவளுக்குத் தெரியுமா தெரியாதா?" என்று கோபம் மட்டுப்பட்ட குரலில் வினவினாள் காமரி.

"தெரியும் தான்." என்றான் கலரன்.

"அதன் பிறகு அவள் அவர்களிடம் பேசத் துவங்கினால், நாம் அவள் பெற்றோரைக் கொன்றதையும், அவர்களின் ஒளிநாட்டினை அழித்த கதையையும் சொல்வார்களா மாட்டார்களா?" என்று சினமேறிய குரலில் கேட்டாள் காமரி.

"கண்டிப்பாகச் சொல்வார்கள் தான்!" காமரி எதை நோக்கி அவனை அழைத்துச்செல்கிறாள் என்கிற யோசனையின்றி கலரன் பதில்

சொல்லிக்கொண்டே வந்தான்.

"ஏற்கனவே நவிரனை நான் கொல்ல முயன்றதை மனதளவில் ஏற்காத கனலிக்கு இவ்வளவு உண்மையும் தெரியும் போது அவள் எதிகளுடன் சேருவாளா மாட்டாளா?" என்று இறுகிய குரலில் காமரி வினவினாள்.

"நிச்சயம் அவர்களுடன் சேர்ந்துவிடுவாள்!" என்று கலரன் சொன்ன மறுநொடி, கனலிக்கு யாரோ சவுக்கைச் சொடுக்கும் சத்தம் கேட்டது.

"இப்போது புரிகிறதா உன் மட்டித்தனத்தின் அளவை?" என்று கேட்டபடியே சவுக்கினால் கலரனை விளாச ஆரம்பித்தாள் காமரி.

"எப்போதோ இறந்தவளின் மகளென்று கனலியை அடையாளம் கண்டுகொள்ளும் நிலைமையிலா அவர்களை நாம் வைத்திருக்கிறோம்? அவர்களுக்குத்தான் பைத்தியம் பிடித்துவிட்டதே!" என்று தன்னிலை விளக்கமளித்தவன், மறக்காமல், "அடிக்காதே காமரி. வலி பொறுக்க முடியவில்லை!" என்று கெஞ்சவும் செய்தான்.

"பைத்தியம் பிடித்த அந்த நாய்கள், கனலியைப் பார்த்ததும் என்ன சொன்னதுகள் என்று அறிவாயா?" என்று சினம்மிக கேட்டவள், கலரன் திருதிருவென்று பதிலில்லாமல் முழிப்பதைப் பார்த்து அவனுக்கு மேலும் இரண்டு கசையடிகளைத் தந்தாள்.

"மதுரா! மதுரா! என்று கனலியின் அன்னையின் பெயரை கனலியைப் பார்த்ததும் அதுகள் கூவி அழைத்ததும் எனக்கு ஒரு வினாடி இதயமே ஸ்தம்பித்து விட்டது. நல்லவேளை கனலி மயக்கத்தில் இருந்ததால் அவளுக்கு எதுவும் நினைவில்லை. நாவலந்தீவு முழுமையும் என் கையில் வரும் வரை அவள் எனக்கு உயிரோடு வேண்டும். அதன்பிறகு அவளை நீ என்ன செய்திருந்தாலும் நான் எதுவும் கேட்டிருக்க மாட்டேன்." என்று இத்தனை நாள் மனதில் ஒளித்து வைத்திருந்த ரகசியத்தை, 'மதுரா!' என்று கனலியை ஒளிநாட்டின் அரசன் வில்லாளன் அழைத்ததன் தாக்கத்தில் அப்படியே ஒப்பித்துவிட்டாள் காமரி.

"சரி சரி! அதுதான் நூறு கசையடிகளுக்கு மேல் தந்துவிட்டாயே. அப்புறமென்ன, சீக்கிரம் என்னை விடுவித்து விடு! என்ன இருந்தாலும் நானும் உனக்கொரு குருவல்லவா?" என்று மிகவும் தாழ்ந்து போய் கலரன் கேட்க, "என் கண்களுக்கு முன்னால் வராதே! போய்த் தொலை!" என்று எரிச்சலுடனேயே அவனை விடுவித்தாள் காமரி.

அறையின் வாசல் வரை சென்றவன், ஏதோ ஞாபகத்தில் திரும்பி, "ஒருவேளை கனலிக்கு உண்மை தெரிந்துவிட்டால்?" என்று கேட்டான்.

"கனலியின் பிறப்பு ரகசியத்தை அறிந்தவர்கள் மொத்தம் ஐந்து நபர்கள் தான். நான், நீ, கீழே சிறையிருக்கும் அந்த இரு பைத்தியங்கள்! நான் சொல்லப்போவது இல்லை, அந்தப் பைத்தியங்கள் சொல்லும் நிலையில் இல்லை, நீ சொல்லவேண்டுமென்று நினைத்தால் உன் உயிர் உனதில்லை..." என்று சொல்லிக்கொண்டே காமரி செல்ல, "அப்பொழுது அந்த ஐந்தாவது நபர்?" என்று ஆர்வத்தோடு கேட்ட கலரனை ஏளனமாகப் பார்த்து, "சமீரணன்!" என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தாள் காமரி.

"இப்போது அவனை என்ன செய்யப் போகிறாய்?" என்று ஆவலோடு கேட்டான் கலரன்.

"நேரம் வரும்பொழுது அவன் தானாக என் காலடியில் மீண்டும் விழுவான். இப்பொழுது கீழிருக்கும் இரு பிணங்களையும் அப்புறப்படுத்தி விடு! நான் சென்று கனலியின் நாடியை பரிசோதிக்கிறேன்!" என்று சொன்னபடியே காமரி அங்கிருந்து நடக்க, அவர்களுக்குள் நடந்த உரையாடலை முழுவதுமாகக் கேட்ட கனலியின் இதயம் வெடித்துச் சுக்குநூறானது.

ஐம்பூதனார் கூறியதெல்லாம் உண்மைதான் என்று புரிய, *'காமரி இவ்வளவுதானா? இவளுக்காகத்தான் நான் இத்தனை அநியாயங்களைச் செய்தேனா?'* என்று கனலி மனதிற்குள் மருகிக்கொண்டிருந்த நேரம் காமரி வரும் அரவம் கேட்டு உடனேயே கண்மூடி உறங்குபவளைப் போல நடித்தாள். காமரியும் அசதியினால் கனலி உறங்குகிறாள் என்றெண்ணி அப்படியே ஓசைபடாது வெளியேறினாள்.

*'என் பெற்றவர்களைக் கொன்றதில் வேண்டுமானால் அவளுக்குப் பங்கிருக்காமல் இருக்கலாம். ஆனால் அதற்குப் பின்னால் அவள் செய்த கொலைகளுக்கெல்லாம் நிச்சயம் ஞாயம் வேண்டும்! இதெல்லாம் கேவலம் ஒரு நிலப்பரப்பை ஆட்சி செய்வதற்காக என்றால்... கூடாது! நிச்சயம் நாவலந்தீவு அவள் கைகளுக்குப் போகவே கூடாது! போகவும் விட மாட்டேன்!'* என்று கனலி சூளுரைத்த நேரம், அவளின் வலது மணிக்கட்டில், பனை மரமும், ஒளி வீசும் பௌர்ணமி நிலவும் செங்காந்தள் மலரினூடே தெரிவதைப்போல வித்தியாசமான ஒரு குறியீடு தோன்றியது. ஏதேதோ எண்ணங்கள் அவள் மனதினை நிறைக்க, ஐம்பூதனாரின் சக்திகள் அவளுக்குள் முழுமையாகப் பரவியது!

*****************************************************************

நாட்டின் அடர்வனம்!

அன்று காலை விடியும் போதே மனதெல்லாம் ஏதோ இனம்புரியாத சோகம் சூழ்ந்திருந்ததைப் போல உணர்ந்தாள் அரண்யா. சிரமப்பட்டு எழுந்தவள் மேடிட்ட அவளது வயிற்றை ஆசையோடு தடவிக்கொடுத்தாள். இப்போதெல்லாம் அவளால் விரும்பிய நிலையில் படுக்கக்கூட முடியவில்லை. உணவின் அளவும் தண்ணீரின் அளவும் கூட பார்த்துப்பார்த்து அருந்தவேண்டியிருந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு ஓடும் குதிரையின் மேல் தாவி ஏறி முட்டிபோட்டு அம்பெய்தியவளுக்கு இப்போதோ பத்தடி தூரம் நடந்தாலும் மூச்சிரைத்தது. போதாக்குறைக்கு எப்போதும் அவள் வயிற்றிலேயே வாள்சண்டையும் மல்யுத்தமும் செய்யும் குழந்தை வேறு அவளுக்கு அதிக சோர்வைத் தந்தது. இத்தனை வேதனைகள் இருந்தும் அவள் கர்ப்பக்காலத்தை முழுவதுமாக ரசித்தாள்; 'என் குழந்தை!' என்று பூரித்துப் போனாள். எப்போதும் குழந்தையுடன் பேசிக்கொண்டிருப்பதே அவளது தலையாய வேலையாகிப் போனது.

பக்கத்தில் படுத்திருந்த வைனியை காணவில்லை என்றதும் வெளியே வந்து முகம் கழுவிவிட்டு வீரனைத் தேடினால் அவனையும் காணவில்லை. சூரியன் நன்றாக வெளிச்சம் பரப்பிக்கொண்டிருப்பதைப் பார்த்தவளுக்கு, 'இந்திரரகசியத்திற்கு உருவேற்றிவிட்டு இந்நேரம் வீரன் வந்திருக்க வேண்டுமே!' என்ற தோன்ற சுற்றிலும் வேறு யாராவது இருக்கிறார்களா என்று தேடினாள். எந்நேரமும் குகைக்குக் காவலிருக்கும் நவிரனையும் சமீரணனையும் கூடக் காணவில்லை என்றதும் குழம்பித் தவித்தாள். ஒருவேளை தான் உறங்கும் வேளையில் காமரி ஏதாவது செய்துவிட்டாளா? என்ற எண்ணமே அரண்யாவின் முழு உடலையும் அச்சத்தில் ஆழ்த்த, "வைனி?" என்று அழைத்துக்கொண்டே அரண்யா உள்ளே சென்றாள்.

ஐம்பூதனாரின் அறையிலிருந்து மெல்லிய முனுமுனுப்புகளும் வைனியின் விசும்பல் ஒலியும் கேட்டதும், 'துகிரன்!' என்று நெஞ்சு பதற நினைத்தவள், தட்டுத்தடுமாறி உள்ளே சென்றாள்.

அரண்யாவின் முகத்தைப் பார்த்ததும், "குருதேவர்... குருதேவர்..." என்று அழுதுகொண்டே வைனி அரண்யாவை கட்டிப் பிடித்துக்கொணடாள். வைனியின் பிடியிலிருந்து விலகி, குருதேவரின் பாதங்களை அரண்யா தொட, அது பனிக்கட்டியைப் போல சில்லிட்டிருந்தது.

"குருதேவா! அரண்யா வந்திருக்கின்றேன்!" என்று சொல்லி

அவர் தோள்களை மெல்ல அசைத்தாள் அரண்யா. ஆனால் ஐம்பூதனார் எழவில்லை.

"உறங்கியது போதும்! நான் உங்கள் மகளைப்போல என்று அடிக்கடி சொல்வீர்களே! நான் அழைக்கிறேன்! எழுந்திருங்கள்!" என்று சொல்லி அவர் முகத்தைத் திருப்ப, அது அப்படியே அந்தப் பக்கம் சாய்ந்தது.

"மேருமலைக் காவலர் நீங்கள்! மரணமில்லாதவர் நீங்கள்!" என்று அரண்யா வெறிபிடித்தவள் போலக் கத்திக்கொண்டு ஐம்பூதனாரின் உடலை உலுக்க, வீரனும் வைனியும் அவளைப் பிடித்து நிறுத்தினர்.

"அரண்யா! குருதேவர் ஈசனை அடைந்துவிட்டார்!" என்று வைனி அவளுக்கு விளக்க முற்பட, "உளறாதே! நம் குருதேவருக்கு மரணமென்பதே கிடையாது! அவரது ஆன்மபலம் அவரிடம் இருக்கும்வரை குருதேவருக்கு மரணமென்பதே கிடையாது!" என்று வைனியிடம் அரற்றினாள் அரண்யா.

அதிர்ச்சியின் காரணமாக அரண்யா உளறுவதாக நினைத்தவர்கள், மெல்ல அரண்யாவை ஆசுவாசப்படுத்தி அவள் உறங்குவதற்காக மயக்க வேரினை உபயோகப்படுத்தினார்கள். "குருதேவர் இறக்கவில்லை! அவர் இறக்கவும் முடியாது!" என்று புலம்பியபடியே அரண்யா உறங்கிப்போனாள்.

அரண்யா கூறியதைப்போல மரணமில்லா பெருவாழ்வு வாழும் சித்தியைப் பெற்றிருந்த ஐம்பூதனார், தன் ஆன்மபலம் தவவலிமை என அவர் சேகரித்து வைத்திருந்த சக்திகள் முழுவதையும் கனலியிடம் தாரை வார்த்ததும் வந்த வேலை முடிந்ததென்று ஈசனை அடைந்தார். மரணமில்லா பெருவாழ்வை விட, மீண்டும் பிறவாத பெருவரத்தையே அவர் விரும்பினார். அவரின் விருப்பத்திற்கிணங்க, இயற்கையோடு கலந்தும் போனார்!

ஐம்பூதனாரின் ஈமச்சடங்கினைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தவர்களுக்கு குகை வாயிலை மறைத்தபடி நின்றுகொண்டிருந்தவனைப் பார்த்து அதிர்ச்சி ஆச்சர்யம் என்று கலவையான உணர்ச்சிகள் தோன்றின!

தனக்கு விதிக்கப்பட்ட கடமையை முடிக்க வந்தவனும் மனதை கல்லாக்கிக்கொண்டு தயாரானான்!

## அத்தியாயம் 22

'யாரிந்த புதியவன்?' என்ற தடுமாற்றம் அங்கே எவருக்குமில்லை. காரணம் அவனை அறியாதவர்கள் அங்கே யாருமில்லை.

"அண்ணா! வாருங்கள்!" என்று முதலில் சுதாரித்த வீரன் ஆரனை உள்ளே அழைக்க முற்பட்டான்.

"ஒரு நிமிடம் வீரா!" என்று அவனைத் தடுத்த நவிரன், "நாங்கள் இருக்குமிடம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று சற்றுக் கடினமாகவே வினவினான். ஐம்பூதனார் இறந்த பின்னர் அவரிட்ட பல மந்திர கட்டுக்களும் தளர்ந்திருக்கும் இந்த நிலைமையில் யாரையும் எளிதில் நம்பிவிட அவன் தயாராக இல்லை என்பதை அவன் முகமே எடுத்துக்காட்டியது. நவிரனின் குரலிலிருந்த கடுமை புரிய, ஆரனிடமிருந்து ஒரு கசந்த புன்னகை வெளிவந்தது. அதைக் கண்ட வீரனோ இருதலைக்கொள்ளி எறும்பானான். ஆனால் நவிரன் சற்றும் இளகவில்லை.

"பலம் பொருந்திய ஒரு மோசக்காரியால் சொந்த உதிரத்தைக் கூடச் சந்தேகிக்கும் நிலை வந்துவிட்டதே!" என்று வருத்தமுடன் கூறினான் ஆரன். அதன் மூலம் அவன் எவ்வளவு காயப்பட்டிருக்கிறான் என்பதை வீரன் புரிந்துகொண்டான். இருப்பினும் நவிரனின் எச்சரிக்கையை உதாசீனம் செய்யவும் அவன் தயாராக இல்லை.

பாறை போன்ற முகத்தோடு நின்றிருந்த நவிரனைப் பார்த்து ஒரு நெடுமூச்சு விட்டுவிட்டு, "சில மாதங்களுக்கு முன்பு மதுரையில் நடந்த துக்க செய்திகள் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். எல்லோரும் நினைப்பதைப் போல என் தாயார் இறக்கவில்லை. காமரியின் கைகளுக்கு சிக்கும் முன்னரே அவரையும் என் மனைவி வேல்விழியையும் எங்கள் இல்லத்திலிருந்து நான் அப்புறப்படுத்திவிட்டேன். வீரனை வெளியே வரவைக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் எங்கள் அன்னையைக் கொன்றுவிட்டதாக காமரி கதை கட்டினாள். எப்படியாவது உண்மையை ஊருக்கு உரைக்க நினைத்த என்னால், அது முடியாமலேயே போய்விட்டது. இப்போது நான் இங்கு வந்தது உண்மையில் வீரனைத் தேடி அல்ல; ஐம்பூதனாரை தேடித்தான். மந்தரை மலையிலிருந்து வீரன் வந்துவிட்ட செய்தியை நான் அறியேன். ஆனால் ஐம்பூதனார் இங்கிருப்பதை சிலநாட்களுக்கு முன் பார்த்த துகிரனின் வாயிலாக அறிந்துகொண்டேன். அவன் மூலமாகவே உங்கள் மறைவிடத்தை அடையும் வழியையும் தெரிந்துகொண்டேன்." என்று முடித்தான் ஆரன்.

"ஐம்பூதனாரை எதற்காக பார்க்கவேண்டும்?" அடுத்த

கேள்விக்கணை பறந்தது.

"இன்றோ நாளையோ என்றிருக்கும் என் அன்னையை காக்க முடியுமா என்று கேட்பதற்காக!" என்று அழுதுவிட்டான் ஆரன்.

ஆரானின் குரல் உடைந்ததும், "போதும் நவிரா! வந்திருப்பது என் அண்ணன்தான் என்பதில் எனக்கு சந்தேகமில்லை!" என்று விறைப்பாகச் சொல்லிவிட்டு நவிரனின் எச்சரிக்கைப் பார்வையை துளியும் மதிக்காமல் முன் சென்று ஆரனை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான் வீரன்.

"அம்மாவுக்கு என்னாயிற்று அண்ணா? பயப்படும்படியாக ஒன்றுமில்லைதானே?" என்று பதட்டமான குரலில் கேட்டான் வீரன்.

"காடுமேடெல்லாம் அலைந்து, மறைந்து வாழும் வாழ்க்கை அம்மாவின் உடல்நிலைக்கு ஒத்துவரவில்லையடா. தந்தையை இழந்த மனக்கவலையோடு உன்னைப் பிரிந்த சோகமும் சேர்ந்துகொள்ள, அவர்களின் நலம் வெகுவாகக் குறைந்தது. அதிலும் சென்றமுறை நாங்கள் மறைந்திருந்த இடத்தை காமரியின் ஆட்கள் கண்டுபிடித்துவிட்டதும் பெரும் போராட்டத்திற்குப் பிறகு, கடைசி நேரத்தில் எப்படியோ தப்பினோம். அப்போது படுத்தவர்கள்தான்; பிறகு எழவேயில்லை. எனக்குத் தெரிந்த வகையில் பார்த்த மருத்துவம் ஒன்று கூட பயனளிக்கவில்லை. என்ன செய்வது என்று யோசிக்கும் போதுதான் ஒருநாள் நம் துகிரனையும் இரும்பன் என்பவரையும் கண்டேன். ஐம்பூதனார் இங்கிருக்கும் விஷயத்தைச் சொல்லி, என்னை இங்கு அனுப்பியது துகிரன் தான்." என்று ஆரன் சொல்லவும், ஐம்பூதனார் இறந்த செய்தியை அவனிடம் எப்படிச் சொல்வதென்று வீரன் தடுமாறினான்.

"அண்ணா! குருதேவர் இறந்துவிட்டார்!" என்று வருத்தத்துடன் கூறியபடியே வைனி அங்கு வந்தாள்.

"என்ன சொல்கிறீர்கள்? குருதேவர் எப்போது, எப்படி இறந்தார்?" என்று அதிர்ந்தான் ஆரன்.

"நேற்றிரவு உறங்கியவர் கண்களைத் திறக்கவேயில்லை. உறக்கத்திலேயே சிவபதத்தை அடைந்துவிட்டார்." என்றாள் வைனி. அதைக்கேட்டதும் ஆரன் கவலையோடு அமர்ந்துவிட்டான். இப்போது என்ன செய்வது என்ற ஆரனின் மனக்கிலேசம் அங்கிருந்தவர்களுக்கு நன்றாகப் புரிந்தது.

"நான் மருத்துவம் பயின்றிருக்கிறேன். வேண்டுமானால் நான் உங்களுடன் வரட்டுமா? நிச்சயம் அம்மாவை என்னால் குணமாக்க

முடியும்!" என்று நம்பிக்கை தெரிவித்தாள் வைனி.

"அரண்யாவை மறந்துவிட்டு பேசுகிறாயே வைனி!" என்று நவிரன் வைனியின் காதுகளில் கிசுகிசுக்க, "அரண்யாவிற்கு என்னவாயிற்று?" என்று பதறினான் ஆரன்.

"எல்லாம் நல்ல செய்தி தான் அண்ணா! நீங்கள் பெரியப்பாவாகப் போகிறீர்கள்!" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள் வைனி. அதைக்கேட்டு ஒரு நொடி ஆரன் அதிர்ந்தாலும், தன்னை பிறரறியாமல் விரைவில் மீட்டுக்கொண்டான்.

"மிக்க மகிழ்ச்சியடா!" என்று வீரனை தட்டிக் கொடுத்தவனிடம், செங்கோலைத் தேடிச் சென்று தோல்வியில் திரும்பிய கதையை தெரிவித்தான் வீரன். அனைத்தையும் கேட்டதும், "சரி, நான் வருகிறேன். அம்மாவும் வேல்விழியும் நானில்லாமல் எவ்வளவு சிரமப்படுகின்றனரோ!" என்று கூறும் போதே ஆரனின் தொண்டை அடைத்தது.

"அண்ணா! ஒரு நிமிடம். வைனியால் வேண்டுமானால் இங்கிருந்து வரமுடியாமல் இருக்கலாம். ஆனால் என் நிலை அப்படியல்லவே! நான் வந்து அம்மாவை குணப்படுத்துகிறேன்!" என்றான் வீரன்.

"இந்திர ரகசியம் முற்றுப்பெறும் தருவாயில் இருக்கும் நிலையில் நீ தனியே செல்வது சரியில்லை!" என்று நவிரன் எச்சரிக்கையில், "உனக்கு அவ்வளவாக மருத்துவம் பரிச்சயமில்லையே!" என்று குழம்பினான் ஆரன்.

நவிரனை ஒரு பார்வையில் அடக்கிவிட்டு, ஆரனிடம் திரும்பி, "அதனாலென்ன? வைனி செய்யவேண்டியதை சொன்னாளென்றால், அதன்படியே நாம் செய்வோம்." என்றான் வீரன்.

"வேண்டாம் வீரா! அரண்யா ஈருயிராய் இருக்கும் நேரத்தில் நீ அவளுடன் இங்கிருப்பதுதான் சரி. அம்மாவால் இவ்வளவு தூரம் பயணம் செய்ய முடியும் என்றால் நான் அவர்களை இங்கேயே அழைத்து வந்துவிடுவேன். ஆனால், அவர்களால் படுத்த படுக்கையை விட்டுக்கூட எழமுடியவில்லை." என்று சொன்ன ஆரனின் கண்கள் குளம் கட்டியது.

"பெற்ற அன்னையை பரிதவிக்கவிடும் பாவியல்ல இந்த வீரன்! வைனி, அம்மாவின் நோய்குறிகளைப் பற்றி அண்ணனிடம் நன்றாக விசாரித்து வைத்துக்கொள். நீ தரும் மருந்தை எப்படித் தரச் சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்." என்று வீரன் உறுதிபட

தெரிவித்தான்.

"குருதேவரின் இறுதிக்கடன்?" என்ற நவிரனின் கேள்விக்கு ஆரனை பார்த்தான் வீரன்.

"நேரமில்லை நவிரா! நாங்கள் உடனே புறப்பட வேண்டும்." என்று சொன்ன வீரனிடம், "அரண்யா?" என்றான் நவிரன்.

"நீயும் வைனியும் இருக்கும் வரையில் அவள் நலமுடன் இருப்பாள் என்பதை நானறிவேன். ஒருவேளை இந்த இடத்தை நீங்கள் மாற்றும் நிலை வந்தாலும், உங்களை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து விடுவேன். இப்போது என்னை ஈன்றவருக்கு நான் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டும். தடுக்காதே!" என்று நவிரனின் கைப்பற்றி வீரன் இறைஞ்ச, அதன்பிறகு தடை சொல்ல நவிரனுக்கும் நா எழவில்லை.

ஆரன் சொன்ன அறிகுறிகளையும் அவன் செய்த மருத்துவத்தையும் கேட்டு உள்வாங்கிக்கொண்ட வைனி, சரியான வேர்கள் சிலவற்றை வீரனிடம் தந்தாள். அவற்றை பயன்படுத்தும் முறையை விளக்கியவள், அவள் சொன்னதைக் கடைபிடித்தால் நிச்சயம் வீரனின் அம்மா குணமாகிவிடுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தாள்.

வைனிக்கு நன்றி சொல்லிவிட்டு அரண்யாவை பார்க்கச் சென்றான் வீரன். மயக்கவேரின் தாக்கத்தால் உறங்கும் போது கூட வயிற்றை பாதுகாப்பாக பிடித்தபடியிருக்கும் அரண்யாவைப் பார்த்ததும் அவனுள் ஏதேதோ உணர்வுகள் எழுந்தன. மேடிட்ட அவள் வயிற்றை தடவிக்கொடுத்து குழந்தைக்கு முத்தமிட்டு அவள் வயிற்றில் அவன் கன்னம் வைத்த பொழுது, குழந்தை வீரனின் கன்னத்தை வருடுவதைப்போல உதைத்தது. நீர்குமிழிகள் முகத்தில் வந்து மோதுவதைப்போன்ற உணர்வில் வீரனின் மனம் பிசைந்தது; வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தன; கண்கள் கூட லேசாகப் பனித்தன.

"செல்லக்குட்டி, பட்டுக்குட்டி... பாட்டியின் உடல் நிலையை குணப்படுத்திவிட்டு அப்பா விரைந்து வந்துவிடுவேனடா. நான் வரும் வரையில் உன் அன்னையை கவனமாக பார்த்துக்கொள்!" என்று சொல்லி மறுபடியும் வீரன் முத்தம் வைத்து அரண்யாவின் வயிற்றைப் பார்க்க, அவன் குழந்தையின் கைத்தடம் அவள் வயிற்றில் தெரிந்தது. ஒருவேளை, 'அப்பா! போகாதே!' என்று எச்சரிக்கை செய்வதற்குத்தான் கையை நீட்டியதோ தெரியவில்லை. அதைக்கண்டு மனம் வாடியவன், அரண்யாவின் முன் நெற்றியில் இதழ் பதித்துவிட்டு, "உன்னிடம் சொல்லாமல் போவது தவறு தான் கண்மணி. என்ன செய்ய? நேரமும்

சூழ்நிலையும் அப்படியிருக்கிறது! நான் என் அன்னையை காப்பதற்கு உடனே புறப்படும்படியான இக்கட்டான சூழலில் சிக்கியிருக்கிறேன். நீ சுவாதீனமாக இருந்தால், நீயே என்னை போகத்தான் சொல்லியிருப்பாய் என்று எனக்குத் தெரியும். எது நடந்தாலும் குழந்தை பிறக்கும் பொழுது நான் உன்னுடன் இருப்பேன்!" என்று சொல்லி மீண்டும் அவளை முத்தமிட்டுவிட்டு கனத்த மனதுடன் ஆரனுடன் சென்றான்.

முதலில் பத்து நாள் பயணம் என்று சொல்லிய ஆரன், நாளாக ஆக எங்கெங்கோ வீரனை அழைத்துச் சென்றான். விவரம் கேட்டவனிடம், நேர் பாதையில் சென்றால் காமரியின் குறளிப் பிசாசிற்கு தெரிந்துவிடும் என்றும் அதனால் பாதை மாறி மாறி செல்வதாகவும் காரணம் சொன்னான். எத்தனை நாட்கள் சென்றாலும் காலை வேளையில் இந்திர ரகசியத்திற்கு உருவேற்றுவதை மட்டும் வீரன் மறக்காது செய்தான்.

பயணம் செய்யும் போது ஒருநாள் வீரனின் முகத்திலிருந்த மகிழ்ச்சியை கவனித்த ஆரன், "இந்திர ரகசியம் முழுமையாக உன் வசமாகிவிட்டதா வீரா?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

"சரியாக கணித்துவிட்டீர்கள் அண்ணா! ஆனால் இன்றல்ல, இன்னும் இரு தினங்களில் இந்திர ரகசியம் முழுதாக என்வசமாகி விடும்!" என்று புன்னகை புரிந்தான் வீரன்.

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி வீரா!" என்று சொன்ன ஆரன், நேரம் செல்லச்செல்ல எதையோ சொல்ல வாயெடுப்பதும் பின்பு வேண்டாம் என்று தனக்குத்தானே தலையசைப்பதுமாகவே வந்தான். முதலில் அதை கவனிக்காத வீரன், சிறிது நேரத்திலேயே ஆரனின் செய்கையை அறிந்ததும், "ஏதேனும் கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள் அண்ணா. என்னிடம் என்ன தயக்கம்?" என்றான்.

"கேட்கவேண்டும் தான். ஆனால் நீ எப்படி எடுத்துக்கொள்வாயோ என்று எண்ணுகையில் என்னால் கேட்க முடியவில்லையடா." என்று பின்னங்கழுத்தை தேய்த்தபடியே சொன்னான் ஆரன்.

"அட! எனக்குத் தெரிந்தது எதுவாயினும் சொல்கிறேன். கேளுங்கள்!" என்று வீரன் ஆரனை ஊக்கினான்.

"அதில்லை... இந்திர ரகசியம் என்றால் என்ன என்று எனக்கு சொல்லித்தருகிறாயா?" என்று கண்கள் மின்னக் கேட்ட ஆரன், வீரனின் முகம் அதிர்ச்சியடைந்ததைப் பார்த்து, "மன்னித்துவிடடா, ஏதோ ஆர்வத்தில் கேட்டுவிட்டேன்!" என்று சொல்லி வாயை

மூடிக்கொண்டான்.

சற்று நேரம் மௌனமாக வந்த வீரன், "இந்திரரகசியம் என்பது ஒரு கருவி அண்ணா. ஐந்து திறன்களின் கூட்டு தான் அது! ஆனால் இந்திர ரகசியத்தை இயக்கும் முறையை யாருக்கும் சொல்லித்தருவதில்லை என்று குருதேவர் ஐம்பூதனாருக்கு வாக்குத் தந்திருக்கிறேன்!" என்றான்.

"அப்படியானால் என்னிடம் எதையும் நீ சொல்லவேண்டாம். அதீத ஆர்வத்தில் கேட்ட என்னை மன்னித்துவிடு!" என்று சோகத்துடன் சொன்னான் ஆரன்.

"மன்னிப்பெல்லாம் எதற்கு அண்ணா? இந்திர ரகசியம் பற்றித் தெரிந்துகொள்ள எல்லோருக்குமே ஆர்வமிருக்கும் என்பதை நான் அறிவேன். இயக்கும் முறையை வேண்டுமானால் என்னால் உங்களிடம் சொல்ல முடியாமல் போகலாம். ஆனால் அந்த ஐந்து திறன்களை உங்களிடம் சொல்லுவதால் பாதகமில்லை என்றே நான் நினைக்கிறேன்." என்று சொன்ன வீரன், பாதுகாப்பு வளையத்தைப் போட்டுவிட்டு ஆரனுக்கு இந்திர ரகசியத்தின் ஐந்து திறன்களைப் பற்றி விவரிக்கத் துவங்கினான்.

"முதல் திறன்**:** ரசவாதம்**.** ரசவாதத்தை முறையாகப் பிரயோகித்தால் மணலைக் கூடத் தங்கமாக மாற்ற முடியும்.

இரண்டாம் திறன்**:** சஞ்சீவனம்**.** இரண்டாவது திறனான சஞ்சீவனத்தால் வாழும் காலத்தை நீட்டிப்பதோடில்லாமல், இறந்தவர்களைக் கூட மறுமுறை உயிர்ப்பிக்கலாம். ஆனால் இந்தத் திறன் இயற்கை விதிகளுக்குப் புறம்பானது என்று குருதேவர் கூறியிருக்கிறார்.

மூன்றாம் திறன்**:** பிராப்தி**.** எல்லா இடங்களிலும் தங்கு தடையின்றி சஞ்சரிக்கும் வல்லமையைத் தருவதே இந்தத் திறன். நினைத்த இடத்தில் தோன்றுவது மட்டுமின்றி நினைத்த காலத்தில் தோன்றுவதற்கும் இந்தச் சக்தி வழி வகை செய்யும். சரியான பிரயோகத்தால் கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என முக்காலத்தையும் அறியலாம்.

நான்காம் திறன்**:** ஈசத்துவம்**.** ஈசத்துவம் என்பது தான் இருப்பதிலேயே மிகுந்த சக்திவாய்ந்த திறன்! அந்த ஈசனுக்கு ஒப்பான ஆற்றலை உபயோகிப்பவருக்கு அளிக்கக் கூடியது இத்திறன். ஆக்கும் சக்தியோடு சூரியன் சந்திரன் முதலியவைகளையும் பஞ்சபூதங்களையும் அடக்கியாளும் சக்தியைத் தரவல்லது இந்தத் திறன்.

ஐந்தாம் திறன்: வசித்துவம். அரும்பெரும் சக்திகளை உள்ளடக்கிய இந்திரரகசியம் கிடைக்கப் பெற்றிருந்தாலும், மனிதரோ விலங்கினமோ அன்றி வேறு ஏதோ சூட்சும சக்திகளோ அதை அபகரிக்க முயற்சி செய்வதை தடுத்து நிறுத்துவது என்பது கடினமல்லவா? அதற்குத்தான் இந்த ஐந்தாம் திறன். முறையாகச் செய்தால் ஏழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலிய அனைத்தையும் இத்திறனால் தம்வசப்படுத்த முடியும்." என்று இதுவரை அரண்யாவிடம் கூட பகிர்ந்துகொள்ளாத இந்திர ரகசியத்தைப் பற்றிய உண்மைகளை ஆரனிடம் தெரிவித்தான் வீரன்.

"அடேயப்பா! இவ்வளவு சக்திகளா? அதனால்தான் இதை அடையவேண்டி அத்தனை கொடுமைகளை செய்கிறாளா அவள்!" என்று வாய்விட்டே வியந்தான் ஆரன்.

"இந்திர ரகசியம் அளப்பரிய சக்தி என்பதைத் தாண்டி மிகப்பெரிய பொறுப்பு என்றே கொள்ளவேண்டும் அண்ணா! சரி வாருங்கள், பயணத்தைத் தொடரலாம்!" என்று வீரன் அழைத்தான்.

அதன் பிறகு வந்த இரு நாட்களிலும் ஆரன் வீரனிடம் பேசவேயில்லை. ஏதோ நினைவிலேயே மூழ்கி இருந்தான். வீரனாக அவனிடம் பேச்சுக் கொடுத்தாலும் பெரும்பாலும் அவனிடமிருந்து பதில் வராமலேயே போனது!

இரண்டாம் நாள் காலையில் இந்திர ரகசியத்திற்கு வீரன் உருவேற்றியதும், என்றைக்கும் இல்லாமல் அன்றைக்கு பாதுகாப்பு வளையத்தையும் மீறி இந்திரரகசியத்தின் ஒளி வெளிச் சென்று காண்போரை வசியம் செய்தது. வீரனின் மனதிலிருந்து எழுந்த அமைதி, அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் மிதமான வெம்மையோடு அவனைச் சூழ்ந்தது. பத்து யாளிகளின் பலத்தை அடைந்ததைப்போல அந்நொடியில் அவன் உணர்ந்தான். இந்திர ரகசியம் முழுமை பெற்று வீரனின் வசமானது அன்று தான்!

இதுநாள் வரையில் பிறரின் கண்களுக்குப் புலப்படாமல் வீரனின் கழுத்தில் பாந்தமாக அமர்ந்திருந்த இந்திர ரகசியம் முதல்முறையாக ஆரனின் கண்களுக்குப் புலனாகியதும் அன்று தான்!

"வீரா! இதுதான் இந்திர ரகசியமா?" என்று ஆரன் கேட்ட பின்புதான், 'இந்திரரகசியம் முழுமை பெற்ற பின்பு பிறர் கண்களுக்கும் தெரியும்!' என்று ஐம்பூதனார் கூறிய வார்த்தைகள் வீரனுக்கு நினைவுக்கு வந்தது. இதன் பின்னர் ஏற்படப்போகும் சங்கடங்களையும் தடங்கல்களையும் சமாளிக்கும் திடத்தை அளிக்கவேண்டுமென்று

ஈசனிடம் மனதார வேண்டிக்கொண்டான் வீரன்.

"ஆமாம் அண்ணா!" என்று சொல்லிப் புன்னகைத்தான் வீரன். கடனுக்காக பதிலுக்குப் புன்னகைத்த ஆரனின் பார்வையில் தெரிந்த மாற்றத்தை உணர்ந்துகொள்ளும் நிலையில் வீரன் அன்று இல்லாமல் போனது விதியின் விளையாட்டுகளில் ஒன்று!

இரவிற்கு சாப்பிட வள்ளிக்கிழங்கை சுடுகிறேன் என்று ஆரன் சொன்னதும், சரியென்று வீரனும் ஒப்பினான். உண்ணும் போது கூட எதுவும் பேசாமலிருந்த ஆரனிடம், "என்ன சிந்தனை அண்ணா?" என்று கேட்டான் வீரன்.

"இல்லை... சஞ்சீவனத்தால் இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியும் என்றாயே... அதைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்!" என்றான் ஆரன்.

"முடியும் தான். ஆனால் சஞ்சீவனத்தை பயன்படுத்த மாட்டேன் என்று ஈசனின் மீது ஆணையிட்டிருக்கிறேன்!" என்று வீரன் சொல்லி முடிப்பதற்குள், "முட்டாளா நீ?" என்று கொதித்தான் ஆரன்.

"என்னவாயிற்று அண்ணா? ஏன் இத்தனை சீற்றம்?" என்று வீரன் கேட்டதும் தான் அவசரப்பட்டு விட்டோம் என்று ஆரனுக்கு புரிந்தது.

"சஞ்சீவனத்தால், இதுவரை காமரி கொன்றழித்த எண்ணற்ற மக்களை திரும்பவும் கொண்டுவரலாமில்லையா? அத்தகைய சக்தியை உபயோகிக்க மாட்டேன் என்று எதற்காக ஆணையிட்டாய்? குடும்பத்தை இழந்து மக்கள் படும் வேதனையை நீ அறிவாயா?" என்று சினம் தனியாமலேயே கேட்டான் ஆரன்.

"மக்களா அல்லது நீயா?" என்று வீரன் கேட்டதுமே அதிர்ந்து விழித்தான் ஆரன்.

"மக்கள் தான்..." என்று ஆரன் இழுக்கையிலேயே, யாரோ ஏளனமாகச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

"பொறியில் எலி மாட்டிய பிறகு, இன்னும் எதற்காக நடிக்கிறாய் ஆரா?" என்று கேட்டுக்கொண்டே நாவகன் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிவந்தான். அவனுடன் ஐம்பதிற்கும் குறையாத எண்ணிக்கையில் படை வீரர்களும் வந்தனர். அவர்களைக்கண்டு கலங்காமல் சிறு புன்னகையோடே வீரன் இருந்தான்.

"அப்பாடா! எத்தனை நாளாயிற்று ஆசை தீரச் சண்டையிட்டு! என் கைகள் துருபிடித்துவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருந்தேன்! சரியான நேரத்தில் வந்துதவினாய் நாவகா!" என்று புன்னகை மாறாமல்

சொன்னவன், இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி சோம்பல் முறித்தபின் விரல்களுக்கும் சொடக்கெடுத்தான்.

"ஒருவன் நீ... உன்னால் எங்கள் அனைவரையும் வெல்ல முடியும் என்றா நினைக்கிறாய்?" என்று மீண்டும் ஏளனம் செய்தான் நாவகன்.

"நான் ஒருவனல்ல... பெறுதற்கரிய ஐந்து திறன்களையும் தன்னகத்தே கொண்ட இந்திரன்!" என்று நாவகனிடம் சொன்ன வீரன், நொடி நேரமும் தாமதிக்காது இடை வாளை உறுவிக்கொண்டு சமருக்குத் தயாரானான்.

நாவகனின் கண்ணசைவை அவன் வீரர்கள் புரிந்துகொள்ளும் முன்பே சூறாவளியாக அவன் படையினுள் புகுந்து வீரர்களை துவம்சம் செய்தான் வீரன். ஒரே நேரத்தில் அவனைச் சூழ்ந்த பத்துப் பேரையும் அனாயசமாக தாக்கிக்கொண்டே நாவகனை நோக்கி முன்னேறினான் வீரன். வீரன் சென்ற இடமெல்லாம் மற்ற படைவீரர்களின் கையும் காலும் தலையும் துண்டானது. அதைக்கண்டு நடுநடுங்கிப்போன பல வீரர்கள் புறமுதுகிட்டு ஓடத்துவங்கினர்.

"கோழைகளே! சண்டையிடாமல் எங்கே ஓடுகின்றீர்கள்?" என்று அவர்களை நோக்கி நாவகன் கத்தத் துவங்க, "அவர்கள் செல்லும் இடத்திற்கு உன்னையும் அனுப்பி வைக்கிறேன்!" என்று கூறிக்கொண்டே நாவகனை தாக்கத் துவங்கினான் வீரன்.

நாவகனும் ஒன்றும் சாதாரண ஆளல்லவே! வீரனுக்கு முயன்ற வரையில் ஈடு கொடுத்தான். குதிரையில் இருந்தபடியே நாவகன் வீரனைத் திருப்பித் தாக்க, தன் குதிரையை சீட்டி அடித்து அழைத்தான் வீரன். புயல் காற்றென பாய்ந்து வந்த குதிரையின் மீது தாவி ஏறியவன், நாவகனுடன் கடுமையான வாள் சண்டையிட்டான். கமலநாதரின் மாணவர்கள் இருவரும் மோதிக்கொண்டது விளையாட்டாக இருப்பின் காண்போரை கவர்ந்திழுத்திருக்கக் கூடும். ஆனால் பகை கொண்டு மோதும் இருவரின் வாளும் மற்றவரின் குருதியை ருசி பார்ப்பதிலேயே குறியாக இருந்தது.

வீரனைக் காயப்படுத்தவென நாவகன் செய்த முயற்சிகள் ஒன்று கூட பலனளிக்கவில்லை. அப்போது திடீரென, "டேய் ஆரா! உன்னால் எங்களை எதிர்க்க முடியாதென்று உன் தம்பியை விட்டு எதிர்க்கப் பார்க்கிறாயா? வேல்விழியும் உன் குழந்தையும் உயிருடன் வேண்டுமென்றால் நான் உயிருடன் இருக்கவேண்டும் என்பது மறந்துபோயிற்றா?" என்று ஆவேசமாகக் கத்தினான் நாவகன்.

அவன் பேச்சின் பொருள் புரிந்து வீரன் ஸ்தம்பித்த ஒரு

நொடியில் அவன் இடது தோளைக் காயப்படுத்தினான் நாவகன். வீரனின் கழுத்தில் நாவகன் கத்தியைத் திருகுவதற்குள் சுதாரித்த வீரன், நாவகனை குதிரையிலிருந்து லாவகமாகத் தள்ளினான்.

"என் குடும்பத்தைத் தீண்டும் துணிச்சல் வந்த உன்னை இனியும் உயிருடன் விடப்போவதில்லை!" என்று கண்களில் கோபக்கனல் பொங்கக் கூறிய வீரன், தன் கையில் வைத்திருந்த வாளை கீழே கிடந்த நாவகனை நோக்கி ஓங்கினான். ஒரே வீச்சில் துண்டாகியிருக்கவேண்டிய நாவகனின் தலைக்கு பதிலாக சுயநினைவை இழந்த வீரனின் உடல் அவன் குதிரையிலிருந்து விழுந்து தரையில் கிடந்தது. தூரத்தில் குழாய் போன்ற கருவியை வைத்துக்கொண்டு பேயறைந்ததைப் போன்ற முகத்துடன் ஆரன் நின்றுகொண்டிருந்தான்; வீரனின் முதுகில் நொடியில் மயக்கமடையச் செய்யும் மருந்தில் தோய்க்கப்பட்ட ஒரு ஊசி தைத்திருந்தது. துரோகத்தின் வலியைத் தாங்கியபடியே வீரனும் மயங்கியிருந்தான்!

மயக்கமடைந்த வீரனின் நெஞ்சில் பல முறை எட்டி மிதித்துத் தன் கோபத்தை தணித்துக்கொள்ள முயன்றான் நாவகன். அவனிடமிருந்து வீரனின் உடலை காப்பாற்றிய ஆரன், "இதை உன்னால் அவன் சுயநினைவோடு இருக்கும் போது செய்ய முடியுமா?" என்று ஆற்றாமையோடு கேட்டான்.

நேருக்குநேர் ஆரன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல வக்கற்று பக்கத்திலிருந்த கல்லை உதைத்துவிட்டு, "கைதிகள் இருவரையும் பத்திரமாக அழைத்து வாருங்கள்!" என்று எஞ்சிய வீரர்களுக்கு கட்டளை பிறப்பித்துவிட்டுச் சென்றான் நாவகன்.

உச்சி வெயில் மண்டையைப் பிளப்பதைப் பற்றிக் கவலை கொள்ளாது, 'நம் மதிப்பிற்குரிய சேனாதிபதியாரின் புதல்வர்களுக்கு நேர்ந்த கதியை பார்த்தீர்களா?' என்று ஊமையாக அழுத மக்களின் கண்ணீர் நிலம் நனைக்க, கூண்டுக்குள் அடைக்கப்பட்ட இரு வேங்கைகளைப் போலிருந்த ஆரனையும் வீரனையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றான் நாவகன். அவன் முகத்தில் தெரிந்த பெருமிதத்தில் காரி உமிழவேண்டும் போலத் துடித்த மனதினை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு இந்த ஆறு மாதங்களில் தென்மதுரை மக்கள் நன்றாகவே பழகியிருந்தனர். உண்மையை சொல்லப்போனால் அடிமை வாழ்க்கைக்கு காமரி அவர்களை நன்றாகப் பழக்கப்படுத்தி இருந்தாள்.

அரண்மனை மாடத்திலிருந்து வீரனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த காமரியின் கண்களில், மயங்கிய நிலையில்

உடலெல்லாம் புழுதி ஒட்டியிருக்க, கைகளும் கால்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, ஒரு நாயைப்போல கழுத்தில் வளையமிட்டு கூண்டுடன் சேர்த்துக் கட்டடப்பட்டிருந்த வீரன் தென்பட்டதும் அவளுடைய இதயம் வலித்தது.

குறளியை அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தவளுக்கு நாவகன் வீரனை துன்புறுத்தியது தெரிந்ததும், அவனை உருத்தெரியாமல் அழிக்கவேண்டும் என்று ஆத்திரம் கொண்டாள். ஆயினும், இன்னும் சில தினங்களுக்கு அதாவது அரண்யாவை வெளியே கொண்டுவரும் வரையில் நாவகனின் தேவை இருந்த ஒரே காரணத்திற்காக அவனை அப்போது எதுவும் செய்யாமல் விட்டாள் காமரி.

அரண்மனையை அடைந்ததும் காவலர்களை வெளியேற்றிய நாவகன், "வெற்றி! வெற்றி!" என்று கூப்பாடு போட்டபடியே சபா மண்டபத்தினுள் வந்தான். அங்கு காமரி இருக்கக்கூடும் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவன் குரல் கேட்டுத்தான் வந்ததைப்போல பாசாங்கு செய்தபடியே அன்னமயிலாக வந்தாள் காமரி.

"நாவகா! என்ன இது?" என்று வீரனைக் காட்டிக் கேட்டாள்.

"நாம் போட்ட திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது கண்மணி!" என்று அவளைக் கட்டிக்கொண்டு சந்தோஷத்தில் துள்ளினான் நாவகன்.

"பொறு!" என்று அவனை விலக்கி நிறுத்தியவள், "இந்திர ரகசியம் எங்கே?" எனக் கேட்டாள்.

"அது... அது... மறந்தே போனேன்!" என்று சொன்ன நாவகனை பார்வையாலேயே சுட்டெரித்தாள் காமரி.

"ஆரா! இந்திர ரகசியத்தை இயக்கும் முறையை அறிந்து வந்தாயா?" என்று ஆரனைப் பார்த்துக் கேட்டாள்.

"இல்லை. இந்திர ரகசியத்தை இயக்கும் முறையை எவரிடமும் கூறக்கூடாதென்று ஐம்பூதனார் சத்தியம் வாங்கி இருக்கிறாராம். அதனால் வீரன் அதை மட்டும் சொல்ல மறுத்துவிட்டான்." என்று தலை குனிந்தபடியே சொன்னான் ஆரன். ஏற்கனவே இந்த விஷயத்தை கிரகித்திருந்தவள், ஆரன் கூறியதைக் கேட்டதும் கோபம் வந்தவளைப் போல நடித்தாள்.

"நம் ஒப்பந்தத்தை மீறினால் என்னாகும் என்று முன்னமே உனக்கு சொல்லியிருக்கிறேன் ஆரா..." என்று காமரி இழுக்க, "ஐயோ! சத்தியமாக நான் சொல்வது மெய்! மெய் மட்டுமே! இந்த உலகத்தில்

இப்போது இந்திரரகசியத்தை இயக்கும் வல்லமை பெற்றவன் வீரனைத் தவிர வேறு எவருமில்லை! வேல்விழியை ஒன்றும் செய்துவிடாதே!" என்று கதறினான் ஆரன். இந்திர ரகசியம் என்றால் என்ன என்று அவளுக்கு விளக்கியவன், அப்படியே ஐம்பூதனார் இறந்த செய்தியையும் கூறினான். ஆனால் கவனமாக அரண்யா வீரனின் கருவை சுமந்திருக்கிறாள் என்பதை மட்டும் மறைத்துவிட்டான்.

"சரி! இந்திர ரகசியம் எங்கே?" என்றாள் காமரி.

"அவன் கழுத்தில் அணிந்திருக்கிறானே, அது தான் இந்திரரகசியம்." என்று வீரனின் கழுத்தணியை சுட்டிக் காட்டினான் ஆரன்.

ஒரு விதமான சிரிப்போடு, வீரனின் கழுத்தைத் தொட்டவள் சிலிர்த்தாள். அப்படியே அவன் கழுத்தில் இருந்த சங்கிலியை ஒற்றை விரலால் வருடியவள் இத்திரரகசியத்தைத் தொட்டதும் மின்சாரம் பாய்ந்தவளைப் போல அலறினாள். ஏனெனில் இந்திரரகசியம் அவள் கையை சுட்டுப் பொசுக்கியது.

கொதிக்கும் எண்ணையில் கையை விட்டவளைப் போல அவள் கையில் பல கொப்புளங்கள் வந்திருந்தன. அதைக்கண்ட நாவகன் பதறித் துடித்தபடியே ஓடி வந்தான். அவள் கையை ஏந்திக்கொண்டு, "இது என்ன இப்படியாகிவிட்டதே!" என்று கதறினான் நாவகன்.

"ஷ்! இதை நான் எதிர்பார்த்தேன். என் எண்ணம் புரிந்த பிறகும் என்னைச் சுடவில்லை எனின் இது இந்திரரகசியமாக இருக்கமுடியாதே!" என்று சிரித்தவள், "நாவகா! நீ இந்திர ரகசியத்தை அவன் கழுத்திலிருந்து கழற்று!" என்று உத்தரவிட்டாள். அதன் பிறகு மந்திரத்தின் உதவிகொண்டு தன்னை குணப்படுத்திக் கொண்டாள்.

"நானா?" என்று பயந்தபடியே சென்றவன், இந்திரரகசியத்தை ஒரு பட்டுத்துண்டினால் மூடியபடியே தொட்டான். ஆனாலும் அது அவன் கையைப் பதம் பார்க்க, ஆவென்று அலறியபடியே அதை தூக்கிப் போட்டான். அந்த நேரம் அங்கு வந்த கனலியின் கைகளில் தானாகவே தஞ்சம் புகுந்தது இந்திர ரகசியம். அதைப்பார்த்த காமரியும் நாவகனும் விழி விரித்தனர்.

"இது என்ன விளையாட்டு நாவகா?" என்று கேட்டபடியே அவனிடம் இந்திரராசியத்தை கனலி தர, "வேண்டாம்! வேண்டாம்!" என்று பயத்தில் அலறினான் நாவகன்.

"அது தான் இந்திர ரகசியம் கனலி. ஏனோ அது உன்னை

மட்டும் சுடவில்லை. அதனால் நீயே என்னறையில் அதை பத்திரமாக வைத்துவிடு. மந்திரக்கட்டுக்களை நீ இடு; குறளிகளையும் யட்சிணிகளையும் நான் அனுப்புகின்றேன்" என்று சொல்லிக் கனலியை அங்கிருந்து அப்புறப்படுத்தினாள் காமரி. வேல்விழியின் விஷயத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு இன்னும் கனலிக்கு மறையவில்லை என்பதை அறிந்திருந்த காமரிக்கு ஆரனை அவள் வெகுநேரம் பார்ப்பது நல்லதல்ல என்றும் தெரிந்திருந்தது.

கனலி இந்திர ரகசியத்தை எடுத்துக்கொண்டு மறைந்ததும், "இப்படிச் செய்துவிட்டாயே நாவகா! இப்போது வீரனை வேறு வழியில் தான் நாம் சரிக்கட்ட முடியும். எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், இந்திரரகசியத்தை நம் வசப்படுத்துவதற்கு வீரனை என் வசப்படுத்துவது தான் ஒரே வழி!" என்று நீலிக்கண்ணீர் வடித்தாள் காமரி.

உடனே ஆரன் கலகலவென்று நகைத்தான். "அது ஒன்று தான் வழியென்றால் இந்திரரகசியம் உன் கைகளில் ஒருபோதும் கிடைக்காது! வீரன் அரண்யாவைத் தவிர வேறொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்! அவள் யாராக இருந்தாலும்!"

"ஆரா! ஆரா! வீரனை மயக்கும் வித்தை தெரிந்தவள் நான். அவனும் கேவலம் ஒரு ஆண் தானே! நாளை பொழுது விடிவதற்குள் அவன் என் பிடியிலிருப்பான்!" என்று ஏளனமாகச் சிரித்தபடி சொன்னவள் காவலர்களை அழைத்து ஆரனை சிறையில் அடைக்கச் சொன்னாள். நாவகனை ஓய்வெடுத்துக்கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்தி அனுப்பியவள் வீரனை அந்தப்புரத்திற்கு அழைத்துச்செல்ல கட்டளையிட்டாள்.

தங்களின் பேரரசனை மணந்துகொள்ளப் போகும் ஒருத்தி வேற்று ஆடவனை அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லச் சொல்வதை வேண்டாவெறுப்பாகத் தான் செய்தனர் காவலர்கள். அவர்களின் சுளித்த முகங்களை ஏளனப் பார்வையோடு எதிர்கொண்டவள் அவள் மனதிற்கு பிடித்த பாடலை பாடியபடியே வீரனுடன் நடந்தாள்.

சப்ரமஞ்சக் கட்டிலில் அவனைக் கிடத்தச் சொல்லி, மாற்றுமருந்தைத் தர, சுயவுணர்வு பெற்றுத் திரும்பினான் வீரன். நாணேற்றிய வில் போல விறைத்து நின்றவன், எதிரில் இருந்த காமரியை உயிருடன் எரித்து விடுவதைப் போலப் பார்த்தான்.

"அப்பப்பா! என்னவொரு பார்வை! என் மேனியெல்லாம் நடுங்குகிறதே! என் மன்னவனே! கடைசியில் என்னிடமே வந்துவிட்டாயா?" என்று காதலுடன் கொஞ்சியபடியே அவனை

நெருங்கினாள் காமரி.

"நில் அங்கே! இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தாயானால் உன் கழுத்தைத் திருகி விடுவேன். ஜாக்கிரதை!" என்று உறுமினான் வீரன். ஆனால் அதற்கெல்லாம் அஞ்சுபவளா காமரி? ஒரு மோகனச் சிரிப்போடு அவன் தோளைத் தழுவ முற்பட்டாள். சிறிதும் அசைந்து கொடுக்காது, அவள் கைகளைத் தட்டிவிட்டான் வீரன்.

"வீரா! முரண்டு பிடிக்காதே! இந்திரரகசியம் இப்போது என் வசம் உள்ளது! தனியாக எந்தச் சக்தியும் இல்லாத நீயும் என்னிடம் அடைக்கலமாகும் காலமிது! நேரத்தை வீணடிக்காதே! உனக்காகவே பூத்திருக்கும் இந்த அழகு மலரைக் கொய்ய உன் கைகள் துடிக்கவில்லையா?" என்று சரசமாடினாள் காமரி.

"ச்சை! உனக்கு அண்ணன் முறையிலிருக்கும் என்னிடம் நீ பேசும் விதம் அருவருப்பாக இருக்கிறது! என் கண் முன்னால் நில்லாமல் தொலைந்து போ!" என்று நெரித்த புருவங்களுடன் எரிந்து விழுந்தான் வீரன்.

"என்ன அண்ணனா? இதென்ன புதுக்கதை?" என்று அசராமல் கேட்டாள் காமரி.

"நான் அரண்யாவின் கணவன். நீ நாவகனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண். அப்படியானால் நீ எனக்கு தங்கை முறை. முறைமை தவறி நீ பேசுவதை என் அரண்யா கேட்டால் இந்நேரம் உன் உச்சியைப் பிளந்திருப்பாள்!" என்றான் வீரன். அரண்யா என்ற பெயரை உச்சரிக்கும் போதே அவன் குரல் குழைந்ததைப் பார்த்த காமரிக்கு ஆத்திரம் வந்தது.

"இதோ பார் வீரா! என் பொறுமையை சோதிக்காதே! நீ எனக்கு மட்டுமே உரியவன். அதை எவ்வளவு சீக்கிரத்தில் நீ உணர்ந்துகொள்கிறாயோ அவ்வளவு நல்லது!" என்று கொஞ்சலை விடுத்து மிரட்ட ஆரம்பித்தாள் காமரி.

"எத்தனை பிறவி எடுத்தாலும் நான் அரண்யாவிற்கு மட்டுமே சொந்தமானவன். இதுவரையில் நீ செய்த பாவங்களுக்காக நீ தண்டனை பெறும் காலமிது! என் கைகளாலேயே உன்னைக் கொன்றுவிடுவேன். ஆனால் நிராயுதபாணியான ஒரு பெண்ணைக் கொன்ற பாவம் எனக்கு வேண்டாமே என்று தான் பார்க்கிறேன்!" என்று சொல்லி முகம் திருப்பினான் வீரன்.

"நிராயுதபாணியா?" என்று சிரித்தவள் வீரனின் தாடையைப் பிடித்து வலுக்கட்டாயமாக அவள் புறம் திருப்பினாள். பின் ஒயிலாக

நின்றுகொண்டு, "என்னைத் தலை முதல் கால் வரையில் நன்றாக அலசிப் பார் வீரா! கூந்தல் முதல் கால் நகங்கள் வரை என்னிடமிருக்கும் பலவகை ஆயுதங்களைப் பார்!" என்று கர்வத்துடன் அவள் சொல்ல, அருவருப்பில் வீரனின் முகம் சிவந்தது.

வேகமாக முகம் திருப்பிய வீரனின் மீது சினம் தலைக்கேற, "அப்படி அந்த அரண்யா சனியன் என்ன அவ்வளவு பேரழகா? அவள் முகத்தைப் பார்த்தால் எனக்கே வாந்தி வருகிறது! உன்னால் எப்படி அவளுடன் குடும்பம் நடத்த முடியும்?" என்று காமரி கேட்ட அடுத்த நொடி பத்தடித்தள்ளி தரையில் கிடந்தாள்.

"பெண்களிடம் கைநீட்டுவது ஆண்மையல்ல என்று சொல்லி வளர்க்கப்பட்டவன் நான். அதன்காரணமாகவே என் அன்னை தந்தையின் மறைவிற்கு காரணமானவள் நீயென்று தெரிந்தபின்பும் உன்னை வதைக்கத் துடித்த மனதிற்கு கடிவாளமிட்டேன். ஆனால் நீ எல்லை மீறுகிறாய்! இன்னொரு வார்த்தை என்னவளைப் பற்றிப் பேசினாய் என்றால் என் வாய் பேசாது என் வாள் தான் பேசும்!" என்று அறை நடுங்கக் கத்தினான் வீரன்.

"என்ன ஆண்மையோ உன்னது! அன்னை தந்தையை அழித்தவளை ஒன்றும் செய்யமாட்டாராம். உயிரெனக் கருதிய ஊரைக் கொளுத்தியவளை விட்டுவிடுவாராம். ஆனால் கேவலம் அழகற்ற ஒரு மந்திக்காக ஒரு பேரழகுப் பெட்டகத்தை அடிப்பாராம்!" என்று எள்ளி நகையாடினாள் காமரி. அவள் பதிலில் வீரனின் நெஞ்சில் இருந்த காயம் மேலும் அதிகரித்தது. இவளுடன் வாதம் செய்வது நன்மையில் முடியாது என்று நினைத்தவன், 'எப்படியாவது இன்றிரவு இங்கிருந்து தப்பித்து விட வேண்டும்!' என்று முடிவு செய்தான்.

"என்ன பலமாக சிந்தனை செய்கிறாய்? எப்படி இங்கிருந்து தப்பலாம் என்றா? முட்டாள் வீரா! இவ்வளவு யோசிப்பவள், இதை யோசித்திருக்க மாட்டேனா? உன்னால் இந்த அறையை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாதபடி கட்டியிருக்கிறேன்! எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உனக்கு என்னை விட்டால் வேறு போக்கிடமில்லை என்பதை உணர்ந்துகொண்டு நாளை பொழுது விடிவதற்குள் என் காதலை ஏற்றுக்கொள்ளத் தயாராகு! இல்லையென்றால் இந்தக் காமரியின் மற்றொரு முகத்தை நீ காண வேண்டி வரும்! நீ கிடைப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்ல நான் தயாராக இருக்கிறேன் என்பதை எவ்வளவு சீக்கிரம் நீ புரிந்துகொள்கிறாயோ உனக்கு அவ்வளவு நல்லது!" என்று கறார் குரலில் காமரி சொல்லிக்கொண்டிருக்க, அவள் குரல்வளையை நெறிக்க

முற்பட்ட வீரனால் அவளை நெருங்க முடியாமல் போனது.

அவன் உடலை மலைப்பாம்பு ஒன்று சுற்றி வளைத்ததை போல அவனால் இம்மி அளவும் நகர முடியவில்லை. தன்னை விடுவித்துக்கொள்ள வீரன் செய்த முயற்சிகள் எதற்கும் பலனில்லாமலே போனது.

"வீரா! வீரா! என் சக்தி தெரியாது மோதுகிறாய்! சாளரத்தின் வழியாகப் பார்! அங்கே தெரியும் அஸ்தமனம் கதிரவனுக்கு மட்டுமில்லை. அரண்யாவின் மீது நீ கொண்டுள்ள காதலுக்கும் சேர்த்துத்தான்!" என்று ஆங்காரத்துடன் சிரித்தாள் காமரி.

"இன்று மேற்கில் மறையும் கதிரவன் நாளை கிழக்கில் முளைப்பதைப் போல, விதி வசத்தால் இன்று உன்னிடம் அகப்பட்ட எங்கள் நாவலந்தீவு, நாளை மீண்டெழும்! இது உறுதி!" என்று உறுதிபட தெரிவித்தான் வீரன்.

"இந்த நெஞ்சுரம்... இந்த வீரம்... இதுதான்... இதுதான் உன் மீது என்னை பைத்தியமாக அடிக்க வைக்கிறதடா! என் பொறுமையை சோதிக்காமல் சீக்கிரம் என்னிடத்தில் வந்துவிடு!" என்று சொல்லி வீரனின் மூக்கோடு மூக்கு வைத்து காமரி உரச, முகத்தை இடம்வலமாக வேகமாக அசைத்தான் வீரன். அதைக் கண்டவளுக்கு சிரிப்புத்தான் வந்தது. நன்கு வளர்ந்திருந்த ஒரு ஆண்மகன் இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்வது அவளுக்கு வியப்பளித்து வீரனின் மீது அவள் கொண்டிருந்த மோகத்தை அதிகரித்தது.

வீரனின் இதழை சுவைக்கும் பேராவல் காட்டுத்தீயாக மாறி அவளைச் சுட்டெரிக்க, வீரனின் முழு உடலையும் கட்டியவள் மெல்ல அவன் முகம் நோக்கி நிமிர்ந்தாள். இன்னும் ஒரு அங்குலத்தில் இலக்கை அடைந்து விடலாம் என்று இறுமாந்திருந்தவளின் காதுகளில் நாராசமாக அந்த முரசுச் சத்தம் ஒலித்தது.

"இளவரசி அரண்யா அவர் அண்ணன் நாவகனை சமருக்கு அழைக்கிறார்! வெற்றி பெறுபவருக்கே நாவலந்தீவின் அரியாசனம்!" என்று கட்டியங்காரன் முரசறைந்து கூவ, அதனைத் தொடர்ந்த மக்களின் ஜெயகோஷம் விண்ணையும் மண்ணையும் புரட்டிப் போடும் வல்லமையுடன் இருந்தது.

கண்களை மட்டுமே அசைக்க முடிந்தாலும், வீரனின் கண்களில் பரிகாசத்தைக் கண்ட காமரி, "பெருவீரனான உன்னையே சுண்டுவிரலைக் கூட அசைக்கமுடியாத நிலையில் நிறுத்தியிருக்கிறேன்! அந்தச் சண்டாளி எம்மாத்திரம்!" என்று ஏளனமாகச் சொன்னவள் அரண்மனை வாயிலைப் பார்க்க, மேடிட்ட வயிற்றுடன் முகமெல்லாம்

ரௌத்திரம் கொண்டு இருகைகளிலும் குருதி தோய்ந்த வாளேந்தி அவள் வணங்கும் உக்கிரகாளியின் மறுஉருவமாகி நிற்கும் அரண்யாவைப் பார்த்துக் காமரியின் இதயம் ஒரு முறை நின்று பின் துடித்தது.

எது அவளுக்கு அதிக அதிர்ச்சி என்று அவளாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. வீரனின் பிள்ளையை அரண்யா சுமந்து நிற்பதா இல்லை வீரத்தை சுமந்து அவள் நிற்பதா? எது எப்படியோ அரண்யாவின் வயிற்றிலிருக்கும் சிசுவோடு சேர்த்து அவளையும் புதைக்க காமரி முடிவு செய்தாள்.

அதிருக்கட்டும், முதலில் அரண்யா அங்கு வந்ததெப்படி?

## அத்தியாயம் 23

அரண்யாவைப் பார்த்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சுலபமாக மீண்டுவிட்டாள் காமரி. அவள் மனதினில் இறுதிக்கட்ட திட்டங்களை வகுக்க ஆரம்பித்தாள். நிமிடத்தில் காமரியின் முகத்தில் ஏற்பட்ட அமைதியைக் கண்ட வீரன் குழம்பினான்.

அவனது குழப்பத்தை ரசித்தபடியே அவனருகில் வந்தவள், "நாளை விடியல் நமக்கானது வீரா!" என்று அவன் காதுகளில் மையலுடன் கிசுகிசுத்துவிட்டுச் சென்றாள்.

வீரனை வைத்திருந்த அறையிலிருந்து வெளியே வந்தவளின் கண்களின் கூர்மை அதிகரித்திருந்தது. குறளியை அழைத்தவள் உடனடியாக கலரனிடம் சொல்லி சிறப்பு வேள்வி ஒன்றிற்கு ஏற்பாடு செய்யச் சொன்னாள். காமரியின் நோக்கம் புரிந்ததும் குறளியின் முகம் அரண்டுபோனது. "தலைவி..." என்று பேச வாயெடுத்த குறளியை கண்களாலேயே நிறுத்தினாள்.

"சொன்னதை மட்டும் செய்!" என்று காமரி அடிக்குரலில் சீற, எச்சில் விழுங்கியபடியே அங்கிருந்து மறைந்து போனது குறளி.

சூரியன் முழுதாக மறைந்த பின்னர் போர் புரியக்கூடாதென்பது யுத்த விதி. ஆனால் விதிகளை எல்லாம் மதிக்கும் மனநிலையில் அங்கே எவருமில்லை. எப்படியேனும் நாவகன் - காமரியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுவிட மாட்டோமா என்று மக்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்க, பெற்றெடுத்த பெரியவர்களையும் கண்ணில் வைத்துக் காக்கவேண்டிய மக்களையும் கேவலம் பதவி வெறிக்காக பரலோகம் அனுப்பிவைத்த நாவகனின் உயிர் குடிக்க அரண்யா தயாராகி அரண்மனைக்கு முன்புறமிருந்த திடலில் உறுதியுடன் நின்றாள். அவளுக்குப் பக்க பலமாக செயல்பட்ட

பலரும் அந்த நேரத்தில் பல வேலைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆரன் வீரனை அழைத்துக்கொண்டு சென்றதிலிருந்து நவிரனின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. ஆரனின் வேதனை உண்மையென்றாலும் அவன் கண்களில் மெய்யில்லையென்று அவன் மனது அவனுக்கு சொல்லிக்கொண்டேயிருந்தது. அதனால் அவர்களைப் பின்தொடர்வது என்று முடிவு செய்தான். வீரன் சென்ற வழியை ஒருவாறு கணித்து முதலில் சென்றவனுக்கு, தங்களை யாரும் பின்தொடரக்கூடாதென்று ஆரன் பல தடங்கல்களை ஏற்படுத்தியிருந்தது விரைவில் புரிந்தது.

புதிர்ப்பாதையைப் போன்ற வழியையே ஆரன் தேர்ந்தெடுத்திருந்தான். நேராக செல்லும் பாதை சட்டென மூன்றாகவும் நான்காகவும் பிரிந்தது. அதில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து பயணித்தால் சற்று தூரத்திலேயே மறுபடியும் பாதை பிரிந்தது. அதனால் விரைவிலேயே நவிரன் வீரனை பின்தொடரும் பணியில் தோல்வியுற்றான்.

களைத்துப்போய் திரும்பியவன், அவர்களின் மறைவிடத்தை அடைந்ததும், அங்கே பிணம் போன்ற முகத்துடனிருந்த துகிரனைக் கண்டு அவன் நெஞ்சக்கூடு சில்லிட்டது. என்னவாயிற்று என்று வினவுவதற்குக் கூட திராணியற்று உள்ளே நுழைந்த நவிரனிடம் கண்ணீருடன் மேருவில் நடந்ததைத் தெரிவித்தாள் வைனி. கிட்டத்தட்ட ஓராண்டுகளாக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையாக இருந்த இரும்பனின் மரணத்தை நவிரனால் செரிக்கவே முடியவில்லை.

"காமரி! உன்னை அழித்தே தீருவேனடி!" என்று தொண்டை கிழியுமட்டும் கத்தினான் நவிரன். இதுவரையில் நவிரனின் கோபத்தை நேரில் பார்த்திராத அனைவருக்குமே அவனது சினம் அச்சமூட்டியது.

"அண்ணா! உள்ளே அரண்யா இன்னும் உறக்கத்தில்தான் இருக்கிறாள். தயவு செய்து உங்களை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். துக்க செய்திகள் இத்துடன் முடியவில்லை!" என்று மெல்ல வைனி அறிவுறுத்தவும்தான் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டான் நவிரன்.

வைனியின் கண்ணசைவில், துகிரன் பேச ஆரம்பித்தான். மேருவிற்குப் போகும் வழியில் ஆரனை அவர்கள் பார்த்தது உண்மைதானென்றும், ஐம்பூதனாரின் மறைவிடத்தை அவனுக்கு தெரிவித்ததாகவும் துகிரன் ஒப்புக்கொண்டான். ஆனால் மேருவிலிருந்து திரும்பும் வழியில் குவேணியை சந்தித்ததாகவும், அவள் மூலமாக வீரனின் தாயார் இறந்த செய்தியும், ஆரனையும் நிறைமாத கர்ப்பவதியான ஆரனின் மனைவி வேல்விழியையும் காமரியின் ஆட்கள்

சிறை வைத்திருப்பதையும் தெரிந்துகொண்டதாக துகிரன் கூறிய பொழுது நவிரனின் முகம் வெளுத்துப்போனது.

நாம் விரும்புபவர்களுக்காக நமக்கு வேண்டியவர்களுக்கே துரோகமிழைக்கும்படி நம்மை நடந்துகொள்ள வைக்கும் வித்தை தெரிந்தவள் காமரி என்பதை அனுபவப்பூர்வமாக அறிந்தவனாயிற்றே! அதனால் நவிரன், "இனியும் மறைந்து வாழ்வதென்பது அபத்தத்திலும் பேரபத்தம். குணக்கரை நாடுகளில் இன்னும் காமரியின் கைகள் நீளவில்லை என்றுதான் கேள்வி. அதனால், வைனி! நீ அரண்யாவுடன் உங்கள் நாட்டிற்குச் சென்றுவிடு! துகிரன் உங்களுக்குப் பாதுகாப்பாக வரட்டும். நானும் சமீரணனும் உடனடியாக தென்மதுரையை நோக்கிப் பயணப்படுகிறோம். எதிரிகளை வீழ்த்துகிறோம்!" என்று சூளுரைத்தான்.

வைனி மறுப்பதற்கு வாய் திறக்கும் நொடியில், "எனக்கு உரிமையானதை காப்பதற்காகப் போரிடுவதை விடுத்து கோழைபோல மறைந்து வாழுவது எனக்கு இழுக்கு!" என்று கூறியபடியே அரண்யா வந்து சேர்ந்தாள். வைனி பயந்ததைப் போலவே, நவிரனின் குரலில் அரண்யா விழித்துவிட்டிருந்தாள்; நடந்த முழுமையையும் அறிந்துகொண்டவளின் இதயம் இருந்த இடம் தெரியாமல் சிதைந்து போனது.

"அரண்யா! முட்டாள்த்தனமாகப் பேசாதே. நீயும் உன் வயிற்றில் வளரும் நம் எதிர்காலமுமே இப்போது எல்லாவற்றையும் விட முக்கியம். தயவு செய்து நான் சொல்வதைப்போல நடந்துகொள்!" என்று அரண்யாவிற்கு அறிவுறுத்த முயன்றான் நவிரன்.

"இல்லை அண்ணா! நாவலந்தீவின் அடுத்த பேரரசியாக முடிசூட்டப்பட தேர்ந்தெடுக்கப்பட்டவள் நான். நான் இல்லாத நேரத்தில் புறவாசல் வழியாக வந்து என் அன்னை தந்தையை மட்டுமின்றி நான் உயிரெனக் கருதும் என் மக்களையும் குருகுலத்தையும் சிதைத்தவன் நாவகன். அவனுக்கு மூளையாக இருந்து செயல்படுபவள் அந்தக் காமரி. என்னில் பாதியாகிய என் மணாளனையும் இப்போது பறிகொடுக்க நான் தயாராக இல்லை. என் பிள்ளை மண்ணில் கால் பதிக்கும் வேளையில் அவனை ஏந்துவதற்கு என்னவர் என்னருகில் இருக்கவேண்டும்!" என்று உறுதியுடன் தெரிவித்தாள் அரண்யா.

"இப்போது எங்களை என்ன தான் செய்யச் சொல்கிறாய்?" என்று ஆற்றாமையுடன் கேட்டான் நவிரன். 'நீயாவது உயிருடன் பிழைத்துக்கொள்ளேன்!' என்று நவிரனின் கண்கள் அரண்யாவைக் கெஞ்சியது. அதைக்கண்ட சமீரணன் நவிரனின் தோளைத்

தட்டிக்கொடுத்தான். ஆனால் இதை எதையும் இனம் காணும் நிலையில் அரண்யா இல்லை. அவள் மனம் முழுவதும் வீரனையும் மக்களையுமே வட்டமடித்துக்கொண்டிருந்தது.

"இன்றே பயணத்தை துவங்குவோம். தென்மதுரையில் நான் கால் பதித்த நொடி, நாவகனை போருக்கு அழைக்கிறேன். போரில் அவனை வென்று அரியாசனத்தை மீட்கிறேன். அதன் பிறகு, அந்தக் காமரிக்கு உரிய தண்டனையை ஊரறிய வழங்குகிறேன்!" என்று அரண்யா முழங்க, அங்கிருந்தோர் அனைவர்க்கும் மயிர்க்கூச்சம் ஏற்பட்டது.

அரண்யாவின் முகத்திலிருந்த நம்பிக்கை ஒளி மற்றவர் மனதிலும் பாய்ந்து அவர்களுக்கு புத்தொளி தந்தது. ஆனால் நவிரனும் சமீரணனும் காமரியால் சூடு பட்ட பூனைகளாயிற்றே! வெறும் குருட்டு தைரியத்தில் காமரியை எதிர்க்க அவர்கள் நினைக்கவில்லை. தவிர, சூட்சமக் கலைகளில் வல்லவனான துகிரன் தன்னிலையை உணராமல், கழிவிரக்கம் கொண்டு வந்ததிலிருந்து குகைவாயிலையே வெறித்துக்கொண்டிருந்தது அவர்களுக்கு கலக்கத்தைக் கொடுத்தது. அதனால் சரியான திட்டமிடலின் அவசியத்தை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

"அரண்யா! நீ சொல்வதற்கு நான் சம்மதிக்கிறேன்!" என்று நவிரன் சொன்னதும், *'எதற்கிந்த விஷப்பரீட்சை?'* என்ற பாவத்தில் வைனி நவிரனைப் பார்த்தாள். அவள் பார்வையைக் கண்டுகொள்ளாது நவிரன் தொடர்ந்தான்.

"ஆனால், இன்றல்ல. சாதுரியமான ஒரு வியூகத்தை வகுத்துக்கொண்டு நாளை பொழுது புலரும் போது!" என்று நவிரன் முடிக்க, அதை மறுத்து பேச முயன்ற அரண்யாவைத் தடுத்தான்.

"என் முடிவே இறுதியானது. வெற்றி நம் பக்கமிருக்க வேண்டுமென்றால், நான் சொல்லும் ஒன்றையாவது செவி சாய்த்துக் கேள்!" என்று நவிரன் கண்டிப்புடன் சொல்ல, வேறு வழியின்றி அரண்யா அவன் சொன்னதற்குச் சம்மதித்தாள்.

யார் யாருக்கு என்னென்ன பொறுப்புகள் என்று அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போது துகிரன் மட்டும் விட்டேற்றியாக அங்கே வீற்றிருந்தான். அவன் மனம் படும் பாட்டை நன்கறிந்திருந்த மற்றவர்கள் அவனை அதிகம் தொந்தரவு செய்யாமல், ஆனால் அதே நேரத்தில் எல்லா விவாதத்திலும் அவனையும் ஈடுபடுத்தினர். அதன் விளைவாக துகிரன் சற்றுத் தெளிந்தான்.

திருப்திகரமான ஒரு திட்டத்தை வகுத்ததும், "எல்லோரும்

சென்று ஓய்வெடுங்கள். நாளை காலை நாம் புறப்படவேண்டும்!" என்றான் நவிரன். அதன்படியே அனைவரும் உறங்கச் செல்ல, சமீரணன் குகையை காவல் புரிய ஆரம்பித்தான். நவிரன் சொன்ன சொல் தவறமாட்டான் என்கிற புரிதல் இருந்த காரணத்தால் அரண்யா படுத்ததும் உறங்கிவிட, வைனியால் மட்டும் இயல்பாக இருக்க முடியவில்லை.

துகிரனின் துக்கம் படர்ந்த முகமே அவள் நெஞ்சினை நெருஞ்சி முள்ளாகக் குத்தியது. சற்று காற்றாட நடந்தால் தேவலை என்பது போலவள் உணர, அரண்யாவை தொந்தரவு செய்யாமல் மெல்ல நடந்து குகை வாயிலுக்கு வந்தாள். அவள் வருகையை எதிர்பார்த்திருந்தவனைப் போல சமீரணன், தூரத்தில் நடந்து செல்லும் துகிரனை கைகாட்டினான். ஒரு புன்னகையுடன் கூடிய தலையசைப்புடன் அவனிடமிருந்து விடைபெற்றுத் துகிரனை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள் வைனி.

வேகமாக ஓடியவள் மூச்சிரைக்க துகிரனின் தோள் பற்றி, "துகிரா, நில்!" என்றாள். அவளைக் கண்டதும், "இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய்? போய் உறங்கு, போ!" என்று ஒட்டாமல் பதிலளித்துவிட்டுச் சென்றான் துகிரன். எதுவும் பேசாது துகிரனின் பின்னோடே சென்றாள் வைனி. சண்டை போட்டால் கூட வைனி திரும்பி செல்லப்போவதில்லை என்பதை உணர்ந்த துகிரன் மலைமுகட்டின் மீதிருந்த ஒரு பாறையில் அமர்ந்தான். அவன் மனதைப் படித்தவள் அவன் பக்கத்தில் அமர்ந்து அவன் கைகளை பிடித்துக்கொண்டாள்.

அவளது காதலை அவள் கைகளின் ஸ்பரிசத்தில் உணர்ந்தவன், அவள் தோள் சாய்ந்து மழலையென அழுது கரைந்தான். தன் கையாலேயே தன் நண்பர்களைக் கொல்லும் நிலை எதிரிக்குக்கூட வரக்கூடாது. அப்படியிருக்க, தன் மனம்கவர்ந்தவனின் நிலை வைனிக்கும் கண்ணீர் துளிர்க்கச் செய்தது. அவனாக அவனை சமன் செய்துகொள்ளும் மட்டும் அவனை அணைத்துக்கொண்டு பேசாமலிருந்தாள் வைனி.

துகிரனின் கண்ணீர் மட்டுப்பட்டதும், "நடக்கும் எதுவும் நம் கையில் இல்லை துகிரா! வாழ்க்கைக் கடலில் நம்மால் எதிர்நீச்சல் மட்டுமே போடமுடியும். கரை சேருவது காலத்தின் கையில் மட்டுமே இருக்கிறது. உன் சோகம் நமக்கோ நாவலந்தீவிற்கோ எந்த வகையிலும் பயனளிக்காது. ஆனால் உன் சோகத்தை கோபமாகத் திரட்டி எதிரிகளின் மீது நீ திருப்பினால், நம் கை வலுப்பெறுவதை எவராலும்

தடுக்க இயலாது!" என்று சொல்லி அவனைத் தேற்றினாள்.

"இத்தனை கொடுமைகளை அனுபவித்த பின்னும் எப்படி உன்னால் தெளிவாக சிந்திக்க முடிகிறது கண்ணே?" என்று வைனியின் தோள் வளைவில் முகம் புதைத்திருந்த துகிரன் கேட்டான்.

"உன்னுடன் வாழ வேண்டும் என்கிற என் பேராசையே என்னை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது துகிரா!" என்று வைனி சொல்ல, அவளை முதன்முறை பார்ப்பதைப்போல அதிசயமாகப் பார்த்தான் துகிரன்.

"மெய் தான் அன்பே! கலரனின் பிடியில் நான் சிக்கியிருந்த ஒவ்வொரு நொடியும் உங்கள் முகம் தான் என் நினைவில் நிறைந்திருந்தது. உங்களை மறுமுறை சந்திக்கும் வினாடியை எதிர்பார்த்தே என் காலம் கழிந்தது. இனி வரும் காலம் முழுமையும் உங்கள் அருகினில் கழிக்கவே நான் தவமிருக்கிறேன்!" என்று சொல்லி, துகிரனின் நெற்றியில் இதழ் பதித்தாள் வைனி.

"இப்பொழுதே என்னை மணந்து கொள்வாயா கண்மணி?" என்று வைனியின் கன்னங்களைப் பற்றி நெற்றியோடு நெற்றி வைத்து விழிமூடிக் கேட்டான் துகிரன். அவன் குரலிலிருந்த காதலை உணர்ந்தவள், அவன் கேள்விக்குப் பதிலாக, அவன் இதழ்களைச் சிறை செய்தாள்.

விண்மீன்களையும் அதன் நடுவே ஒளிரும் வெண்மதியையும், சூழ இருக்கும் மரங்களையும் சாட்சியாகக் கொண்டு, துகிரன் வைனியை களவு மணம் புரிந்துகொண்டான். கீழ்வானில் கதிரவனின் ஒளி தோன்றும் நேரம் தற்கொலைப் பயணத்தைத் துவங்கவேண்டுமென்று உணர்ந்தவர்களுக்கு வாழ்வின் இறுதி இரவாக இது இருக்கக்கூடும் என்கிற எண்ணம் தோன்றியது. வாழ்ந்த வாழ்க்கைக்கும் ஒரு வேளை உயிருடன் மீண்டால் இனி வாழும் வாழ்க்கை முழுமைக்கும் அர்த்தமாக அந்த ஓரிரவை மாற்றுவதற்கு இருவருமே துடித்தனர். ஒரு பிறவி வாழ்ந்தால் கிடைக்கும் மனநிறைவை விட அந்த ஒற்றை இரவில் இருவருக்கும் அதிக மனநிறைவு கிடைத்தது என்றால் மிகையல்ல.

சில்வண்டுகளின் ரீங்காரமும் புள்ளினங்களின் மென்குரலும் போட்டி போட்டுக்கொண்டு ஒலிக்க, துகிரனின் கையணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றாள் வைனி. ஆனால் அவன் பிடி இளகுவதாகவே தெரியவில்லை.

"இன்னும் சற்று நேரத்தில் விடிந்து விடும் துகிரா! என்ன விளையாட்டு இது?" என்று கடிந்துகொண்டவளின் இதயம், இன்று விடியாமலேயே போய் விடக்கூடாதா என்று அடித்துக் கொண்டது.

"விளையாட்டில்லை கண்ணே! உன்னை விட்டு அணுவளவும் அகலாதிருக்கும் பாக்கியம் கிடைக்கவேண்டி தவம் செய்து கொண்டிருக்கிறேன்!" என்று துகிரன் காதல் மொழி பேச, எப்படியாவது காமரியை அழித்து அவன் தவத்திற்கான பலனைத் தரவேண்டுமென்று வைனி ஈசனை மனதார வேண்டினாள். ஆனால் அதற்கு மேலும் அவர்கள் காதல் புரிவதற்கு இடைஞ்சலாக ஆதவன் மெல்லத் தன் கரங்களை நீட்டினான்.

"அதோ! முதல் கிரணம் தெரிகிறது! பயணத்திற்கான ஏற்பாடுகளை கவனிக்க வேண்டும்!" என்று அவசரமாக வைனி மொழிந்ததும் அதுவரையிருந்த லகுத்தன்மை துணி கொண்டு துடைத்தாற்போல துகிரனிடமிருந்து மறைந்தது. இருவரும் மற்றவர்களுடன் இணைந்துகொண்டு பயணப்பட்டு தென்மதுரையை வீரன் சென்ற அன்றே அடைந்தனர். அவர்கள் வருவதை குறளிகள் மூலமாக காமரி அறியக்கூடாது என்பதற்காகவே அவர்கள் தலைக்கு மேல் கமலநாதரின் தவபலத்தின் மூலமாக உருவாகிய தேன் சிட்டு பறந்து வந்தது.

வாயில் காப்பவர்கள் அரண்யாவைக் கண்டதும் மகிழ்வோடு கதவைத் திறந்துவிட, நாவகனின் விசுவாசிகளான சிலர், வரும் சிறுபடையோடு மோதி மாண்டனர். அரண்மனை வீதிகளில் அரண்யா குருதி படிந்த வாளுடன் பவனி வர, முரசறைவோன் பல நாட்களுக்குப் பிறகு தன்னிச்சையாக அவள் வருகையின் காரணத்தை முரசறைந்தான். முரசுச் சத்தம் கேட்டு வந்த மக்கள், தங்களைக் காக்க வந்த கொற்றவை தேவியாகவே அரண்யாவை வழிபட ஆரம்பித்தனர். ஆனால் இத்தனை களேபரத்திலும் இந்திரரகசியத்தால் ஏற்பட்ட கைகாயத்திற்கு மருந்திட்டுக்கொண்டு காமரியை நினைத்து கனவு கண்டுகொண்டிருந்தான் நாவகன்.

வெளியில் மக்களின் கோஷம் வினாடிக்கு வினாடி அதிகரித்துக்கொண்டிருக்க, எதைப்பற்றிய கவலையும் இல்லாமல் இருக்கும் நாவகனைப் பார்த்த மாத்திரத்திலேயே காமரியின் வெறுப்பு பன்மடங்காயிற்று! 'தரித்திரம் பிடித்தவன்!' என்று மனதிற்குள் அவனை வைதாலும் கடைசி கட்ட திட்டத்திற்கு அவனின் தேவையை உணர்ந்து, முகத்தில் கலவரத்தை பூசிக்கொண்டாள் காமரி.

"நாவகா! வெளியில் நடப்பவற்றை அறிவாயா இல்லையா?" என்று பதற்றத்துடன் கேட்டபடியே அவன் அறைக்குள் நுழைந்தாள் காமரி.

"அந்த அரண்யா நாய் வந்திருக்கிறது போல. ஏதோ குரைக்கும்

சத்தம் கேட்டது. எதுவானால் என்ன? யட்சிணிகளை ஏவி அவர்களை எல்லாம் கொன்று விடு! இந்தச் சிறு சம்பவத்துக்காகவா இப்படிப் பதறுகிறாய்?" என்று அலட்சியமாகச் சொன்னவனின் மீது எல்லையற்ற ஆத்திரம் கொண்டாள் காமரி.

"மூடத்தனமாக பேசாதே நாவகா! என் தந்தை சொன்னது உனக்கு நினைவிருக்கிறதா இல்லையா? உலகையே என்னால் எதிர்த்து வெற்றிபெற முடிந்தாலும் அரண்யாவை நான் நேருக்கு நேராக போரில் சந்தித்தால் இருவரில் ஒருவர் மட்டுமே உயிருடன் மீள முடியும். அதிலும் இப்போதைய கிரக நிலைகளை ஆராயும் பொழுது அவள் வெல்வதற்குத்தான் அதிக வாய்ப்பிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதுமட்டுமின்றி நான் யட்சிணிகளை ஏவும் பொழுது அவைகளை வசியம் செய்யும் கலையை அந்தப் பாவி ஐம்பூதன் அரண்யாவிற்கு கற்றுத்தந்திருக்கிறானாம். குறளிக்கு இந்தச் செய்தி தாமதமாகவே தெரிந்திருக்கிறது. அதனால் நானோ யட்சிணிகளோ இப்பொழுது கையறுந்த நிலையில் இருக்கிறோம்!" என்று கவலையுடன் காமரி சொன்னதைக் கேட்டு நாவகனின் முகத்தில் இருள் படர்ந்தது.

"அப்படியானால் நம் கதி என்னாவது? அரியாசனம் என் கையை விட்டுப் போய்விடுமா" என்று பதறினான் நாவகன்.

"அவ்வளவு எளிதில் அரியாசனத்தை இழப்பதற்காகவா அவள் இல்லாத நிலையை உருவாக்கி நாம் ஆட்சியைப் பிடித்தோம்? நம் கொடி காலத்திற்கும் பட்டொளிவீசிப் பறக்கவேண்டுமென்ற ஆசை இல்லாமலா இந்திரரகசியத்தை அடைய நான் இவ்வளவு பாடுபடுகிறேன்?" என்று நாவகனின் கண் பார்த்துச் சொன்னாள் காமரி.

அவள் சொன்னவிதம் நாவகனுக்கு நிம்மதியளிக்க, "இந்த இக்கட்டிலிருந்து நாம் தப்பும் உபாயத்தைச் சொல் கண்மணி. அப்படியே நிறைவேற்றுகிறேன்!" என்று காமரியிடம் முழுச் சரணாகதி அடைந்தான் நாவகன்.

அவன் பதிலில் திருப்தியுற்றவளாக, நாவகனின் தலை முடியைக் கோதியபடியே, "அவளுடன் சண்டையிட்டு எப்படியாவது அவளையும் அவள் வயிற்றில் வளரும் குழந்தையையும் கொன்று விடு நாவகா!" என்று சொல்லி புன்னகை புரிந்தாள் காமரி.

"என்ன, அரண்யா கர்ப்பமாக இருக்கிறாளா?" என்று அதிர்ந்தான் நாவகன்.

"என்ன நாவகா! பாசம் தடுக்கிறதா? இதற்கே அதிர்ந்தால் எப்படி? என் திட்டம் முழுமையையும் சொல்கிறேன். மனதை திடப்படுத்திக் கொள்!" என்று காமரி அவளது திட்டத்தை நாவகனிடம்

விவரிக்க ஆரம்பித்த பொழுது குவேணியால் விடுவிக்கப்பட்ட ஆரன் நாவகனின் அறைக்கு வெளியில் மறைந்து நின்றான்.

அரண்யாவுடன் மதுரைக்கு விரைந்த குழு, தாங்கள் செய்யவேண்டிய செயல்களை முன்பே ஒத்திகை பார்த்திருந்தனர். அதன்படி, நவிரன் குவேணியை தேடிக்கொண்டு சென்றான். நாவலந்தீவு என்பது பெருநிலப்பரப்பு என்றாலும் அதில் ஓடும் எண்ணற்ற நீர்நிலைகளினால் இணைக்கப்பட்டிருந்தது. அதனால் குதிரையேறி பயணம் செய்வதைப்போல படகுகளிலும் எங்கும் பயணம் செய்யலாம். நாவாய்கள் கட்டி காவல் புரியுமளவிற்கு நீர்வளம் அங்கே நிறைந்திருந்தது. அதனாலேயே மிகப்பெரிய கப்பல் படையை நிறுவும்படி ஐம்பூதனார் குவேணிக்கு உத்தரவிட்டதும் அதை நிறைவேற்றுவது அவளுக்குக் கடினமாக இல்லை. பேரரசன் வீயபாண்டியனிடமும் பேரரசி அயினி அம்மையிடமும் ஐம்பூதனாரின் உத்தரவை அவள் விவரித்ததும், ஒரு சிறுபெண்ணிடம் இத்தனை பெரிய பொறுப்பை ஒப்படைப்பதா என்று முதலில் தயங்கியவர்கள் குவேணி காண்பித்த மரத்திலான மாதிரி வடிவங்களைப் பார்வையிட்டதும், மகிழ்வுடனேயே அவளுக்கு அனுமதியளித்தனர்.

மிகச்சிறந்த தச்சர்களை அவள் பணிக்கு உதவி செய்யுமாறு பேரரசர் கட்டளை பிறப்பிக்க, துரிதமாக கப்பல் கட்டும் பணிகள் நடந்தேறின. அவள் எண்ணத்தை அப்படியே பிரதிபலிக்கும் அற்புதமான அணி அவளுக்கு பக்கபலமாக இருந்ததால் அவளால் நினைத்ததை செய்ய முடிந்தது. காலப்போக்கில் அவளுக்கு வேலையின்றி குவேணி நினைப்பதை நினைக்கும் முன்னே அறிந்து நடந்துகொண்டனர் அவளது அணியினர்.

அதனால் முதலில் துறைமுகப் பட்டினத்திலிருந்து வேலை செய்தவள், காமரியின் அட்டகாசம் அதிகரித்ததும், தகவல் சேகரிக்கவென அடிக்கடி மதுரைக்கு வந்து போய்க்கொண்டிருந்தாள். அதிலும் துகிரனை சந்தித்து வேல்விழி அகப்பட்ட செய்தியைச் சொன்னதும் நவிரன் அங்கே நிச்சயம் வருவான் என்று யூகித்திருந்தவள், அவனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவளின் நினைப்பைப் பொய்யாக்காமல் நவிரனும் அவளைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

இரும்பனின் மறைவில் சோகத்திலிருந்தவளின் மனதிற்கு நவிரனின் வருகை இதமளித்தது. அவனைக் கட்டிக்கொள்ளத் துடித்த கரங்களை முயன்று கட்டுப்படுத்தினாள். ஆனால் நவிரனுக்கு அப்படிப்பட்ட தயக்கம் எதுவும் இல்லை போலும். குவேணியைக்

கண்டதும் ஓடிச்சென்று அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றினான். அவனது செயலில் அதிர்ந்தவள் குவேணி மட்டுமல்ல கூடவே வந்திருந்த சமீரணனும் தான்.

அவர்கள் இருவரின் அதிர்ச்சி கலந்த பார்வையைக் கண்டதும்தான் தன் செயல் புரிய, அவளைக் கீழே இறக்கிவிட்டு அசடு வழிந்தான் நவிரன்.

"உன்னிடம் எவ்வளவோ பேசவேண்டும் குவேணி. இன்றிரவோடு எல்லாம் முடிந்துவிடும். நாளை காலையில் நிர்மலமான மனதுடன் உன்னிடம் சொல்லவேண்டியதைச் சொல்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, அவள் பதிலை எதிர்பாராமல் சிறையிலிருக்கும் ஆரனையும் இன்னும் பலரையும் விடுவிக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கினான் நவிரன்.

இதை முன்பே எதிர்பார்த்திருந்தவளைப் போல, சிறைச்சாலையின் கொத்து சாவியை அவன் கைகளில் திணித்தாள் குவேணி. எப்படி என்று அதிசயித்தவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"உன் மனம் எப்படி வேலை செய்யும் என்று எனக்குத் தெரியாதா நவிரா? பேரரசரும் பேரரசியும் வீழ்ந்த பிறகு, மனம் நொந்து போய் நாவகனின் கீழ் வேறு வழியில்லாமல் இருந்தவர்களை ஒன்று திரட்டி ரகசியப் படை ஒன்றை உருவாக்கினேன். அவர்கள் மூலமாகவே ஒற்றறிந்து அவ்வப்போது உங்களுக்குத் தகவல் அனுப்பினேன். துகிரனை சந்தித்ததும் எப்படியும் இந்தத் திங்களுக்குள் நீ வருவாய் என்று ஊகித்தே நம் வீரர்களை சிறைச்சாலை பணிக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியிருந்தேன். அதன்படியே அவர்களும் செய்தனர். அரண்யா அரண்மனைக்குள் காலடி எடுத்து வைத்ததும், முரசொலி கேட்டதும், இன்னும் பலரும் நமக்குச் சாதகமாக நம் பக்கம் சேர்ந்துவிட்டனர். நான் அரண்யா வாள் சுழற்றுவதையும் பார்த்திருக்கிறேன், நாவகன் சுழற்றுவதையும் பார்த்திருக்கிறேன். அவன் மிகச்சிறந்த வீரனானாலும் நிச்சயம் அரண்யாவை அவனால் வீழ்த்த முடியாது என்றே நான் எண்ணுகிறேன். அதனால் வெற்றி நம் பக்கமே! ஆனால் காமரி அவ்வளவு எளிதில் அரண்யாவை வெல்ல விடமாட்டாள். அவள் மாயமந்திரக் கலையில் வல்லவள். அவளை அழிப்பதற்கு நமக்குக் கனலியின் உதவி தேவை. காமரியின் அட்டகாசங்கள் பொறுக்காது கனலியும் நம் பக்கமே இணைந்துவிட்டாள். அதனால் உறுதியாகக் கூறுகிறேன்! வெற்றி நமதே!" என்று படபடவென பொரிந்தாள் குவேணி.

அவள் கூறுவதைப் புன்னகையுடன் கேட்டுக்கொண்டிருந்த

நவிரன், "இந்தச் சரவெடிப்பேச்சை கேட்காது என் காதுகள் இத்தனை நாள் கேட்கும் சக்தியை இழந்திருந்தது குவேணி!" என்றான். அதைக்கேட்டு குவேணி சிவக்க ஆரம்பித்ததும், "அந்த மூலையில் இருந்துகொண்டு நம்மை ஒரு குறளி நோட்டமிடுகிறது. நீங்கள் அதைப்பற்றி எல்லாம் கவலை கொள்ளாது உங்கள் வேலையைத் தொடருங்கள்! நான் வேண்டுமானால் ஒரு ஓரமாக போய் விடுகிறேன்!" என்று சமீரணன் கேலி பேசியதும், தன்னிலையை இருவருமே ஒரு அசட்டுச் சிரிப்புடன் மீட்டுக்கொண்டனர்.

"குவேணி என்ன நிலையில் இருக்கிறாளென்று தெரியாமலேயே என் உள்ளம் இத்தனை நாட்கள் நிம்மதி இழந்திருந்ததடா. அதுதான் சற்று பேசிவிட்டேன். உடனே உனக்குப் பொறுக்காதே! சரி சரி, வந்த வேலையைப் பார்ப்போம் வா!" என்று சிரித்தான் நவிரன். பல மாதங்களுக்குப் பிறகு சிரிக்கும் நவிரனை இமை கொட்டாது பார்த்தாள் குவேணி. இவர்கள் இருவரையும் பார்த்து மனம் நிறைந்தான் சமீரணன். நவிரனுக்காவது வாழ்க்கையில் நல்ல காதல் கிடைக்கட்டும் என்று மனதார வாழ்த்தினான் அந்த நண்பன்.

குவேணியுடன் வருபவர்கள் யாரென்று தெரியவில்லை என்றாலும் அவர்கள் குவேணியுடன் வருவதாலேயே சிறைச்சாலைக்குள் எந்தவித கேள்வியுமின்றி அனுமதிக்கப்பட்டார்கள். முதலில் ஆரனை விடுவித்த குவேணி, நாவகனையும் காமரியையும் நோட்டம் விடுமாறு ஆரனிடம் கேட்டுக்கொண்டாள்.

"வேல்விழி?" என்று கேட்டவனிடம், "நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்!" என்று தைரியம் கூறி அனுப்பிவைத்தாள். வேல்விழியை வேறொரு பிரத்தியேகச் சிறையில் காமரி அடைத்திருந்தாள். கனலிக்குக்கூட அந்த இடம் தெரியாமல் வெகுகவனமாக இருந்தாள் காமரி. அது எங்கிருக்கிறது என்பதைத் தான் மட்டுமே அறிந்திருப்பதாக அவள் தப்புக்கணக்கு போட்டிருந்தாள். ஆனால் அரண்மனைப் பணிப்பெண்களைப் பற்றிய அவளது கவனமின்மையே காமரிக்கு எதிராக மாறியது. மிகச்சிறந்த ஒற்றர் படையாக பணிப்பெண்கள் தங்களை இத்தனை நாட்களில் மாற்றிக்கொண்டிருந்தனர். கனலி காமரிக்கு எதிராக மாறியதை காமரியோ குறளிகளோ உணரும் முன்பே இவர்கள் உணர்ந்துகொண்டனர். அதனால் காமரிக்கு இணையான சக்தியுள்ளதாக அவர்கள் நினைத்த கனலியிடம் அவர்களின் விசுவாசம் கூடியது. காமரி தனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் என்று நினைத்துக்கொண்டிருந்த பலவற்றை சமயம் பார்த்து கனலியிடமோ

குவேணியிடமோ அவர்கள் தெரிவித்தனர். அதனால் முதலில் சிறையிலிருக்கும் சிற்றரசர்களையும் வேறு பலரையும் விடுவித்தவுடன் பாலை வீரர்கள் யட்சிணிகள் என கடுங்காவலுக்கிடையில் இருக்கும் வேல்விழியை விடுவிக்க குவேணி முடிவு செய்தாள்.

நாவலந்தீவின் மூலை முடுக்குகளில் நடப்பதைக்கூட நானறிவேன் என்று இறுமாந்திருக்கும் காமரியால் அவள் கண்பார்வையின் கீழ் இருப்பவர்களை கவனிக்க முடியாது போனது ஆச்சரியம் தான்! அதனாலேயே ஆரன் விடுதலையான செய்தியை அவள் அறிந்திருக்கவில்லை. அவள் பேசுவதை அவன் ஒட்டுக்கேட்கக் கூடும் என்பதையும் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. அதன் பயனாகவே மனதிலிருந்த வஞ்சக திட்டத்தை நாவகனிடம் அப்படியே விளக்கினாள்.

"நான் சொல்வதை கவனத்துடன் கேள் நாவகா! இதில் இம்மி பிசகினாலும் இருவருமே சமாதியாக வேண்டிவரும். நீ அரண்யாவையும் அந்தப் பிடாரியின் வயிற்றில் வளரும் அசிங்கத்தையும் அழிக்கும் வேளையில், நானும் கலரனும் இங்கே மிகப்பெரிய வேள்வியை நடத்தப் போகிறோம். அதன் பலனாக, இறந்த அரண்யாவின் உடலில் நான் புகுந்திடுவேன். வீரனை மயக்கி இந்திரரகசியத்தை அறிந்திடுவேன். அதன் பின்னர் இந்த நாவலந்தீவின் நிரந்தர மகாராணியாகிவிடுவேன்!" என்றாள் காமரி.

"அரண்யாவின் உடலில் நீ புகுந்தால், உன்னை எப்படி நான் மணம் செய்வது கண்மணி?" என்று தயங்கினான் நாவகன்.

"இது ஒரு தற்காலிகமான ஏற்பாடுதான் நாவகா! இந்திர ரகசியம் என் கைகளுக்கு வரும் வரையில் தான் நான் அந்த அருவருப்பான தோற்றத்தில் இருப்பேன். அதன்பிறகு, நான் மீண்டும் என் உடலுக்குள் புகுந்திடுவேன்!"

"உன்னால் இப்பொழுதே அதை செய்ய முடியுமே. பிறகெதற்கு வேண்டாத ஒரு வேள்வி?" என்று நாவகன் அடுத்த கேள்வி எழுப்ப, காமரி கோபத்தின் உச்சிக்கே சென்றாள்.

"வேளை கெட்ட வேளையில் இதென்ன முட்டாள்த்தனமான கேள்விகளையே கேட்டுக்கொண்டிருக்கிறாய் நாவகா?" என்று எரிந்து விழுந்தாள்.

"முழு விஷயம் தெரிந்தால்தானே என்னால் எல்லா வேலைகளையும் சிறப்பாகச் செய்யமுடியும்?" என்று கேட்டான் நாவகன். 'இவன் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் என்னை இவன் விடமாட்டான் போலும்!' என்று நினைத்த காமரி, அவன்

கேள்விகளுக்கு விடையளிக்க முடிவு செய்தாள். அரண்யா இறந்ததும் எப்படியும் இவனை கொல்லத்தானே போகிறோம், அதனால் இவனிடம் சொல்வதில் என்ன பிழையிருக்கிறது என்று அவள் நினைத்ததும் மற்றொரு காரணம்.

"அரண்யா சாதாரண பெண்ணில்லை என்று உனக்கு எத்தனை முறை சொல்வதென்று எனக்கு விளங்கவில்லை நாவகா! அதிலும் என் ஆன்மாவின் தன்மைக்கு முற்றிலும் எதிரானது அவளது ஆன்மாவின் தன்மை. அதனால் எனக்கு அது எளிதான செயலல்ல. அதுமட்டுமின்றி இந்திர ரகசியத்தையும் நாம் ஏய்க்க வேண்டும். அதற்காகவும் இன்னும் ஒரு காரணத்துக்காகவுமே இந்த வேள்வி." என்று காமரி சொன்னதும், "அந்த இன்னுமொரு காரணம்..." என்று இழுத்தான் நாவகன்.

இழுத்துப்பிடித்த பொறுமையுடன், "நான் அரண்யாவாக மாறினாலும் அந்த இழிமகன் வீரன் என்னிடம் ரகசியத்தை இயக்கும் முறையைச் சொல்ல வேண்டுமே! அதற்காகத்தான் இன்னுமொரு திட்டத்தை தீட்டியிருக்கிறேன். நாம் மற்றவரை ஏய்க்க ஏற்கனவே விண்கற்கள் மழை பொழியப்போகிறது என்று கதை கட்டியிருந்தோமல்லவா? அந்தக் கதையை இப்போது உண்மையாக்கப் போகிறேன். வேள்வி மூலம் என்னுடைய சக்தியையும் கலரனுடைய சக்தியையும் கனலியுடைய சக்தியையும் ஒன்று திரட்டி விண்கற்கள் மழையை நாவலந்தீவின் மீது விழச்செய்யப் போகிறேன். பிறகு அரண்யாவாகி இந்திர ரகசியத்தை வீரனிடம் தந்து உபயோகிக்கச் சொல்லுவேன். மக்கள் எல்லோரும் இறப்பதைப் பார்க்கும் வீரன் என் முன்னிலையில் இந்திரரகசியத்தை கட்டாயம் இயக்குவான். அதன் மூலம் அவன் சொல்லும் மந்திரத்தை அறிந்து, இந்திரரகசியத்தை எனக்குச் சொந்தமாக்குவேன்! புரிந்ததா? கேள்விகள் முடிந்து விட்டனவா?" என்றாள் காமரி.

"எல்லாம் சரி. அரண்யாவைக் கொன்றுவிடுகிறேன். ஆனால் அந்தக் குழந்தையை விட்டுவிடலாமே. அது என்ன பிழை செய்தது?" என்று காமரியிடம் நாவகன் கேட்ட மறுநொடி, அவன் கழுத்தைப் பிடித்து, "என்ன சொன்னாய்? என்ன பிழை செய்ததா? என் எதிரியின் வயிற்றில் உதித்ததை விட பெரும்பிழை இந்த உலகத்தில் வேறென்ன இருக்க முடியும்? அந்தச் சனியன் பிழைத்தால் என் பிள்ளை நாடாளுவதற்கு முட்டுக்கட்டை வேறு போடும். அதனால் முடித்து விடு! இன்னொன்றும் சொல்கிறேன் கேள்! அந்த அரண்யாவின் குழந்தையை மட்டும் நாம் கொல்லப்போவதில்லை! உன் இன்னொரு தங்கை இருக்கிறாளே வேல்விழி... அவளது குழந்தையையும் சேர்த்தேதான் பலி

கொடுக்கப் போறேன்!" என்று கண்களில் கனல் வீச பதிலளித்தாள் காமரி.

அவள் பதிலில் நாவகன் விக்கித்துப்போய் நின்றான். அவனை அலட்சியமாகப் பார்த்தவள் மேலும் தொடர்ந்தாள், "என்ன கூகை போல விழிக்கிறாய்? நாங்கள் செய்யப்போகும் வேள்விக்கு களப்பலியே வேல்விழியின் குழந்தைதான். இன்று காலைதான் அவளுக்குப் பெண்பிள்ளை பிறந்தது. அதை உடனே கொல்லாமல் விட்டது எனக்கு எத்தனை நன்மையாயிற்று என்று பார்த்தாயா? இந்த உலகில் இருக்கும் மனிதர்களில் இரண்டு வகை மட்டுமே உண்டு. ஒன்று எனக்குப் பயன் தருபவை மற்றொன்று எனக்குப் பயனளிக்காதவை. இதில் நீ எந்த வகையென்று சீக்கிரத்தில் முடிவு செய்தால் உனக்கு நல்லது!" என்று சொல்லி காமரி நாவகனைப் பார்த்தாள்.

அவள் கண்களை சில நிமிடங்கள் பார்த்தவன், தானாகத் தலை குனிந்துகொண்டு, "இதோ! அரண்யாவுடனான போருக்குப் புறப்படுகிறேன்!" என்று சொல்லி ஆயத்தமானான். அதன்பிறகு தான் அவன் கைக்காயத்தை குணமாக்கினாள் காமரி.

கடைசியில் காமரி சொல்லியதைக் கேட்டு பேரதிர்ச்சிக்கு உள்ளானவன் ஆரன் மட்டுமல்ல கனலியும் தான். துகிரனும் வைனியும் அவளைச் சந்தித்து அரண்யா வந்திருக்கும் நோக்கத்தைச் சொல்ல, காமரியினால் கட்டுண்டிருக்கும் வீரனை விடுவிக்கும் மார்க்கம் தேடி கனலி விரைந்தாள். அப்போது கலரன் அரண்மனையில் காமரியுடன் ஏதோ வேள்வி செய்யப்போவதாக அவள் காதுகளுக்குச் செய்தி வர, துகிரனையும் வைனியையும் கலரனுடனான மாயப் போருக்குத் தயாராகச் சொன்னாள் கனலி. சரியான நேரத்தில் என் சமிக்கைக்காகக் காத்திருங்கள் என்று அவர்கள் இருவரிடமும் சொல்லிவிட்டு காமரியை தேடிக்கொண்டு சென்றாள் கனலி. ஆனால் இப்படியோர் குரூரத் திட்டம் அவள் மனதினில் இருக்குமென்று எதிர்பார்க்காத காரணத்தால் கனலி கிட்டத்தட்ட மூர்ச்சையாகினாள்.

வேரோடிப்போயிருந்த கால்களோடு கனலி அறை வாயிலில் நிற்பதைப் பார்த்த காமரி, "வந்துவிட்டாயா? உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன்! வேள்விக்கு நேரமாகிறது. நாம் செல்வோம்!" என்று சொல்லி கனலியின் முகத்திலிருந்த வேதனைக்கு பதிலளிக்காமலேயே அவள் கைப்பற்றி அழைத்துச் சென்றாள்.

சிறிது தூரம் சென்றதுமே கையை உதறிக்கொண்டு, "காமரி! நீ செய்வது சரியல்ல. பிஞ்சுக் குழந்தையைக் கொல்வது பாவம்." என்று சொல்லிக் காமரியை முறைத்தாள் கனலி.

"குழந்தையல்ல. குழந்தைகள்!" என்று கனலியைத் திருத்தியவள், "வீய பாண்டியன் கூட நான் குழந்தையாக இருக்கும் போதுதானே என்னைக் கொல்லாத் துணிந்தான்?" என்று பதில் கேள்வி கேட்டு கனலியின் வாயை அடைத்துவிட்டு, நாவகனிடம் சொன்னதை அவளிடமும் அப்படியே சொன்னாள். காதில் விழுந்த செய்திகள் பொய்யாக இருக்கக்கூடாதா என்ற நப்பாசையில் காமரியின் முகத்தை ஆராய்ந்த கனலிக்கு ஏமாற்றமே பரிசாகக் கிடைத்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? வேல்விழியின் உயிருக்கு மட்டும் தான் நான் உத்திரவாதம் தந்திருந்தேன். அவள் பெற்றுப்போடும் பிண்டத்துக்கெல்லாம் என்னிடம் கருணையை எதிர்பார்க்காதே!" என்று மிடுக்காகச் சொல்லிச் சென்றாள் காமரி. அவள் மட்டும் அப்போது திரும்பி கனலியின் முகத்தைப் பார்த்திருந்தால், ஒருவேளை அவளின் அஸ்தமனத்தைத் தடுத்திருக்கக் கூடும். ஆனால் கர்மவினை சும்மா விடுமா? பலநூறு நன்மைகளைச் செய்தவர்களையே பாடாய் படுத்தும் விதி, பிறந்ததிலிருந்து தீமையை மட்டுமே செய்யும் காமரியை மட்டும் விட்டுவிடுமா என்ன?

காமரியின் சக்தி தளர்ந்திருக்கும் நேரத்தில் அடித்தால் மட்டுமே முழுமையான வெற்றி கிடைக்கும் என்பதை கனலி உணர்ந்தாள். அதிலும் ஒரே ஒரு முறை மட்டுமே அவர்களுக்கு அந்த வாய்ப்பு வருமென்பதையும் கனலி இப்போது அறிந்திருந்தாள். அரண்யாவைக் காப்பதற்காக குவேணியை உடனே செல்லச் சொல்லியும் வந்து சேர வேண்டிய இடத்தைத் துகிரனிடம் சொல்லச் சொல்லியும் சேடிப்பெண் ஒருத்தியிடம் கண்காட்டி விட்டு, கனத்த மனதுடன் காமரியைப் பின்தொடர்ந்தாள் கனலி.

நாவகன் போருக்கு ஆயத்தமாகி அரண்யா காத்திருந்த முன்புறத்திடலுக்கு விரைந்தான். தாய்மையின் பூரிப்பில் திளைத்திருக்க வேண்டிய அவள் கண்கள் சினத்தில் சிவப்பேறியிருந்ததைக் கண்டு நாவகனின் மனதில் திகில் கூடியது. அவளை வென்றுவிடுவோம் என்று நம்பினாலும் அவள் குழந்தையைக் கொல்லவேண்டுமா என்கிற கேள்வி அவனைக் குடைந்தது. ஆனால் காமரியை எதிர்க்கும் துணிவு மட்டும் அவனிடமில்லை.

அரண்மனையை விட்டு வெளியே வந்தவனுக்கு இன்னும் சூரியன் மறையவில்லையோ என்று ஐயம் தோன்றுமளவிற்கு எங்கும் ஒளிமயமாக இருந்தது. தீப்பந்தங்களும் தூங்கா விளக்குகளும் மட்டுமல்ல, வெண்ணிலவு கூட அளவுக்கு அதிகமான வெளிச்சத்தைப் பரப்பியது போலிருந்தது.

அரண்யா காத்திருந்த மைதானத்தைச் சுற்றி வட்டமிட்டிருந்தனர் மக்கள். அவர்களுள் காமரி சிறையில் அடைத்திருந்த கைதிகள் பலரும் இருந்ததைக்கண்ட நாவகனுக்கு அவளுக்குப் பக்கபலமாக துகிரனும் நவிரனும் கூட வந்திருக்கின்றனர் என்பது புரிந்துபோயிற்று. தவவலிமையை எல்லாம் இழந்து செல்லாக்காசாகி அதுவரையில் சிறையில் வதைபட்டுக்கொண்டிருந்த தீசகர் கூட ஒளி கூடிய கண்களுடன் அமர்ந்திருந்ததைப் பார்த்து நாவகனுக்குள் பயப்பந்து உருள ஆரம்பித்தது.

கமலநாதரையும் ஐம்பூதனாரையும் ஒழித்ததைப் போலவே பற்பல ஆசீவக குருமார்களையும் காமரி அழித்திருந்தாள். அவளுக்கு எதிராக செயல்பட்ட ஒளிமலையின் தலைமைகுருவும் நவிரனின் குலகுருவுமாகிய உலகாண்டவரை ஊருக்கு முன்னால் உயிருடன் செக்கிலிட்டு அரைத்துக் கொன்ற காமரி, தீசகரை சிறை பிடித்தாள். அவரின் தவவலிமையைத் தந்திரமாக திருடிக்கொண்டவள் அவரை உயிருடன் வதைத்தாள்.

அரண்யாவைக் கொல்லவேண்டுமென்று நினைத்தாலே நாவகனுக்கு வீரன் குதிரை மேலிருந்து அவன் தலையை நோக்கி வாள் வீசிய காட்சியே கண்முன்பு தெரிந்தது. இருந்தாலும் மனக்கலக்கத்தை வெளியில் காட்டாது திமிரான நடையுடன் பேரரசன் என்கிற தோரணையில் அரண்யாவின் முன்பு வந்து நின்றான் நாவகன். கிட்டத்தட்ட பதினாறு ஆண்டுகளுக்குப் பின் நேருக்கு நேராகக் காணும் அண்ணனைக் கண்டவளின் இதழ்கள் வெறுப்பில் வளைந்தன. அவன் முகத்தில் காறி உமிழவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

ஆனால் அவள் முகத்தை உற்று நோக்கியவனுக்கு, அரண்யா அவன் அம்மாவின் பிரதி பிம்பமாகத் தெரியவும் கைகள் உதறின. இருப்பினும் மனதை மறைத்துக்கொண்டு, "என்ன இங்கு கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறாய்?" என்று ஏளனமாகக் கேட்டான். அவனுக்கு பதிலளிக்க விரும்பாது திரும்பிக்கொண்டாள் அரண்யா. அவளது செயல் இளகியிருந்த நாவகனின் மனதினை இறுகச் செய்தது. 'அவ்வளவு திமிரா உனக்கு?' என்று அவள் மீது அவன் கோபம் கொண்டான்.

"நாவலந்தீவின் அரியாசனம் உங்கள் இருவருக்கும் பொது என்றாலும் அடுத்தபடியாக முடிசூட்டப்படுவதற்கு அரண்யாவையே சபையோர் தேர்ந்தெடுத்திருந்தனர். ஆனால் சிவனின் செங்கோலை மக்களின் நலன் கருதி அவள் கைப்பற்றப்போனதும் வஞ்சகமாக நாவகனாகிய நீ அரியாசனத்தை கைப்பற்றிக்கொண்டாய். இப்போது

அரண்யா திரும்பி வந்துவிட்டபடியால் ஆட்சிப்பொறுப்பை அரண்யாவிடம் தந்துவிட்டு, நீயும் உன்னோடு இருக்கும் பெண்ணும் நீங்கள் செய்த குற்றங்களுக்கு தண்டனை அனுபவிக்க வேண்டும்!" என்று தீசகர் சொல்லும் போதே, "முடியாது என்றால்?" என்று நக்கலாகக் கேட்டான் நாவகன்.

"சமர் ஒன்று தான் முடிவு! வெற்றி பெறுபவருக்கே அரியாசனம்!" என்றார் தீசகர்.

"அப்படியானால் தோற்பதற்குத் தயாராகுங்கள்!" என்று சொல்லி அரண்யாவிற்கு சுதாரிப்பதற்குக் கூட நேரம் தராது முதல் வீச்சை வீசினான் நாவகன்.

இவன் இப்படித்தான் கீழ்த்தரமான முறையில் சண்டையிடுவான் என்பதை எதிர்பார்த்திருந்த அரண்யா, நாவகனின் வாளை அவன் வீசிய போதே தடுத்தாள். இருவரின் வாட்களும் மோதிக்கொள்ளும் ஓசை அரண்மனை மாடங்கள் எங்கும் எதிரொலித்தன. காளிதேவியாக மாறி அரண்யாவும் காளாமுகனாக மாறி நாவகனும் கடும் சண்டையிட்டனர்.

பிள்ளையை சுமந்துகொண்டிருப்பவள் என்பதை நாவகன் மட்டுமல்ல அரண்யாவும் மறந்தாள். சுற்றிச் சுழன்று அவள் நாவகனைத் தாக்க, அவன் இவள் தாக்குதல்களை சமாளிக்க முடியாது அவள் கால்களைத் தட்டிவிட்டான். அவளது சமநிலை தவறுவதை உணர்ந்த நொடியில் எம்பிக் குதித்துக் கீழே விழாது தன்னை காத்துக் கொண்டாள் அரண்யா.

எப்படியாவது அவளை வீழ்த்த வேண்டும் என்று வாய்ப்பை எதிர்பார்த்து நாவகன் காத்திருக்க, அவனுக்கு எந்த வாய்ப்பையும் வழங்காது சாதுரியமாக சண்டையிட்டாள் அரண்யா. தனக்குப் பின்னால் பிறந்தவளுக்கு இத்தனை பலமும் திறமையும் இருக்குமென்பதை நாவகனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதிலும் ஒவ்வொரு முறை அரண்யா அவனைத் தாக்கும் போதும் விண்ணைப்பிளந்த மக்களின் வாழ்த்தொலியைக் கேட்டவனின் குருதி கொதித்தது.

சிங்கத்தைப் பற்றி ஆய்ந்தறிந்தவர்களுக்கு 'அரிமா நோக்கு' என்னும் நூதனத்தைப் பற்றி நன்கு தெரிந்திருக்கக் கூடும். காட்டில் வாழும் விலங்குகளில் சிங்கத்திற்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு தான் அரிமா நோக்கு. அதாவது சிங்கப் பார்வை! சிங்கம் மட்டுமே நடந்து சென்றுக்கொண்டிருக்கும் பொழுது திரும்பிப் பார்க்கும் குணமுடையது. அதனால் பின்னாலிருந்து அதைத் தாக்க எவரும்

முயன்றால் அந்த முயற்சி கூடத் தோல்வியுறும். அதனாலேயே சிங்கத்தை காட்டுக்கு அரசன் என்கிறோம். அரண்யாவும் அதே போல சண்டையிட்டதால் நாவகனால் தவறான வழிமுறைகளை கையாண்டு கூட அவளைத் தோற்கடிக்க முடியவில்லை.

அப்படிப்பட்ட பெருவீரப் பெண்ணை தோற்கடிக்க இயற்கை நாவகனுக்குத் துணை வந்ததுதான் கொடுமையிலும் பெருங்கொடுமை! ஈருயிராக இருப்பவளுக்குத் திடீரென அடிவயிறும் முதுகுத்தண்டும் பிடித்து இழுக்க ஆரம்பித்தது. முதலில் கண்டுகொள்ளாது இருந்தவள், இருமுறை எம்பிக் குதித்த பிறகு, இடுப்பிலும் கால்களிலும் வலி அதிகமாக அடிவயிற்றின் வலி தாங்காது தள்ளாடினாள் அரண்யா. அதே நேரத்தில் இடுப்பெலும்பு நொறுங்குவதைப் போல மற்றொரு வலியெடுக்க, வலி பொறுக்க முடியாமல் அரண்யா கண்ணை மூடிய வினாடியில் அவளை காட்டுமிராண்டித்தனமாகக் கீழே தள்ளினான் நாவகன்.

எந்தப் பிடிமானமும் இன்றி வலியில் துடித்துக்கொண்டிருந்தவள் பரிதாபமாக குப்புற விழுந்தாள். விழுந்த வேகத்தில் வயிற்றில் அடிபட, அரண்யாவின், "அம்மா!" என்ற கதறல் மதுரை வீதிகளில் எதிரொலித்தது. பனிக்குடம் உடைப்பெடுத்து நீர் பெருக, அதைக் கண்டவர்களுக்கு அடுத்து செய்யவேண்டிய காரியம் புரிந்தது.

பெரிய உயிரின் அவசரத்தை சின்ன உயிர் அறியவில்லை; போரின் அவசியத்தையும் அது உணரவில்லை. அன்னை தந்தையைக் காணும் ஆவலில் குறித்த தேதிக்கு முன்னமே வெளிவரத் துடித்தது அது! பாவம், அதுவும் தான் என்ன செய்யும்? ஓய்வெடுக்க வேண்டிய காலத்தில் குதிரைப்பயணமும் வாள் சண்டையும் என்று அதன் அம்மா ஊருக்காக ஓடினால், குழந்தைக்கும் அந்த அம்மாவை விரைவில் காண வேண்டும் என்கிற ஆவல் வராதா என்ன?

அரண்யாவிற்கு பிரசவம் பார்க்க பல பெண்கள் முன்னால் வர, யாரையும் அனுமதியாது கையில் வாளுடன் நின்றான் நாவகன். பணிப்பெண் மூலமாக அரண்யாவை நாவகன் கொல்லப்போகும் செய்தியறிந்து, அவனுடன் சண்டையிட கூட்டத்தை பிளந்து கொண்டு நவிரனும் சமீரணனும் ஓடி வர, அவசர அவசரமாகக் கீழே பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருந்த அரண்யாவின் கழுத்தில் வாளினால் கோடிட்டு விட்டு, "இந்த நாவலந்தீவு எனக்கு மட்டுமே சொந்தம்!" என்று பைத்தியக்காரனைப்போல கத்திக்கொண்டே கூட்டத்தில் கலந்து மறைந்தான் நாவகன்!

"ஐயோ! இளவரசி!" என்று அருகில் இருந்தவர்களின் ஒப்பாரிக் குரலைக் கேட்ட குவேணிக்கு நிலைமையின் தீவிரம் புரிந்ததும், முண்டியடித்துக் கொண்டு முன்னேறினான். அரண்யாவின் கழுத்திலிருந்து வடிந்த ரத்தத்தையும் நிலை குத்திய அவள் விழிகளையும் பார்த்த நவிரனும் சமீரணனும் நாவகனை கண்டம்துண்டமாக வெட்டிப்போடும் ஆத்திரத்துடன் அவனை தேடித்திரிந்தார்கள்.

'குழந்தை!' என்று சொல்வதற்கு அடையாளமாக வயிற்றை மட்டும் பாதுகாப்பாக மறைத்துக்கொண்டே மாண்டு போனாள் அரண்யா!

அதைப் பார்த்ததும், குழந்தையையாவது உயிருடன் மீட்க வேண்டும் என்ற எண்ணத்தில், அரண்யாவின் வயிற்றைக் கிழித்துக் குழந்தையை வெளியே எடுத்தாள் குவேணி!

வீரனையும் அரண்யாவையும் சரியான விகிதாச்சாரத்தில் கலந்து செய்த சிலை போல அழகிய ஆண் குழந்தை இடி முழக்கமென அழுதுகொண்டே தன் அன்னையைத் தேடியது! ஆனால் பார்த்துப்பார்த்து பூரித்துப் போக வேண்டிய அவன் அன்னை சவமென கீழே கிடக்க, அவன் தந்தை இதயத்திலிருந்து வழியும் உதிரத்தோடு அரண்மனை அந்தப்புரத்தில் கிடந்தான்!

'என் பிள்ளை மண்ணில் கால் பதிக்கும் வேளையில் அவனை ஏந்துவதற்கு என்னவர் என்னருகில் இருக்கவேண்டும்!' என்ற அரண்யாவின் ஆசை நிராசையாகிப் போனது!

பாராட்டிச் சீராட்டி பிறர் கண்படும்படி வளர வேண்டிய நாவலந்தீவின் குட்டி இளவரசன், சிலரின் பேராசைக்கும் பதவி வெறிக்கும் பலியாகி அநாதையானான்!

இதற்கெல்லாம் காரணமான காமரியின் கதி?

## அத்தியாயம் 24

வீரனை வெளியே வர முடியாதபடி அந்த அறையோடு மந்திரத்தால் பிணைத்த காமரி, துரிதமாக அடுத்தகட்ட வேலைகளில் இறங்கினாள். கனலியோடு வேள்வி நடக்குமிடத்திற்குச் சென்றவள், அங்கே சங்கிலியால் சுவரில் கட்டிவைக்கப்பட்டிருந்த வேல்விழியைப் பார்த்து ஏளனமாகப் புன்னகை புரிந்தாள்.

தாயின் அரவணைப்பில்லாமல் வெறும் தரையில் கிடந்தபடியே வேல்விழியின் பச்சிளம் குழந்தை பாலுக்குக் கதறுவதைக்

கண்டு, "இன்னும் சிறிது நேரத்தில் பசி, தாகம், தூக்கம், இன்பம், துன்பம் என்று எதுவுமே உனக்கில்லை!" என்று அதனருகில் சென்று அன்பொழுகக் கூறினாள் காமரி. அவள் பேசிய வார்த்தைகளின் அர்த்தம் புரிந்ததும், வேல்விழியின் விழிகள் அச்சத்தில் அகன்றன.

"காமரி! போதும்! இத்துடன் நிறுத்திக்கொள்! நீ செய்யப்போவது அந்த ஈசனுக்கே அடுக்காது. தயவுசெய்து எங்களை விட்டுவிடு. உன் கண்ணில் படாத இடத்திற்கு நாங்கள் சென்றுவிடுகிறோம்!" என்று கெஞ்சினாள் வேல்விழி.

"என் கண் படாத இடமா? முட்டாளே! அப்படியொரு இடத்தை எங்கே கண்டுபிடிப்பாய்? காற்று வீசும் இடமெல்லாம் இந்தக் காமரியின் கண்பார்வைக்குள் அடக்கம்!" என்று சொல்லிச் சிரித்தாள் காமரி.

"இதற்கு நீ என்னை கொன்றிருக்கலாம்!" என்று வெறுப்புடன் வேல்விழி சொன்னதற்கு, "அதை செய்யத்தான் நானும் ஆசைப்பட்டேன். ஆனால் இதோ என் பக்கத்தில் நிற்கிறாளே... இந்தக் கனலி, இவள்தான் உன் உயிருக்கு எதுவும் நேரக்கூடாதென்று என்னிடம் சத்தியம் வாங்கியிருக்கிறாள். இவளொரு பைத்தியக்காரி! மரணத்தின் சிறப்பை அறியாதவள்!" என்று கூறி வேல்விழியையும் கனலியையும் பார்த்து உச்சுக்கொட்டினாள் காமரி.

"கனலி! நீ இந்தப் பேய்க்கு விசுவாசமாக இருந்தாலும், என் மீது உனக்கு சிறிதளவேனும் அன்பிருக்கிறது என்றே நான் எண்ணுகிறேன்! உன்னைத் தோழியாக நினைத்த உரிமையில் உன்னிடம் மடிப்பிச்சை கேட்கிறேன்! என் மகளைக் காப்பாற்று! உன் கால்களைப் பிடிக்கிறேன்! என் உயிரை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளச் சொல்; தயவு செய்து என் மகளை மட்டும் விட்டுவிடச் சொல்!" என்று வேதனை நிறைந்த விழிகளுடன் கனலியின் முகத்தைப் பார்த்து வேல்விழி முறையிட்டாள்.

ஓர் வினாடிக்கு மேல் அவள் முகத்தைப் பார்க்கும் துணிவு கனலிக்கு வரவில்லை. எங்கே வேல்விழியைப் பார்த்தால் இப்பொழுதே காமரியைக் கொன்றுவிட முயற்சித்துவிடுவோமோ என்ற அச்சம் கனலியின் இதயத்தை நிறைத்தது. காமரி பலவீனமாகும் ஒரே ஒரு நொடிக்காக பல்லைக் கடித்துக்கொண்டு கனலி காத்திருந்தாள்.

பதிலேதும் சொல்லாமல் கனலி தலை குனிந்து நிற்பதைப் பார்த்ததும் காமரியின் செருக்கு அதிகமானது. தனக்கு பயந்துகொண்டுதான் கனலி மௌனித்திருக்கிறாள் என்று தவறாக எண்ணினாள் காமரி. அதுவே அவள் அழிவிற்கு வழிவகுத்தது.

கலரன் வரும்பொழுதே கேட்ட அழுகை ஒலிகள் அவன்

காதுகளில் கிண்கிணி நாதம் போல இனிமையாக ஒலித்தது. "காமரி! அனைத்தும் தயார்!" என்று இளித்துக்கொண்டே கூறினான் கலரன்.

"இவள் சுயநினைவோடு இருந்தால் நமக்கு நட்டம்!" என்று சொன்ன காமரி, வேல்விழியை மூர்ச்சையாக்கினாள். எங்கே வேல்விழி கனலியின் மனதை மாற்றிவிடுவாளோ என்கிற காமரியின் அச்சமே அவளை அவ்வாறு செய்யவைத்தது.

வேல்விழி மயங்கியதும், "சரி! வேலையைத் துவங்குவோம்!" என்று காமரி சொல்ல வேள்விக் குண்டத்தைச் சுற்றி மூவரும் அமர்ந்தனர். வேள்வித்தீயின் மேலே கலரனின் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு அந்தரத்தில் வேல்விழியின் குழந்தை ஊசலாடிக்கொண்டிருந்தது. தீயின் வெம்மை தாங்காமல் குழந்தை வீறிட்டு அழ, அதைப்பார்த்து ஊமையாய் கண்ணீர் விட்டுக் கதறுவதைத் தவிர வேறெதையும் செய்ய கனலியால் இயலவில்லை.

வேள்வியைத் துவங்கும் முன் கலரன் ஏதோ காமரியிடம் கேட்க, காமரியின் கவனம் கலரன் புறம் திரும்பிய அந்த ஒரு நொடியைப் பயன்படுத்தி, வேள்வித்தீ குழந்தையைத் தீண்டாதவாறு பார்த்துக்கொண்டாள் கனலி.

தகிக்கும் தீயிற்கு இணையான கொடும் மந்திரங்களை கலரன் உச்சரிக்க, காமரியும் சரியாக அவற்றைச் சொன்னாள். ஆனால் கனலியோ வேண்டுமென்றே அறியாதவளைப்போல பல பிழைகளைச் செய்து முடிந்தவகையில் பல குளறுபடிகளை செய்யத் துவங்கி, அவ்வப்போது காமரியின் முறைப்பை பரிசாகப் பெற்றுக்கொண்டிருந்தாள்.

கனலி எப்படித் தாமதித்தாலும் ஒரு கட்டத்தில் முதல் நிலை வேள்வி முடிய, கலரன் குழந்தையை உயிருடன் நெருப்பில் போட எழுந்தான். அப்போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த கத்தி ஒன்று கலரனின் கழுத்தில் பாய்ந்து ஒரே வீச்சில் அவனை வீழ்த்தியது.

கலரன் கீழே விழுந்ததும் அதுவரையில் அவன் மந்திர சக்தியினால் மேலே மிதந்துகொண்டிருந்த குழந்தை வேள்வியில் விழப்போக, குறுக்கே பாய்ந்து அதனைத் தாங்கிக்கொண்டு நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள் கனலி.

"காமரி! உன் ஆட்டம் முடிந்தது!" என்று சொல்லிக்கொண்டே துகிரனும் வைனியும் அவ்விடம் வந்தனர்.

அவர்களைப் பார்த்துப் புன்னகைத்த காமரி, "இல்லை! இனி தான் துவங்குகிறது!" என்று சொல்லி கலரனின் கழுத்திலிருந்த

குறுவாளை எடுத்து விட்டு மந்திரத்தை உச்சரிக்க, காமரி திருடிவைத்திருந்த தீசகரின் தவவலிமையும் ஆன்மபலமும் கலரனுக்குள் சென்றது. கழுத்திலிருந்து வழியும் உதிரம் உறைந்துவிட, புத்துயிர் பெற்றவனாகிக் கலரன் எழுந்து நின்றான்!

செத்தவன் உயிரோடு எழுந்து நின்றதைப் பார்த்து அதிரக் கூட அங்கிருந்த மற்றவர்களுக்கு அவகாசம் தராமல் அடுத்தடுத்த அதிர்ச்சிகளை காமரி தயாராக வைத்திருந்தாள். வேல்விழியை எழுப்பி அவளிடம் குழந்தையைத் தந்து விட கனலி எத்தனிக்க, நொடி நேரத்தில் மூச்சு விட முடியாத அளவிற்கு பலப்பல அரூபங்கள் அந்த அறையை நிறைத்தன.

கால்களை நிலத்தில் நன்றாக ஊன்றி, மனதினில் கமலநாதரை நினைத்துக்கொண்டு, "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!!!" என்ற யுத்த முழக்கத்துடன் துகிரன் சூட்சம சக்திகளோடு போராடத் துவங்கினான். அரூபங்கள் வைனியையோ கனலியையோ நெருங்காத வகையில் மந்திர வாளேந்தி கமலநாதரின் சீடன் என்பதை நொடிக்கு ஒருதரம் நிரூபித்தான் துகிரன்.

துகிரன் போரிடுவதைப் பார்த்த கலரன் ஒரு அலட்சியமான புன்னகையுடன் அவனை மேலும் நெருக்க, அதே அலட்சியமான புன்னகையுடன் வைனி துகிரனை மறைத்துக்கொண்டு கையில் வாளுடன் கலரனை எதிர்த்து நின்றாள். "கண்ணே! இது என்ன? கட்டிலில் விளையாடலாம் என்றால் கத்தியோடு விளையாடச் சொல்கிறாயே!" என்று கலரன் சிரிக்க, வைனிக்கு அருவருப்பில் குடலே வெளியே வந்துவிடும் போலிருந்தது.

கலரனின் மட்டமான வார்த்தைகளுக்கு எந்தப் பதிலையும் வாயால் தராமல் நேர்த்தியாக வாள் சுழற்றினாள் வைனி. ஆனால் வாள்வீச்சில் வல்லவனான கலரன், அட்டைக்கத்தியை வைத்திருக்கும் ஒரு சிறு குழந்தையின் விளையாட்டைப் போலவே வைனியின் தாக்குதல்களை எல்லாம் லகுவாக சமாளித்தான்.

துகிரனும் வைனியும் எதிராளியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு போரிட, கையில் குழந்தையோடு நின்ற கனலியைப் பார்த்துக் கேள்வியாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தினாள் காமரி! கழுத்து கூட இன்னும் சரியாக நிற்காத பச்சைக்குழந்தையை வைத்துக்கொண்டு எப்படிப் போரிடுவது என்று தவித்த கனலி, ஒரு நெடிய மூச்சுடன் ஈசனின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, அவள் நின்ற இடத்திற்கு அருகில், ஒரு ஓரமாக குழந்தையைக் கிடத்தி, குழந்தையின் உயிர்

காக்கும் கவசம் ஒன்றினைப் போட்டாள்.

பின் ஒரு முடிவோடு கனலி காமரியை எதிர்த்து நிற்க, காமரியின் கண்கள் வியப்பில் விரிந்தன. "துரோகி! என்னையே எதிர்க்கத் துணிந்துவிட்டாயா? உன்னை என் கையால் கொன்றால் தான் எனக்கு நிம்மதி!" என்று சொல்லியபடியே கனலியை நோக்கி வாள் வீசினாள் காமரி.

"என் பெற்றோரை வேண்டுமானால் உன் தந்தை கொன்றிருக்கலாம். ஆனால் என்னைக் கொல்லும் வலிமை உனக்கில்லை!" என்று சொல்லி காமரியின் தாக்குதல்களைத் தடுத்து வாள் சுழற்றினாள் கனலி.

கனலி கூறியதைக் கேட்ட காமரி ஒரு கணம் திகைக்க, "என்ன விழிக்கிறாய்? உண்மை தெரிந்துவிட்டதே என்றதாலா? அல்லது உன் அழிவு என் கையால் என்று புரிந்ததாலா?" என்று கேட்டு காமரியை ஏளனமாகப் பார்த்தாள் கனலி.

"யார் அழிவு யார் கையில் என்பதை முடிவு செய்பவள் நான்!" என்று சொல்லி ஆக்ரோஷமாக கனலியின் கழுத்தைக் குறிவைத்தாள் காமரி. அவள் தாக்குதல்களை எல்லாம் கனலி அனாயாசமாகத் தடுக்க, காமரிக்கு அதிசயமாக இருந்தது. காரணம், இதுவரையில் கனலியுடன் அவள் செய்திருந்த சமர்களிலெல்லாம் காமரியே வென்றிருந்தாள். ஆனால் இப்போது கனலி வாள் சுழற்றும் தினுசே வித்தியாசமாகவும் நேர்த்தியாகவும் இருக்க, காமரி குழம்பினாள்.

"மறுபடியும் என்ன? நான் எப்படி வாள்வீச்சில் சிறந்து விளங்குகின்றேன் என்று பார்க்கிறாயா?" என்று கனலி கேட்க, காமரி அமைதியாக அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"'காமரியை எப்போதும் நீ வெல்ல வைக்கவேண்டும். நீ சின்னப்பெண் தானே? அதனால் நீதான் எப்போதும் விட்டுத்தர வேண்டும்!' இப்படிச் சொல்லித்தான் உன் தந்தை என்னை வளர்த்தான். அதனால் மட்டுமே இதுவரையில் நீயே வென்றாய். பிறரை வருத்தியே மகிழும் உன் வாழ்வில் இனி வெற்றி என்பதே கிடையாது! அதை உறுதி செய்வதே என் வாழ்நாள் பணி!" என்று விழிகள் தெறிக்கும் அளவிற்கு உறுத்து விழித்த கனலி, காமரியின் கையைக் காயப்படுத்தினாள்.

"கனலி, இது உனக்கு நல்லதில்லை!" என்று குரல் நடுங்கச் சொன்னாள் காமரி. நிமிடத்தில் வென்று பழகியிருந்தவளுக்கு இப்போது மெல்லத் தோல்வி பயம் எழுந்தது. அதனால் யட்சிணிகளை கனலியின் மீது ஏவினாள்.

இதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்த கனலி, "கடைசியில் நீயும் கோழையாகிப் போனாயே காமரி! என்னை நேருக்கு நேர் போரிட்டு வெற்றிகொள்ளத் திராணியில்லாது கடைசியில் யட்சிணிகளை ஏவுகிறாயே!" என்று காமரியைப் பார்த்து போலிப் பரிதாபத்துடன் உச்சுக்கொட்டினாள் கனலி. அடிபட்ட பாம்பாக சீறிக்கொண்டிருந்த காமரிக்கு இது மேலும் அவமானத்தைத் தந்தது. தான் பலவீனமாவதை உணர்ந்தால் மறுநொடியே அத்தனை பைசாசங்களும் தன் மீதே திரும்பும் என்பதை அறிந்தேதான் கனலி இவ்வாறெல்லாம் பேசுகிறாள் என்று புரிந்ததும், யட்சிணிகளைத் தடுத்துத் தானே மீண்டும் களமிறங்கினாள் காமரி.

"உன் மரணசாசனத்தை எழுதிக் கைச்சாந்திடும் நேரம் இது! குறித்துவைத்துக்கொள்!" என்று ஆணவத்துடன் சொன்ன காமரி, சுற்றுப்புறம் மறந்து கனலியோடு பெரும்போர் புரிந்தாள். அவள் உக்கிரத்திற்கு சற்றும் குறையாமல் கனலியும் சண்டையிட்டாள்.

வாட்கள் மோதும் ஒலிகளுக்கு நிகராக பலவித பைசாங்கங்களின் மரண ஓலமும் அந்த அறையை நிறைக்க, வெளியில் இருந்தவர்களின் நெஞ்சமெல்லாம் கிலி கொண்டது. அந்த அறைக்கதவுகள் அனைத்தும் தானாக மூடிக்கொள்ள, அறையின் சாளரத்தின் வழியே ஒரு தேன் சிட்டு உள்ளே வந்து அங்கு நடப்பவற்றை கூர்ந்து கவனிக்கத் துவங்கியது. சண்டையின் மும்முரத்தில் ஒரு சிறு பறவையை யாருமே கவனிக்கவில்லை. அதனால் அதன் வரவிற்குப் பிறகு துகிரனின் வலிமை பன்மடங்காகப் பெருகியதையும் யாரும் உணரவில்லை, துகிரன் உட்பட! எவருக்குமே எளிதில் கைவரப்பெறாத பவித்ரகலயம், துகிரனின் கைகளில் தஞ்சம் புகுந்தது.

ஒரு கையில் மந்திரவாளேந்தி மற்றொரு கையில் அந்த மண் கலயத்தை சுமந்து தேவையான மந்திரங்களை துகிரன் தெளிவாக உச்சரிக்க, நொடியில் அந்த இடத்திலிருந்த அத்தனை அரூபங்களும் காணாமல் போயின! உடனே வேறு சில சூட்சம சக்திகளைத் தருவிக்க காமரி முயன்ற போது, அவளது எண்ணம் ஈடேறாதவாறு கனலி பார்த்துக்கொண்டாள். அதுமட்டுமின்றி அந்த அறையைச் சுற்றிலும் பாதுகாப்பு வளையங்களை பலப்படுத்தியிருந்தான் துகிரன். அவனுக்கு பக்கபலமாக கமலநாதரின் தவவலிமையும் சேர்ந்துகொள்ள, வாழ்வில் முதன்முறையாக காமரியின் கை தாழ்ந்திருந்தது. ஆனால் ஆணவத்தின் உச்சியிலிருந்த காமரி இது எதையுமே கண்டுகொள்ளும் மனநிலையில் இல்லை!

காமரியின் உடல் பலவீனமாக ஆரம்பித்ததும், வீரனின் கட்டுக்கள் லேசாகத் தளரத் துவங்கின. காமரி வீரனைக் கட்டிய நொடியிலிருந்து அவள் பிடியை விட்டு விலகுவதற்கே அவன் முயன்றுகொண்டிருந்தான். அரண்யாவின் வருகை அவனுக்குத் தேவையான ஊக்கத்தை அளித்தது. அதுவரையில் அவன் கற்றறிந்திருந்த பல மந்திரதந்திரங்களையும் கையாண்டவனுக்குக் கடைசியில் வெற்றி கிடைக்க, அவனுக்குக் காவலிருந்த பலவகை அரூபங்களும் காமரியிடம் செய்தி சொல்ல பறந்தோடின. ஆனால் அவைகளால் காமரி இருக்கும் அறைக்குள் செல்ல முடியாது போனது!

தன் கண்முன்னே எதிரிகள் எவர் வந்தாலும் வீழ்த்தும் நோக்குடன் கூர்மையான விழிகளை நாலாபக்கமும் சுழற்றிக்கொண்டே முன்னேறினான் வீரன். இந்திர ரகசியத்தை காமரி கவர்ந்த செய்தியை அறிந்தவனுக்கு அது தனக்காகவே காத்திருக்கிறது என்றும் புரிந்தது.

இந்திர ரகசியத்தை ஒரு முறை அவன் மனதினில் நினைக்க, கண்களுக்குப் புலப்படாத மாயக் கயிறொன்று வீரனை ரகசியத்தின்பால் இழுத்தது. மனம் சொன்ன திக்கில் சென்றவன் வேல்விழியை அடைத்து வைத்திருந்த அறைக்குப் பக்கவாட்டு அறையில் போய் நின்றான். அங்கே காவலுக்கிருந்திருந்த பாலை வீரர்கள், உள்ளே நிகழ்ந்த மாயப்போரையும் வாட்போரையும் பார்த்த மாத்திரத்திலேயே பயங்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கியிருந்தார்கள். அதனால் இந்திர ரகசியமும் காவலுக்கு ஆட்களின்றி வீரனுக்காக காத்திருந்தது. மனம் முழுக்க இந்திர ரகசியமே வியாபித்திருக்க, அடுத்த அறையில் நடந்துகொண்டிருக்கும் உயிர்ப்போராட்டம் எதுவுமே அவன் மனதிற்கு எட்டவில்லை.

கதவைத்திறந்து உள்ளே சென்றவனை இருகை விரித்து வரவேற்றது இந்திர ரகசியம். வீரனின் இதயத்துடிப்பைக் கேட்டதும் மெல்ல ஒளிவீசிய இந்திர ரகசியம் ஏதோ அசம்பாவிதம் நிகழவிருக்கிறது என்பதை அவனுக்கு உணர்த்த அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தது. உறுதியான காலடிகளுடன் அவன் உள்ளே செல்ல, இந்திரரகசியத்தின் ஒளியும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

இன்னும் ஒரு எட்டு...

ஒரே எட்டில் இந்திரரகசியத்தைத் தொட்டுவிடுவான் வீரன்!

இந்திர ரகசியம் மறுபடியும் அவன் கைக்குள் வந்துவிட்டால், கீழே அரண்யாவிற்கும் நாவகனுக்கும் நடந்து கொண்டிருக்கும் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்; காமரியின் கொட்டத்தை அடக்கி அவளை முற்றாக அழித்துவிடலாம்!

வீரன் எடுத்து வைக்கும் அடுத்த அடியில்தான் அரண்யாவின் விதி இருந்தது!

இதோ... வீரன் கால்களை நகர்த்துகிறான்!

வலது கையை நீட்டுகிறான்...

வீரனின் விரல் நுனிக்கும் இந்திரரகசியத்திற்கும் அரை அங்குலமே இடைவெளி இருக்க, வீரனின் விலாவில் பாய்ந்து அவன் நுரையீரலைத் துளைத்தது ஒரு வேல்!

"அரண்யா!" என்று கத்தியவன் பின்னால் திரும்பித் தன்னைத் தாக்கியவன் யாரெனப் பார்க்க, மங்கலாக ஆரன் தெரிந்தான்.

"அண்ணா..?" என்று பரிதாபமாகக் கேட்டவனின் வாயிலிருந்து உதிரம் வழிந்ததும், அப்படியே தரையில் சரிந்து அமர்ந்தான் ஆரன்.

வீரனின் இதயத்திற்கு குறிவைத்திருந்தால், இதயத்தில் இறங்கி நொடியில் உயிர் குடித்திருக்க வேண்டிய வேல் அவன் நுரையீரலைப் பதம் பார்த்த காரணத்தால் கொடுமையான ஒரு மரணத்தை அவனுக்கு வழங்கிக்கொண்டிருந்தது.

நுரையீரல் முழுக்க குருதி நிறைந்து ஒவ்வொரு முறை மூச்செடுக்கும் போதும் மரணவேதனையில் துடிக்கும் தம்பியைப் பார்த்த ஆரனின் முகம் அப்பட்டமான அதிர்ச்சியை வெளிப்படுத்தியது, "ஐயோ! என்ன காரியம் செய்துவிட்டேன்! ஆத்திரத்தில் அறிவிழந்தேனே!" என்று மண்டியிட்டபடியே சென்று கீழே கிடந்த வீரனை மடியில் கிடத்திக்கொண்டு ஆரன் கதறினான்.

வீரன் கட்டுக்களைத் தளர்த்தி வெளியே வந்துவிட்டால்கூட அவனை மற்றவர் எளிதில் நம்பக்கூடாது என்று முடிவு செய்திருந்த காமரி, சில மருந்து மாயங்களின் உதவியினால் அவன் உருவத்தை நாவகனைப்போல மாற்றியிருந்தாள். போரில் அரண்யா வெற்றி பெற்றால் கூட நாவகனின் உருவிலிருக்கும் வீரனோடு அவளால் எப்படி வாழ முடியும் என்கிற காமரியின் குரூர புத்தியே அவளுக்கு அந்த யோசனையைத் தந்திருந்தது. அவள் விரும்பிய முகத்தை விரும்பிய நேரத்தில் பார்க்கும் வல்லமை அவளுக்கு இருந்ததால் மற்றவர் கண்களுக்கு வீரன் நாவகனைப் போல காட்சியளிப்பதில் எந்தச் சிக்கலுமிருப்பதாக காமரிக்குத் தோன்றவில்லை.

விடுபட்ட பிறகு கண்ணாடியில் தன் பிம்பத்தை பார்க்கும் வாய்ப்பில்லாத வீரனுக்கு இந்த விஷயம் தெரியாமலேயே போனது தான் விதியின் சதி. தூரத்திலிருந்து நாவகன் உருவத்திலிருந்த வீரனைப்

பார்த்த ஆரனுக்குள் கோபத்தீ கொளுந்துவிட்டெரிய, அவனைப் பின்தொடர்ந்திருந்தான். இந்திர ரகசியத்தை பத்திரப்படுத்தியிருக்கும் அறைக்குள் எந்தவொரு எதிர்ப்பும் இன்றி அவன் சென்றதும், நாவகன் தான் இந்திர ரகசியத்தை களவாடச் செல்கிறான் என்று தவறாக நினைத்துவிட்டான் ஆரன்.

இந்திர ரகசியத்தை மீட்டு எப்படியாவது வீரனின் கையில் சேர்க்க வேண்டுமென நொடியில் முடிவு செய்த ஆரன், கையிலிருந்த வேலை முன்னின்றவனின் விலாவை நோக்கி எறிந்தான். எல்லாத் தீமைக்கும் மூலகாரணமாக விளங்கும் நாவகன் சுலபத்தில் சாகாமல் துடித்துத் துடித்து சாக வேண்டும் என்றெண்ணியே அவன் நுரையீரலைக் குறிவைத்தான் ஆரன்.

உயிர் போகப்போகிற நொடியில் கூட அரண்யாவின் பெயரை உச்சரித்து, ஆரனைப் பார்த்துக் குழம்பி, "அண்ணா!" என்று வீரன் அழைக்கவும்தான் காமரியின் சதி புரிந்தது ஆரனுக்கு. செய்த பிழை ஆரனின் கண்முன்னே விஸ்வரூபம் எடுக்க, செய்வதறியாது வீரனை மடியில் போட்டுக்கொண்டு ஒப்பாரி வைத்தான்.

அவன் அழுகை அவன் மூளையைத் திருக, இந்திரரகசியத்தின் சக்திகளைப் பற்றி வீரன் சொன்னது நினைவுக்கு வந்தது. "உனக்கு ஒன்றும் நேராது! இந்திரரகசியத்தை எடுத்துத் தருகிறேன்! உன் உயிரைக் காத்துவிடலாம்!" என்று அவசரகதியில் எழப் போனவனின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான் வீரன்.

"சத்தியம்... சத்தியம் செய்திருக்கிறேன்!" என்று திணறியபடியே சொன்னவனின் முகத்தில் அறைய வேண்டும் போலிருந்தது ஆரனுக்கு.

"முட்டாள்!" என்று வீரனின் தோள் பற்றி ஆரன் திட்டினான்.

ஆரனின் அன்பு புரிய புன்னகைத்தவன், "அரண்யா... குழந்தை... பத்திரம்!" என்ற மூன்று வார்த்தைகளை மட்டும் முனகிவிட்டு அவ்விடத்திலேயே மரணித்தான். சடலமானதும் வீரனின் உண்மை உருவம் வெளிப்பட, நெஞ்சிலடித்துக்கொண்டு ஆரன் அழுதான். ஆனால் எவ்வளவு அழுதாலும் மாண்டவன் மீண்டு வரப்போகிறானா என்ன?

கண்கள் நிலைகுத்த முகத்தில் புன்னகையுடன் அப்படியே உறைந்து போனான் வீரன். அதே நேரத்தில் அரண்மனைத் திடலில் பிள்ளையை ஈனும் முன்பே அரண்யாவும் இறந்து போனாள். வாழும் காலம் முழுக்க இணை பிரியாமல் கூடவருவேன் என்று ஒருவருக்கொருவர் அவர்கள் கொடுத்த வாக்கு மரணத்தருவாயிலும்

நிறைவேறிற்று!

திக்பிரம்மை பிடித்தவனைப் போல ஆரன் அமர்ந்திருந்தது சில வினாடிகளே! பக்கத்து அறையிலிருந்து கேட்ட வாட்களின் ஒலிகளும் காமரியின் பேச்சுக் குரல்களும் ஆரனுக்குள் ரௌத்திரத்தை அதிகரிக்க, வீறு கொண்டு எழுந்தான். தன் கையாலேயே தன் தம்பியைக் கொல்ல வைத்த கிராதகியை கண்டம்துண்டமாக வெட்டிப் போடவேண்டுமென்று சூளுரைத்தவன் பக்கவாட்டுக் கதவை எட்டி உதைத்தான்.

ஆரன் உள்ளே நுழையும் போது, துகிரன் வேல்விழியைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அகற்றிக்கொண்டிருந்தான். வைனியோ கலரனை வீழ்த்துவதற்கு மிகவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தாள். கனலி காமரியை வெற்றி கொள்வதில் முனைப்பாக ஈடுபட்டிருந்தாள். காமரியும் சளைக்காமல் போரிட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் வெற்றி அவள் கைநழுவிப் போகிறதோ என்கிற பயம் காமரியின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

வேல்விழியின் மயக்கத்தைத் தெளிவிக்க முடியாது துகிரன் தடுமாற, விரைந்து சென்று அவனுக்கு உதவாது, எதற்கு இங்கே வந்தோம் என்பதே மறந்து, திக்பிரம்மை பிடித்தவனைப்போலவே நின்றான் ஆரன். அப்போது அவன் பக்கத்தில் குழந்தையின் குரலொன்று கேட்க, முதன்முறையாகப் பார்க்கும் மகளை இமைக்க மறந்து ரசித்தான் ஆரன். அவளது திராட்சை விழிகளும் செப்பு வாயும் விண்ணிலிருந்து இறங்கி வந்த தேவதை போலவே தெரிய, இதே போன்ற இன்னொரு குழந்தையை சற்றுமுன்பு தகப்பனில்லாமல் வளரும் நிலைக்குத் தள்ளியதை நினைத்து வேதனையின் விளிம்பிற்கே சென்றான் ஆரன். நடக்கும் எதையும் கண்ணால் கூடக்கானாது, "தவறு செய்துவிட்டேன்! தவறு செய்துவிட்டேன்!" என்று புலம்பியபடி அங்கேயே அமர்ந்துவிட்டான். அவன் செயல்கள் வித்தியாசமாகப் பட்டாலும் அதைக் கண்டுகொள்ளும் நிலையில் எவருமில்லை.

வேல்விழியை கவனித்துக் கொண்டிருந்தாலும் துகிரனின் மனமெல்லாம் வைனியைச் சுற்றியே இருந்தது. கலரனை அவள் கைகளால் கொன்றால்தான் வைனியின் மனம் நிம்மதியுறும் என்று அறிந்ததனால், அவளைக் காயப்படுத்தியவனைப் பழிவாங்கவேண்டும் என்று நினைத்தாலும், வைனியே அதைச் செய்யட்டுமென்று பொறுமையோடு காத்திருந்தான் துகிரன். தேவைப்பட்டால் உடனடியாக அவளுக்கு உதவும் நோக்குடன் பார்த்துக்கொண்டிருந்தவன் ஒரு கண்ணை சூட்சம சக்திகளின் வருகை

மீதும் வைத்திருந்தான்.

சூட்சம சக்திகளையும் கெடுமதியையுமே மூலதனமாக வைத்துச் செயல்பட்டவளுக்கு, அவளுக்கு நிகரான திறமையுடன் வாள்வீசும் கனலியைக் கண்டதும் இதயம் மெல்ல பயம்கொள்ள ஆரம்பித்தது. அவளது பயத்தை அதிகரிப்பதைப்போலவே வைனி திடீர் திருப்பமாக கலரனை வெற்றிகொண்டாள்.

கலரனின் முரட்டுத்தனத்திற்கு ஈடாக வைனியின் வேகம் அமைந்தது. ஒரு கட்டத்தில், வைனியின் கையைப் பிடித்து சட்டென இழுத்தவனின் கால்களை லாவகமாகத் தட்டிவிட்டு அவனை கீழே சாய்த்தவள், சற்றும் யோசியாமல் அவன் இரு கண்களிலும் இரு வாட்களை இறக்கிவிட்டாள்.

"இனி, பெண்களைத் தவறாகப் பார்ப்பாயா? சொல்! பார்ப்பாயா?" என்று ஆத்திரம் தீர அவன் உடலை வெட்டினாள் வைனி. 'ஓர் சிறுபெண்ணா என்னை வெற்றி கொண்டாள்?' என்கிற நம்பாத பார்வையுடனேயே கலரன் இறந்து போனான்.

இறந்தவனை மீண்டும் உயிர்ப்பிக்க காமரி முயன்ற பொழுது, மந்திரத்தால் அவள் வாயைக் கட்டினாள் கனலி. விழிகள் தெறிக்க உறுத்து விழித்தவளின் பார்வையை சுலபமாகத் தாங்கினாள் கனலி.

"நீ தோற்றுவிட்டாய் காமரி!" என்று கனலி சொல்ல, தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தாள் காமரி.

வேல்விழியை பத்திரமாகக் கிடத்திவிட்டு, துகிரன் காமரியின் உயிரெடுக்க அவளை நெருங்க, இனியும் தாமதித்தல் மதியீனம் என்று நினைத்த காமரி, அவள் வலிமையை எல்லாம் ஒன்றுதிரட்டி ஒரே நேரத்தில் அவர்கள் அனைவரின் மீதும் மந்திரங்களை ஏவினாள். மந்திரம் தீண்டிய மறுநொடி மின்சாரம் பாய்ந்ததைப் போல அனைவரின் உடலும் உதறலெடுக்கத் துவங்கியது. அதுவரையில் எந்த சூட்சம சக்திகளையும் உள்ளே வரவிடாது செய்த கமலநாதரின் சக்திகள் கூட காமரியின் சக்திக்கு முன் எடுபடாமல் போயின!

எல்லோர் முகங்களும் வலியில் கோண, அதைப் பார்த்து ரசித்தபடியே, " நானும் நேர் வழியில் செல்லலாம் என்று தான் நினைத்தேன்! ஆனால் அப்படிச் செய்தால், நானெப்படி காமரியாக இருக்கமுடியும்?" என்று சொல்லிச் சிரித்தாள். அவர்கள் அனைவரின் உடல்களிலும் மெல்ல மெல்ல மின்சாரத்தை பாய்ச்சிக்கொண்டேயிருந்தாள் காமரி. ஆனால் எத்துணை வேதனையில் உடல் நொந்தாலும் ஒரு சிறு முனகல் சத்தம் கூட அவர்களிடமிருந்து வெளிவரவில்லை.

"ஓ! தைரியமாக இருப்பதாக காட்டிக்கொள்ள முனைகிறீர்களா? முட்டாள்களே! உங்களை அவ்வளவு சீக்கிரத்திலா சாகடிப்பேன்? இந்திர ரகசியம் என் வசமானதும் இந்த நாவலந்தீவையே நான் படாதபாடு படுத்துவதை நீங்கள் கண்ணாரக்காண வேண்டாமா? உயிரோடிருக்கும் ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு நரக வேதனையைத் தராது, அவ்வளவு எளிதில் உங்களை எல்லாம் எப்படிக் கொல்வேன்? இந்த முறைப்பு விறைப்பெல்லாம் வந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும் நேரம் நெருங்கிவிட்டது!" எனச் சொல்லி, மீண்டும் ஓர் மந்திரத்தை ஏவி அனைவரையும் வலியில் துடிக்க வைத்தவளின் முன்பு தட்டுத்தடுமாறி எழுந்து, தைரியமாக நின்றான் ஆரன்.

வீரனின் குருதியில் நனைந்திருந்த ஆரனை விசித்திரமாகப் பார்த்தாள் காமரி. அப்போது தான் மற்றவர்களும் ஆரனை நன்றாகப் பார்த்தார்கள். 'ஆரனின் உடலில் காயங்கள் இல்லை. ஆனால் இவ்வளவு ரத்தம் படிந்திருக்கிறதே... அது யாருடையது?' என்ற கேள்வி எல்லோர் உள்ளத்திலும் உதித்தது.

"என் தம்பியை என் கைகளாலேயே கொல்ல வைத்துவிட்டாயே பாவி!" என்று மற்றவர் மனங்களில் இருந்த கேள்விக்கு விடை சொல்லி காமரியின் கழுத்தை நெறிக்க ஆரன் முயல, "என்ன உளறுகிறாய்?" என்று காமரியும், "வீரனுக்கு என்னவாயிற்று?" என்று மற்றவரும் பதறினார்கள்.

"ஆமாம்! நாவகன் என நினைத்து வீரனைக் கொன்றுவிட்டேன்! சந்தேகமிருப்பின் அடுத்த அறையில் பார்! அவன் சடலமாக இருப்பது தெரியும்! இனி நீ என்ன முயன்றாலும் இந்திர ரகசியம் உன் கைகளுக்குள் சிக்கவே சிக்காது!" என்று அழுதுகொண்டிருந்தவன் திடீரென பித்தனைப்போலச் சிரித்தான்.

ஆரன் கூறியதைக் கேட்டவளின் கைகள் நடுங்கின. நடுங்கும் கைகளால் ஆரனின் கழுத்தைப் பிடித்தவள், "அப்படி மட்டும் ஏதாவது ஆகி இருந்தால், உன் மனைவி மகளின் நிலை என்னாகுமோ என்று நினைத்து நினைத்து இந்த நொடியிலிருந்து வேதனைப் படத் துவங்கு!" என்று உறுமிவிட்டு வெளியேறினாள். அவளைத் தொடர்ந்து துகிரன், வைனி மற்றும் கனலி சென்றனர்.

பக்கவாட்டு அறையில் ரத்தவெள்ளத்தில் கிடந்த வீரனைப் பார்த்ததும், அவள் இதயத்தில் யாரோ பாறாங்கல்லை வைத்து அழுத்தினாற்போல உணர்ந்தாள் காமரி. அருகில் சென்று அவன் முகத்தைத் தொட்டவளுக்கு இழப்பின் வலி முதல்முறையாகத் தெரிந்தது. அவள் தந்தை மகிந்தன் இறந்தபோது கூடத் துடிக்காத

கண்கள், இப்போது குளமாயின.

"வீரா!" என்று அடிவயிற்றிலிருந்து அலறினாள் காமரி. அவள் குரலிலிருந்த ஏக்கம் காதல் ஆற்றாமை துக்கம் போன்ற உணர்வுகளை நம்பமுடியாது திகைத்தனர் துகிரனும் வைனியும். ஏற்கனவே கனலிக்கு காமரியின் காதல் தெரிந்திருந்தாலும், அவள் நேசத்தின் ஆழத்தை இன்று தான் நேரில் பார்த்தாள் கனலி. இந்த உலகத்திலேயே காமரிக்கு உண்மை அன்பு உண்டெனில் அது வீரனின் மீது மட்டுமே என்று தெரிந்துகொண்ட கனலி, காமரியை வீழ்த்திட இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று புரிந்துகொண்டாள்.

கலரனைப் போல வீரனையும் உயிர்ப்பிக்க காமரியால் முடியுமா என்ற கேள்வி எழுந்தாலும், அவள் சுதாரிப்பதற்கான அவகாசத்தைத் தரக்கூடாது என்று முடிவு செய்த கனலி, சற்றும் சிந்திக்காமல் காமரியின் தலையைத் துண்டித்தாள்.

"எதற்காக அவளை இத்தனை எளிதாகக் கொன்றாய்?" என்று துகிரன் கோபத்தோடு குறைபட, "அவள் இறந்துவிட்டாள். அதுவே போதும்!" என்று வைனி பெருமூச்சொரிந்துவிட்டுச் சொன்னாள். முழு சக்தியையும் காமரி பிரயோகிக்கத் தொடங்கினால் எவராலும் அவளை நெருங்க முடியாது என்பது அங்கிருந்த அனைவருக்குமே உரைத்தது. அதன்பின்னரே வீரன் இறந்துவிட்டான் என்கிற உண்மை அவர்களைச் சுட்டது!

"உனக்கென்னடா அவ்வளவு அவசரம்?" என்று காமரியின் உடலை நகர்த்திவிட்டு வீரனின் உடலைக் கட்டிக்கொண்டு அழுது தீர்த்தான் துகிரன். அந்த நேரத்தில் சரியாக நவிரனும் அங்கு வர, வீரனின் உடலைப் பார்த்தவனின் உயிர் ஒருமுறை அவன் உடலை விட்டு நீங்கித் திரும்பியது.

"எப்படி அரண்யாவிடம் இதைச் சொல்வது?" என்று கலங்கிய கண்களுடன் கேட்ட வைனிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அழுதான் நவிரன்.

"நாவகன் இறந்துவிட்டானா?" என்று கனலி கேட்டதற்கும் மௌனத்தையே பதிலாகத் தந்தான் நவிரன்.

"என்னவாயிற்று? சொல்!" என்று வைனி குரல் உயர்த்தினாள்.

"நாவகன்... நாவகன் அரண்யாவைக் கொன்றுவிட்டான்." என்று முயன்று வரவழைக்கப்பட்ட உறுதியுடன் சொன்னான் நவிரன்.

"இருக்காது! நிச்சயம் இருக்காது!" என்று சொன்ன வைனி அப்படியே மயங்கிச் சரிந்தாள். அவளைத் தாங்கிய கனலி தண்ணீர்

வரவழைத்து அவள் மூர்ச்சையைத் தெளிவித்தாள்.

"உடல்கள் இரண்டானாலும் எங்கள் உயிர் ஒன்று தான் என்பாயே வீரா! அதனாலேயே இருவரும் ஒன்றாகவே எங்களை விட்டுச் சென்றுவிட்டீர்களா?" என்று விண்ணைப் பார்த்துக் கதறி அழும் துகிரனையும் வைனியையும் எப்படி சமாதானப்படுத்துவது என்றே கனலிக்கும் நவிரனுக்கும் தெரியாமல் போனது.

வைனி அளவிற்கு கனலிக்கு இவர்களின் மரணம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றாலும், துகிரனின் துக்கம் அவளை வெகுவாக பாதித்தது. விழி நீரைச் சுண்டியவள், என்னவாயிற்று என்பதை நவிரனிடம் விசாரித்து அறிந்துகொண்டாள்.

"சதிகாரன் நாவகன் இப்போது எங்கே?" என்று கேட்டாள் கனலி. அவனையும் கொன்றால் தான் மொத்தப் பிரச்சனையும் தீருமென்று அவளுக்குத் தெரியும்.

"சமீரணனும் நானும் அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தோம். ஆனால் அவன் எங்கோ மறைந்துவிட்டான். இருவரும் இருவேறு பாதைகளில் சென்று அவனை தேட முடிவு செய்தோம். என் பாதை இங்கே முடிந்தது!" என்று சோகமாகச் சொன்னான் நவிரன். ஒரே நாளில் அரண்யாவையும் வீரனையும் இழந்ததை அவனால் செரிக்கவே முடியவில்லை. காமரியின் மரணத்தைக்கூட அவன் மூளை பதிவு செய்ய மறுத்தது.

அப்போது, "பார்த்தீர்களா? என் வீரனைப் பார்த்தீர்களா? என் சகோதரனை நானே கொன்று பெரும்பாவம் புரிந்துவிட்டேன்! நான் வாழ்வதே பாவம்!" என்று எங்கோ வெறித்த பார்வையுடன் ஏதேதோ உளறிக்கொண்டே வந்தான் ஆரன்.

நவிரன் அவனை சமாதானப்படுத்த முயல, "ஆமாம்! என் வீரனைக்கொன்று நீ பெரும்பாவம் புரிந்து விட்டாய்!" என்று காமரியின் குரல் வெஞ்சினத்தோடு கேட்டது!

செத்தவள் மீண்டும் எப்படி வந்தாள்?

## அத்தியாயம் 25

சமரில் அரண்யா ஏற்படுத்தியிருந்த பல காயங்களின் வலியைத் தாங்கமுடியாமல் தாங்கிக்கொண்டு இருள் படிந்த ஏதோவொரு மூலையில் சுருண்டிருந்தான் நாவகன். அவன் அரண்யாவைக் கொன்றதையோ அன்றிக் கொன்ற விதத்தையோ அவர்கள் சண்டையை

பார்த்துக்கொண்டிருந்த எவராலும் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. நவிரனும் சமீரணனும் நாவகனைத் துரத்திக்கொண்டு செல்ல, உயிரோடிருக்கத் தகுதியில்லாதவன் என்று மக்களும் சினத்துடன் நாவகனைத் தேட ஆரம்பித்தனர். பேரரசர் வீய பாண்டியன் இறந்தது முதலே தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு மூலக்காரணமான காமரியை விடத் தங்களை பாதுகாக்கத் தவறிய துரோகி நாவகனின் மீதே அவர்களுக்கு ஆறாத சினமிருந்தது.

அரண்மனையின் ரகசிய வழிகளை அறியாத நவிரனையும் சமீரணனையும் சுலபமாக ஏமாற்றிய நாவகனுக்கு அரண்யாவின் பக்கம் சாய்ந்துவிட்ட படை வீரர்களையும் அதிகாரிகளையும் சமாளிப்பது அத்தனை எளிதாக இல்லை. போதாக்குறைக்கு பொதுமக்களும் அரண்மனையினுள்ளே புகுந்து நாவகனைத் தேடத்துவங்க, எவர் கண்ணிலும் அகப்படாது தப்பிப்பதே அவனுக்குப் பெரும்சிரமமாகிப் போனது. எப்படியும் மக்களின் கிளர்ச்சி காமரிக்குத் தெரிந்ததும் அவர்களை அடக்கி ஒடுக்கி விட்டு தன்னை மீட்டுவிடுவாள் என்று மலை போன்ற நம்பிக்கையுடன் ஒளிந்திருந்தான் நாவகன்.

பாவம் அவனுக்கு காமரி இறந்த செய்தி இன்னும் தெரியாது. எப்படியும் அவள் வந்து அவனை மீட்பாள் என்கிற நப்பாசையில் கிடந்தான். ஆனால் நேரம் செல்லச்செல்ல உயிர்ப்பயம் தலைதூக்க, ஒவ்வொரு நொடியும் மரணத்தை எதிர்பார்த்து அச்சத்தில் அவன் இருதயம் படபடத்தது. காமரி ஏன் இன்னும் தன்னைத்தேடி வரவில்லை? என்கிற கேள்வி அவன் மனதினில் பூதாகாரமாகி அவனுக்கு உடல் நடுங்கியது. அப்போது அவனே எதிர்பார்க்காத விதத்தில் காமரி அவனுக்கு முன் தோன்றினாள்.

பட்டு மேனி என்று எதை நினைத்திருந்தானோ அந்த உடல் இழந்து, அவனைப் பித்தம் கொள்ளச் செய்யும் மோகனப் புன்னகை அழிந்து, அரூபங்களின் அரசியாகத் தன் கண்முன்னே கரும்புகையாய் தோன்றியவளைப் பார்த்து ஒருகணம் மூச்சடைத்துப் போனான் நாவகன்.

இது காமரியா இல்லை கற்பனையா என்று புரியாமல் விழித்தான்.

"பைத்தியக்காரனைப் போல விழிக்காமல் நான் சொல்வதை எல்லாம் கனகச்சிதமாக செய்து முடி!" என்று அதிகாரக்குரலில் காமரி உத்தரவிட்டதும் தான் அவள் காமரி என்றே நாவகன் உணர்ந்துகொண்டான்.

அவள் குரலில் எப்போதும்போலத் திமிரிருந்தாலும் அவள்

கண்களில் தென்பட்ட உணர்ச்சிகள் அவனுக்கு வித்தியாசமாகத் தெரிந்தன. இதென்ன? காமரி எதற்காக சோகமாக இருக்கிறாள்? ஒருவேளை எனக்கு காயம்பட்டிருப்பதை நினைத்து வருந்துகிறாளோ என்று நினைத்த நாவகனின் கண்களும் நிறைய ஆரம்பித்தன.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "கண்ணே! இது என்ன கோலம்?" என்று கேட்டான் நாவகன்.

"செத்தவளுக்குச் சரியான கோலம் தான்!" என்று காமரி இடக்காக பதில்தர, "என்ன? நீ இறந்துவிட்டாயா? ஒருக்காலும் இருக்காது!" என்று அதிர்ந்து விழித்தான் நாவகன்.

"உன் கேள்விகளுக்கு பதில் சொல்லும் அவகாசம் இப்போது எனக்கில்லை நாவகா! நான் சொல்வதை மட்டும் செய்! உடனே இங்கிருந்து துறைமுகப் பட்டினத்திற்குப் புறப்படு! நமக்குத் தேவையான பொருட்களோடு விசுவாசமான ஆட்கள் உனக்காக அங்கே காத்திருப்பார்கள். இந்த முட்டாள்கள் என் உடலை அழித்ததால் என்னை அழித்துவிட்டதாக கனவினில் மிதந்துகொண்டிருக்கின்றனர். அவர்களையும் எனக்குக் கிடைக்காத இந்த நாவலந்தீவையும் மொத்தமாக அழித்தபின் நான் உன் இருப்பிடம் வந்தடைவேன். இழந்த என் உடலைத் திரும்பப் பெறுவேன்! ஒரு புது உலகம் படைத்து உலகாளுவேன்! கடைசியாக ஒன்று... நீயும் உன் வம்சமும் எனக்காக ஊழியம் செய்யப் பிறந்தவர்கள் என்பதை மட்டும் நினைவில் கொள்! இப்போது செல்." என்று நாவகனுக்கு கட்டளை பிறப்பித்தாள் காமரி.

என்ன ஏது என்று யோசிக்கும் சக்தி இழந்த நாவகன் உடல் வலியைக்கூட பொருட்படுத்தாது, அங்கிருந்த சுரங்கப் பாதையின் வழியாக தப்பிச் சென்றான். துறைமுகப் பட்டினத்தில் அவனுக்காக காமரி சொல்லியிருந்ததைப் போலவே ஒரு குழு காத்திருந்தது. அவர்களைப் பார்த்தவுடனேயே அதுவரையில் இருந்த திடம் கரைந்துபோக மூர்ச்சையானான் நாவகன். அவனை பலமிக்க ஒரு நாவாயில் ஏற்றிக்கொண்டு நாவலந்தீவை விட்டுப் புறப்பட்டது அக்குழு!

****************************************************************

பேரரசர் வீயபாண்டியனின் அரண்மனை!

"ஆமாம்! என் வீரனைக் கொன்று நீ பெரும்பாவம் புரிந்துவிட்டாய்!" என்று ஆத்திரத்துடன் காமரி கூறியதும், இறந்தவள் எப்படி உயிருடன் மீண்டும் வந்திருக்க முடியும் என்ற குழப்பத்தில் எல்லோரும் நின்றார்கள்.

"நிலையில்லாததும் அழியப்போவதுமாகிய இந்த உடலை என்னிடமிருந்து பிரித்துவிட்டால் நானே அழிந்துவிடுவேனா என்ன? முட்டாள்களே! என்னை முற்றாக அழிக்கும் வல்லமை பொருந்தியவள் அந்த அரண்யா மட்டுமே! காளிதேவி என் தந்தைக்கு அளித்த வரமது! அவளைத்தவிர வேறெவராலும் என்னை ஒன்றும் செய்ய இயலாது! அதனால்தான் அவளை முதலில் இந்த மண்ணுலகை விட்டு அனுப்பினேன்; அதிலும் அவளின் சகோதரனைக் கொண்டே!" என்று சொல்லி ஏளனப் புன்னகை ஒன்றைச் சிந்தியவள், கனலியைப் பார்த்து, "என்னை எதிர்த்ததைக் கூட என்னால் மன்னிக்க முடியும். ஆனால் எனக்கு துரோகமிழைத்த உன்னை நான் எந்தக்காலத்திலும் விடமாட்டேன்! எத்தனை பிறவிகள் நீ எடுத்தாலும் உன்னைக் கொல்லாது ஓய மாட்டேன்!" என்று சூளுரைத்தாள்.

காமரியின் புதிய உருவம் கனலியின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அதனை வெளிக்காட்டாது, "முடிந்தால் முயன்று பார்!" என்று சொல்லி அரூபங்களை அழிக்கப் பயன்படும் மந்திரவாள் கொண்டு நின்றாள் கனலி. அவளைத் தொடர்ந்து வைனி, துகிரன், நவிரன் என்று மூவருமே மந்திர வாளேந்த ஆரன் மனநிலை பிறழ்ந்தவனைப் போலவே நடந்துகொண்டான்.

காமரியின் உடலிலிருந்து உயிர் பிரிந்த நொடியில் அதுவரையில் அரூபங்களிடமிருந்து அந்த அறையை காத்துக்கொண்டிருந்த கமலநாதரின் தவவலிமையால் உருவான தேன் சிட்டு மறைந்துபோனதை யாரும் கவனித்திருக்கவில்லை, அது வந்ததைப்போலவே!

துகிரன் அரூபங்களை அந்த அறையினுள்ளே நுழையவிடாமல் தடுத்துப் போட்டிருந்த கட்டுக்கள் அத்தனையையும் நொடியில் காமரி அழித்திருக்க, அவற்றை பலப்படுத்தும் கமலநாதரின் தவவலிமையும் இல்லாது, காமரியின் ஒற்றைச் சொல்லுக்காகக் காத்திருந்தன அத்தனை பைசாசங்களும்!

தனக்குக் கட்டுப்பட்டிருந்த அனைத்துவித சூட்சம சக்திகளையும் இருகை விரித்து காமரி அழைக்க, வாட்போர் முடிந்து இப்போது மாயப்போர் தொடங்கியிருந்தது.

கனலி, நவிரன், துகிரன், வைனி என நால்வரும் ஆளுக்கொரு திக்கை பார்த்துக்கொண்டு வரும் அரூபங்களைத் தாக்க, காமரியோ ஆரனை சிறுகச்சிறுக கொல்ல ஆரம்பித்திருந்தாள்.

ஆரனின் நிலையை கவனித்த கனலி, நேரடியாக காமரியுடன் மீண்டும் மோத, "முட்டாள் பெண்ணே! உன் மரணத்திற்கு நான்

குறித்திருக்கும் நேரம் இன்னும் வரவில்லையடி! என் மகிழ்ச்சியைக் கொன்ற இவனை நான் பழிதீர்க்க வேண்டும்! விலகி நில்!" என்று உறுமினாள் காமரி.

"கலரனைப் போல வீரனையும் உயிர்ப்பித்திருக்கலாமே!" என்று வியப்புடன் கேட்டு காமரியின் கவனத்தை திசை திருப்பி, நேரம் கடத்துவதற்காகப் பேச்சுக்கொடுத்தாள் கனலி. அவள் எண்ணம் புரிந்தது என்பதைப்போல தலையசைத்த துகிரன், பவித்ரகலயத்தை மீண்டும் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினான். நவிரன் அரூபங்களுடன் போரிட்டுக்கொண்டே ஆரனை காமரியின் கண் பார்வையிலிருந்து அப்புறப்படுத்தினான்.

'வீரன்' என்ற பெயரைக் கேட்டதுமே காமரியின் கல்நெஞ்சம் கூடக் கனிந்தது; அவள் மூளை நடப்பவற்றை பதிவுசெய்ய மறந்தது. அதனால் மற்றவர்களுக்கு அவர்களின் வேலை எளிதானது.

"ஐம்பூதன், கமலநாதன், தீசகன் முதலானவர்களைப் போன்ற வெகுசில ஆசீவக குருதேவர்களின் ஆன்மபலம் ஒன்று மட்டும் தான் இறந்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் கொண்டது. கேடு கேட்ட கலரனை உயிர்ப்பிக்க ஏற்கனவே தீசகனின் ஆன்மபலத்தைப் பயன்படுத்தியதால் என் உயிருக்கும் மேலாக நான் காதலிக்கும் வீரனை என்னால் காப்பாற்ற முடியாமல் போனது! அந்தக் கீழ்மகள் அரண்யாவோடு வீரனை அந்த சனியன் பிடித்த அன்றில்கள் பிணைத்துத் தொலைத்ததால் அவன் ஆன்மாவுடன் கூட என்னால் இணைய முடியாமல் போய்விட்டது! ஆனால், அந்த அரண்யாவோ இந்நேரத்திற்கு அவனுடன் கூடியிருப்பாள். மரணத்திற்கு அப்பாலும் அவர்கள் இணைந்தே இருப்பார்கள்! இதை நினைக்கும் பொழுது... எனக்கு... எனக்கு..." என்று வார்த்தைகள் வராமல் தவித்தாள் காமரி.

கனலி எதிர்பார்த்திருந்ததைப் போலவே காமரியின் கவனம் சிதறிப் போயிருக்க, பவித்ரகலயத்தை துகிரன் வரவழைத்திருந்ததை காமரி காலம் கடந்த பின்னேயே அறிந்துகொண்டாள். பெரும்சக்தி வாய்ந்த அரூபங்களைத் தவிர, மற்ற அனைத்தையும் துகிரன் விரட்டியிருந்தான். ஆரனைத் தேடினால் அவனையும் அங்கே காணாது கோபத்தின் உச்சிக்கே சென்றாள் காமரி. அவள் கோபத்தின் வெளிப்பாடாகத் தெறித்த நெருப்புத் துளிகள், கனலியின் மேனியை தகித்தது.

"காமரி! நீ எப்படிப்பட்டவளாயினும் எனக்குத் தோழி. தயவு செய்து நான் சொல்வதைக் கேள்! உன் ஆத்மாவை சாந்தப்படுத்தும் வழியினைக் கூறு! அமைதி பெற்று வீடுபேற்றை அடை! அதுதான் நம்

அனைவருக்கும் நலம்." என்று உடல் கொப்புளித்தாலும் காமரியின் மனதை மாற்றும் முயற்சியில் இறங்கினாள் கனலி.

அவள் தோல் கருகுவதைக் கண்டு அவளுக்கு உதவிக்கு வர முனைந்த வைனியை கண்களாலேயே தடுத்திட்டாள் கனலி. அரைகுறை சூட்சம சக்திகள் தான் காணாமல் போயிருந்தனவே தவிர, போரிடுவதற்கு இன்னும் ஏராளனமான பைசாசங்கள் அங்கே நிறைந்திருந்தன. அவற்றுடன் போராடவே நேரம் சரியாக இருக்க, தனக்கு உதவி நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று தான் கனலி வைனிக்கு கண்களாலேயே செய்தியனுப்பினாள். அவள் கூற்று புரிந்தாலும், தனியாக அவள் வேதனையுறுவதை வைனியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என்ன இருந்தாலும், தங்களுக்காகத்தான் கனலி இத்தனை பெரிய அபாயகரமான காரியத்தை செய்யத் துணிகிறாள் என்று தெரிந்ததால் வைனிக்கு கனலியின் மீதிருந்த அன்பு அதிகரித்தது. அப்போது எதேச்சையாக துகிரனைப் பார்த்த வைனி, மனதிலொரு முடிவு செய்துகொண்டாள்! அது நிச்சயம் துகிரனுக்குப் பிடிக்காது என்பது தெரிந்திருந்தும் அவனைக் கட்டாயப்படுத்தியாவது தன் விருப்பத்தை நிறைவேற்ற வைனி உறுதி பூண்டாள்; கனலிக்கே துகிரனை விட்டுத்தர மனதினுள் சங்கல்பம் செய்துகொண்டாள்.

கனலியின், 'வீடுபேறு' என்ற சொல் காமரியை சிந்திக்க வைத்தது. 'பிறக்கும் அனைத்து உயிர்களுமே இறுதியில் மோட்சத்தை நோக்கித்தானே பயணப்படுகின்றன! அன்பும் அமைதியுமே அனைத்து ஆன்மாக்களின் தேடலாக இருக்கும் போது, எவ்வளவு தீயவளாக இருப்பினும் காமரிக்கும், வீடுபேறு அடையும் ஆசை இருக்காதா என்ன?' என்கிற யோசனையில் தான் கனலி காமரியிடம் தூண்டில் போட்டாள். அதில் காமரி சிக்கிவிட்டதாக கனலி எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில், "என் ஆன்மா அமைதியுறுவதற்காக என் ஆசை எதுவாயினும் நிறைவேற்றுவாயா?" என்று பொறுமையோடு கேட்டாள் காமரி.

காமரியின் ஆன்மா வெளியிடும் தீக்கங்குகள் கூட நின்றுவிட, கனலிக்குள் நிம்மதி பரவியது. "நிச்சயமாக என்னால் முடிந்ததைச் செய்வேன்!" என்று உறுதிபட தெரிவித்தாள் கனலி.

"எனக்குத் தெரிந்து நீ எனக்கு மூன்று முறை துரோகமிழைத்திருக்கிறாய் கனலி. நீ பின்னிய சதிவலையே என்னை இந்நிலையில் நிறுத்தியிருக்கிறது! அதனால் நீ மூன்று தியாகங்களைச் செய்யவேண்டும்! அப்படி நான் சொல்வதை நீ நிறைவேற்றிவிட்டால்,

இந்த உலகை விட்டு நான் நீங்கிடுவேன். சொல்! செய்வாயா?" என்று பீடிகை போட்டாள் காமரி.

"உன் நிலைக்குக் காரணம் நானல்ல காமரி! தீதும் நன்றும் பிறர் தர வாரா. உன் நிலைக்கு உன் செயல்களே காரணம். ஆனால் உன் மனநிம்மதிக்காக நீ சொல்வதை செய்ய முற்படுவேன். ஆனால் நீ சொன்ன சொல் தவறமாட்டாய் என்று என்ன நிச்சயம்?" என்று வினவினாள் கனலி.

"உன்னைப்போல் இரட்டை நாக்கு எனக்கில்லை கனலி. நான் சொன்ன சொல் தவறாதவள்! நீ எப்படி?" என்று ஏளனமாகக் கேட்டாள் காமரி.

ஒரு நெடுமூச்சுடன் கண்மூடித் திறந்த கனலி, "நான் என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறாய்?" என்று உணர்ச்சி துடைத்த குரலில் கேட்டாள்.

"மூன்று தியாகங்கள்! முதலாவது, இப்போது அந்த ஆரனைக் காப்பதற்காக என்னை ஏமாற்றினாயே, அதற்குப் பரிகாரமாக அவன் உயிராக நினைக்கும் வேல்விழியை என் கண் முன்னால் கழுவேற்று." என்று காமரி சொல்லத்துவங்கும் போதே, "ஐயோ!" என்று அலறினாள் கனலி.

"இதற்கே அதிர்ந்தால் எப்படி? உயிர்சேதமின்றி இந்தக் காமரியின் ஆன்மா அடங்குமென்றா நினைத்தாய்? பைத்தியக்காரி!" என்று பரிகசித்தாள் காமரி. கனலியின் கண்கள் குளமாக, காமரி தன் நிபந்தனைகளை மீண்டும் தொடர்ந்தாள்.

"வேல்விழி துடிக்கும் ஒவ்வொரு வினாடியையும் ஆரன் பார்க்க வேண்டும். இரண்டாவது, எந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக என் வேள்வியைத் தடுத்தாயோ, அதே குழந்தையை அதே வேள்வித்தீயில் உன் கரங்களால் போட்டு நீ பொசுக்கவேண்டும். மூன்றாவது, என் அழிவிற்கு நீ முதல் புள்ளி வைக்க ஏதுவாக இருந்த காரணத்தை நீயே அழிக்கவேண்டும். புரியவில்லை? துகிரனை நீ விடுவித்த அன்று தான் என் உடலுக்கான அந்திமக்காலம் துவங்கியது என்பதை அறியாத முட்டாளல்ல நான்! அதனால், என் மரணத்திற்குக் காரணமான துகிரனை, என்னை எப்படிச் சிரச்சேதம் செய்தாயோ... அதே போல அவன் தலையையும் கொய்து என் காலடியில் போட்டு விடு! இம்மூன்றையும் நீ செய்த மறுநொடி, நீ சொன்னதைப்போலவே நான் வீடுபேற்றை அடைகிறேன்! சொல்! செய்கிறாயா?" என்று ஆணவமும் ஆனந்தமுமாக காமரி முடிக்க, கனலிக்கு உயிர்வாதை துவங்கியது.

"முடியாது! என்னால் முடியாது!" என்று இதயம் கனக்க கனலி சொல்ல, அவள் முகம் காட்டும் வேதனையில் லயித்தாள் காமரி.

"என்ன? கேட்கவில்லை... செய்வாய்தானே?" என்று தேனொழுக காமரி கேட்க, "உனக்குக் கடைசி வாய்ப்பைத் தர முனைந்த நான் முட்டாள்தான்!" என்று சீறினாள் கனலி.

"கடைசி வாய்ப்பா? அதுவும் நீ எனக்குத் தருகிறாயா? அறிவிலியே! இழந்த என் உடலை திரும்பப் பெறும் சூட்சமமும் சூத்திரமும் அறிந்தவள் நான்! என்னை அழிக்கும் வல்லமையுடைய ஒரே ஒருத்தியை இழந்துவிட்ட நீங்கள் என்ன முயன்றாலும் என்னை அழிக்கமுடியாது. அதனால்... ஒவ்வொருவராக இறக்கத் தயாராகுங்கள்!" என்று அடிக்குரலில் சீறிய காமரி, தன் உருவத்தை மிகப்பெரியதாக்கி வானிலிருந்து விண்கற்களை நாவலந்தீவை நோக்கி வரவழைத்தாள்.

"உங்களுக்கு மிகப்பிடித்த உங்கள் நாட்டை முதலில் இல்லாமல் செய்கிறேன். பிறகு ஒன்றன் பின் ஒருவராக உங்களை இல்லாமல் ஆக்குகின்றேன்! என் பாலை நாடுகளை என் முன்னோரிடமிருந்து பறித்த பாண்டியனின் தேசமும் அவன் சாம்ராஜ்ஜியமும் தடயமில்லாமல் முற்றாக அழிந்து போகட்டும்!" என்று சொல்லிப் பேய்ச்சிரிப்பு சிரித்தாள் காமரி.

"உன்னை விட்டால் தானே?" என்று துகிரனும் நவிரனும் கனலியின் இருபுறமும் அவளுக்குக் காவலாக நிற்க, அவர்களை மிகச்சாதாரணமாகப் பார்த்தாள் காமரி.

பவித்ரகலயத்தை துகிரன் கையிலேந்தி காமரியை அதற்குள் அடைக்க முயல, ஒரு குறுஞ்சிரிப்புடன், "வீணாக முயலாதே மடையா! என் ஏவல் யட்சிணிகளையே முழுதாக அடக்கும் திராணியில்லாத உன்னால் அவைகளின் தலைவியான என்னை எப்படி அடக்க முடியும்?" என்று சொல்லி பவித்ரகலயத்தை சுக்குநூறாக உடைத்தாள்.

அதன்பிறகு, துகிரன் நவிரன் கனலி வைனி என நால்வரையும் கட்டுவதற்கு முயன்றாள். காமரி இதைத்தான் செய்வாளென எதிர்பார்த்திருந்த நால்வரும் ஏற்கனவே முன்னெச்சரிக்கையோடு இருந்ததால், அவளின் சூழ்ச்சி அவர்களிடத்தில் பலிக்கவில்லை. கமலநாதர் தந்திருந்த ரட்சையும் கனலி தந்திருந்த ரட்சையும் அதை உறுதி செய்தன.

"நீ எங்களை விட சக்தி பெற்றவள் என்பதை நாங்கள் அனைவருமே ஒப்புக்கொள்கிறோம் காமரி. ஆனால் நாங்கள் நால்வரும் உன்னை எதிர்த்து நிற்கும் வரையில் உனக்குத் தோல்வியே மிஞ்சும்."

என்று நவிரன் சொல்ல, "அப்படியா அத்தான்?" என்று தேன் கனிக் குரலில் நவிரனிடம் காமரி கேட்க, 'அத்தான், அத்தான்' என்று அழைத்து எத்தனை முறை தன்னை ஏமாற்றி இருக்கிறாளென்று நினைத்த நவிரனின் முகம் கோபத்திலும் அவமானத்திலும் கன்றிச் சிவந்தது.

"உன்னால் முடிந்ததைச் செய்! தொடங்கட்டும் யுத்தம்!" என்று வைனி முழங்க, "ஒருத்தியை எதிர்த்து நான்கு பேர்! பலே உங்கள் யுத்ததர்மம்!" என்று ஒரு கேலிப்புன்னகையோடு அவர்களை எதிர்கொள்ளத் தயாரானாள் காமரி.

"என்று எங்களின் பெற்றோர், சுற்றம், நட்பு என்று அனைத்தையும் பாரபட்சமின்றி நீ அழித்திட்டாயோ, அன்றே தர்மத்தைப் பற்றிப் பேசும் அருகதையை நீ இழந்துவிட்டாய். நீதான் காமரியாயிற்றே, அதிசக்தி வாய்ந்த அதிரூப அரூப சுந்தரியாயிற்றே! குருகுலப்பாடத்தைக் கூட முடிக்காத நான்கு எளியவர்கள் உன்னை எதிர்த்து நிற்கின்றார்கள் என்றா பயந்து போனாய்? சரி, உன் விருப்பப்படியே நாங்கள் ஒவ்வொருவராக உன்னிடம் மோதுகிறோம்!" என்று காமரியைப் போலவே ஏளனத்தையும் கேலியையும் கலந்து பேசினான் துகிரன்.

"நான்கென்ன நான்கு கோடிப் பேர் அணி திரண்டு வந்தாலும் இந்தக் காமரியை வெல்ல முடியாது!" என்று மமதையோடு சொன்னவள் மேல்கூரை தலை இடிக்கும் மட்டும் உயர்ந்து கொடும் மதயானை போல நின்றாள்.

அவளைச் சுற்றி நான்கு திக்கிலும் நால்வர் இருக்க, சுற்றிச் சுழன்று ஒவ்வொருவர் மீதும் மாயக்கணைகளைத் தொடுத்தாள் காமரி. கனலியைத் தவிர மற்ற மூவருக்கும் அவளின் வேகத்திற்கு ஈடுகொடுப்பதற்கு மிகக் கடினமாக இருந்தது. எவ்வகை மந்திரத்திற்கு எதிர் மந்திரமாக எதை உபயோகிப்பது என்று கனலியையும் துகிரனையும் தவிர மற்ற இருவருக்கும் புரியவும் இல்லை. அதனால் காமரியை தாக்குவதைக் காட்டிலும் நவிரனையும் வைனியையும் காப்பதற்கே கனலியும் துகிரனும் முயன்றனர்.

அன்பே இவர்களின் உயிர்நாடி என்பதை நன்கு அறிந்திருந்த காமரியோ, அவர்களில் மந்திரதந்திரக் கலைகளில் மிகவும் பலவீனமான வைனியையே அதிகம் தாக்கினாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, தம்பனம் எனப்பட்ட சூட்சமக் கலைகளில் ஒற்றைக் கலை மட்டுமே தெரியுமென்றாலும், வளிக்கட்டில் வித்தகியான கனலி, காமரியின் மொத்த உருவத்தையும் சுற்றியிருக்கும் காற்றோடு பிணைத்துச் சுழல வைத்தாள். காற்றோடு காற்றாக நின்ற காமரியை

காற்றையே கயிறாகத் திரித்து வைனி சுற்றியடிக்க, காமரியின் தலை கிறுகிறுத்தது.

காமரியின் பலம் குறைவதைப் பார்த்த துகிரன், அவனது முத்திரையான நீர்க்கட்டை காமரியின் மீது ஏவ, காற்றோடு தண்ணீரும் சேர்ந்து அவளை வாரிச் சுருட்டியது. இருவரின் மதியூகத்தை வியந்த கனலி அழற்கட்டு எனப்படும் கலையின் மூலம் நெருப்பை உபயோகித்து காமரியின் ஆன்மாவை மேலும் இறுக்கி முறுக்கினாள். நவிரன் பரந்தவெளியான ஆகாயத்தின் சக்தியைத் திரித்து மற்றுமொரு கயிறாக காமரி மீது வீச, காமரியின் தேகமெல்லாம் காந்தியது.

இதுவரையில் அவள் செய்திருந்த கொடுமைகளுக்கெல்லாம் அவளை நகரவிடாமல் இயற்கையின் கூறுகளைக் கொண்டே இறுகப் பிணைத்தனர். உடல் இருந்திருந்தால் அதன் ஒவ்வொரு அணுவிலும் ஊசி ஏற்றினால் எப்படித் துடித்திருப்பாளோ அப்படித் துடித்தாள் காமரி.

"ஏய்! என்னை மரியாதையாக விட்டுவிடு! உங்கள் நால்வரின் வம்சத்தையே இல்லாமல் செய்துவிடுவேன்!" என்று காமரி கோபத்தில் மிஞ்ச, அசராது தங்கள் பிடிகளை இறுக்கிக்கொண்டே சென்றனர். உலகாண்டவரை உயிரோடு செக்கிலிட்டு அரைத்தபோது அவர் அனுபவித்த வேதனையை விட காமரியின் வேதனை பன்மடங்கானது.

"கனலி! இவளை எவ்வளவு நேரம்தான் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்? ஏதாவது ஒரு குடுவையில் இவள் ஆன்மாவை அடைத்தே தீரவேண்டும்!" என்றான் துகிரன்.

"உண்மைதான் துகிரா! இப்போது அடங்கியிருந்தாலும், நம் நால்வரில் ஒருவரின் பிடி தளர்ந்தால் கூட அவள் மீண்டு வந்துவிடுவாள். நம் சக்தியின் அளவை வேறு தெரிந்துகொண்டாள். அதனால் அடுத்த நொடியே காமரி நம்மைக் கொன்றுவிடுவாள். பவித்ரகலயத்திலேயே அவளை அடைக்க முடியவில்லையே! வேறெதில் அவளை நாம் அடைப்பது?" என்று கவலை கொண்டாள் கனலி.

"போதும்! போதும்! என்னை விட்டுவிடுங்கள்! நான் போகிறேன். காளிதேவியின் காலடியில் தஞ்சம் புகுந்துவிடுகிறேன்!" என்று காமரி உரக்கக் கத்த, அவள் பேச்சினை நம்பாது அவள் உயிரை மேலும் இறுக்கினார்கள் நால்வரும்.

முழு ஆற்றலையும் ஒன்றுதிரட்டி காமரியை அவர்கள் கட்டியிருந்ததால், தலைவியை விடுவிக்கும் பொருட்டு அங்கு வந்த அரூபங்களோடு போரிட முடியாமல் போனது. பலவகை சக்திகள் அவைகளின் கைவரிசையை நால்வரின் மீதும் காட்ட, அவர்கள் அணிந்திருந்த ரட்சையால் மட்டுமே உயிர் தப்பினர். ஆனால்

அவர்களின் ஆற்றல் வெகுவாக குறைந்துகொண்டே வந்தது. உடலிலும் சிறுசிறு காயங்கள் ஏற்பட்டது.

பவித்ரகலயம் வேறு உடைந்துபோனதால், மற்றொன்றைத் தருவிக்க முடியாமல் துகிரன் மிகுந்த சிரமப்பட்டான். பவித்ரகலயத்தைத் தருவிக்க வேண்டுமானால் காமரியின் மீதிருக்கும் அவன் பிடியை ஒரு நிமிடம் என்றாலும் அவன் விடவேண்டும். ஆனால் பலவீனமாகிக்கொண்டிருந்த வைனியால் அந்த ஒரு நிமிடம் தாக்குப் பிடிக்க முடியுமா என்ற கேள்வியே அவனுள் எழுந்தது.

"ஐயோ! எரிகிறதே! முகமெல்லாம் எரிகிறதே! முழுமதி முகம் என்பாயே அத்தான்! அந்த மஞ்சள் முகம் இப்போது எரிந்து கருகுகிறதே! என்னை மனதாரக் காதலித்தேன் என்றாயே! காதலென்றால் எப்பிறப்பிலும் உடன் வருவதில்லையா? இப்படிக் கீழ்த்தரமாக நான்கு பேர் என்னை அழிக்க முயல்கிறீர்களே!" என்று நவிரனின் மனதினை கூறு போட்டாள் காமரி. அவளுக்கு வேண்டியதெல்லாம் யாரேனும் ஒருவரின் பிடி விலக வேண்டும். அதற்காக ஒவ்வொருவராக முறையிட்டாள்.

"நவிரா! அவள் பேச்சை நம்பாதே!" என்று துகிரன் உரக்கச் சொல்ல, காமரியின் மாயையிலிருந்து விடுபட்டான் நவிரன்.

"கனலி! என் உயிர்த் தோழியும் நீதான்! என் உயிரைப் பறித்த தோழியும் நீதான்! என் அடிவயிறு இழுக்கின்றது. கைகால்கள் அக்குவேறு ஆணிவேராக பிரிகிறது. என் மீது உனக்கு பாசமில்லாமல் போய்விட்டாலும் பச்சாதாபமும் வற்றிவிட்டதா? இந்தக் காமரி எவரிடத்திலாவது கெஞ்சிப் பார்த்திருக்கிறாயா? இப்போது கெஞ்சுகிறேன்! என்னை விட்டுவிட மாட்டாயா?" என்று அழுதபடியே கெஞ்சினாள் காமரி.

கனலியின் கண்கள் குளமானாலும் உதட்டைக் கடித்துக்கொண்டு பதிலேதும் பேசாது நின்றாள். அதைக்கண்ட காமரியின் ஆத்திரம் அதிகரித்தது. சின்னஞ்சிறு துண்டங்களாக அவளது உயிரை இயற்கை கூறுபோட, வலி தாங்காமல் தன் முழு சக்தியையும் கடைசித் தடவையாக ஒன்று திரட்டி வானத்தை நோக்கித் திருப்பினாள் காமரி.

அடுத்த வினாடி, நாவலந்தீவே அதிர அரசாணை ஆற்றில் வந்து விழுந்தது ஒரு விண்கல். மிதமான நிலநடுக்கம் ஏற்பட்ட அந்த நொடியில் காமரியின் மீதிருந்த அவர்களின் பிடி தளர, குரூரத்தோடு வெளிப்பட்டாள் காமரி!

"இனி ஒருவரும் உயிருடன் இருக்கப்போவதில்லை!" என்ற

இடிமுழக்கத்தோடு வானை அவள் பார்க்க, இன்னுமொரு விண்கல் நாவலந்தீவின் வேறொரு இடத்தில் விழுந்தது.

மீண்டும் அவளைக் கட்டுவதற்கு நால்வரும் முயல, அவர்களை விடாது காமரியும் தன் சக்திகளைப் பயன்படுத்தத் துவங்கினாள். ஆனால் அவளே எதிர்பாராத வகையில் எதிர்பாரா இடத்திலிருந்து அவர்களுக்கு உதவி வந்தது!

"துகிரா! காமரியை இதனுள்ளே அடைத்துவிடு!" என்ற கமலநாதரின் குரல் கேட்டு அதிர்ந்தாள் காமரி!

*******************************************************************

காமரி நாவகனின் மூலம் அவள் உயிர்த்தெழுவதை உறுதி செய்துகொள்ள எடுத்துக்கொண்ட அவகாசத்தில், கமலநாதரின் மீது அவள் செலுத்தியிருந்த ஆதிக்கம் தகர்ந்துவிட்டது. கமலநாதரின் விரல்களையும் உதடுகளையும் தைப்பதற்கு அவள் பயன்படுத்திய ஏழாவது மகனின் ஏழாவது மகனுடைய நரம்பினை அறுத்தெறிவதற்கு முயலுவதை சிறைப்பட்ட நொடியிலிருந்து கமலநாதர் நிறுத்தவேயில்லை. நாட்கள் மாதங்களாக மாறியிருந்த இவ்வேளையில் அவர் கைகளில் முளைத்திருந்த நகங்கள் அவருக்குப் பேருதவி புரிந்தன.

தவவலிமை எதுவும் இல்லாத காரணத்தால், அவரைப் பிணைத்திருந்த எதற்கும் அவரைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இல்லாது போனது. பிரத்யேகமான சக்தியை இழந்து சாதாரண நூல் போலவே அந்த நரம்புகள் செயல்பட்டன. அதனால் தன்னை விடுவித்துக்கொள்ள கமலநாதர் எடுத்த முயற்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக என்றாலும் பலன் தந்தன. நகங்களால் மெல்ல மெல்ல தன் விரல்களைக் கீறி முதலில் அவரைப் பிணைத்திருந்த நரம்புகளை அறுத்தார். பின்னர் குருதி கொட்டும் விரல்களின் துணைகொண்டு அவர் இதழ்களை விடுவித்தார். அடுத்த தடையான தலைச்சன் பிள்ளையின் எலும்புக் கூடுகளை வைத்துச் செய்யப்பட்டிருந்த பெட்டிச் சிறையை உடைப்பது அவருக்கு அத்தனை எளிதாக இல்லை.

பலவீனமான கண்ணி எங்கிருக்கிறது என்று பெட்டியை நன்றாகச் சோதித்தார். இம்மி அளவு கூட நகரமுடியாமல் இருந்தாலும், கண்களை மூடிக்கொண்டு மெல்லத் தடவி பெட்டியின் பலவீனத்தைக் கண்டறிந்தார். வலது பாதத்தின் கீழிருக்கும் இணைப்புத்தான் மற்ற எல்லாவற்றையும் விட வலுவற்றது என்பதை உணர்ந்து கொண்டவர், முழு உடல் பலத்தையும் திரட்டி இரு முறை ஈசனை நினைத்துக்கொண்டு உதைக்க, பெட்டிச்சிறை உடைந்தது! இனி மரத்தை எப்படிப் பிளப்பது என்று அவர் சிந்தை செய்துகொண்டிருந்த

வேளையில் தான் வெளியே தேன் சிட்டின் குரல் கேட்டு, அவர் முகத்தின் ஒளி கூடியது!

கமலநாதருக்கு காவலிருந்த அதிசக்தி வாய்ந்த யட்சிணிகள் அனைத்தும் காமரிக்கு உதவ தென்மதுரைக்கு விரைந்திருந்த நேரமாதலால், கமலநாதரை சிறை செய்திருந்த மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த அவரது தவவலிமையை அறிந்து தடுக்கும் நிலையில் எவருமில்லை. முதலில் சின்னஞ்சிறியதாக இருந்த தேன் சிட்டு நொடியில் மலை போலப் பெரிதாக, பாரம் தாங்காமல் மரம் இரண்டாய்ப் பிளந்து அதனுள்ளே இருந்த கமலநாதர் வெளி வந்தார்.

கைகளை தலைக்கு மேலே கும்பிட்டு, இடது பாதத்தை வலது தொடையில் இறுத்தி, ஒற்றைக்காலில் நின்றுகொண்டு, "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா... போற்றி! போற்றி!!!" என்று வீறுகொண்டு அடிவயிற்றிலிருந்து கமலநாதர் எழுப்பிய போர்க் குரல் கேட்பவரின் இதயத்தை ஒரு முறை அசைத்துப் பார்த்தது!

பின் வானை நோக்கி ஒரு புன்னகையுடன் அவர் கைநீட்ட, அவரின் தவவலிமை முழுவதும் அவருக்குள் முழுதாக இறங்கியது; அவர் காயங்களும் தானாக ஆறத் துவங்கின. இழந்த சக்திகளைத் திரும்பப் பெற்றவர் நேராக தென்மதுரைக்கு புயல் காற்றை விட வேகமாக விரைந்தார்.

*****************************************************************

"துகிரா! காமரியை இதனுள்ளே அடைத்துவிடு! நான் வேல்விழியையும் ஆரனையும் பார்க்கிறேன்!" என்று சொல்லி கமலநாதர் ஒரு வித்தியாசமான உலோகத்தாலான குடுவையை துகிரனை நோக்கி எறிந்தார். லாவகமாக அதைப் பிடித்தவன், பவித்ரகலயத்தில் யட்சிணிகளை அடைக்கப் பயன்படும் மந்திரங்களை உச்சரிக்க, அவனுக்குத் துணையாக கனலியும் அந்த மந்திரங்களை உச்சரிக்க, காமரியின் ஆன்மா மெல்ல மெல்ல குடுவைக்குள் புக ஆரம்பித்தது.

"வேண்டாம்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று கத்திக்கொண்டே காமரி கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தாள்.

வேதனையோடு காமரி மன்றாட, துகிரன் இளகாமல் மந்திரங்களை காமரியின் கண்ணைப் பார்த்து விடாது உச்சரிக்க, தன்னை இவர்கள் கட்டுவது உறுதி என்று காமரிக்கு புரிந்து போனது. இருப்பினும் தோல்வியை ஒப்புக்கொள்ளும் மனமில்லாமல், "நீங்கள் அனைவரும் மறுமுறை பிறப்பீர்கள்! என் மரணத்திற்குக் காரணமான உங்கள் ஒருவரையும் விட மாட்டேன்! விட மாட்டேன். நான் பட்ட

வேதனையை விடப் பன்மடங்கு வேதனையை உங்களுக்குப் பரிசளிப்பேன்!

துகிரா! குறித்துவைத்துக்கொள்! ஒரு நாள் வரும், நீ இன்பத்தில் திளைத்திருப்பாய். நீ இன்பம் புசிக்கும் வேளையில் உன் மொத்த மகிழ்ச்சியையும் சாம்பலாக்கி உனக்குப் பரிசளிப்பேன்! என்னைக் கட்டிய உன் கையாலேயே திறக்கவைத்து மீண்டும் இப்புவியில் கோலோச்சுவேன்! வீரனை மணந்து அவன் காதலில் கசிந்துருகுவேன்! இது நான் வணங்கும் காளிதேவியின் மீது ஆணை!" என்று சபதமிட்டபடியே கமலநாதர் தந்திருந்த வித்தியாசமான உலோகக் குடுவையில் அடைந்திருந்தாள் காமரி.

காமரியே மறைந்துவிட, அவளின் ஏவல் பைசாசங்கள் அனைத்தும் அங்கிருந்து பதறிச்சிதறி ஓடிவிட்டன.

"அப்பாடி! ஒருவழியாக பேய் அடங்கிவிட்டது!" என்று அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட, "இல்லை, நம் பணி இன்னும் மீதமிருக்கிறது!" என்று சொல்லியபடியே வேல்விழியோடும் ஆரனோடும் அவர்களின் புதல்வியோடும் கமலநாதர் மீண்டும் வந்தார்.

"குருதேவா!" என்று சொல்லி துகிரன், நவிரன், வைனி, கனலி என்று நால்வரும் அவர் பாதம் பணிய, "பெறுதற்கரிய செல்வங்களைப் பெறுவீர்களாக!" என்று வாழ்த்தினார் கமலநாதர்.

"இன்னும் வேலை மிச்சமிருக்கிறது என்றீர்களே குருதேவா, அது என்ன?" என்று யோசனையுடன் வினவினான் துகிரன்.

"அது..." என்று கமலநாதர் ஆரம்பிக்கும் போதே 'படார்!' என்று பூமி அதிரும் சப்தம் கேட்க, காமரிதான் மறுபடியும் வந்துவிட்டாளோ என்று அங்கிருந்தோர் அனைவரும் ஸ்தம்பித்தனர். என்னவென்று அனைவரும் பயத்துடன் சுற்றிப் பார்க்க, இந்திர ரகசியத்தை அது வைக்கப் பட்டிருந்த இடத்திலிருந்து தூக்கித் தூர எறிந்திருந்தான் ஆரன்.

"நீதானே இதற்கெல்லாம் காரணம்!" என்று அழுதுகொண்டே ஐந்து துண்டங்களாக உடைந்திருந்த இந்திரரகசியத்திடம் பேசிக்கொண்டிருந்தான். வேல்விழியை இழந்தது, வீரனுக்கு துரோகமிழைத்தது, பின் நாவகனென நினைத்து வீரனைக் கொன்றது என்ற பல்வேறு குற்றவுணர்ச்சிகளின் தாக்கத்தால் ஆரனுடைய புத்தி பேதலித்துப் போனது. வீரனின் உடலிருந்த அறைக்குள் மறுபடியும் அவன் வர, மன அழுத்தம் தாளாது, அனைத்திற்கும் காரணம் இந்திர ரகசியமே என்ற புரிதலில் அதன் மகிமை உணராமல் அதை உடைத்துவிட்டான்.

'ஒரு சிக்கல் முடிந்ததென்று மூச்சுவிட்டால் இப்போது இதென்ன புதுச்சிக்கல்?' என்று தலையில் கைவைத்துவிட்டார்கள் அனைவரும்!

ஆனால் அவர்கள் நினைத்ததைப்போல இந்திரரகசியம் உடைந்துவிடவில்லை. ஒரு சாதாரண மனிதனால் துண்டாகக்கூடிய அளவிற்கு அது லேசுப்பட்ட விஷயமா என்ன?

உடைந்த ஒவ்வொரு துண்டும் அங்கிருந்த ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்தது. முதல் துண்டு துகிரனின் கைகளில் மிதந்து வந்து விழ, இரண்டாவது துண்டு கனலியின் கைகளில் சேர்ந்தது. மூன்றாவது துண்டு நவிரனிடம் தஞ்சமடைய, நான்காவது துண்டு வைனியிடம் போனது. ஐந்தாவது துண்டு மட்டும் எங்கு செல்வது என்று குழம்பியது போலும். ஆரனை மூன்று முறை வட்டமடித்து அவன் உச்சந்தலையில் ஒரு நொடி அமர்ந்த பின் கையில் குழந்தையோடிருந்த வேல்விழியிடம் சென்றது. அனைவர் கைகளையும் அலங்கரித்த இந்திர ரகசியம் ஒரு நிமிடம் ஒளி வீசிப் பின் மங்கியது!

"குருதேவா! இது என்ன?" என்று நவிரன் விழித்துக்கொண்டே கேட்டான்.

"காமரியின் சபதத்தின் விளைவு! அவள் மீண்டும் எழுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு சத்தியம் நீங்கள் அனைவரும் ஒரே பிறவியில் மீண்டும் பிறப்பது! அந்த நேரம் வரும் வரையில் உங்களுக்குக் கிடைத்த பெரும்புதையலை உயிரை விட மேலாக பாதுகாத்து வையுங்கள்! உங்கள் காலத்தில் காமரி விடுதலை அடைய வாய்ப்பில்லை. அதை நான் உறுதி செய்துகொள்வேன். அதனால் உங்களின் வம்சாவளிகளுக்கு நம் கதையையும் நாவலந்தீவு என்னும் தமிழரின் பெருநிலப்பரப்பைப் பற்றியும் அதன் பெருமைகளையும் சொல்லியே வளருங்கள்! என்றாவது ஒருநாள் காமரி என்னும் சூறாவளி நம்மைக் கொண்டுபோக மீண்டெழும் என்கிற எச்சரிக்கையோடு வாழச் சொல்லுங்கள்! நீங்கள் அனைவரும் மறுபடியும் பிறப்பெடுக்கும் போது, என் சக்தியால் கூடக் காமரியைத் தடுக்க இயலாது. அவள் புத்துடல் பெறும் மார்க்கத்தை நாவகனும் அவன் சந்ததியினரும் உறுதி செய்வார்கள். நீங்களும் உங்கள் வாரிசுகளும் காமரியை முற்றாக அழித்துவிடுவதற்கான வேலையில் ஈடுபடுங்கள். இப்போது பிறர் கண்களில் படாது இந்திரரகசியத் துண்டுகளை மறைத்து வையுங்கள்!" என்று கமலநாதர் சொல்லி முடிக்கும் தருவாயில் குவேணி அரண்யாவின் குழந்தையோடு அந்த அறைக்குள் நுழைந்தாள். அத்தனை பேரும் உயிரோடு இருக்க, காமரியின் சடலமும் வீரனின்

சடலமும் அருகருகே இருக்க, வேதனைப்படுவதா இல்லை நிம்மதியடைவதா என்று புரியாமல் குழம்பினாள் குவேணி. ஆனால், நவிரனைக் கண்டவளின் காதல் நெஞ்சம் நிறைந்தது உண்மை.

"அரசாணை ஆற்றங்கரையில் ஏதோ விண்ணிலிருந்து கல் போன்ற ஏதோ விழுந்துவிட்டதாம். சோதிடர் கூறியது போலவே நிகழ்கிறது என்று மக்கள் அச்சத்தில் உறைந்து போயிருக்கின்றனர். சமீரணன் அவர்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறான். நாவகனை துறைமுகப் பட்டினத்தில் பார்த்ததாக செய்திகள் வந்த வண்ணமிருக்கிறது. சற்று முன்பு ஏற்பட்ட லேசான நிலநடுக்கத்தால் பாதிப்பில்லை என்றாலும் மனம் ஏனோ அமைதியுற மறுக்கிறது. கடலில் கூட கொந்தளிப்பு அதிகமிருப்பதாக மாலுமிகள் செய்தியனுப்பி இருக்கின்றனர்." என்று அவர்களுக்குத் தெரியாத செய்திகளை குவேணி கூறினாள்.

"நான் சொன்ன பணிகள் இனி தான் துவங்கப் போகிறது குழந்தைகளே! இன்னும் மூன்று தினங்களுக்குள் நாவலந்தீவு என்னும் நிலம் இருந்ததற்கான சிறு தடம் கூட இல்லாமல் போகும்!" என்று இரும்புக்குரலில் கமலநாதர் கூற, "ஐயோ! ஈசா!" என்று அனைவரும் கதறினார்கள்.

"அமைதியோடு நான் சொல்வதைக் கேளுங்கள்! கலங்குவதற்கு இது நேரமல்ல. இறக்கும் தருவாயிலும் காமரி நஞ்சையே கக்கினாள். கலரனும் அவளும் செய்த வேள்வியின் பயனால் விண்கற்களின் மழை இன்றிலிருந்து மூன்று நாட்கள் நாவலந்தீவின் மேல் பொழியும். ஆழிப்பேரலை ஏற்பட்டு நாம் பாடுபட்டுச் செப்பனிட்ட நம் நாடு அழியும். இதைத் தடுத்து நிறுத்தும் சக்தி வாய்ந்தவன் இப்போது ஈசனோடு கலந்துவிட்டான். அதனால் உங்களால் முடிந்த அளவிற்கு மக்களைத் திரட்டிக்கொண்டு எட்டுத்திக்கிலும் செல்லுங்கள். எங்கு நிலம் தெரிகிறதோ அங்கே சென்று குடியேறுங்கள். மக்களை நல்வழிப்படுத்துங்கள். காலத்திற்கும் சூழலிற்கும் ஏற்ப மாறிக்கொள்ளுங்கள். ஆனால் நம் வேர்களை மட்டும் எந்தச் சூழ்நிலையிலும் மறவாதீர்கள்! நம் மொழியையும் கலைகளையும் பண்பாட்டையும் காப்பது உங்கள் கடன்! உயிரே போனாலும் நம் இனத்தின் மாண்பை மட்டும் விட்டுவிடாதீர்கள்!" என்று உறுதியோடு கூறினாலும் கடைசியில் கமலநாதரின் கண்கள் கூடக் குளமாயின.

"குருதேவா! விட்டுவிடாதீர்கள் என்று சொல்கிறீர்களே, அப்போது நீங்கள் எங்களுடன் வரவில்லையா?" என்று காற்றாகிப்போன குரலில் கேட்டாள் வைனி.

"உங்களுக்கோர் பணியிருப்பதைப் போல, எனக்கொரு பணி இருக்கிறது மகளே! தான் செய்த தீமையின் விளைவுகளை உணராமலேயே காமரி நிம்மதியாகக் கண்மூடி விட்டாளல்லவா? அந்த ஈசனுக்குக் கூட இது பொறுக்காது! அப்படியிருக்கையில் சிறுமனிதன் என்னால் எப்படி விட முடியும்?" என்று உதட்டளவில் புன்னகைத்தபடியே கமலநாதர் கூற, முற்றும் துறந்த முனிவருக்குக் கூட பழியுணர்ச்சி இருக்கமுடியுமா என்று வியந்தனர் மற்றவர்.

"என்னை சித்ரவதை செய்ததைக்கூட என்னால் பொறுத்துக்கொண்டு அவளை மன்னிக்க இயலும். ஆனால் சிறு குழந்தைகளென்றும் பாராமல் நாவலந்தீவு முழுக்க அவர்களுக்குப் பல கொடுமைகளைச் செய்தவளை மன்னிக்கும் அளவிற்கு எனக்குப் பக்குவம் இன்னும் வரவில்லை. தென்மதுரை தொட்டு கருங்குன்று, மேரு என்று காமரி என்னும் பெரும்புயல் அழித்த குடும்பங்கள் தான் எத்தனை எத்தனை? அவற்றிற்கெல்லாம் அவள் நித்தமும் பதில் சொல்ல வேண்டுமல்லவா? அதற்காகவே தான் அவளை இக்குடுவையில் அடைத்தேன். அவள் விடுதலை பெறும் வரை ஒவ்வொரு நொடியும் அவள் யாருக்கெல்லாம் என்னென்னவெல்லாம் தீங்கிழைத்திருக்கிறாளோ... அது நேரடியாக என்றாலும் சரி, மறைமுகமாக என்றாலும் சரி... அவர்களின் ஒவ்வொரு வலியையும் வேதனையையும் அவள் துக்கத்தைப்போலவே அவள் அனுபவிப்பாள்! அவர்களுக்கு அவள் இழைத்த துன்பங்களை அவர்களின் நிலையிலிருந்து அவளே அனுபவிப்பாள்! இந்தக் கமலநாதன் அவளுக்கு அளிக்கப் போகும் தண்டனை அதுதான்!" என்று கண்களில் கனல் பொங்கத் தெரிவித்தார் கமலநாதர்.

அப்போது நவிரன் அந்தக் குடுவையை உற்று கவனிக்க, "வலிக்கிறதே! வலிக்கிறதே! என்னை விடுவியுங்களேன்! ஐயோ! ஐயோ!" என்ற அலறல்கள் சன்னமான ஒலியுடன் கேட்டன. கமலநாதரின் கோபத்தின் அளவு புரிய மற்றவருக்கு வார்த்தைகளே வரவில்லை.

"இப்போது கிளம்புங்கள்! மக்களைத் திரட்டி இங்கிருந்து சீக்கிரம் அப்புறப்படுத்துங்கள். குவேணியின் உழைப்பினால் உருவான நாவாய்கள் எப்பேர்ப்பட்ட அலைகளிலும் தாக்குப்பிடிக்கும் திறம் படைத்தவை. அதனால் தைரியமாகச் செல்லுங்கள். கடைசியாக ஒன்று. காலம் கனியுமட்டும், இந்திர ரகசியத்தின் இரு துண்டுகள் ஒரே இடத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்!" என்று சொன்னவர் குறிப்பாக வைனியையும் துகிரனையும் பார்க்க, அவர்களுக்கு

நெஞ்சடைத்தது.

'இத்தனை போராடிய பின்னரும் சேர்ந்து வாழும் கொடுப்பினை எங்களுக்கு இல்லையா?' என்று துகிரனின் விழிகள் இறைஞ்சியதை உணர்ந்துகொண்டாலும், மௌனமாகக் கண்ணீர் வடித்தாள் வைனி. காமரியை வெற்றி கொள்வதற்கு கனலிதான் முதல் காரணம் என்பதை அறிந்திருந்ததால், துகிரனை அவளுக்கே தந்துவிட்டு ஒதுங்கிவிட வைனி ஏற்கனவே முடிவு செய்திருந்தாள். அதனால் கமலநாதரின் பிரிவு என்னும் சொல் அவளுக்கு அதிக வேதனையைத் தரவில்லை. மாறாக கனலி தனிமரமாகினாளே என்று தான் அவள் வருந்தினாள்.

அப்படியானால் வைனி மட்டும் தனிமரமாகவில்லையா என்று கேட்பவர்களுக்கு, அவள் திருவயிற்றில் வீற்றிருக்கும் குழந்தை பதில் சொல்லும். ஆம்! துகிரனின் காதல் பரிசை சுமந்திருக்கும் செய்தியை இருநாட்களுக்கு முன்பு தான் வைனி அறிந்தாள். இந்தக் கலவரங்களுக்கு இடையில் இந்தச் செய்தியைச் சொன்னால் தன்னை பாதுகாப்பு என்கிற பெயரில் எங்காவது அனுப்பிவிடுவார்கள் என்று உண்மையை மறைத்துவிட்டாள். இப்போது பிரிவை காரணம் காட்டி துகிரனிடம் சொல்லாமல் மீண்டும் மறைத்தாள் வைனி. தான் தகப்பனான செய்தியை அறியாமலேயே கடமையின் பொருட்டு காதலியைப் பிரிந்தான் துகிரன். ஆனால் நண்பனின் குழந்தையை வேற்று ஆளிடம் வளரவிட மனமில்லாது குவேணியிடமிருந்த வீரன்-அரண்யாவின் குழந்தையைத் தான் வளர்ப்பதாகக் கூறி பெற்றுக்கொண்டான். அவன் மனம் புரிந்த அவர்களும் அவன் வாழ்க்கைக்கு ஒரு பிடிமானம் தேவை என்பதால் குழந்தையை அவனிடம் ஒப்படைத்தார்கள்.

தேவையான செய்திகளைச் சொல்லி அனைவரையும் தயார்படுத்திய பின்னர், காமரியின் ஆன்மா சிறை இருந்த அந்தக் குடுவையைப் பார்த்தபடியே கிழக்கு நோக்கி அமர்ந்தார் கமலநாதர். அதுவரையில் அங்கிருந்தவர்கள் என்னவென்று அறியாத பல மந்திரங்களைக் கமலநாதர் முணுமுணுக்க, அந்தக் குடுவையைச் சுற்றி பாதுகாப்புக் கவசம் போல ஒன்று உருவாகத் துவங்கியது. கமலநாதரின் ஆன்மபலம் முழுக்க, அந்தக் குடுவையிலிருந்த காமரியை வெளிவரவிடாத பெரும் தாழாக மாறிய மறுநொடி, கமலநாதரின் உடல் மண்ணில் சரிந்தது. ஆனால் அப்போதுதான் அவருக்கு மிகமுக்கியமான ஒரு ரகசியத்தை துகிரனிடம் கூறவில்லையே என்று உறைத்தது.

'எக்காரணம் கொண்டும் உன் கையால் மீண்டும் இந்த

உலோகக் குடுவையைத் தொடாதே!' என்பதே அவர் கூற நினைத்து விடுபட்ட ஒரே செய்தி! அன்றே கமலநாதர் அதைக் கூறியிருந்தால் ஒருவேளை அவன் இம்ரானாகப் பிறந்ததும் அந்தக் குடுவையைத் தீண்டியிருப்பானா என்பது ஐயமே!

மூன்று நாட்களுக்குள் நாவலந்தீவு அழிந்துவிடும் என்று ஆரூடம் சொல்லிவிட்டுக் கமலநாதர் உடலை விட்டு விட்டு உயிராக மாறி காமரியின் சிறையை காவல் காக்க, முதல் நாள் முதலே அவர்களின் நாடு சிதைந்து சின்னாபின்னமானது. விண்கற்களும் விடாது பெய்யும் பேய்மழையும் அதற்குப் பேருதவி புரியும் சூறைக்காற்றுமாக மக்களின் வாழ்க்கைநிலை மிக மோசமானது. போதாததற்கு ஆழிப்பேரலையும் சேர்ந்துகொள்ள, கடலோர நிலங்கள் அத்தனையையும் கடல் விழுங்கியது.

ஓரமாக ஒதுங்கக்கூட இடமில்லாது சில மக்கள் தவித்திருக்க, பலர் இயற்கையோடு இரண்டறக் கலந்துபோயினர். நாவலந்தீவு நீர்வழிகளால் இணைந்திருந்த காரணத்தால் சிறு படகுகள், ஓடங்கள் முதலியவற்றைக்கொண்டு கடலில் கம்பீரமாக நின்றிருந்த நாவாய்களில் மக்களை ஏற்றினார்கள் வீரர்கள். நாவாய்கள் நாலாபுறமும் சென்றதால், அதிலிருந்த மக்கள், கடலில் தத்தளித்த பலரையும் மீட்டெடுத்துக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஆயினும், பெரும்பான்மை மக்கள் குடும்பம் குடும்பமாக இறந்து போயினர். இன்னும் சிலருக்கோ, தங்கள் குடும்பங்களின் நிலை என்னவானது என்றே தெரியாமல் போனது! கற்றறிந்த புலவர்களுக்கோ தாங்கள் உயிரைக்கொடுத்து படைத்த படைப்புகள் அத்தனையும் தண்ணீரில் போகிறதே என்று ஆற்றாமையாக இருந்தது. தங்களின் எழுத்துக்களுக்கு பதிலாகத் தங்கள் உயிர்கள் போயிருக்கக்கூடாதா என்றே அவர்கள் வருந்தினார்கள். தடுப்பவர்கள் இல்லையென்றால் அவர்களில் பலர் கடலில் குதித்தும் இருப்பார்கள். கல்வியில் சிறந்த தமிழ்நாடாயிற்றே!

முடிந்த அளவிற்கு மக்களைத் திரட்டிக்கொண்டு அத்தியாவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஆளுக்கொரு நாவாயில் பயணத்தைத் துவங்கினார்கள் ஐவரும்!

துகிரனுக்கு முன்பு வீரன் பரிசளித்திருந்த குண்டலங்களில் ஒன்றில் இந்திரரகசியத்தின் துண்டை மறைத்துவைத்திருந்தான் துகிரன். கையில் வீரனின் குழந்தையையும் மனதினில் வைனியையும் சுமந்துகொண்டு இன்றைய கன்னியாகுமரியை அடைந்தவன், தான் கற்றறிந்த வித்தைகளை எல்லாம் கற்பித்து வீரனின் குழந்தையைத் தன் குழந்தை போலவே வளர்த்தான். அவனுக்கு குணாளன் என்று

பெயரிட்டு, உரிய வயது வந்ததும் தாங்கள் புலம் பெயர்ந்த கதையினைச் சொல்லி இந்திர ரகசியத்தின் ஒருபகுதியை அவனிடம் பாதுகாக்கச் சொல்லி உத்தரவிட்டவன், சாகும் வரையில் வைனியைத் தவிர வேறொரு பெண்ணை மனதிலும் நினையாமல் கடைசியில் மாண்டும் போனான்.

வைனி சென்ற நாவாய் தரைதட்டியது அன்றைய மெசபடோமியாவில், தற்போதைய ஈரான் ஈராக்கில்! தனியாகவே பிள்ளை பெற்றெடுத்தவள், தன்னுடைய இந்திரரகசியப் பகுதியை அவள் வைத்திருந்த பெட்டி மூக்குத்தியில் மறைத்துவைத்தாள். கடுகை விடப் பெரியதும் மிளகை விடச் சிறியதுமான அவளின் துண்டு, அந்த மூக்குத்தியில் எளிதில் பொருந்திக்கொண்டது. தன் மகளுக்குத் தன் தோழி அரண்யாவின் பெயரையே வைத்தவள் உரிய வயது வந்ததும் கமலநாதர் கூறியிருந்ததைப் போலவே நாவலந்தீவின் பெருமைகளையும் தாங்கள் திக்கற்றவர்களைப் போலப் புலம்பெயர்ந்து வாழ நேர்ந்த கதையையும் சொல்லிச் சென்றாள்.

நவிரன் குவேணியுடன் சென்ற நாவாய் இலங்கை கதிர்காமத்தில் நின்றது. காமரியால் புண்பட்டிருந்த அவன் மனதிற்கு ஆறுதலாக குவேணியுடனான அவன் வாழ்க்கை நிறைவோடு அமைந்தது. இந்திரரகசியத்தின் ஒரு பகுதியை அவனுடைய மோதிரத்தில் மறைத்துவைத்தான் நவிரன். தான் ஒரு இளவரசன் என்கிற தோரணை இல்லாது ஒரு விவசாயியாக வாழ்ந்து மகிழ்வோடு இறந்தும் போனான். அவன் பெற்ற பல பிள்ளைகளில் மிகத் தகுதியான ஒருவனைத் தேர்ந்தெடுத்து இந்திரரகசியத்தை காக்கும் பொறுப்பை ஒப்படைத்தான்.

புத்தி சுவாதீனமில்லாத ஆரனையும் மற்றுமொரு பச்சைக்குழந்தையையும் வைத்துக்கொண்டு வேல்விழி பட்ட துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் கணவன் உயிருடன் இருக்கிறான் என்ற ஆறுதலே அவளுக்குப் போதுமானதாக இருந்தது. கங்கையின் கழிமுகத்தில் அவள் சென்ற கப்பல் நிற்க, அங்கேயே குடியமர்ந்தனர். தன் கைக்காப்பில் இந்திரரகசியத்தை மறைத்து வைத்தாள் வேல்விழி. ஆண்டுகள் செல்லச்செல்ல ஆரனிடம் முன்னேற்றம் தென்பட்டது. ஆனால் அவன் இறக்கும் வரையிலும் அவனுக்கு புத்தி தெளியவேயில்லை. அவர்களின் பெண்ணுக்கு உரிய வயது வந்ததும், அவளிடத்தில் இந்திரரகசியப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

கனலி சென்ற கப்பலில்தான் சமீரணனும் ஏறியிருந்தான். இழப்புகளை மட்டுமே வாழ்க்கையில் சந்தித்திருந்தவளுக்கு

சமீரணனுடனான நட்பு புத்துயிர் அளித்தது. முதலில் காமரியைத் திட்டுவதற்காக மட்டுமே சேர்ந்து பேசத் துவங்கியவர்கள், காலப்போக்கில் ஒருவர் மீது மற்றவர் அவருக்காகவே அன்பும் நேசமும் மரியாதையும் கொண்டனர். காலங்கள் செல்ல, அது காதலாகவும் மலர்ந்து கல்யாணத்தில் முடிந்தது. அவர்களின் கப்பல் இன்றைய லத்தீன் அமெரிக்காவில் போய் நின்றது.

தன் கழுத்தணியில் இந்திரரகசியத்தை மறைத்தவள், தன் குடும்பப் பெண்களுக்கு தன் வரலாற்றை முழுதுமாகக் கற்பித்தாள். ஐம்பூதனாரின் தவவலிமையும் ஆன்மபலமும் முழுதாக அவளுக்குள் இருந்ததால், அவள் பெற்றெடுத்த பிள்ளைகளில் மூத்த பெண்குழந்தைக்கு உரியவயது என்று கனலி கருதிய பதினைந்தாவது அகவையில் தானாகவே மந்திரசக்தி வசப்பட்டது. முதலில் அதிர்ந்தாலும், அந்தச் சக்தியை மற்றவரின் தேவைக்காக ஆக்கப்பூர்வமாக எப்படிப் பயன்படுத்துவது என்று கனலியே சொல்லித்தந்தாள். அவள் வாழ்நாளில் அவள் சார்ந்திருந்த கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று திறம்பட அவர்களை நிர்வகித்தாள். அவளுடைய ஒவ்வொரு நிமிடமும் அவளுக்குப் பக்கபலமாக சமீரணன் இருந்தான். இறக்கும் தருவாயில் மக்களின் பெருமதிப்பைப் பெற்று நிறைவான வாழ்க்கை வாழ்ந்த திருப்தியோடு சமீரணனின் மார்பில் சாய்ந்தபடியே இதழில் புன்னகையோடு இறந்தும் போனாள்.

குவாத்தமாலா காடுகளில் சற்று உன்னிப்பாகக் கேட்டால் இன்றும் கனலி என்னும் பெருவீரப்பெண்ணின் குரல் கேட்கலாம்!

காலப்போக்கில் நாவலந்தீவு என்னும் நிலப்பரப்பு மறந்தும் மறைந்தும் போனது! ஆனால் அங்கே வாழ்ந்த மக்களின் பெருவீரமும் பெருங்காதலும் இன்றளவும் ஏதோவொரு கதையிலும் தமிழனின் மரபணுவிலும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றது.

சிலப்பதிகாரம் கூட,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்று விண்கற்கள் மழையினால் ஏற்பட்ட நிலநடுக்கத்தாலும் ஆழிப்பேரலையினாலும் பஃறுளி ஆறும் பன்மலைத் தொடர்களும் நிறைந்த குமரிக்கண்டம் அழிந்தது என்று பதிவு செய்திருக்கிறது!

அது சரி, இவர்களுக்கு முன்னால் சென்ற நாவகன் எங்கே சென்று தரையிறங்கினான்?

## அத்தியாயம் 26

கமலநாதர் கதை சொல்லி முடித்ததும், முன்பு நாவலந்தீவில் வீசிய புயல் இப்போது இங்கிருப்போரின் மனங்களில் வீசியது. முற்பிறவி இப்பிறவி என்று பெண்டுலம் போல அனைவருமே ஆடினர். சமகாலத் தமிழ் மறந்து முற்காலத் தமிழே அவர்கள் நாவில் நர்த்தனமாடியது.

"நாவகன் என்னவானான்?" என்று இறுகிய குரலில் சதுரன் கேட்டான். துரோகி நாவகனுக்கு தண்டனை கிடைத்ததா என்பதை அறிந்துகொள்ளும் வேகம் அவனிடத்தில் நிறையவே இருந்தது.

"நாவகன் சென்ற கப்பல் கிழக்கு அனடோலியாவின் அராரத் மலைத்தொடர்களில் மோதி தரை தட்டியது. தன்னுடன் இருந்தவர்களை எப்படிக் காப்பது என்பது புரியாது விரைவில் அவன் பெரும்குழப்பத்திற்கு ஆளானான். ஆனால் அவர்களை பராமரிப்பதை விட காமரிக்கு என்ன நேர்ந்தது என்ற கவலையே அவனை மிகவும் பாதித்தது. காமரி என்றாவது தன்னைத் தேடி வருவாள் என்கிற எதிர்பார்ப்பில் அவள் இறந்ததைக் கூட அறியாது அவள் நினைவிலேயே பைத்தியமாக நாடு நாடாக அலைந்தான். எங்கெங்கோ சுற்றியவன் கடைசியில் ஏதோவொரு பனிபடர்ந்த தேசத்தில் தங்கினான். வேற்றாள் ஒருவன் தங்குவதை அங்கிருந்த பழங்குடியினர் ஏற்றுக்கொள்ளாமல் போக, அவர்களுடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாய் தனியாளாக அவர்களுடன் சண்டையிட்டான். இறுதியில் பிடிபட்டாலும், இதுவரை அவர்கள் கண்டிராத ஆயுதங்களை அனாயசமாகப் பயன்படுத்தும் நாவகன் மீது அங்கிருந்த பெண் ஒருத்தி காதல் கொள்ள, இனத்தலைவனான அவள் தந்தையும் அதை ஏற்றார். திருமணம் அல்லது தூக்குத் தண்டனை இரண்டில் ஒன்றை முடிவு செய்யும்படி நாவகனுக்கு ஒரு நாள் அவகாசமும் வழங்கப்பட்டது.

உயிருக்கு பயந்து கட்டாயத்தின் பேரில் அவளை மணந்தாலும் அவர்களுக்கும் வாரிசுகள் உருவாகின. ஆனாலும் அவன் மனம் முழுக்க காமரியையே சுமந்திருந்தான். அவன் இறக்கும் தருவாயில்தான் காமரியும் இறந்திருக்கக்கூடும் என்கிற உண்மை அவனைச் சுட்டது. அதனால் தன் மூத்த மகனை அழைத்து அவர்களது பூர்வீக நிலப்பரப்பைப் பற்றியும் காமரி பற்றியும் கூறினான். காமரியின் ஆட்களில் ஒருவன் அவனிடம் தந்திருந்த தந்தப்பெட்டியை தன் மகனிடம் ஒப்படைத்து அதை உயிரை விட மேலாக பாதுகாக்கவேண்டும் என்றும் அவள் என்று வந்தாலும் அவளுக்காகவே

தன் வம்சத்தில் ஒருவர் காத்திருக்க வேண்டுமென்றும் உறுதி வாங்கிக்கொண்டான். அந்தப் பெட்டியை பெற்றுக்கொண்ட நாவகனின் மகன் கண்களுக்கு ஒருமுறை காமரியின் உருவம் தென்பட, நாவகனின் காமரிப்பித்து அவன் மகனையும் பீடித்தது; இன்று வரை நாவகனின் வம்சத்தாருக்கு அந்தப் பித்து தெளியாமலும் இருக்கிறது.

நாவகனின் மகனுக்குப்பின் அவன் மகன், அவனின் மகன் என்று அவர்கள் சந்ததியினரின் வேர்கள் விரிந்து விருட்சமாயின. ஒவ்வொரு தலைமுறையிலும் ஒருவன் காமரியின் வருகைக்காக காத்திருக்கலானான். காலங்கள் ஓட, பலப்பல தொழில்களையும் செய்து அவர்கள் பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். நாவகனைப் போல உலகையே ஒருகுடையின் கீழ் ஆளும் பேராசையையும் கொண்டார்கள்; நேரடி அரசியலை விடுத்து நிழல் அரசியலைத் தேர்ந்தெடுத்தார்கள். வணிகத்தின் வழியாக அத்தனை நாடுகளையும் அடிபணிய வைத்தார்கள். ஆனால் இதற்கெல்லாம் காரணமான நாவகனோ, வாழும் வரை அவன் வாழ்க்கையை நிம்மதியின்றியே கழித்தான்.

காற்று சற்று பலமாக வீசினாலும் காமரி தான் வந்துவிட்டாளோ என்றெண்ணி பைத்தியக்காரனைப் போலத் தேடினான். அந்திவேளைகளில் நிழல் தெரிந்தால், அது கூட காமரி என்றே நினைத்தான். தன் வாழ்நாளில் அவளை இனி எப்போதும் காணமுடியாது என்று தெரிந்ததும் அவன் மீதே அவனுக்கு சினம் மிகுந்தது. ஏன்தான் காமரியை விட்டுப்பிரிந்தேனோ என்ற தன்னிரக்கத்தில் அவனையே ஆராதித்துக்கொண்டிருந்த அவன் மனைவியை அவன் மதிக்கவேயில்லை.

இறக்கும் நொடியிலும் காமரியை நினைத்துக்கொண்டே இறந்தான் நாவகன். உயிருடன் இருந்த காலத்தில் தன்னை ஒரு உயிராகக் கூட கருதியிராத அந்த முரட்டு முட்டாள் கணவன் இறந்ததும், தன் கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு அவனுடனேயே இறந்து போனாள் அந்த பழங்குடிப்பெண். தகுதியே இல்லை என்றாலும் தன் மனம் கவர்ந்தவனின் மீது அவளுக்கு அவ்வளவு நேசமிருந்தது. நாய் பெற்ற தெங்கம்பழம் போல அவர்கள் வாழ்வு அர்த்தமற்றதாகிப்போனது." என்று பெருமூச்சோடு முடித்தார் கமலநாதர்.

"காமரி எப்படி வெளிவந்தாள்?" என்ற அதிமுக்கியமான கேள்வியை இம்ரான் கேட்டான்.

அவனைப் பார்த்து புன்னகைத்தபடியே கமலநாதர் தொடர்ந்தார், "நாவலந்தீவு அழிந்துவிட்டாலும், என் தவவலிமையையும்

ஆன்மபலத்தையும் உபயோகித்து காமரி அடைக்கப்பட்டிருந்த குடுவை உடைந்துவிடாமல், கடலின் அடி ஆழத்திற்குள் அதைக் கொண்டுசென்று தற்செயலாகக் கூட எவரும் எடுத்துவிடாமல் பாதுகாத்தேன். ஆனால் என்றாவது அவள் என்னையும் மீறி வெளிவந்துவிடுவாள் என்பதை நான் உணர்ந்தேயிருந்தேன். அதிலும் நீங்கள் அனைவருமே ஒரே நேரத்தில் மறுபிறவி எடுத்திருக்கும் போது, காமரி எப்படியும் என்னை வீழ்த்திவிட்டு வெளியேறுவாள் என்று நான் கணக்கிட்டிருந்தேன். அதன்படியே பல்லாயிரம் ஆண்டுகள் சிறைப்பட்டு வதைபட்டவள், வெளிவருவதற்கு நீங்கள் நால்வருமே காரணம்!" என்று சதுரன், இசை, இம்ரான் மற்றும் லயாவை கைகாட்டினார் கமலநாதர்.

"நாங்களா?" என்று நால்வருமே அதிர்ந்தனர்.

"ஆமாம். ஆறு மாதங்களுக்கு முன்பு, இம்ரானாகப் பிறந்திருக்கும் துகிரனுக்கு கப்பல் துறையில் வேலை கிடைத்ததும், அவனின் முதல் பயணம் மும்பையிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு செல்லும் கப்பலில் அமைந்தது. அவன் காமரி அடைபட்டிருந்த குடுவை இருக்கும் இடத்தை நெருங்கும் போது துகிரனின் மீது அவள் கொண்டிருந்த தீராப்பகையால் சிலிர்த்து எழுந்தாள். ஒருவேளை அவன் மட்டுமிருந்திருந்தால் அவளை என்னால் அடக்கியிருக்கக் கூடும். ஆனால் அதே நேரத்தில் செஷல்ஸ் தீவிற்கு ஏதோ ஆய்விற்காக வந்திருந்த சதுரனையும் மாலத்தீவிற்கு விடுமுறைக்காக வந்திருந்த இசைத்தமிழையும் லயாவையும் சேர்த்து உணர்ந்தவளை அடக்குவதற்கு பெரும் சிரமமாகிப் போனது.

தன்னை அழித்தவனின் மகிழ்ச்சியோடு அவள் வெறுக்கும் இரு பெண்களின் ஆரவாரமும் அவள் நேசிக்கும் ஒரே மனிதனின் அருகாமையும் அவளுக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பிற்கு புத்துயிர் ஊட்ட, கொஞ்சம் கொஞ்சமாக வலுத்திரட்டி என்னை எதிர்க்க ஆரம்பித்தாள். அவளுக்கு ஆதரவாக இயற்கையும் சேர்ந்துகொண்டது. கடலுக்கடியில் எதிர்பாராமல் ஒருநாள் நிலநடுக்கத்தை அவள் ஏற்படுத்த, காமரியின் மீது எனக்கிருந்த பிடி ஒருநொடி இளகிற்று. என்னிடமிருந்து சிறிதளவேனும் விடுபடுவதற்கும் நோவாவாக பிறந்திருக்கும் நாவகனுக்கு செய்தி அனுப்புவதற்கும் அவளுக்கு அந்த ஒரு நொடியே போதுமானதாக இருந்தது.

நோவாவின் கப்பல் நாங்களிருக்கும் இடத்தை நோக்கி வரவும், காமரியின் ஆன்மாவின் ஒருபகுதி வெளியேறுவதற்கும் சரியாக அமைந்தது. கப்பலிலிருந்த அத்தனை பேரையும் கொன்றொழித்தவள், அவர்களின் ஆன்மபலத்தை எல்லாம் திரட்டி என்னை அங்கிருந்து

அப்புறப்படுத்தி விட்டாள்; விடுதலையும் அடைந்துவிட்டாள். நான் அங்கிருந்து பொதிகை மலைக்கு வந்து என்ன செய்யவேண்டுமென்பதை இங்கிருக்கும் சித்தர் பெருமக்களோடு சேர்ந்து சிந்திக்கத் துவங்கினேன். அவள் நோவாவை சந்தித்து காய்களை நகர்த்தத் துவங்கியதும், இம்ரானின் இமாமின் மூலம் அவனுக்குத் தேவையான பலத்தை அவனிடம் சேர்ப்பித்தேன். ஏனென்றால் துகிரனாலோ அல்லது கனலியாலோ மட்டும் தான் அவளால் முழுமையாக விடுதலையடைய முடியும். அரைகுறை ஆன்மாவோடு திரிந்தால் அவளால் மறுபடியும் உயிர்பெற்று எழமுடியாமல் அரூபமாகவே இயற்கையோடு கலக்க நேரிடும். அதனால், எப்படியும் அவள் துகிரனைத் தான் தேர்வு செய்வாள் என்று சரியாகவே நான் கணித்திருந்தேன். இருப்பினும் முன்னெச்சரிக்கையாக மாயாவின் பாட்டி கமிலாவைச் சந்தித்து அவர்களிடமும் மாயாவை பாதுகாக்கும்படி அறிவுறுத்தினேன். ஆனால் என் முயற்சிகளையும் தாண்டி, எல்லாம் விதிப்படியே நடந்து இப்போது காமரி இழந்திருந்த முழு சக்தியையும் அடைந்துவிட்டாள். இனி இந்திர ரகசியத்தையும் வீரனையும் அடையாமல் அவள் ஓயப்போவதில்லை!" என்று மரத்த குரலில் கூறி முடித்தார் கமலநாதர்.

"வீரனையா?" என்று கேட்டு சதுரனைப் பார்த்த இசையின் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்.

"இந்திர ரகசியத்தை வேண்டுமானால் விட்டுத்தர ஒருவேளை அவள் இசையலாம் இளவரசி. ஆனால் வீரனை விட்டுத்தர அவள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டாள்!" என்று அமைதியாக மாயா சொல்ல, சதுரனின் முகத்தில் குழப்ப ரேகைகள் ஓடத்துவங்கின.

"அவளைக் கண்டு நான் சரியாக பேசியது கூட இல்லை. அப்படியிருக்க, இதென்ன வேதனை!" என்று வாய்விட்டே அவன் வியந்தான்.

"காதலின் மனக்கணக்கு மூளை அறியாதது வீரா. காமரி நினைத்திருந்தால் ஒரே நொடியில் எங்கள் அனைவரையும் அழித்திருக்கலாம். ஆனால் நீ இறந்துவிட்டாய் என்ற செய்தி அறிந்ததும் அவள் புத்தி செயலிழந்துவிட்டது. அதனால் மட்டுமே என்னால் அவளைக் கொல்ல முடிந்தது. உன் மீது அவள் கொண்டிருக்கும் காதல் தான் அவளை அழிவுப் பாதையில் தள்ளியது! முற்பிறவியிலும் சரி, இப்பிறப்பிலும் சரி, அவள் உன் மீது கொண்ட நேசம் மட்டுமே உண்மை." என்று மெதுவாகச் சொன்னாள் மாயா.

"அந்தப் பிடாரி இறந்த பின்பு கூட, எதனால் நாம் தோற்றோம்

குருதேவா?" என்று ஆற்றாமையோடு லயா கேட்டாள்.

"காமரியை அழிக்கும் சக்தி கொண்டவள் இளவரசி மட்டுமே அம்மா. அவளே போன பிறகு, காமரியை முற்றாக அழிக்கும் வல்லமை நமக்கில்லை. அவளை கட்டுக்குள் வைக்கலாமே ஒழிய அழிக்க முடியாது. நீங்கள் அனைவரும் மறுமுறை பிறக்க வேண்டுமென்பது விதி. அதேபோல நம் நாவலந்தீவு அழியவேண்டுமென்பதும் விதி!" என்று பொறுமையாகச் சொன்னார் கமலநாதர்.

"விதி! விதி! விதி! மனிதனின் கையாலாகாததனத்திற்கு அவன் வைத்த பெயர் தான் விதி!" என்று லயா பொரும, 'குருதேவரை பழிக்கும் விதமாக பேசாதே!' என்று அர்ஜுன் அவளைக் கண்களாலேயே எச்சரித்தான். அதனைக் கண்டு ஓர் கசந்த புன்னகை பூத்தார் கமலநாதர்.

"வைனி, பொறு! குருதேவா, காமரியை அழிப்பது எப்படி?" என்று லயாவை அடக்கிவிட்டு கமலநாதரிடம் இசை வினவினாள். இந்தப் பிறவியிலும் வீரனை இழக்க அவள் தயாராகவே இல்லை. எப்படியாவது காமரியை அழித்தே தீரவேண்டுமென்ற ஆவேசம் அவளுக்குள் வந்தது.

"உன்னால் மட்டுமே அவளை நிரந்தரமாக அழிக்க முடியுமம்மா. ஆனால் அதைச் செய்வதற்கு இந்திர ரகசியமும் நமக்குத் தேவை." என்று பீடிகை போட்டார் கமலநாதர்.

"இந்திரரகசியமா? அது தான் உடைந்து பல துண்டுகளாக சிதறிவிட்டதே! அவற்றை இப்போது எங்கு சென்று தேடுவது?" என்று அர்ஜுன் அலுப்புடன் கேட்டான். நடந்த நிகழ்ச்சிகளை மறுமுறை கேட்டவனுக்குள் ஆற்றாமை சோகம் குற்றவுணர்ச்சி என்று கலவையான எண்ணங்கள் நிறைந்தன.

"எங்கும் சென்று தேட வேண்டாம். அனைத்தும் இங்குதானிருக்கிறது!" என்று மர்மப் புன்னகையுடன் தெரிவித்தார் கமலநாதர்.

"என்ன? இங்கேயா?" என்று தங்களுக்குள் அனைவரும் பேசிக்கொள்ள, அதுவரையில் அமைதியாக அமர்ந்திருந்த தேவ்னா, அவள் கையில் அணிந்திருந்த காப்பை கழற்றி கமலநாதரின் கைகளில் சமர்ப்பித்தாள்.

காப்பைக் கழற்றும் நோக்கோடு தொட்டாலே அவள் கையை சுட்டுப் பொசுக்கும் காப்பு, இன்று எந்தத் தடங்கலும் செய்யாமல் தானாகவே கழன்று கொண்டது அவளுக்கே சற்று வியப்புத்தான்!

அவள் செயலின் அர்த்தம் புரிந்ததும், 'நீடூழி வாழ்க!' என்று

சொல்ல வந்த வாழ்த்து அவர் வாய் வரை வந்து நாவிலே உறைந்து போக, ஆதுரமாக அவள் தலையைத் தடவிக்கொடுத்தார் கமலநாதர். கண்களில் கண்ணீரோடு அவரைப் பார்த்து புன்னகை செய்ய முயன்று தோற்றுப்போனாள் தேவ்னா.

கமலநாதருக்கும் தேவ்னாவிற்கும் நடந்த இந்த சம்பாஷணைகள் மற்றவர்களுக்குள் கேள்வியை விதைக்க, மாயாவிற்கு அவள் என்ன செய்தாள் என்று மெல்லப் புரிந்தது. அவள் கழுத்திலிருந்த லாக்கெட்டை கழற்றியவள், கமலநாதரின் கைகளில் வைத்தாள். ஒன்றோடொன்று உரசியதும் அந்த இரண்டு ஆபரணங்களுமே மிதமான ஒளி வீசின. அதனைப் பார்த்த நவிரனின் கண்கள் விரிய, அவன் கையிலிருந்த மோதிரத்தை கமலநாதரிடம் தர, இப்போது அந்த இடத்தின் ஒளி மேலும் கூடியது.

"மூன்று பாகங்கள் இங்கிருக்கின்றன. மீதி இரண்டு?" என்று யோசனையுடன் இம்ரான் தாடையைத் தடவ, அவனை பொருள் பொதிந்த ஒரு பார்வையுடன் பார்த்தார் கமலநாதர்.

சட்டென அவனுடைய இமாம் அவனுக்கு அளித்த தாயத்து நினைவுக்கு வர, இடுப்பிலிருந்த தாயத்தை அறுத்தவன், அதனைப் பிரித்துப் பார்க்க, பச்சை நூற்கண்டின் நடுவினில் ஒரு பெட்டி மூக்குத்தி இருந்தது. ஆனால் அவனால் அதைத் தீண்ட முடியவில்லை. தொட முனைந்தபோதே அவன் கைகள் சுட, "அம்மா!" என்று அலறியபடியே அதனை கீழே போட்டான். அது சரியாகச் சென்று லயாவின் கைகளில் சேர்ந்தது. மூக்குத்தி லயாவின் கைகளுக்குள் சென்று சேர்ந்ததும் ஒளிர, கமலநாதருக்குமே அது ஆச்சரியமாக இருந்தது.

"ஆக, இது என் பங்கு என்பது இதிலிருந்து புலனாகிறது!" என்று கூறியபடியே லயா அந்த மூக்குத்தியை கமலநாதரின் கரங்களில் சேர்த்தாள்.

"இன்னும் ஒன்று?" என்ற அர்ஜுன் இசையையும் சதுரனையும் பார்க்க, அவர்கள் இருவரும், "எங்களிடமில்லை!" என்று கைவிரித்தனர்.

"இளவரசியிடம் இருக்காது மகனே! இந்திரரகசியம் ஐந்தாகப் பிரிந்தபோது உங்கள் ஐவரிடத்திலுமே தஞ்சம் புகுந்தது. உங்களுடைய பகுதியை பாதுகாப்பது உங்கள் கடமை தானே. அதன்படிப் பார்த்தால், கனலி மட்டுமே அதை ஒழுங்காகச் செய்திருக்கிறாள் என்று புலனாகிறது." என்று சொல்லி ஒரு நெடுமூச்சை விட்டுவிட்டு மீண்டும் கமலநாதர் தொடர்ந்தார், "அவள் அணிந்திருக்கும் பதக்கத்தின் மகிமை முழுதாகத் தெரியாவிடினும் அதை உயிர் போலவே அவளது வம்சாவளியினர் காத்திருக்கிறார்கள் என்பது இப்போது எனக்குப்

புரிகிறது. காமரியை மறுபடி உயிர்ப்பிக்கவல்ல பொருட்களை ஒரு தந்தப்பெட்டியில் வைத்து நாவகனிடம் காமரியின் ஆட்கள் தந்திருந்தார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். எப்போது காமரி உயிர்த்தெழுந்து விட்டாளோ அப்போதே அவனுக்கு தரப்பட்ட வேலையை நாவகனும் குறைவற செய்திருக்கிறான் என்றும் நன்றாகத் தெரிகிறது. ஆனால் உங்கள் நால்வரிடமும் கொடுத்த பணியை நீங்கள் செவ்வனே செய்திருந்தாலும் உங்கள் சந்ததியினர் அதை கோட்டைவிட்டது உச்சந்தலையில் ஆணி அடித்ததைப்போல எனக்கு விளங்குகிறது!" என்றார்.

"எங்களை மன்னித்து விடுங்கள் குருதேவா!" என்று இம்ரான் கமலநாதரின் பாதங்களில் பணிந்தான்.

"உங்கள் மீது என்ன பிழை மகனே? பழமையின் மகிமை புரியாத உங்கள் வம்சத்தினரை அல்லவா நொந்துகொள்ள வேண்டும்? உன் வாரிசு உன்னருகில் இல்லாத நீ, வீரனின் மகனிடம் பொறுப்பை ஒப்படைத்தாய். ஆனால் அவன் அதை சரியாகச் செய்தானா என்றால் இல்லை என்றுதான் தோன்றுகிறது. ஈழத்திற்குச் சென்ற நவிரனின் மக்கள், சோழர் காலத்தில் தமிழகத்துக்கு குடி புகுந்தனர். ஆனால் எதனாலோ அவர்களின் தலையாய செல்வமான இந்திரரகசியத்தை ஈழத்திலேயே விட்டுவிட்டுச் சென்றனர். ஆங்கிலேயர் காலத்தில் அகழ்வாராய்ச்சி நடந்தபோது கண்டுபிடிக்கப்பட்ட அந்த மோதிரம், எங்கெங்கோ சுற்றி கடைசியில் நவிரனின் நண்பன் மூலமாக அவன் கைக்குக் கிடைத்தது.

வேல்விழியின் வம்சாவளிகள் ஓரளவிற்கு அதை பாதுகாத்தாலும் சாக்கிய குலத்தை சேர்ந்த ஒரு அரசனை மணந்துகொண்டதும் சிறிது காலம் கழித்து புத்தமதத்தை தழுவியவள், அவளுடைய காப்பை அவளுக்கு அடுத்தபடியான வாரிசிடம் தராமல் இமயமலை அடிவாரத்தில் ரகசியமாக புதைத்து வைத்தாள். காலப்போக்கில் சாதாரண மனிதனால் போகமுடியாத இடமாக அது மாறியிருக்க, மறுபிறவி எடுத்த ஆரனின் மூலமாக மீண்டும் வெளியுலகத்திற்கு வந்தது இந்திரரகசியம். ஆனால் அவன் செய்யவேண்டிய கடமையும் கூடவே தெரியவர, அந்த முட்டாள் பதட்டத்தில் கோழைத்தனமாக இறந்து போனான். அவன் சுமந்த பாவம், இந்தச் சின்னஞ்சிறிய குழந்தையின் மீது விழுந்தது!" என்று தேவ்னாவைக் காட்டி வருத்தமுடன் சொன்னார் கமலநாதர்.

பதிலுக்கு ஏதோ சொல்ல வாயெடுத்த அர்ஜுனை நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார், "மெசபடோமியாவிற்குச் சென்ற

வைனியும் அவர்கள் வழி வந்தவர்களும் இந்திரரகசியத்தைக் காத்தாலும், பின்நாளில் வந்தவர்கள் நாடு பிடிக்கும் பேராசை வலையில் வீழ்ந்து கடமை தவறினார்கள். மொகலாயப்படையில் பெரிய பதவி வகித்தவர்கள், சிந்து நதிக்கு அப்பால் இருந்த நிலம் முழுமையையும் ஆளும் நோக்குடன் இங்கே வந்தார்கள். தமிழகத்தின் மதுரை மீது அவர்களுக்கு காதல் ஏற்பட, மதுரையின் அரியாசனத்தை கைப்பற்ற அயராது உழைத்தனர். பின் ஆட்சி கவிழ்ந்தாலும், மதுரையை விட்டுப் பிரிய மனமில்லாமல் அங்கேயே தங்கினர். காமரி தப்பியதும், எங்கேயோ எவர் கைகளிலோ இருந்த இந்திரரகசியத்தை இம்ரானின் இமாமிடம் சேர்ப்பித்தேன். அவர் மூலம் அவனிடம் தரச் செய்தேன். துகிரன் தன்னுடைய பகுதியை வீரனின் மகனிடம் தந்துவிட்டதால், இமாமிடமிருக்கும் பகுதி அவனுடையது என்று நான் ஊகித்தேன். ஆனால் இப்போது தான் அது அவனுடைய பகுதி அல்ல என்றும், அது வைனியுடையது என்றும் எனக்குப் புரிகிறது!" என்று முடித்தார் கமலநாதர்.

"அப்படியானால் வீரனுடைய வம்சாவளியினர் இந்திரரகசியத்தை எங்கே மறைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டபடியே சதுரனைப் பார்த்தான் இம்ரான்.

"இங்கே மறைத்திருக்கலாம்!" என்று பதிலளித்தான் சதுரன்.

"என்ன இங்கேயா?" என்று குழம்பினான் இம்ரான். சதுரனின் பதில் கமலநாதரைக்கூட குழப்பியது. ஆனால் ஏதோ அவருக்குப் புரிவது போலவும் இருந்தது.

"ஆமாம். சிறிது நேரத்திற்கு முன்பு கால்போன போக்கில் மின்மினிப்பூச்சி ஒன்று வழிகாட்ட எங்கோ சென்றேன். பாதை முடிந்த இடத்தில் மற்றொரு சின்னக் குகையைக் கண்டேன். அதில் சிம்மனை யாரோ சிலையாக வடித்திருந்தனர். அந்தச் சிலையைத் தொட்டபிறகு தான் எனக்கு நம் முற்பிறவி ஞாபகம் வந்தது. அந்த இடத்தை நன்றாகத் தேடினால் ஒருவேளை இந்திரரகசியத்தின் ஐந்தாவது துண்டு கிடைக்கலாம்!" என்று ஆரூடம் சொன்னான் சதுரன்.

"கிடைக்கலாம் என்று சொல்லாதே மகனே, கட்டாயம் கிடைக்கும் என்று சொல், துகிரன் முயன்றால் கட்டாயம் கிடைக்கும்!" என்று கூறினார் கமலநாதர்.

"நானா? என்னுடைய பாகத்தைத்தான் வீரனின் வம்சாவளியினரிடம் ஒப்படைத்து விட்டேனே?" என்று இம்ரான் இழுக்க, "அவர்களில் யாரோ ஒருவர் இங்கே வாழ்ந்திருக்க வேண்டும். என்றாவது நாம் இங்கு வருவோம் என்று கணித்து இந்திரரகசியத்தை

இங்கே மறைத்திருக்க வேண்டும்; அவர்களும் சித்தராக வாழ்ந்திருக்க வேண்டும். அதனால் தான் நான்கு பாகங்களைக் கண்டுபிடித்த என்னால் ஐந்தாவது பாகத்தை கண்டுபிடிக்க இயலாமல் போயிருக்க வேண்டும். வீரனிடம் நான் பேச நினைத்த விடயம் இது தான். எனவே நீயும் வீரனும் சென்று இப்பொழுதே இந்திரரகசியத்தின் ஐந்தாம் பகுதியை மீட்டு வாருங்கள்." என்றார் கமலநாதர்.

"வீரனின் கைகளுக்கு சிக்காத இந்திரரகசியம் என் கைகளுக்கு எப்படிக் கிடைக்கும் குருதேவா?" என்று ஐயமாகவே கேட்டான் இம்ரான்.

"எங்கெங்கோ சென்றாலும், கடைசியில் இவர்கள் நால்வரின் வாயிலாகவே என் கைகளில் சேர்ந்ததைப் போல, கடைசிப் பாகமும் உன் கைகளின் மூலமாகவே என்னிடம் சேரும். வீரனின் வம்சத்தை சேர்ந்த சித்தர் நீங்கள் இருவரும் இணைந்து வந்தால் மட்டுமே புலப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பெயரில் இந்திரரகசியத்தை மறைத்து வைத்திருக்கலாம் அல்லவா? அதனால் தான் முன்பே வீரனின் கைகளுக்கு அது தட்டுப்படவில்லை. எதையும் அனாவசியமாக யோசித்து நேரத்தைக் கடத்தாமல் இப்பொழுது செல்லுங்கள். சீக்கிரம்! நமக்கு நேரம் அதிகமில்லை." என்று சதுரனையும் இம்ரானையும் துரிதப்படுத்தினார் கமலநாதர்.

அவர் குரலிலிருந்த அவசரம் புரிந்ததும், அவர் பாதம் பணிந்து சதுரனும் இம்ரானும் முன்பு வீரன் சென்ற பாதையை ஒருவாறு ஊகித்துக்கொண்டே சென்றனர்.

"குருதேவா எனக்கொரு கேள்வி..." என்று மாயா ஆரம்பிக்க, "வைனிக்கு சேர வேண்டிய பாகத்தை துகிரன் தொட்டதும் அவன் கையைச் சுட்ட இந்திரரகசியம் ஏன் அதைக் கையாண்ட மற்றவரை பொசுக்கவில்லை என்று தானே கேட்க நினைத்தாய்?" என்று சிரித்தார் கமலநாதர். மௌனமாக மாயா தலையசைத்தாள்.

"இந்திரரகசியத்தின் வியத்தகு பண்புகளில் இதுவும் ஒன்று மகளே! தன்னுடையதல்லாததை உரிமையோடு துகிரன் தொட்டதாலும் உரிமைக்காரி வைனி பக்கத்தில் இருந்ததாலும் அவனை இந்திரரகசியம் சுட்டது; உரிமையுடைய நீ இந்திரரகசியத்தைத் தூக்கி எறிய நினைத்தபோது உன்னை சுட்டதைப் போல! ஆனால் இந்திரரகசியத்தை கையாண்ட மற்ற எவரும் அதன் அருமையை உணராதவர்கள். ஏதோ பழங்காலப் பொருள் என்று தான் அதனை அவர்கள் நினைத்திருப்பார்கள். இல்லையெனின் அவர்களையும் அது கட்டாயம் தாக்கியிருக்கும்." என்று விளக்கினார் கமலநாதர். இசையும்

லயாவும் கவலையோடு அமர்ந்திருந்ததைப் பார்த்தவர் அவர்களை நோக்கிச் சென்றார்.

"குருதேவா! எதற்கிந்த சோதனைகள்? நல்லவர்கள் துன்பம் மட்டுமே அனுபவிக்க, தீயோர் உலகாளுதல் நெறியா?" என்று இசை கேட்டாள்.

"கலி காலத்தில் எதுவும் நடக்கும் மகளே! நீயே உன்னை சுற்றிப்பார்! நாம் முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்கும் இப்போது இதுவரை நீ வாழ்ந்த வாழ்க்கைக்கும் எத்தனை வேறுபாடுகள் இருக்கின்றன? நம் காலத்தில் சாதிகள் உண்டா? இல்லை பிறரை அடிமைப்படுத்தும் சாத்திரங்கள் தான் உண்டா? காமரியைத் தவிர மனதறிந்து தவறிழைத்தவர்கள் தான் தண்டனையிலிருந்து தப்பியது உண்டா? காலமாற்றத்தில் இத்தனை ஏற்றத்தாழ்வுகள் வந்ததைப் போலவே அது மறைந்தும் போகும். பிறரின் மீது அன்பு வைத்திருக்கும் காரணத்தாலேயே நீங்கள் இத்தனை துன்பங்களையும் அனுபவிக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள் அன்பு செலுத்தும் அனைவரின் சுகதுக்கங்களும் உங்களையும் வேதனைக்குள்ளாக்குகின்றன. எவர் மீதும் பற்றற்று இருப்பதால் காமரிக்கு துன்பமென்று எதுவும் இருப்பதில்லை. ஒரே ஒரு வழியைத்தவிர வேறு எப்படி முயன்றாலும் காமரியின் கண்களிலிருந்து மெய்யான ஒரு சொட்டு நீரைக்கூட வரவழைக்க முடியாது!" என்று பூடகமாக முடித்தார் கமலநாதர்.

"அது என்ன வழி?" என்று ஆவலோடு கேட்டாள் இசை.

"காமரியின் கண் முன்னே வீரனைக் கொன்று விடு!" என்று கமலநாதர் முடிக்குமுன்னரே, "ஐயோ!" என்று அலறினாள் இசை.

"முடியாதல்லவா? அவள் வாழ யாரையும் பலிகொடுப்பவள் அவள். நீ மட்டும் வாழ, சிறு எறும்பையும் துன்புறுத்தாதவள் நீ. மனதைப் போட்டு குழப்பிக்கொள்ளாமல், குருதேவர் ஐம்பூதனார் உனக்கு முன்னம் கற்பித்த கலைகளை மறுபடியும் மனதினில் நிறுத்துவதற்கு முயற்சி செய் மகளே!" என்று சொல்லிவிட்டு கமலநாதர் சென்றுவிட, அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த லயா இசையை சமாதானப்படுத்தினாள்.

தேவ்னா தன்னிடம் எதையோ மறைக்கிறாள் என்பதை உணர்ந்த அர்ஜுன் அவளிடம் என்னவென்று கேட்டுக்கொண்டிருக்க, மறந்தும் கூட கமலநாதர் அந்தப் பக்கம் திரும்பவில்லை. அவள் எதை சொல்லத் தயங்குகிறாள் என்பதை நன்கறிந்தவருக்கு அதை மற்றவரிடம் தெரிவிக்கும் மனம் வரவில்லை. ஈசனின் திருவிளையாடல் படி

நடக்கட்டும் என்று அவன் மீது முழுப்பாரத்தையும் போட்டுவிட்டு சதுரனுக்காகவும் இம்ரானுக்காகவும் காத்திருந்தார் கமலநாதர்.

குகைக்குள்ளே தட்டுத்தடுமாறி சென்றுகொண்டிருந்த சதுரனுக்கும் இம்ரானுக்கும் எதுவுமே புரிபடவில்லை. எந்தப் பாதையில் நடந்தாலும் அது முட்டுச் சந்தாகவே இருந்தது. நேரம் செல்லச்செல்ல இருவருக்குமே மனவுளைச்சல் அதிகரித்தது.

"ச்சை! என்ன இது? இப்படியே சென்றுகொண்டிருந்தால் எப்போது தான் இந்திரரகசியத்தை அடைவது?" என்று புலம்பினான் இம்ரான்.

இந்திரரகசியம் என்று இம்ரான் சொன்னது தான் தாமதம். நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என பஞ்சபூதங்களும் தனித்தனியே ஐந்து போர்வீரர்களாக உருமாறி அவர்களின் முன் நின்றன.

"எங்களை வெற்றி கொண்ட பிறகு உங்கள் பயணம் தொடரட்டும்!" என்று இருவரின் வழியையும் மறித்துக்கொண்டு நின்றன. அவைகளைப் பார்த்த இருவரின் முகங்களிலும் அத்தனை மலர்ச்சி.

"துகிரா..."

"வீரா..." என்று ஒருவரை ஒருவர் புன்னகையுடன் அழைத்துக்கொண்டவர்கள், "விளையாட்டைத் துவங்கலாமா?" என்று ஒரே நேரத்தில் கேட்டுக்கொண்டு சிரித்தனர்.

'இவர்களென்ன பைத்தியங்களா? நம் ஐவரைக்கண்டும் அஞ்சாது இப்படி இளிக்கின்றனரே!' என்று பஞ்சபூதங்களுக்குமே ஒரே குழப்பம் தான். ஆனால் தம்பன வித்தைகளில் தேர்ந்து சூட்சம சக்திகளையே ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்ற துகிரனுக்கும் வளிக்கட்டு, அழற்கட்டு, நீர்க்கட்டு, மணற்கட்டு, உடுபதக்கட்டு முதலிய கலைகளை இந்திரரகசியத்தின் உதவியினால் கற்றுத் தேறிய வீரனுக்கும் சண்டை என்றதுமே உடலில் புத்துணர்ச்சி பாய்ந்தது.

கைகளிலும் கழுத்திலும் நெட்டி முறித்து இரு கால்களையும் வலுவாக தரையில் ஊன்றி இருவரும் சமருக்குத் தயாராக, "எங்களையே எதிர்க்கத் துணிந்தீர்களா?" என்று பஞ்சபூதங்களும் உறுமின.

"பிறகு என்ன செய்வோமென்று எதிர்பார்த்தீர்கள்? வீரனென்று பெயரை மட்டும் வைத்துக்கொண்டு அரும்பெரும் சாகசம் எதையும் இதுவரையில் செய்யவே இல்லையே என்கிற ஆதங்கம் என்னுள் நிறையவே இருந்தது. அதற்கு வடிகாலாக பஞ்சபூதங்களுமே வருமென்கையில் அவற்றை நிராகரிக்க நானென்ன பித்தனா?" என்று

பகடி செய்தான் சதுரன்.

"என்ன திமிர்?!" என்று பஞ்சபூதங்களும் ஒரே குரலில் உரக்க கூற, "அய்யய்ய! இதென்ன நச்சரிப்பு, நீங்கள் சண்டையிட வந்தீர்களா இல்லை எங்களை செவிடாக்க வந்தீர்களா?" என்று கேட்டு இம்ரான் தன் காதுகளைக் குடைந்தான்.

"உங்கள் கொட்டத்தை எப்படி அடக்குகிறோமென்று பாருங்கள் மானிடர்களே!" என்று கறுவியபடியே சதுரனையும் இம்ரானையும் தாக்கத் தயாராயினர் பஞ்சபூதங்களும்.

ஒரு நக்கல் சிரிப்பை மட்டுமே வெளியிட்ட சதுரன், மந்திரங்களை நினைவுக்கு கொண்டு வர முனைய, ஏதோவொன்று நடுவில் தோன்றி அவன் சிந்தையைக் கலைத்தது. அந்த இடைவெளியில் வாயு தேவன் சதுரனைத் தாக்க, பத்தடி தள்ளிப்போய் கீழே விழுந்தான் சதுரன். இதனைக்கண்ட மற்ற பூதங்கள் சிரித்தனர்.

"பரவாயில்லை! பேச்சிலாவது வீரமிருந்ததே!" என்று வாயு தேவன் சதுரனை எள்ளி நகையாடினர்.

நீர்க்கட்டு வித்தையில் வல்லவனான துகிரன் வருண தேவனை வறுத்தெடுத்துக் கொண்டிருக்க, தனக்கு மட்டும் ஏன் மந்திரங்கள் நினைவுக்கு வர மறுக்கின்றன என்று குழம்பினான் சதுரன். இதில் ஏதோ சூதிருக்கிறது என்பதை உணர்ந்தவன், மனதினில் ஈசனையும் இந்திர ரகசியத்தையும் முழுமையாக இருத்தித் துதித்தான். அவனைப் பிணைத்திருந்த காமரியின் கடைசிக் கயிறுகளும் அந்நேரத்தில் அற்றுப்போக, முற்பிறவியில் வீரன் எத்தனை கலைகளைக் கற்றிருந்தானோ, அவற்றின் சூட்சமங்கள் மொத்தமும் இப்பிறவியில் சதுரனுக்கும் வசப்பட்டது.

இதைத்தான் நம் வள்ளுவப் பெறுந்தகை,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

என்றார் போலும்.

கையைத் தரையில் ஊன்றாமல் கால்களைச் சுழற்றி எழுந்தவன், "மன்னிக்கவும். துருயேறிய மூளைக்கு இது தேவை தான்." என்று சொல்லிப் புன்னகைத்த பின், சரியான மந்திரப் பிரயோகத்தை செய்ய, வாயு தேவன் மூச்சு பேச்சற்று வீரனிடம் பணிந்தான்.

தனித்தனியே மோதினால் இவர்களை வீழ்த்துவது கடினம் என்பது புரிய, அக்னி தேவன் இம்ரானையும், பூமி தேவனும் ஆகாய தேவனும் சதுரனையும் நோக்கிச் சென்றனர்.

அக்னி தேவன் தன்னை நோக்கி வருவதை முன்பே தெரிந்துகொண்ட இம்ரான், தன் கைகளில் சிக்குண்டிருந்த வருண தேவனை வைத்தே அக்னி தேவனுடன் சமர் செய்தான். நீரும் நெருப்பும் மோதிக்கொண்டு தங்களுக்குள்ளாகவே வதைபட்டுக்கொண்டிருக்க, மற்ற மூன்று தேவர்களின் நிலையும் அந்தோ பரிதாபமாகிக்கொண்டிருந்தது.

வீரனால் ஒரு நேரத்தில் ஒரு மந்திரத்தை மட்டுமே திறம்பட உச்சரிக்க முடியும் என்று நம்பியிருந்த பூமி தேவனுக்கும் ஆகாய தேவனுக்கும் உரிய சரியான பதிலடியைத் தந்தான் சதுரன். காமரியின் பிடியிலிருந்து விடுபட்டதும் முழுமையான சித்திகள் வசப்பட, ஒரே நேரத்தில் நிலம், காற்று, ஆகாயம் முதலிய மூன்று பூதங்களையும் பந்தாடினான்.

எப்படி முயன்றாலும் சதுரனும் இம்ரானும் பஞ்சபூதங்களையும் அடக்கி ஆள, போதுமடா சாமி! என்று ஐந்து தேவர்களும் இந்திரரகசியம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் குகைக்கு வழி காண்பித்து விட்டு அங்கிருந்து அகன்றனர்.

முன்பு சதுரன் இருட்டில் துழாவிய குகையில் இப்போது நல்ல வெளிச்சமிருந்தது. நேராக இம்ரானை அழைத்துக்கொண்டு சென்றவன், சிம்மனின் சிலையை அவனுக்குக் காண்பித்தான். அதன்மீது வீற்றிருக்கும் ஆறுவயது பாலகனையும் சிம்மனையும் பரிவுடன் தொட்டான் சதுரன்.

"எத்தனை யுகங்கள் நடுவில் கடந்து போயின? ஆயினும் நேற்று நடந்ததைப் போலவே என்நெஞ்சில் ஆறாத காயமிருக்கிறதே! உன் நினைவாக எழுப்பவேண்டுமென்று நான் நினைத்த பள்ளிப்படைக் கோயில் இன்றுவரையில் என் கனவாகவே முடிந்து விட்டதே!" என்று சொல்லி சிம்மனைக் கட்டிக்கொண்டு கண்கலங்கினான் சதுரன்.

"வீரா! கலங்காதே! எங்கிருந்து வந்தாளோ அங்கேயே காமரியை அனுப்பிவிட்டு சிம்மனுக்கு ஊர் மெச்ச கோயில் எழுப்புவோம்!" என்று சதுரனின் முதுகினை தட்டிக்கொடுத்தான் இம்ரான்.

"சரி சரி, வா நேரமாகிறது. இந்திரரகசியத்தின் கடைசிப்பகுதி எங்கிருக்கிறது என்று கண்டறியவேண்டும்!" என்று விட்டேற்றியாக சொன்னான் சதுரன். அவன் மனதினில் துகிரனை கடைசி முறை சந்தித்தபோது பேசியவைகள் நெருடலை ஏற்படுத்தியிருந்தது. அதன்காரணமாக தேவையின்றி அவனுடன் பேசுவதை தவிர்த்தான் சதுரன். இத்தனை நேரமும் இல்லாத ஒரு ஒதுக்கம் அவனிடம் புதிதாய்த்

தோன்றியதைப் பார்த்த இம்ரானுக்கு மனம் கனத்தது. 'வீரன் தன் மீது இன்னும் கோபமாக இருக்கிறானா?' என்று நினைக்கவே அவனுக்கு வலித்தது. சற்று நேரம் அமைதியாக குகையை நோட்டமிட்டவர்கள்,

"என்னை மன்னித்துவிடு!"

"என்னை மன்னித்துவிடு!"

என்று ஒரே நேரத்தில் சொல்ல, இருவருமே பின்கழுத்தை தேய்த்துக்கொண்டு அசடு வழிந்தனர்.

முதலில் நீ சொல் என்பதைப்போல சதுரன் சைகை செய்ய, "உன்னிடம் காமரியைப் பற்றி முன்பே கூறியிருக்க வேண்டும் நண்பா. குருதேவர் ஆணைக்குப் பணிந்து பெரிய தவறு செய்துவிட்டேன். என்னை மன்னிப்பாயா?" என்று வேண்டினான் இம்ரான்.

"குருதேவர் ஆணையென்று நீ கூறிய பிறகும் உன்னை சந்தேகித்தது என் தவறு துகிரா! என் தவறுக்கான தண்டனையை நாம் அனைவருமே அனுபவித்துவிட்டோம். என்னை மன்னிப்பாயா?" என்று சதுரன் கேட்க, "இதெல்லாம் ஒரு தவறா? உன் இடத்தில் யாரிருந்தாலும் அப்படித்தான் நடந்துகொண்டிருப்பார்கள். அதைவிடு. நான் உன்னிடம் வேறொன்று கேட்க வேண்டுமென்று நினைத்தேன். ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாக குருதேவரிடம் சொன்னாயே, அது என்ன?" என்று பதில் கேள்வி கேட்டான் இம்ரான்.

"ஒன்றென்ன ஓராயிரம் தவறுகளைச் செய்திருக்கிறேன். இந்திரரகசியத்திற்கு சரியாக உருவேற்றாமல் இருந்தது, மிகப்பெரிய விலை கொடுத்து அடைந்திருந்த செங்கோலை என் சுயலாபத்துக்காகப் பயன்படுத்தியது, ஆரன் அண்ணன் பொய்யுரைக்கிறான் என்று தெரிந்தும் அவனுடன் சென்றது. இந்திரரகசியம் தொட்டுவிடும் தூரத்தில் இருந்தும் அதனைக் கைநழுவ விட்டது... இப்படி எண்ணற்ற தவறுகளைச் செய்திருக்கிறேனே!" என்று வருந்தினான் சதுரன்.

"அப்படிப் பார்த்தால் என் மீது தான் மிகப்பெரிய குற்றமிருக்கிறது. காமரியை முதன்முதலில் அரண்மனையில் பார்த்தபொழுதே நான் பேரரசரிடம் அவளைப் பற்றித் தெரிவித்திருந்தால், இந்தப் பிரச்சனையே வந்திருக்காதே!" என்று பெருமூச்சு விட்டான் இம்ரான்.

"நடந்ததை எண்ணி கழிவிரக்கம்கொள்ள மட்டுமே நம்மால் இப்பொழுது முடியும் நண்பா; எதையும் மாற்ற இயலாது. நீயும் கடந்ததை விட்டுத்தள்ளு. இந்தப் பிறவியிலேனும் நாம் அனைவரும் நம் மனதிற்குப் பிடித்த அன்பான அழகானதொரு வாழ்க்கையை

வாழுவோம்." என்று சதுரன் சொல்ல, இம்ரானின் கண்களும் மின்னின.

தங்களுக்குள் இருந்த பிணக்கை சரிசெய்துகொண்ட தோழர்களின் நட்பு முன்னை விட பலம் பொருந்தியதாக மாறியது. அவர்களின் நட்புச்சுடர் உள்ளிருந்து ஒளிவிட, சிம்மனின் மீது அமர்ந்திருக்கும் சிறுவனின் சிலை சற்று நகர்ந்தாற்போலத் தெரிந்தது.

"துகிரா! அங்கே பார்த்தாயா? சிலை தானாக நகர்ந்திருக்கிறது!" என்று சதுரன் கைகாட்ட, இம்ரான் மெல்லச் சென்று சிலையை ஆராய்ந்தான். யாளியின் மேல் ஒரு சிறிய சுரங்கம் போல அமைத்து, ஒரு குண்டலத்தை அங்கே யாரோ மறைத்திருந்தனர். அதைப் பார்த்த இம்ரானுக்குள் ஏதோ இனம்புரியா உணர்வு தோன்ற, அதைக் கையில் எடுத்தான். காதலன் கைகளுக்குள் கடைசியில் தஞ்சம் புகுந்த காரிகையைப் போலே இந்திரரகசியமும் திருப்தியுடன் ஒளி வீசியது!

இந்திரரகசியத்தின் கடைசிப் பாகத்தையும் கண்டுபிடித்த பின்னர், சதுரனும் இம்ரானும் கமலநாதரும் மற்றவர்களும் இருந்த குகையை அடைந்தனர். கையில் குண்டலத்தோடு வரும் இம்ரானைக் கண்டதும் சென்ற காரியம் வெற்றியடைந்ததைத் தெரிந்துகொண்ட மற்றவர்கள் ஆரவாரக் கூச்சலிட்டனர்; தேவ்னா ஒருத்தியைத் தவிர.

கமலநாதரின் கைகளில் கடைசித் துண்டையும் இம்ரான் வைத்ததும், ஐந்து அணிகலன்களுமே ஒளிவீசி, தத்தமது சகோதரர்களை நலம் விசாரித்தது. அப்போது தான் இசையினுள் அந்தக் கேள்வி எழுந்தது!

"குருதேவா! இப்படி ஐந்து துண்டங்களாக உடைந்திருக்கிறதே! இதனை எப்படிச் சரிசெய்வது?" என்று கேட்டாள்.

கேள்வி சரியானதுதான் என்றாலும் என்ன பதிலைத் தருவது என்று திணறினார் கமலநாதர். அவரது பரிதவிப்பு மற்றவர்களுக்குப் புதிதாகத் தெரிய, தேவ்னா மட்டும் தலை குனிந்து மௌனித்திருந்தாள்.

"இதோ! இந்தப் பெண்ணை பலிகொடுத்தால் இந்திரரகசியத்தை மீண்டும் இயக்கலாம்!" என்று சொல்லியபடியே இப்பிறவியில் நோவாவாகப் பிறந்திருக்கும் நாவகன் வந்து சேர்ந்தான்.

அவன் பதிலில் அனைவரும் அதிர, கமலநாதர் நீண்ட நெடிய மூச்சினை விட, அர்ஜுன் தேவ்னாவை கேள்வியாக நோக்க, அவள், கண்களில் கண்ணீருடன் கீழுதட்டைக் கடித்துக்கொண்டு தலைகுனிந்திருந்தாள்.

ஆனால் இவை எல்லாமே ஒரே ஒரு நொடி தான்! அடுத்த வினாடியே ஏழு ஜோடிக் கண்களும் புதிதாக வந்திருந்தவனின் மீது

கொலைவாட்களை ஏவியது!

## அத்தியாயம் 27

நோவா இங்கு ஏன் வந்தான் எப்படி வந்தான் என்ற சிந்தனையில் அங்கிருந்தோர் உறைந்தது ஒரு கணமே! மறுகணம் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டாவைப் போல சீறிப்பாய்ந்த சதுரன் நோவாவின் சட்டையைப் பற்றினான். ஒரு அலட்சியமான பார்வையுடன், நோவா தன்னை விலக்கிக்கொள்ள, சதுரன் கொதிநிலைக்கே சென்றான். சற்றும் தாமதியாமல் அவன் சட்டையை மீண்டும் பிடித்து அவனை அப்படியே சதுரன் தூக்க, பூமியிலிருந்து அரையடி மேலே சென்றான் நோவா.

"பழைய கணக்கை பிறகு பார்த்துக்கொள்ளலாம். எனக்கு இந்தப் பைத்தியக்காரன் கமலநாதனோடு கதைக்க வேண்டியுள்ளது!" என்று திமிர் குறையாமல் நோவா பதிலளிக்க, "என்ன பேசுவதென்றாலும் அதற்கு முதலில் நீ உயிருடன் இருக்கவேண்டுமே!" என்று சொன்ன சதுரன், மூர்க்கமாக நோவாவை கீழே தள்ளினான்.

"உன் உதிரம் தானே அவள் உடலிலும் ஓடுகிறது என்று ஒரு நிமிடம் சிந்தித்தாயா? மூடனே! அல்லது கர்ப்பிணி என்று தான் கருணை காட்டினாயா?" என்று கேட்டவாறே அவன் தாடையை உடைத்தான் சதுரன். நோவா என்னதான் உடற்பயிற்சி செய்து கட்டுக்கோப்பாக உடலை வைத்திருந்தாலும், சதுரனின் பாக்ஸருக்கு இணையான பலத்திற்கு முன் அவனால் எதுவும் செய்யமுடியவில்லை; உண்மையில் சதுரனை திருப்பித் தாக்க அவன் முயலவும் இல்லை.

"வீரா! நில். அவன் கூறுவதை முதலில் கேட்போம்!" என்று கமலநாதர் சொல்லியதைக்கூட கவனிக்காமல், நோவாவை புரட்டி எடுத்துக்கொண்டிருந்தான் சதுரன். அவன் ஆத்திரம் தணியட்டும் என்று மற்றவரும் மௌனமாக ஆனால் ஒருவகை திருப்தியோடு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

இப்படியே விட்டால், நோவாவின் பிணத்தை அவன் அன்னையினால் கூட அடையாளம் காணமுடியாது என்பதனை உணர்ந்த கமலநாதர், நேராகச் சென்று அவர்கள் இருவரையும் விலக்கினார். தன் தோளை யாரோ பற்றுவது போலத் தோன்ற, ஓங்கிய கையுடன் திரும்பிய சதுரன் கமலநாதரின் அமைதியான முகத்தை பார்த்ததும் தலை தாழ, கையை இறக்கினான்.

சதுரனின் முகத்திலிருந்த வெறியைக்கண்டு அதிர்ந்தவர்கள், எங்கே அவன் குருதேவரையே அடித்து விடுவானோ என்று பயந்தே

போயினர். அவன் கையை இறக்கியதும் தான் அங்கிருந்த அனைவருமே நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டனர்.

"இவன் எப்படி உள்ளே வந்தான்?" என்று அர்ஜுன் வாய்விட்டே யோசிக்க, "தரித்திரம்! வந்ததும் கலகத்தை ஆரம்பித்து விட்டது!" என்று லயா பொருமினாள்.

அளவுக்கு அதிகமான கோபத்தின் விளைவாக சீராக மூச்சு விட முடியாமல் சதுரன் வேறுபக்கம் திரும்பி நிற்க, அரண்யா எதுவும் பேசாமல் அவன் முதுகை வருடினாள். நோவாவை பார்த்ததும், அவளுக்கு நாவகனிடம் கடைசியாக, 'என் பிள்ளையை விட்டுவிடு!' என்று கெஞ்சிய நிமிடங்களே நினைவிற்கு வந்தது. வயிற்றுப்பிள்ளைக்காரி என்கிற பரிதாபம் கிஞ்சித்துமின்றி அவள் உயிரைக் குடித்தவனை என்ன செய்வது என்று புரியாமல் அவள் மனம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. தான் வாழ வேண்டிய வாழ்க்கையை அநியாயமாக பறித்ததோடில்லாமல் தங்கள் தாய்நிலத்தையும் முழுவதுமாக அழிக்கத் துணைபோன பாவி என்று அங்கிருந்தவர்கள் அனைவரும் நோவாவிற்கு வசைமாரி பொழிய, சற்றும் அசராது, "காமரி முழுச் சக்தியுடன் எழுந்துவிட்டாள். இப்பிறவியிலாவது நீங்கள் உயிர் பிழைத்து வாழ வேண்டுமானால், நான் சொல்வதை கேட்பதைத் தவிர உங்களுக்கு வேறு வழி கிடையாது!" என்று சொன்னான்.

"உன்னை நம்புவதும் ஒன்று தான். என் கையாலேயே என் வைனியின் கழுத்தைத் திருகுவதும் ஒன்றுதான்!" என்று வெறுப்புடன் உமிழ்ந்தான் இம்ரான்.

"அவள் வாழ்ந்தாலோ அல்லது இறந்தாலோ எனக்கென்ன வந்தது? விருப்பம் போல செத்து மடியுங்கள்!" என்று எகத்தாளமாக நோவா கூற, "என்ன சொன்னாய்?" என்று விண்ணதிரக் கத்தினான் இம்ரான்.

"செத்து மடியுங்கள் என்றேன்! காமரியை கொல்வதற்கு அவர்கள் இருவரும் போதும். நீ எனக்குத் தேவையில்லை!" என்று இசையையும் சதுரனையும் கைகாட்டிச் சொல்லி, தோள் குலுக்கினான் நோவா.

'காமரியை கொல்வதற்கு...' என்று நோவாவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாமல் அனைவரும் திகைக்க, இசை மட்டும் அவனை நம்பாத பார்வையே பார்த்தாள்.

இடுங்கிய கண்களுடன் கமலநாதர் நோவாவைப் பார்த்து, "என்ன கதை சொல்லச் சொல்லி காமரி உன்னை அனுப்பினாளோ... அதைச் சொல்லி சிரமப்படாமல் வந்த வழியே செல்லப்பா! களத்தில்

சந்திப்போம்!" என்று தீர்க்கமாகச் சொன்னார்.

கமலநாதர் நோவாவை வெளியே போ என்று சொன்னது தான் தாமதம், அவன் கழுத்தைப் பிடித்து இம்ரான் தரதரவென இழுத்துச் சென்றான்.

"இதோ, இந்த தேவ்னாவின் உயிரை என்னால் காப்பாற்ற முடியுமென்று சொன்னால்?" என்று நோவா உரக்கச் சொன்ன மறுநொடி, இம்ரானின் கை தானாக நோவாவின் கழுத்திலிருந்து விலகியது. அவன் சொன்ன வாக்கியத்தின் பொருள் உணர்ந்த அர்ஜுன் தேவ்னாவை பார்க்க, உயிர்வாழ்வதற்கான கடைசி வாய்ப்பாக நோவாவையே இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தாள் தேவ்னா. அவள் கண்களில் நப்பாசையும் நிராசையும் போட்டி போட்டது. அர்ஜுனின் பார்வையில் கலந்திருந்த அன்பை கமலநாதர் உணர்ந்தார். அதனால் மட்டுமே நோவாவிற்கு இரண்டாவது வாய்ப்பை வழங்குவதற்கு தயாரானார்.

அங்கு நடந்துகொண்டிருந்தவைகளுக்கும் தங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதைப் போலவே சதுரனும் இசையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

"தேவ்னாவின் உயிரை உன்னால் எப்படி காக்க முடியும்?" என்று சந்தேகமாகக் கேட்டான் அர்ஜுன்.

"முடியாமல் என்ன? அதற்குத்தான் வந்திருக்கிறேன்." என்று முகத்தில் வழிந்த குருதியை துடைத்துக்கொண்டே பூடகமாகப் பேசினான் நோவா.

"என்னவென்று விரைந்து தான் சொல்லித் தொலையேன். உயிர்பலி இல்லாது போகட்டும்!" என்று எரிந்து விழுந்தாள் லயா.

"உயிர்பலி இருக்காது என்று நான் எப்போது சொன்னேன்? நிச்சயம் ஒரு உயிரை பலி கொடுத்தால் மட்டுமே இந்திர ரகசியம் பழைய சக்திகளுடன் முழுமையாக வீரனின் கைகளுக்கு வசமாகும்!" என்று குழப்பினான் நோவா.

"தேவ்னாவைத் தவிர வேறு யாரையும் பலியாக இந்திரரகசியம் ஏற்காது!" என்று திடமான குரலில் கமலநாதர் மறுக்க, தேவ்னாவின் முகம் ரத்தப்பசையை இழந்தது. அவள் முகத்தில் சற்று முன்பு தோன்றியிருந்த ஒளி அப்படியே அணைந்ததைப் பார்த்த அர்ஜுனுக்குள் தாங்க முடியாத வேதனை படர்ந்தது.

"அப்படியென்று இந்திரரகசியமே உன்னிடம் கூறியதா கிழவா?" என்று கமலநாதரை பகடி செய்தான் நோவா.

"எல்லை மீறுகிறாய்!" என்று நோவாவை அர்ஜுன் எச்சரிக்க, "இந்திரரகசியத்தை நம்மிடமிருந்து திருடுவதற்காகவே இவன் முயல்கிறான்!" என்றான் இம்ரான்.

"திருடுவதா? அறிவிலியே! தொட்டாலே என் கையை பொசுக்கும் இந்திரரகசியம், அதை நான் திருட முயன்றால் என் உயிரக் குடித்துவிடாதா?" என்று இம்ரானை ஏளனம் செய்தான் நோவா.

"வேறு எதற்குத்தான் இங்கே வந்து சேர்ந்தாயோ?" என்று எரிச்சலாகக் கேட்டான் இம்ரான்.

"என் க்றிஸ்டினை கொன்ற காமரியை பழிவாங்குவதற்காக!" என்று கமலநாதரின் கண் பார்த்துச் சொன்னான் நோவா.

"இதென்ன புதுக்கதை? அது யார் க்றிஸ்டின்?" என்று அடுக்கிக்கொண்டே போன இம்ரானை நிறுத்துமாறு சைகை செய்தான் நோவா.

"கேள்விகளை மட்டும் கேட்டுக்கொண்டே சென்கிறாயே, பதிலளிப்பதற்கு எனக்கும் சற்று அவகாசம் தந்து தொலைத்தால் தான் என்ன?" என்று எரிந்து விழுந்தான் நோவா.

"நீ எங்களுக்கு செய்த அத்தனை தீமைகளுக்கும் உன்னை நாங்கள் இதுவரையில் உயிருடன் விட்டுவைத்திருப்பதே பெரிது. எங்களுக்கு என்ன தேவையோ அதை மட்டும் சொல்லிவிட்டுச் செல்!" என்று அமைதியாக ஆனால் ஆழ்ந்தகுரலில் இசை சொல்ல, நோவா வெளிப்படையாகவே எச்சில் விழுங்கினான். ஏற்கனவே அவனை நம்பாதவர்கள், அவன் இப்பிறவியில் செய்திருக்கும் காரியத்தை அறிந்தால் நிச்சயம் அவன் சொல்ல வருவதை சொல்லி முடிப்பதற்குள் கழுவேற்றிவிடுவார்கள் என்று உள்ளுக்குள் பயந்து செத்தான். ஆனால் முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் பாறையைப்போன்ற முகத்துடனேயே இருந்தான்.

இசையின் ஆணையைத் தொடர்ந்து அங்கே யாரும் பேசாத காரணத்தால் தொண்டையை செருமிக்கொண்டு நோவா பேசத்துவங்கினான்.

"காமரியின் ஆன்மாவின் சிறுபகுதி விடுதலை அடைந்ததும் கனவில் என்னை வந்து சந்தித்தாள். அதன்பிறகு இறந்துபோன என் தாத்தாவின் வாயிலாக என் பூர்வீகத்தை அறிந்துகொண்டேன். என் முற்பிறவி நினைவுகள் எனக்கு முழுமையாக வந்ததும், சுய உருவம் பெற்று காமரி மீண்டும் எழவேண்டும் என்பதற்காக நான் செய்யாத பாவமில்லை. இம்ரானாகப் பிறந்திருந்த துகிரனை தேடிக்கண்டுபிடித்து

கடல்சார் அகழ்வாராய்ச்சி என்கிற பெயரில் காமரியின் ஆன்மா முழுவதையும் விடுவிக்க அனுப்பினேன்.

என் திட்டப்படியே காமரியும் விடுதலை பெற்று நான் இருக்குமிடம் வந்தாள். காமரியை பல்லாயிரம் ஆண்டுகள் கழித்துப் பார்த்ததும், என்னவள் என்னிடமே வந்துவிட்டாள் என்று பூரித்துப் போனேன். ஆனால் அவள் என்றுமே என்னவளாக இருந்ததில்லை என்பது பிறகு தான் தெரிந்தது." என்று சொல்லி அர்ஜுனை பார்த்து ஒரு கசந்த புன்னகையை சிந்தினான். நோவாவின் வலி எத்தகையது என்று அர்ஜுனால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்று நோவா நம்பினான். அதை மெய்ப்பிப்பதைப் போலவே அர்ஜுனும் வேதனையில் விழிகளை மூடிக்கொண்டான்.

நோவா மீண்டும் தொடர்ந்தான், "கமலநாதரைப்போல ரூபமாகவும் அரூபமாகவும் இருக்கும் சக்தி தனக்கில்லை என்று சொன்னவள், ஏழு பலிகளைத் தந்தால் தான் தன்னால் மீண்டும் பழைய உடலுடன் இப்புவியில் நடமாட முடியுமென்றும் சொன்னாள். காமரியின் மீது பைத்தியமாக இருந்த நான், அவள் என்ன சொன்னாலும் செய்வதற்கு சித்தமாக இருந்தேன். அவள் சொன்னபடியே முதல் நான்கு பலிகளைத் தந்தேன். ஐந்தாவது பலியாக கனலியை அவள் காண்பித்ததும், என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. அவளை விட்டுவிடுமாறு சொல்லலாம் என்று கூட நினைத்தேன். ஆனால் என் எண்ணத்தை சரியாக கணித்தவள் கனலியை விட முடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டாள்.

கனலி இறந்து போவாள் என்று நான் எதிர்பார்த்திருக்க, எப்படியோ அவள் தப்பினாள். அதன் பிறகு தான் சதுரனாகப் பிறந்திருந்த வீரனை நான் காண நேர்ந்தது. அவனைப் பார்த்த நொடியிலிருந்து என் நிம்மதி பறிபோயிற்று. அவனுக்கும் காமரிக்கும் ஏதேனும் தொடர்பிருக்குமா என்று எண்ணியெண்ணி மனதளவில் நான் செத்துக்கொண்டிருந்தேன். அதிலும் யார் செத்தாலும் கவலைப்படாத அவள், அவன் மட்டும் நலமாக இருக்கவேண்டுமென்று விரும்புவதை தெரிந்துகொண்ட பின், பொறாமையின் எல்லைக்கே சென்றேன்.

வீரனுக்கு முற்பிறவி நினைவுகள் வந்ததும் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றவள், உங்களை எதுவும் செய்யமுடியாத காரணத்தால் என்னை வருத்த முடிவு செய்தாள் போலும். அதனால் என் சகோதரியின் பத்து வயது மகள் க்றிஸ்டினை கடைசி பலியாக என் கையாலேயே தத்தம் செய்ய வைத்துவிட்டாள்." என்று மரத்த குரலில் நோவா சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, "கொலைகாரா!" என்றும் "பாவி!"

என்றும் சொல்லி அவனைத் தூற்றினாள் லயா.

"இந்திரரகசியம் அவள் வசமானதும் க்றிஸ்டினை உயிர்ப்பிக்கிறேன் என்று எனக்கு அவள் வாக்குத் தந்திருந்தாள்!" என்று மென்குரலில் நோவா சொல்ல, "பலிகொடுத்த உயிரை திரும்பவும் மீட்கமுடியாது என்று உனக்குத் தெரியாதா?" என்று காட்டமாக மாயா கேட்டாள்.

இல்லை என்று அவளிடம் தலையசைத்தவன், "உண்மையில் அப்போது எனக்கு அது தெரியாது. க்றிஸ்டின் எனக்கு மகள் போன்றவள். அவளை பலி கொடுத்தது எனக்கு எளிதாக இருக்குமென்றா நினைக்கின்றீர்கள்? நான் செய்த பாவங்கள் அத்தனைக்கும் தண்டனையாக மரணவலியை இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்." என்று சொல்லி கண்களைத் துடைத்துக்கொண்டவன் மேலும் தொடர்ந்தான்.

"முழு சக்தி பெற்று எழுந்தவள், என்னை நாயினும் கீழாக நடத்தத் துவங்கினாள். காதல் மயக்கத்திலிருந்த நான் இவை எதையுமே கண்டுகொள்ளவில்லை. காமரியை அடைத்துவைத்திருந்த இடத்தின் அருகில் தான் இந்திரரகசியம் இருக்கவேண்டுமென்று ஊகித்த நாங்கள், இம்ரான் முதன்முதலில் ஆழ்கடலுக்கு சென்றதிலிருந்தே வேறு ஆட்களை வைத்து அதை தேடச் சொன்னோம். வீரன் ரகசியத்தை ஏற்கனவே உருவேற்றியதால், எப்படியும் யார் கண்களிலாவது இந்திரரகசியம் சிக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தோம். எங்கள் நம்பிக்கையில் இடி விழுந்தது கமலநாதன் இப்போது கதை சொல்லி முடித்தபோது தான்!" என்றான் நோவா.

"குருதேவர் சொன்ன கதை உனக்கெப்படி தெரியும்?" என்று இறுகிய குரலில் சதுரன் வினவினான்.

"காமரிக்கு கண்கள் எல்லா இடத்திலும் இருந்தாலும்... உங்கள் குருதேவர் மனதுவைக்காமல் எங்களால் நீங்கள் பேசியதை அறிந்துகொண்டிருக்க முடியுமென்றா நீ நினைக்கிறாய்?" என்று சதுரனைப் பார்த்துக் கேட்டான் நோவா. அவன் பதிலில் அனைவரும் குழம்பினாலும் கமலநாதர் மட்டும் ஒரு மர்மப்புன்னகையை வீசினார்.

"எங்கு வரவேண்டுமென்பது உங்களுக்கு தெரியவேண்டுமல்லவா?" என்று அதே புன்னகையோடு சொன்னார் கமலநாதர்.

"குருதேவா...?" என்று அர்ஜுன் இழுக்க, "இளவரசியுடன் காமரி நேரடியாக சமர் செய்தால் மட்டுமே இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைக்குமப்பா. நாவகனின் காதலை காமரி என்றைக்குமே

ஏற்றதில்லை என்று நாவகனுக்கு தெரியவரும் போது, அவன் அவளை விட்டு நீங்குவான் என்று நான் கருதினேன். அதனாலேயே இங்கு நடப்பவற்றை அவர்களும் தெரிந்துகொள்ளட்டும் என்று முடிவுசெய்தேன். ஆனால் இந்திரரகசியம் பற்றிய செய்திகளை சொன்னதும், நாம் மேற்கொண்டு என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பதை அவளால் தெரிந்துகொள்ள முடியாமல் செய்துவிட்டேன்! நாவகன் வந்ததை காமரி அறிந்திருக்க மாட்டாள்." என்று விளக்கினார் கமலநாதர்.

"இல்லை கமலநாதரே! நான் வந்ததை அவள் அறிவாள்." என்றான் நோவா. புருவங்கள் முடிச்சிட கேள்வியாக நோவாவை நோக்கினார் கமலநாதர்.

"வீரனின் மரணத்திற்குப் பிறகு காமரி நடந்துகொண்ட முறையை நீங்கள் விளக்கியதும் என் இதயம் சுக்குநூறாக சிதைந்து போனது. ஆனால் அவளோ எதுவுமே நடக்காததை போலவே நடந்துகொண்டாள். இந்திரரகசியம் உடைந்துபோனது என்பதை அறிந்த பிறகே அவளது ஆவேசம் அதிகரித்தது. என்னை வழமை போலத் திட்டினாள். நானும் வழமை போலவே அவள் பேச்சுக்களை கேட்பேன் என்று எண்ணினாள் போல. ஆனால் ஏற்கனவே அவள் ஏமாற்றியதை அறிந்த புகைச்சலில் இருந்த நான் அவளை அறைந்து விட்டேன்!" என்று நோவா சொல்ல, உள்ளிழுத்த மூச்சினை எவருமே வெளியிடவில்லை. அவர்களின் முகத்தை பார்த்த நோவாவால் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை.

ஒரு குறுஞ்சிரிப்பை சிந்தியபடியே மேலும் தொடர்ந்தான். "என்னை உடனே கொன்றுவிடுவாள் என்று தான் நானும் நினைத்தேன். ஆனால் அவளது கோபத்தை விட அப்போதைய அவளது புன்னகை கொடூரமாக இருந்தது. என்னை நெருங்கி வந்தவள், என்னிடம், என் குடும்பத்தாரும், க்றிஸ்டினும் உயிருடன் வேண்டுமானால், அரண்யாவை மீண்டும் கொன்றுவிடச் சொன்னாள். அப்படிச் செய்தால் க்றிஸ்டினை உயிர்ப்பிப்பதாக எனக்கு வாக்குத் தந்தாள்." என்று நோவா சொல்லி முடித்ததும், "நினைத்தேன். பாம்பு இன்னும் நஞ்சை கக்க ஆரம்பிக்கவில்லையே என்று!" என்றாள் லயா.

"வைனி! புரிந்து கொள். அரண்யாவை கொல்லும் எண்ணத்தோடு நான் இங்கு வரவில்லை. என் காரணமே வேறு!" என்று கெஞ்சினான் நோவா.

"நீ உயிருடன் இருப்பதை வைத்தே நீ சொல்வது பொய் என்று நிரூபணமாகிறதே!" என்றான் இம்ரான்.

"எப்பொழுதும் அவளிடம் பணிந்தே பழகிய நான் அவளுக்கு விசுவாசமாக இருப்பேன் என்று நினைத்துவிட்டாள் என்றே நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் என்னை எதற்காக அவள் உயிருடன் அனுப்ப வேண்டும்?" என்று நோவாவும் கடைசியில் குழம்பித்தான் போனான்.

"இதற்காகத்தான்! இவர்கள் கையால் நீ துடிதுடித்து இறந்துபோகத்தான்!" என்றாள் மாயா. "நீ செய்திருக்கும் கொடுமைகளுக்கு எல்லாம் உன்னை அணுஅணுவாக சித்ரவதை செய்யாமலா இவர்கள் இருப்பார்கள்? நீ திருந்திவிட்டாய் என்று சொன்னாலும் அதை நாங்கள் தான் நம்பிவிடுவோமா? அப்படியே நீ இறக்காமல் இருந்தால் கூட அரண்யாவை க்றிஸ்டினுக்காக கொல்லலாம் இல்லையா? இப்படி ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. காமரியின் ஒவ்வொரு செயலிலும் பதினாயிரம் அர்த்தங்கள் புதைந்து கிடக்கும்." என்று கனலி சொல்லிக்கொண்டிருக்கும் போதே வெளியே இடியும் மின்னலும் போட்டி போட்டுக்கொண்டு வானை அலங்கரித்தது.

"காமரி!" என்று அனைவரும் ஒரே குரலில் சொன்ன நேரம், "நேரம் அதிகமில்லை. நான் சொல்வதை கவனத்துடன் கேளுங்கள். இந்திரரகசியத்தை மீட்க, தேவ்னாவை விடுத்து என்னுயிரை எடுத்துக்கொள்ளுங்கள். இப்பிறவியிலாவது என் வாழ்க்கைக்கு ஒரே ஒரு அர்த்தமாவது கிடைக்கட்டும்!" என்று கண்ணீர் மல்க கமலநாதரின் கால்களில் விழுந்தான் நோவா.

'பிச்சைக்காரர்களுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை ஏது? வலிய வந்து உயிரைத் தருகிறேன் என்று அவனே சொல்லும் போது அதை ஏற்றால் என்ன?' என்ற எண்ணம் அனைவரின் உள்ளத்திலும் உதித்தது.

மற்றவரின் மனப்போக்கை புரிந்துகொண்ட கமலநாதர், "நீ சொல்வது சரி வராது நாவகா! ஆரனின் வம்சத்தை சார்ந்த ஒருவரால் தான் இந்திரரகசியத்தை சேர்க்க இயலும்." என்றார்.

"ஏன்?" என்று கேட்டான் நோவா.

"ஏனென்றால்... இந்திரரகசியத்துக்கும் வீரனுக்கும் துரோகமிழைத்தவன் ஆரன். இந்திரரகசியத்தை களங்கப்படுத்தியவனும் அவனே!" என்று உறுதிபடக் கூறினார் கமலநாதர்.

"ஆரனால் இந்திரரகசியம் களங்கப்பட்டது என்றால், அவனால் அதை தொட்டிருக்கவும் முடியாது; இதுகாறும் பாதுகாத்திருக்கவும் முடியாது. அதனால் அந்த காரணத்தை ஏற்றுக்கொள்ள இயலாது. மற்றொன்று... என்ன கூறினீர்? துரோகமா? இந்திரரகசியத்துக்கும் வீரனுக்கும் துரோகமிழைத்தவன் ஆரன் மட்டுமா?" என்று புதிர்

போட்டான் நோவா.

"இல்லை!" என்று முதலில் சொன்ன அர்ஜுனின் முகத்தில் அத்தனை மலர்ச்சி.

"முதன்முதலில் தடைசெய்யப்பட்ட மாயவித்தையை பயன்படுத்தி இந்திரரகசியத்தை அடைய முயன்று... இந்திரரகசியத்தை களங்கப்படுத்தியவன் நான்! இந்திரரகசியத்தின் மீது பேராசை கொண்டு மகிந்தன் என்னும் அரக்கனின் வலையில் விழுந்து, நான் செய்த அத்தனையும் பச்சை துரோகமே! இந்திரரகசியத்தை வீரனிடமிருந்து பிரிப்பதற்காக ஆரனை ஏவியதும் நானே! இப்படி எல்லாத்தவறுகளையும் செய்தவன் நானிருக்க, ஏதுமறியா சிறு பெண்ணை பலிகொடுத்தால் இந்திரரகசியம் என்றைக்குமே சேராது போகும்!" என்று தன் நீண்ட உரையை முடித்தான் நாவகன்.

மயானத்தில் கூட கொஞ்சம் சப்தமிருக்கக் கூடும். ஆனால் அந்த குகையினுள்ளே இத்தனை பேரிருந்தும் ஒரு சின்ன ஓசை கூட கேட்கவில்லை. அப்பொழுது வெளியே அணுகுண்டு வெடித்ததைப் போன்ற பயங்கர சப்தம் கேட்டு அவர்களின் சிந்தையை கலைத்தது.

"அரண்யா! நீ ஐம்பூதனார் உனக்கு கற்றுத்தந்த மந்திரங்களை ஒருமுறை மீண்டும் உருவேற்று.

வீரா! இந்திரரகசியத்தின் ஐந்து துண்டங்களையும் நீ கையிலேந்து!

நாவகா! நீ சொல்வது உண்மையாக இருக்கவேண்டுமென்று ஈசனிடம் மன்றாடு!" என்று கமலநாதர் சொல்லிக்கொண்டே செல்ல, நிலநடுக்கம் வந்ததைப்போல பூமி அதிர்ந்து, வெளியே மழை வலுக்க ஆரம்பித்தது.

பேயறைந்ததைப்போன்ற முகங்களுடன் இருந்த மற்றவர்களைப் பார்த்து கமலநாதர், "என்ன கூகை போல விழித்துக்கொண்டு நிற்கின்றீர்கள்? ஐம்பூதனாரின் கட்டுக்களையே உடைத்தவள் அவள். இந்திரரகசியம் முழுமை பெறும் வரையில் காமரியை உள்ளே வரவிடாமல் தடுத்து நிறுத்துங்கள்!" என்று இம்ரான், மாயா, அர்ஜுன் மற்றும் லயாவிற்கு கட்டளை பிறப்பித்தார் கமலநாதர்.

பதறிச் சிதறியவர்களை பார்த்து தேவ்னா திருதிருவென விழித்தாள். அவளுக்கு மட்டும் கமலநாதர் எந்தக் கட்டளைகளையும் சொல்லாமல் இருந்ததால் என்ன செய்வதென்று புரியாமல் அவள் தவித்தாள். அவளின் தவிப்பு அர்ஜுனுக்கு அந்த பதட்டமான நேரத்திலும் புரிந்தது.

அவளருகில் வந்து அவள் கரத்தை மெல்லப் பற்றியவன். "உன்னிடம் எவ்வளவோ பேசவேண்டும் தேவ்னா. இன்றிரவோடு எல்லாம் முடிந்துவிடும். நாளை காலையில் நிர்மலமான மனதுடன் உன்னிடம் சொல்லவேண்டியதைச் சொல்கிறேன்! கவனமாக இரு!" என்று சொல்லிவிட்டு, அவள் பதிலை எதிர்பாராமல் குகைக்கு வெளியே சென்றான் அர்ஜுன்.

முற்பிறவியில் நவிரன் குவேணியிடம் கூறிய அதே வார்த்தைகளை சொல்லிவிட்டு அர்ஜுன் போருக்குச் சென்றதும், புன்னகையோடு அழுகையும் போட்டிபோட்டுக்கொண்டு வந்தது தேவ்னாவிற்கு.

கடவுளே! இப்பிறவியிலாவது முழுமையான வெற்றியை எங்களுக்குத் தருவாயா? என்று கடவுளுடன் அவள் மனம் சண்டையிட்டது!

அவளுக்கு பதில் சொல்வதைப்போலவே அங்கிருந்து வெகு அருகில் ஒரு இடி இறங்கியது!

## அத்தியாயம் 28

பொதிகை மலையை இருள் சூழ்ந்திருக்க, கொட்டும் மழையில் அர்ஜுன், மாயா, இம்ரான், லயா என நால்வரும் குகையின் முகட்டில் நின்று பார்வையிட்டனர்.

"எல்லாம் நல்லபடியாக முடியவேண்டுமென்று ஈசன் அருள் புரியட்டும்!" என்று மாயா ஒரு நிமிடம் கண்களை மூடி தியானிக்க, அர்ஜுன் மாயாவிடம் மென்மையாக, "அப்பிறவியிலும் சரி இப்பிறவியிலும் சரி, நீ என்றைக்குமே தனியாள் இல்லை என்பதை மறவாதே. அத்தான் என்கிற நிலையில் இல்லை என்றாலும் அண்ணன் என்னும் உரிமையோடு உன்னை என்றுமே நான் காப்பேன்!" என்று சொல்ல, மூடிய இமைகளின் வழியே வழிந்த விழிநீரை சுண்டுவதற்குக் கூட மனமின்றி மௌனித்திருந்தாள் மாயா.

காமரிக்கு துணை நின்றதற்காக தன்னை ஏற்கனவே வெறுத்துவிட்டிருந்த அர்ஜுனுக்கு கனலியின் பிறப்பின் ரகசியம் தெரியவந்தால், அவன் முன்பு கூனிக்குறுகவேண்டுமே என்கிற அச்சம் மாயாவின் மனதினில் முழுமையாக இருந்தது. விவரமறியாமல் செய்த பிழை என்று மற்றவரைப் போல அவளால் அவளை மன்னிக்க முடியவில்லை. அதனாலேயே முன்பு ஐம்பூதனாரிடம் கூட அவளைப் பற்றிய உண்மையை நவிரனிடம் சொல்ல வேண்டாம் என்று

கேட்டுக்கொண்டாள். ஆனால் இப்பிறப்பில் அண்ணன் என்கிற பந்தத்தை அர்ஜுன் தந்ததும் மனதின் பாரம் வெகுவாக குறைய மகிழ்ச்சியோடு கண்களைத் திறந்தாள் மாயா.

"உன்னை என்றைக்குமே ஒரு சகோதரன் என்கிற நிலையில் தான் நானும் வைத்திருந்தேன் நவிரா. உன்னைக் கொல்ல காமரி தீட்டிய திட்டம் நான் அறியாதது!" என்று அர்ஜுனுக்கு மாயா சமாதானம் சொல்ல முனைய, "கடந்ததை மறந்து விடு கனலி. இப்போது அரண்யா வரும் வரையில் காமரியை எப்படி சமாளிப்பது என்பதை மட்டும் மனதில் இறுத்து." என்று சொன்னவன் அவள் கையை தட்டிக்கொடுத்து தைரியம் தந்தான்.

"காமரியை காணவில்லையே?" என்று லயா கேள்வி கேட்டபடியே அவர்களின் அருகினில் வர, கண்களைத் தீட்டிக்கொண்டு மாயாவும் அர்ஜுனும் தொடுவானம் வரை தேடினர்.

"நான் கூட எங்கே அவள் நேரடியாக சண்டைக்கு வந்துவிட்டாளோ என்று நினைத்துவிட்டேன். அரண்யா உயிருடன் கமலநாதரின் பாதுகாப்பில் இருக்கும் பொழுது வெளியே வரும் துணிச்சல் அவளுக்கு ஏது?" என்று வேண்டுமென்றே உரக்கப் பேசினான் இம்ரான்.

அவன் பேச்சின் பொருளுணர்ந்த அவர்கள் அனைவரும் அடுத்து நடக்கப்போவதற்கு தயாராக நிற்க, அவர்களை ஏமாற்றாது அருகில் இருந்த மரம் ஒன்றன் மீது இடியை இறக்கித் தன் இருப்பை நிரூபித்தாள் காமரி.

நீர்க்கட்டு வித்தையின் மூலம் இம்ரான் மழையை நிறுத்த, இருள் சூழ்ந்த உலகில் எரிந்துகொண்டிருக்கும் ஒரே ஒரு பச்சை மரம் மட்டும் வெளிச்சத்தை வீச, எதிரில் நிற்கும் படையினைக் கண்டனர் நால்வரும். பலவகை பைசாசங்களான யட்சிணிகளும், குறளிகளும், கிண்ணரர்களும், பூதகணங்களும் அணி திரண்டு நிற்க, அவற்றுக்கெல்லாம் நடுநாயகமாக காட்சியளித்தாள் காமரி. அருவமா உருவமா என்றே தெரியாத பல ப்ரேதாத்மாக்களின் புடைசூழ, மண்ணில் கால் பதிக்காமல் காற்றில் மிதந்து உயரத் தெரிந்தாள்.

எரியும் நெருப்பிற்கு சற்றும் குறையாத தன்மையுடைய செங்குழலும் அதற்கு முரணாக பால்நிலவினை ஒத்த மேனியும், நீலமாணிக்கத்தையும் பழிக்கும் கருநீலக் கண்களையும் கொண்டு இதழில் வற்றாத புன்னகையுடன் ஏளனமாக புருவத்தை சுழித்தபடி இம்ரானைப் பார்த்தாள் காமரி. அதே முகச்சுளிப்புடன் இம்ரானும் காமரியை பார்க்க, பார்வையை மாயாவை நோக்கித் திருப்பினாள்

காமரி.

"இப்பிறவியிலும் நீ துகிரனின் காதலை யாசிக்கும் நிலையிலே இருப்பதை நினைத்தால் எனக்கு பாவமாகக்கூட இருக்கிறதடி. ஆனால் செய்த பாவம் சும்மா விடுமா என்ன? நீ எனக்கு செய்த துரோகத்திற்கு காலம் முழுக்க நீ தனிமரம் தான்!" என்று எடுத்த எடுப்பிலேயே நஞ்சை கக்கினாள் காமரி.

"எதிரொலியே இல்லாத அன்பை மூலதனமாக வைத்துக்கொண்டு, இருக்கும் வாழ்க்கையை நாசமாக்கிக்கொள்ள நானொன்றும் நீ இல்லை அம்மணி! என்னை எனக்காகவே ஏற்றுக்கொள்வதற்கு ஒருவன் வருவான். அவன் ஒருவனைத் தவிர வேறு எவரிடமும் எதையும் நான் யாசிக்கத் தேவையில்லை!" என்று பொட்டில் அறைந்தாற்போல மாயா பேச, "யார் அவன்? ஓ... நீ அந்த ரஃபயேலை சொல்கிறாயா? உன் தீட்டு அவனையும் பிடித்ததால் தான் இப்போது அவன் அந்நிலையில் இருக்கிறான்!" என்று சொல்லி காமரி சிரிக்க, ஆத்திரத்துடன் மாயா காமரியை நோக்கி ஓடினாள். கமலநாதரின் பாதுகாப்பு வளையத்தை அவள் தாண்டிய மறுநொடியே சற்றும் எதிர்பாராத வகையில் அங்கிருந்து மாயா மறைந்து போனாள்.

மாயாவிற்குத் துணையாக அவள் பின்னால் ஓடி வந்த மற்ற மூவரும் அதனைக் கண்டு வெகுவாக குழம்பிப் போயினர். பதட்டத்தில் ஒரு எட்டு முன்னால் வைத்த லயாவும் அடுத்ததாக காணாமல் போக, என்ன நடக்கிறது இங்கு என்பதை அறிந்துகொள்ளும் முன்பே அர்ஜுனும் இம்ரானும் கூட காணாமல் போயினர்.

முற்பிறவியில் ஒன்றாகச் சேர்ந்து தன்னை அவர்கள் அழித்ததை காமரி மறக்கவோ மன்னிக்கவோ இல்லை. அவர்கள் சக்தியை அவர்கள் ஒன்றிணைக்க நேர்ந்தால் தன் திட்டம் வெற்றியடையத் தாமதமாகும் என்பதை காமரி நன்றாகவே உணர்ந்திருந்தாள். அதனால் ஒன்றன் பின் ஒருவராக தனித்தனியாக அவர்களை முதலில் பிரிக்க முடிவு செய்திருந்தாள். அதன்படியே நால்வரையும் நான்கு வேறு திசைகளுக்கு அவளின் படையோடு தனியாக மோதும்படி அனுப்பி வைத்தாள்.

சுற்றிலும் பைசாசங்கள் பல சூழ்ந்திருக்க எங்கிருக்கிறோம் என்பதே புரியாமல் திகைத்தாலும், அவர்கள் நால்வரில் முதலில் சுதாரித்தது மாயா தான். தன் பலத்தோடு ஐம்பூதனாரின் ஆசியும் சக்தியும் தன்னுள் பூரணமாக நிறைந்திருக்கிறது என்பதை நன்றாக உணர்ந்திருந்த காரணத்தால் முன்னை விட சக்தி பொருந்தியவளாக மாயா மாறியிருந்தாள். நொடி நேரத்திற்குள் பவித்ர கலயத்தை

தன்வசப்படுத்தியவள் அவளை சுற்றியிருந்த பிசாசுகளை ஓட ஓட விரட்டினாள். பவித்ர கலயத்தால் கட்டுப்படுத்த முடியாத அதிசக்தி வாய்ந்த கிண்ணரர்களைக் கூட, மந்திர வாளில்லாமல் வெறும் மந்திரத்தாலேயே மாயா தோற்கடிப்பதை விவரிக்கமுடியாத ஒரு பாவத்தோடு காமரி பார்த்துக்கொண்டிருந்தாள்; அவள் மூளை வெகு வேகமாக அடுத்த கட்ட சூழ்ச்சிகளை வகுத்துக்கொண்டிருந்தது.

மந்திர வாளை கைக்கொள்ளும் வித்தை தெரிந்திருந்தாலும், ஒரே நேரத்தில் தன்னை எதிர்த்துவரும் யட்சிணிகளை சமாளிக்கமுடியாமல் லயா திணறினாள். கண்களை மூடிக்கொண்டு எதிரில் தோன்றும் அரூபம் எதுவாயினும் சளைக்காமல் வெட்டிக்கொண்டே இருந்தாள் லயா. அதிகமாக எதிரிகள் இருந்ததால் இந்த முறை ஓரளவிற்கு வெற்றியையும் அவளுக்குத் தந்தது. லயாவின் பலவீனத்தை அறிந்துகொண்ட ஒரு யட்சிணி, லயா எதிர்பார்க்காத நேரத்தில் பின்னால் இருந்து அவளைப்பிடித்து கீழே தள்ளியது. அவ்வளவு தான், சட்டென்று அங்கிருந்த அத்தனை அரூபங்களும் லயாவின் மேல் பாய்ந்து அவளை முழுதாகத் திண்ண ஆயத்தமாகின. ஆனால், என்ன முயன்றும் அவள் கையில் வைத்திருந்த மந்திரவாளை அவைகளால் பிடுங்கமுடியாமல் போனது. அதனால் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முயன்றபடியே அவைகளுடன் போர் புரிந்தாள் என்றாலும் பலம் பொருந்திய எதிரிகளை சமாளிக்கும் வலுவை அவள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துகொண்டிருந்தாள். கடைசி மூச்சு வரையிலும் போராடியே தீர வேண்டுமென்ற வேட்கை கொண்டிருந்தவளின் நிலை மெல்ல மெல்ல அபாயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

பவித்ர கலயத்தைத் தருவிக்கும் முறை தெரியாவிடினும் தென்பாலி நாட்டின் காடுகளில் திரிந்த பொழுது காமரியின் அருவ மற்றும் உருவ படைவீரர்களைச் சமாளிக்கும் வித்தையில் கற்றுத்தேறி இருந்தான் நவிரன். அர்ஜுனாகப் பிறந்திருக்கும் இப்பிறப்பிலும் அக்கலைகளும் போர் சாதுர்யமும் அவனுக்கு உதவத்தான் செய்தன. ஒன்றுக்கு இரண்டு வாட்களை தன்வசப்படுத்தியவன், இருகைகளையும் சுழற்றிய வேகத்தில் பல பிசாசுகள் தெறித்து ஓடின. எந்தத் திசையிலிருந்து தாக்கினாலும் சளைக்காமல் சண்டையிடும் அர்ஜுனின் தீரத்தை எதிரிப்படைகள் கூட மெச்சின. அந்த அளவிற்கு சிறப்பாக போர் புரிந்தான் அர்ஜுன்.

அர்ஜுன் இரு வாட்களைக் கொண்டு போராடும் வேளையில் இம்ரான் அவனைச் சூழ்ந்திருந்த அத்துணை அரூபங்களையும்

மண்ணோடு மண்ணாகப் புதைத்துக்கொண்டிருந்தான். தன்னைச் சுற்றி ஒரு வட்டமிட்டவன், பவித்ர கலயத்தை வரவழைத்து நடுவில் வைத்து மந்திரங்களை உச்சரிக்க, அவனைச் சுற்றியிருந்த பைசாசங்கள் எல்லாம் காந்தத்தினால் ஈர்க்கப்பட்ட இரும்புத் துகள்களைப் போலவே விரைவாக கலயத்தினுள் புகுந்து இயற்கையோடு கலந்துபோயின. போதாக்குறைக்கு கையில் மந்திர வாள் வேறு! மந்திரத்தினால் அடக்கமுடியாத அரூபங்களை வாளைக்கொண்டு வெட்டிச் சாய்ந்தான். பாதுகாப்பு வளையத்திற்குள் அவன் இருந்ததால் அவனை நெருங்கும் தீயசக்திகள் எதனாலும் அவனை எதுவும் செய்ய முடியவில்லை. எனவே அவனை வீழ்த்துவதற்கு இருக்கும் வழிகளை ஆராய்ந்தபடியே ஒரு கூட்டம் வேலை செய்தது.

இம்ரானை சுற்றியிருந்த அரூப சைனியம் ஒரு வழியாகக் குறைந்ததும் தான் இருக்குமிடம் எது என்பது அவனுக்குப் புரிந்தது. விழிகளை வாளுக்கு இணையாக அவன் சுழற்ற, சற்றுத் தொலைவிலேயே அர்ஜுனும் மாயாவும் போரிடுவது கண்டு அவன் நிம்மதியடைந்தான். ஆனால் அவன் நிம்மதிக்கு அற்ப ஆயுள் என்பதைப் போல, சற்றுத் தள்ளி மூர்ச்சையற்று கிடந்த லயாவை பார்த்ததும் அவனுக்குள் பயப்பந்து உருள ஆரம்பித்தது. அதிலும் லயாவை மொத்தமாக ஆக்கிரமிக்க யட்சிணிகள் பலவும் தங்களுக்குள் போட்டிபோட்டுக் கொண்டிருப்பதைக் கண்டவனின் மனதில் குருதி சுரந்தது. எப்படியும் லயாவை காப்பாற்றியே தீர வேண்டும் என்று முடிவு செய்து இம்ரான் வேகமாக லயாவை நெருங்கும் நேரம், காமரி ஒரு மோகனச் சிரிப்பைச் சிந்தினாள். அந்த இருட்டிலும் காமரியின் முத்துப்பல் சிரிப்பு ஜொலிஜொலித்தது.

'பாதகத்தி என்னவோ செய்துவிட்டாள்!' என்று இம்ரானின் மனம் அவனை எச்சரிக்கை செய்த நொடியில் அவன் கண்களைப் பார்த்துக்கொண்டே காமரி ஒரு சொடக்குப் போட, இம்ரானின் பெற்றோர் மட்டுமல்லாது, லயா, சதுரன், இசை, அர்ஜுன் என அனைவரது பெற்றோரையும் களத்தின் நடுவில் தூக்கு மேடையில் ஏற்றியிருந்தாள் காமரி. அத்தனை வயதானவர்களின் நடுவினில் ஒரு பதினாறு வயதுச் சிறுவனும் இருந்தான். யாரவன் என்று இம்ரான் யோசிக்கையிலேயே, "ரஃபயேல்..!" என்று மாயா அலறுவது நன்றாகக் கேட்டது.

தன் பெற்றோரோடு சேர்ந்து முன்பே இறந்து விட்டவன் என்று மாயா நினைத்திருந்த அவளது காதலன் ரஃபயேலை உயிருடன் மறுபடியும் கண்டதை செரிக்கும் முன்பே தூக்குக்கயிற்றுடன் போராடும்

அவன் நிலையை உணர்ந்து தாங்கொணாத துயருக்கு ஆளானாள் மாயா.

இப்பிறவியில் தனக்கு உயிர் தந்த பெற்றோரா அல்லது எப்பிறப்பில் தன்னுடன் இணைந்து பிறந்தாலும் சேர்ந்து வாழக் கொடுப்பினை இல்லாத தன் மனம் கவர்ந்தவளா? இதில் யாரைக் காப்பது என்று கண்ணீருடன் இம்ரானின் கவனம் சிதறிய நொடியில் அவனைச் சூழ்ந்த பைசாசங்கள் தங்களது கோரைப் பற்களை நறநறத்துக்கொண்டே இம்ரானை நெருங்கின...

*****************************************************************

குகையின் உள்ளே!

மேரு மலையில் அரண்யா பயின்றிருந்த கலைகளோடு ஆற்றங்கரையில் ஐம்பூதனார் ஒற்றை நாளில் கற்பித்திருந்த சூட்சமக் கலைகளையும் நினைவில் இறுத்துவதற்கு வெகுவாக போராடிக் கொண்டிருந்தாள் இசை. காமரியின் மீது அவளுக்கிருந்த கண்மூடித்தனமான கோபமும், அவளை வெற்றிகொள்ளும் அளவிற்கு தனக்கு சக்தியில்லை என்கிற தாழ்வுமனப்பான்மையும் அவளை அலைக்கழித்தன. மனம் ஒருநிலையில் இல்லாமல் தவித்தவளுக்கு முழுதாக எந்தச் சக்தியும் வசப்படவில்லை.

'ச்சை! என்ன வாழ்க்கை இது!' என்று நொந்து போய் கண் திறந்தவளின் முன்னால் தெரிந்த காட்சியைப் பார்த்து அவளது அடிவயிறு காலியாகிப் போனது. மனம் ஓர்மைப்பட்ட நிலையில் விழிமூடி கமலநாதரும் சதுரனும் இந்திர ரகசியத்திற்கு உருவேற்றும் தியானத்தில் ஆழ்ந்திருக்க, அவர்களோடு சேர்ந்து தியானத்தில் அமிழ்ந்திருக்கவேண்டிய நோவாவோ, 'Swiss Knife' எனப்படும் சிறிய ரக மடக்குக் கத்தியை மடியிலிருந்து எடுத்து சதுரனை குறிபார்த்துக் கொண்டிருந்தான்.

நல்லவன் போல இத்தனை நேரம் அவன் நடித்தது உண்மையில் காமரியை அழிக்கும் நோக்குடன் அல்ல; தன் வாழ்வின் ஆதாரமான வீரனை அழிக்கும் நோக்குடன் தான் என்கிற உண்மை சுட, அவன் கழுத்தைத் திருகவேண்டும் என்று இசை நினைத்தாள். மொத்த உடலும் மனமும் பரபரக்க அவனைக் கொல்லும் பார்வையுடன் நோவாவை இசை பார்க்க, அக்கணமே, யாரோ அவனை கழுத்தைப் பிடித்து உயரத் தூக்குவதைப்போல தானாக அந்தரத்தில் எழத்துவங்கினான் நோவா.

கால்கள் காற்றில் ஊசலாட, தன்னைப் பிணைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத சக்தியை கண்டுபிடித்துவிடும் நோக்கோடு

கைகளால் துழாவிக்கொண்டே, காமரி தான் உள்ளே வந்துவிட்டாளோ என்கிற பயத்தில் விழிகளை அவன் சுழல விட, ஆத்திரமும் ஆச்சரியமும் கண்களில் போட்டிபோட, இசை நோவாவையே வெறித்திருந்தாள். 'இவளுக்கு எப்படி இவ்வளவு பெரும் சக்தி? ஒருவேளை காமரி சொன்னது உண்மை தானோ?' என்பன போன்ற பல கேள்விகள் நோவாவினுள் எழுந்தன. ஆனால் அவற்றிற்கு விடை தெரிந்துகொள்ள முயலாமல், தன் கையில் இருந்த கத்தியை இசையை ஒரு பார்வை பார்த்தபடியே சதுரனின் இதயத்தைக் குறி வைத்து எறிந்துவிட்டான்.

"ஐயோ..!" என்ற இசையில் கதறல் அதுவரையில் அவளைப் பிணைத்திருந்த அத்தனைத் தளைகளையும் தவிடுபொடியாக்கியது. இதுவரை அவள் அறியாத பிரபஞ்ச சக்தி அவள் உடலை ஆக்கிரமித்தது.

தானாக பூமியில் இருந்து ஏழடிக்கு மேல் சென்றவள் விழிமூடி இருகைகளையும் விரிக்க, இந்தப் பேரண்டத்தின் ஏழு அடிப்படைக் கூறுகளான, நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆன்ம ஒளி, மற்றும் நம்மால் கணிக்க முடியாத தற்போக்கான இயற்கையின் சக்தி போன்றவைகள் ஒவ்வொன்றாக இசையின் மீது அலையலையாக வந்து மோதியது. ஒவ்வொரு சக்தியை அவள் உள்வாங்கும் போதும் அவள் உடல் மிதமாக அதிர்ந்தது. ஒரு கவசம் போல அவையாவும் இசையைக் காக்க, அவள் உடலில் ஒவ்வொரு அணுவும் அதிர்வதை நோவா கண்கூடாக பார்த்தான். எங்கே வெடித்துச் சிதறிவிடுவாளோ என்கிற பீதியில் அவன் உறைந்து போயிருக்க, காற்றில் இருக்கும் மின்னாற்றலை முழுதுமாக இசையின் உடல் உறிஞ்சத் துவங்கியது.

காமரி முழு சக்தி பெற்று எழுந்த அன்று இதே போன்ற நிகழ்வுக்கு சாட்சியாக நின்றிருந்த நோவாவால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. காமரியைப் போன்றே இசையும் அந்தரத்தில் சுழலத் துவங்க, முன்னைப்போலவே இப்போதும் இறக்க நேரிடுமோ என்ற அச்சத்தில், தன்னைப் பிணைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத ஏதோவொரு சக்தியிடமிருந்து விடுபட வேண்டி நோவா துடித்தான். காற்றில் கால்களை உதைத்தபடி கீழே செல்ல அவன் முயன்றானே தவிர, அவனால் இம்மியும் நகரமுடியவில்லை. மூளை அவனுக்கு சிலதை அறிவுறுத்தினாலும் அவன் உடல் பாகங்கள் ஒன்று கூட அவன் பேச்சை கேட்கவில்லை. அப்படியே அவன் உறைந்து போயிருந்தான். கண்களையாவது அசைக்க முடியுமா என்று முயன்று கீழேயிருந்த சதுரனைப் பார்த்தான்; பார்த்தவன் அதிர்ந்தான்!

நோவாவின் கணக்குப் படி, இந்நேரத்திற்கு கத்தி சதுரனின்

இதயத்தில் இறங்கியிருக்க வேண்டும். தியானத்திலேயே அவன் உயிர் பறிபோயிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவுமே அங்கே நிகழ்ந்திருக்கவில்லை. காலம் அங்கே அப்படியே உறைந்து போயிருந்தது, சதுரனின் மார்பைத் தொட்டபடியே இருந்த கத்தியைப் போலே!

சதுரன் இன்னும் இறக்கவில்லை என்பதை அறிந்ததுமே, அனைத்தும் தன் கைமீறிப் போனதாக நோவா உணர்ந்தான். காமரியின் காதலுக்காக ஏங்கி அவளிடும் ஏவலை மட்டுமே செய்து பழகியிருந்த நோவாவால் அவளை வேறு ஒருத்தனுக்கு விட்டுக்கொடுக்க முடியவில்லை. அதனாலேயே இசையை விடுத்து அவன் சதுரனைக் குறிவைத்திருந்தான். அந்த முட்டாளுக்கு, காமரி என்ன முயன்றாலும் சதுரனை மட்டும் அடையவே முடியாது என்று தெரியாது போனது துரதிஷ்டமே!

எப்படியும் தான் இறப்பது உறுதி என்று நோவாவுக்குத் தெரிந்த நேரம், கண்களில் மின்னல் கொப்பளிக்க கண்களைத் திறந்தாள் இசை. பார்ப்பவரின் கண்கள் கூசும் விதமாக அக்கினிச் சுடர் போலவே அவள் உடலும் உள்ளமும் ஒளிர்ந்தன. அவளின் ஒற்றைப் பார்வையில் சதுரனின் மார்புக்கு முன் இருந்த கத்தி திரும்பி நோவாவைப் பார்த்தபடியே நின்றது. பின் வந்த வேகத்தை விட ஆயிரம் மடங்கு அதிக வேகத்தோடு பாய்ந்து சென்று நோவாவின் தலையைத் துண்டித்தது.

அவன் கழுத்து நாளம் அறுபட்ட வேகத்தில் தெறித்த ரத்தம் அருவியைப் போல பாய்ந்து சென்று நேரே இந்திர ரகசியத்தை நனைத்தது. நோவாவின் உதிரம் பட்டதும், சதுரனின் கைகளில் இருந்த இந்திர ரகசியம் மெல்ல எழுந்து நோவாவின் ரத்தம் நிலத்தை நனைக்காமல் தனக்குள் ஈர்த்துக்கொண்டது. அவன் உடலிலிருந்து வெளியேறிய அவன் ஆன்மாவையும் மெல்ல தன்னருகில் இந்திர ரகசியம் இழுக்க, ஐந்து துண்டங்களாக உடைந்திருந்த பிரமிடு வடிவம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வரத் துவங்கியது. நோவாவின் ஆன்மா முற்றிலுமாக இந்திர ரகசியத்தினுள் சென்றதும், பிரமிடு பூர்த்தியாகி நீல நிறத்தில் ஒளிர்ந்தது.

திடீரென்று ஏற்பட்ட மயிர்க்கூச்சத்தால் கண்விழித்த சதுரனுக்கு இந்திர ரகசியம் முற்றுப்பெற்றிருந்தது பெருமகிழ்ச்சியைத் தந்திருந்தது என்றால், சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் கிடந்த நோவாவின் உடலைப் பார்த்ததும் குழப்பம் மிகுந்தது. அதிலும் ஆவேசமான முகத்துடன் பேரண்டத்தை ஆளும் ஆற்றல் பெற்றிருந்த இசையைக் கண்டதும் சதுரனுக்கு கை எடுத்து அவளை

கும்பிடவேண்டும் போலவே இருந்தது. அப்போது கண்விழித்த கமலநாதர், சதுரனை முந்திக்கொண்டார்.

"அம்மா தாயே! எங்களை வாழ்விக்க வந்தவளே!" என்று சொல்லி தலைக்கு மேல் கைகளைத் தூக்கி இசையை வணங்கினார். அவர் கண்களுக்கு இசை அந்தக் கொற்றவை அன்னையைப் போலவே தெரிந்தாள். ஆனால் இவை எதுவுமே இசையின் கருத்தில் பதியவில்லை. ஒரே ஒரு தரம் சதுரனின் கண்களை நேருக்கு நேராய் சந்தித்தவள், வெளியில் செல்ல, அவள் பார்வையின் அர்த்தம் புரிந்த சதுரனும் இந்திர ரகசியத்தை எடுத்துக்கொண்டு அவளை மௌனமாகப் பின் தொடர்ந்தான். ஆனால் சதுரன் நகர ஆரம்பித்ததும், இந்திர ரகசியம் மறுபடியும் விரிசல் விட ஆரம்பித்தது.

குழம்பியபடியே, "குருதேவா?" என்று கமலநாதரை அவன் அழைக்க, அவர் பார்வையோ சுவரோடு சுவராக ஒட்டியிருந்த தேவ்னாவின் மீது படிந்து மீண்டது. கண் மூடி மறுபடியும் தியானித்தவர் விழிகளைத் திறந்த போது அதில் தீட்சண்யம் கூடியிருந்தது.

"என் பிறவிப்பயனை நான் அடையவேண்டுமென்று அந்த ஈசன் எனக்கு உத்தரவிட்டிருக்கிறான் வீரா! இந்திர ரகசியத்தை கடைசி வரையில் காவல் புரியவே நான் பிறப்பெடுத்திருக்கின்றேன். இந்த எளியவனுக்கு எப்பேர்ப்பட்ட பேற்றை அந்த ஈசன் அருளியிருக்கிறான்!" என்று சொல்லி புன்னகைத்தார்.

கைகளை தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்டவர், இடது காலை வலது தொடையில் இருத்தி, "என் ஈசனே! மனமுவந்து நான் தரும் காணிக்கையை ஏற்றுக்கொள்ளப்பா! என்னுள் இருக்கும் பெருஞ்சுடராம் உன்னையே உனக்குத் தத்தம் செய்கிறேன்! இந்த அகிலத்தைக் காக்க இந்திரரகசியத்தை முழுமையாக்கு!" என்று மனதார வேண்டினார். அடுத்த நொடியே கமலநாதரின் இதயத்திலிருந்து புறப்பட்ட தெய்வீக ஒளி ஒன்று இந்திர ரகசியத்தின் விரிசல்களில் முழுவதுமாகப் படிந்தது.

கமலநாதரின் ஆன்மா முற்றாக இந்திரரகசியத்தை ஆட்கொள்ள, வஜ்ரபசை கொண்டு ஒட்டினாற்போல விரிசல்கள் அனைத்தும் நீங்கி, முன்பு முழுமைபெற்றபோது ஒளிர்ந்ததைப் போல, பொன்மஞ்சள் நிறத்தில் இந்திரரகசியம் ஒளி வீசியது.

எப்படியேனும் இசை காமரியை வென்றிடுவாள் என்றும் தன் தேவை இனி அவர்களுக்கு இருக்காது என்றும் உணர்ந்துகொண்ட அந்த மாபெரும் ஞானகுரு, தேவ்னாவின் உயிரைக் காப்பதற்காக தன்னுடல் ஆன்மபலம் தவவலிமை என சகலத்தையும் உபயோகித்து

நோவாவின் செயலை முழுமையாக்கி இருந்தார். இனி என்றைக்குமே கமலநாதர் திரும்பிவரப் போவதில்லை என்பது அப்போது தான் சதுரனுக்குப் புரிந்தது.

"குருதேவா! சிம்மனைப் போல நீங்களும் என்னைப் பிரிந்து சென்றுவிட்டீர்களே! நான் என் செய்வேன்! இதற்கெல்லாம் பிரதி உபகாரமாக நான் என்ன செய்வேன்?! இதுவரையில் நான் ஒருமுறை கூட பயன்படுத்தியிராத இந்த இந்திர ரகசியத்தை மட்டும் வைத்துக்கொண்டு நான் என்ன தான் செய்வதோ?!" என்று குருதேவர் கமலநாதர் நின்ற இடத்தில் மண்டியிட்டு வணங்கியபடியே அழுது புலம்பினான் சதுரன்.

கமலநாதரோ காற்றோ ஏதோவொன்று சதுரனின் காதில் சேதி சொல்லிற்று. எழுந்து நின்றவனின் முகத்தில் அத்தனை தெளிவு!

இசையைத் தொடர்ந்து சதுரன் குகை வாயிலைக் கடந்து வெளியில் சென்றபொழுது அவன் கழுத்தில் மறுபடியும் இந்திர ரகசியம் பாந்தமாக குடியேறி இருந்தது!

## அத்தியாயம் 29

"என்னைக் கட்டிய உன் கையாலேயே விடுதலையடைவேன் என்று நான் சொன்னதை நிறைவேற்றி விட்டேன் பார்த்தாயா? இப்போது, 'நீ இன்பம் புசிக்கும் வேளையில் உன் மொத்த மகிழ்ச்சியையும் சாம்பலாக்கி உனக்குப் பரிசளிப்பேன்!' என்று சொன்னதையும் மெய்ப்பிக்கிறேன்!" என்று கொக்கரித்த காமரி விரல்களைச் சொடுக்க, நொடி நேரத்தில் லயாவிற்கும் தூக்கு மேடை தயாரானது.

அவன் பெற்றோர், காதலி, நண்பர்களின் பெற்றோர், மாயாவின் காதலன் என்று அனைவரையும் ஒரே நேரத்தில் இழக்க நேரிடலாம் என்னும் பயம் அவன் அவயங்களை சில்லிடச் செய்ய, காமரி இருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடத் துவங்கினான் இம்ரான். ஆனால் அவனை முன்னேற விடாமல் காமரியின் அரூபப்படை பார்த்துக்கொண்டது.

"வேண்டாம் காமரி! அவர்களை விட்டுவிடு!" என்று தன்னை அழிக்கத்துடிக்கும் அரூபங்களுடன் போரிட்டுக்கொண்டே இம்ரான் காமரியுடன் மன்றாடினான்.

மனம் தளர்ந்த நிலையில் இருந்த இம்ரானை அதிசக்தி வாய்ந்த கிண்ணரர்கள் ஐவர் பிடித்து அழுத்த, மண்டியிட்ட நிலையிலேயே

அவனை அசையமுடியாது மந்திரத்தால் கட்டினாள் காமரி. மந்திரங்களை உச்சரிக்கும் வழி தெரியாது விழிநீர் சிந்தினான் இம்ரான்.

ஒரு சுத்த வீரனின் கண்ணீருக்குக் கல்லும் கரையுமாம். ஆனால் காமரி கல்லினும் கடிமனம் படைத்தவளாயிற்றே! சற்றும் இளகாமல் அவன் கண்ணீரை ரசித்தாள்.

"ஓ! சாம்பலாக்குவேன் என்று சொல்லி விட்டு இப்படித் தூக்கிலிடுகிறேனே என்று அழுகிறாயா? கவலை கொள்ளாதே! இரண்டும் நடக்கும்!" என்று சொல்லி பேய் சிரிப்பு சிரித்தவள், அதுவரையில் மயக்க நிலையில் இருந்த அவர்களின் உற்றார் அனைவரின் மூர்ச்சையையும் தெளிவித்தாள்.

எங்கோயிருந்த நாம் இங்கே எப்படி வந்தோம் என்று புரியாமல் குழம்பினார்கள் பெரியவர்கள். அவர்களுக்கே தெரியாமல் அவர்களைப் பாதுகாக்க பல ஏற்பாடுகளை கமலநாதர் ஏற்கனவே செய்திருந்தாலும், காமரியின் சூழ்ச்சியினால் கமலநாதரின் திட்டங்கள் பலனற்றதாகிப் போனது. ரஃபயேல் ஏற்கனவே அவளது கட்டுப்பாட்டில் இருந்தான். லயாவின் தந்தை சோமசுந்தரம் நோவாவின் கீழ் அந்நேரத்தில் பணிபுரிந்து கொண்டிருந்ததால் அவரையும் பின் அவர் மூலம் இசை, இம்ரான் மற்றும் அர்ஜுனின் பெற்றோரையும் கடத்துவது காமரிக்கு எளிதாக இருந்தது. கடைசி நேரத்தில் எதற்கும் இருக்கட்டுமே என்று சதுரனின் பெற்றோரையும் அவள் கடத்தியிருந்தாள்.

தாங்கள் மயங்குவதற்கு முன் பார்த்த பெண்ணை மறுபடியும் இங்கே பார்த்ததை புரிந்து கொள்ளும் மனநிலையில் பெரியவர்கள் இல்லை.

நடக்கும் எதையும் விளங்கிக்கொள்ள முடியாமல் விழித்தவர்கள் என்ன ஏதென்று கேட்பதற்கு முன்னமே அவர்களின் விதியை மாற்றினாள் காமரி.

தன் இரையை உடனே கொல்லும் பழக்கமற்ற காமரி, அவர்களின் கால்களுக்குக் கீழ் தீ மூட்டினாள். சீக்கிரத்தில் அவர்கள் இறந்து போனால் அதில் அவளுக்கு சுவாரசியம் இருக்காதல்லவா? அதனால் கொஞ்சம் கொஞ்சமாக தீ அவர்களை நெருங்கும்படி செய்தாள்.

"ஐயோ! இம்ரான்!" என்று கதீஜா கதறியதை இம்ரானால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை.

அர்ஜுனும் மாயாவும் அதற்குள்ளாக காமரியை நெருங்கி அவளுடன் சண்டையைத் துவங்க எத்தனிக்க, இம்ரான் அர்ஜுன் மாயா

என மூவரையும் ஒன்றாக சேர்த்துக் கட்டி, எரியும் நெருப்பிற்கு முன் அவர்களை மண்டியிட வைத்தாள்.

"உங்கள் பெற்றோரின் அழுகுரலை கேட்பதற்கு உங்களை விட அதிக உரிமை யாருக்கு இருக்கிறது? என்ன... என் புகுந்தவீட்டுச் சொந்தங்களையும் இவர்களுடன் சேர்த்து அனுப்பவேண்டி இருக்கிறதே என்பது தான் என் ஒரே குறை. ம்... பரவாயில்லை! வீரன் புரிந்துகொள்வான். ஆனால் பாவம் கனலி தான் இருக்கும் ஒரே சொந்தத்தையும் இழந்து அநாதையாக நிற்கப்போகிறாள்! அதுவும் பரவாயில்லை! அநாதையாக நிற்பது அவளுக்கென்ன புதிதா?" என்று உச்சுக்கொட்டிப் போலியாக பெருமூச்சொரிந்தவள் இம்ரானையும் மாயாவையும் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்.

அவள் முகத்தை பார்க்கப்பார்க்க ஆத்திரம் மிக, மூவருமே தங்களை விடுவித்துக்கொள்ள முயன்றனர். ஆனால் அவர்கள் எவ்வளவு முயன்றாலும் அவர்களால் காமரியின் மந்திரக்கட்டை உடைக்க முடியாது போனது. அவர்களின் மனதிற்கு மிக நெருக்கமானவர்களின் ஓலத்தை சகிக்க முடியாது எப்பாடுபட்டாவது அவர்களை காப்பாற்ற வேண்டுமென்று உறுதிபூண்டனர்.

தங்களைக் காக்குமாறு தாங்கள் பெற்ற மக்களிடமும் அத்தனை கடவுள்களிடமும் அந்தப் பெரியவர்கள் மனு போட்டுக்கொண்டிருந்த போது, "ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்! என்றைக்குமே என்னை உங்களால் அழிக்கவே முடியாது!" என்று ஆணவத்துடன் கூறினாள் காமரி.

அதே நேரத்தில், "நிறுத்து!" என்று கண்களில் கனல் சுமந்து வந்த இசை அண்டசராசரமே நடுநடுங்கும் வண்ணம் கத்தினாள்.

மெல்லினமாக இருந்தவள் சட்டென வல்லினமாக உருமாறி வந்திருந்ததை நொடிப்பொழுதில் காமரி உணர்ந்துகொண்டாள். அவள் பின்னாலேயே பூனைக்குட்டி போல வந்த சதுரனையும் அவன் கழுத்தை அலங்கரித்த இந்திர ரகசியத்தையும் கண்டவளால் உள்ளே என்ன நடந்திருக்கும் என்று புரிந்துகொள்ள முடிந்தது.

"ஒரு வழியாக வெளியே வந்துவிட்டாயா? நான் கூட உன்னை உள்ளேயே வைத்து கொன்றுவிடலாமா என்று தான் இத்தனை நேரமும் சிந்தித்துக் கொண்டிருந்தேன். என் வீரனையும் இந்திர ரகசியத்தையும் பத்திரமாக என்னிடமே ஒப்படைத்து விட்டால் உன்னை வலிக்காமல் இந்த மண்ணுலகத்தை விட்டு அனுப்பிவிடுகிறேன். எப்படி வசதி?" என்று சளைக்காமல் இசையை கேட்டாள் காமரி.

"உன் மூச்சுக்காற்று பட்டாலே மூன்று பிறவிகளுக்கு

உண்டான பாவம் வந்து சேரும்!" என்று காட்டமாக சொல்லிய இசை, வானத்தை ஒரு பார்வை பார்க்க, எங்கிருந்தோ வந்த கருமேகம் ஒன்று அவர்களின் பெற்றோர்கள் இருந்த இடத்திற்கு மேலே மட்டும் மழை பொழிந்து எரிந்துகொண்டிருந்த தீயை அணைத்தது. இசையின் மற்றொரு கையசைவு இம்ரான் மாயா அர்ஜுன் என்கிற மூவரின் மந்திரக்கட்டை தகர்த்தெறிந்தது.

"பரவாயில்லையே! உனக்குக் கூட சித்து விளையாட்டுக்கள் தெரிந்திருக்கிறதே!" என்று அதிகப்படியாக காமரி வியக்க, பாய்ந்து சென்று பஞ்சபூத தம்பனக் கலையை காமரியின் மீது பிரயோகித்தான் சதுரன்.

சுலபத்தில் அவன் பிடியிலிருந்து விலகிய காமரி, "வீரா! உன்னுடன் காலம் உள்ள அளவும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதே என் விருப்பம். தயவு செய்து என் ஆசையை நிராசையாக மாற்றிவிடாதே. இது இறுதிப்போர்! எங்கள் இருவருக்குமிடையில் இருக்கும் தீராக்கணக்கை முடித்துக்கொள்ளும் நேரமிது! விலகிப் போ!" என்று காமரி கத்த, இசையை பார்த்தான் சதுரன். அவள் கண்ணசைவின் மொழியை அறிந்தவன், நேராகச் சென்று அவர்களின் பெற்றோரை மீட்டு பத்திரப்படுத்தினான். பின் லயாவுடன் இம்ரான் அர்ஜுன் மற்றும் மாயா இருக்குமிடத்தை அடைந்தான்.

போர் தொடங்கிவிட்டதற்கான அறிகுறியாக நினைக்கவே அஞ்சும் நரமாமிசம் புசிக்கும் யட்சிணிகள் முதற்கொண்டு பல கொடும் பைசாசங்களை இசையை நோக்கி காமரி அனுப்ப, அவைகள் அத்தனையும் இசையை அடைவதற்கு முன்னமே வீடுபேற்றை அடைந்தன. இசையின் இறைத்தன்மையை உணர்ந்த பல அரூபங்கள் அங்கிருந்து காணாமல் போயின. சூட்சம சக்திகளின் துணை கொண்டே சண்டையிட்டுப் பழகியிருந்த காமரிக்கு பெரும் சரிவை இசையின் புது சக்தி தந்தது.

'என் தந்தை சொன்னது உண்மை தான் போல! நானும் அவளும் சந்திக்கும் நேரத்தில் எந்த சூட்சம சக்திகளாலும் எங்கள் இருவரில் யாருக்கும் உதவ முடியாது போகும் என்று அன்றைக்கு அவர் சொன்னது அப்படியே நடக்கிறதே! அப்படியானால் இப்போரில் இந்த சதிகாரி வென்றிடுவாளோ?' என்று பலவாறாக நினைத்து உள்ளுக்குள் பயந்தாள் காமரி. ஆனால் அவள் முகமோ பளிங்கு போல எந்த உணர்ச்சியையும் காட்டாது தெளிவாக இருந்தது.

அரூபங்கள் போனால் போகிறது என்று கடைசியில் முடிவு செய்தவள், இசையின் மீது அமில மழை பொழிய முயற்சிக்க,

பாதுகாப்புக் கூரை அமைத்து அமிலத்துளிகள் தன்னைத் தீண்டாதவாறு இசை தற்காத்துக்கொண்டாள். இசை எளிதாக தன்னை காத்துக்கொண்டாலும் காமரியின் சக்தியை முதன்முதலாக பார்த்த இசையின் பெற்றோர்கள் பயத்தில் கதறினார்கள். ஆனால் இசையும் சளைக்காமல் காமரியுடன் போராட, இவளுக்கு எங்கிருந்து வந்தது இத்தனை போர்த்திறன் என்று இசையின் பெற்றோர்களான சுகுமாரியும் மஞ்சுநாதனும் வியப்பின் உச்சிக்கே சென்றனர்.

சதுரனும் இசையை காப்பதற்காக மறுபடியும் காமரியை எதிர்த்து நிற்க, "உன் ஆயுளை நீட்டிக்க நான் படாதபாடு பட்டுக்கொண்டிருக்க, நீயானால் என் கையாலே தான் இறப்பேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிகிறாயே?!" என்று சொல்லி அதிகப்படியாக வியந்தவள், "நீ வேடிக்கை பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் என்னை ஏதாவது செய்ய உன் கை பரபரத்துக்கொண்டே இருக்கும். அதற்கு உன் மூளையும் துணை நிற்கும். அதனால்..." என்று இழுத்தவள் கைகளைத் தட்ட, மறுபடியும் ஒரு பைசாசப்படை போருக்குத் தயாராக நின்றது.

இசையின் புருவங்கள் உயர, "உன்னைத்தான் அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களை அவைகள் என்ன வேண்டுமாயினும் செய்யமுடியும். எல்லோருக்கும் ஏதோவொரு வேலை இருக்கவேண்டுமே!" என்று சொல்லி காமரி தோள்களைக் குலுக்கினாள்.

காமரியின் எண்ணம் புரிந்தது என்பதற்கேற்ப, சதுரன், இம்ரான், மாயா, அர்ஜுன் மற்றும் லயா ஆகியோர் போருக்குத் தயாரானார்கள். ஆனால் அரூபங்களை வெறும் கண்ணினால் பார்க்கும் சக்தியற்ற அவர்களின் சுற்றத்தாருக்கு அங்கே நடந்துகொண்டிருப்பது தெரியாமல் மரணபீதியில் உறைந்தனர். இசையின் அம்மா சுகுமாரியோ அழுதே கரைந்தார். அவர்களின் அழுகைக் குரல் இசையின் கவனத்தை கலைக்க, அங்கிருந்த மற்றவர்களை அர்ஜுனும் மாயாவும் பாதுகாப்பாக குகையினுள்ளே இட்டுச்செல்ல முடிவு செய்தனர். முதலில் மறுத்தவர்கள் சூழ்நிலை கருதி எந்த உபத்திரவமும் செய்யாமல் அவர்களுடன் சென்றனர்.

குகைக்குள்ளே அவர்களை முதலில் அனுப்பிவிட்டு அர்ஜுனும் மாயாவும் அவர்களை பின்தொடர, என்ன நடக்கிறது இங்கே என்ற கேள்வி பலமுனைகளில் இருந்தும் எழுந்தது. இசை, லயா, அர்ஜுன், இம்ரான் என் இவர்கள் நால்வரின் பெற்றோருக்கு ஏற்கனவே ஒருவாறு பரிச்சயம் இருந்தது. ஆனால் புதிதாக இருந்த சதுரனின் பெற்றோரையும்

ரஃபயேலையும் கண்டு இவர்கள் ஏனிங்கு வந்திருக்கின்றார்கள் என்று குழம்பினார்கள். இசையையும் லயாவையும் தவிர்த்து, சில மாதங்களுக்கு முன்பு வரை ஒருவருக்கொருவர் சம்மந்தமில்லாத தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் ஏன் இத்தனை திடுக்கிடும் திருப்பங்கள் என்று அவர்கள் உள்ளத்தில் எழுந்த கேள்விக் கணைகள் அவர்களின் வாய் வழியே வெளிவந்து அர்ஜுனையும் மாயாவையும் துளைத்தெடுத்தன.

"எல்லா கேள்விகளுக்கும் விடை அறிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் உங்களுக்கு விரைந்து வந்து பதில் சொல்வார். இப்பொழுது நாங்கள் செல்லவேண்டும்!" என்று அர்ஜுன் பிடிகொடுக்காமல் பேச, அவன் பேசும் தமிழில் இருந்த வித்தியாசம் அவன் பெற்றோரை வியப்படையச் செய்தது.

கமலநாதர் எங்கே என்று பார்த்துக்கொண்டே தேவ்னாவுடன் மற்றவரையும் பாதுகாப்பாக இருக்கச் செய்தவன், நோவாவின் தலையற்ற முண்டத்தைப் பார்த்து வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டான். நோவா சதுரனைக் கொல்ல முயன்றதை இசை இன்னும் எவரிடத்திலும் சொல்லாத காரணத்தால், அர்ஜுனின் மனதினில் நோவாவின் மீது நன்றியுணர்ச்சியும் பெருக்கெடுத்தது.

"குருதேவர் அனைத்தையும் பார்த்துக்கொள்வார்!" என்று பொதுவாகச் சொன்னவனிடம் அவர் இறைவனுடன் இரண்டறக்கலந்து விட்டதை சொல்லும் துணிவின்றி தேவ்னா தலையை மட்டும் அசைத்தாள். குகையினுள்ளே நடந்த எல்லாவற்றிற்கும் அவள் ஒருத்தி மட்டுமே முழு சாட்சி. அவளது கலக்கத்தை போக்க வேண்டுமென்று அவன் கைகள் துடித்தாலும், சுற்றுப்புறம் உணர்ந்த அர்ஜுன் கண்களாலேயே தேவ்னாவிற்கு ஆறுதல் சொல்லி விடை பெற, அதை அவன் பெற்றோர் சிதம்பரமும் லட்சுமியும் குறித்துக்கொண்டனர்.

"அர்ஜுன்! நீயும் இசையும் எதையோ எங்க கிட்டயிருந்து மறைக்கிறது எங்களுக்கு நல்லாவே புரியுதுடா கண்ணா! அது எதுனாலும் ஏதோ நல்ல காரியத்துக்குத் தான்னு அப்பா உன்ன நம்புறேன். எங்க மருமகளை நாங்க பத்திரமா பாத்துக்கறோம். நீ ஜாக்கிரதையா போய்ட்டு வா!" என்று சிதம்பரமும் லட்சுமியும் சொல்லிவிட, தேவ்னாவின் கன்னங்கள் அந்த நேரத்தில் கூட செம்பருத்தி பூவின் தன்மையைப் பெற்றது, பயத்தில் சில்லிட்டுப் போயிருந்தவர்களின் மனங்களில் இதமான வெப்பத்தை பரப்பியது.

"¿que esta pasando?" 'என்ன நடக்கிறது?' என்று நடுங்கியபடியே ரஃபயேல் கேட்டதற்கு, "Te lo diré luego, tenemos que

irnos" 'அப்புறம் சொல்றேன். இப்போ நாங்க போகணும்.' என்று அவசரமாக சொன்னாள் மாயா.

அர்ஜுனையும் அழைத்துக்கொண்டு அவள் திரும்ப எத்தனித்த நேரம், அவளை இறுக்க அணைத்து இதழ் பதித்தான் ரஃபயேல்.

"¡recuerda que te amo siempre y para siempre!" 'எப்பொழுதும் உன்னை மட்டுமே நான் காதலிப்பேன் என்பதை மறக்காதே!' என்று சொல்லி, அவள் முன்நெற்றியிலும் மூக்கின் நுனியிலும் மீண்டும் முத்தமிட்டான் ரஃபயேல். அவனின் நேசம் நிறைந்த சிறு செயலில் உள்ளம் கனிந்து மாயாவின் கண்கள் பனித்தன.

"¡Te amo mi amor, para siempre y para siempre!" 'நானும் உன்னை மட்டுமே காதலிப்பேன், இப்பிறப்பிலும், ஏழேழ்பிறப்பிலும்!' என்று கண்ணீருக்கு நடுவே வார்த்தைகளை கடித்துத் துப்பினாள் மாயா.

இருவரின் ஏகாந்தத்தை நீடிக்க விடவேண்டுமென்று அர்ஜுனுக்கும் ஆசை தான். ஆனால் ஏற்கனவே பலவீனமான லயாவால் எவ்வளவு நேரம் சமாளிக்க முடியுமென்று தோன்ற அர்ஜுன் மாயாவை அழைத்தான். "சீக்கிரம் வருகிறேம். அதுவரையில் குகையை விட்டு வெளிவராது கவனமாக இருங்கள்." என்று அனைவர்க்கும் பொதுவாகச் சொல்லியபடியே அர்ஜுனும் மாயாவும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

அர்ஜுனும் மாயாவும் போர்க்களத்தில் மறுபடியும் நுழைந்த நேரத்தில் காமரி எரிச்சலின் உச்சியில் இருந்தாள். அவள் என்ன செய்தாலும் இசை அதற்கு சரியான எதிர்வினையை நிகழ்த்தி விடுவதால் காமரிக்கு அடுத்து என்ன செய்வதென்ற கேள்வி எழுந்துகொண்டே இருந்தது. கடைசியில், தான் இதுவரையில் கற்றறிந்த சூட்சமக் கலைகள் எதுவும் பயனளிக்காது என்பதை புரிந்துகொண்டவள் இந்தப் பேரண்டத்தின் சக்திகளைத் திரட்டிப் போரிட முடிவு செய்தாள்.

முதலில் தரையில் இருக்கும் தண்ணீரை எல்லாம் ஒன்றுதிரட்டி நீரால் இசையைப் பிணைக்க முயன்றாள். இசையோ, சற்று முன்பு அணைக்கப்பட்டிருந்த தீக்கங்குகளில் மிச்சமிருக்கும் தீயினை லாவகமாக எடுத்து நெருப்பால் காமரியை எதிர்த்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் மிஞ்ச முயல, இருவரின் பிடியும் ஒரே நேரத்தில் அற்றுப் போனது, யாருக்கும் வெற்றி தராமலேயே!

அடுத்து நிலம், காற்று ஆகாயம் என்று வரிசையாக காமரி பஞ்சபூதங்களை பயன்படுத்தினாலும் இசையை அவளால் ஒன்றும் செய்யமுடியாமல் போனது. பெரிதாக எந்தச் சேதாரத்தையும் காமரிக்கும்

இசையால் விளைவிக்க முடியாது போனது. சரிசமமான சக்திகளைப் பெற்றிருக்கும் தாங்கள் இப்படியே சண்டையிட்டுக் கொண்டிருந்தால் யாருக்கும் வெற்றி தோல்வி இல்லாது போகும் என்பதை விரைவிலேயே இருவருமே உணர்ந்தனர். எப்போதும் நிதானமாக விளையாடும் காமரி கூட, வெற்றியோ தோல்வியோ ஏதோவொன்று இப்பிறவியில் விரைவில் கிட்டவேண்டும் என்றே போராடினாள். ஜென்மஜென்மமாக நீடிக்கும் இந்த இழுபறிநிலையை அவள் அறவே வெறுத்தாள்.

நல்வினைகளின் தொகுப்பாக அரண்யா என்னும் இளவரசி முற்பிறவியில் பிறந்திருந்ததைப் போலவே இப்பிறவியில் இசையும் பிறந்திருந்தாள். அவளின் ஆன்ம ஒளியினை ஒன்றுதிரட்டி காமரி என்னும் தீவினையை நோக்கி இசை செலுத்த, தன் மன இருளை எல்லாம் ஒன்று திரட்டி இசையை நோக்கி காமரி செலுத்தினாள். ஒளியும் இருளும் ஒன்றை ஒன்று தீண்டியதுமே பட்டென்று வெடித்துச் சிதறி ஒன்றுமில்லாமல் போனது. இனி மாயக்கலைகளால் பிரயோஜனமில்லை என்று இசையும் காமரியும் அந்நொடியில் முழுமையாக உணர்ந்தார்கள்.

"என்னடி இளவரசி! வாள் சுழற்றும் வித்தை கொஞ்சமேனும் நினைவிருக்கிறதா? வா! நம் நாவலந்தீவில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் முறைப்படியே வாட்போர் செய்வோம். வெல்பவருக்கு வீரனும் இந்திரரகசியமும்; தோற்பவருக்கு மரணம். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே காமரி ஏதோவொரு மந்திரத்தை உச்சரிக்க, பழங்கால வாள் ஒன்று அவள் கையில் குடிபுகுந்தது.

இளக்காரமாக காமரி இசையை பார்த்து புன்னகைக்க, அதே புன்னகையுடன் இசையும் சில மந்திரங்களை உச்சரிக்க, இரு நெடுவாட்கள் இசையின் கைகளை அலங்கரித்தன. சாதாரண வாள் என்றாலே அதை சரியாகக் கையாளுவது கடினம். இதில் இரு நெடுவாட்களை சுமந்து அனாயசமாக சுழற்றும் இசையைக் கண்டவர்கள் பிரமித்துப் போனார்கள்.

"எனக்குத் தோற்றுப் பழக்கமில்லை என்கிறேன்!" என்று நிமிர்வுடன் இசை சொன்னதும், காமரி சிரித்தாள்.

"தொடங்கட்டும்!" என்று காமரி கூற, புலியும் வேங்கையும் எதிரெதிரே நின்று போர் புரிந்தால் எப்படியிருக்குமோ அப்படியொரு போருக்குத் தயாராகினர் காமரியும் இசையும்.

இருவரும் ஒருவரின் கண்களை விட்டு மற்றவர் அகலாமல் சரியான தருணத்திற்காக எதிர்பார்த்து காத்திருந்தனர். ஒவ்வொருமுறை

இசையின் கண்களை காமரியின் கண்கள் சந்திக்கும் போதும், வானில் மின்னல் வெட்டியது. இவர்களின் சமரைப் பார்க்க இயற்கையே காத்திருந்ததைப் போலவே அனைவரும் உணர்ந்தனர்.

வாட்களை உயர்த்தியபடியே இசையும் காமரியும் தங்களது வாய்ப்பிற்காக காத்திருக்க, சதுரனும் இம்ரானும் போட்டி போட்டுக்கொண்டு எதிர்வரும் சூட்சம சக்திகளை அழித்தொழித்தனர்.

இந்திர ரகசியம் பதினாயிரம் பவித்ர கலயத்தின் சக்தியுடன் செயல்பட்டு அதிசக்தி வாய்ந்த அரூபங்களை இயற்கை அன்னையின் தொட்டிலுக்கே திருப்பியனுப்பிக் கொண்டிருந்தது. மிஞ்சியவர்களை அந்த ஈசனாக உருமாறி சதுரன் வீழ்த்திக்கொண்டிருந்தான். ஆனால் எவ்வளவு கொடூரமான அரூபத்துடன் போரிட்டாலும் இசையின் ஒவ்வொரு அசைவையும் அவன் கண்கள் படம்பிடித்துக் கொண்டிருந்தன. அவளுக்கு எப்போது உதவி தேவையென்றாலும் உடனே ஓடுவதற்கு அவன் தயாராகவே இருந்தான்.

இம்ரானும் சதுரனுக்கு இணையாக சண்டையிட, எதிர்பார்த்தபடியே லயா அதிகமாக சோர்வுற்றாள். யட்சிணி விஷம் பாய்ந்திருந்த உடல் என்பதால் அவளுடைய ஆற்றல் வெகுவாக குறைந்துகொண்டே வந்தது. லயாவின் கால்கள் தள்ளாடுவதைக் கண்ட மாயா அவளை ஓய்வெடுத்துக்கொள்ள அறிவுறுத்த, முதலில் லயா மறுத்தாள். ஆனால் இம்ரான் அவளைக் கடிந்துகொள்ள, கடைசியில் வேறுவழியில்லாமல் லயா உள்ளே செல்லும்படி நேர்ந்தது. லயாவை குகையினுள்ளே கண்டவர்கள் நடந்தவை முழுவதையும் விளக்கச் சொல்ல, கமலநாதர் சொல்லிய அவர்களது முற்பிறவிக் கதையை லயா அவளது உறவினர்களுக்கும் ரஃபயேலுக்கும் கூறத் தொடங்கினாள். மொழி புரியவில்லை என்றாலும் லயாவின் அபிநயத்தில் அவனும் கொஞ்சமாக என்றாலும் புரிந்துகொண்டான். இதற்கிடையில் தேவ்னாவிடம் தெரிந்த ஒருவகையான இறுக்கத்திற்கு காரணம் புரியாமல் லயா குழம்பினாள். நோவாவின் பிணத்தைப் பார்த்து நிம்மதியடைந்திருந்தவளுக்கு கமலநாதரைக் காணாதது மிகப்பெரிய கேள்வியாக எழுந்தது. ஒருவேளை வெளியே இருக்கிறாரோ என்று சிந்தித்தவள், அவர் வந்ததுமே கேட்டுக்கொள்ளலாம் என்று முடிவு செய்தாள்.

எதிரிகள் பலவகையாக இருந்தாலும், கொஞ்சமும் பயமோ தயக்கமோ கொள்ளாது சதுரன் இம்ரான் அர்ஜுன் மாயா என்கிற நால்வர் படை அவர்களை துவம்சம் செய்துகொண்டிருக்க, இசையை காமரியும், காமரியை இசையும் பரஸ்பரம் ஆழம்

பார்த்துக்கொண்டிருந்தனர்.

முதல் தாக்குதலை காமரி தொடுத்திருக்க, அவளது வாளை நேராகச் சந்தித்தாள் இசை. வாளும் வாளும் மோதும் சத்தம் அங்கிருந்தவர்களின் செவிப்பறையைச் சென்று மோதின. மின்னல் கண்களுக்குச் சொந்தக்காரியான இசை மின்னல் வாளுக்கும் சொந்தக்காரியானாள். ஒவ்வொரு முறை காமரி வாளை உயர்த்தும் போதும் அதை அங்கேயே முறியடித்து அவள் வாளினை அகற்ற இசை முயன்றாள்; அவள் முயற்சி ஒரு வகையில் வெற்றியும் பெற்றது எனலாம்.

இசை அரண்யாவாகப் பிறந்திருந்த காலத்தில் அவளின் ஒவ்வொரு அசைவுகளும் காமரிக்கு அத்துப்படி. அதன்மூலம் அவள் எந்தப்பக்கம் தாக்குவாள், எது அவளுடைய பலவீனம் என்பதையெல்லாம் நன்கறிந்திருந்த காமரிக்குத் தானே வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கை இருந்தது. ஆனால், மேரு மலையில் பயின்ற கல்வி நினைவில் இருந்ததால் மூளையும், உடற்பயிற்சிகளால் உடலும், மற்றவர்களின் மனதை படிக்கும் வித்தை தெரிந்ததால் மனமும் தெளிவாக இருந்த இசையை வெற்றிகொள்வது காமரிக்கு எளிதான காரியமாக இல்லை.

இசையின் கை வலுக்கத் தொடங்கியதும் காமரி மெல்ல பின்வாங்கத் துவங்கினாள். தானாகத் தாக்காமல் இசையின் தாக்குதலை சமாளிக்க மட்டும் செய்தாள். அவ்வப்போது சதுரனை கடைக்கண்களால் பார்க்கவும் காமரி மறக்கவில்லை. அப்போது எதிர்பாராமல் ஒரு யட்சிணி, சதுரனின் மீது யட்சிணி விஷத்தை பாய்ச்ச முயலவும், அவள் வாழ்நாளில் இரண்டாம் முறையாக காமரி வெலவெலத்துப் போனாள்.

"யட்சி..." என்று காமரி அடிவயிற்றிலிருந்து பெருங்குரலெடுக்குமுன், ஒற்றை விரலை நீட்டி அந்த யட்சிணியை எச்சரித்த சதுரன், அவளை இந்திர ரகசியத்திற்குள் அடைத்திருந்தான். ஒரு வினாடி என்றாலும் கவனம் சிதறியிருந்த காமரியினால் இசையின் தாக்குதலை சரியான நேரத்தில் பார்க்கமுடியாமல் போனது. அதனால் இசையின் வாள் காமரியின் இடது தோள்பட்டையில் இறங்கியது.

"அம்மா!" என்று காமரி அலறியதைக் கேட்டவர்களின் காதுகளில் தேன் பாய்ந்தது. பிறரை அழ மட்டுமே வைத்தவள் முதன்முறையாக வலி தாளாமல் அழுதாள்.

ஆங்காரத்துடன் மறுபடியும் இசையுடன் போரிட்டவளின் ஒவ்வொரு அசைவையும் இசை முறியடித்தாள். வேறு ஏதேனும்

யட்சிணிகள் சதுரனின் மீது விஷத்தை பாய்ச்சக்கூடும் என்கிற அச்சத்தில் காமரியின் கவனத்தில் பாதி சதுரனின் மீதே இருந்தது. அதனால் அவளால் முழுமனதோடு இசையுடன் சண்டையும் போடமுடியாமல் போனது. இதனால் இரு நிமிடங்களிலேயே இசையிடமிருந்து நான்கு வெட்டுக்காயங்களைப் பரிசாகப் பெற்றிருந்தாள் காமரி. தோள், இடுப்பு, கைகள், முகமென பல இடங்களில் இருந்தும் ரத்தம் கொட்டினாலும், குருதி சொட்டும் கைகளால் வலுவாக வாள் பிடித்து சண்டை போடும் காமரியின் துணிச்சலின் மீது இசைக்குக் கூட சிறு மதிப்பு தோன்றியது.

கால்கள் துவள, நிற்க முடியாமல் தள்ளாடிக்கொண்டே போராடியவளுக்கு எங்கு திரும்பினாலும் இசையின் கைகளால் காயங்கள் பரிசாகக் கிடைத்துக்கொண்டே இருந்தது. ஒரு கட்டத்திற்கு மேல் தோற்பது உறுதி என்று காமரிக்கு நன்றாகத் தெரிந்து போயிற்று. இனியும் தற்காப்புக்காக மட்டும் சண்டையிட்டால் இசையின் கையால் இறக்க நேரிடும் என்றறிந்த காமரி திடீரென இசையின் வயிற்றைக் குறி வைத்து முன்னால் வந்து குத்த, நொடியில் சுதாரித்த இசை, ஓரடி பின்னால் சென்று தன் இருவாட்களாலும் காமரியின் வாளை வலுவாகப் பற்றி தூக்கி வீசினாள். பின் வலப்பக்கமாக வளைந்து ஒரு சுற்று சுற்றி காமாரியின் நெஞ்சுப் பகுதியில் அவள் கையிலிருந்த இருவாட்களையும் இறக்கிவிட்டாள்.

'என்னைக் கொன்றுவிட்டாயா?' என்கிற நம்பமுடியாத பார்வையுடனேயே காமரி மண்ணில் சாய்ந்தாள். அவள் குருதி நிலமகளை நனைக்க, அடுத்த நொடியே அத்தனை அரூபங்களும் அங்கிருந்து காணாமல் போயின!

'எல்லாமே முடிந்து போயிற்றா?' என்கிற கேள்வி எழுந்து அனைவர் முகங்களிலும் நம்பாத பார்வையே நிலைத்தது.

'அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு பெரும் சக்தியே எனக்கு மகளாகப் பிறப்பாள். அதே போன்ற மற்றொரு பெண் பிள்ளையும் பிறக்கும். ஒருத்தியை அழிக்கும் ஆயுதமே மற்றவள். இரண்டில் ஒன்று மட்டுமே தங்கும்!' என்று மகிந்தன் முன்பு சொன்னதைப் போலவே காமரி இறந்து போனாள்.

ஒன்றோ அன்றிப் பலவோ... எத்தனை நிமிடங்கள் காமரியின் உயிரற்ற விழிகளையே அனைவரும் பார்த்திருந்தனர் என்று தெரியவில்லை. கடைசியில் இந்திரரகசியம் ஒளிரத் துவங்கவும் தான் சுயநினைவைப் பெற்று என்ன நடக்கிறது என்று கண்களைத் திருப்பினர் அனைவரும். அங்கே சதுரனுக்கு மிக அருகில் சூட்சம

சரீரத்தில் அத்தனை காதலோடும் ஏக்கத்தோடும் சதுரனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள் காமரி. அவள் விழிகளில் தென்பட்ட மகிழ்ச்சி பொய்யாக இருக்க வாய்ப்பே இல்லை என்பதை அறிந்தவர்கள் அனைவருக்கும் ஆச்சர்யமே மிஞ்சியது.

எங்கே முற்பிறவியைப் போலவே இப்பிறவியிலும் அரூபமாக வந்து மறுபடியும் எல்லோர் உயிரையும் வாங்கப்போகிறாளோ என்ற லேசான கலக்கம் அனைவர் உள்ளத்திலும் வந்தது மெய்யன்றி வேறில்லை. ஆனால் அதற்கு வழிவிடாது, அப்போது மறுபடியும் இந்திர ரகசியம் அதன் வேலையைத் துவங்கியது; காமரியின் ஆன்மாவை மெல்ல அமைதிப்படுத்தி அவளைத் தன்னுள்ளே அடக்கிக்கொள்ளத் தொடங்கியது. தன் கண்களை சதுரனிடமிருந்து விலக்காமலேயே இந்திர ரகசியத்தினுள்ளே அடைப்பட்டாள் காமரி.

இறுதிவரை வீரனின் மீதும் இந்திர ரகசியத்தின் மீதும் அவள் கொண்டிருந்த வெறித்தனமான காதல் துளி கூட குறையாமல் இந்த மண்ணுலகை விட்டு நீங்கினாள் காமரி!

"இத்தோடு இந்திரரகசியத்தின் பணி முடிந்ததா?" என்று இம்ரானும் அர்ஜுனும் ஒரே நேரத்தில் கேட்டு பெருமூச்சு விட, "இல்லை! இனி தான் இந்திர ரகசியத்தின் பணி துவங்குகிறது!" என்று சதுரன் கூறினான்.

கேள்வியாய் நோக்கிய இசைக்கு புன்னகையையே பரிசாகத் தந்தான். அவன் புன்னகையின் வசீகரத்தில் மயங்கியது இசை மட்டுமல்ல இயற்கையும் தான் போலும்; காலைக்கதிரவன் சோம்பல் முறித்து வானவீதியில் உலா வர ஆரம்பித்துவிட்டான்!

குகையின் உள்ளிருந்து வந்தவர்கள், உயிருடன் ஆரோக்கியமாக இருந்த தங்கள் பிள்ளைச் செல்வங்களைக் கண்டு கட்டிக்கொண்டனர். லயாவின் மூலம் அவர்களது பூர்வஜென்மக் கதையை அறிந்திருந்தவர்களின் உடல் சிலிர்த்தது. எப்படியெல்லாம் நம் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்கிற நினைவில் அவர்களின் கண்கள் தூறல் சிந்தியது.

தேவ்னாவும் சதுரனும் கமலநாதர் இந்திர ரகசியத்தினுள்ளே புதைந்த கதையைக் கூற, இசையும் நோவா எப்படி இறந்தான் என்கிற உண்மையைச் சொன்னாள். முதலில் வெகுண்டெழுந்த மற்றவர்கள், இறுதியில் எல்லாம் நன்மையாகிப் போயிற்று என்ற நிம்மதியில் தங்களைத் தாங்களே சமாதானம் செய்துகொண்டனர். கமலநாதரின் மறைவை மட்டும் அவர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை.

சற்று நேரம் பொறுத்தவர்கள் சென்னைக்குத் திரும்ப முடிவு

செய்தனர். அப்போது அவர்களுக்குக் காட்சியளித்த பொதிகைமலை சித்தர் பெருமக்கள் எல்லோருக்கும் ஆசி வழங்கினர். பின் சதுரனை மட்டும் தனியாக அழைத்து, "அப்பனே! வெற்றி தோல்வி என்பது மாறக்கூடியது என்பதனை என்றும் மறவாதே! ஏனெனில் இந்த உலகம் இருமை தத்துவத்தின் அடிப்படையிலேயே படைக்கப்பட்டிருக்கிறது. தீமை அதிகமாகும் போது, நன்மை தானே தோன்றுவதைப் போலவே நன்மை அதிகரிக்கும் போது தீமையும் தானே தோன்றும்!" என்று அருளிவிட்டு மறைந்து போயினர். அவர்கள் சொன்னதன் பொருள் புரியவில்லை என்றாலும் காமரி இறந்ததே மகிழ்வதற்குப் போதுமானதாக சதுரனுக்கு இருந்தது. இந்த நேரத்தில் மற்றவரை கலவரப்படுத்த வேண்டாமே என்று நினைத்து சித்தர்கள் சொன்னதை எவரிடமும் சதுரன் சொல்லவில்லை.

சென்னைக்குச் செல்லும் வழியிலேயே பெரியவர்கள் தங்களுடைய குடும்பங்களைப் பற்றி பேசி ஒரு புரிந்துணர்விற்கு வர, இளையவர்கள் தங்களுடைய கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எனப் பலவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தனர்.

ரஃபயேலுக்கு மாயா ஸ்பானிஷில் அவர்கள் பூர்வீகக் கதையை மறுபடியும் சொல்ல, மனித நாகரிகமும் தொன்மையும் எத்தனை ஆண்டுகாலத்திற்கு முந்தையது என்று நினைத்து அவன் சிலிர்த்தான். அப்பேற்பட்ட காலத்தில் கனலியாகப் பிறந்திருந்த மாயாவை நினைத்து அவனுக்கு பொறாமை கூட வந்தது.

சென்னை வந்ததும் முதலில் பேசியபடியே அனைவரின் குடும்பங்களும் ஒருவரைப் பற்றி ஒருவர் நன்றாகத் தெரிந்துகொண்ட பின், மூன்று ஜோடிகளின் திருமணத்திற்கும் ஏற்பாடு செய்தனர். குறுகிய காலத்திற்குள் மாயா, இசை மற்றும் லயாவைப் போல சுகுமாரியின் மகள்களில் ஒருத்தியாகிப் போனாள். ஸ்பானிஷ் மொழியில் வல்லவனான சதுரன் ரஃபயேலை தன் தம்பியாக தத்தெடுத்துக் கொண்டதைப் போலவே!

முதலில் அர்ஜுனுக்கும் தேவ்னாவிற்கும் திருமணம் என்றும் இரண்டாவது சதுரனுக்கும் இசைக்கும் என்றும் மூன்றாவது இம்ரானுக்கும் லயாவிற்கும் என்றும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது!

தான் செய்ய வேண்டிய கடமைகள் மிச்சமிருப்பதை உணர்ந்த சதுரன், தமிழகத்திலேயே தங்க முடிவு செய்தான். அதனால் மாயாவையும் ரஃபயேலையும் இங்கேயே பள்ளியிலும் சேர்த்து விட்டான். திருமண நாள் நெருங்க நெருங்க மூன்று ஜோடிகளுக்கும்

மெல்லிய படபடப்பு ஆசை காதல் என அத்தனை உணர்வுகளும் போட்டி போட்டன.

தேவ்னாவிற்கு அன்புப் பரிசாக அவளது நுகா தாத்தா, தள்ளாத வயதிலும் அவளது திருமணத்தில் கலந்துகொண்டார். தமிழ் கலாச்சாரம் நேபாள புத்தமத கலாச்சாரம் என கலந்துகட்டி அவர்களது திருமண வைபவம் மிகச்சிறப்பாக நடந்து முடிந்தது. மரணத்தைத் தேடி தமிழகத்துக்கு வந்தவளுக்கு பெருங்காதலுடன் கூடிய சிறப்பான வாழ்க்கை அமைந்தது.

அடுத்ததாக நடந்தேறிய சதுரன் - இசைத்தமிழ் திருமணம், தமிழ் முறைப்படி திருக்குறள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் முழங்க, பூவும் புதுநெல்லும் தூவப்பட வெகு விமரிசையாக நடைபெற்றது. அதிலும் மணமேடைக்கு இசையை பல்லக்கில் வைத்து அர்ஜுனும் இம்ரானும் தூக்கி வந்தார்கள் என்றால் பாருங்களேன்! ஒரு இளவரசிக்கே உரிய கம்பீரத்தோடு இசை வந்து அமர, ஒரு பெருவீரமிக்க ஆல்ஃபா ஆணாக அவளுக்கு இணையான கம்பீரத்தில் அவள் கழுத்தில் மங்கள நாணை பூட்டினான் சதுரன்!

மூன்றாவதாக இம்ரான் லயா திருமணம். இஸ்லாம் வழக்கப்படி ஒருமுறை மற்றும் லயாவின் குடும்ப மரபுப்படி சிவன் கோவிலில் மற்றொரு முறை என்று சந்தோஷமாக இருமுறை திருமணம் செய்துகொண்டனர். அன்றில் பறவைகள் முன்பு கணித்ததைப் போலவே துகிரனும் வைனியும் மறுபடியும் இம்ரானாகவும் லயாவாகவும் பிறந்து கடமைகளோடு காதலையும் குறைவறப் புரிந்தனர்.

மூன்று ஜோடித் திருமணம் முடிந்த மகிழ்ச்சியில் பெரியவர்கள் கோவில் குளமென்று சுற்றத் துவங்க, இசையால் சதுரனிடம் தென்பட்ட மாற்றங்களை உணர முடிந்தது. எப்போது பார்த்தாலும் எதையாவது யோசித்துக்கொண்டே இருந்தான். ஒரு வாரம் பொறுத்துப் பார்த்தவளுக்கு அதன்பிறகு கண்டும் காணாமலும் இருக்கமுடியவில்லை.

தோட்டத்தில் அமர்ந்து அந்திவான கதிரவனை ரசித்துக்கொண்டிருந்தவனின் சிந்தையை கலைத்தது இசையின் குரல்.

"என்ன சிந்தனை?" என்று சதுரனை கேட்டுக்கொண்டே அவனருகில் சென்றாள்.

"நானே உன் கிட்ட பேசணும்னு தான் இருந்தேன்." என்று சதுரன் சொல்ல, "ஆமா, நான் கூட உன் கிட்ட ஒன்னு கேக்கணும்னு தான் இருந்தேன்." என்றாள் இசை.

"நீ சொல்லு!"

"நீ கேளு!"

என்று இருவரும் ஒரே நேரத்தில் சொல்லிக்கொண்டு சிரிக்க, "லேடீஸ் ஃபர்ஸ்ட்!" என்றான் சதுரன்.

"இந்திர ரகசியத்த என்ன பண்றதா உத்தேசம்?" என்று அவன் கழுத்திலிருந்த சிறிய பிரமிடை பார்த்தவாறே கேட்டாள் இசை. என்ன முயன்றும் சதுரனால் இந்திர ரகசியத்தை கழற்ற முடியாது போனது. இசைக்கு இந்திர ரகசியத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. அதனால் அவள் மண்டையை குடைந்துகொண்டிருந்த கேள்வியை பட்டென்று போட்டு உடைத்துவிட்டாள்.

அவள் கேள்வி சதுரனுக்கு புன்னகையை தருவித்தது. "இத பத்தி தான் நானே பேசணும்னு இருந்தேன்டா. இப்போ நீ கேட்ட கேள்விக்கு பதிலா குமண வள்ளல் பத்தி நம்ம பெருஞ்சித்திரனார் புறநானூறுல பாடின பாட்டை சொல்றேன்!" என்று பெரிய பீடிகையோடு ஆரம்பித்தான் சதுரன். அவன் கண்களில் தெரிந்த மகிழ்ச்சி ஒளி இசையையும் ஆட்கொள்ள, அவளும் ஆர்வமாக கேட்கத் துவங்கினாள்.

“நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்,
பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,
கடும்பின் கடும் பசி தீர யாழ நின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்,
இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி, மனை கிழவோயே,
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன், நல்கிய வளனே."

என்று சொல்லி, "எப்படி? நம்ம சிச்சுவேஷன்க்கு பொருந்தற மாதிரி இருக்குல்ல இந்தப்பாட்டு?" எனக் கேட்டுச் சிரித்தான்.

"இங்க பாருங்க தொல்பொருள் ஆராய்ச்சியாளரே! இலக்கியம்னா எனக்குத் தெரிஞ்சது திருக்குறள் மட்டும் தான். நீ பாட்டுக்கு புறநானூறு அகநானூறு கலித்தொகைன்னு ஏதாச்சும் சொல்லாத. எனக்குப் புரியற மாதிரி சொல்லுப்பா!" என்று அலுத்துக்கொண்டாள் இசை.

தமிழ்நாட்டின் கல்விக்கொள்கையை சற்று நேரம் கழுவி

ஊத்தியவன், புறநானூற்றுப் பாடலின் பொருளை சொல்லத் துவங்கினான், "இந்த பாட்டு புலவர் பெருஞ்சித்திரனார் பாடுனது. புலவர்கள்னா வள்ளல்களை புகழ்ந்து பாடி பரிசு வாங்கி, அதைக்கொண்டு குடும்பச் செலவுகளை சமாளிப்பாங்க தானே. அதே மாதிரி தான் நம்ம புலவர் பெருஞ்சித்திரனாரும் குமணன் அப்படின்ற அரசன பத்தி பாட்டு பாடியிருக்காரு. மாபெரும் வள்ளலான குமணனும் புலவருக்கு நெறையா பரிசு தந்திருக்காரு. அவ்வளவையும் புலவர் வீட்டுக்கு எடுத்துட்டு வந்து கூடத்துல வச்சிருக்காரு. அப்போ வந்த அவரோட மனைவி, நீ இப்போ கேட்ட மாதிரியே, இந்த செல்வதை எல்லாம் என்ன பண்றதுன்னு கேட்டிருக்கணும். அதுக்கான பதிலை புலவர் பாட்டாவே பாடிட்டாரு!

குமண வள்ளல் கொடுத்த செல்வத்தை, உன்ன யாருக்கெல்லாம் பிடிக்குமோ அவங்களுக்கு, உனக்கு யாரையெல்லாம் பிடிக்குமோ அவங்களுக்கு, உன்னோட உறவினர்களுக்கு, உறவினர்களான நாம பசியில இருக்கோம்னு தெரிஞ்சு உனக்கு கடன் தந்தவங்களுக்குன்னு மட்டுமில்லாம, யார் என்னான்னு விசாரிக்காம என் கிட்டயும் கலந்துக்காம, நம்ம எதிர்காலம் சிறப்பா இருக்கனும்னு தனியா எடுத்து வச்சிக்க நினைக்காம, நீயும் எல்லாருக்கும் தா! இது தான் அந்த பாட்டோட அர்த்தம். எப்படி?" என்று குறுநகையுடன் கேட்டான் சதுரன்.

"பாட்டு என்னமோ நல்லா தான் இருக்கு. ஆனா, இதை சொன்ன நம்ம பெரியவர்கள் தான் பாத்திரம் அறிந்து பிச்சையிடணும்னும் சொல்லி இருக்காங்க. இந்திர ரகசியம் என்னமோ பெரும் செல்வம் தான். அதைப் பயன்படுத்தி எல்லோருடைய வறுமையையும் தீத்துடலாம் தான். ஆனா எத்தனை நாளைக்கு எத்தனை பேருக்கு நாம பணத்தை தரமுடியும்? இல்லை இவங்களுக்கு மட்டும் தான் நான் உதவுவேன்னு போர்ட் போட முடியுமா? அப்படியே நாம நல்லதுன்னு நெனச்சி இதை செஞ்சாலும் இந்த அரசாங்கம் தான் சும்மா விடுமா? ஒன்னு நம்மள ஹவாலா கேஸ்ல உள்ள போடும் இல்ல தீவிரவாதின்னு சொல்லி உள்ள போடும்." என்று முடித்தாள் இசை.

"டாக்டரம்மா! செல்வம்ன்னா வெறும் காசு பணம் தானா? அதை விட சிறந்த செல்வம்னு எதையும் உன் வள்ளுவர் சொல்லலயா? நாம நாவலந்தீவுல வாழ்ந்த வாழ்க்கைக்கும் இப்ப வாழற வாழ்க்கைக்கும் இருக்குற வித்தியாசமெல்லாம் ஒரே ஒரு விஷயத்தால தான்னு நான் சொன்னா என்ன பண்ணுவ?" என்று புதிர் போட்டான் சதுரன்.

"புரியல!" என்று உதட்டை பிதுக்கினாள் இசை.

"நீ அப்போ அப்போ டியூப் லைட்மா. முந்தி நம்ம வாழ்க்கைல இருந்த அறம் இப்போ காணாம போனதுக்கு என்ன காரணம்?" என்று சதுரன் மறுபடியும் கேட்க, இசையின் கண்கள் பிரகாசமாகின.

"கல்வி!" என்று இருவரும் ஒரு சேரச் சொல்லினர்.

பல புரட்சிகளைப் பார்த்த இவ்வுலகம் அடுத்த புரட்சிக்குத் தயாரானது!

## அத்தியாயம் 30

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு**!**

எந்தவித இடையூறுகளும் இல்லாமல் சிட்டுக்குருவிகள் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தன. ஆறு, ஏரி, குளம், குட்டை, கண்மாய் என உலகம் முழுக்க எங்கு நோக்கினாலும் நீர்வளம் நிறைந்திருந்தது. ஆற்று நீர் கடலில் கலக்குமிடத்தில் கூட சுவையான தண்ணீர் கிடைத்தது. மக்களுக்கு பசி என்கிற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாமல் போனது. பூச்சிக்கொல்லிகளோ நஞ்சோ கலக்காத சத்தான சுவை மிகுந்த உணவு மூன்று வேளைக்கும் அனைவருக்கும் குறைவரக் கிடைத்தது.

வேலை, தொழில் என மக்கள் எது செய்தாலும் அதில் அன்பும் அறமும் நிறைந்திருந்தது. மக்களின் வார்த்தைகளில் அவ்வளவு கனிவு; அவர்கள் முகங்களில் அத்தனை மலர்ச்சி. இயற்கை அன்னையின் வளங்களை அழிக்காது பேணிக் காக்கத் துவங்கியதால் உலக வெப்பமயமாதல் குறைந்து, இன்னும் சில காலம் அதிகமாக இந்த பூமி நமக்குச் சொந்தமாகியிருக்கிறது என்று விஞ்ஞானிகளும் சமூக ஆர்வலர்களும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தார்கள்.

சாதி, மதம், இனம், மொழி, நிறம் என்று மனிதருக்குள் இருந்த வேற்றுமையும் பகைமையும் மறந்து, உண்மையிலேயே "யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்கிற மனநிலைக்கு மக்கள் மாறியிருந்தனர். வீடுகளை மரங்கள் மட்டுமல்லாது இப்போதெல்லாம் திண்ணைகள் கூட அதிகரித்திருந்தன.

பணமில்லாவிட்டால் பிணம் என்றிருந்த நிலை மாறி மருத்துவத்துறையில் நடக்கும் கொடுமைகள் முற்றாக நின்று போயிருந்தன. உயிரைக் காக்கும் மருத்துவம் அனைவருக்கும் இலவசமாகி இருந்தது. பக்க விளைவுகளை ஏற்படுத்தும் மருந்து

மாத்திரைகளும் இல்லாது போனதால் மக்களின் ஆரோக்கியமும் வாழ்க்கைத்தரமும் வெகுவாக அதிகரித்திருந்தது. ஆனால் இலவசமாக கிடைக்கும் ஆடம்பரப் பொருட்களை மக்கள் அறவே புறக்கணித்தனர்.

பெருநகரங்களில் கூட கூட்ட நெரிசல் இல்லை. மக்கள் சாலை விதிமுறைகளை உயிராகக் கடைபிடித்தனர். அதிலும் பெரும்பான்மை மக்கள் அரசுப் பேருந்துகளையே பயன்படுத்தினர். மக்களுக்கு வேலை வாய்ப்புகளும் அதற்கான நியாயமான சம்பளமும் எல்லா இடங்களிலும் சரிசமமாகக் கிடைத்ததால், மக்கள் ஒரே இடத்தில் குவிந்து வாழும் நிலை குறைந்து விட்டது. அதனால் விருப்பத்துடன் வெளியூர் சென்று வேலை தேடும் வெகு சிலரைத் தவிர ஊர் விட்டு ஊர் விட்டு செல்லும் நிலை யாருக்கும் ஏற்படவில்லை. வேலைகளிலும் மக்களின் மனநிம்மதிக்கே முதலிடம் தருவதால், தேவையான நேரத்தில் விடுமுறை என்பது சட்டமாகி ஊர்த்திருவிழாக்களும் களைகட்டியது.

மூன்று வேளை உணவு, உடுத்த ஆடை, தங்குவதற்குத் தரமான வீடு, சமமான கல்வி மற்றும் மருத்துவம் போன்ற அனைத்து அத்தியாவசிய தேவைகளும் எல்லோருக்கும் பூர்த்தியாகிவிட்டதால் கலை, இலக்கியம், பண்பாடு என்று மக்கள் தங்களின் கவனத்தைத் திருப்பியிருந்தனர். அதன் மூலம் மேலும் பண்பட்ட ஒரு சமுதாயம் வளர்ந்தது.

ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானம் என்கிற குரல்களை எங்குமே இப்போதெல்லாம் காண முடிவதில்லை. ஏனெனில் இருபாலினத்தவரும் ஏன் மூன்றாம் பாலினத்தவர் கூட ஒருவர் மற்றவர் மீது பரஸ்பர மரியாதையோடு நடந்துகொண்டனர்.

இயற்கையின் விதிகளைப் புரிந்தவர்களாக மக்கள் மாறியிருந்த காரணத்தால், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" வழக்கம் தானாகவே நடைமுறைக்கு வந்துவிட்டது. எல்லாமே மனிதனின் பேராசைக்காகப் படைக்கப்பட்டது என்கிற கேடுகெட்ட மனநிலையில் இருந்து மனிதர்கள் விடுபட்டிருந்தனர். கிளியும் காக்கையும் சிங்கமும் ஓநாயும் சிட்டுக்குருவியும் சில்வண்டும்... அனைத்துமே இந்த உலகில் வாழ்வதற்கு சம உரிமை பெற்றவை என்கிற தெளிவு மனிதனிடமிருந்து. அதனால் அவன் ஆயுட்காலமும் அதிகரித்தது. இத்தனை மேன்மை பொருந்திய மக்கள் சமுதாயத்திலிருந்து வரும் அரசியல்வாதி மட்டும் எப்படியிருப்பான்? மக்களின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு, சுய விருப்பு வெறுப்பின்றிய மண்ணின் மைந்தர்களே ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தனர். அதனால் அனைத்து நாடுகளுமே செல்வம் கொழிக்கும் நாடுகளாக, மக்கள் வாழத்தகுந்த சொர்கபூமியாக மாறியது.

மேற்சொன்ன மாற்றங்கள் அனைத்தையும் சதுரன் சாதித்தது அவன் கல்வியில் செய்த மாற்றங்களால் மட்டுமே என்றால் நம்ப முடியாது கூடப் போகலாம். ஆனால் நடந்தது அது தான்! கல்வியைத் திருத்தி மாணவர்களின் மனதினில் இருந்த அறத்தை அப்படியே தக்க வைப்பது மட்டுமே சதுரனின் குறிக்கோளாக இருந்தது. அவனுக்குப் பக்கபலமாக இருந்த இசையும், நண்பர்களும், உறவினர்களும் அவனது கனவை மெய்ப்பித்தனர்.

இந்திர ரகசியத்தின் தேவையும் அவனுக்கிருந்தது. எந்தக் காலத்திலும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படாமல் தர்மத்தின் பக்கம் நின்று நல்லதற்கு துணை போகாமல் இருப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அதிலும் சதுரன் அவன் பணியைத் துவங்கிய போது அவனுக்கு எதிராகக் கிளம்பிய குரல்கள் வெகு அதிகம். அவற்றையெல்லாம் வெற்றிகொள்வதற்கு சதுரனுக்கு இந்திர ரகசியம் துணை நின்றது. அவனது அயராத உழைப்பிற்கு பலனாக அவன் தாய் நிலமான நாவலந்தீவில் அவன் முன்பு வாழ்ந்த வாழ்க்கையை இப்போது அனைவர்க்கும் வழங்கினான்.

தான் உயிரோடிருக்கும் போதே தன் லட்சியம் நிறைவேறுவதைப் பார்க்கும் பேறு பெற்றவர்கள் வெகு சிலரே! சதுரனும் அப்படிப்பட்ட பாக்கியம் பெற்றவனே!

தான் நினைத்தபடியே இந்த உலகம் மாறி வந்ததை அறிந்ததும், பொறுப்புகளிலிருந்து ஓய்வு பெற்று, மலையடிவாரத்தில் இருக்கும் சின்ன குடிலுக்கு குடி பெயர்ந்து இருந்தார்கள் சதுரனும் இசையும். அவர்கள் மட்டுமல்ல, அருகிலேயே லயா - இம்ரான் மற்றும் அர்ஜுன் - தேவ்னா என அவனின் சுற்றத்தாரும் அங்கேதானிருந்தனர். ரஃபயேலும் மாயாவும் அவ்வப்போது வந்து அவர்களைப் பார்த்துவிட்டுப் போவதுண்டு.

விடுமுறைக்கு வீட்டிற்கு வரப்போகும் சதுரன் மற்றும் இசையின் வாரிசுகளை வரவேற்கும் விதமாக தடபுடல் விருந்து ஒன்று தயாராகிக்கொண்டிருந்தது.

மக்கள் மருமக்கள் பெயரன்கள் பெயர்த்திகள் என்று சிரிப்பும் கும்மாளமுமாக பொழுது கழிய, நிலவு வந்ததும் தாத்தா பாட்டியிடம் தான் தூங்குவேன் என்று சதுரனின் ஆறு வயது செல்லப் பெயரன் அடம்பிடிக்க, மாமரத்திற்கு அருகில் இரண்டு கயிற்றுக்கட்டில்களை பக்கத்து பக்கத்தில் போட்டுக்கொண்டு சதுரனும் இசையும் அவர்கள் பெயரனுடன் சேர்ந்து விண்மீன்களை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென அந்தப் பொடியன், "தாத்தா... நீங்க என்ன மாதிரி இருக்கும் போது டைனோசர் மாதிரி இருக்குற யாளிய சண்ட போட்டு ஜெயிச்சீங்களா?" என்று மழலை மொழியில் கேட்டான்.

"ஆமாடா கண்ணா." என்று சதுரன் கொஞ்ச, "பாட்டியும் பேய் கூட சண்டை போட்டாங்களா?" என்று மறுபடியும் அவன் கேட்க, "ஆமா ஆமா..." என்று ராகம் பாடினான் சதுரன்.

"போ! நான் நம்பமாட்டேன். நீங்க பொய் சொல்லறீங்க!" என்று சிணுங்கினான் பொடியன்.

"ஏன்டா கண்ணா அப்படி சொல்ற? தாத்தா பொய் சொல்லுவேனா?" என்று கேட்டான் சதுரன்.

"தெரியலையே..." என்று பெரியமனிதனைப் போல பதில் சொன்னான் பொடியன்.

"ஏன் தெரியல?"

"சண்ட போடணும்னா கோவம் இருக்கணுமே... ஆனா உங்களுக்கு தான் கோவமே வராதே!" என்று குழந்தைகளுக்கே உரிய அழகில் பொடியன் வியக்க, சதுரனும் இசையும் வாய்விட்டே நகைத்தனர்.

"உன் சந்தேகத்த நம்ம திருவள்ளுவர் தாத்தாவே தீத்து வச்சிருக்குறாரு தெரியுமா?" என்று அவனைப் போலவே விழிகளை உருட்டி சதுரன் வினவ, "நிஜமாவா?" என்று வாய் பிளந்தான் பொடியன்.

"ம்... நிஜம் தான்டா.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை."

என்று சொல்லிப் புன்னகைத்தான் சதுரன்.

பொடியன் விழிக்க, "அப்படின்னா என்னன்னா, அன்புங்கறது அறத்துக்கு மட்டுமில்லாம மறத்திற்கும் அதாவது வீரத்துக்கும் துணையா நிக்கும். அதனால எல்லார் கூடவும் சண்ட போடுறது மட்டும் வீரமில்லடா கண்ணா. எல்லார் மேலயும் பாசமா இருந்து எல்லா உயிர்களையும் - அது மரமானாலும், மண்புழுவானாலும், மானானாலும், மனிதனானாலும் - எல்லா உயிர்களையும் சரிசமமா நேசிக்கிறவன் தான் உண்மையான வீரன். புரிஞ்சுதா?" என்று கேட்டு பொடியனின் முன்நெற்றி முடிகளை அன்பாகக் கோதினான் சதுரன்.

"ம்ம்ம்..." என்று பொடியனிடமிருந்து வந்த சத்தம் அப்படியே மெல்லிய குறட்டையாக மாறியது.

"தூங்கிட்டானா?" என்று கேட்ட இசை, சதுரனின் ஆமோதிப்பான தலையாட்டலுக்குப் பிறகு, பொடியனின் பிஞ்சுக் கரங்களுக்கு முத்தம் வைத்தாள். அது என்னமோ எத்தனை பெயரன் பெயர்த்திகள் வந்தாலும், இவன் என்றால் சதுரனுக்கும் இசைக்கும் தனிப் பிரியம் தான். ஒருவேளை அவன் பெயர் கூட அதற்குக் காரணமாக இருக்கலாம்.

"தாத்தா..." என்று தூக்கக் கலக்கத்தில் பொடியன் சதுரனின் மீது புரள, "ஒண்ணுமில்லடா சிம்மா... ஒண்ணுமில்ல... ஏதோ கனவு!" என்று சொல்லி சதுரன் அவன் பெயரன் சிம்மனுக்குத் தட்டிக் கொடுக்க, பொடியனின் கையில் இந்திர ரகசியம் சிக்கித் தானாகக் கழன்று வந்தது.

நாற்பது வருடங்களாக சதுரனால் கழற்ற முடியாதிருந்த இந்திர ரகசியம், ஒரு சிறு பிள்ளையின் கைபட்டுக் கழன்று கொண்டது.

"குருதேவா!" என்று வேகமாக மூச்சிழுத்தபடியே சதுரனும் இசையும் ஒருசேர கமலநாதரை அழைக்க, இந்திர ரகசியம் பொன்மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்து சிம்மனின் கழுத்தை அலங்கரித்தது!

அந்நேரத்தில் -

"அப்பனே! வெற்றி தோல்வி என்பது மாறக்கூடியது என்பதனை என்றும் மறவாதே! ஏனெனில் இந்த உலகம் இருமை தத்துவத்தின் அடிப்படையிலேயே படைக்கப்பட்டிருக்கிறது. தீமை அதிகமாகும் போது, நன்மை தானே தோன்றுவதைப் போலவே நன்மை அதிகரிக்கும் போது தீமையும் தானே தோன்றும்!"

என்கிற பொதிகை மலை சித்தர்களின் அருள்வாக்கு மீண்டும் அசரீரி வாக்காய் அவர்களின் காதுகளில் ஒலித்தது!

******* யாளி வீரனும் இந்திர ரகசியமும் முற்றியது! *******